உலகத்
தமிழிலக்கிய வரலாறு

(கி.பி.501 - கி.பி.௯00)

முனைவர் சோ.ந. கந்தசாமி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழிலக்கிய வரலாறு

[கி.பி.501 - கி.பி.900]

முனைவர் சோ.ந. கந்தசாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாவது முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Ulakat Tamiḻilakkiya Varalāṟu** [A.D. 501 - A.D. 900]
Author	:	Dr. S.N. Kandaswamy Prof. & Head (Rtd.) Dept. of Literature, Tamil University Thanjavur - 5
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai - 600 113 Phone : 22542992
Publication No	:	490
Language	:	Tamil
Date of Publication	:	2004
Edition	:	First
Paper used	:	TNPL 18.6 KG Maplitho
Size of the Book	:	Demy 1/8
Printing Types	:	10 Points
No. of Pages	:	xiv + 284
No. of Copies	:	2000
Price	:	Rs. 70/- (Rupees Seventy only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject	:	History of Tamil Literature

செ. செம்மலை
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

வாழ்த்துரை

கடந்த 25 நூற்றாண்டுகட்கும் மேலாக உலகில் உயிர்த்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மிகப்பழமையான மொழி எனப் பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தால் பாராட்டப் பட்ட பெருமை வாய்ந்தது நம் தாய்மொழியாம் தமிழ்மொழி. உண்மையில் 25 நூற்றாண்டுக்கால இலக்கிய வரலாற்றுச் சிறப்புடையது தமிழ். அதாவது தொல்காப்பியர் காலமாகக் கருதப்படும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு இதன் வரலாற்றுத் தொடக்கமாக உள்ளது. ஒரு மொழியின் இலக்கிய வரலாறு என்பது அதன் பெருமையை, காலந்தோறும் அம்மொழியின் வளர்ச்சியை, அதனைப் பேசும் மக்களின் மேன்மையை, தனித்துவத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுவது.

முழுமையான இலக்கிய வரலாறுகள் பல தமிழ் மொழியில் தோன்றியுள்ளன; இன்னும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவை தமிழகத்தை மட்டுமே மையமிட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மொழிபற்றிக் கூறும்போது '**தமிழ் உள்ளூர் மொழி அன்று; உலக மொழி**' என்று கூறித் தாய்மொழியாம் தமிழுக்குச் சிறப்புச் சேர்த்ததற்கு ஒப்பத் தமிழ்மொழி பேசும் தமிழர்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளனர். அவர்கள், குறிப்பாக இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளின் சிறந்த படைப்பாளராகவும், திறனாய்வாளராகவும் புகழ்பெற்றுள்ளனர். அண்டை நாடுகளில் வாழும் நமது குடும்பத்தினரின் படைப்புகளையும் உட்கொண்டு மதிப்பிடும் பொழுதுதான் தமிழ்மொழியின், இலக்கியத்தின் முழுமையான வளர்ச்சி வரலாறு வெளிப்படும்.

'உலகத் தமிழிலக்கிய வரலாற்றை' முழுமையாக உருவாக்கும் இப்பணி செம்மையாக நிறைவேறத் தமிழக, அயலகத் தமிழ் வல்லுநர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு தேவை என உணரப்பட்டது. தமிழ் வளர்ச்சிப் பணிக்கு ஆக்கப்பூர்வமான

திட்டங்களை முன்னின்று செயல்படுத்திவரும் தமிழக அரசு, இப்பணியைச் சிறப்புற நிறைவேற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்தான் ஏற்புடையது எனக் கருதி அதனிடம் ஒப்படைத்தது.

'உலகத் தமிழிலக்கிய வரலாறு' எண்ணியபடி முழு வீச்சில் நிறைவேற, அண்டைப் பகுதித் தமிழ் வளத்தை அவர்களைக் கொண்டே எழுதவைக்க வேண்டும் என்ற கருத்து உருவாகியது. அதன்படி தமிழகம் சார்ந்தவற்றைத் தமிழக வல்லுநர்களும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் தமிழிலக்கிய வரலாற்றை அவ்வப்பகுதி அறிஞர்களும் எழுதும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை உரிய இடங்களில் முறைப்படி இணைக்கப்பட்டு இன்று **'உலகத் தமிழிலக்கிய வரலாறாக'** உங்கள் கைகளில் தவழ்கிறது. மொத்தம் ஆறு தொகுதிகளாக வெளியிடப்படும் இந்நூல் தமிழ் ஆர்வலர்க்கும், மாணாக்கர்க்கும் மிகச் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

புதியபுதிய பார்வைகளில், ஆய்வாளர் தேவையறிந்து புது நூல்களைப் படைப்பதில் எப்பொழுதும் முன்னிற்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இப்பொழுது **'உலகத் தமிழிலக்கிய வரலாறு'** படைத்துச் சாதனை புரிந்துள்ளது.

இது போன்ற சிறந்த செயன்மைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு நன்றியறிதலைப் பதிவு செய்கிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு என் நல்வாழ்த்துகள்.

3/5/04

சென்னை 600 009 **செ. செம்மலை**

நாள் : 31.5.2004

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

இலக்கியம் ஒருநாட்டின் சுயசரிதை என்பர் திறனாய்வாளர் அட்சன். இலக்கியம் ஒரு சமுதாயப்படைப்பாக எண்ணப்பெறுதலின் மக்கள் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு சமுதாயத்தின் பண்பாடு, வாழ்வியல், தகவுகள், நம்பிக்கைகள், வரலாறு என்பனவற்றை அறிந்துகொள்ளுதற்கு இலக்கியம் அடிப்படை ஆவணம் ஆகும்.

தமிழிலக்கியம் உலக இலக்கியங்களுடன் ஒப்பவைத்து எண்ணும் அளவிற்குக் கருத்துவளமும் கற்பனைத்திறமும் வாய்ந்தது. **உலகத்தமிழ்** என்ற கோட்பாடு அண்மைக் காலத்தில் அறிஞர்களிடையே வளர்ந்து வந்துள்ளது. தமிழ் வழங்கும் நிலப்பகுதியைத், "தமிழ்கூறும் நல்லுலகம்" என்று தொல்காப்பியப் பாயிரம் சுட்டுகின்றது. தமிழகத்தின் அகப்பாட்டெல்லை, புறப்பாட்டெல்லைகளை இளம்பூரணர் பாயிர உரையில் தெளிவுறுத்தியுள்ளார். இந்தியநாட்டில் தமிழகம் மட்டுமன்றி வேற்றுமாநிலங்களில் விளங்கும் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தமிழ் கற்பிக்கப்படுவதுடன், தமிழியல் ஆய்வுகளும் அறிஞர்களால் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. தமிழகத்திற்கு அடுத்த நிலையில் அண்டை நாடாகிய இலங்கையில் இலக்கியப் படைப்புகள், பதிப்புகள், ஆய்வுகள் நன்முறையில் நடைபெற்றுவருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் பரவலாக வாழும் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகக்கல்வி வரை தமிழ் பயிலப்பெறுதலுடன் தமிழியல் ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்று வருகின்றன. உருசியா, சப்பான், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்குத் தனி இருக்கைகள் விளங்குவதுடன் தமிழியல் ஆய்வுகள் சிறப்பாக நடைபெற்று வருதல் சுட்டத்தக்கது. இந்நிலையில், இந்திய மொழிகளில் தமிழ்மொழிக்குத்தான் முதன்முதல் உலகளாவிய நிலையில் மாநாட்டுக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன என்ற உண்மையும் எண்ணற்பாலது.

எனவே, **உலகத்தமிழ்** எல்லை கடந்து ஞாலப்பொதுமை வாய்ந்ததாய் யாவராலும் விரும்பிப் பயிலப்பெறும் தகுதியும் வளமும் வாய்த்துள்ளமை எண்ணி மகிழத்தக்கது. இச்சூழலில், "உலகத்தமிழிலக்கிய வரலாறு" துறைவல்ல பேராசிரியர்களைக்கொண்டு பலதொகுதிகளாக எழுதி வெளியிடுதல் வேண்டும் என்ற அரசின் திட்டத்தினை **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்** மேற்கொண்டுள்ளது. இவ்வரிசையில் கி.பி.501 - கி.பி.900

என்ற காலப்பகுதிக்குரிய இலக்கிய வரலாற்றினை இந்த நூலில் காணலாம். அரசியல், சமுதாயம், சமயம் என்ற பின்புலத்துடன் [Back-ground] திறனாய்வு நோக்கில் இவ்வரலாறு எழுதப்பெற்றிருத்தல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

ஏழியல்களில் அமைந்துள்ள இந்நூலின் தொடக்கத்தில் இலக்கிய வரலாறு பற்றிய விளக்கம், மையக்குறிக்கோள்கள், இலக்கியக் காலப் பிரிவுகள் என்பன திறனாய்வாளரின் கொள்கை அடிப்படையில் விளக்கப்பெற்றுள்ளன. கி.பி.5,6 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் தழைத்தோங்கியிருந்த சமண பௌத்தத் தமிழ்ச்சங்கங்கள், கடிகைகள் ஆற்றிய இலக்கியப் பணிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களுக்கும் இக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கணங்களுக்கும் இடையே காணப்படும் தோற்ற மாற்றங்கள், கருத்து வளர்ச்சிகள், தனித்தன்மைகள் முதலியன விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.

அறநூல்கள் என்ற இயலில் தமிழில் அற இலக்கியங்கள் எழுவதற்குரிய காரணிகள் [factors] அவற்றில் பொதிந்துள்ள சிறப்புச் சிந்தனைகள், அறங்கூறிய முறைமை என்பன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒரு சில அறக்கருத்துகள் இந்திய இலக்கியங்கள் மட்டுமன்றி உலக இலக்கியங்கள் பலவற்றிலும் காணப்படும் கருத்துகளுடன் ஒப்பிட்டுரைக்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. திருக்குறள், முதுமொழிக் காஞ்சி நீங்கலாகப் பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெற்றுள்ள நாலடியார், பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை உள்ளிட்ட அறநூல்களின் பொருட்கூறுகள் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன.

காப்பியங்கள் என்ற இயலில் காப்பியம் குறித்த மேலைத் திறனாய்வாளர்களின் கோட்பாடுகளும் இந்திய அணியிலக்கணத்தார் வரையறுத்துள்ள கோட்பாடுகளும் போதிய அளவில் தெளிவுறுத்தப் பெற்றுள்ளன. இவற்றின் அடிப்படையில் தகடூர் யாத்திரை, பிம்பிசாரக்கதை, பெருங்கதை, பாரதவெண்பா ஆகிய காப்பியங்களின் மூலக்கூறுகள், அமைப்பியல், இலக்கியச் சிறப்புகள், அழகியல், வாழ்வியல், அருஞ்சிந்தனைகள் முதலியன விரிவாக ஆராயப் பெற்றிருத்தல் சுட்டத்தக்கது. பெருங்கதைக் கூறுகள் சில கிரேக்கக் காப்பியக் கூறுகளுடன் ஒப்பிடப் பெற்றுள்ளன. **நான்காம்** இயலில், தமிழில் முதன் முதல் எழுந்ததாக எண்ணப்பெறும் பாண்டிக்கோவை, விழுமிய படைப்பாகப் போற்றப்பெறும் திருச்சிற்றம்பலக்கோவை ஆகிய விருந்தாய இலக்கியங்கள் பற்றிய ஆய்வு சிறப்பாக இடம் பெற்றுள்ளது. மூன்றாம் நந்திவர்மபல்லவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற வரலாற்றுச் சிறப்புடைய நந்திக்கலம்பகம் கலம்பக வரலாற்றில் முதலிடம் பெறுவது. தாய்லாந்து நாட்டில் கி.பி.9 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு வணிகப் பெருமக்கள் எடுத்த திருக்குளத்திற்குச் சூட்டியுள்ள **அவனிநாரணம்** என்ற பெயர் மூன்றாம் நந்திவர்மனுக்குரிய **அவனிநாரணன்** என்ற பெயருடன் தொடர்புடைய உண்மையினை இவ்வியல் உறுதிப்படுத்துதல் காணத்தக்கது.

ஐந்தாம் இயலில் திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய பத்தி இலக்கியங்கள் தாய்லாந்து, மலேசியா முதலிய அயல்நாடுகளிலும், இந்திய நாட்டின் பலமொழிகளிலும் பரவியுள்ள பாங்கு தக்க சான்றுகளின் அடிப்படையில் விளக்கப் பெறுகிறது. பக்தி இலக்கியங்களின் அமைப்பியல், இலக்கியச் சிறப்புகள், சமுதாயச் சிந்தனைகள் என்பனவும் இவ்வியலில் ஆராயப்பெற்றுள்ளன. ஆறாம் இயலில் தமிழ்க் கல்வெட்டுகளில் பொறிக்கப் பட்டுள்ள பாக்கள், பாவினங்கள், மெய்க்கீர்த்தி, உரைநடை என்ற இலக்கிய வகைகள் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. இவற்றில் மக்களின் பேச்சுத்தமிழ் விரவியுள்ள திறமும் சுட்டப்பட்டுள்ளது. "இலக்கணமும் நிகண்டும்" என்ற ஏழாம் இயலில் இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கல விருத்தி சுட்டும் இலக்கண, பாட்டியல் நூல்கள், திவாகரநிகண்டு ஆகியவை பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

சீரிய முறையில் இந்த உலகத்தமிழிலக்கிய வரலாற்றினை எழுதியவர் பேராசிரியர் முனைவர் சோ.ந.கந்தசாமி அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மலேயாப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகிய செழுங்கலை நியமங்களில் நாற்பதாண்டுகட்குமேலாகத் தமிழ்ப்பணி புரிந்துள்ள அனுபவம் வாய்ந்தவர். தமிழ், வடமொழி, பாலி, ஆங்கிலம் முதலிய பலமொழிகளிலும் புலமை பெற்றவர். இலக்கியம், இலக்கணம், மொழியியல், திறனாய்வு, தத்துவம், மொழிபெயர்ப்பு முதலிய பல துறைகளிலும் தெளிந்த அறிவும் தேர்ச்சியும் பெற்றுப் பற்பல ஆராய்ச்சி நூல்களை எழுதியவர். இவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக என் நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

இந்நூலுருவாக்கத்திற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து ஊக்கமளித்த தமிழ்வளர்ச்சி இயக்கக இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், இத்திட்டச் செயலாக்கத்திற்குத் துணைநின்று ஆதரவளித்த வல்லுநர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலிற்கு ஒளியச்சுக்கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திரு. சு. கண்ணனுக்கும் இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

13.04.2004 இயக்குநர்

பொது முன்னுரை

தமிழ்ப் பயில்வின் இன்றைய உலகளாவிய நிலை, தமிழின் வளர்ச்சியிலும் பரப்பலிலும் ஈடுபாடு கொண்டுள்ள அரசு நிறுவனங்கள் மீதும், தமிழியல் அறிஞர்கள் மீதும் ஒரு பெரும் பொறுப்பைச் சுமத்துகின்றது.

உலகளாவிய நிலையில் பல்வேறு நாடுகளில், தம் மொழித் தொடர்பும், பண்பாட்டு அடையாளமும் அறாது வாழும், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் வழிப் படிப்போர், நமது பண்பாட்டின் ஆணிவேரான இலக்கியப் பாரம்பரியத்தைத் தமது மொழியிலேயே வாசித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவது தமிழ், தமிழியல் வளர்ச்சிக்கான நிறுவனங்களின் கடமையாகிறது.

இத்துறையில் தமிழில், இப்பொழுதுள்ள பெரும்பாலான ஆக்கங்கள், இடைநிலை மாணவத் தேவைகளையும், ஆய்வுத் தேவைகளையும் மனங்கொண்டு எழுதப்பட்டுள்ளனவாக அமைந்துள்ளன. தமிழிலக்கிய வளர்ச்சியினைத் தமிழர் உணர்வுமுறையினதும், சிந்தனைப் போராட்டங்களினதும் ஒட்டுமொத்தமான வெளிப்பாடாக அவை அமையவில்லை.

தமிழ்நாட்டிலும், தமிழ் பயிலும் நாடுகளிலும் தமிழர் வாழும் நாடுகளிலும் வாழும் தமிழ் நிலை ஆர்வலர்களின் இத்தேவையை நிறைவேற்றும் நோக்குடன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் ஆதரவுடனும், வழிகாட்டலுடனும் இதற்கான செயல்திட்டம் ஒன்றை மேற்கொண்டது.

உலகில் தமிழிலக்கியம் தோன்றும் இடங்களிலெல்லாம் காணப்படும் இலக்கிய வளர்ச்சியை, ஒரு பதிகை வட்டத்துக்குள்ளே கொண்டு வந்து, தமிழ் மக்கள் சகலரினதும் ஒட்டுமொத்தமான இலக்கிய வெளிப்பாட்டின் தொகுதியாக அதனை ஒருங்கமைத்து வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் காரணமாகத் தமிழகத்தில் மாத்திரமல்லாமல், இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் தமிழ்க் கல்வி பயிலும் நாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூரிலும் இன்று தமிழன் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழிலக்கிய வெளிப்பாடு நடந்தேறியுள்ள முறைமையினை

ஒழுங்குபடுத்தித் தொகுதிப்படுத்துவதற்கென முதலில் ஒரு பதிப்பாசிரியர் குழு நியமிக்கப்பெற்றது.

அக்குழு தமிழிலக்கிய வரலாற்றை எவ்வாறு ஒருங்கமைத்துக் கொள்வது என்பது பற்றியும், அதற்கான கால வகுப்புப் பற்றியும், ஒவ்வொரு காலப்பிரிவிலும் எவ்வெப்பெயர்கள் எவ்வாறு எடுத்து நோக்கப்படல் வேண்டுமென்பது பற்றியும் ஒவ்வொரு காலப்பிரிவுக்கும் யார் யார் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பது பற்றியும், ஒவ்வொரு காலப்பிரிவுகளுள்ளும் வரும் தலைப்புகள் ஒவ்வொன்றையும் யார், யார் எழுதவேண்டும் என்பது பற்றியும் தீர்மானித்தது.

இதன்படிக்குக் கால வகுப்பும், பொறுப்பும் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டது.

காலப்பிரிவு பொறுப்பாசிரியர்

தொடக்கம் முதல் கி.பி.5ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் தமிழண்ணல்

கி.பி.6 முதல் கி.பி.9ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் சோ.ந. கந்தசாமி

கி.பி.10 முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் அ.அ. மணவாளன்

கி.பி.14 முதல் கி.பி.16ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் இ. சுந்தரமூர்த்தி

கி.பி.17 முதல் கி.பி.1850 வரை
- முனைவர் இரா. இளவரசு

கி.பி.1851 முதல் கி.பி.2000 வரை
- முனைவர் ச. சிவகாமி

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சிகளைத் தொகுப்பித்து வழங்கும் பொறுப்பு பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு ஒப்படைக்கப்பெற்றது.

திட்டப்பணிப் பொறுப்பாளராக முனைவர் ச. சிவகாமி நியமிக்கப் பெற்றார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோவும் தமிழக அரசின், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரனும் திட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப் பெற்றனர்.

பதிப்பாசிரியர்களாக

முனைவர் தமிழண்ணல்
முனைவர் கா. சிவத்தம்பி
முனைவர் சோ.ந. கந்தசாமி
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் அ.அ. மணவாளன்
முனைவர் இரா. இளவரசு

ஆகியோர் நியமிக்கப்பெற்றனர்.

27.2.2000 முதல் மூன்று நாட்கள் 29.2.2000 வரை இப்பணிக்கான ஒருங்குசேரல் ஒழுங்கு செய்யப்பெற்றது. தமிழகத்திலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவைச் சார்ந்த பல்கலைக்கழகங்களிலிருந்தும் புலமையாளர்கள் வரவழைக்கப்பெற்று, எழுதுமுறை பற்றிய பல்வேறு விடயங்கள் நுண்ணிதாக ஆராயப்பெற்றன. பேராசிரியர் தமிழண்ணல் ஒருங்குசேர்கையை வழி நடத்தினார். அதன் இறுதியில் எழுது பணியைத் தொடங்கி ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு பொறுப்பாளர்களுக்கு வழங்கப் பெற்றது.

அந்நிலையில், எழுதப்பெறும் இலக்கிய வரலாறு ஒரு தொகுதிக்குள் அடங்குவதாயின் நன்றாக அமையும் என்ற கருத்து ஏற்கப்பட்டிருந்தது.

பின்னர், எழுத்துப்பணி தொடங்கியதும், ஒவ்வொரு காலப்பிரிவினதும் முழுமையானத் தமிழ் உயிர்ப்பினையும், அவ்வப்பிரிவுகள் பற்றிய ஒட்டுமொத்தமான பார்வையையும் கொண்டு வர வேண்டுமென்பது பதிப்பாசிரியர் குழுநிலையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக முன்னர்க் கருத்திற்கொண்டிருந்த அளவிறுக்கத்தைத் தளர்த்துவதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

இந்த அடிப்படையில் பணி தொடரப் பெற்று, இப்பொழுது இறுதிநிலையை அடைந்துள்ளது.

இந்நிலையில் ஒவ்வொரு காலப்பகுதியும் ஏறத்தாழ 250-300 பக்கங்களுக்கான தரவுகளையும் விளக்கங்களையும் கொண்டிருப்பது தெரிந்தது. தமிழகத்தின் ஆறு காலப் பிரிவுகளுக்கும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூரின் இலக்கிய வரலாற்றுப் பதிவுக்கும், இந்நிலையில் 1500-1700 பக்கங்கள் தேவைப்படும் என்பது புலனாயிற்று.

எழுதப்படுபவை மேலோட்டமான சுருக்கங்களாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகவும், வழங்கப்படும் வரலாறு தமிழ்ப் பாரம்பரியத்தின் ஓட்டத்தினை உணர்த்துவதாக அமையவேண்டும் என்பதற்காகவும், நூல் முழுமையையும், ஒரேயொரு தொகுதியாக வெளியிடுவதன் பொருத்தப்பாடு

பற்றி மிகவும் விரிவாக நோக்கப்பெற்றது. ஏறத்தாழ 1500 பக்கங்கள் கொண்ட ஒரே தொகுதியாக நூலை அமைக்கும்பொழுது, அதன் அமைப்பும், தன்மையும் அதனைக் கலைக்களஞ்சியப் பாங்குக்குள்ளாக்கி, முதனிலை நோக்கமான அறிமுக உந்துதல் ஓரங்கட்டப்பட்டு விடுமோ எனும் அச்சமும் தெரிவிக்கப்பட்டது.

இப்பின்புலத்தில் உன்னிப்பான, சீர்தூக்கு நோக்கினிறுதியில், எழுதப் பெற்றுள்ள முழுவதையும் ஒரு பெரும் நூலாக வெளியிட்டு அந்நூலின் பெருக்கம் தமிழார்வலர்களைப் பின் தள்ள இடமளிக்காது, இவ்வெளியீட்டை ஒரு தொடராகக் கொண்டு ஆறு தொகுதிகளாக வழங்குவது, ஆக்கியோர் புலமைப் பணிக்கும், வாசகனுக்கும் ஒரு சேர மதிப்பளிப்பதாக அமையுமெனக் கருதியும், நூல் வெளியீட்டில் பொருளியல் சிக்கனத்திற்கு உதவுவதாக இருக்குமெனக் கருதியும், இத்தொடரைப் பின்வரும் தொகுதிகளாக வெளியிடுவது இப்பொழுதுள்ள சூழலிற் பொருத்தமுடைத்தாக இருக்குமெனப் பதிப்பாசிரியர் குழு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்குப் பரிந்துரை செய்தது.

தொகுதி	1	-	தொடக்கம் முதல் கி.பி. 500 வரை
தொகுதி	2	-	கி.பி.501 முதல் கி.பி. 900 வரை
தொகுதி	3	-	கி.பி.901 முதல் 1300 வரை
தொகுதி	4	-	கி.பி.1301 முதல் 1600 வரை
தொகுதி	5	-	கி.பி.1601 முதல் கி.பி.1850 வரை
தொகுதி	6	-	கி.பி.1851 முதல் கி.பி.2000 வரை

(அவ்வவ் காலப்பகுதியுள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் தமிழிலக்கியங்களும் அடங்கும்)

ஒவ்வொரு காலப்பிரிவுக்குமுரிய எழுத்துருவின் உள்ளடக்கத்துக்கும் அமைப்பிற்கும் அவ்வப்பொறுப்பாசிரியரே பொறுப்பாவர்.

கா. சிவத்தம்பி

முனைவர் சோ.ந. கந்தசாமி
பேராசிரியர் & தலைவர் (ஓய்வு)
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

முன்னுரை

தமிழிலக்கிய வரலாறு அறிஞர் பெருமக்கள் பலராலும் அவ்வப்பொழுது எழுதப்பெற்றிருப்பினும், குறிப்பிட்ட சில புதிய நெறிமுறைகளையும் கோட்பாடுகளையும் கருத்திற்கொண்டு உலகளாவிய நோக்கில் பலதொகுதிகளாக எழுதிவெளியிடுதல் மக்கட்குப் பயன் நல்கும் என்ற உயரிய எண்ணத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகத் தமிழிலக்கிய வரலாறு எழுதும் திட்டத்தினை மேற்கொண்டது. இதனடிப்படையில், கி.பி.501-கி.பி.900 என்ற காலப்பகுதிக்குரிய இலக்கிய வரலாற்றினை எழுதும் பொறுப்பினை எனக்கு வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னை இயக்குநர் முதுமுனைவர் ச.சு.இராமர் இளங்கோ அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலிற்குச் சிறந்ததோர் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள இந் நிறுவனத்தின் செயல்திறம் சான்ற இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் நன்றியும் பாராட்டும் என்றும் உரியன. தமிழ் வளர்ச்சியிலும் தமிழாராய்ச்சியின் மேம்பாட்டிலும் நாட்டம் மிக்க தமிழ்நாடு மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை அவர்களுக்கு என் நன்றியைப் புலப்படுத்துகின்றேன். தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத்துறைச் செயலர் திருமிகு.பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்களுக்கும், சிறப்புச் செயலர் திருமிகு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்ட யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாரைப் பாராட்டுகின்றேன்.

சோ.ந.கந்தசாமி

பொருளடக்கம்

எண்.		பக்கம்
	வாழ்த்துரை	
	அணிந்துரை	
	பொது முன்னுரை	
	முன்னுரை	
I	அறிமுகவியல்	1
II.	அறநூல்கள்	19
III.	காப்பியங்கள்	64
IV.	கோவையும் கலம்பகமும்	115
V.	பத்தி இலக்கியம்	137
VI.	கல்வெட்டு இலக்கியம்	215
VII.	இலக்கணமும் நிகண்டும்	235
	தொகுப்புரை	267
	பின்னிணைப்புகள்	
	i. மேற்கோள் நூல்கள் அகர நிரல்	269
	ii. பொருள் அகர நிரல்	278

தமிழிலக்கிய வரலாறு கி.பி.501—கி.பி.900

I அறிமுகவியல்

நாட்டுவரலாறு, சமுகவரலாறு போல இலக்கிய வரலாறு ஒரு தனித்துறையாகக் கருதப்படுகிறது. இலக்கிய வரலாறு இலக்கியத்தின் வரலாறு [History of Literature] என்றும் இலக்கியத்தின் வழி வரலாறு [Literary History] என்றும் மேலை நாட்டுத் திறனாய்வாளர்களால் விளக்கப்படுதல் நோக்கத்தக்கது. சிறந்த திறனாய்வாளருள் ஒருவரும் ஆங்கில இலக்கிய வரலாற்றினைச் சுருக்க விளக்கமாகச் சுவைபட எழுதியவரும் ஆகிய வில்லியம் என்றி அட்சன் [William Henry Hudson] என்பார் இலக்கிய வரலாறு பற்றி விரிவாக ஆராய்ந்து கூறியுள்ளார். அவர் கூறும் கருத்துக்கள் சிலவற்றை இங்குச் சுட்டுதல் தெளிவுதரும்.

இலக்கிய வரலாறு என்பது படைப்பாளர்கள், அவர்களின் படைப்புக்கள் பற்றிய வெறும் பட்டியலாகவோ, கால முறையில் வரிசைப்படுத்தப்பட்ட படைப்பாளர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களும், அவர்தம் இலக்கியப் படைப்புக்கள் பற்றிய விமரிசனப் பாராட்டுரைகளும் அடங்கிய தொகுப்பாக மட்டுமோ இருந்துவிடுதல் அமையாது. தனித்தனி ஆசிரியர்களின் ஒட்டுமொத்தமான படைப்புக்களின் முழுமையே ஒரு தேசத்தின், சமுதாயத்தின் இலக்கியமாக எண்ணப் பெறும். சாதாரண நிலையில் பயிலும்பொழுது படைப்பாளர்களை - அவர்களை உருவாக்கிய பின்புலங்களினின்றும் பிரித்தெடுத்துத் தனியே ஆராயலாம். எனினும், அவர்களில் ஒவ்வொருவரும் பொருள் தொடர்பு, காலத்தொடர்பு ஆகிய முறைமையில் உரிய இடத்தில் அமையப்பெற்று, ஒட்டுமொத்தமான இலக்கிய உற்பத்தியில் [Literary Production] அவர் படைப்பு எங்ஙனம் ஓர் உறுப்பாக மதிக்கப்படுகிறது என்பதையும் சுட்டினாலன்றி இலக்கிய வரலாறு சிறவாது.

இலக்கிய வரலாற்றின் மையக் குறிக்கோள்

தொடர்ச்சியாக வரும் படைப்பாளர்களின் அருஞ் சாதனைகள் பற்றிய தெளிவும் வரையறையும் கொண்டதாக மட்டும் இருந்துவிடாமல், தேசிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் [National Changes and Developments] வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும். ஒட்டு மொத்தமாக இலக்கிய ஆக்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட படைப்பாளரின் பங்கும், மதிப்பும், பாங்கும் [share, value and nature]

உணர்த்தப்படுதல் வேண்டும். படைப்பாளரைத் தனி நபராகக் கருதும் போக்குடன் நின்றுவிடாது, ஒரு காலப் பிரிவிற்கும் அடுத்த காலப்பிரிவிற்கும் உரிய மாபெரும் இலக்கிய இயக்கத்துடன் [Literary Movement] அவரை இயைபு படுத்தி ஆராய்தல் வேண்டும்.

இலக்கியத் தரங்களும், சுவைகளும் [Literary Standards and Tastes] காலந்தொறும் உருமாற்றம் பெறுவதற்குக் காரணமாக உள்ள சக்திகள் பற்றியும் இலக்கிய வரலாறு ஆராய்ந்து உணர்த்துதல் வேண்டும். வெற்றிடத்தில் [Vacuum] இலக்கியம் உற்பத்தி செய்யப்படுவதில்லை. (படைக்கப்படுவது இல்லை). காலம், இடம் என்ற நிலைகளுக்குப் [Conditions] புறம்பே இலக்கியம் எழுவது இல்லை. குறிப்பிட்ட ஒரு காலக் கட்டத்தின் நாகரிகத்தை உருவாக்கிய அனைத்துக் கூறுகளாலும் அக்காலப் பகுதிக்குரிய இலக்கியப் படைப்பு வடிவமைக்கப்படுவதுடன் வண்ணம் தீட்டப்படுகிறது.

இலக்கியத்திற்கும் மக்கள் வாழ்க்கைக்கும் உள்ள உறவினையும் இலக்கிய வரலாறு ஆராய்ந்து சுட்டுதல் வேண்டும். ஆசிரியரைப் பற்றிச் சிந்திக்காமல் அவர் படைப்பினைப் பற்றிச் சிந்தித்தல் அரிது. ஒவ்வொரு படைப்பும் அதற்குப்பின் இருக்கும் படைப்பாளிடம் நம்மைக் கொண்டு செல்லுகிறது. அவருடைய இயற்கையான நுண்ணறிவு, மேதைமை ஆகிய இரண்டின் விளைவாகவே அவர் படைப்பு விளங்குகின்றது. அவருடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் அவர்தம் படைப்பு தாங்கி நிற்கின்றது. ஆதலின், இலக்கியப் படைப்பில் படைப்பாளரின் மேதைமையினைப் புரிந்துகொள்ளும் பொருட்டு, அவர்தம் தற்சார்புக்கூறு [personal element] ஆராயப்படுதல் வேண்டும். மேதைமை [- genius] என்ற சொல்லுக்குப் பொருள் பல உளவேனும், ஆளுமையின் வலிமையினையும் [Strength of Personality] தன்முதன்மைத் திறத்தினையும் [Originality] அச்சொல் சிறப்பாகக் குறிக்கிறது. ஒவ்வொரு சிறந்த படைப்பாளரும் முற்றிலும் புதியதாக உள்ள ஒரு பொருளினை [- one absolutely new thing] இலக்கிய உலகிற்குக் கொண்டுவருகிறார்; அதுவே அவர்தம் சிறப்பு முத்திரையாக [Special hallmark] அமைந்து விடுகிறது. எனவே, இலக்கிய வரலாறு என்பது எழுத்தாளர் ஒருவரின் குறிப்பிட்ட படைப்புக் கொடையினையும் [Creative Contribution], மதிப்பினையும் [Value], இயல்பினையும் [nature] சுட்டிக் காட்டுவதாக அமைதல் வேண்டும்.

இலக்கியம் முழுமையாக நோக்கப்படும்பொழுது, ஒருதலை முறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குச் செல்லும்பொழுது நிகழும் வளர்தல், மாற்றம் அடைதல் என்ற செயன்மைகளையும் அறிந்துரைத்தல் இலக்கிய வரலாற்றின் நோக்கமாதல் வேண்டும். இத்தகைய தோற்ற

மாற்றங்களில் ஒவ்வொரு படைப்பாளருக்கும் உரிய பங்கினையும்; அவருக்கும் அவருக்கு நேர் முற்பட்ட படைப்பாளருக்கும் உள்ள தொடர்புகளையும்; அவருக்கும் அவருக்குப் பின்வரும் படைப்பாளருக்கும் உள்ள தொடர்புகளையும் ஆராய்தல் வேண்டப்படும். அரிய ஆற்றல் வாய்ந்த ஆளுமையுடைய எழுத்தாளர் தன் காலப்படைப்பில் உறுதியாகத் தன் முத்திரையினைப் பதிக்கிறார். அவரைப் பின்பற்றுவோர் அவருடைய ஆளுமையும் தாக்கமும் தத்தம் எண்ணங்களிலும், நடையிலும், வெளிப்பாட்டிலும் பதிந்திருத்தலையும் இலக்கிய வரலாறு எடுத்துரைத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட வகையான படைப்பு மக்களிடையே வியாபகத் தன்மை [popularity] பெற்றுவிடின், அப்படைப்பு போலாக்கங்களை [Imitations] வளர்த்து விடுகின்றது. அதன் விளைவாக ஒரே மாதிரியான வார்ப்பில் பற்பல படைப்புக்கள் எழுத்தாளரின் தனித்திறமையுடன் தோற்றம் கொள்ளும். இவ்வகையில், இலக்கியக் குழுக்கள் அல்லது சிந்தனைப் பள்ளிகள் [Literary Schools or Schools of Thought], மற்றும் இலக்கிய இயக்கங்கள் [Literary Movements] தோற்றம் கொள்ளுகின்றன. மக்களின் சுவையுணர்வில் தேக்கநிலை [saturation] காணப்படின், இலக்கியப் போக்கில் மாற்றம் விளைகிறது. அதனால் புதிய இலக்கியக் குழுக்களும் இயக்கங்களும் தோன்றுகின்றன. சுய சிந்தனையும் விழுமிய ஆளுமையும் உடைய படைப்பாளருக்குக் கூட அறிவு சார்ந்த மூதாதையர் மரபு [intellectual ancestry] உண்டு. உணர்ச்சி உந்துதல் [inspiration], இலக்கிய முன்மாதிரி [model, example], முந்தையோர் பாடல் மரபு ஆகியவற்றுக்குப் பெரிதும் அப்படைப்பாளர் கடன்பட்டுள்ளார். இத்திறத்தினையும் இலக்கிய வரலாறு விளக்குதல் வேண்டும்.

இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு காலப்பிரிவும் தனக்கெனச் சிந்தனைப்போக்கு, பொருண்மை பற்றிய உணர்வு வெளிப்பாடு, ஈடுபாடு என்ற அடிப்படையில் இனம் காணப்பெறுதலின், அக்காலச் சூழலில் படைக்கப்பெறும் இலக்கியமும் குறிப்பிட்ட சுவை உணர்வுகளினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இத்தகை இலக்கியச் சுவை உணர்வுகள் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டம் வரையுமே மேலோங்கி நிற்கும். இவை அடுத்துவரும் காலப்பிரிவுக்குரிய இலக்கியச் சுவை உணர்வுகளிலிருந்து வேறுபட்டிருக்கும். [- The literary tastes of one age differ from those of another age]. சிறந்த எழுத்தாளர் இலக்கியத்தில் புதியதொரு சுவையினைப் படைப்பதால், ஒரு புதிய மாற்றத்தினை விளைவிக்கிறார். தான் பிறந்த நிலத்தில் நிலவும் பண்பாடு, குறிக்கோள்கள், மனப்பக்குவம், அறவியல் போக்குகள் என்பனவற்றால்தான் சிறந்த படைப்பாளர் கூட உருவாக்கப்படுகிறார். இங்குச் சுட்டப் பெற்ற பண்புகளினால் அவர்தம் படைப்பு வரையறுக்கப்படுகிறது.

ஒரு சிலவேளைகளில் பொதுவாழ்வு, அரசியல், சமூகம் என்ற காரணிகளைவிட, புலமைப்பெருக்கும் பன்னூல் பயிற்சியும் [Academic exercise] கூட இலக்கியப் படைப்பு எழுவதற்குக் காரணம் ஆகலாம். எவ்வாறாயினும் காலம், இடம் என்ற சூழல்களுக்குப் புறம்பாக இலக்கியம் படைக்கப்படுவதில்லை. மக்கள் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் போல, இலக்கிய வரலாற்றிற்கும் பொது வரலாற்றிற்கும் தொடர்பு உண்டு.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் [Literary Period] விளைந்துள்ள இலக்கியங்களின் தோற்ற மாற்றங்களை [Transformation] அடிக் கருத்து [matter, theme], வடிவம் [form], சொல்லாட்சி [diction], உணர்வு [spirit] என்பனவற்றின் அடிப்படையில் விளக்குதல் இலக்கிய வரலாற்றின் பணியாகும். **நாட்டுவரலாறு என்பது ஒருதேசத்தின் வாழ்க்கை வரலாறு [- biography] எனின், இலக்கிய வரலாறு அதன் சுயசரிதை [- auto-biography] என்றே சொல்லப்பெறுதல் வேண்டும்.** நாட்டு வரலாற்றில் நாட்டுமக்களின் செயற்பாடுகளையும் [actions], நடைமுறைச் சாதனைகளையும் [practical achievements] பற்றிய உண்மைகளை அறிகின்றோம். எனின், இலக்கிய வரலாற்றில் கூர்த்த அறிவுத்திறத்தையும், அறவியல் வளர்ச்சியினையும் [intellectual and moral development] அறிகின்றோம்.

இலக்கிய வரலாற்றில் காலப்பிரிவுகள்

இலக்கியச்சுவை உணர்வு, அடிக்கருத்து, சிந்தனை, கற்பனை, குரல் [- tone], நடை [- style] முதலிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய வரலாற்றில் காலப்பிரிவுகள் [Age or period] இனம் காணப்படுகின்றன. இக்காரணிகளில் ஏற்படும் மாற்றமும் புதுமையும் அடுத்துவரும் காலப்பிரிவிற்கு அடித்தளம் அமைக்கின்றன. ஆதலின், ஒருகாலப் பிரிவின் முடிவும் அடுத்த காலப்பிரிவின் தொடக்கமும் ஒரே சமயத்தில் [- Simultaneous] நிகழ்வன. ஒரு காலப்பிரிவிற்கும் அதனைத் தொடர்ந்து வரும் காலப்பிரிவிற்கும் உண்மையான எல்லைச் சுவர்கள் [- boundary walls] இல்லை. வரலாறு என்பது தொடர்ந்து வரும் நீரோட்டம் போன்றது [- Continuous flow]. ஆதலின், அறவே முற்றுப் பெற்ற முடிவுகளும் [absolute endings] முற்றிலும் முதலாக அமையும் தொடக்கங்களும் [absolute beginnings] வரலாற்றில் காண முடியாது. எனவே, இலக்கிய வரலாற்றில் அமையும் காலப்பாகுபாடுகள் விதிக்கட்டின்றி [- arbitrary] விளங்குகின்றன. எனின், சில வரன் முறைகளை அடிப்படையாகக் கொண்டு இப்பாகுபாடுகள் உருவாக்கப்படுகின்றன. வரலாற்றுக் குறியீடுகளினால் சுட்டுதல் ஒரு முறை. எ.டு. எலிசபெத்தின் காலம், பல்லவர்காலம், சோழர் காலம் போல்வன. இந்த முறையினை

ஏற்பதில் தயக்கம் உண்டாகிறது. குறிப்பிட்ட காலத்து இலக்கியத்திலிருந்தே விளக்கக் குறியீடுகளை [- descriptive terms] எடுத்துக் கொண்டு, அவ்வகையில் அக்காலப் பகுதியினை அதற்குரிய தலைமை சான்ற படைப்பாளரின் பெயரினால் வழங்குதல் ஏற்புடையது என்பர் அட்சன். (எ.டு. சாசரின் காலம், சேக்ஸ்பியர் காலம், திருவள்ளுவர் காலம், கம்பர் காலம் போல). திருவள்ளுவர் காலம் என்றால், அக்காலத்துப் படைப்பாளர் பலருள்ளும் மேம்பட்டு விளங்குபவர் திருவள்ளுவர் என்பதும், ஏனையோர் பலரும் அக்காலப் பகுதியில் இருந்தனர் என்பதும் சுட்டுதற் பாலன. இலக்கிய வகைகளில் படைப்பாளர் பலரால் போற்றப்பட்ட ஒன்றின் அடிப்படையிலும் காலப்பாகு பாட்டினை அமைக்கலாம். சான்றாக, அற இலக்கியக்காலம், காவிய காலம், சிற்றிலக்கியக் காலம், நாடகக் காலம், நவீனங்கள் காலம் என்பனவற்றைச் சுட்டலாம். இலக்கிய இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மறுமலர்ச்சிக்காலம் [Renaissance Period], புனைவியற்காலம் [Romantic Age], பத்தி இயக்கக் காலம் [Period of Bhakti movement], விடுதலை இயக்கக் காலம் [Period of Independence movement] என்றவகையில் பாகுபாடு செய்யலாம்.

எனின், இலக்கிய வரலாற்றில் அறிவியல் [science], இறையியல் [theology], மெய்ப் பொருளியல் [philosophy] போன்ற இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட துறைகள் சார்பாகக் காலப்பாகுபாடு செய்தலைத் திறனாய்வாளர் விரும்பிலர். இதற்குக் காரணம் இத்தகைய அயல்துறைகள் மேலோங்கிவரும் படைப்புக்களில் இலக்கியத்தரம் போதிய அளவு அமைவதில்லை என்பதுவேயாகும்.

மூவகைக் கூறுகள்

இலக்கியக்கொள்கை [Literary theory], இலக்கியத் திறனாய்வு [Literary criticism], இலக்கிய வரலாறு [Literary history] ஆகிய தொடர்புடைய முப்பொருள் குறித்தும் தெளிவாக ஆராய்ந்துள்ள ரெனே வெல்லெக், ஆஸ்டின் வாரன் என்ற திறனாய்வாளர்களின் கருத்துக்களைச் சுருக்கமாக அறிந்துகொள்ளுதல் தமிழிலக்கிய வரலாறு எழுதும் நம் முயற்சிக்குப் பெரிதும் உதவும் எனலாம்.

இலக்கிய வரலாறுகள் பலவும் இலக்கியம் உணர்த்தும் சமூக வரலாறுகளாகவோ [Social Histories] சிந்தனைகளின் வரலாறுகளாகவோ [Histories of Thought] அமைந்துள்ளன. மேலும், குறிப்பிட்ட படைப்புக்கள் பற்றிய மதிப்பீடுகளாகவும் அபிப்பிராயங்களாகவும் இலக்கிய வரலாறு எழுதப்பட்டுள்ளன. இலக்கியப் படைப்புக்களை உருவாக்கிய சமூகச் சூழல்கள் ஆராயப் படுதல் வேண்டும். மாற்றம் என்பதைவிட வளர்ச்சி என்பது கூடுதலான பொருண்மை வாய்ந்தது.

முந்தைய இலக்கியங்களில் காணப்பெறும் அடிக்கருத்துக்கள், படிமங்கள் முதலியவற்றைப் பெரிதும் பயன்படுத்தியதால் மட்டும் படைப்பாளர் ஒருவர் தரம் குறைந்தவராகவோ தனித்துவம் இல்லாதவராகவோ எண்ணப்பெறார். இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாக இலக்கிய வகைமை பற்றிய வரலாறு [History of literary genres] சொல்லப்பெறுதல் வேண்டும்.

அரசியல், சமுதாயவியல், அறிவு வளர்ச்சியியல் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக மட்டுமோ அல்லது நகலாக மட்டுமோ இலக்கியம் கருதப்படுதல் கூடாது. இலக்கியக் கூறுகளைக் கண்டறிந்து விளக்குதல் வேண்டும்.

இலக்கியக் காலத்தை அறுதியிடுவதற்கு இலக்கிய அளவுகோல் மட்டுமே பயன்படுத்துப்படுதல்வேண்டும். எனவே, ஒரு குறிப்பிட்ட இலக்கியக் காலக்கட்டம் [Literary period] என்பது இலக்கிய விதிகள், தரங்கள், மரபுகள் [- norms, standards and traditions] முதலியவற்றின் அமைப்பு முறையினால் முடிவு செய்யப்பெறுதல் வேண்டும்.

ஒரு காலக்கட்டத்தின் இலக்கிய வரலாறு எழுதுதல் என்பது அதனை எவ்வாறு விவரிப்பது என்பதைப் பொறுத்து உள்ளது. ஒருமரபு எங்ஙனம் அழிந்தது என்பதையும் அதே நேரத்தில் மற்றொரு புது மரபு எங்ஙனம் தோற்றம் பெற்றது என்பதையும் விளக்குதல் வேண்டும் [- the decay of one Convention and the rise of a new one]. இந்த மரபு மாற்றம் ஒரு காலக் கட்டத்தில் ஏன் விளைந்தது என்பது எளிதில் தீர்க்கமுடியாத சிக்கலாகும். இலக்கிய வரலாற்றில் நிரம்பி வழிதல் [- saturation] அல்லது முழுவதும் பயன்படுத்தப்பெறுதல் [- exhaustion] முற்றிய நிலையில் புதுவதாக இலக்கிய விதி எழுதல் தேவையாகிறது. கவிதை எழுதும் உத்திகளை [-devices and techniques] மிகுதியாகப் பயன்படுத்தியால் சலித்துப் போதலும், வாசகர்கள் புதியனவற்றிற்கு ஏங்கி நிற்றலும் இலக்கியப் போக்கில் மாற்றம் விளைய ஏதுவாக அமைகின்றன.

இலக்கிய வரலாறு முற்றிலுமாகச் சமூகக் கூறுகளை [social aspects] விளக்கவேண்டும் என்று கூறுதல் நேரிதன்று. இலக்கியம் சமுதாயப் படைப்புக்களில் ஒன்றாதலின், அதைத் தோற்றுவித்த சமுதாயத்தின் அடையாளங்கள் அதில் காணப்படுதல் உண்மையே. எனினும், இலக்கியத்தைச் சமூகவியலின் மாற்றுப்பொருளாக [- substitute] எண்ணிவிடுதல் கூடாது. இலக்கிய வரலாற்றில் இலக்கியத்தின் அழகியல் கூறுகள் [Aesthetical aspects] விளக்கப் பெறுதல் வேண்டும். காலம்தொறும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கற்பனைத்திறம், அணிநலம், யாப்பியல் அழகு, இசைநலம், இலக்கிய வனப்பு என்ற இலக்கியத்தின் நெருங்கிய கூறுகளுக்கு

அழுத்தம் கொடுக்கப் பெறுதல் வேண்டும். ஆசிரியரின் தனி வரலாறும் இயன்ற அளவில் அவர்தம் படைப்பினைக் கொண்டு ஆராய்ந்து உணர்த்தப் பெறுதல் வேண்டும்.

இப்பின்னணியில் கி.பி.501-கி.பி.900 என்ற காலப் பகுதிக்குரிய தமிழிலக்கிய வரலாற்றின் பொதுவியல்புகளை இங்குச் சுட்டுதல் தகும். செவ்வியல் காலம் [Classical Age] அல்லது சங்க காலம் [Sangam Period] கி.பி.300 என்ற அளவில் முடிவுற்றதற்கு உரிய காரணிகளையும் [factors], சமுதாய, அரசியல் மாற்றங்களையும், புதுவகை இலக்கியத் தோற்றத்திற்குரிய தேவையினையும் முதலில் நோக்குதல் நம் காலப் பகுதிக்குரிய [கி.பி.400 - கி.பி.900] இலக்கிய வரலாற்றினைப் புரிந்து கொள்ளுதற்குப் பெருந்துணையாக அமையும்.

செவ்வியல் காலத்தில் தமிழகம் முடியுடைய வேந்தர்களாலும் வேளிர்களாலும், குறுநிலத்தலைவர்களாலும் ஆளப்பெற்றது. எனின், இவர்கள் வலிமை குன்றிய கி.பி.3,4ஆம் நூற்றாண்டளவில் அண்டை மாநில அரசுகள் தம் ஆட்சியின் எல்லையை விரிவுபடுத்தும் வேட்கையுடன் தமிழகத்தின் வடக்கிலும் தெற்கிலும் போர் தொடுத்து வெற்றி பெற்றனர். இவர்களில் பல்லவர், களப்பிரர் என்பவர் தமிழ்நாட்டிற்கு முற்றிலும் புதியவர்கள். இவர்கள் முறையே ஆந்திரம், கருநாடகம் ஆகிய பகுதிகளில் அரசு புரிந்துவந்தவர்கள். இவர்களுள், பல்லவர் என்பார் ஆந்திரப் பெரு நிலத்தை ஆட்சி செய்த சாதவாகனர்க்கு உட்பட்ட குறுநிலத் தலைவராக விளங்கியவர்கள். தமிழகத்தின் வட பகுதியில் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த தொண்டைமான் இளந்திரையனின் வழித்தோன்றல்களில் வலி குன்றிய ஒருவனைத் தோற்கடித்துப் பல்லவர்கள் தொண்டை மண்டலப் பகுதி முழுமையினையும் கைப்பற்றினர். பின்னர், மலையமான் நாடு, நடுநாடு, சோழநாடு ஆகியவற்றையும் படிப்படியாகத் தம் ஆட்சியின் கீழ் இணைத்துக் கொண்டனர். தமிழ் நிகண்டு நூல்களில் **"பல்லவர் பதகர் நீசர்"** என்று சுட்டப்பெறுதலின், இவர்களைத் தமிழ் மக்கள் வேற்று நாட்டவர் என்றே எண்ணிய உண்மை புலனாகும்.

சங்ககாலப் பாண்டியர் வழித் தோன்றல்களில் வலிகுன்றிய ஒருவன் காலத்தில் கருநாடகப் பகுதியிலிருந்து படையெடுத்து வந்த களப்பிரர்கள் மதுரை மாநகரைக் கைப்பற்றிப் பாண்டிய நாட்டின் பெரும் பகுதியை ஆளத் தொடங்கினர். இவ்வுண்மையினை, நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக்குடிச்செப்பேட்டில்,

"அளப்பரிய அதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்பரர் எனும் கலியரைசன் கைக்கொண்டதனை...."

எனவரும் பகுதியாலும்; கல்லாடம் என்னும் இலக்கியத்தில்,

> "படைநான்கு உடன்று பஞ்சவற் றுரந்து
> மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
> அருகர்ச் சார்ந்துநின்(று) அரன்பணி அடைப்ப" (56)

எனவரும் பாடற்பகுதியாலும்; பெரியபுராணத்தில் சுட்டப்பெறும் வடுகக் கருநாடக வேந்தன் பற்றிய குறிப்பினாலும் (மூர்த்தி. 11,12) அறிதல் கூடும். சோழ நாட்டிலும் கூட, காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு களப்பிரருள் ஒரு பிரிவினர் ஆட்சி புரிந்தனர் என்பது அபிதம்மாவதாரம் முதலிய பாலிநூல்களினால் அறியப்படுகிறது.

எனவே, **தமிழ் நாட்டிற்கும் தமிழர் மொழி, பண்பாடு, கலைகள் ஆகியவற்றுக்கும் அயலவர் ஆகிய பல்லவரும் களப்பிரரும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் செலுத்திலர் என்பது போதரும்.** அவர்கள் பின்பற்றிவந்த சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய புறச்சயங்களுக்குப் பெரிதும் ஆதரவு தந்தனர். இப் புறச்சமயங்களுக்கு உரிய வடமொழி, பாலி, பிராகிருதம் முதலிய அயல் மொழிகளின் வளர்ச்சியில் கூடுதல் கவனம் காட்டினர். இம் மொழிகளின் வழியாக சமய தத்துவ வளர்ச்சிக்கும், இலக்கிய மேம்பாட்டிற்கும் பயன்தரும் பாங்கில் புதிய சங்கங்களையும் கல்விச் சாலைகளையும் நிறுவி வளர்த்தனர். இப்புற மொழிகளையே ஆட்சி அலுவல் மொழியாகக்கொண்டு பல ஆவணங்களை வெளியிட்டனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

கி.பி.470இல் மதுரை மாநகரில் சமணச் சான்றோர் ஆகிய பூஜ்யபாதரின் மாணாக்கரும் சிறந்த புலமையாளரும் ஆகிய **வச்சிரநந்தி** என்பாரின் தலைமையில் **திரமிள சங்கம்** தொடங்கப்பெற்றது. இவ்வுண்மை **தேவசேனர்** எழுதியுள்ள **திகம்பர தரிசனம்** என்ற பிராகிருத நூலினால் அறிய முடிகின்றது. **'திரமிள'** என்ற சொல் **'தமிழ்' என்ற மூலச்சொல்லின் திரிபுற்ற வடிவம் ஆகும். எனவே, திரமிளசங்கம் என்பது சமணர்கள் நிறுவிய தமிழ்ச் சங்கமே ஆகும். பண்டைய பாண்டியர்கள் நிறுவிய தமிழ்ச்சங்கம் நிலவிய மதுரையில், சமணர்கள் தம் சமயப் பிரச்சாரத்திற்காகவும் இலக்கிய எழுச்சிக்காகவும் தோற்றுவித்த திரமிளசங்கத்தின் ஆதரவில் தமிழிலும் பல பனுவல்கள் வரையப்பட்டன. இவை பெரும்பாலும் நீதி நூல்களாக அமைந்தன.** சங்க காலத்தில் நீதியைத் தனியே ஒரு நூல் வடிவில் விரித்துக் கூறும் நூல் எழுதும் மரபு பரவலாகக் காணப்படவில்லை. செவியறிவுறூஉ, பொருண்மொழிக் காஞ்சி போன்ற சில துறைகளில் அமைந்த பாடல்களிலும் ஏனைய பாக்களிலும் மின்னல் கீற்றென அறக் கருத்துக்கள் பளிச்சிடப் பார்க்கலாம். எனின், முழுமையான நீதிகளைப் போதிக்கும் நூல்கள் கி.பி. 5ஆம்

நூற்றாண்டு அளவில் தோன்றத் தொடங்கின எனலாம். இவ்வரிசையில் பழமொழி நானூறு, நாலடியார் என்பன சிறப்பாகச் சுட்டத்தகுவன.

கி.பி.5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காவிரிப்பூம்பட்டினத்தில் அச்சுதவிக்கத்தன் என்னும் களப்பிர அரசன் ஆண்டு வந்தான். அந்நகரின் கடற்கரைப் பகுதியில் வேணுதாசர் என்னும் பௌத்தப் புரவலர் ஆதரவில் புத்ததத்தர் என்னும் பௌத்தப் பேரறிஞர் ஒரு சங்கத்தை நிறுவினார். இப்பெரியார் உறையூரில் தோன்றிய தமிழர். இவர் நிறுவிய புத்த சங்கம் மதுரையில் விளங்கிய திரமிள சங்கத்தைப் போல் சமயப் பணியிலும் இலக்கியப் பணியிலும் நாட்டம் செலுத்தியது. இச்சங்கத்தில் புத்தசீகர், புத்தகோஷர், சங்கதருமர் முதலிய தேரர்கள் பலர் தொடர்பு கொண்டவர்கள் என்பது பாலி இலக்கிய வரலாற்றின் ஆசிரியர் டாக்டர். பி.சி.லா என்பாரின் ஆய்வு முடிபாகும். தமிழக, இலங்கைத் தேரர்களிடையே நிலவிய தொடர்பினையும் சமயப் பணியினையும் சுட்டியுள்ளார். (Vide, History of Pali Literature, Vol.II p.438, p.376, p.378, p.384, pp.397-99)

கி.பி.5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சாத்தனார் இச்சங்கத்தை,

> "வலம்புரிச் சங்கம் வறிதெழுந்து ஆர்ப்பப்
> புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க" [7.12-13]

என்று பௌத்தக் காப்பியமாகிய மணிமேகலையில் போற்றியுள்ளார். கடலுக்குள் ஒரு சங்கம்; அதுவலம்புரிச்சங்கம்; அது பொருளற்ற ஆர்ப்பொலி நாதம் எழுப்பியது. எனின், கடற்கரையின்மேல் எழுப்பப் பெற்றிருந்த சங்கம் [- சங்கத்தார்] பொருள் பொதிந்த உரைகளை முழக்கமிட்டது [-டனர்] என்று முரணணி தோன்றச் சாத்தனார் சுட்டியுள்ள திறம் வியந்து பாராட்டற்பாலது. தமிழ்ப் பௌத்தப் பெரியார் ஆகிய புத்ததத்தர் தாம் எழுதியுள்ள வினயவினிச்சயம், அபிதம்மாவதாரம் ஆகிய பாலி நூல்களில் பூம்புகார் நகரின் பொலிவினைச் சொல்லோவியம் செய்துள்ளார். இவர் காலத்தில், பாலி மொழியில் அமைந்த திரிபிடகங்கள் தமிழக அறிஞர்களால் பயிலப் பெற்றன. அவற்றைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளும் பொருட்டுத் தமிழில் பல விளக்க வுரைகளும் தமிழ்த் தேரர்களால் எழுதப்பட்டன என்னும் உண்மையினைப் பாலி இலக்கியப் பேரறிஞர் டாக்டர் பி.சி.லா ஆராய்ந்து கூறியுள்ளார்.

"சங்கம்" என்ற சமய, இலக்கிய அமைப்பினைப் போலவே, "கடிகா" என்ற பெயர் பெற்ற உயர்கல்வி நிறுவனங்கள் பல்லவர்களின் ஆதரவில் காஞ்சிமாநகர், பாடலி [-திருப்பாதிரிப் புலியூர்] முதலிய பல நகரங்களில் விளங்கின. இந்தியத் தத்தவத் தரிசனங்களும், தருக்கக் கோட்பாடுகளும், இலக்கண இலக்கியங்களும் பல மொழிக் கல்வியும் இத்தகைய ஆய்வுக் கேந்திரங்களில் பயிலப்பெற்றன. இலங்கை, சீனம் முதலிய அயல்புலங்களிலிருந்தும் அறிஞர் பலர்

இங்கு வந்து பயின்று அறிவுப் பரிமாற்றம் நிகழ்த்தினர். சிறப்பாகப் பௌத்தத்தருக்கமும் தத்துவமும் காஞ்சி மாநகரில் செழிப்புற்றன என்பதற்குத் திக்கநாகர், தருமபாலர், ஸ்திரமதி, அநிருத்தர், சங்கர சுவாமி, சாத்தனார் தரும கீர்த்தி, தருமோத்தரர் ஆகியோரின் பனுவல்கள் சான்று பகர்கின்றன. தியான பௌத்த நெறியினைச் சீன நாட்டிற்குச் சென்று பரப்பிய போதிதருமர், பரமார்த்தர், தாந்திரிகப் பௌத்தத்தினை வளர்த்த நாகார்ச்சுனர் II, நாகபோதி, வச்சிரபோதி, அமோகவச்சிரர் என்போரும் இக்காலப் பகுதியில் காஞ்சிமாநகரில் தோன்றிய தமிழ்ச் சான்றோர் ஆவர். ஒப்பற்ற பௌத்தக் காப்பியம் ஆகிய மணிமேகலையும் இக்காலத்தின் கொடையாகும். பௌத்தத் தமிழ்ப் பெரியார்கள் வடக்கே நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவராகவும் பேராசிரியர்களாகவும் பெருமை பெற்றவர்கள் என்பது இங்குச் சுட்டுதற்கு உரியது.

அன்றியும் அக்கபாதரின் நியாய சூத்திரத்திற்குப் பேருரை கண்ட வாத்சாயணர் I காஞ்சியில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார் என்ற உண்மையினை இந்தியத் தருக்கவரலாறு எழுதிய வங்கப் பேரறிஞர் டாக்டர் சதீஷ் சந்திர வித்தியாபூஷணரும், A.B. கீத்து, போதாஸ் முதலிய மேற்புலத்து இந்திய வியலாரும் ஆராய்ந்து கூறியுள்ளனர். வாத்சாயணர் புற நானூற்றினை நன்குப் படித்தவர் என்பதும் பிறாண்டு நம் நூலில் சுட்டப்பட்டது என்பதும் இங்குக் குறித்தல்தகும். [vide, Indian Epistemology As Expounded in The Tamil Classics, p.142]

தமிழிலக்கிய வரலாற்றுத் திட்டத்தில் நமக்குரிய காலப்பகுதியை [கி.பி.501 - கி.பி.899] வசதிக்காக [for the sake of Convenience] இரு கூறுகளாகப் பாகுபாடு செய்து கொள்ளுதல் பொருத்தமாக இருக்கும். சமண, பௌத்த சங்கங்களும்,கடிகைகளும் மேலோங்கிய காலத்தில் தமிழில் எழுந்த இலக்கியங்கள் கி.பி.5,6ஆம் நூற்றாண்டுகட்கு உரியன. புறச் சமயங்களையும் அயல் மொழிகளையும் புறங்கண்டு தமிழ்நெறியை வளர்த்த பத்தி இலக்கியம் தழைத்தோங்கிய கி.பி.600 - கி.பி.900 என்ற காலப் பகுதியில் தோன்றிய பல்வகை நூல்களைப் பற்றிய வரலாறு இரண்டாம் கூறுக்குரியது. கி.பி.500 - கி.பி.900 என்ற காலப்பகுதியில் எழுந்த பனுவல்களைப் பற்றி முதலில் சுருங்கக் கூறுதல் சாலும்.

கி.பி.500 - கி.பி.700இல் படைப்புக்கள்

திருக்குறள், முதுமொழிக்காஞ்சி, களவழி நாற்பது என்ற மூன்று நூல்கள் நீங்கலாக எஞ்சிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் கி.பி.500 - கி.பி.650 என்ற காலப்பகுதிக்குரியவை. நாலடியார், பழமொழி நானூறு, நான்மணிக் கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, ஏலாதி, ஆசாரக் கோவை என்ற ஒன்பது அற நூல்களும் சுட்டத்தகுவன. திருஞான சம்பந்தரும்

திருநாவுக்கரசரும் தம் பாடல்களில் குறித்துள்ள கிளி விருத்தம், எலி விருத்தம், நரி விருத்தம் போன்ற சமணர்களின் மறைந்துவிட்ட அற நூல்களும் இக்காலத்தில் எழுதப்பட்டவை எனலாம்.

சங்க அகப்பாடல் மரபினைப்பேணிக்காக்கும் பெருநோக்கில் புலவர் சிலர் பாடிய திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை அறுபது, கார் நாற்பது என்ற ஆறு காதல் படைப்புக்களும் குறிப்பிடத்தக்கவை. 150, 400, 500 என்ற பெரும் எண்ணிக்கையில் தொகுக்கப்பெற்ற கலித்தொகை, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு முதலிய சங்க காலத்துத்திணை இலக்கியங்களை நினைவு கூரும் வகையில் 150, 70, 60, 50, 40 என்ற அளவில் மட்டுப்படுத்தப்பட்ட அகப்பாடல் இலக்கியங்களைக் கீழ்க்கணக்கென்று தொகை செய்தனர். எண் அளவில் ஒத்திருப்பினும் **கலித்தொகை நூற்றைம்பதின் காம்பீர்யமும் கலைநேர்த்தியும் கவிச்சுவையும் எங்கே? திணைமாலை நூற்றைம்பதின் நிலை எங்கே? இங்ஙனமே பரிபாடல் எழுபது எங்கே? ஐந்திணை எழுபது எங்கே?** எனின், முன்னயை அகவிலக்கியங்கள் பலர் பாடிய பாக்களின் தொகைகள் என்பதும்; கீழ்க்கணக்கில் உள்ள பாடற் பனுவல்களைத் தனித்தனிப் புலவர் பாடியிருத்தலும் சுட்டத்தக்க ஒருவேறுபாடு எனலாம். முதலில் சுட்டப் பட்ட மூன்று அறநூல்களும்; இங்குக்கூறப்பெற்ற அக இலக்கியங்கள் ஆறும் சங்க காலத்தை ஒட்டி எழுந்தனவாகக் கொள்ளப் பெற்றுக் கி.பி.500-க்கும் முற்பட்ட இலக்கிய வரலாற்றுக்குப் பொருளாக அமைவன.

பத்துப்பாட்டின் வளர் நிலையாகக் கருதப்பெறும் காப்பியங்களில் மணிமேகலை, பெருங்கதை, பிம்பிசாரக்கதை என்பன இக்காலத்தவை. எனினும் சிலப்பதிரத்துடன் கதைத்தொடர்புகொண்ட காரணத்தினால் மணிமேகலை கி.பி.500க்கு முற்பட்ட இலக்கிய வரலாற்றில் ஆராய்வதற்கு ஒதுக்கிக்கொள்ளப்பெற்றதால், எஞ்சிய காப்பியங்கள் பற்றிய வரலாறு நம் கவனத்திற்கு உரியதாயிற்று. பண்டைய சேர, சோழ, பாண்டியரை நினைவுறுத்தும் நோக்கில் புனையப்பெற்ற முத்தொள்ளாயிரமும் கி.பி.500க்கு முற்பட்ட வரலாற்றுக்குப் பொருளாக அமைந்தது. திருமூலர், காரைக்காலம்மையார், முதலாழ்வார்கள் மூவர் கி.பி.5,6ஆம் நூற்றாண்டில் விளங்கியவர்கள். இவர்களின் படைப்புக்கள் நம் காலப் பகுதிக்கு உரியவை.

இலக்கண நூல்களில் இறையனார் களவியல், யாப்பருங்கல விருத்தியில் சுட்டப்பெறும் யாப்பியல், பாட்டியல், இலக்கண நூல்களில் சில - இக்காலத்தில் [கி.பி.500 - கி.பி.700 இல்] எழுதப் பட்டிருத்தல் வேண்டும். ஒரு சில கல்வெட்டுக்களும் இந்நூற்றாண்டுகளில் தோன்றியுள்ளன.

இனி, கி.பி.600 - கி.பி.900 என்ற காலப்பகுதிக்குரிய எஞ்சிய இலக்கியங்களை நோக்குவோம்.

கி.பி.600 - கி.பி.900 இலக்கியங்கள்

இக்காலக் கூற்றின் முற்பகுதியில்தான் தமிழகத்தில் பத்தி இயக்கம் தோன்றித் தமிழிசையின் வழியே மக்களிடம் விழிப்புணர்வினையும் எழுச்சியையும் சிவநெறி, திருமால்நெறியில் ஈடுபாட்டையும், கலை ஆர்வத்தையும், பதிகப் பெருவழியையும் நிலை நாட்டியது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் இக்காலத்தில் ஒளிவீசிய சைவ சமயக் குரவர் ஆவர். பதினோராம் திருமுறையில் பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி நீங்கலாக ஏனைய அருளாளர் படைப்புக்கள் யாவும் இக்காலப் பகுதியில் எழுந்தவையே. பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடி, குலசேகரர், நம்மாழ்வார் முதலிய வைணவச் சான்றோரும் இதே காலத்தில் அரிய அருட் கவிதைகளைப் படைத்தனர்.

தகடூர் யாத்திரை, பாண்டிக்கோவை, நந்திக் கலம்பகம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சிற்றிலக்கியங்கள் முறையே பெருஞ்சேரல் இரும்பொறையினையும் [கி.பி.2நூ] பாண்டியன் நன்மாறனையும் [கி.பி.7நூ] தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவனையும் [கி.பி.9நூ] போற்றும் நோக்கில் எழுதப்பெற்றன. **தமிழ் முத்தரையர் கோவை** என்ற பிரபந்தமும் கி.பி.7,8 ஆம் நூற்றாண்டளவில் தோன்றியிருத்தல் வேண்டும். **பாரத வெண்பா, தமிழ்நெறி விளக்கம், யாப்பருங்கல** விருத்தியில் சுட்டப்பெறும் **யாப்பியல், பாட்டியல்,** அணி நூல்களில் பலவும் இக்காலத்தவை எனலாம். **பஞ்சமரபும் திவாகரம்** என்ற முதல்தமிழ் நிகண்டு நூலும் இக்காலப் பகுதியின் முடிவில் தோன்றியது.

பல்லவர், பாண்டியர் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணப்பெறும் பாடல்களும் மெய்க்கீர்த்திகளும் சிறப்பாகச் சுட்டத்தகுவன. உரை நடை வளர்ச்சிக்குக் கல்வெட்டுக்களும் இலக்கண இலக்கிய உரைகளும் சான்றாக அமைவன.

மேற்சுட்டப்பெற்றுள்ள பனுவல்களைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் கி.பி.501 - கி.பி.900 என்ற காலப் பகுதிக்குரிய இலக்கியப் போக்குகளின் இன்றியமையாத சிறப்புக் கூறுகளையும், சங்கமரபின் மாற்றம் வளர்ச்சி ஆகிய கூறுகளையும் தொகுத்து நோக்குதல் சாலும்.

சிறப்புக்கூறுகள் [கி.பி.501 - கி.பி.900]

(1) தொல்காப்பியர் வரையறுத்துக் கூறிய தமிழ்மொழி இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்ற மூவகைப் பாகுபாடு கொண்டது. இம்மரபு சங்க இலக்கியங்களில் காணப்பெறுவது. எனின், இக்காலப் பகுதியில் எழுந்த இறையனார் களவியல் உரையில்,

"எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும்
வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம்
வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்"

எனவரும் பகுதியில் எழுத்து, சொல், பொருள், யாப்பு என்று நால் வகைப் பாகுபாடு பெற்றுத் தமிழிலக்கணம் வளர்ச்சி பெற்றமை புலனாகும். இவ்வுண்மை,

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்திசை உள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்கம் நான்மையின் கடைக்கண்
யாப்பினது இலக்கணம் அறைகுவன் முறையே"

எனவரும் சிறுகாக்கைப் பாடினியாரின் நூற்பாவினால் உறுதியாகிறது.

2. தமிழுக்குச் சிறப்புரிமை பூண்ட அகம், புறம் என்ற பொருளிலக்கணம் விரிவு பெற்று அகப்பொருளுக்கென்று தனி இலக்கண நூலும் புறப்பொருளுக்கென்று தனி இலக்கண நூலும் இக்காலப் பகுதியில் உருப்பெற்றன. களவு, கற்பு என்ற இருவகைக் கைகோள் கொண்ட அகப்பொருள் இலக்கணம் தலைமை பற்றிக் களவியல் எனப் பெயர் சூட்டப்பெற்றமைக்கு இறையனார் களவியல் சான்றாகிறது. புறப்பொருளுக்குரிய இலக்கண நூல்களில் பன்னிருபடலமும் (கி.பி.3நூ) புறப்பொருள் வெண்பா மாலையும் சுட்டத்தக்கவை. யாப்பருங்கல விருத்தியில் சுட்டப்பெறும் வாய்ப்பியம், அவிநயம் முதலிய நூல்களும் கருதற்பாலன.

3. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உவமையியல் என்ற ஓரியலில் கூறிய அணி இலக்கணம் விரிவுபெற்றுத் தனித்துறையாக வளர்ச்சி பெற்றது. யாப்பருங்கல விருத்தியில் சுட்டப்பெறும் அணிநூல், அணிவியல் என்ற இலக்கண நூல்கள் இங்கு எண்ணுதற்கு உரியன. அன்றியும் திவாகர நிகண்டில் சுட்டப்பெறும் உருவகம், உவமை, வழிமடக்கு முதலிய இருபத்தெட்டு வகை அணிகளும் (நூ.2458) முற்பட்ட தமிழ் அணி இலக்கண நூல்களிலிருந்து எடுத்துக் கூறப் பெற்றவையாகத் தோன்றுகின்றன. வடமொழியில் காவியா தரிசம் என்ற அலங்கார சாத்திரம் எழுதிய தண்டி என்பார் காஞ்சி மாநகரில் இரண்டாம் இராச சிம்ம பல்லவன் அவையில் விளங்கியவர் (கி.பி.8நூ.) என்பது அறிஞர் பலரின் துணிவு. இப்புதிய அணிகள் யாவும் காவியங்களிலும் திருமுறைகளிலும் நாலாயிரத்திவ்வியப்பிர பந்தத்திலும் பழைய சிற்றிலக்கியங்களிலும் பயிலப்பெற்றவை என்பதும், இவற்றை இனங்கண்டு பின்வந்தோர் அணி இலக்கணத்தைத் தனி நூலாக வகுத்தனர் என்பதும் உளங்கொளற்குரியன.

4. அகம், புறம் என்ற பாகுபாடு செய்வதே சங்ககால இலக்கிய மரபு. எனின், அகம், அகப்புறம், புறம் என்ற பாகுபாடும்; அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்ற பாகுபாடும் புதிய இலக்கண நூல்களில் அறிமுகம் ஆயின என்பது யாப்பருங்கல விருத்தி மேற்கோள் நூற்பாக்களினால் உணரலாம். [விரிவு : "புறத்திணை வாழ்வியல்" என்ற நம் நூலில் காண்க]

5. தொல்காப்பியப் புறத்திணை மரபில் நிலையாமையினை உணர்த்திய காஞ்சித்திணை இக்காலப் பகுதியில் வஞ்சித் திணைக்கு மறுதலையாய் எதிரூன்றுதல் (வரும் படையினைத் தடுத்து நிறுத்துதல்) என்ற பொருண்மைக்கும் உரியதாய் விளங்குகின்றது.

6. தொல்காப்பியர் வெட்சித் திணையில் ஒரு கூறாகக் குறித்துள்ள கரந்தையும் உழிஞைத் திணையில் ஒரு கூறாகக் கொண்ட நொச்சியும் அவ்விரு திணைகட்கும் மறுதலையாக எண்ணப்பட்டுத் தனித்திணைகளாகவே வளர்ச்சிபெற்றன. ஆநிரை கவர்தல் வெட்சி; அதனை மீட்டல் கரந்தைத்திணை; மதிலை அழித்தல் உழிஞை அதனைக்காத்தல் நொச்சி என்று வரையறுக்கப்பெற்றன.

7. தொல்காப்பியர் காலத்தில் புறத்திணை ஏழாகவே எண்ணப் பெற்றன. எனின், இக்காலப் பகுதியில் எழுந்த புறப்பொருள் இலக்கண நூல்களில் புறத்திணை பன்னிரண்டு என்று வகுக்கப்பட்டது ஒரு பெரிய மரபு மாற்றம் எனலாம்.

8. தொல்காப்பியர் செய்யுளியலில் கூறும் யாப்பிலக்கணம் பழைய செவ்வியல் படைப்புகளுக்கு உரியது. செய்யுள் உறுப்புக்கள், புதிய உருவாக்கம் ஆகிய பாவினங்கள் பற்றிய பற்பல செய்திகளையும் விதிகளையும் வரையறுத்துப் **புதிய யாப்பிலக்கணம்** [neo-prosody] **செய்தவர்களில் காக்கைபாடினியார் என்னும் மாப்பெரும்புலவர் சிறப்பாகப் போற்றப்படுகின்றார்.**

9. படைப்பாளர்கள் பழைய ஆசிரியம், வெண்பாவே யன்றிப் புதிய பாவினங்களில் குறிப்பாக விருத்தயாப்பினைப் பெரிதும் பயன்படுத்திப் பாடியிருத்தல் சுட்டத்தக்கது.

10. எழுத்து, சொல், பொருள் என்ற தொல்காப்பிய இலக்கணப் பாகுபாடு எழுத்து, சொல், பொருள், யாப்பு என்று நான்காகப் பரிணாமம் பெற்றமை முன் சுட்டப்பட்டது. எனின், கி.பி.700ஐ ஒட்டி இவற்றுடன் அணி என்ற தனிப்பிரிவும் சேர்ந்து ஐந்திலக்கண மரபு தோன்றியது. இம்மரபின் முதல் நூலாக **அவிநயம்** என்ற சமணச் சான்றோர் பாடி மறைந்துபோன இலக்கணம் கருதப்படுகிறது. பல புதிய யாப்பியல், பாட்டியல் பனுவல்கள் தோன்றின.

11. சங்க இலக்கியங்களில் பரிபாடல், கலிப்பா ஆகியவற்றின் உறுப்பாக விளங்கிய வெண்பா இக்காலத்தில் ஒரு நூல் முழுமையும் படைப்பதற்குரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

12. சங்க இலக்கியத்தில் பயின்ற அளவிற்கு வஞ்சிப்பா இக்காலத்தில் எழுந்த படைப்புக்களில் பயிலப்பெறவில்லை எனலாம்.

13. குறும்பாடல், நெடும்பாடல், கழிநெடும்பாடல் என்ற வகையில் புலவர்களால் சங்க காலத்தில் வளர்க்கப்பட்ட ஆசிரிய யாப்பு காவியம் பாடும் அளவிற்கு மேலும் வளர்ச்சி பெற்றது.

14. தொல்காப்பியத்திலும், சங்கப்பாக்களிலும் அறம், பொருள், இன்பம் என்று உறுதிப் பொருள்களை முப்பாலாக எண்ணும் மரபு விரிவுற்று இக்காலத்தில் தோன்றிய திருமுறை, நாலாயிரம், திவாகரம் ஆகியவற்றில் வீடும் சேர்த்து நான்காக எண்ணும் புதுமை நிலைபெற்றது.

15. சங்கப்படைப்புக்களில் மானிடப்பாடாண் மிகுதி; இக் காலப் படைப்புக்களில் தெய்வப் பாடாண் மிகுதி. முன்னவை மக்களை மையமாகக் கொண்டவை; பின்னவை இறைவனை முதன்மைப் படுத்தியவை.

16. சங்க அகப்பாடல்களில் சமகால வரலாற்றுச் செய்திகள் மிகுதி; எனின், பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அக நூல்களில் சமகால [Contemporary] வரலாற்றுக் குறிப்புக்கள் இல்லை என்றே சொல்லிவிடலாம். ஆயின், பாண்டிக்கோவையில் வரலாறு மிகுதி.

17. சங்கப்பாக்கள் சுட்டும் சிறுபாணர், பெரும்பாணர்,பொருநர், விறலியர் முதலியோர் வளர்த்த கலைகளின் மேம்பாட்டுயர்வினை இக்காலத்துக் காப்பியங்களில் காணலாம்.

18. நகரினைப் பெண்ணிற்கு உவமை கூறும் சங்க அக இலக்கிய மரபு கோவைப் பாக்களில் தொடர்ந்துள்ளது.

19. பத்து, நூறு, நானூறு என எண்கொண்ட இலக்கிய அமைப்பியல் இக்காலப் பகுதியிலும் பின்பற்றப்பட்டது.

20. நெஞ்சொடு கிளத்தல், பறவை, தாவரங்களை விளித்துப் பேசுதல் ஆகிய பாற்கிளவி [Pathetic Fallacy] இக்காலப் படைப்புக்களில் தொடர்தல் காணத்தக்கது. ஆடூஉமுன்னிலை, மகடூஉமுன்னிலை அறநூல்களில் வருதல் தனிச்சுட்டுக்குரியது.

21. காதல் இன்பத்தைப் போற்றும் சங்க அகமரபுக்குமாறாகப் பெண்ணை வெறுத்தும், பெண்ணின்பத்தை வெறுத்தும் பாடும் நிலை சமண, பௌத்தங்களின் தாக்கத்தால் இப்பிறகாலப்பாக்களில் காணப்படுகிறது.

22. வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோள் புகழ்பெறுதல் என்ற பழைய வீரயுக மரபு மாறி, வீடுபேறுதான் மனித வாழ்க்கையின் முடிவாகிய இலட்சியம் என்ற புதுநோக்கு எழுந்தது.

23. சங்க இலக்கியத்தில் கதைக்குறிப்புக்கள் என்ற அளவில் இருந்த இராமாயணம், மகாபாரதம் என்பன பின்னர்ப் பெருங் காப்பியங்களாக வளர்ச்சி பெறுதல் சுட்டற்பாலது.

24. சங்க இலக்கியத்தில் சுட்டப்பெறாத நியாயம் - வைசேடிகம், மீமாம்சம், ஆசீவகம் போன்ற தத்துவங்கள் பற்றிய செய்திகளும்; அவற்றில் குறிப்பாகவும் குறைவாகவும் சுட்டப்பெற்ற சாங்கியம் - யோகம், உலோகாயதம், சமணம், பௌத்தம், சைவம், வைணவம் பற்றிய மெய்ப்பொருட் சிந்தனைகளும் அளவைக் கோட்பாடுகளும் இக்காலத்துத் தோன்றிய படைப்புக்களில் விரிவாகவும் விளக்கமாகவும் இடம் பெற்றிருத்தல் சிறப்பாகச் சுட்டத்தக்கது. பாடுபொருளில் ஏற்பட்டுள்ள மாற்றம் புதுமைகளை வரவேற்றுள்ள பாங்கிற்குச் சான்று பகர்கின்றது.

25. சங்க இலக்கியம் சுட்டும் இறையன்பு நிலைக்கும் வழிபாட்டு முறைக்கும் திருமுறைகள் திவ்வியப்பிரபந்தம் காட்டும் பத்திநிலைக்கும் பரவுதல் முறைக்கும் வேறுபாடு உண்டு. இவ்வுலகை நோக்கிய எண்ணம் முன்னதிலும், மறுமை நோக்கிய உணர்வு பின்னவற்றிலும் விஞ்சிநிற்றல் காணலாம்.

26. வரலாற்றுக் குறிப்புக்களை இலக்கியமாகப்பாடும் பதிற்றுப்பத்து, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய பழைய இலக்கிய மரபினை ஒட்டியும் சற்று வேறுபட்டும் புனைந்து பாடும் புதுப்படைப்பு மரபினைப் பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் என்ற இலக்கியங்களில் காணலாம்.

27. தொல்காப்பியர் தமிழைத்தவிர வடமொழியினை மட்டும் பெயர் சுட்டிச் சொல்லியுள்ளார். சங்க இலக்கியங்கள் மொழி பெயர் தேயங்களைப் பேசுகின்றன. யவனர் பற்றிய செய்தியும் உண்டு. எனின், இக்காலத்து இலக்கியங்களில் பதினெட்டு மொழிகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சாத்தனார், "மொய்த்த மூவறு பாடை மாக்கள்" என்றும்; திருமூலர் "பண்டிதர் என்போர் பதினெட்டுப் பாடையும், கண்டவர் கூறும் கருத்தறிவார்" என்றும் கூறுதல் நோக்கத்தக்கது. தமிழ் நெறி விளக்கம் என்ற இலக்கண நூலின் உரையாசிரியர் மேற்கோள்காட்டியுள்ள பழைய பாடல் ஒன்றிலும் பதினெண்மொழிகள் குறிக்கப்பெற்றன. திவாகர நிகண்டும் இம் மொழிகளைச் சுட்டியுள்ளது. ஆதலின், தமிழ்மக்களும் பல்வேறு மொழியாளர்களும் அரசியல், வாணிபம், கலை, சமயம் முதலியன காரணமாகக் கூடிக் குலாவிய உண்மை உய்த்துணரப்படும்.

புறச்சமயங்களின் பாகதமொழி, வடமொழி பற்றிய செய்திகளும், அவற்றின் ஒலிப்புக் குறிப்பும் தேவார ஆசிரியர் மூவராலும் சுட்டப்பெற்றன.

28. மொழியமைப்பிலும், தொடரமைப்பிலும் பல புதுமைகள் தோன்றின. சொற்கோவையில் பல புதிய சொல்லாக்கங்களும் தற்பவங்களும் சேர்ந்தன. இவை வடமொழி, பாலி, பிராகிருத மொழிகளின்றும் போந்தவை. ஒலிமாற்றம் [phonemic change], இலக்கணமாற்றம் [grammatical change], வடிவமாற்றம் [shape change], சொற்பொருள் மாற்றம் [semantic change] முதலிய பல்வகை மாற்றங்கள் [phylogenetic changes] சங்க இலக்கிய மொழியமைப்பினின்றும், இக்காலப்பகுதிக்குரிய இலக்கிய மொழியமைப்பினை இனங்காண ஏதுவாக அமைவன.

29. தொல்காப்பியத்துறைகள் சில இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றதிறமும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்ற பொருண்மைக் கூறுகள் சில தனி இலக்கியமாக விரிவுபெற்றபாங்கும் இக்காலத்துப் படைப்புக்களில் காணப்படும்.

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் தெற்றெனக் காணப்படாத பற்பல இலக்கிய வகைகள் இக்காலப் பகுதியில் படைக்கப்பெற்றன. சான்றாகக் கலம்பகம், கோவை, மாலை, சாழல், உந்தி, தெள்ளேணம், தாண்டகம், பல்லாண்டு, மறம், மெய்க்கீர்த்தி என்பவற்றையும்; திருஞானசம்பந்தர் மூல இலக்கியமாகப் படைத்துள்ள மாலை மாற்று, ஆவின்பாய்ச்சல், சுழிகுளம், கூடசதுக்கம், இயமகம், எழுகூற்றிருக்கை, வினாவுத்தரம், ஏகபாதம் முதலிய பல புதுமைகளையும் குறிப்பிடுதல் சாலும்.

30. சமுதாய நிலையில் ஏற்பட்ட மாற்றங்களும் இலக்கியப் போக்கினைத் தீர்மானிப்பன. கைவினைஞர்கள் பற்றிய குறிப்பும் மக்கள் தரப்பிரிவும் இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் சுட்டப்படாத குயவர், செட்டி, காருகர் போன்ற இனப் பெயர்களைக் குறிப்பிடுதல் தகும்.

31. சங்க இலக்கியங்களின் வழி தமிழ்மக்கள் இந்திய நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பகுதிகளுக்கும் வாணிபத்தின் பொருட்டுப் போய் வந்தவர்கள் என்பது புலனாகின்றது. நந்தர், மௌரியர் போன்ற வடநாட்டுப் பேரரசுகள் பற்றியும் அறிய முடிகின்றது. எனின், அவந்தி, மகதம், வத்தவம் முதலிய நாடுகளும், உஞ்சை முதலிய நகரும் முதன்முதல் இக்காலத்து இலக்கியங்களில் வெளிப்படையாக அறிமுகமாகின்றன.

32. சங்க இலக்கியத்தில் ஒரு சில தலங்களே சுட்டப்பெற்றன. நூற்றுக்கணக்கான புதிய தலங்களும் திவ்விய தேசங்களும் பத்தி இயக்கத்தின் விளைவாகப் போற்றப்பெற்றன. இவை வடக்கே இமயம் முதல் தெற்கே இலங்கை வரை பரவியிருப்பவை. ஆதலின் பத்தியின் வழி இந்திய மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சி ஓங்கியிருந்தது எனலாம்.

33. கோயிற்கலை பல்லவர்காலத்துக்குப்பின் பெரிதும் வளர்ச்சி பெற்றது. தொடர்புடைய ஆடற்கலை, பாடற்கலை, சிற்பக்கலை, கவிதைக்கலை என்பனவும் புதிய பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சியுற்றன.

34. புதுமை, அளவு, வகைமை, பொருண்மை, வடிவம் என்ற பல நிலைகளில் பழைய இலக்கியங்களினின்றும் கி.பி.500 - கி.பி.900 இல் எழுந்த பனுவல்கள் தனித்து விளங்குவன.

35. அகம், புறம் என்ற திணை அடிப்படையில் சங்கப் பாக்களைத் தொகைவகை செய்தனர். எனின், கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் அறம், பொருள், இன்பம் என்ற பொருள் அடிப்படையில் பாடப்பெற்றன. திணை அடிப்படையில் அமைந்த நூல்கள் பழைய இலக்கிய மரபினைப் புதுப்பிக்கும் நோக்கிப் புனையப்பெற்ற புதுச்செவ்வியல் [Neo-Classicism] வாய்ந்தவை எனலாம். எனினும் கற்பனைத்திறத்தில் சிறுவேறுபாடு கொண்டவை ஆகும்.

36. சங்கத்தொகை நூல்கள் ஒவ்வொன்றும் பலர் பாடிய பாக்களின் தொகுப்பு. எனின், நாலடியாரைத்தவிர, கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் ஒவ்வொரு தனிப்புலவரால் பாடப்பெற்றவை.

37. சங்கத்தொகை நூல்களுக்குப் பெரும்பாலும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடினர். எனின், கீழ்க்கணக்கு நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பெரும்பாலும் அவ்வந் நூலாசிரியரால் பாடப்பெற்றவை.

38. சங்கத்தொகை நூல்களின் கடவுள் வாழ்த்து முருகன், சிவன், திருமால் ஆகிய தெய்வங்களின்மேல் பாடப்பெற்றவை. எனின், கீழ்க்கணக்கு நூல்களுக்கு இம் மூவர் தவிர, மும்மூர்த்திகள், விநாயகர், அருகன் ஆகிய கடவுளர் பற்றிய வாழ்த்துப் பாடல்களும் பாடப் பெற்றுள்ளன.

39. சங்கப் பாக்களைப் பாடியோரைச் சான்றோர் என்றும், கீழ்க்கணக்கு நூல்களைப் பாடியோரைப் பிற்சான்றோர் என்றும் உரையாசிரியர்கள் பலரும் சுட்டுதல் நோக்கத்தக்கது. திருக்குறள் விதி விலக்காகக் கொள்ளத்தக்கது. இளம்பூரணர் திருக்குறளைச் சான்றோர் செய்யுள் எனக் குறித்துள்ளார்.

40. சமுதாயம், அரசியல், குடும்பம், சமயம், கலை, கல்வி, இலக்கியம், மொழி என்ற பல்வேறு அடிப்படைகளில் கி.பி.400 - கி.பி.900 என்ற காலப் பகுதிக்குரிய சமுதாயம் முன்னைய சமுதாய நிலையினின்றும் மாற்றமும் வளர்ச்சியும் புதுமையும் பெற்று விளங்கியது.

இனி, இக்காலப் பகுதியில் எழுந்த தமிழ்ப்பனுவல்களை வகைமை அடிப்படையில் பாகுபாடு செய்து அவற்றின் அமைப்பினையும், வனப்பினையும், அழகியலையும், அருங்கருத்துக் களையும் ஆராய்ந்தறிதல் பயன் நல்கும்.

முதலில் அற நூல்கள் பற்றிய வரலாற்றினை நோக்குவோம்.

II அறநூல்கள்

அறநூல் எழுதற்குக் காரணிகள்

அரசியல் குழப்பமும் ஏதிலர் வரவினால் ஏற்பட்ட சமுதாயச் சிக்கலும் அமைதிக் குலைவும் குடும்பக் கொந்தளிப்பும் அற நூல்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணங்களாயின. புறச்சமயத்தாரின் அரசுச் செல்வாக்கினால் பலபுதிய சீலங்கள் அறிமுகம் செய்யப்பெற்றன. சமுதாயம் சிதைவுறாமல் நிலைபெறவும் மக்களின் வாழ்வியல் ஒழுங்குறவும் ஆட்சியியல் செம்மை அடையவும் சான்றோரும் புலவரும் நீதிகள் பலவற்றை ஓதினர். இப் பெருமக்கள் தொன்று தொட்டுத் தமிழ்மக்களால் பின்பற்றப்பட்டுவரும் ஒழுகலாறுகளுக்கு முதன்மை வழங்கியும்; சமணம், பௌத்தம், வைதிகம் சார்ந்த அயல் நெறியாளர்களின் அறக் கருத்துக்களைத் தேர்ந்து தெளிந்து ஏற்பன எடுத்துரைத்தும் அறநூல்களை இயற்றினர். மக்களையும் மன்னனையும் நெறிப்படுத்தும் பாங்கில் வேம்பும் கடுவும் போல் வெய்தாய சொற்களினால் உணர்த்தப்பெற்ற அறக்கருத்துக்களையும், மூதுரைகளையும், பழமொழிகளையும் இலக்கியத்தேனில் குழைத்துப் பயில்வார் பயன்பெறும் வண்ணம் பாடிச் சென்றனர். இப்புலவர் பெருமக்கள் நூலறிவுடன் நுண்ணறிவும் வாழ்வியலில் பட்டறிவும் மனச்செம்மையும் மனிதநேயமும் சமுதாய உணர்வும் மிக்கவர்கள். தமிழர்களுக்குச் சிறப்புரிமை கொண்ட சித்த மருத்துவப் பனுவல்களிலும் இவர்களுக்குப் பெரும்புலமையும் செயலறிவும் அமைந்ததால் மருந்துப் பெயர்கள் சூட்டியும் விருந்தாய அற நூல்களைச் செய்தனர். உடலைப் பற்றிய பிணிகளைப் போக்கும் மருந்தினைப் போல் சமுதாயத்தைப் பிடித்துள்ள குறைகளைப் போக்கும் அறங்களை ஓதினர். கிரேக்க, இந்திய அற நூல்கள் பலவற்றில் அறங்களை மருந்துடன் ஒப்பிட்டுரைக்கும் பொதுப்பாங்கு

காணப்படுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. மனச் சுகாதாரத்தைப் பேணிக்காப்பதுதான் இவர்களின் குறிக்கோள். தனிமனிதன், கூடி வாழும் நிலையில் குடும்ப மனிதன், சமுதாய மனிதன், ஆட்சிப் பொறுப்பிலும் அரசியல் பணியிலும் உள்ளவர் என்ற பலநிலை மனிதர்களின் தூய்மைக்கும் செம்மைக்கும் நெறிகாட்டும் நீதிகளையும் ஒழுங்குகளையும் வரையறை செய்த அறங்காவலர்களாக இவர்கள் விளங்கினர். மனிதன் முழுமை பெறுதல் [-பூரணத்துவம் -Perfection] வேண்டும் என்பதே அறவோரின் திருவுள்ளம்.

பண்பாடு, நடத்தை, நெறி, ஒழுக்கம் - இவற்றைக் கடைப்பிடிக்கும் அளவிற்கு ஒரு சமுதாயம் மேம்பட்டு விளங்கும். ஒழுக்கக் கேடுகளாலும், நெறிமுறை வழுக்களாலும், சமுதாயம் ஒப்பாதவற்றைச் செய்வதாலும் விளையும் தீமைகளையும், குற்றங்களையும், தண்டனைகளையும்கூட அற நூல்கள் சுட்டிக்காட்டியுள்ளன. தத்துவ சாத்திரங்களை எழுதியவர்கள் மறவாது தத்தம் மெய்ப்பொருளியலுக் குரிய அறக்கோட்பாடுகளையும் வரையறுத்துள்ளமை நோக்கத்தக்கது. அறம் இல்லாத தத்துவச் சிந்தனை மணம் இல்லாத மலரைப் போன்றது. தமிழில் அற நூல்கள் எழுந்த காலக் கட்டத்தில் பல்வேறு தத்துவத்தரிசனங்கள் பற்றிய ஆராய்ச்சியும் நடைபெற்றுள்ளது. **பதினெண்கீழ்க்கணக்கில் திருக்குறள், முதுமொழிக்காஞ்சி என்பன இரண்டும் சங்க காலத்திற்கு உரியவை என்று அறிஞர் பலரும் கருதுவதால்,** எஞ்சிய அற நூல்களைப் பற்றிய எண்ணங்களே இங்குச் சுட்டத்தகுவன.

அறநூல் யாப்பு

இந்நூல்கள் யாவும் வெண்பா யாப்பினில் பாடப் பெற்றவை. கட்டுக்கோப்புடைய அறங்களைச் செப்பிக்கூறும் செப்பலோசையும் கட்டுக் கோப்பும் உடைய யாப்பு வெண்பாவே என்பதை அறிந்து சான்றோர்கள் பெரும்பாலும் நேரிசை, இன்னிசை வெண்பாக்களிலும், அருகிய நிலையில் குறள், சிந்தியல், பஃறொடை வெண்பாக்களிலும் பாடினர். இந்நூல்களில் 40 பாடல்கள் சிற்றெல்லையாகவும் 400 பாடல்கள் பேரெல்லையாகவும் அமைந்துள்ளன. இவற்றில் நாலடியாரைத் தவிர, பிறயாவும் தனித்தனி ஆசிரியரால் பாடப் பெற்றவை. நாலடியார் மட்டும் புலவர்பலர் பாடிய பாக்களின் தொகுப்பாகத் திகழ்கிறது. இந்நூல்களில் காணப்பெறும் சில சிறப்புக் கருத்துக்களை முதலில் தொகுத்துக் கூறுதல் சாலும்.

அறநூல்களில் சிறப்புக் கருத்துக்கள்

கொல்லாமை, புலால் உண்ணாமை, கள் உண்ணாமை, கள்ளாமை, பொய்யாமை, காமமின்மை என்பன கூடுதலாக வலியுறுத்தப் பெறுவன. பிறனில் விழையாமை, பரத்தமை கடிதல் என்பனவும் சுட்டப்பட்டன.

குடும்பச்சிதைவு காரணமாகப் பிறனில் விழையாமையும்., சமுதாயச் சீர்கேடு காரணமாகப் பரத்தன்மை கடிதலும் அறநூல் ஆசிரியர்களால் ஓதப் பெற்றன எனலாம். சங்ககாலச் சமுதாயத்தில் பிறனில் விழைதல் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. எனவே, அப்பொருள் பற்றிய குறிப்பில்லை. எனின், பொதுப் பெண்டிர் தொடர்பும் அதனால் விளைந்த சிதைவும் சுட்டப்பெற்றன. அப்பழக்கத்தைச் சங்கப் புலவர் ஏற்கவில்லை. தொல்காப்பியர், இதனைக் கொடுமை ஒழுக்கம் என்றும் புறத்தொழுக்கம், அடங்கா ஒழுக்கம் என்றும் கடிந்துள்ளார். "பல்லிருங் கூந்தல் மகளிர், ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே" (புறம் 73:13-4) என்று வஞ்சினம் கூறிய சோழன் நலங்கிள்ளியின் பாட்டும் நம் கருத்திற்கு அரணாதல் காண்க. வடமொழியில் எழுதப்பட்ட காமசாத்திரங்களில் பிறனில் விழைவு பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படும். இதனைப் **பரகீய ஒழுக்கம்** என்பர். அயலான் மனைவியை அடைவதற்குரிய வசிய வித்தைகள் பலவற்றையும் இந்நூல்கள் கூறுகின்றன. இந்திரன் கௌதம முனிவரின் மனைவி அகலிகையினை அடைவதற்குச் செய்த உபாயமும் அதனால் விளைந்த தீமையும் திருக்குறளிலும் பரிபாடலிலும் முறையே குறிப்பாகவும் விரிவாகவும் குறிக்கப்பெற்றன. இத்தகைய வட மொழிக் கதைகள் தமிழகத்தில் வழங்கிய காலத்தில்தான், பிறனில்விழையாமை யினைக் கண்டிக்கவேண்டிய சிந்தனையும் தோன்றியிருத்தல் வேண்டும். உலக இலக்கியங்கள் பலவற்றிலும் இக்கொடிய ஆசையின் ஆற்றலையும் தீங்கினையும் புலவர்கள் பாடியுள்ளனர். கிரேக்கக் கதைகள் பலவற்றில் குறிப்பாக ஹோமரின் இலியட்டில் இக்கொடுமை சுட்டப்பட்டது. சேக்ஸ்பியரின் எட்டாம் ஹென்றி, ஹாம்லெட் ஆகிய நாடகங்களிலும் பிறனில் விழைந்த பாத்திரப்படைப்பினைக் காணலாம். இராமாயண இதிகாசத்தின் மையக்கதையே பிறன் மனைவியைக் கவர்ந்த கொடுமையின் விளைவினை விளம்புவது. வாலி, சுக்கிரீவன் இருவருமே ஒருவன் இல்வழி ஒருவன் மனைவியை மருவிய செய்தியை ஆதிகவி ஆகிய வான்மீகி குறித்துள்ளார். இந்திய வரலாற்றில் இரண்டாம் சந்திர குப்தன் தன் அண்ணன் இராமகுப்தனைக் கொலை செய்துவிட்டு அவன் மனைவி துருவதேவியை மணந்த நிகழ்ச்சி உண்டு.

உலக இலக்கியங்களில் சுட்டப்பட்ட பிறனில் விழைதல் என்ற தீமையினை முதன் முதல் கடிந்து கூறிய அறவோர் பகவான் புத்தர் என்ற உண்மையினை இங்குச் சுட்டுதல் சாலும். பாலி மொழியில் எழுதப்பெற்றுள்ள புத்தரின் பொன்மொழிக் களஞ்சியம் ஆகிய தம்மபதத்திலும் (309), சுத்த நிபாதத்திலும் (396) பரதாரம் விரும்புதல் (-பிறனில் விழைவு) கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

கொல்லாமை, புலால் உண்ணாமை, யாகம் புரியாமை, மதுபானம் செய்யாமை, திருடாமை, பொய்யாமை, சூதாடாமை

முதலிய அறங்கள் பலவும் புத்தர் பிரான், மகாவீரர் ஆகிய அவைதிகச் சான்றோர்களால் அழுத்தம் கொடுத்து அறமாகப் பேசப்பெற்றன. இவர்கள் தோன்றுவதற்கு முன்புகூட, இவர்கள் பேசிய அறங்களில் பல தமிழ் மக்களால் பின்பற்றப் பெற்றிருந்தன என்பதும் எண்ணத்தக்கது.

அறங்கூறிய முறைமை

அறங்களைப் புகட்டும்பொழுது நெஞ்சினை நோக்கிப் பேசுதல் ஒருமுறை; உலகோரை நோக்கி உரைத்தல் மறுமுறை; நம்பியை விளித்தும் நங்கையினை அழைத்தும் சொல்லும் பாங்கில் முறையே ஆடூஉ முன்னிலை, மகடூஉமுன்னிலை அமைத்துப் பேசுதல் தனிப்பெரும் முறையாக இந்நூல்களில் காணப்படுதல் அறியத்தக்கது. அணிநலமும், கற்பனை வளமும், சிந்தனை வளமும் இலக்கிய நயமும் தோன்ற அறங்களை ஓதும் அருமையும் அழகும் பெரிய அறநூல்களின் தனிச்சிறப்பாகும். பழைய கதைகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் எடுத்துச்சொல்லி நீதிகளை ஓதுதல் உண்டு. மக்களிடையே வழங்கிவரும் பழமொழிகளை விளக்கும் பாங்கில் இடம் பெறும் நெறிகளும் ஒழுங்குகளும் பற்பல. உப்புச்சப்பின்றிப் பட்டியலிட்டுக் கூறும் பான்மையும் ஒரு சில நூல்களில் காணலாம். இவற்றுள் பலவும் வடமொழி நூல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை ஆகும். எங்ஙனமாயினும், சிலவகை எழுத்தில் கூறப்படும் சூத்திரம் போல் செறிவுடையதாகவும், பயில்வார்க்கு இனிமையும் இதமும் தருதலின் மென்மொழி யுடையதாகவும் சிலவாகிய அடிகளினால் அம்மை என்ற வனப்புடைய செய்யுள் அமைதல் வேண்டும் என்ற தொல்காப்பிய விதியினைப் பின்பற்றிக் (கீழ்க்கணக்கு) அறநூல்கள் பாடினர் என்ற கருத்துடையவர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ஆவர். கீழ்க்கணக்கு சிறுநூல்களைக் குறிக்கும் அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப்பொருளை உரைப்பதாகவும் இவ்வகைச் செய்யுள் அமையவேண்டும் என்ற கருத்தும் அவர்க்கு உண்டு. எனின், தொல்காப்பியர் கருதிய அம்மை முதலிய வனப்புக்குரிய இலக்கியம் நமக்குக் கிடைத்தில என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. அறநூல்கள் பலவும் உரையாசிரியர்கள் பலராலும் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றிருத்தலின், அறிஞர் பெருமக்களின் ஒப்புதல் அவற்றுக்கு அன்றே கிடைத்துள்ள சிறப்பும் நோக்கத்தக்கது. மேலும், இந்நூல்களுக்குப் பழைய உரைகள் உள்ளன. இவற்றை எழுதியவருள் ஒரு சிலரைத்தவிரப் பலரின் பெயர் அறியப்படவில்லை. எனினும், இந்நூல்கள் இவ்வுரைகளினால் தமிழகத்தில் எங்கும் பயிலப் பெற்றன என்பது தெளிவு.

இப்பின்புலத்துடன் [-Background] நம் காலப்பகுதிக்குரிய (கி.பி.500 - கி.பி.900) அறநூல்களின் வரலாற்றினை ஆராய்ந்தறிதல் பயன்தரும். முதலில் நாலடியாரின் அமைப்பினையும் அறவியலையும் காண்போம்.

1. நாலடியார்*

வெள்ளடி நான்கினால் புனையப்பெற்ற நானூறு பாக்களைக் கொண்ட பனுவலுக்கு நாலடி நானூறு என்பது பெயராயிற்று. புறநானூறு, அகநானூறு, நற்றிணை நானூறு என வருதல்போல் நாலடி நானூறு என்று இத்தொகைநூல் அழைக்கப்பெற்றது. மரியாதைக்குரிய உயர்திணை ஆர் விகுதி சேர்த்து நாலடியார் என்று வழங்குதல் பெருவழக்கு. மாணிக்கவாசகர் பாடியுள்ள கோவை நூலினைத் திருக்கோவையார் என்றும் வழங்குதல் காணத்தக்கது. பதினெண் கீழ்க்கணக்கில் இந்நூல் மட்டுமே பலரால் பாடப்பெற்ற பாக்களின் தொகை நூலாகத் திகழ்வது. இவர்கள் கி.பி.500 - கி.பி.650 என்ற கால எல்லையில் வாழ்ந்தவர்கள். இப்புலவர் பெருமக்கள் சமணச் சான்றோராகக் கருதப்பெறினும் தமிழ் நிலத்துக்கு உரிய அறங்களையும் ஒருங்கோதியிருத்தல் சுட்டத்தக்கது. நாலடியார்க்குத் தருமர், பதுமனார், விளக்கவுரைகாரர் என்பாரின் உரைகள் கிடைத்துள்ளன. இவருள், தருமனார் உரைப்பாங்கினைக் கூறும் வெண்பா, **"சீல முனிவர் இருந்து தெரிந்துரைத்த, நாலடி நானூற்றின் நற்பொருளை"** என்று சுட்டுதலால், **சீலம் மிக்க துறவிகள் (-சமண முனிவர்கள்)** நாலடியாரைப் பாடியவர்கள் என்பது புலனாகும். **"நல்லோர் அருள் செய்த நாலடி நானூறு"** என்ற பாடலும் கருதற்பாலது. ஓலைகளில் பொதிந்து கிடந்த இப்பாக்களை அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாகத் தொகை செய்தவர் பதுமனார் என்ற உண்மையினை,

> **"ஈட்டித் தொகுத்தான் இசைசால் பதுமனே**
> **கூட்டமைந்த மூன்றுபால் கொண்டு"**

எனவரும் பாடல் புலப்படுத்துகின்றது. பதுமனார், **"அவற்றுள் ஒரே விஷயத்தினை ஒவ்வொரு கருத்தால் தனித்தனி கூறும் நானூறு பாடல்களைப் பொறுக்கிச் சேர்த்து........."** என்று தம் உரையில் பொறித்திருத்தல் நோக்கத்தக்கது. திருக்குறளின் அமைப்பினையும் பாகுபாட்டினையும் முன் மாதிரியாகக் கொண்டு நாலடியாரின் அதிகாரங்கள், இயல்கள், பால்கள் அமைக்கப்பட்டன என்பர். எனினும், முப்பால் என்ற அடிப்படையில் இருநூல்களுக்கும் இடையே ஒப்புமை காணப்படினும், அதிகாரம் இயல் பாடுபொருள் என்ற வகைகளில் வேறுபாடுகளும் விளங்குகின்றன.

திருக்குறளில் அறத்துப்பால் பாயிரத்தை அடுத்து இல்லறவியலில் தொடங்கித் துறவறவியல், ஊழியலில் முடியும். நாலடியாரில் துறவறவியலில் தொடங்கி இல்லறவியலில் முடிகிறது. முன்னதில்

---

* நாலடியாரை உள்ளிட்ட அறநூல்களின் பாடல் எண் பதினெண்கீழ்க் கணக்கு, மர்ரே பதிப்பில் உள்ளவாறு கொடுக்கப் பெற்றுள்ளது.

பொருட்பால் அரசஉறுப்புக்களை விளக்கும் ஏழியல்களாக அமைந்து எழுபது அதிகாரங்களாக விரிவுபெற்றது. எனின் பின்னதில் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பல்நெறிஇயல் என ஏழாகப் பகுக்கப்பெற்று 24 அதிகாரங்களாக அமைதல் காணலாம். திருக்குறளில் இன்பத்துப்பால் 25 அதிகாரங்களால் களவியல், கற்பியல் என்ற சங்க அகழ்திணை மரபினை ஒட்டிப் பரிமேலழகரால் விளக்கப்பெற்றது. எனில், நாலடியாரில் இன்பதுன்ப வியல், இன்பவியல் என்ற ஈரியல்களில் மூன்றதிகாரங்கள் தொகுக்கப் பட்டன. **திருக்குறளின் கருத்துக்கள் பலவற்றை நாலடியார் தாங்கிச் செல்லுதல் சுட்டுதற்கு உரியது.** "பழகுதமிழ்ச் சொல்லருமை நால் இரண்டில்" என்ற தொடர் இவ்விரு பெரும் அறநூல்களின் சிறப்பினைக் குறிப்பது. இந்நூலிற்கு **"வேளாண் வேதம்"** என்ற பெயர் வழங்கப்பெறினும் அப்பெயர் பரவவில்லை. **திருக்குறளில் இடம்பெற்ற "உழவு" போன்ற அதிகாரம் இந்நூலில் இல்லை.**

நாலடியாரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இருபாடல்கள் உள்ளன (200, 296). இவற்றில் **பெருமுத்தரையர்** என்ற குறுநிலத் தலைவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். தஞ்சைக்கும் திருச்சிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி இவர்தம் ஆட்சியில் இருந்தது. இவர்களைப் பற்றிய கல்வெட்டுப் பாடல்கள் திருக்காட்டுப் பள்ளிக்கு அருகில் உள்ள செந்தலை என்னும் ஊரிலுள்ள சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்பண்டபத்தின் தூண்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்கள் பதினொன்றில் பலவும் சிதைவுற்றிருப்பினும் வெண்பாக்களாக விளங்குதல் நாலடியார் காலத்துடன் இணைத்து நோக்குதற்கு உரியவை. இப்பாடல்களின் மேலே பெரும்பிடுகு முத்தரையனான குலாலன் மாறன் (கி.பி.650) முதல் சுவரன் மாறன் முடியப் பலர் சுட்டப் படுகின்றனர். **பாச்சில்வேள் நம்பன், கோட்டாற்று இளம்பெருமானார், குலாலங்காஞ்சன், ஆசிரியர் அநிருத்தர்** முதலிய புலவர்கள் பாடியிருப்பதால் இவர்கள் யாவரும் முத்தரையர்களால் ஆதரிக்கப்பட்டவர்கள் என்பது தெளிவு. **இவர்கள் சைவச்சார்பினர்.** ஆதலின்,

> "பெருமுத் தரையர் பெரிதுவந்து ஈயும்
> கருனைச் சோறுஆர்வர் கயவர்" (200)

என்று சமண நாலடியார் சுட்டுதல் காணலாம். புலவரைப் போற்றி விருந்தோம்பும் இவர்கள் வறுமையிலும் செம்மை காத்தவர் என்று மற்றொரு பாடல் சுட்டுகிறது (296). இவ்விரு பாடல்களும் பெருமுத்தரையர் வாழ்ந்த காலத்தில் பாடப்பெற்றவை என்பது புலனாகும்.

திருநாவுக்கரசர் (கி.பி.590 - கி.பி.671) **சமணம் சார்ந்த காலத்தில் வழங்கிவந்த நாலடியார் பாடல்களை நன்றாகப் பயின்று தாம் சைவராக மாறியபின் பாடிய பதிகங்களில் பயின்றுள்ளமைக்கு இரண்டொரு**

சான்றுகள் கூறுதல் சாலும். நாலடியாரில், பேதைமை காரணமாக உலைநீரின் இளஞ்சூட்டில் இன்புறும் ஆமை சூடேறச்சூடேறத் துயர்ப்படுவதுபோல் ஐம்பொறிகளை அடக்க இயலாதவர் உலக இன்பவலையில் அகப்பட்டுக் கூற்றுவனால் கொள்ளப் பெறுவர் என்ற கருத்து காணப்பெறும்:

"கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் கொடுங்கூற்றம் கோள்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு" (331)

இப்பாடலைத் தழுவி,

". . . . .
தளைத்துவைத்(து) உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்" (4.79.6)

எனவரும் திருநாவுக்கரசர் பாடல் அமைதல் நோக்கத்தக்கது. நாலடியார் துறவறவியலில்,

"இழைத்தநாள் எல்லை இகவா" (5)

எனவரும் பகுதி,

"இழைத்தநாள் எல்லை கடப்பதென்றால்" (VI 31.5)

என்று அப்பர் பாடலில் அமைதல் அறியத்தக்கது. ஆதலின், இங்குச் சுட்டப்பெற்ற நாலடியார் பாடல்கள் அப்பர் பெருமான் காலத்திற்கும் முற்பட்டவை எனலாம்.

அருகனைப்போற்றும் கடவுள் வாழ்த்து உள்பட 401 பாடல்களைக் கொண்ட நாலடியாரில் நேரிசை வெண்பாக்கள் 309, இன்னிசை வெண்பாக்கள் 92 ஆகும்.

இனி நாலடியாரில் காணப்பெறும் அருங்கருத்துக்கள் சில வற்றைக் காணலாம்.

அருங்கருத்துக்கள்

பெறுதற்கரிய மானிட உடம்பு (34) தனக்கும் சமுதாயத்திற்கும் தக்க வகையில் பயன்படுதல் வேண்டும். உடம்பினைக் கொண்டு ஆற்ற வேண்டிய பணிகளையும் கடமைகளையும் செய்த சான்றோர் இறுதிக்காலத்தில் இறப்பினைக் கண்டு வருந்தார். இக்கருத்தினைத்தக்க உவமை வாயிலாக நாலடியார் விளக்குகின்றது. காலைப்பொழுதில் கரும்பினை ஆலையில் இட்டு ஆட்டிச் சாறு எடுத்து வெல்லக் கட்டியாகச் செய்து கொண்டபின், அதன் சக்கை எரியும் பொழுது துன்புறார்.

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயர்ஆண்(டு) உழவார்;
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ(து) இலர்" (35).

பிறர் இகழ்வதைச் சான்றோர் பொறுப்பர். அன்றியும், எம்மை இகழ்ந்த வினைப்பயனாய் அவர்கள் மறுமையில் நரகத்தில் வீழ்வரோ என்று அத்தீயோர்க்காகப் பெரிதும் இரங்குவர் (58). ஆற்றுவதற்கு அரிய செயல் மாட்சியை ஒரு பாடல் புலப்படுத்துகின்றது. அடக்கம் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறுவது ஆற்றல் மிக்க இளைஞனின் அடக்கமே; பொருள் இலான் கொடுப்பதுவே கொடை; ஆற்றல் மிக்க யாவரையும் அழிக்கும் வலிமையும் உரமும் உடைய ஒருவனின் பொறுமையே பொறுமை என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும்:

"இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்; எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரன்உடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை" (65).

மக்கள் வாழும் குடிசைகளில் தீப்பற்றிக் கொண்டால் பொய்கையினைத் தேடிச்சென்று அதன் நடுவே நின்று தப்பித்துக் கொள்ளுதல் கூடும். எனின், காமத்தீ பற்றியவனை நீரில் குளிப்பினும், குன்றேறி ஒளிப்பினும் சுடும் (90).

சான்றோர்கள் பிறர் தமக்கு ஓர் உதவி செய்தபின் நூறு பிழைகளைப் புரியினும் சால்பினால் பொறுத்துக் கொள்ளுவர். எனின், கயவர்கள் தமக்குப் பிறர் எழுநூறு நன்மைகள் செய்தபின் ஒரு பிழை புரியினும் அந்நன்மைகளை எல்லாம் மறந்து தீமையினையே எண்ணியிருப்பர் (57).

சமணர்கள் வினையின் வலிமையினைக் கூடுதலாக வலியுறுத்தியவர்கள். ஒருவன் செய்த வினையின் பயனை நுகர்ந்து கழித்தல் வேண்டும். அதன்பிடியினின்றும் யாவரே யாயினும் தப்ப முடியாது. ஊழ்வினை உருஎடுத்துவந்து செய்தவனை நுகரச் செய்யும் என்ற சமணநெறிக் கருத்தினை ஓர் அழகிய உவமையின் வழியாக நாலடியார் உணர்த்துகின்றது:

ஆநிரைகள் பல உள்ள இடத்தில் இளங்கன்றினை அவிழ்த்து விடின், அது தனக்குரிய தாய்ப்பசுவைத் தேடிச்சென்று பால் குடிக்கும். அதுபோல், பழவினையும் தனக்குரியவனைத் தேடிச்சென்று பயன்தரும்(101). இக்கருத்தினைச் சிவஞானமுனிவர் உடன்படார். வினைப்பயன் சடம்; உயிரற்றது. அதற்கு உவமையாகக் கூறப்படும் ஆன்கன்று சித்து; உயிருடையது; தன் தாயினை அறியும் அறிவுடையது.

எனவே, சமணரின் கருத்தினை ஏற்காத முனிவர், வினைப்பயனை இன்னார்க்குரியது என அறிந்து நுகர்விப்பவன் ஆகிய முற்றறிவினன் ஆகிய இறைவன் வேண்டப்படுவான் என்று சிவஞானபோத உரையினில் குறித்துள்ளார். என்றாலும், உவமை என்பது ஒருபுடை ஒப்புமையே. ஆதலின், சமணரின் வினைக்கோட்பாட்டினை எளிதில் தள்ளிவிடுதல் முறையன்று.

பொருள்களின் இயல்பினை அறிந்து உணர்த்தியதால் சமண நெறிக்குச் சுபாவ வாதம் என்ற பெயரும் உண்டு. பொருள்களின் இயல்பு மாறாது; சுபாவம் கெடுவதில்லை என்பதில் சமணர்க்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. தகுதி வாய்ந்தவரும், தகுதி இல்லாதவரும் தத்தமக்குரிய தன்மையிலிருந்து சிறிதும் நீங்கமாட்டார். என்போல எனின்: சர்க்கரையினை யாவர் உண்ணினும் அஃது இனிக்குமே தவிர, தன்னியல்பின் மாறிக் கசக்காது. அங்ஙனமே, வேம்பினை மேலோராகிய தேவர்கள் சாப்பிட்டாலும் கசக்குமே தவிர, தன்னியல்பின் மாறி இனிக்காது:

"தக்காரும் தக்கவர் அல்லாரும் தம்நீர்மை
எக்காலும் குன்றல் இலர்ஆவர்-அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம்; கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு" (112)

நாலடியாரின் தொடக்கமே செல்வம், இளமை, யாக்கை நிலையாமையினைப் பேசி வாழ்க்கையினைப் பற்றிய அச்சத்தை ஊட்டுவது. செல்வம் சகடக்கால் போல் மேல் கீழாய் மாறி வருவது (2). கருமேகத்தில் தோன்றி மறையும் மின்னல்போல் புல்லறிவாளரின் பெருஞ்செல்வம் அழியும்(8). எனின், மெய்ம்மை என்ற அதிகாரத்தில் பொருளின் மாட்சியை ஒரு பாடல் பேசுகிறது. குற்றமற்ற உலகில் உறுதிப்பொருள்கள் மூன்றனுள் நடுவணதாகிய பொருளை ஒருவன் பெறுவானாயின் முதலும் முடிவும் ஆகிய அறத்தையும் இன்பத்தையும் எய்துவான். அங்ஙனம் பொருள் பெறாதவன் உலையில் கொதிக்கும் நீரைப்போலத் துயரில் துன்புறுவான் (114).

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்;
நடுவணது எய்தாதன் எய்தும் உலைப்பெய்(து)
அடுவது போலும் துயர்" (114).

இத்தகைய பொருள் மாண்புரைக்கும் சிந்தனைகள் சீவக சிந்தாமணி என்னும் சமணக் காப்பியத்திலும் பெருந்தேவி விசயை தன் மகன் சீவகனுக்கு அரச நீதிகளைக் கூறும் விமலையார் இலம்பகத்தில் திருத்தக்கதேவரால் விரித்துரைக்கப்பெற்றன என்பது இங்கு எண்ணுதற்கு உரியது.

சான்றோரின் நட்பு பிறைமதிபோல் வளரும்; சிறியோரின் தொடர்பு தேய்மதிபோல் அழியும் (125). இக்கருத்து திருக்குறளில் முன்பே சுட்டப்பெற்றது என்பது நோக்கற்பாலது. கற்றவர்களின் கேண்மை குருத்திலிருந்து அடிப்பகுதி நோக்கிக் கரும்பினைத் தின்றால் போல்வது. இனிமையில்லாரின் தொடர்பு தொடங்குங்கால் இனிமை பயந்து முடிவில் இன்னாமை தருதலின், கரும்பின் அடியிலிருந்து நுனிநோக்கித் தின்றால் போல்வது. இக்கருத்து இரண்டு பாடல்களில் (138,211) வருதலின், ஒன்றினைப் பார்த்து ஒன்று பிற்சான்றோரால் புனையப்பெற்றிருத்தல் வேண்டும்.

அழகுகள் பலவற்றிலும் கல்வியினால் தோன்றும் அழகுதான் உயர்ந்தது (131). கல்விகேள்வியுடையார் இகலின்றி உரையாடி எய்தும் இலக்கிய இன்பத்திற்கு வானுலக இன்பமும் ஈடில்லை (137) நரியின் மார்பினைக் கிழித்துச் சென்ற அம்பினைவிட சிங்கத்தைக் குறிவைத்துத் தப்பிய அம்பு சிறந்தது. அதனால் உயரிய குறிக்கோள் அரியதாயினும் சான்றோர் எண்ணிப்பார்ப்பர் (152). இக்கருத்து திருக்குறளில், "கான முயலெய்த அம்பினில் தீதோ, யானை பிழைப்பெய்த கோல்" என்ற கருத்தின் தழுவலாக உள்ளது. புறநானூற்றிலும்,

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே [214:3-4]

என வருதல் ஒப்புநோக்கத்தக்கது. இங்ஙனம் வருவன மேலும் பல உள்ளன.

காட்டினுள் நச்சுமரத்திற்கு வைத்ததீயானது அங்குள்ள விலைமதிப்புடைய மணம்மிக்க சந்தன மரங்களையும் வேங்கை மரங்களையும் சுட்டெரித்தல்போல் குற்றமற்ற உள்ளத்தராயினும் சிற்றினச் சேர்க்கையால் இகழ்ச்சியடைவர்:

"மனத்தால் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர் - புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்" (180).

இத்தகைய சிந்தனை சைவசித்தாந்திகள் கூறும் **'சார்ந்ததன் வண்ணமாதல்'** என்ற கொள்கையினை நினைவூட்டும். எனின், சுபாவ வாதத்தில் அழுந்திய சமண சான்றோர் சேர்க்கையினால் ஒருவர் துன்புறமாட்டார் என்ற கருத்தையும் சொல்லியுள்ளனர். சிற்றூர்களில் வாழைத்தாரை வெட்டி வேப்பம்தழைகளினால் பொதிந்து பழுப்பதற்காக வைத்திருப்பர். என்றாலும், வேம்பினுடன் சேர்ந்த காரணத்தினால் வாழைக்கனி தன் சுபாவம் (-இயல்பு) திரிந்து கசக்காது; தனக்குரிய இனிப்பையே தரும்:

“வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீம்சுவை யாதும் திரியாதாம் - ஆங்கே
இனம்தீ(து) எனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது (244).

“தீதும் நன்றும் பிறர்தர வாரா” என்ற புறநானூற்றின் விளக்கமாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

“நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செல்வானும் தான்” (248)

ஒருவன் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவன் செயல்களே காரணம் [Man is the architect of his own self]; பிறரைக் குறை கூறுதல் கூடாது.

'மெய்யுணர்வு' என்றார் திருவள்ளுவர். இதனை 'மெய்ஞ்ஞானம்' என்று நாலடியார் சுட்டியது (311). இலக்கணக்கல்வியைப் பற்றியும் (314), பொழிப்பு, அகலம், நுட்பம், நூல்எச்சம் என்று உரை கூறும் முறை குறித்தும் (319) நாலடியார் நவிலுதல் காணலாம். புத்தகத்தை விலை கொடுத்துத் தொகுத்து வைத்தும் பொருள் புரியாப் புலவரையும், பொருளறிந்து விரித்துரைக்கும் வித்தகரையும் ஒரு பாடல் சுட்டுகிறது:

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்து அகம் எல்லாம் நிறைப்பினும் மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு” (318)

சமண முனிவர்கள் காலத்தில் ஆழ்ந்தகன்ற புலவர் பலர் வறுமையில் வாடினர். அதற்குக் காரணம் கற்பிக்க முற்பட்ட புலவர்,

**“நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து”** (252)

என்று உலகியல் உணர்வுடன் பாடியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது. மருமகளும் (நாவின் கிழ்த்தி - கலைமகள்) மாமியாரும் (-பூவின் கிழத்தி, திருமகள்) பூசல் நீங்கி ஒருங்குறையார்!

இலக்கணநூல், சோதிடநூல் பலவற்றைப் படைத்த சமணச் சான்றோரில் ஒருவர் இவ்விரண்டையும் கூடுதலாகப் பேசித்திரியும் பேதையாரைப் பித்தர் என்று இகழ்கிறார் (52).

ஈகையின் மாட்சியை ஒருபாடல் சுவையுறச் சுட்டுகின்றது. குறுங்கோலினால் அடித்தெழுப்பும் முரசின் ஓசை காத தூரம்

மட்டுமே கேட்கும். கொண்டலின் இடியோசை ஒரு யோசனை (-10 காவதம்) தூரம் கேட்கும். எனின், சான்றோர்க்குக் கொடுத்தார் எனப்படும் புகழுரை மூவுலகங்கட்கும் கேட்கும் (100).

உலக வாழ்க்கையில் ஒருவர் எங்ஙனம் சதுரப்பாட்டுடன் வாழவேண்டும் என்பதற்கும் நாலடியார் உபாயம் உரைத்துள்ளது. பிறர் மறைபொருள் (-மந்தணம், இரகசியம்) பேசும்பொழுது காதைச் செவிடாக ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும்; அயலாரின் மனைவியைக் காமக் குறிப்புடன் நோக்காது குருடாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும்; பிறரைப் பற்றித் தீமை பயக்கும் புறங்கூற்று மொழி பேசும் நிலைவரின், வாயினை ஊமையாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் உலகியலுக்குத் தகத்தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளக் கூடியவனுக்கு ஒருவரும் அறவுரை கூறத்தேவை இல்லை (158). யானையினை ஒத்தவரின் நட்பு கூடாது; ஏன்எனின் தன்னைப் பேணும் பாகனையே கொன்றுவிடும்; ஆதலின் நன்றிபாராட்டும் நாயினைப் போன்றவரின் நட்புக் கொள்க:

> "யானை அனையார் நண்பொரீஇ நாய்அனையார்
> கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
> அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
> மெய்யதா வால்குழைக்கும் நாய்". (213)

பல்வகைப் பழமொழிகளும் நாலடியாரிலும் இடம் பெற்றுள்ளன. ஒருசிலவற்றைச் சுட்டுதல் கூடும். நல்லாடைகளைப் பொருள் கொடுத்துப் பெற்று வனப்புற உடுத்திக் கொள்ளாமலும், பொருள்களை நுகராமலும், அறம் புரியாமலும், இல்லாதவர்க்குச் சிறிதும் ஈயாமலும் பொருளைத் தொகுத்து வைத்தவர்கள் அதனை இழப்பர். என்போல எனின், பலமலர்களிலும் தேடிச் சென்று ஆறுகால்களையும் அகலவிரித்து எடுத்து வந்து அடையில் பேணிக்காத்த தேனினை (-இறாலை) வண்டுகள் இழத்தல் போல என்க (10). இப்பாடலில், **"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்"** என்ற முதுமொழி மிளிர்கின்றது. நாய் தம்மைக் கவ்வினும் தாம் நாயினைக் கவ்வார்; அதுபோல் கீழ்மக்கள் கீழானவற்றைச் சொல்லினும் நன்மக்கள் தம் வாயினால் இழிசொற்களைக் கூறார்(70). இக்கருத்து, பழமொழி நானூற்றில், **"கதம்பட்டு நாய் கவ்வின், பேர்த்துநாய் கவ்வினார் இல்"** என வரும் மூதுரையுடன் (315) ஒன்றுபட்டது. **'தந்தையர் ஒப்பர் மக்கள்'** (பொருள். நூ.145) என்றார் தொல்காப்பியர். இப்பழைய உரை, **"மகனறிவு தந்தை அறிவு"** என்று நாலடியாரிலும் (367) பழமொழி நானூற்றிலும் (301) வருதல் காணத்தக்கது. **"ஒருவர் பொறை இருவர் நட்பு"** என்று நாலடியாரில் வரும் மூதுரை (223) பழமொழியிலும் பயின்று வந்துள்ளது (247).

அகத்திணைக்கூறுகள்

துறவறத்தைக் கூடுதலாக வலியுறுத்துக் கூறிய நாலடியாரில் இறுதியில் உள்ள இரண்டதிகாரங்களில் வாழ்க்கைத்துணை நலம் வனப்புறப் புனையப்படுதல் காணத்தக்கது. சங்க அகத்திணை மரபினைப் பின்பற்றிப் பாடிய சில பாடல்கள் கற்பனைவளமும் இலக்கிய நயமும்மிக்கவை. ஒரு சான்று சாலும்.

களவுக்காலத்துத் தலைவியின் வனப்பினைப் பாராட்டிப் பாங்கனுக்குத் தலைமகன் கூறியதாக ஒரு சிறந்த பாடல் உள்ளது. காதலியின் கண்களைக் கயல் மீன்கள் என்று கருதிச் சிறிய மீன்கொத்திப் பறவை நெருங்கியும்,. அவளுடைய புருவம் வளைந்தவில் என்ற அச்சத்தினால் கொத்தாமல் அகன்றது:

“கண்கயல் என்னும் கருத்தினால் காதலி
பின்சென்ற(து) அம்ம சிறுசிரல்! பின் சென்றும்
ஊக்கி எறிந்தும் எறிகல்லா ஒண்புருவம்
கோட்டிய வில்வாக்கு அறிந்து” (395)

நாலடியார் சுட்டும் இலட்சியப் பெண்ணின் இயல்பினை நோக்குவோம். காதலன் ஆகிய தலைமகனின் மகிழ்ச்சிக்குத்தக தன்னை அழகு செய்து கொண்டு அவன் கண்ணுக்கு இனியளாய் இலங்குவள்; தன் கற்பாற்றலினால் தீயநோக்குமுடையார் உள்ளம் நடுங்கச் செய்பவள்; ஊராரும் உற்றாரும் போற்றும் பண்பினள்; கலவிக் காலத்துச் செவ்வி பார்த்து அளவாக ஊடிப்பின் தணிந்து இன்புறுத்தும் மென்மொழி பேசும் இயல்புடையள் (384). பொருட்பெண்டிரைக் கடிந்துரைக்கும் பதினொரு பாடல்களை நாலடியாரில் காணலாம் (370-380).

சமணர்க்குத் துறவறமே தலையாய அறம். நாலடியாரில் துறவுச் சிந்தனைகள் ஒக்கம் பெறினும், உறவுச்சிந்தனைகளும் போதிய அளவில் இடம் பெற்றுள்ளன. குறிக்கோள் வாழ்வியலை விரும்புவோர்க்கு இப் பனுவல் பகரும் அறங்கள் பயன்தரும்.

நாலடியாரை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்களில் G.U. போப்பும் F.W. எல்லிசும் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத்தலைவராகத் திகழ்ந்த (1926) அனவரத விநாயகம் பிள்ளையின் மொழிபெயர்ப்பும் சுட்டத் தக்கது. நாலடியார் உரைவளம் சிறந்த பதிப்பு. இதனைஇருபாகமாக ஆராய்ச்சிச் செம்பதிப்பாக S. முத்துரத்தன முதலியாரும் M.R.கந்தசாமிப் பிள்ளையும் தஞ்சை சரசுவதிமகால் வெளியீடாக (1953, 1954இல்) பதிப்பித்துள்ளனர்.

இனி, பழமொழி நானூறு பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

2. பழமொழிநானூறு

முதுசொல் - முதுமொழி

மக்களின் பல்வகை அனுபவங்களின் பிழிவாகக் கூர்த்த குறுஞ் சொற்களில் வடிவம் கொண்டு பண்டு தொட்டு வழங்கிவரும் மூதுரையினைப் பழமொழி எனப்பகர்வர். ஓரினத்தவரின் மேதைமையினையும் நுண்ணறிவினையும் ஆற்றல் மிக்க உணர்வினையும் பழமொழிகள் புலப்படுத்துவன. உலக இலக்கியங்கள் பலவற்றிலும் பல்வேறு மொழி பேசுவோர் பயின்றுள்ள பழமொழிகள் எடுத்தாளப் பெற்றுள்ளன. தொல்காப்பியர் மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட தமிழ் மாநிலத்தில் வழங்கியனவாகச்சுட்டும் எழுவகைப் படைப்புக்களில் முதுசொல் என்ற வகையினையும் [genre] குறித்துள்ளார். இதனை முதுமொழி என்றும் சுட்டியுள்ளார். முது என்ற அடைமொழி தொன்மையினையும் அறிவினையும் ஒருங்குணர்த்தும். ஆதலின், தொன்றுதொட்டு நிலவிவரும் அறிவார்ந்த சொல்லினை முதுசொல், முதுமொழி, பழமொழி என்றெல்லாம் கூறினர். நுண்மையும் ஒண்மையும் உடையதாய்ச் சுருக்கமும் ஒளியும் வாய்ந்ததாய் ஒரு குறிப்பிட்ட கருத்தினை முடித்துக் காட்டுதலைக் காரணமாகக் கொண்டு முதுமொழி வரும் என்பது தொல்காப்பியரின் வரையறை ஆகும் (பொருள்.நூ.479). மேலை நாட்டு மேதைகளும் பழமொழிக்கு வரைவிலக்கணம் செய்துள்ளனர். பழமொழி என்பது குறைந்த சொற்களினால் ஆக்கப்படும் தெறிப்புடைய தொடர்; ஒரு மூச்சில் சொல்லும் அளவிற்குச் சொற் சுருக்கம் உடையது; நறுக்கென்று மனத்தில் தைப்பதாய் அமைவது; செம்பொருள் பயப்பது; காரம் உடையது; அறிவுப் பிழம்பாய் இலங்குவது; ஞானத்திரளாகச் சுடர் விடுவது; சமுதாய ஒப்புதல் பெற்றது; நடைமுறை வாழ்க்கையில் வழங்குவது. பழமொழி ஒரு சமுதாய அனுபவங்களின் சாரமாய் வருதலின் அதனை ஒருதனி மனிதன் படைத்திருத்தல் இயலாது. சமுதாயப் படைப்பாக விளங்கும் பழமொழிகள் புலவர்களாலும் கவிஞர்களாலும் இலக்கிய ஏற்றம் எய்தப் பெற்றவை. ஈபுருமொழியில் வழங்கும் பழமொழிகளை விவிலியத்தில் காணலாம். ஏசுபிரான் மூதுரைகள் பலவற்றின் வாயிலாக மக்களுக்கு நல்லறிவு கொளுத்தினார். சாக்கரட்டீஸ், அரிசுடாட்டில் முதலியோர் உரைகளில் கிரேக்கப் பழமொழிகளும் கன்பூசியசு, இலவோசியசு ஆகியோர் படைப்புக்களில் சீனப் பழமொழிகளும் இடம் பெற்றன. சேக்ஸ்பியர் நாடகங்களின் ஆங்கில நாட்டு மூதுரைகள் பல காணப்படுகின்றன.

தொல்காப்பியர் முதுமொழிக்கு இலக்கணம் வகுத்ததுடன் சில பழமொழிகளையும் பயின்றுள்ளார். **"தந்தையர் ஒப்பர் மக்கள்"**

(பொருள்.நூ.145) என்பது 'மகன் அறிவு தந்தை அறிவு' என்ற வடிவத்தில் பிற்காலத்தில் வழங்கியதை முன்னரே குறித்துள்ளோம். சங்க இலக்கியங்களிலும் பல்வகைப் பழமொழிகள் வழங்குகின்றன. சான்றாக, "ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்" (குறுந். 3542), "அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை" (குறுந்.184.1),

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்குஇல்" (" 63.1) என வருதல் காண்க.

அகநானூற்றில்,

". . . . . . .
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் தோழி" (66.5-6)

"அம்ம வாழி தோழி! இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதில் என்னும்
தொன்றுபடு பழமொழி இன்றுபொய்த் தன்றுகொல்?
(101.1-3)

எனவரும் பாடல்களில் பழமொழி பற்றிய குறிப்புக்கள் காணப் பெறுதலின், இவ்வகை இலக்கியத்தின் தொன்மையும் பயனும் உய்த்துணர்ந்து கொள்ளப்படும். சைவத் திருமுறைகள், நாலாயிரம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்களிலும் பழமொழியின் ஆட்சி உண்டு.

முன்றுறைஅரையனார்

பதினெண் கீழ்க்கணக்கில் நாலடி நானூற்றினைப்போல், நானூறு வெண்பாக்களினால் அமைந்த அற இலக்கியம் **பழமொழி நானூறு** என்றும் **பழமொழி** என்றும் வழங்கி வருகிறது. இந்நூலினை இயற்றியவர் **முன்றுறை அரையனார்** ஆவர். முன்றுறை என்பது கடற்கரை அல்லது ஆற்றங்கரையினைக் குறிக்கும். சங்க இலக்கியங்களில் திருமருத முன்றுறை, காவிரி முன்றுறை, கழார் முன்றுறை, கொற்கை முன்றுறை எனப் பல்வேறு இடப் பெயர்கள் சுட்டப்பட்டன. பழமொழி நானூற்றின் ஆசிரியர் வாழ்ந்த ஊர் இம் முன்றுறைகளில் திருமருத முன்றுறையாக இருத்தல் கூடும். இப்பகுதி மதுரை மாநகர் மருங்கில் வையைக்கரைப் பகுதியாக விளங்குதலின், அரையனார் இங்கு வாழ்ந்திருத்தல் வேண்டும். மதுரையில் விளங்கிய சமணச் சங்கத்துடன் தொடர்பு கொண்டிருத்தலும் கூடும். சேனாவரையர் என்ற பெயர்போல் முன்றுறை அரையனார் பெயர் அரசமரபினையோ, படைத்தலைவர் மரபினையோ சுட்டுவதாய்க் கொள்ளக்கிடத்தலின், பழமொழி நானூற்றின் ஆசிரியரைக் குறுநிலத் தலைவராகக் கருதலாம். இவர் சமணர் என்பதற்குப் பாயிரப்பாடல் சான்று பகர்கிறது. பழமொழியிலும்

சமணக் கருத்துக்கள் போகிற போக்கில் தூவப்பட்டிருத்தல் எண்ணத்தக்கது. இவர் காலம் திருமுறை ஆசிரியர்கள் காலத்திற்கு முற்பட்டிருத்தல் வேண்டும். கி.பி.5,6 ஆம் நூற்றாண்டளவில் இவர் பழமொழியினைப் பாடியிருத்தல் கூடும்.

முன்றுறை அரையனார் சங்க இலக்கியம், திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய செழுந்தமிழ் இலக்கியங்களை நன்கு பயின்றவர் என்பதற்கு அகச்சான்றுகள் பல உள்ளன. சங்க இலக்கியங்களில் போற்றப் பெறும் தூங்கெயிலெறிந்த தொடித்தோள் செம்பியன், கரிகாலன், பாரி, பேகன் என்பாரின் வரலாறுகளை இவர் பழமொழியில் குறித்துள்ளார். பழைய காப்பியங்களில் கூறப்பெற்ற பொற்கைப் பாண்டியன், மனுநீதிச்சோழன் முதலியோரையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், பலராமன், கண்ணபிரான், தருமன், மாவலி பற்றிய செய்திகளும் நீதிகளை விளக்கும் பொருட்டு இந்நூலில் கூறப்பட்டன.

பழமொழிப் பனுவல் அமைப்பொழுங்கு

பழமொழி நானூற்றில் ஒருவகை அமைப்பொழுங்கு [neatness of Pattern] காணப்படுகிறது. “சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்” என்னும் உத்திக்கு ஏற்ப, பெரும்பாலும் ஒவ்வொரு பாடலின் இறுதியடியில் பழமொழியினை வைத்துள்ளார். அதற்குரிய விளக்கத்தினை முதலிரு அடிகளிலும் மொழிந்துள்ளார். மூன்றாம் அடியில், பழமொழியின் விளக்கத்தைக் கேட்பவராகிய கற்பனைப் பாத்திரத்தை முன்னிலைப் படுத்தியுள்ளார். ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை என்று விளித்தொடர் அமைந்திருத்தல் காணலாம். **மாணவனுக்குப் பாடம் புகட்டும் பாங்கில் இப்பழ மொழிகளின் விளக்கம் திகழ்கின்றது.** ஒவ்வொரு பாடலும் தன்னளவில் கருத்தினை முடித்து இற்றலின் முத்தகச் செய்யுள் என்று இந்நூலின் பழைய உரையாசிரியரால் சுட்டப்பட்டது (338). திருக்குறள், நாலடியார் ஆகிய அற இலக்கியங்களைப் போன்று பழமொழி நானூறு பால், இயல், அதிகாரம் என்று பாகுபாடு செய்யப்பெறாமை நோக்கத் தக்கது. பழமொழிகள் நானூற்றுக்கும்மேல் இருந்திருப்பினும், ‘நானூறு’ என்னும் இலக்கிய வகைமை மரபு கருதி முன்றுறை யரையனார் இச்சீரிய நீதி இலக்கியத்தைப் படைத்துள்ளார் எனலாம். இவர் கூறும் பழமொழிகளில் சில சிறு மாற்றத்துடன் வழங்கப் பெறுதலும், சில இன்றைய வழக்கில் பயிலப் பெறாமையும் எண்ணற்பாலன. இந்நூலின் பொருள்மாட்சி கருதிப் புறத்திரட்டினைத் தொகுத்த சான்றோர் இதிலிருந்து 319 பாடல்களை எடுத்துக் கோத்துள்ளார் என்பதும் அறியத்தக்கது. பாயிரச் செய்யுள் உள்ளிட்டு 401 பாடல்களைக் கொண்ட இப்பனுவலில் 226 பாடல்கள் நேரிசை

வெண்பாக்கள், 175 பாடல்கள் இன்னிசை வெண்பாக்கள் ஆகும். அறம், பொருள், இன்பம் என்று எண்ணப்பெறும் உறுதிப் பொருள்களில் முதலிரண்டு பற்றியே இந்நூல் பாரித்துப் பேசுகிறது.

இனி, முன்றுறை யரையனார் பயின்றுள்ள சிறந்த பழமொழிகள் வாழ்வியலுக்குப் பொருந்திப் பயன்தரும் பாங்கினைச் சிறிது நோக்குவோம்.

சிறந்த சிந்தனைகள்

உற்றார் உறவினர் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறுபவர் ஒருவர்க்கு உற்ற அல்லலை நல்ல செயல்களின் வாயிலாகப் போக்குபவரே ஆவர். இச்சீரிய கருத்தினை, **'மனைமரம் ஆய மருந்து'** என்ற முதுமொழி விளக்குகின்றது (53). மனையில் வளர்க்கும் மருந்து மரம் தனக்குரியகாய், கனி, தளிர், பட்டை முதலியவற்றைத் தந்து ஒருவர்க்கு உற்ற பிணியைப் போக்குதல் போல், சுற்றத்தாரும் தம் உடல் உழைப்பினைத் தந்தும் பொருளைத் தந்தும் ஒருவரின் துன்பத்தைப் போக்குவர். இப்பழமொழி,

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கண் படின்" (217)

என்ற திருக்குறளின் விளக்கமாக அமைகிறது.

"கற்றலின் கேட்டலே நன்று" என்பது மற்றொரு பழமொழி. திருவள்ளுவரும் கல்வி, கேள்வி என்று இரண்டதிகாரங்களை அமைத்திருத்தல் காணலாம். இப்பெருமகனார்,

> "கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவர்க்(கு)
> ஒற்கத்தின் ஊற்றாம் துணை" (414)

என்று அறிவுறுத்தியுள்ளார். பல நூல்களையும் பயின்று தெரிந்து கொள்ளுதற்கு முயற்சியும் காலமும் ஆசிரியரின் உதவியும் பெரிதும் தேவைப்படும். எனின், கற்றறிந்த பெருமக்கள் பொதுமேடைகளில் ஆற்றும் நல்லுரைகளைக் கூர்ந்து கேட்பதன் வாயிலாக ஒருவன் தெளிந்த அறிவினைப் பெறுதல் எளிதாகும். கிணற்றுத்தவளைபோல் மாந்தர் வாழ்தல் கூடாது. கிணற்று நீரைத்தவிரப் பருகுதற்குச் சிறந்த தண்ணீர் வேறெங்கும் இல்லை என்று அதில் வாழும் தவளை, தேரை, மீன் முதலியன எண்ணும். அங்ஙனம் மனிதர்கள் தாம் வாழும் இடத்தைத் தவிர வேறிடங்களுக்குச் சென்று அனுபவம் பெறாமல் வீணாள் கழித்தல் கூடாது:

> "உணற்கினிய இந்நீர் பிறிதுழி இல்லென்னும்
> கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை

முற்றப் பலகாலும் முனியாது இனிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று" (61).

இப்பாடலிற் பயின்றுள்ள முதலிரண்டடியில் பொதிந்துள்ள கருத்தினைத் திருத்தக்கதேவர்,

"ஊற்றுநீர்க் கூவலுள் உறையும் மீனனார்
வேற்றுநா டதன்சுவை விடுத்தல் மேயினார் (1176)

என்று சீவக சிந்தாமணியில் போற்றிக் கூறுதல் ஒப்புநோக்கத்தக்கது.

வறுமை அடைந்தவர்க்கும் துன்பம் உற்றவர்க்கும் துணையாக இருப்பவர் இலர். இவ்வுலகியல் உண்மையினை, "கெட்டார்க்கு நட்டாரோஇல்" என்ற பழமொழி சுட்டுகிறது. எனின், செல்வச் செழுமையில் திளைத்திருக்கும் காலத்தில் ஆயிரவராக ஒட்டிக்கொண்டு உறவுகூறி உதவி பெற்றவர்கள்கூட, துன்புற்ற பொழுதே தூரத்தே போய்விடுவர் (59). இவ்வுண்மையினை நாலடியாரும் சுவைபடச் சொல்லியுள்ளது (113). திருவள்ளுவர் துன்பத்துள் துப்பாயார் நட்புத்தான் போற்றத்தகுவது என்று இயம்புதல் இயைபு பற்றி இங்கு எண்ணத்தக்கது (106).

வானில் திகழும் எண்ணற்ற நட்சத்திரங்கள் ஒருங்கு சேர்ந்தாலும் ஒரு முழுநிலாவுக்கு ஒப்பாக ஒளிவீச முடியுமா? **"மதியம்போல் பல்மீனும் காய்கலா வாகும் நிலா"** என்பது மூதுரை ஒன்றின் சாரம். இதனைப் புரியவைத்தற்கு வேறொரு எடுத்துக் காட்டினை ஆசிரியர் தருகிறார். ஆயிரம்பேர் மூடர் சேர்ந்தாலும் அறிஞர் ஒருவனுக்கு ஒப்பாக முடியுமா? என்று கேட்கிறார்:

**"ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்
பாயிருள் நீக்கும் மதியம்போல் பல்மீனும்
காய்கலா வாகும் நிலா"** (47).

சங்க இலக்கியத்தில்,

"பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்" (புறம்:13.6)

"மாரிவானத்து மீன்நாப்பண்
விரிகதிர வெண்திங்களின்" (புறம்:396:26-7)

"பன்மீன் நடுவண் பான்மதி போல" (சிறுபாண், 219)

"பன்மீன் நடுவண் திங்கள் போலவும்" (மதுரைக்.769)

எனவரும் அருந்தொடர்கள் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் வழங்கிவந்த பழமொழியினை நினைவுறுத்துதல் இவண் எண்ணத்தக்கது.

ஒரு மனிதனை உயர்ந்தவர் என்று உரைப்பதற்குப் பிறந்த குலம், பெற்றகல்வி, ஈட்டிய செல்வம் அளவுகோலாகப் பயன்படும் என்பது இளம்பூரணரின் எண்ணம் (தொல். பொருள். ப.8). எனினும் அறநூலாசிரியர்கள் ஒழுக்கத்தினையே ஒருவனின் உயர்வுக்குரிய தகுதியாகப் பேசினர். திருவள்ளுவர், பொறாமை பிடித்தவனிடம் ஆக்கம் நிலைபெறாது; ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு நிலை பெறாது என்று உணர்த்துதல்காண்க (135). ஒழுக்கமே விழுப்பம் தருதலின், அதனை உயிரினும் மேம்பட்டதாகப் பேணிக் காத்தல் வேண்டும் என்றும் அறிவுறுத்தினார் (131). முன்றுறை அரையனார்,

"...........
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு" (64)

என்று சான்றோர் நெறிநின்று மூதுரையினை மொழிந்திருத்தல் நோக்கத் தக்கது. மனம்பக்குவப் படாதவரிடம் சென்று உறுதிப் பொருளைப் பற்றிப் பேசுதல் கூடாது என்றும் கூறினார்.

ஊருடன் பகைக்கின்வேரொடும் கெடும் என்பர். ஊரோடும் பொழுது ஒக்க ஓடவேண்டும் என்பது சமுதாய உணர்வுடைய முது சொல்லாகும். ஊரார் ஒப்பியவற்றையே ஒருவன் செய்தல் வேண்டும்; முரணானவற்றைச் செய்தல் கூடாது. ஊரை அனுசரித்துப் போதல் வேண்டும் என்பது பொது அறம் ஆகும். **"ஓடுக ஊர் ஓடுமாறு"** என்பது பழமொழி (392). திருக்குறளில்,

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (140)

எனவரும் அறிவுரையின் சாரமே மேற்சுட்டிய பழமொழி எனலாம். அடைக்கலம் அடைந்தவரை அகலும்படி செய்தல் கூடாது; நீத்தாராகிய சான்றோர் நெறியின் நீங்குதல் கூடாது; பலகாலும் ஒருவன் அனுபவம், உத்தி, கல்வி என்ற மூன்றினாலும் பெற்ற நுட்பத்தைக் கடைப் பிடித்தல் வேண்டும். ஊரினர் செல்லும் வழியில் ஒக்க நடத்தல் வேண்டும் (392) என்ற செஞ்சொற்கள் யாவர்க்கும் பயன்தருவனவாம்.

கல்வியைப் பற்றிய மூதுரை, **"கற்றொறும் தான் கல்லாதவாறு"** என்பது. கற்றவர்க்கு முன்பாகப்பேசும்பொழுது சொல்லில் சோர்வு தோன்றல் கூடும். சோர்வடையாமல், புதிதாக ஒன்றினைக் கற்கும் பொழுதெல்லாம், தான்முன்பு இதனைப் பயிலவில்லையே என்ற எண்ணம் மேலிடும்; வருந்தியாயினும் புதிய ஒன்றைச் சிந்தித்து அறிதற்கு முயலவேண்டும். அங்ஙனம் கற்கும் தோறும் முன்பு அதனைக் கல்லாத சிறுமை வெளிப்படும் (332). **"கற்றொறும் தான் கல்லாதவாறு"** என்ற பழமொழியின் ஆற்றலால்,

"அறிதோ றறியாமை கண்டற்றால்" (1110)

என்ற குறள் மொழியும் முதுமொழியே என்ற உண்மை புலனாகும்.

முதல் போடாமல் ஒருவன் வணிகத்தில் இலாபம் பெறுதல் முடியாது. **"முதல் இல்லாதவனுக்கு இலாபம் ஏது"** என்பது நாட்டார் வழக்கு. இதற்கு அடிப்படை, **"முதல் இலார்க்கு ஊதியம் இல்"** (312) என்ற பழமொழியே ஆகும்.

வினைக்கோட்பாட்டில் உலகாயதர் தவிர யாவர்க்கும் நம்பிக்கை உண்டு. எனினும் சமணர்கள் கூடுதலான முதன்மை கொடுத்தனர். முற்பிறவியில் ஒருவன் குறைவின்றி நல்வினை புரிந்திருப்பின் இப்பிறவியில் அதன் விளைவாக வளமெலாம் வாய்த்து இன்புற்று வாழ்வான். அங்ஙனம் புரியாதவனுக்கு வளம் இல்லை. இதனை விளக்குதற்கே, **"முதலிலார்க்கு ஊதியம் இல்லை"** என்ற பழமொழி பயன்பட்டது. இப்பழமொழி திருவள்ளுவர் காலத்திற்கு முன்பிருந்த தமிழர்களிடம் வழங்கிவந்துள்ளமையினை,

"முதலிலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை" (449)

எனவரும் குறளினால் அறியலாம். தன்னைத்தாங்கும் பெரியோரை இல்லாத நாட்டுத்தலைவனுக்கு நிலைபேறில்லை என்ற கருத்தினை விளக்கவே, முதல் இல்லாதவர்க்கு ஊதியம் இல்லை என்ற பழமொழி எடுத்தாளப் பெற்றது.

மேலும், **"பாம்பறியும் பாம்பின கால்"** (5)., **"குலவிச்சை கல்லாமல் பாகம்படும்"** (21), **"ஞாயிற்றைக் கைம்மறிப்பார் இல்"** (34), **"எய்ப்பினில்வைப்பு"** (37), **"கொற்சேரித்துன்னூசி விற்பவர் இல்"** (50), **"முள்ளினால் முள் களையுமாறு"** (54), **"நாய்மேல் தவிசிடு மாறு"** (75), **"தீ நாள் திருவுடையார்க்கு இல்"** (84), **"திங்களை நாய் குரைத்தற்று"** (149), **"ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்"** (165), **"நுணலும் தன் வாயால் கெடும்"** (184), **"குன்றின்மேல் இட்ட விளக்கு"** (204), **"முழம் குறைப்பச் சாண் நீளுமாறு"** (211), **"நிறைகுடம் நீர்தளும்பல் இல்"** (243), **"தொளை எண்ணார் அப்பம் தின்பார்"** (253), **"நாய்காணின் கல்காணா வாறு"** (261), **"அணியெல்லாம் ஆடையின் பின்"** (271), முதலிய பழமொழிகள் வாழ்வியல் உண்மைகளை நடைமுறையின் அடிப்படையில் உணர்த்துவனவாம். முன்றுறை யரையனார், **"நீர்மிகின் இல்லை சிறை"** (190), **"செருப்பிடைப் பட்ட பரல்"** (224) எனக் கூறியுள்ள பழமொழிகள் சங்க கால மக்களிடம் பயின்று வந்தவை என்பதற்கு,

"நீர்மிகிற் சிறையும் இல்லை" (51.1)

"செருப்பிடைச் சிறுபரல் அன்னன்" (257.1)

எனவரும் புறநானூற்றுப்பாடற் பகுதிகள் சான்று பகர்கின்றன. அன்றியும்,

"முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்" (130)

என்ற பகுதி முந்து நூல்களாகிய திருக்குறளிலும் (319), சிலப்பதிகாரத்திலும் (21.3-4) பெருங்கதையிலும் (I.56:259) காணப்படும். சுந்தரர் தேவாரத்திலும் இஃது இடம் பெற்றது (VII 35.4).

சமணரிடையே நிலவிய ஒரு பழமொழியினை முதற்பாடலில் ஆசிரியர் குறித்துள்ளார். எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள பல்வகை உயிரினங்களின் உடலளவிற்குத்தக அதன் உயிர் வடிவம் கொள்ளும். எனவே, எறும்பின் உயிர் சிறியது; யானையின் உயிர் பெரியது. இங்ஙனம் ஏனையவற்றுக்கும் கொள்ளுதல் சமணர் நெறியாகும். இதனைப்,

"பெரியதன் ஆவி பெரிது" (1)

என்ற பழமொழி புலப்படுத்துகின்றது.

பழமொழி நானூற்றினைப்பலர் பதிப்பித்துள்ளனர். எனினும், ச. ஆறுமுக நயினார் பதிப்புத்தான் (1904) அறிஞரின் பாராட்டினைப் பெற்றது. திரு. நாராயண ஐயங்காரின் பதிப்பும் (1918, 1922) சிறப்புடையது.

பதினெண்கீழ்க்கணக்கில் 400 பாக்கள் கொண்டவை நாலடியாரும் பழமொழியும் ஆகும். நூறு பாடல்கள் கொண்டவை நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை என்ற நான்கு பனுவல்களாகும்.

இவற்றுள், **நான்மணிக்கடிகையின்** வரலாற்றினை முதலில் காண்போம்.

3. நான்மணிக்கடிகை

கடிகை என்ற சொல்லிற்குத் துண்டு அல்லது துணுக்கு என்பது பொருள். (காண்க: சீவக.1076). ஒவ்வொரு பாடலிலும் நந்நான்கு மணிகளாகிய துணுக்குகள் தொடுக்கப் பெற்றிருத்தலின் இந்நூல் இப்பெயர் எய்திற்று. இந்நூலின் தொடக்கத்தில் திருமாலைப் போற்றும் மங்கல வாழ்த்துச் செய்யுள்கள் இரண்டு காணப்படுகின்றன. இவற்றை நூலாசிரியரே பாடியிருத்தல் வேண்டும். இதனுள் இடம்

பெற்ற 101 வெண்பாக்களில் நேரிசைக்குரியவை 52, இன்னிசைக்குரியவை 48, பஃறொடை வெண்பாக்கள் 2 ஆகும். கடவுள் வாழ்த்துப் பாடல்களில் முதற்பாடல் பஃறொடை வெண்பா. இந்நூலிலும் அறம், பொருள், இன்பம் என்ற அடைவில் பாடல்கள் அமைக்கப் படவில்லை. நான்கு அடிகளிலும் நான்கு கருத்துக்கள் இடம்பெற யாக்கப்பெற்றமையின், நெஞ்சினை முன்னிலைப்படுத்தியோ, ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை அமைத்தோ ஆசிரியர் பாடவில்லை. சங்கப்பாக்கள், திருக்குறள் முதலிய பழம் பனுவல்களின் தாக்கம் நான்மணிக்கடிகையிலும் காணப்படுகிறது.

இந்நூலின் ஆசிரியர் **விளம்பி நாகனார்**. இளநாகனார், வெள்ளைக்குடி நாகனார் முதலிய சங்கப் புலவர்களைப் போல இவர்தம் பெயரும் அமைந்துள்ளது. சங்கம் மருவிய காலத்திலும் பழைய பெயர்மரபு பேணப்பெற்றமைக்கு இவர் பெயர் ஏற்ற சான்றாகும். விளம்பி என்பது இவர் வாழ்ந்த இடப்பெயராதல் வேண்டும். திருமாலுக்கு இவர் கூறியிருக்கும் வாழ்த்தினால் இவர் முதலாழ்வார்களின் காலத்தில் (கி.பி.500 - கி.பி.600) வாழ்ந்தவர் என்று எண்ண இடம் உண்டு. **பொய்கையார், பூதத்தார், பேயார்** ஆகிய ஆழ்வார்கள் மூவரும் வெண்பா யாப்பினால் திருமாலுக்கு நூறுநூறு பாடல்கள் அந்தாதியமைப்பில் பாடியிருத்தல் அறியத்தக்கது.

ஒவ்வொரு பாடலிலும் நந்நான்கு அரிய மணிபோன்ற கருத்துக்களைப் பொறுக்கியெடுத்து நறுக்குத் தெறித்தாற்போல் கூறுதல் வேண்டும் என்ற திட்டத்துடன் நாகனார் பாடியிருத்தலின், இலக்கிய நயங்கள் அருகிய நிலையில் அமைதல் சுட்டத்தக்கது. இந்நூலில் இடம்பெறும் ஒருசில சீரிய சிந்தனைகளைத் தொகுத்து நோக்குவோம்.

சீரிய சிந்தனைகள்

நால்வகை அழகுகளை ஆசிரியர் அறிமுகம் செய்கிறார். வயலுக்கு வனப்புத் தருவன நெல்லும் கரும்புமே; பொய்கைக்குப் பொலிவு தருவது தாமரை; நாணத்தக்கவற்றிற்கு நாணுதலாகிய பண்பு பெண்ணின் நலத்திற்கு அணி சேர்க்கும்; வாழும் நாளில் ஒருவன் இறந்த பின்னும் தன்னோடு தொடரும் என்ற நம்பிக்கையுடன் ஆற்றும் அறச்செயல்களே அவனுக்கு அழகு தரும்:

> "நிலத்துக்(கு) அணிஎன்ப நெல்லும் கரும்பும்;
> குளத்துக்(கு) அணிஎன்ப தாமரை; பெண்மை
> நலத்துக்(கு) அணிஎன்ப நாணம்; தனக்(கு) அணி
> தான்செல் உலகத்து அறம் (9).

துன்பத்தை ஒருவன் வேண்டினால், இரத்தலை (-யாசித்தலை) மேற்கொள்க; இவ்வுலகில் இறந்த பின்னரும் நிலைபெறுதலை

விரும்பினால் புகழை நிலை நாட்டுக; உடலினின்றும் உயிர் பிரிந்து போகும்பொழுது நல்வினை உடன் வருதலை வேண்டின் அறங்களை ஆற்றுக; வாழ்க்கையில் வெற்றிபெறுதலை விரும்பின் சினத்தை அறவே விட்டொழிக்க (15).

ஆக்கம் அளிப்பன யாவை என்ற வினாவினை எழுப்பிக்கொண்டு விளம்பி நாகனார் விடை கூறுதல் வாழ்வியலுக்குப் பயன் நல்குவது. நல்லியல்புகளினாலும் செயல் திறத்தாலும் மாட்சியுற்ற மங்கையரால் மனைவாழ்க்கை ஆக்கம்பெறும்; செவ்வி பார்த்துச் செயலாற்றுதல் ஒருவனுக்கு வெற்றி தரும்; வேந்தன் நல்லவனாக விளங்குதல் அவன் ஆளும் நாட்டிற்கு ஆக்கம் அளிக்கும்; உறவினர்களை ஒதுக்கிவைத்தல் கேட்டிற்கு ஆக்கம் தரும் (18).

யார்யார்க்குத் தூக்கம் வருவதில்லை என்பதைப் பற்றியும் நாகனார் சிந்தித்து ஒரு சுவையான பாடலைத் தந்துள்ளார். பிறர் பொருளைக் களவு செய்ய நினைப்பவர்க்குத் தூக்கம் வருவதில்லை; காதலியிடத்தில் உள்ளத்தை ஒப்படைத்தவர்க்கும் தூக்கம் பிடிப்பதில்லை; மேலான செல்வத்தைச் சேர்க்கவேண்டும் என்று அரிய முயற்சியை மேற்கொள்ளும் மாந்தர்க்கும் துயில் வருவதில்லை; அங்ஙனம் ஈட்டிய பொருளை ஓம்புகின்றவர்களுக்கும் துயில் என்பது இல்லை என்று இயம்புகின்றார்:

> "கள்வம்என் பார்க்கும் துயில்இல்லை; காதலி மாட்(டு)
> உள்ளம்வைப் பார்க்கும் துயில்இல்லை; ஒண்பொருள்
> செய்வம்என் பார்க்கும் துயில்இல்லை; அப்பொருள்
> காப்பார்க்கும் இல்லை துயில்". (7)

குடிமக்கள் எல்லாம் அரசனின் செங்கோலை எதிர்பார்த்து வாழ்வர்; குழந்தைகள் தாய் முலையில் சுரக்கும் பாலை நோக்கி வாழ்வர்; உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் வானத்தினின்று விழும் மழைத்துளியினை எதிர்நோக்கி இருக்கும்; கூற்றுவனோ அன்றாடம் யார் இறக்கிறார் என்பதை நோக்கி இன்புறுவான்:

> "கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம்; தாய்முலையின்
> பால்நோக்கி வாழும் குழவிகள்; வானத்
> துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்
> விளி நோக்கி இன்புறூஉம் கூற்று" (26).

இப்பாடலின் முழுப்பகுதியிலும்,

> "வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
> கோல்நோக்கி வாழும் குடி" (542)

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைக்காண் பரிது" (16)

எனவரும் திருக்குறளின் பதிவும் காணப்படுகிறது. குலசேகர ஆழ்வாரும் இத்தகைய கருத்தினைத் திருவித்துவக்கோட்டுப் பதிகத்தில் மொழிந்துள்ளார்.

திருவள்ளுவர் "வான்சிறப்பு" என்ற அதிகாரத்தில் மழையின் மாட்சியைப் போற்றியுள்ளார். விளம்பிநாகனார், மழைமுறையாகப் பெய்யாவிடின், மாநிலத்தில் வாழும் மக்களுக்கு வாழ்வில்லை என்கிறார். உலகநலம் கருதித்துறவிகள் புரியும் தவம் சிறந்தால்தான் மழைபொழியும்; அரசன் நல்லவனாக இருந்தால்தான் துறவிகள் அச்சம் இன்றித் தவம்புரிதல் இயலும்; குடிமக்கள் வளமாக இருந்தால்தான் அரசனும் சிறப்புற ஆட்சி புரிதல் முடியும். எனவே, ஒருநாட்டின் வளத்திற்கும் மாண்புக்கும் அடிப்படை இல்வாழ்வார் ஆகிய குடிமக்கள். அவர்களால் நாட்டுத்தலைவனும், அவனால் தவத்தோரும், அவரால் மழையாகிய இயற்கையும் மாட்சியுறும் (46).

ஒரு பாடலில் சிறந்த பொருள்கள் நான்கினைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். பல்வகை உறுப்புக்களின் தொகுதியே மனிதன். எனினும், எல்லா உறுப்புக்களையும் விட கண்ணே சிறப்புடையது. மனைவிக்குத் தன் கணவனைத்தவிர, சிறந்த உறவு யாரும் இலர். இல்வாழ்வார்க்குத் தாம் பெற்ற மக்கட் செல்வத்தைவிட மேம்பட்ட பொருள் ஒன்றும் இல்லை. தன்னை ஈன்றெடுத்த தாயை விடச் சிறந்த தெய்வம் இல்லை என்று எடுத்துரைக்கின்றார்:

"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை; மக்களின்
ஒண்மையவாய் சான்ற பொருள் இல்லை; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல்" (54)

தாயே தலையாய தெய்வம் என்ற கருத்துத் தொன்றுமுதல் தமிழர் வாழ்வியலில் காணப்படுகின்றது.

'தந்தையர் ஒப்பர் மக்கள்' என்ற மரபுவழிச்சிந்தனையினை, "மகன் உரைக்கும் தந்தை நலத்தை" என்ற பாடல் புலப்படுத்துகின்றது. உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் வேட்கையினை அவன் முகமே பளிங்குபோல் காட்டும். நிலத்தியல்பினை அதில் பயிர்விளைவிக்கும் வேளாளன் உணர்த்துவான். நிலத்தில் வாழும் மக்களின் இயல்பினை அங்குப் பெய்யும் மழையின் அளவு உரைத்துவிடும் என்ற கருத்தும் அதே பாடலில் காணப்படுகிறது (68).

நெருப்பு ஒன்றுதான் என்றாலும் திரிபோட்டு ஏற்றும் விளக்கின் சுடரை யாவரும் தொழுது வணங்குவர்; விறகில் எரியும்

நெருப்பினைக் காணின் வணங்காது புறக்கணிப்பர். ஒரே குடியில் பிறந்தோருள் கல்வியறிவு பெறாமல் உள்ள மூத்தவனை உலகினர் நாடமாட்டார்; கைவிடுவர்; எனின், அக்குடியில் தோன்றி நிரம்பக்கல்வி பெற்றவன் இளையவன் ஆயினும் உலகத்தார் அவனைப் பாராட்டி அவன் சொல்லைக் கேட்டு நடப்பர் (63). திரியழல் சிறிதெனினும் போற்றப் பெறுதல் போல், கல்விபெற்ற இளையவன் புகழப்பெறுவான். விறகின் அழல் பெரிதெனினும் வணங்காது இகழப்படுதல்போல் கல்லாது மூத்தவன் கதியும் அமையும் என்று முதலிரு கருத்துக்களையும் பின்வருவனவற்றுடன் இணைத்து எண்ணி மகிழத்தக்க வகையில் ஆசிரியர் அமைத்துள்ளார். இப்பாடலில்,

> "கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
> இளமையா ராட்டும் உலகு"

என்ற அடிகள் புறநானூற்றில்,

> "ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது அவருள்
> அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்" (183:5-7)

எனவரும் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாடற் கருத்தினை அடியொற்றிச் செல்லுதல் அறியத்தக்கது. மேற்சுட்டிய பாடலில்,

> **"திரிஅழல் காணின் தொழுப; விறகின்**
> **எரிஅழல் காணின் இகழ்ப"**

எனவரும் பகுதி,

> "செந்தழலே அத்தழலைச் செய்திடினும் செங்கமலம்
> அந்தரம்சேர் வெங்கதிரோற்(கு) அல்லால் அலராவால்" (693)

எனவரும் குலசேகர ஆழ்வாரின் பாடற் பகுதியுடன் ஒப்புநோக்கி உணர்ந்து மகிழத்தக்கது. ஒரேபாடலில் கொலை, புலால் புசித்தல் இரண்டுமே குற்றம் என்று கடியப்பட்டன (100).

இங்ஙனம் மக்களை நெறிப்படுத்தும் அறக்கருத்துக்கள் நான்மணிக்கடிகையில் மேலும் பலவுள்ளன. ஒரு சிலவே இங்கு எடுத்துரைக்கப் பெற்றன.

அடுத்து, திரிகடுகம் என்ற நீதி இலக்கியத்தைப் பற்றி ஒரு சிறிது நோக்குவோம்.

4. திரிகடுகம்

திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி என்பன மூன்றும் மருந்தின் பெயர் பூண்ட அறநூல்கள் ஆகும். தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே தமிழகத்தில் அறிவர் எனப்படும் சித்தர்களின் மரபு தழைத்திருந்தது. இவர்கள் உலக நன்மையின் பொருட்டு அருந்தவம் ஆற்றிய ஞானச்செல்வர்கள். சிறந்த யோகியர்; விழுமிய மருத்துவர்; நெடுங்காலம் வாழும்வழியினைக் கண்டவர். இன்று தமிழகத்தில் வழங்கிவரும் சித்த மருத்துவப் பனுவல்கள் காலத்தால் பிற்பட்டவை எனினும், அவற்றில் பொதிந்து வைக்கப்பெற்றுள்ள மருத்தியல், தவத்துறைக் கருத்துக்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவை. பிறமொழியாளர் கலப்பினால் ஒரு காலத்துத் தனித்தமிழாக வழங்கிய கலைச்சொற்கள் ஒரோ வழி வடமொழிமாற்றம் பெற்றிருத்தல் இயல்பு. இதனால் இக்கலைச் செல்வத்தை அயலார்க்கு உரிமைப்படுத்துதல் அறமன்று. கி.பி.5,6ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற பெருங்கதையில் மருந்திற்கு உரிய மூலப் பொருள்கள் சுட்டப்பட்டமை இங்கு எண்ணத்தக்கது (III 3:131-160). சங்கப்பாக்களிலும் மருந்தியல் குறிப்புக்கள் பல உள்ளன.

தமிழ்ச்சித்தர்களை அகத்தியமரபு, திருமூலர் மரபு என்று இருவகையாகச் சித்தர் நூல்கள் செப்பும். திருமந்திரத்தில் பல மருந்தியல் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. அகத்தியர், திருமூலர் பெயரினால் பற்பல பனுவல்கள் குருசீடர் பரம்பரையில் நெடுங்காலம் ஓதப்பெற்றுப்பின் வந்தோர் மொழிநடையில் உருப்பெற்றுள்ளன. எனவே, பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெறும் மருத்தியல் பற்றிய சிந்தனைகளும் அறங்களிற்பலவும் தமிழர்க்குத்தனியுரிமை வாய்ந்தவையாக எண்ணத்தகுவன.

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற முப்பொருள்களினால் செய்யப்படும் மருந்தினைக் குறிக்கும். கடுகம் என்றசொல் கடுப்புஅல்லது கார்ப்பினைச் சுட்டும். மருந்தே உணவாகவும், நோய்நீக்கி உடலை வளர்க்கும் பொருளாகவும் அமைவது. கி.பி.8,9ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய திவாகர நிகண்டிலும் திரிகடுகம் என்ற சொல் சுக்கு, மிளகு, திப்பிலி என்பனவற்றைச் சுட்டுதல் காணத்தக்கது (XII 31).

திரிகடுகம் போன்று மருந்தியல் பயன்தரும் அறநூலில் இடம்பெற்ற ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று அருங்கருத்துக்கள் வாழ்வியலுக்குப் பயன்நல்கும் பாங்கில் தொகுத்துக் கூறப்பட்டன. இந்நூலில் கடவுள் வாழ்த்துடன் 101 வெண்பாக்கள் இடம்பெற்றன. இவற்றுள், நேரிசை வெண்பாவாகக் கொள்ளத்தக்கவை 50 பாடல்கள் இன்னிசை வெண்பாக்களாக எண்ணற்குரியவை 51 பாடல்கள்.

இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார். ஆதன் என்ற பெயரும் சங்ககாலம் முதலாகவே மக்களால் விரும்பி வைத்துக்கொள்ளப்பெற்ற மரபினைக்காண்கிறோம். இந்நூலின் பாயிரச் செய்யுள்,

"உலகில் கடுகம் உடலின்நோய் மாற்றும்
அலகில் அகநோய் அகற்றும் - நிலைகொள்
திரிகடுகம் என்னும் திகழ்தமிழ்ச் சங்கம்
மருவுநல் லாதன் மருந்து"

என்று காணப்படுகிறது. இதனுள் தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்தவர் நல்லாதனார் என்ற செய்தி நோக்கத்தக்கது. மதுரையில் கி.பி.5ஆம் நூற்றாண்டு முதலாகப் பணியாற்றிய சமணச் சார்புடைய சங்கத்தில் ஏனைய சமயச் சான்றோரும் இகலின்றி இணைந்து தொண்டாற்றினர் என்று எண்ணுதல் சாலும். நல்லாதனார், "கண்ணகல் ஞாலம் அளந்ததூஉம்" எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்தில் திருமாலுக்கு வணக்கம் சொல்லியிருப்பதால், விளம்பிநாகனாரைப் போலவே இவரும் வெண்பா யாப்பில் அத்தெய்வத்தைப் போற்றிய முதலாழ்வார்களின் காலத்தில் (கி.பி.500 - கி.பி.600) வாழ்ந்தவராதல் வேண்டும்.

இந்நூலில் ஒருவகை அமைப்பொழுங்கு புலப்படுகின்றது. முதல் மூன்றடிகளிலும் மூவகைக்கருத்துக்கள் கூறப்பட்டன. அவற்றை **இம் மூன்றும், இவை மூன்றும்** என்று தொகை கொடுத்துச் சொல்லுதலும், உயர்திணையாயின் **இம்மூவர், இவர் மூவர்,** என மூவர் என்று எண்ணிச் சொல்லுதலும் ஈற்றடி பயன் விளைவு காட்டுதலும் நோக்கற் பாலன. இப்பனுவலில் பயின்றுள்ள அருங்கருத்துக்களில் சிலவற்றை இங்குக் காண்போம்.

அருங்கருத்துக்கள்

பெண்ணின் பெருமையினைப் பேசும்பாடல்கள் திரிகடுகத்தில் பற்பல உள்ளன. நற்பண்புகள் நிறைந்த நங்கை ஒருத்தி பல்வேறு பொறுப்புக்களை மேற்கொள்ளும் பொழுது பலநிலைகளில் பாராட்டுப் பெறுகிறாள். இல்லறம் புரிவார்க்கு விருந்தோம்புதல் தலையாய பண்பாக அறநூல்களில் பேசப்பெறுகிறது. இன்சொல் பகர்ந்து விருந்தினர்க்கு உணவு படைத்து உபசரிக்கும் பாங்கினால் கணவனுக்கு உற்ற நட்பினளாகத் துணைவி திகழ்கின்றாள். குடும்பத்தாரின் வயது, நிலை, நலம் கருதி நாள்தோறும் அவர்களைப் பாசத்துடன் பேணுதலினால் ஈன்றெடுத்த தாயாகவும் விளங்குகின்றாள். தொன்றுதொட்டுத் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் குடியின் வழித்தோன்றல்களாகிய நன்மக்களைப் பெற்று வளர்த்து ஆளாக்குதலின் இல்லத்து அரசியாக இலங்குகின்றாள். கற்பறம் சான்ற காரிகை இங்ஙனம் தோழியாய், தாயாய், மனைவியாய்க்கடமை புரிதலின் கணவனின் அன்புக்கு உரியவள் ஆகின்றாள்:

"நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம்; வைகலும்
இல்றஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி - இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்" (64)

இம்மூன்று என்ற தொகைச்சொல் விருந்தோம்புதல், இல்லறஞ்செய்தல், மக்கட்பெறுதல் என்பனவற்றைக் குறித்தன.

உலகில் தன்னருஞ் செயல்களினால் புகழினை நிலை நாட்டியவனும், மாசற்ற கற்புடைய மங்கையை மனைவியாகப் பெற்றவனும், வழிப்போக்கர்க்கும் ஊரில் உறைவார்க்கும் உதவும் பாங்கில் பருகும் நீர் தரும் கிணறுகளைத் தோண்டியவனும் ஆகிய இம்மூவரும் சாவாத புகமுடம்பு பெற்றவர் ஆவர்:

"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்; மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாட் பெற்றானும் - உண்ணுநீர்க்
கூவல் குறையின்றித் தொட்டானும் இம் மூவர்
சாவா உடம்பெய்தி னார்" (16)

ஒரு மனிதனைப் பண்படுத்தும் மதிநலம் வாய்ந்தவள் மங்கை. பருவம் மாறினும் தன் நிலை திரியாது ஒரே இடத்தில் நின்று சுடர்விடும் துருவமீனைப்போல [Pole-star; சாலி, அருந்ததி] ஒளிவிடும் கற்புடைய நங்கையின் தோளும்; செம்மையுடைய பரம்பரைச் சிறப்புடைய பழங்குடியில் தோன்றிய மாண்புடையாருடன் வைத்துக்கொண்ட தொடர்பும்; சொல்லில் விளையும் குற்றங்களைப் போக்கவல்ல கல்வி, கேள்வி ஞானம் மிக்கவரின் நட்பும் ஆகிய இம் மூன்றும்; சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய திரிகடுகம் எங்ஙனம் உடற்பிணியைப் போக்கி நலம் பயக்குமோ அங்ஙனம் மனப்பிணியை நீக்கி மகிழ்ச்சியையும் மாட்சியையும் பயக்கும் என்று முதற்பாடல் சுட்டுகின்றது:

"அருந்ததிக் கற்பினார் தோளும்; திருந்திய
தொல்குடியில் மாண்டார் தொடர்ச்சியும்;. சொல்லின்
அரில்அகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து" (1)

மழை பொழிவதற்கு இயற்கைக் காரணங்களை அறிவியலார் கூறுவர். எனின், அறநூலோர் தத்தம் கடமைகளையும் ஒழுக்கங்களையும் தவறின்றி மேற்கொள்ளுதல் மழை பொழிதற்கு அடிப்படை என்பர். தன்னை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்ட கணவனின் குறிப்பறிந்து செயற்படும் மனைவியும்; தவ ஒழுக்கத்தைக் குறைவின்றிப்புரியும் அறவோரும்; கொடுமையினைக் களைந்து

நல்லாட்சி புரியும் வேந்தனும் ஆகிய இம்மூவரும் பெய் எனப் பெய்யும் மழை என்கிறார் நல்லாதனார் (96).

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி; கொண்டன
செய்வகை செய்வான் தவசி; கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்எனப் பெய்யும் மழை" (96).

நுகர்ச்சி ஒன்றையே கருதிப் புலம்போன போக்கில் போகாது அதனை மீட்டு நெறியில் நிறுத்தி மனப்பக்குவம் அடைந்து வாழ்வோரின் இயல்பினையும் திரிகடுகம் சுட்டுகிறது. அறிந்தோ அறியாமலோபிறர் தம்மை வைதுரைக்கும்பொழுது, அவர் உரையினை இன் சொற்களாகக் கொள்ளுதல் வேண்டும். கூழ் உணவைக் கூட நெய்ச்சோறு என்று மதித்துச் சாப்பிடுதல் வேண்டும். கசக்கக் கூடிய வேம்பனைய பொருளையும் வெல்லக்கட்டி என்று விரும்பி உண்ணுதல் வேண்டும். இத்தகைய பக்குவம் வந்துவிட்டால் இவர்களே மெய்ப்பொருளை உணர்வினால் கண்டு வாழும் பேறு பெற்றவர் ஆவர் (48). ஐம்புலன்களில் சுவை என்ற ஒன்றுதான் மனிதனை அங்குமிங்கும் அலைக்கழிப்பது. நாவினை வென்று வசப்படுத்தினால், ஏனை நான்கு புலன்களும் தாமே அடங்கும். ஐம்புலன்களையும் வசப்படுத்தியவன் மெய்ப்பொருளைக் காணும் தகுதி பெறுகிறான் என்பது யோக நூலார் கருத்து. நல்லாதனார் இக்கருத்தினை மிகவும் சிறப்பாகச் செப்பியுள்ளார்.

தாய், தந்தை, தம்முன், ஆசான், அரசன் ஆகிய ஐம்பெருங் குரவர்களின் கட்டளைப்படி நடவாமையும், அன்பிற்குன்றாத நண்பனிடம் பொய்யாக நடத்தலும், நெஞ்சில் வீற்றிருக்கத்தக்க கற்புடைய மனைவியை ஐயுற்றுத் துறத்தலும் ஆகிய இம்மூன்றும் நற்பண்பு கெட்டவரின் செயலாகும் (97).

பயிர்த்தொழிலைப்புரியும் வேளாண் குடியில் பிறந்தவர்க்கு அழகு தருவனவாகிய மூன்றினை ஆதனார் அறிவுறுத்துகின்றார். பொருளை நேர்வழியில் ஈட்டுதல்வேண்டும். ஓராண்டில் அறுவடைக்குப் பின் ஓய்வுள்ள காலத்தினை ஊரிலுள்ளோர் சூதாட்டத்தில் கழிப்பர். அங்ஙனம் சூதில் வரும் பொருளை ஒருவன் விரும்பக் கூடாது. ஏன் எனின், அப்பொருள் மேன்மேலும் அத்தீய பழக்கத்திற்கு அடிமையாக்கி அடியோடு தன் சொத்தினை அழித்துவிடும். ஆதலால், வேளாளன் சூதாட்டத்தினால் வரும் செல்வத்தை விரும்புதல் தகாது. **எவ்வளவு நெருங்கிப் பழகினாலும் பார்ப்பனரைத் தீக்காய்வார்போல் எண்ணி ஒழுகுதல் வேண்டும்.** உழவுத் தொழிலைக் கைவிடாது அதிலேயே ஊன்றிக் கூலங்களை விளைவித்துச் சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்தல் வேண்டும். எனவே, **சூதுப் பொருட்களை**

விரும்பாமையும், பார்ப்பாரைத் தீப்போல் கருதி ஒழுகுதலும், உழவினையே விரும்புதலும் ஆகிய இன்மூன்றும் வேளாண் குடிக்கு மேலும் அழகுசேர்க்கும்:

"கழகத்தால் வந்த பொருள்கா முறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல்இம் மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு" (42)

பழந்தமிழ்ப் பனுவல்களில் கழகம் என்ற சொல் சூதாடும் இடத்தைக் குறித்தது. திருமுறைகளில்தான் முதன்முதல் இச்சொல் சான்றோர்சங்கம் என்ற உயர் பொருளைப் பயந்தது.

உழவர்கள் வேறு தொழிலுக்குப் போய்விட்டால் உணவு தட்டுப்பாடு உண்டாகிவிடுமே என்ற சமுதாய அக்கறையினால் நல்லாதனார் இங்ஙனம் அறம் கூறினார் எனலாம்.

ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடம் இருத்தல் வேண்டும் என்று இன்று அரசியலாளர் பேசுகின்றனர். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று அன்று நம்பிய சமுதாயத்தில் வாழ்ந்த நல்லாதனார் ஆசிரியர் இல்லாத ஊரில் வாழ்தல் நலம் தராது என்று அறிந்து கூறியுள்ளார். சிறுபூசலுக்குக் கூடத் தீர்வு காண்பதற்குப் பெரும்பொருள் செலவழித்து மக்கள் முறை மன்றம் செல்லுதல் இன்றைய வழக்கம். எனின், பிணக்கினைத் தீர்த்து இருசாரார்க்கும் நிறைவளிக்கும் வகையில் தீர்ப்புரைக்கும் பெரியவர்கள் இடம் பெறாத நியாயசபை பயனற்றது என்கிறார். இன்றைய அரசியலார் கிராம நியாய சபை பற்றிப் பேசிக்கொண்டிருகிறார்கள்! பகுத்துண்டு பல்லுயிர்களையும் ஓம்புதலே தமிழன் கண்ட நெறி. அத்தகைய பண்பிலார் பக்கத்தில் குடியிருத்தல் நலம்பயவாது என்கிறார். எனவே, கணக்காயர் [teacher] இல்லாத ஊரும், மூத்தோரை [elders] இல்லாத அவையும் பாத்துண்ணாத பண்பிலிகள் பக்கத்தில் வாழ்தலும் ஆகிய இம்மூன்றும் நன்மை பயத்தல் இல்லை என்பது திரிகடுகம் (10). மாணவர்களிடம் அன்பாக நடந்துகொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களையே அக்காலச் சமுதாயம் விரும்பியது. "சீறி வெகுண்டுரைப்பானின் பள்ளியை" அறிவுடையவர் அணுகமாட்டார் என்றியம்புதல் எண்ணத்தக்கது (46).

அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்று எழுவகை உறுப்புக்களை நல்ல நாட்டிற்கு அங்கமாகும் [essential elements of a welfare state] என்று திருவள்ளுவர் கூறினார் (381). எனின், திரிகடுகத்தில் தன்பெயருக்கேற்ப மூன்று முதன்மை உறுப்புக்களே மொழியப்பெற்றன. தேச விசுவாசம் [patriotism] மிக்க படையும், பல்வேறு நாட்டினர் முற்றுகையிட்டாலும் புகமுடியாத அரணும்,

அளவற்ற அழியாத பெருஞ்செல்வமும் ஆகிய இம் மூன்றும் மண்ணாளும் வேந்தர்க்கு உறுப்பாகும் (100). செருநரின் செருக்கறுக்கும் எஃகு பொருளிற் பிறிதில்லை யாதலின் பொருளைப் பெருக்குக என்ற அரசியல் ஞானி வள்ளுவனின் வழிநின்று அதனைச் சிறந்த உறுப்பாக ஆதனார் போற்றியுள்ளார்.

இந்நூலில், "உமிக்குற்றுக்கை வருந்துவார்" (28), "தாம் அறிவார் தாம்கண்ட வாறு" (36) முதலிய பழமொழிகளும் காணப்படுகின்றன. இந்நூலிற்குச் சைவசித்தாந்தக் கழகம் உரையுடன் கூடிய பதிப்பினை வெளியிட்டுள்ளது.

இனி, சிறுபஞ்சமூலம் என்னும் அறநூலினைக் குறித்து ஆராய்வோம்.

5. சிறுபஞ்சமூலம்

ஐஞ்சிறுவேர் என்ற தமிழ்க்குறியீடு, புற மொழிச்செல்வாக்கு மிக்கிருந்த களப்பிரர், முற்காலப்பல்லவர்காலத்தில் சிறுபஞ்சமூலம் எனப்பெயர் பெற்றது. தளிர், கொழுந்து, இலை, காய், கனி, வித்து, பட்டை, வேர் என்று மருந்து மரத்தின் பல பகுதிகளும் பயன் தருதலைச் சித்த மருத்துவ நூல்கள் விரிவாக ஆராய்ந்துள்ளன. சில செடி,கொடிகளின் வேர்களும் மருந்தாகப் பயன்தரும். இயற்கையோடு இணைந்து இயல்பான வாழ்க்கையினை மேற்கொண்டிருந்த தமிழ்மக்கள், அதன் நுட்பங்களை அனுபவத்தினாலும் ஆராய்ச்சியாலும் அறிந்திருந்தமையின், அதன் பொருள்களைத் தம் பிணிபோக்குதற்குத் தக்க வகையில் மருந்தாக்கிப் பயன்பெற்றனர். இயற்கை மருத்துவம், நாட்டுவைத்தியம் [native medicine] என்று அழைக்கப்பெறும் சித்த மருத்துவத்தில் கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறு நெருஞ்சி என்ற ஐந்தின் வேர்களைச் சிறுபஞ்சமூலம் என்று இனங்காணப்பட்டது. இவ்வைந்து வேர்களினால் தனித் தனியாகவும் சில பலவாகவும் கலந்து செய்யப்பெற்ற மருந்துகள் உடற்பிணியைப் போக்கி நலம் தந்து நீண்ட வாழ்நாள் பெற்று மகிழ்வுடன் வாழ்வதற்குப் பயன்தரும். இவ்வைந்தனைப் போலவே வாழ்க்கைக்குப் பயன்படும் ஐந்தைந்து அருங்கருத்துக்களைப் பாடல் தொறும் அமைத்துப் பாடியவர் **காரியாசான்** என்னும் சமணச்சான்றோர். ஒரு சில பாடல்களில் நான்கு கருத்துக்களும் வருதலின், பெரும்பான்மை நோக்கிப் பெயர் சூட்டப்பட்டது. இந்நூலின் சிறப்புப் பாயிரப் பாடல்கள் ஆசிரியரின் வரலாற்றினையும் நூலின் மாட்சியையும் புலப்படுத்துவன. இவர் **மாக்காயனார் என்பாரின் மாணாக்கர்.** புலமைச் செல்வமும் பொருட்செல்வமும் கொடைக்குணமும் படைத்தவர். எனவேதான், **"மறுபஞ்சம் தீர்மழைக்கை மாக்காரியாசான்"** என்று சுட்டப்பெற்றார். சமணர்கள் சிறப்பாகப் போற்றும் அனுவிரதங்கள் ஆகிய ஒழுக்கம்,

கொல்லாமை, பொய்யாமை, புலால் உண்ணாமை, கள்ளாமை, காமமின்மை முதலிய அறங்களை ஐந்தைந்தாகத் தொகுத்தும் சிறுபஞ்சமூலத்தைக் காரியாசான் பாடினார். பஞ்சத்திற்கு மூலகாரணமாய் உள்ள நீரின்மையினைப் போக்கும் மழையினைப் போன்றது: மக்களின் தீய ஒழுகலாறுகளைக் களையும் இச் சிறுபஞ்சமூலம் என்னும் சிறந்த நூல் எனப்பாயிரம் பகர்கின்றது. காரியாசானின் வகுப்பு நண்பர் **கணிமேதாவியார்.** இவர் ஏலாதி என்னும் அறநூலின் ஆசிரியர். அன்றியும் இவர் **திணைமாலை நூற்றைம்பது** என்னும் அகத்திணை இலக்கியத்தையும் படைத்தவர். மதுரையில் இயங்கிய வச்சிரநந்தியின் தமிழ்ச்சங்கத்தில் இவ்விருவரும் தொடர்புகொண்டிருக்க வாய்ப்புண்டு. இவர்களின் காலம் கி.பி.500 - 550 எனலாம்.

சங்கஇலக்கியம், திருக்குறள், முற்காலக் காப்பியங்கள் முதலிய பனுவல்கள் பலவற்றையும் காரியாசான் பயின்றவர். சமண ஆகமங்களையும் கற்றவர். மெய்ப்பொருளியல், தருக்கவியல், வானநூல், சித்தமருத்துவம் முதலிய பல்துறை அறிவும் வாய்த்தவர். தென்மொழி, வடமொழி, பாகதம் ஆகிய மும்மொழிப் புலமை முற்றியவர். சிறுபஞ்சமூலத்தில் இரு பாயிரப்பாடல் தவிர, 'முழுதுணர்ந்து' எனத் தொடங்கும் அருக பரமேட்டியின்வாழ்த்துச் செய்யுளும் நூலின் முகப்பில் உள்ளது. 102 பாடல்களைக்கொண்ட இந்நூலில் 85-89 ஆகிய பாக்கள் ஓலைகளில் ஒடிந்துவிட்டன. எஞ்சிய பாடல்களே இப்போது வழக்கில் உள்ளன. புறத்திரட்டில் இடம்பெற்ற இந்நூலுக்குரிய மூன்று செய்யுட்களை 85,86,87 ஆம் பாடல்களாக ஏற்றுச் சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பு வெளியிடப்பட்டது.

இப்பொழுது கிடைத்துள்ள 98 வெண்பாக்களில் 97 பாடல்கள் நேரிசை வெண்பாவாகவும், ஒருபாடல் மட்டும் இன்னிசை வெண்பாவாகவும் கொள்ளத்தகுவன. இனி, இந்நூலில் பொதிந்துள்ள அருங்கருத்துக்கள் சிலவற்றை ஆராய்ந்து காண்போம்.

அருங்கருத்துக்கள்

ஆயிரம்பிறை கண்டவர் எனப்போற்றப் பெறுபவர் எண்பது வயதினைக் கண்டவர் ஆவர். இங்ஙனம் நீண்ட ஆயுளைப் பெறுதற்குக் காரியாசான் உபாயம் கூறுகிறார். பஞ்சகாலத்தில் தன்னிடம் உள்ள உணவுப் பொருளை மற்றவர்க்குப் பகுத்துக் கொடுத்துப்பின் உண்பவனும், கரவாது ஈகைபுரிபவனும், உடைந்து ஓடும் படையுட் புகுந்து அஞ்சாது போர்புரிந்து வாகை புனைபவனும், உண்ணும் முன்னர்ப் பிறர்க்கு வழங்குபவனும் குழவிக்குப் பால் கொடுத்துக் காப்பவனும் ஆகிய ஐவரும் எண்பதின் மேலும் வாழ்ந்திருப்பர்:

> "பஞ்சப் பொழுதுபாத்(து) உண்பான்; கரவாதான்;
> அஞ்சா(து) உடைபடையுள் போந்தெறிவான் – எஞ்சாதே
> உண்பதுமுன் ஈவான்; குழவி பலிகொடுப்பான்
> எண்பதின் மேலும்வாழ் வான்" (77)

பலி என்பது உணவு; இங்குப் பாலடிசிலைக் குறித்தது. குழவிக்குப் பலி என்று நான்கன் உருபினை விரித்துப் பொருள் காணுதல் வேண்டும்.

வருவாய்க்குத்தக்க செலவு செய்தல், சுற்றம் அஞ்சாதபடி ஒழுகுதல், விருந்தோம்பல், தெய்வவழிபாடு என்பனவே பெண்ணிற்குச் சிறப்புத் தருவன (41). "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்ற திருவள்ளுவரின் கருத்து இந்நூலில் மாற்றம் அடைந்திருத்தலை, "திருவாக்கும் தெய்வத்தை எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு, செய்வதே பெண்டிர்ச் சிறப்பு"(41) என வரும் பாடற்பகுதியினால் அறிதல் வேண்டும். இதனுள் பத்தி இலக்கியக் காலத்தின் வாசனை வீசுகிறது எனலாம்.

ஆசிரியர், மாணாக்கர் பற்றிய குறிப்புக்களும் இந்நூலில் உள்ளன. பொருளாசை இல்லாதவன் நல்லாசான்; அவனை அன்பினால் வழிபடுபவன் மாணாக்கன். காமம், வெகுளி, மயக்கம் என்ற அறிவுத்தடைகளை அகற்றியவனே நன்மாணாக்கன். அங்ஙனம் அவற்றைக் கடிந்து நீக்காதவன் ஆசிரியனின் மனத்தில் ஒரு நோயாகக் கருதப்படுவான் (27). நுட்பமாக நூலினை ஓதுதலும் பாடம் கேட்டலும் மரியாதை செய்தலும் மாணாக்கனின் கடமை (28).

நாலடியாரில் முடிஅழகும், ஆடை அழகும், நறுந்துகள் பூச்சழகும் அழகல்ல; கல்வி அழகே அழகு (131) என்று கல்வியின் சிறப்பு ஓதப்பட்டது. அக்கருத்தினை எதிரொலிப்பதுபோல்,

> "மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
> உகிர்வனப்பும் காதின் வனப்பும் செயிர்தீர்ந்த
> பல்லின் வனப்பும் வனப்பல்ல; நூற்கியைந்த
> சொல்லின் வனப்பே வனப்பு" (35)

எனவரும் பாடலைக் காரியாசான் அமைத்துள்ளார். ஒருவர் பேசும் சொல்லிலிருந்து அவர்தம் கல்வியின் ஆழத்தை அறிந்துகொள்ளுதல் இயலும். ஆதலின் கல்விச் சிறப்பினால் ஒருவர் பெறும் சொல்லாற்றலே விழுமிய வனப்பாகப் போற்றப்பட்டது. காரியாசானின் வகுப்புத் தோழராகிய கணிமேதாவியார்,

> "இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
> நடைவனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்
> கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோ(டு)
> எழுத்தின் வனப்பே வனப்பு" (74)

என்று ஏலாதியில் இயம்பியிருத்தல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இவர்கள் காலத்தில் அழகுபற்றி நிலவிய பல்வகை எண்ணங்களையும் இப்பாடல்கள் காட்டுகின்றன. பொதுவாக, **'கல்வி அழகே அழகு'** என்று நாலடியாரும், **'நூற்கியைந்த சொல்லின் வனப்பே வனப்பு'** என்று சிறுபஞ்சமூலமும் புலப்படுத்தினும், கல்வி என்றும் நூலென்றும் சிறப்பித்துச் சொல்லப்பெறுவனயாவும் **எண்ணும் எழுத்தும்** என்ற இரண்டனுள் அடங்கும் என்ற எண்ணத்தினால், **"எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு"** என்று ஏலாதி இயம்புதல் நோக்கத்தக்கது. திருவள்ளுவரும் இவ்விரண்டினையும் உலகைப் பார்த்தற்குரிய கண்கள் போன்றவை எனக்கூறியிருத்தல் இங்கு இயைபு கருதிக் கூறத்தக்கது.

மேலும் வனப்புக் கோட்பாட்டினைக் காரியாசான் வேறொரு பாடலிலும் குறித்துள்ளார். படைகளுக்கு வனப்புத்தருவது யானை; பெண்ணின் இடைக்கு அழகுதருவது நுண்மை; ஒழுக்கத்திற்கு ஒளிதருவது சொல்மாறாமை; அரசனுக்குச் செங்கோல் அழகுதரும்; படை மறவர்க்கு அஞ்சாமை பொலிவு தரும் (5). கண்ணிற்கு அழகு தருவது இரக்க உணர்வு; காலுக்கு அழகு பிறரிடம் இரத்தற்பொருட்டு நடவாமை; சிந்தனைக்கு அழகு வரையறுத்துக் கூறுதல்; இசைக்கு அழகு கேட்டவர் வியந்து பாராட்டல்; அரசனுக்கு அழகு குடிமக்களின் புகழ்ச்சியுரை (7).

> "கண்வனப்பு கண்ணோட்டம்; கால்வனப்புச் செல்லாமை
> எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல்-பண்வனப்புக்
> கேட்டார்நன் றென்றல்; கிளர்வேந்தன் தன்நாடு
> வாட்டான் நன்றென்றல் வனப்பு" (7).

உயிர் இரக்கம் கொண்ட காரியாசான் கொல்லாமையினை வலியுறுத்துகின்றார். உயிர்களைக் கொலைசெய்து உண்பவனின் நாக்கு அழியும்; பொய்ச்சான்று கூறுபவனின் நாவும் அழியும்; கற்றறிந்தார்களின் முன்பு கல்லாதவன் உரையாற்ற இயலாமையின் அவன் நாவும் அடங்கி விடும்; சொற் கடவாதவன் கடன் தண்டவந்தவனைக் கண்டதும் (தர இயலா நிலையில்) நா எழாது, தனக்கு உதவியவன் ஒருகால் தீமை புரியினும் நற்குடிப்பிறந்தவன் வெளியில் சொல்லாமையின் அவன் நா அடங்கும் (8).

சிலந்திக்குத் தன் முட்டையும், விலங்குகளுக்கு அவற்றின் நீண்ட கொம்புகளும், கவரிமானுக்கு அதன் மயிரும், நண்டுக்கு அதன் குஞ்சும், ஒருவன் நாவிற்கு வசை பேசுதலும் கூற்றுவனாக அமையும் (9). மனிதன் நாவைக் காக்க வேண்டும் என்பதை விளக்கவே, முன்னைய நான்கும் எடுத்துக்காட்டப்பட்டன.

செந்தமிழில் தேர்ச்சி இல்லாதவன் கவிபாடுதல் பயனற்றது (10). கல்விகேள்விகளில் சிறந்த பெரும்புலவன் சிந்தையால் நோக்கிப் பாடுவதே பாட்டு என்று கவிதை பற்றிய ஒரு கருத்தையும் காண்கிறோம் (31). சிறந்த கல்வியாளனும் உயர்ந்த கவிஞனும் பொன்னும் பொருளும் பெறுவார்கள் (54).

பிற்காலத்தில் வாழ்ந்த ஔவைப்பிராட்டி சோழப்பெருவேந்தன் முன்பு "வரப்புயர" எனப் பிசி மொழி பேசிய வரலாற்றினைக் கூறுவர். இதற்கு அடிப்படை சிறுபஞ்சமூலத்தில் காணப்படுகிறது.

"வார்சான்ற கூந்தல்! வரம்புயர, வைகலும்
நீர்சான்(று) உயரவே நெல் உயரும் - சீர்சான்ற
தாவாக் குடிஉயரத் தாங்கருஞ்சீர்க் கோஉயர்தல்
ஓவா(து) உரைக்கும் உலகு" (44)

எனவே, 'வரப்புயர' என்பது தொன்று தொட்டு வழங்கிவரும் முதுமொழி எனக் கருதலாம்.

சோதிட நூல் சிந்தனைகள் சிலவும் சிறுபஞ்சமூலத்தில் இடம் பெற்றன. நாள் பொருத்தம், முழுத்தம் (-முகூர்த்தம்), கிரகங்களின் சேர்க்கை, யோகம், குணம் என்ற ஐந்தினையும் உணர்ந்து திருமணம் முதலிய நற்செயல்களைப் புரிதல் நன்று என்கிறார்:

"நாள்கூட்டம் மூழ்த்தம் இவற்றொடு நன்றாய
கோள்கூட்டம் யோகம் குணன்உணர்ந்து-தோள்கூட்டல்
உற்றானும் அல்லானும் ஐந்தும் உணர்வான்நாள்
பெற்றானேல் கொள்க பெரிது" (42)

சத்த சாத்திரம், மெய்ஞ்ஞானக்கல்வி, தருக்கம், சமயக்கல்வி, வித்தகர் கண்டுரைத்த வீட்டியல்பு என்ற ஐந்தினையும் அறிந்தவனே சிறந்த அறிஞன் (91). கொல்லாமையினை மேலும் அறமாகக் கூறுவர் சமணர் (-அஹிம்ஸா பரமோ தர்ம:). காரியாசான் இவ்வறத்தின் கூறுகளை விரிவாகக் கூறுகின்றார். கொன்றவன், கொலைக்கு உடந்தையாக இருந்தவன், கொன்ற ஊனை விலைக்குப் பெற்றவன், அதனைச் சமைத்தவன், உண்டவன் என்ற ஐவகையோர்க்கும் பாவத்திற் பங்கு உண்டு என்கிறார்.(68) இக்கருத்தினைக்,

"கூறு போட்டவன் கொன்றவன் தின்றவன்
கூட நின்றவன் சொன்னவன் கேட்டவன்
ஆறு பேர்க்கும் அருநர கேகதி"

எனவரும் பிற்காலத்துப் பாடலும் தொகுத்துரைத்தது.

இனி, காரியாசானின் காலத்தவராகிய கணிமேதாவியாரின் ஏலாதி என்ற அறநூல்பற்றிச் சுருங்கக் கூறுவோம்.

6. ஏலாதி

நூறு பாடல் என்ற எண்ணிக்கை அடிப்படையில் அடுத்து ஆசாரக் கோவையினைக் கூறுதல் முறையாயினும், திரிகடுகம், சிறுபஞ்சமூலம் என்ற மருந்துப்பெயர் ஒப்புமை நோக்கி எண்பது பாடல்களே கொண்ட ஏலாதியினை இங்குக் கருதிப் பார்த்தல் பொருத்தமே. மேலும், சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியரும் ஏலாதியின் ஆசிரியரும் ஒரு காலத்தவர் என்பதும் எண்ணற்பாலது. சோதிடக்கலையில் வல்லவர் ஆதலின் கணிமேதாவியர் என்று பெயர் பெற்றார் ஏலம்+ஆதி ஏலாதி என்றாகும். ஏலம், இலவங்கம், நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து மக்கட்பிணியை நீக்கி உடல்நலமும் நீண்ட ஆயுளும் தருதல் போல், இந்நூலில் சொல்லப்பெறும் அறங்களும் மக்களின் மனப்பிணியைக்போக்கி, குறைகளைந்து, குற்றம் நீங்கி நல்வாழ்வு நடத்துதற்குப்பயன்படுதலின் இப்பெயரினை ஆசிரியர் தம் நூலிற்குச் சூட்டினார்.

இந்நூல் கடவுள் வாழ்த்தும் பாயிரமும் சேர்ந்து எண்பத்திரண்டு பாடல்களைக் கொண்டது. இவற்றுள் நேரிசை வெண்பாக்கள் 79; இன்னிசை வெண்பாக்கள் 3 ஆகும்.

அருங்கருத்துகள்

நாற்றிசையும் நிறுவிய புகழ், செல்வம், மேம்பாடு, ஆண்மை, கல்வி, கொடைமை என்ற ஆறும் நெறி நின்றமக்களின் வனப்பாக எண்ணப்பெறும்(1). பிறர்கொலை புரிதலை விரும்பான், தானும் கொலை புரியான், புலால் உண்ணான், பிறரைக் கொடுமைப்படுத்தான், வஞ்சிக்காதவன், சோதனையிலும் நிலை குலையாதவன் ஆகிய அறுவரும் மண்ணகத்தார்க்கு மட்டுமன்றி விண்ணகத்தார்க்கும் மேலானவராகப் போற்றத்தக்கவர்(2) பொய் பேசாதவன், பிறர்பொருளுக்கு ஆசைப் படாதவன், சிற்றினம் சேராதவன், மந்தணச்சொல்லுக்குச் செவிடானவன், தீச்சொல்லில் ஊமையானவன் பெரியோன் ஆவன் என்கிறார்:

“கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருள்மேல்
செல்லான் சிறியார் இனம்சேரான் - சொல்லும்
மறையில் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையில் பெரியாற்(கு) இவை” (19).

நிறையும், நீர்மையும், கொடையும், பொறையும், வாய்மையும், புலால் உண்ணாமையும் உடையவன் பல்வகை உயிர்க்கும் தாய்போன்றவன் (6). கொலை, களவு, காமம் கடியப்படுதல் வேண்டும்(29). பருகும்நீர்வளம், குளம், கேணி, தண்ணீர்ப்பந்தல், பொதுமண்டபம் ஆகியவற்றை அமைத்தவன் பாடல் ஆடல் ஆகிய கலையின்பம் துய்த்து உயர் செல்வனாய் இல்லாளுடன் இன்புற்று வாழ்வான் (51).

"உண்ணீர் வளம்குளம் கூவல் வழிப்புரை
தண்ணீரே அம்பலம்தான் பாற்படுத்தான் - பண்ணீர
பாடலொடு ஆடல் பயின்று உயர்செல்வனாய்க்
கூடலொடு ஊடலுளான் கூர்ந்து" (51)

மாணாக்கர் படிப்பதற்கும் எழுதுவதற்கும் உணவும் உடையும் எழுத்தாணியும் புத்தகமும் உள்ளன்போடு முற்பிறப்பில் கொடுத்தவர் (இப்பிறப்பில்) சிறப்புற வாழ்வார் (63).

**"ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்
பேணாரும் எண்ணும் எழுத்திவை மாணொடு
கேட்டெழுதி ஓதிவாழ் வார்க்கு ஈய்ந்தார் இம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து."** (63)

இங்ஙனம் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்படும் கொடை விழுமிய அறமாகக் கருதப்பெற்றமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

வீடுபேற்றின் இலக்கணத்தை ஒரு பாடல் உணர்த்துகின்றது. பொய் தீர்ந்த புலவர் மெய்ப்பொருளை ஆராய்ந்து கூறிய குற்றமற்ற வீடு பேற்றின் இயல்பினை உரைப்பின், அங்குச் சுடர் இல்லை, பேச்சு இல்லை, மாற்றம் இல்லை, தளர்ச்சி இல்லை, இடர் இல்லை, துயிலும் இல்லை, (66). எனவே இன்மை வாசகத்தால் வீட்டின்பத்தை விளக்கினர் ஆசிரியர். உபநிடதங்களில் அன்மைச் சொல்லினால் (-நேதி, நேதி) வீடுபேற்றின் இலக்கணம் இயம்பப்பெற்றமை இங்கு ஒப்புமை கருதி எண்ணத்தக்கது.

இல்லறம் துறவறம் இரண்டனையுமே ஏலாதி போற்றியுரைக் கின்றது. மனைவாழ்க்கை கடமை புரிவதில் பற்று வைத்தலால் சிறப்புறும். வீடு பேற்றில் பற்று வைத்தலால் தவவாழ்க்கை சிறப்புறும் (73).

யார்யார்க்கு ஈதல்வேண்டும் என்று ஒருபாட்டு உரைக்கின்றது. தாய் இல்லாத பிள்ளைக்கும், கணவனை இழந்த கைம்பெண்ணுக்கும், வாய் இல்லாத ஊமையர்க்கும், வாணிபம் செய்து பொருள் இழந்தவர்க்கும் கையில் உள்ள இருப்பினைத் தொலைத்தவர்க்கும்,

குருடர்க்கும் பொருள் கொடுத்து உதவுகின்றவரே (வரும்பிறவிக்கு) வைப்புநிதி வழங்கி வாழ்பவர் (78). மனிதநேயமே இங்ஙனம் அற்றார்க்கும் அலந்தார்க்கும் உதவுதற்கு அடிப்படை அறமாக அமைதல் அறியத்தக்கது.

இவர் சமணராயினும் சுமிருதி நூல்கள் நுவலும் பன்னிருவகைப் புதல்வரைக் குறித்துள்ளமையின் (30,31) அயல்நெறியாரின் நூல்பயிற்சியும் இவர்க்கு உண்டு என்பது புலனாகும்.

இனி, ஆசாரக்கோவை என்ற அறநூலின் பொருள் வகையினைச் சுருங்கக் கூறுதல் சாலும்.

7. ஆசாரக்கோவை

ஆசாரம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம், நடத்தை என்பது பொருள். சங்க காலத்திலேயே வடமொழிபயின்ற தமிழ் அறிஞர்களிடம் இச்சொல் பயிலப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதற்கு "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்ற திருக்குறள் சான்றாகும். அவைதிகர்கள் ஆகிய சமணர்கள் ஓதிய அறங்களுக்கு ஒப்பாக வைதிக நெறியினரும் நீதிகளையும் ஒழுக்கங்களையும் உரைத்தல் இயலும் என்ற உணர்வுடன் ஆசாரக்கோவை எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவர். கயத்தூர் இவர் பிறப்பிடம். பெருவாயின்(-ல்) என்பது இவர் வாழ்ந்த பதி ஆகலாம். பஃறொடை வெண்பாவினால் அமைந்த நூற் சிறப்புப் பாயிரத்தில் முப்புரம் எரித்த ஈசனுக்கு இவர் வணக்கம் கூறியிருத்தலின் இவர்தம் சமயச்சார்பு புலனாகும். திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசர்,

"அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை" [VI 25.7]

என்று ஆசாரம் என்ற சொல்லினைப் பழக்கம், ஒழுக்கம் என்ற பொருளில் ஆண்டுள்ளார். நான்மணிக்கடிகையில், "ஆசாரம் என்பது கல்வி" (93) என்றும், முதுமொழிக்காஞ்சியில், "அறியாத் தேயத்து ஆசாரம் பழியார்"(3.8) என்று இச்சொல் பயிலப்பெற்றது. எனவே மக்களின் வாழ்க்கைக்கு உகந்த நெறிமுறைகளையும் ஒழுக்கங்களையும் தொகைவகை செய்து கூறும் இந்நூல் ஆசாரக்கோவை எனப்பெயர் எய்திற்று. இதனுள்ளும் ஆசாரம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது (1,100). இந்நூலார் கூறும் ஒழுக்கங்கள் யாவற்றையும்,

"முந்தையோர் கண்ட முறை" (4, 11)

"யாவரும் கண்ட நெறி" (16)

"நல்லறிவாளர் துணிவு" (17)

"பேரறிவாளர் துணிவு" (19, 42)

"மிக்கவர் கண்ட நெறி" (27)

"நூல் முறையாளர் துணிவு" (61)

"திறம் கண்டார் கண்ட நெறி" (63)

எனவரும் தொடர்களினால் முந்து நூலோர் கூறியவையாக உரைத்துள்ளார். ஆதலின், **பெருவாயின்முள்ளியார்** பல நூல்களைப் படித்துத் தொகுத்துக் கொண்ட நெறிகளைக் கோவையாக யாத்துள்ளார் என்பது புலனாகும். இவர் வடமொழி நூல்களை - சிறப்பாகத் தருமசாத்திரங்களையும் நீதி நூல்களையும் படித்தவர் என்பதற்கு அகச்சான்றுகள் பலஉள. பாயிரத்தில், **"ஆரிடத்துத் தான் அறிந்த மாத்திரையான்"** நூலைத் தொகுத்திருப்பதாக அறிகின்றோம். ஆரிடம் என்பது இருடிகள் வடமொழியில் செய்துள்ள சுமிருதி நூல்களைக் குறிக்கும். இந்நூலினை முதலில் பதிப்பித்த திருமணம் செல்வக்கேசவராய முதலியார், "இந்நூலிற் கூறிய ஆசாரங்கள் பெரும்பான்மையாய் வடமொழியில் உள்ள சுக்கிரஸ்மிருதியிலிருந்து தொகுத்தவை என வடநூற் புலவர் கூறுகின்றனர்" என்று குறித்துள்ளார். ஆதலின், வடநாட்டவர் பின்பற்றிய ஆசாரங்கள் பலவற்றைத் தமிழகத்தில் அறிமுகம் செய்யும் நோக்கத்தில் இந்நூல் இயற்றப்பட்டது எனலாம். எனினும், **இதனுள் தமிழ்நூல்களில் காணப்படும் பற்பல நெறிகளும் ஓதப்பட்டுள்ளன.** இந்நூலின் காலம் கி.பி.600 - கி.பி.650 ஆகலாம்.

சிறப்புப் பாயிரத்துடன் 101 பாடல்களைக் கொண்ட இந்நூல் பலவகையான வெண்பாக்களும் கொண்டதாய் அமைந்தது. கூறப்புகும் ஆசாரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெண்பாவின் அமைப்பு காணப்படுகின்றது. இதனுள் குறள்வெண்பா (1), சிந்தியல்வெண்பா (53), நேரிசை வெண்பா (6), இன்னிசை வெண்பா (32), பஃறொடை வெண்பா (8+1) இடம்பெற்றன.

அருங்கருத்துக்கள்

செய்ந்நன்றி அறிதல், பொறையுடைமை, இனியவை கூறல், இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரின் நட்பு என்ற எட்டும் ஆசாரங்கள் அனைத்திற்கும் விதையாக அமைவன என்பது முதற்பாடலின் சாரம் ஆகும்:

நன்றிஅறிதல் பொறையுடைமை இன்சொல்லோ(டு)
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியொடு

ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து" (1).

இதனை ஊன்றி நோக்கின் தருமசாத்திரக் கருத்தின் மொழி பெயர்ப்பாக இல்லை என்பது புலனாகும். திருக்குறள் பயிற்சியால் தமிழர் பேணிய உயர் ஒழுக்கங்களின் கோவையாகவே இப்பாடல் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

பொழுது புலருமுன் துயிலெழுதல்; விழித்ததும் அன்று ஆற்றவேண்டிய அறச்செயலையும் பொருள் வருவாய்க்குரிய வழிகளையும் சிந்தித்தல்; தந்தை தாய் ஆகிய இரு முது குரவரைப் பணிந்து எழுதல் என்பனவே காலைப் பொழுதில் ஒருவர் புரிய வேண்டிய செயல்கள் என்று முன்னோர்கள் வரையறுத்துக் கண்டனர்:

**"வைகறை யாமம் துயில் எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"** (4).

நாட்டை நலமுறக் காக்கும் அரசன், கல்வி புகட்டிய ஆசான், ஈன்றெடுத்த தாய், தந்தை, தம்முன் (அண்ணன், தமக்கை) என்ற ஐவருமே நிகரற்ற குரவர்கள். இவரைத் தெய்வத்திற்கு ஒப்பாக மதித்துப் போற்றுதல் வேண்டும் என்பதே எவ்வகை நெறியினரும் கண்ட முடிபாகும் (16). இது பொது அறம். (Common Ethics)

பிறனில் நயத்தல், கள், களவு, சூது, கொலை என்ற ஐந்தனையும் அறநூல் அறிந்தவர் எண்ணமாட்டார். அங்ஙனம் எண்ணுவாராயின் ஒழுக்கம் இல்லாதவர் என்று இகழப்படுவர். இத்தீமைகள் ஒருவனை நகரத்தில் செலுத்திவிடும் (37).

பொய்பேசுதல், புறங்கூறுதல், பிறர் பொருளை வவ்வுதல், பொறாமைப்படுதல் என்ற நான்கு தீய செயல்களையும் ஐயமற்ற மெய்க்காட்சியுடையவர் சிந்திக்கமாட்டார். யாவரேனும் இத்தீச்செயல்களை எண்ணிச் செயற்படின் ஐயம் ஏற்கச்செய்து தெய்வக்குற்றத்திற்கு ஆட்படுத்தி நரகத்தில் செலுத்திவிடும் (38). குற்றம் செய்பவர்க்குரிய தண்டனையினையும் ஆசாரக் கோவை அச்சுறுத்திக் கூறுதல் அறியத்தக்கது. மக்கள் எச்சரிக்கையாக நடந்து கொள்ள இத்தகைய உரைகள் உதவும்.

பெரியோர் முன்னிலையில் எப்படி நடத்தல் வேண்டும் என்று ஒரு பாடல் உணர்த்துகின்றது. வெடிப்புச்சிரிப்பு, கொட்டாவி விடுதல், உமிழ்தல், தும்மல் இவற்றை பெரியோர்முன் செய்யற்க என்று கட்டளையிடுகிறார் முள்ளியார் (73).

இந்நூலில் தருமசாத்திரக்கருத்துக்கள் இடம் பெற்ற பாடல்களும் உள்ளன (3,5,6,7,33,47 முதலியன).

இனி, நாற்பது பாடல்களினால் அமைந்த அறநூல்கள் இரண்டனுள் இன்னா நாற்பது குறித்து முதலில் காண்போம்.

8. இன்னாநாற்பது

பாட்டியல் நூல்கள் நாற்பது பாடல் கொண்ட கீழ்க்கணக்கு நூல்கள் நான்கினைக் கருதி **எண் செய்யுள்** என்ற இலக்கிய வகையினைப் பாகுபாடு செய்தது. நான்கனுள் இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும் மக்களுக்கு உறுதி பயக்கும் அறங்களை ஓதுவன. இவற்றுள், இன்னா நாற்பது ஒவ்வொரு பாடலிலும் இன்னாமை தருவன நான்கனை எடுத்துக்கூறி மக்களைத் தீநெறியினின்றும் நீங்கி நன்னெறியில் நடப்பதற்குத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

இன்னா நாற்பதனை இயற்றியவர் கபிலர். இவர் சங்க காலத்தில் பாரி, செல்வக் கடுங்கோவாழியாதன் முதலியோரின் அவைக்களப் புலவராகிய கபிலரின் வேறானவர்.சங்க காலக் கபிலர் அந்தணராயினும் புலால் உண்டவர்; கள் பருகியவர். எனின் இன்னாநாற்பதில் புலாலும் கள்ளும் கடியப்பட்டன. கபிலர் அகவல் பாடிய சாங்கியக் கபிலரும், பதினோராம் திருமுறையில் சில பிரபந்தங்களைப் பாடியுள்ள கபில தேவநாயனாரும் பாட்டியல் பாடிய கபிலரும் அறநூல் செய்த கபிலரின் வேறுபட்ட புலவர்கள்; வெவ்வேறு காலத்தவர்.

இந்நூல் கடவுள் வாழ்த்தில் முக்கட் பகவனையும், பலராமனையும், மாயவனையும் முருகப்பெருமானையும் தொழாமை இன்னா பயக்கும் என்று ஆசிரியர் கூறுவதினால் தமிழகத்தில் புநானூறு (56:1-10) சிலப்பதிகாரம் (5:169-72; 14:7-10) ஆகிய இலக்கியங்கள் எழுந்த காலத்தில் நிலவிய கடவுள் நெறியினைக் குறித்துள்ளார் என்பது புலனாகும். இவர் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டாதல் வேண்டும். இவர் பாடியவை எல்லாம் இன்னிசை வெண்பாக்களாக இலங்குதல் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இப்பாடல்களில் பொதிந்துள்ள அருங்கருத்துக்கள் சிலவற்றைத் தொகுத்துக் காண்போம்.

அருங்கருத்துக்கள்

நாட்டுத்தலைவன் நல்லவனாகவும் செங்கோலனாகவும் ஆட்சி புரிதல் வேண்டும். கொடுமை புரிபவனாயின் அவன் கீழ்க், குடிமக்கள் வாழ்தல் இன்னாமை தரும். நீண்ட கடல் நீரில் புணையின்றி நீந்துதல் இன்னாது. நல்ல நோக்கமின்றிக் கடுமொழி பேசுவோருடன்

தொடர்பு கொள்ளுதல் துன்பம் தரும். மனத்தடுமாற்றத்துடன் வாழ்தல் இன்னாது (3).

வலிமையற்றவன் வாள் ஏந்துதல் இன்னாமை பயக்கும். மணம் இல்லாதமலரின் வனப்பு இன்பம் தராது. தெளிவில்லாதவன் தொழில் செய்யத் துணிதல் துன்பம் தரும். எந்தச் சூழலில் எதனைக் கூறுதல் வேண்டும் என்ற அறிவில்லாதவன் பேச்சு இன்னாதது (7).

பாட்டின் பொருளை உணர்ந்து பாராட்டும் சுவைஞர்கள் இல்லாத இடத்தில் செய்யுளைப் பாடிப் பொருள் உரைத்தல் இன்னாது. இருளில் சிறு பாதையில் தன்னந்தனியே போதல் இன்னாது. அருள் உள்ளம் இல்லாதவரிடம் இரத்தல் இன்னாது. பொருள் இல்லாவர் ஈதல் புரிதலும் இன்னாது என்கிறார்:

"பொருள்உணர்வார் இல்வழிப்பாட்டுரைத்தல் இன்னா;
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப்போக்(கு) இன்னா;
அருள்இல்லார் தம்கண் செலவின்னா; இன்னா
பொருள்இல்லார் வண்மை புரிவு" (10).

தமக்கும் பிறர்க்கும் பயன்படாது சேர்த்துப் புதைத்து வைக்கும் பொருள் இன்னாது. பகைவருடன் சேர்க்கை மிகவும் இன்னாது. பார்வையற்றவனுக்கு அழகிருந்தும் இன்னாது. எண்ணித் துணியாதவன் செயலும் இன்னாது(16). ஆன்றவிந்த சான்றோர் அவையில் அறிவிலி புகுதலும், மயங்கிய இருளில் போதலும், பொறுத்து மனம் அடங்கி வாழாதவனின் நோன்பும், ஈன்றெடுத்ததாயினைப் பேணாமையும் இன்னாமை பயக்கும் என்று ஒருபாடல் பகர்கின்றது:

"ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகல்இன்னா;
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா, ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல்" (17).

பண் அமையாத யாழின் கீழிருந்து பாடுதலும், கணித நூல் அறியாதார் நாள்பார்த்துக் கூறுதலும், மார்ச்சனை தடவப் பெறாத முழவின் ஓசையும் பண்பாடில்லாதவனின் பகையும் இன்னாமை ஆகும் (31). பிறன்மனை விரும்பும் பேதைமையும், வீரமிலாதவன் போர்புரியச் செல்லுதலும், சேணம் இடம்பெறாத குதிரையின் முதுகில் ஏறுதலும் திறமை இலாதவன் செய்யும் செயலும் இன்னாதவை (38).

இங்ஙனம், இவைஇவை துன்பம் பயப்பன என்று தொகுத்துக் கூறி மக்களை அவற்றின் நீங்கிப் பொருந்திய வழியில் போதற்கு அறிவுறுத்தும் அறநூலாக இன்னா நாற்பது இயங்குகிறது.

இனி, எஞ்சிய இனியவை நாற்பது பற்றிச் சிறிது நோக்குவோம்.

9. இனியவை நாற்பது

பெருந்தேவனார் வீரசோழியத்தின் உரையில், இன்னா நாற்பதினை முதலிற் கூறிப்பின்னரே இனியவை நாற்பதினைக் குறித்திருத்தலான் (கழகப் பதிப்பு, ப.52), முன்னதை அடுத்துப் பின்னது பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதலாம். பதினெண்கீழ்க்கணக்கு ஏடுகளிலும் இன்னா நாற்பதன் பின்னரே இனியவை நாற்பது எழுதப்பட்டுள்ளது. இனிமை பயப்பன இவை இவை என்று ஒவ்வொரு பாடலிலும் நந்நான்கு கருத்துக்கள் அமைந்த பாடல்கள் நான்காகும் (1,3,4,5). எஞ்சியவை மும்மூன்று கருத்துக்களைச் சுட்டுவன. இந்நூலின் ஆசிரியர் **பூதஞ்சேந்தனார்** என்னும் புலவராவர். சேந்தனார் இவரின் இயற்பெயர். பூதன் இவர் தந்தையின் பெயர். மதுரையில் தமிழாசிரியராகத் திகழ்ந்த பூதனின் மகனார் சேந்தனாரும் சிறந்த தமிழறிஞராக விளங்கியவர். வீரசோழிய உரையில் **இனியநாற்பது** என்றே இவர்தம் நூல் வழங்கப்பெற்றது (கழகப்பதிப்பு, ப.52)

இனியவை நாற்பதின் கடவுள் வாழ்த்துப் பாடலில் பூதஞ்சேந்தனார் சிவன், திருமால், நான்முகன் ஆகிய மூவரையும் வழிபடுதல் இனிது என்று இயம்புதலான், இப்புலவர் மும்மூர்த்தி வழிபாடு சிறந்திருந்த முற்காலப் பல்லவர் காலத்தில் (கி.பி.5 ஆம் நூற்றாண்டில்) வாழ்ந்தவர் எனலாம். குமாரசம்பவத்தில் மகாகவி காளிதாசரும் மும்மூர்த்தியைக் குறித்துள்ளார். இவர்காலம் கி.பி.4 அல்லது 5ஆம் நூற்றாண்டென்பர் வடமொழி இலக்கிய வரலாற்றாசிரியர். கூடக்குறைய இக்காலப் பகுதியில் வாழ்ந்த தண்டமிழாசான் சாத்தனாரும் மும்மூர்த்திகளை முதல்வராகக்கொண்டு போற்றிய மூவகைச் சமயத்தாரை மணிமேகலையில் குறித்துள்ளார் [XXVII 87-99]. சர்சார்லஸ் இலியட் என்பாரும் கி.பி.5,6ஆம் நூற்றாண்டில் மும்மூர்த்தி வழிபாடு பரவலாக விளங்கியதைச் சுட்டியுள்ளார். இந்நூலில் உள்ள பாடல்கள் இன்னிசை வெண்பாக்கள்; எட்டாம் பாடல் மட்டும் பஃறொடை வெண்பாகும்.

அருங்கருத்துக்கள்

பிச்சை புகினும் கற்றல் இனியது. நற்சபையில் மறதி வரும்பொழுது தாம் கற்ற கல்வி நினைவில் வந்து உதவுதல் இனியது. முத்துப் போன்ற முறுவலுடைய மங்கையரின் சொற்கள் இனியவை. மேலோர்களின் நட்பு தெளியவும் இனியது:

"பிச்சைபுக்(கு) ஆயினும் கற்றல் மிகவினிதே;
நற்சவையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்இனிதே;
முத்தேர் முறுவலார் சொல்லினிது; ஆங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு" (1).

யானைகளை உடைய படையைக் காண்பது மிகவும் இனியது. ஊனைத்தின்று உடம்பினை வளர்க்காமை முன் இனிது. ஆற்று நீர் அடைகரையில் உள்ள ஊர் இனியது. மானம் மிக்கவரின் கொள்கை இனியது (4).

குழந்தை நோயின்றி வளர்தல் இனியது. அவைக்கு அஞ்சாதவனின் கல்வி இனியது. மயக்கமற்ற மாண்புடையாரின் செல்வமும் இனியது (12). பிறன் மனைவியை நோக்காமை பெருமையும் இனிமையும் தருவது. வறண்ட பயிருக்கு மழை இனியது. அரசரின் மாளிகையின் முன் யானையின் பிளிறல் கேட்டல் இனியது(15).

கற்றவர்க்கு முன்பு தான் கற்ற கல்வியைப் புலப்படுத்துதல் இனிது. அறிவு, பண்பு முதலியன மிக்க பெரியாரைச் சேர்ந்திருத்தல் இனிது. சிறிதுகூட மற்றவரிடம் இரவாது, தான் பிறர்க்கு வழங்குவது மிகவும் இனிது (16).

"கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே;
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது" (16)

ஊர்மன்றத்தில் வீற்றிருக்கும் மூத்தோர் வாழும் ஊர் இனியது. ஆகமத்தின்படி வாழும் தவத்தோரின் மாண்பு இனிது. குறையாத சிறப்புடைய தாய்தந்தையர் ஆகிய இரு முதுகுரவரையும் காலையில் வழிபட்டெழுதல் இனியது (18).

இளமையினை நிலைத்தது என்று எண்ணிவிடாமல் முதுமைப் பருவமாக எண்ணி விரைந்து கடமைகளை ஆற்றி வருதல் இனியது. உறவினரிடம் அச்சமின்மையினைக் கேட்டல் இனியது. மகளிரை விடம் என்று உணர்தல் இனிது (37). இப்பாடலில் பெண்களை **நஞ்சாக எண்ணும் போக்கு இனியது என்று சுட்டப்பட்டிருத்தல் சங்க கால மரபன்று. புறச்சமயத்தாரின் போதனையால் தமிழகத்திற்குரிய நெறியினை மேற்கொண்டவரும் இங்ஙனம் குறைவாகக் கூறுதல் காலத்தின் கோலத்தையே காட்டுகின்றது!**

பத்துப்பொருள் கொடுத்தாயினும் தன்னூரில் இருந்து வாழ்தல் இனியது. விதைக்குரிய கூலங்களைக் குற்றிச் சமைத்துண்ணாமை

மிகவும் இனியது. பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய பனுவல்களைக் கற்பதைவிட இனியது இல்லை (40).

இங்ஙனம் வாழ்வியலுக்கு உகந்த நல்லபல ஒழுக்கங்களையும், நெறிகளையும் அறங்களையும் குறிக்கோள்களையும் கீழ்க்கணக்கில் உள்ள அறநூல்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. அவற்றுள் அறிவியல் ஊழியில் வாழும் இக்காலத்து மக்களுக்கு ஒரு சில ஏலாதனவாக இருக்கலாம். மிகப் பல தகவுகளும் (Values) அறங்களும் என்றும் மன்பதைக்குப் பெரிதும் பயன்தருவன.

இதுகாறும் எடுத்தியம்பிய ஒன்பது அற நூல்களில் **நாலடியார், பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன நான்கும் சமணச் சான்றோரால் பாடப்பெற்றவை** என்பதும், **எஞ்சிய ஐந்தும் தமிழகத்திற்குரிய இறைநெறியாளரால் இயற்றப்பட்டவை** என்பதும் புலனாகும். பாடல் எண்ணிக்கை அளவில் பார்க்குமிடத்து நானூறு பாக்களைக் கொண்டவை நாலடியாரும் பழமொழியும் ஆகிய இரண்டு பனுவல்கள் ஆகும். நூறு பாடல்களைப் பெற்றவை நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை என்ற நான்கு நூல்கள். எண்பது பாடல்களைக் கொண்ட ஒரே நூல் ஏலாதி. நாற்பது பாடல்களைக்கொண்ட நூல்கள் இன்னாநாற்பது, இனியவை நாற்பது என்ற இரண்டுமே. இவற்றைப் பாடிய புலவர்கள் பலரும் மதுரையில் திகழ்ந்த வச்சிரநந்தியின் தமிழ்ச்சங்கத்தின் சார்புடையராகத் தோன்றுகின்றனர். தாம் பின்பற்றிய நெறிகள் வெவ்வேறாயினும் அறம் கூறும் வகையில் காலமாற்றத்தைக் கருத்திற்கொண்டு மக்களின் மேம்பாட்டுக்குரிய பல்வகை நெறிகளையும் பார்த்துக் கூறியுள்ளனர். சமணர்க்கே உரியனவும் சுமிருத்திக்கே உரியனவும் ஆகிய தருமங்கள் பெரும்பான்மையோரால் பின்பற்றற்கு உரியவை அல்லவாயினும், உரியவர்க்குப் போய்ச் சேர்தல் நோக்கத்தால் உரைக்கப்பெற்றன என்று எண்ணுதல் சாலும். **இந்நூல்கள் யாவற்றுக்கும் மூலமாய் முதலாய் மிளிர்வது திருக்குறளாகிய தமிழ் மறையே ஆகும்.** ஒன்பது அறநூல்களில் நாலடியார் மட்டும் பலர் பாடிய பாடல்களின் தொகை நூலாகும். ஏனையவை தனித் தனி புலவர் யாத்த நூல்கள். இவற்றைப் பாடிய பெருமக்கள் புலமை வளமும் மனித நேயமும் யாப்புத்திறமும் உணர்த்தும் பாங்கும் படைத்தவர்கள். இவர்கள் கி.பி.450 - கி.பி.650 என்ற காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்பது தெளியத்தக்கது. இவர்கள் இயற்றிய நூல்கள் பிற்காலத்தில் வாழ்ந்த அவ்வையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், அதிவீரராமர், சதக ஆசிரியர்கள் பலரும் அறநூல்கள் எழுதுவதற்கு முன்மாதிரியாக அமைந்தன எனலாம்.

இனி, இக்காலத்தில் எழுந்த காப்பியங்களைப் பற்றிச் சுருக்க விளக்கமாகக் காண்போம்.

III காப்பியங்கள்

வாழ்வியலின் ஒவ்வொரு கூறினையும் காட்சியையும், நாடக வழக்கு, உலகியல் வழக்கு, புலனெறிவழக்கு என்ற மூவகை மரபுகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்ற தனிப்பாடல்களின் தொகுதியாகவே சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. எட்டுத் தொகையில் உள்ள பாக்களைவிட, பத்துப்பாட்டில் உள்ளவை விரிவு பெற்றுப் பின்னர்த் தோன்றுவதற்கிருந்த தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பியங்களின் எழுச்சிக்குவித்தாகவும் வேராகவும் விளங்கின. தொல்காப்பியர் சுட்டும் எண்வகை வனப்புக்களில் தொன்மையும் தோலும் பழைய காப்பிய வகைகளைக் குறிக்கும் என்று கருதுவாரும் உளர். எனினும், காப்பிய இலக்கணம் முழுதும் பொருந்தக் கற்பனை வளத்துடன் பாடப்பெறும் இலக்கிய வகை கி.பி.3ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே வளரத் தொடங்கியது எனலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நிலக்காப்பியங்களின் எழுச்சிக்குப்பிறகு தமிழில் காப்பியங்கள் பல புனையப்பெற்றன. நம் காலப் பகுதிக்குரியவை (கி.பி.501 - கி.பி.900) **தகடூர் யாத்திரை, பிம்பிசாரக்கதை, பெருங்கதை, பாரதவெண்பா** என்ற நான்குமே சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. மணிமேகலையும் இக்காலப் பகுதிக்குரியது என்பது நம் ஆய்வு நூலொன்றில் விரிவாக விளக்கப் பெற்றிருப்பினும், நமக்கு ஒதுக்கப்பெற்றவை பற்றிய சிந்தனைகளையே இங்குச் சொல்லுதல் முறையாகும். இக்காப்பியங்களின் அமைப்பினையும் வனப்பினையும் ஆராய்தற்கு முன்னர், காப்பியங்களைப் பற்றிப் பொதுவான சில வரைவிலக்கணங்களைக் கூறுதல் சாலும்.

மேலைத்திறனாய்வாளர் கருத்துக்கள்

வீரயுகத்தில் வாழ்ந்த ஆற்றல்மிக்க அரசர்கள், மறவர்கள் ஆற்றிய தீரச்செயல்கள், அருஞ்சாதனைகள், மானம், காதல், பெரும்புகழ் முதலியவற்றைப் பாணர்கள் தலைமுறை தலைமுறையாகப் பாடி வந்த பாடல்களின் வளர்நிலையே பின்னர்க் காப்பிய வடிவம் பெறுவதற்கு அடிப்படை ஆயிற்று. அரசவைப் புகழ்ச்சியில் அரும்பிப் பாடுவோரின் உடைமையாகிப் பிரபுக்கள் என்ற எல்லையினைக் கடந்து உழவர்கள், தொழிலாளிகள் என்போரின் அயர்வைப் போக்கும் மாலைப் பாடல்களாக வீரயுகப் பாடல்கள் விளங்கின. குடிசைகள், பொழுது போக்கிடங்கள் முதலிய எளிய இடங்களையும் எட்டிய இப்பாணர் (bards) பாடல்கள் மீண்டும் புலவர்களால் (poets) அரசவைக்குக் கொண்டு செல்லப்பெற்றுப் புதுப்பொலிவும் செயற்கைப் பண்பாடும் மெருகும் ஆடம்பரமும் அலங்காரமும் விரிவும் பெற்று, வண்ணமும்

வடிவமும் வாய்ந்து காவிய உருக்கொண்டன. துணுக்காகச் சிதறிக்கிடந்த மூலப் பொருள்களைத் திரட்டியெடுத்துத் தொடர் கதைக் கூற்றாகக் [- narrative] கவிஞர்கள் வளர்த்தனர். எனினும், காப்பியம் என்பது வீரயுகப்பாடல்களை ஒருங்கு சேர்த்து, விடுபாடுகளை நிரப்பித் தொடர்ந்து வரும் கதைக்கூற்றாக மட்டும் அமைந்து விடவில்லை. பழைய பொருள்களின் மறு படைப்பாகவும் அஃது அமையாது. அதனைப் பழம்பொருளை மையமாகக்கொண்ட முற்றிலும் புதுப் படைப்பாகவே கருதுதல்வேண்டும். காப்பியக் கவிஞன் தனக்குப்பின் ஓர் அடிக்கருத்து மரபினையும் நடை மரபினையும் பெற்றுள்ளான். வியத்தகு செயல்கள், வீரதீர நிகழ்ச்சிகள், உயர்தகவுகள், குறிக்கோள்கள் என்பனவற்றைக் கலைக்கட்டுக் கோப்பின்கண் அடங்கி வரும்வண்ணம் பெரிய திட்ட அமைப்பினை [grand design] முன்வைத்துக் காப்பியத்தினைக் கவிஞன் புனைகிறான். ஒருகுறிப்பிட்ட மனித அனுபவத்தில் மனிதனின் பொது விதியின் [destiny] குறிக்கத்தக்க தொரு குறியீட்டினைக் காணும் திறம் கவிஞனுக்கு உண்டு. சமுதாயத்தின் கலைத்தேவைகளை நிரப்பும் பாங்கில் காப்பியக்கவிதை வடிவமைக்கப் பட்டது என்பர் ஆபர்குரோம்பி.

குறைபாடில்லாத குணநலன்கள் நிரம்பிய தேசியத்தலைவனை (National Hero) மையமாகக் கொண்டு ஒருகுறிப்பிட்ட காலக்கட்டத்தின் மனித நாகரிக வரலாற்றினின்றும் பெற்ற அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டு, மனிதனின் முடிவில்லாப் பிரச்சினைகளையும் வீரதீரச் சாகசங்களையும் விரிவாக ஆராயும் பாங்கில் பீடுமிக்க பெருமித நடையில் புனையப் பெறும் நீண்ட கதைக்கூற்றினையே பெருங்காப்பியம் என்பர் ["An epic is a long narrative poem dealing with heroic achievements and eternal human problems including in its gamut experiences from a whole epoch of man's history of civilization, centering around a national hero of immaculate virtues, in a style marked with seriousness and dignity".] பல துறை அறிவு வாய்ந்த புலவர்தான் ஒரு பெருங்காப்பியத்தைப் படைத்தல் முடியும் என்பது திறனாய்வாளர் ஒருவரின் கருத்து [-An epic poem must be written by an erudite scholar]. சி.எம்.பெளரா போன்ற திறனாய்வாளர்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட ஹோமரின் இலியட், இலத்தீனில் எழுதப்பட்ட வர்ஜிலின் ஈனியட், இத்தாலி மொழியில் தாந்தே எழுதிய டிவைன் காமடி, ஆங்கிலத்தில் மில்டன் பாடிய இழந்த சுவர்க்கம் [Paradise Lost] முதலிய காப்பியங்களை விரிவாக ஆராய்ந்து அவற்றின் அமைப்பியல் பண்புகளை விளக்கியுள்ளனர்.

இந்தியச்சிந்தனை

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி உள்ளிட்ட பழைய தமிழ்க்காப்பியங்களுக்கு மேல்வரிச்சட்டமாக அமைந்த இலக்கண நூல் இன்னதென்று அறியக்கூடவில்லை. ஒவ்வொரு

காப்பியமும் ஒவ்வொரு உத்திவகையில் உருக்கொண்டிருத்தல் உற்று நோக்கத்தக்கது. இதனால் படைப்பாளனின் தனித்திறனும் ஆக்க ஆற்றலும் வெளிப்படுதல் காணலாம். தமிழில் காப்பிய இலக்கணம் பேசும் தண்டியலங்காரத்தின் முதல் நூலாக வடமொழியில் தண்டி ஆசிரியர் எழுதிய **காவ்யாதர்சம்** [Mirror of Poetry] விளங்குகின்றது. இவர் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சி மாநகரில் இராசசிம்பல்லவனின் அவைக்களப் புலவராக விளங்கியவர். இவர் தமக்கு முற்பட்ட வடமொழிக் காவியங்கள், தமிழ்க் காப்பியங்கள் ஆகியவற்றைப் பயின்று காப்பிய இலக்கணத்தை வரையறுத்திருத்தல் வேண்டும். **தொகைச் செய்யுளுக்கு இவர் வகுத்துள்ள இலக்கணத்திற்கு தருணவாசஸ்பதி எழுதியுள்ள உரையில் சங்கத் தொகைச் செய்யுட்கள் எடுத்துக்காட்டாகச் சுட்டப்பட்டிருத்தல் அறியத்தக்கது.** எனவே, தமிழ், வடமொழி ஆகிய அணி இலக்கணங்களில் கூறப்படும் காப்பிய இலக்கணம் பற்றிய கருத்துக்களை **இந்தியச்சிந்தனை** [Pan-Indian] என்று இயம்புதல் சாலும்.

பெருங்காப்பியம் பாயிரப் பகுதியில் வாழ்த்து, வணக்கம், வருபொருள் (கதைச்சுருக்கம்) உணர்த்துதல் வேண்டும். தன்னிகரில்லாத தலைவனைப் பற்றியதாகப் பாடப்படுதல்வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகை உறுதிப்பொருள்களையும் பயில்வார் பயன் கொள்ளும் பாங்கில் கதைப்போக்கில் கூறிச் செல்லுதல் வேண்டும். காப்பியத் தலைவனின் தனி வாழ்க்கையுடன் தொடர்புடைய திருமணம், தலைவியுடன் களித்தல், பொழில் நுகர்ச்சி, புனலாடல், மக்கட்பேறு என்ற கூறுகளை விரித்துரைத்தல் வேண்டும். அரசியல் வாழ்க்கையுடன் தொடர்புடைய முடிசூடுதல், அமைச்சியல், தூது, படைச்செலவு, வெற்றி முதலியவற்றையும் விளக்குதல் வேண்டும்.

பயில்வார்க்குச்சலிப்புத் தோன்றா வகையில் கதைகளின் ஓட்டத்திற்கு இடையிடையே மலை, கடல், நாடு, வளநகர், பருவம், ஞாயிறு, திங்கள் முதலிய பல்வகை இயற்கைக் காட்சிகளையும்எழிலுறச் சித்திரித்தல்வேண்டும். ஒன்பான் சுவையும் மெய்ப்பாடும் பொருந்தியிருத்தல் வேண்டும். படிப்பவர்க்கு அரும்பெரும் நீதியைப் போதிப்பதாகிய **பாவிகம்** என்ற அணியும் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய **பொருளணிகளும்** சிலேடை, மடக்கு முதலிய **சொல்லணிகளும்** கற்பனை வளத்துடன் கலந்து பொலிதல் வேண்டும். ஐவகைச் சந்தியும் அமைதல் கூடும். சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற உட்பகுப்புடையதாகக் காவியம் அமைதல் வேண்டும். இத்தகைய பிரமாண்டமான இலக்கியத்தைப் படைப்பவர் பலகலைகளிலும் துறைகளிலும் வல்லவராதல் வேண்டும். அழகுணர்வும் கற்பனைப் பொலிவும் உயிர்ப்பும் பொருந்தப் புனையும் திறம் கொண்டவரே காப்பியக் கவிஞர்.

அடியார்க்கு நல்லாரின் காப்பியக் கோட்பாடு

காப்பியத்தினைத் தொடர்நிலைச் செய்யுள் எனக் கூறுதல் தமிழ்மரபு எனலாம். சிலப்பதிகாரத்தினை ஆராய்ந்த அடியார்க்கு நல்லார் அதில் பொதிந்துள்ள காப்பியத் தன்மைகளைக் கருத்திற்கொண்டு ஓர் இலக்கணம் கூறியுள்ளார். அவர் கருத்தினைச் சுருக்கமாகக் காண்போம்.

கதை தழுவிவருவது காப்பியம். எனவே, காப்பியத்திற்கு மையமாக விளங்குவது வலிவுள்ள கதை நிகழ்ச்சி எனலாம். "குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்து வல்லென்ற சொல்லானும் அறம் பொருள் இன்பம் பயப்ப, வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேல் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுகவென்றமையான், இத்தொடர்நிலைச் செய்யுள் அங்ஙனம் கூறிய தொடர்நிலை என உணர்க" என்பது அவர்தம் காப்பியக்கோட்பாடு எனலாம். தொல்காப்பியர் சுட்டும் தோல் என்ற வனப்பினை அடிப்படையாகக் கொண்டு இங்ஙனம் எழுதியுள்ளார். எனவே, காப்பியத்தின் சொல்லாட்சி (Diction), உறுதிப்பொருள் (Objectives of life), கதை நிகழ்ச்சி, யாப்பு என்பன பற்றிய தெளிவான கருத்தினை அவர் உணர்த்தியுள்ளார். தொல்காப்பியர் செய்யுளியலில் கூறியுள்ள எண்வகை வனப்புக்களுமே தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பியத்தில் இடம்பெறுதல் வேண்டும் என்றும் கருதியுள்ளார்: "வனப்பென்பது பெரும்பான்மையும் பலவுறுப்பும் திரண்ட வழிப்பெறுவதோர் அழகாதலின், பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலைச் செய்யுட்கு இவ்வெட்டும் அலங்காரம் ஆயின; ஆகவே இக்காப்பியத்திற்கும் தோல் என்பது ஒருசொல் அலங்காரமாகவே உணர்க"(ப.8-9) என்று தெளிவுறுத்தினார். செலுத்து முறைத்திறனாய்வின் (Inductive criticism) அடிப்படையில் அடியார்க்கு நல்லாரின் காப்பியக் கோட்பாடு அமைந்துள்ளது எனலாம். இவர் தரும் விளக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கும் பாங்கில் நச்சினார்க்கினியரும் சீவக சிந்தாமணியின் முதற்பாடல் உரையின் அவதாரிகையில் காப்பியத்திற்கு விளக்கம் வரைந்திருத்தல் சுட்டத்தக்கது. இவ்வுரையாசிரியர்களைத் தமிழ்நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் என்று மதித்தல் சாலும்.

இங்ஙனம் வரையறுக்கப் பெற்ற காப்பிய இலக்கணக் கூறுகள் சில குறைந்தும் கூடியும் வேறுபட்டும் இப்போதுள்ள படைப்புக்களில் காணப்பெறுவதால் இலக்கணப் புலவரின் பார்வையில் படாதகூறுகளும் காப்பியங்களில் உள்ளன என்றும், அவர் வரையறுத்த விதியைக் கடந்தும் புதுமை நாட்டத்துடன் காப்பியம் படைக்க முற்பட்ட கவிஞரும் இருந்தனர் என்றும் எண்ணுதல் கூடும்.

இப்பின்னணியில், நம் காலப்பகுதிக்கு உரிய நான்கு காப்பியங்களில் முதற்கண் **தகடூர் யாத்திரை** என்ற நெடுந்தொடர்ச் செய்யுளின் நிலையினைக் காண்போம்.

1. தகடூர் யாத்திரை

சங்க காலத்தில் சேரநாட்டினை ஆட்சி செய்த பெருவேந்தருள் பெருஞ்சேரலிரும்பொறை ஒருவன். பதிற்றுப்பத்தின் எட்டாம்பத்தில் இவன் சிறப்பினையும் ஆற்றலையும் கொடைத்திறத்தையும் அருஞ்செயல்களையும் அரிசில்கிழார் என்னும் புலவர் பெருமான் பாடியுள்ளார். புலவர்களைப் போற்றும் புரவலன். தன்னைப் பாடிய அரிசில்கிழார்க்கு ஒன்பது நூறாயிரம் காணம் பொற்காசும் அரியாசனமும் வழங்கினான். ஆயின் பொற்குவையை மட்டும் புலவர் ஏற்றுக்கொண்டு அவனை அரசாளச் செய்து தான் அமைச்சராக வீற்றிருந்து அரசியலில் உதவிய செய்தியைப் பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தின் பதிகம் உணர்த்துகின்றது.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி. அசோகரின் கல்வெட்டில் சதியபுத்திரர் என்று சுட்டப்பெறுபவர் அதியமானின் முன்னோர் ஆவர். சதியர் என்ற சொல் அதியர் ஆகும்; சமணர், சந்தி, சமர் என்பன முறையே அமணர், அந்தி, அமர் என்றாதல் போல. அதியமான் என்ற பெயரின் பின்னொட்டாகிய மான் என்பதும் பெருமகன், கோமகன் என்பவற்றின் மாற்று வடிவமாகிய (Alternant forms) பெருமான், கோமான் என்ற பெயர்களில் வரும் மான் என்பதும் மகன் என்ற பொருள் தருவது. மகன் என்பது ஆற்றல்மிக்க மனிதன் என்ற பொருள் உடையது. எனின், வடமொழிவாணர் மகன் - புத்திரன் என்று நேர்பொருள் கொண்டதன் விளைவாக, **அதியமான் என்ற பெயர் சதியபுத்திரன் என்று அசோகர் காலத்தில் வடநாட்டவரால் சுட்டப்பெற்றது.** மூவேந்தர்க்கு ஒப்பாக விளங்கிய அதியர் மரபில் வந்த அதியமான் அரசர் எழுவரை வென்று வாகை சூடிய சிறப்பினைப் புறநானூறு போற்றுகின்றது. மலையமானுக்குரிய கோவலூரையும் இவன் வென்ற திறத்தைப் பரணர் பாராட்டியுள்ள பாங்கினை இவன் அவைக்களப் புலவராகிய அவ்வைப் பிராட்டி குறித்துள்ளார். **இவன் முன்னோர் கரும்பினைத் தமிழ்நாட்டிற்கு அறிமுகம் செய்தவர்கள். நீண்ட காலம் வாழ்வளிக்கும் அரிய நெல்லிக்கனியை அவ்வைக்கு அளித்த பெருங் கொடைவள்ளல்.**

அதியமான் பனைமாலை சூடியவன்; சேரமானின் உறவினன். ஆதலின், அரசியல் காரணமாக இவனுடன் பெருஞ்சேரலிரும்பொறை போர் தொடங்கவேண்டிய சூழ்நிலை உருவாகியிருத்தல்வேண்டும்.

இச்சேரனின் இளவல், நாட்டுரிமை வேண்டித் தன்னொடு மாறுபட்டுத் தகடூர் தலைவன் அதியமானின் உதவியை நாடியிருத்தல்வேண்டும் என்பதும் அவனுக்குத் துணையாக நின்ற அதியனையும் மன்னர் பிறரையும் தகடூரில் சேரன் வென்றனன் என்பதும் தகடூர் யாத்திரைக்குரிய சில பாடல்களினால் குறிப்பாக உணரமுடிகின்றது. எனவே, பாரதப் போரினைப் போலவே தகடூர் போரும் தாயத்தாரிடையே நிகழ்ந்தது எனலாம்.

சங்ககால வீரமரபுக்கு ஏற்பத் தகடூரை நோக்கிச் சேரவேந்தன் நடத்திய படைச்செலவு “தகடூர் யாத்திரை” என்னும் தொடர்நிலைச் செய்யுளுக்கு மையப்பொருளாக அமைந்தது. சங்க இலக்கியத்தில் குறிப்பாகப் பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய வரலாற்றுக் குறிப்புக்களுடைய பாக்களை ஆதாரமாகக் கொண்டு “தகடூர் யாத்திரை” என்ற காவியம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இப்போரில் பெருஞ்சேரல் இரும்பொறையே வெற்றிபெற்றான் என்ற வரைலாற்றுண்மையினை,

“வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பில் தகடூர் நூறி
பேஎம் அமன்ற பிறழநோக் கியவர்
ஓடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலைத் தந்நாட்டு
யாடு பரந்தன்ன மாவின்
ஆபரந் தன்ன யானையோன் குன்றே” (78:8-14)

எனவரும் பதிற்றுப்பத்துப் பாடற்பகுதி புலப்படுத்துகின்றது. இப்பத்தின் பதிகத்தில்,

“கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேல் தானை அதிக மானோ(டு)
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்(டு)
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை”

என்று தகடூரை அழித்து அதிகமானையும் அவனுக்கு உதவியாக வந்த சோழ பாண்டியராகிய இருபெருவேந்தையும் வென்று வீறுபெற்ற பெருஞ்சேரல் இரும்பொறையின் மாட்சி போற்றப் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் கூறப்படும் தும்பைத் திணைக்குரிய நோனார்

உட்கும் தானைநிலை, யானைநிலை, குதிரை நிலைகளை இளம்பூரணர் புறநானூற்றுப் பாடல்களைக் கொண்டு விளக்கம் செய்தனர். எனின், நச்சினார்க்கினியர்,

> "இவை (யானைநிலை முதலியன) தனித்து வாராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும். அவை தகடூர் யாத்திரை யினும் பாரதத்தினும் காண்க."

என்று எழுதியிருத்தலின் அவர் காலத்தில் தகடூர் யாத்திரை, பாரதம் ஆகிய தொடர்நிலைச் செய்யுள்களாகிய காப்பியங்கள் கல்வியாளரிடை வழங்கினவாதல் வேண்டும். மேலும்,

> "ஒருவன் மேற் சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன்மதிற் புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வழித்தகடூரிடை அதிகமான் இருந்ததாம்" (தொல்.புறத்.நூ.7,)

என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளதால் தலையாலங்கானத்துச் செருவைப்போல் தகடூரில் நடந்த போர் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது எனலாம். மேலும், "பாட்டிடை வைத்த குறிப்பினானும்" (தொல். பொருள்.485) என்ற நூற்பா உரையில், "பாட்டுவருவது சிறுபான்மை யாகலின்; அவை தகடூர் யாத்திரை போல்வன" என்று பேராசிரியர் குறித்துள்ளதால், இப்பனுவல் சிறுபான்மை பாட்டும் பெரும்பான்மை உரையும் விரவியாக்கப்பட்டது என்பது போதரும். பாரதவெண்பாவும் உரையிடையிட்டபாட்டுடைச் செய்யுள் ஆகும். பிறபாடை தழுவிவந்த பகுதிகளும் இந்நூலில் இருந்தன என்பது இதே நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினால் அறியலாம்.

எனவே, தகடூர் யாத்திரை ஒரு வரலாற்றுக்காப்பியம் [Historical Narrative] ஆகும். தொன்மை என்னும் செய்யுள் வனப்பிற்குத் தகடூர் யாத்திரை என்னும் தொடர்நிலைச் செய்யுளைப் பேராசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். அன்றியும் பாரதத்தையும் உதாரணமாகக் குறித்துள்ளார். இவ்விரு காப்பியங்களும் பழைய வரலாற்றினை மையமாகக் கொண்டு உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்களாக யாக்கப் பெற்றவை என்பது புலனாகும்.

யாத்திரை என்ற சொல் சங்கப்பாக்களிலும் பயிலப்பெற்றது. இச்சொல் இவ்வடிவத்தில் பரிபாடலிலும் (19:18), ஆத்திரை என்ற வடிவத்தில் குறுந்தொகையிலும் (293:1) வந்துள்ளது. மொழி முதலில் இடையண்ண ஒலி விடுபடுதல் (Loss of Initial palatal) தென்திராவிடத்தின் சிறப்பியல்பு என்பர் திராவிட ஒப்பியல் அறிஞர் T. பர்ரோ.

தகடூர் யாத்திரையினை ஒருவர் பாடினரா? பலர் பாடிய பாடல்களின் தொகையா? என்பது தனியே ஆராய்தற்குரியது. எனினும், தொல்காப்பியம் புறத்திணையியல் (நூ.12), "முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்" என்ற மறத்துறையினை விளக்கும் நச்சினார்க்கினியர், 'கலையெனப் பாய்ந்த மாவும்' எனவரும் தகடூர் யாத்திரைக்குரிய பாடலை எடுத்துக்காட்டி, "இது சேரமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித்தன்படைபட்ட தன்மை கூறக் கேட்டோற்கு அவர் கூறியது" என்று உரைப்பது இருபெருங்கவிஞரும் போர்க்களத்தில் ஒருங்கிருந்து பாடினர் என்ற கருத்தினைப் புலப்படுத்தும். மேலும், 'மொய்வேற்கையர்' என்ற தகடூர் யாத்திரைப் பாடலை எடுத்துக்காட்டி, ". . . . இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறிற்று" என்று அவ்வுரையாசிரியரே அதே நூற்பாவின் உரையில் குறிப்பதால் இக்காப்பியம் புலவர் பலர் பாடிய பாக்களின் தொகுப்பாகக் கருதவேண்டியுள்ளது. இந்நூலிற்குரிய 44 செய்யுட்களைப் புறத்திரட்டு என்ற தொகை நூலில் காணலாம். நச்சினார்க்கினியர் உரையிலிருந்து மூன்று பாக்களும் தக்கயாகப்பரணி உரையிலிருந்து ஒரு பாடலும் தகடூர் யாத்திரைக்கு உரியனவாக அமைந்துள்ளன. இவை ஆசிரியப்பா, வெண்பா என்ற இருவகை யாப்பில் புனையப்பெற்றவை. போர்க்களக் காட்சிகளை நேர்முக வருணனை செய்யும் பாடல்கள் கற்பனை வளம் மிக்கவை. சங்க காலத்தில் நிகழ்ந்த இப்போரில், அதிகமானால் சிறப்புச்செய்யப் பெற்ற பெரும்பாக்கன் என்ற வீரனும், பெருஞ்சேரலிரும்பொறையின் படைமறவருள் ஒருவனாகிய நெடுங்கேரளன் என்ற வீரனும் தகடூர்யாத்திரையில் போற்றப்பெற்றுள்ளனர். இவர்கள் பிற்காலத்துக் கற்பனை மாந்தர் எனச் சிலர் எண்ணுகின்றனர். எனினும், அசோக மாமன்னனின் கல்வெட்டில் 'கேரளன்' என்ற சொல் இடம்பெறுவதால் கி.மு.3ஆம் நூற்றாண்டிலேயே இப்பெயர் தமிழகத்தில் வழங்கியது என்று தெளியலாம்.

புறத்திரட்டில் அறத்துப்பாலில் அவையடக்கம் (20), நீத்தார் பெருமை (19), ஈகை (227) என்ற தலைப்புக்களின் கீழ் இந்நூலுக்குரிய சில பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பாடல்கள் யாவும் பொருட்பாலில் தூது, நாடு, புல்லறிவாண்மை, நிரைகோடல், நிரைமீட்சி, பகைவயிற்சேறல், பாசறை, வஞ்சினம், படைச்செருக்கு, எயில்காத்தல், தானைமறம், குதிரைமறம், மூதில்மறம், இரங்கல் என்ற தலைப்புக்களின் கீழ்த் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களிடையே ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைக் காணமுடியுமெனினும், ஒரு முழு இலக்கியத்தைப் படிக்கின்ற அனுபவம் விளைவதில்லை. புறத்திரட்டு கி.பி.14, 15ஆம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பர். இத்தொகுப்பில் இராமாயணம், பாரதம், குண்டலகேசி, சீவக சிந்தாமணி,

சூளாமணி முதலிய காப்பியங்களுக்குரிய பாடல்களும் ஏற்ற இடங்களில் தொகுக்கப்பட்டிருத்தலின், தகடூர் யாத்திரையும் இவ்வகை இலக்கியப் படைப்பாகக் கொள்ளுதற்கு உரியது. இனி, இந்நூலுக்குரிய ஒரு சில பாடல்களின் சிறப்பினை இங்கு நோக்குவோம்.

தகடூர் யாத்திரை - சில பாடற்சிறப்பு

ஈகையினை விளக்கும் ஒருபாடல்; இது பலவிகற்பத்தால் வந்த பஃறொடைவெண்பா:

நூற்றுவரில் தோன்றும் தறுகண்ணர்; ஆயிரவர்
ஆற்றுளித் தொக்க அவையகத்து - மாற்றமொன்(று)
ஆற்றக் கொடுக்கும் மகன்தோன்றும்; தேற்றப்
பரப்புநீர் வையகம் தேரினும் இல்லை
இரப்பாரை எள்ளா மகன்.

தறுகண்மை மிக்கவர் நூறுபேரில் ஒருவரே; ஆயிரவர் கூடிய அவையில் கேட்ட வினாக்களுக்கு ஏற்ற விடை பகர்பவர் ஒருவரே; கடல் சூழ்ந்த உலகெங்கும் தேடினும் இரப்பவர்க்கு எள்ளாது வழங்கும் வள்ளல் இல்லை என்றே சொல்லலாம். வீரத்தையும், கல்வித்திறத்தையும், கொடையினையும் குறித்த இப்பாடல் தகடூர் யாத்திரையில் எந்தச் சூழ்நிலையில் இடம் பெற்றது என்பது அறிதற்கு இல்லை. ஒருவேளை, பாணர், புலவர் போன்றோர்க்குப் போதிய பரிசில் வழங்காத அல்லது வழங்கக் காலம் தாழ்த்த அதியமானையோ, பெருஞ்சேரலிரும்பொறையினையோ எண்ணி ஒரு புலவர் பாடியதாகக் கொள்ளலாம். செஞ்சொற்களால் இயன்ற இப்பாடலின் அமைப்பும் பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள வெண்பாவின் அமைப்பும் ஒத்தவை எனலாம்.

தூது என்ற தலைப்பில் பின்வரும் இன்னிசை வெண்பா அமைந்துள்ளது.

கால வெகுளிப் பொறைய! கேள்: நும்பியைச்
சாலும் துணையும் கழறிச் சிறியதோர்
கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா; அது கண்டாய்
நூல்கண்டார் கண்ட நெறி. (புறத்.776)

"காலனைப் போல் சீற்றம் கொள்ளும் இரும்பொறையே! யான் கூறுவதைக் கேட்க: நின் இளவலைப்போதிய அளவில் இடித்துக் கூறிச் சிறியதோர் கோலைக்கொண்டு தாக்கும் பொருட்டு மேற் செல்லுதல் வேண்டா. அங்ஙனம் செல்லாமல் பொறுத்திருப்பதுதான் அறநூல் கண்டவர் காட்டும் நெறி ஆகும்" என்பது பாடலின் பொழிப்பு. சிறந்த அறவுரையாக

அமையும் இப்பாடலில், இரும்பொறை தன் தம்பியின் மேல் சினந்து படையெடுத்துச் செல்லுதலை முன்னறிந்த அவைக்களப் புலவர் ஒருவர், அவன் வெகுளியைத்தணித்தற்கு மேற்கெண்ட முயற்சியை இப்பாடல் உணர்த்துகின்றது. எனவே, அவன் தம்பிக்கும் அவனுக்கும் இடையே நடந்த தாயப்போர்தான் தகடூர்ப்போர் என்று கருதுவதற்கு இப்பாடல் இடம் தருகின்றது. இதனைத் தொடர்ந்துவரும் ஆசிரியப்பா சங்கப்பாடலைப்போலவே தோன்றுகின்றது:

"ஒளிவிடும் பசும்பொன் ஓடை சூட்டிய
வெளிறில் வெண்கோட்ட களிறுகெழு வேந்தே!
வினவுதி யாயின் கேண்மதி சினவா(து)
ஒருகுடர்ப் படுதர ஓரிரை துற்றும்
இருதலைப் புள்ளின் ஓருயிர் போல
அழிதரு வெகுளி தாங்காய்; வழிகெடக்
கண்ணுறு பொழுதில் கைபோல் எய்தி
நும்மோர்க்கு நீதுணை யாகலும் உளையே, நோதக
முன்னவை வரூஉம் காலை நும்முன்
நுமக்குத்துணை யாகலும் உரியன்; அதனால்
தொடங்க வுரிய வினைபெரி தாயினும்
அடங்கல் வேண்டுமதி அத்தை! அடங்கான்
துணையிலன் தமியன் மன்னும் புணையிலன்
பேர்யா(று) எதிர்நீந்தும் ஒருவன் அதனைத்
தாழ்தல் அன்றோ அரிது; தலைப்படுதல்
வேண்டிற் பொருந்திய
வினையின் அடங்கல் வேண்டும்
அனையம் ஆகஈண்(டு) அறிந்திசி னோர்க்கே (புறத்.785)

இதனுள் ஈற்றயலடிகள் குறளடியும் சிந்தடியுமாக வருதலின் இணைக் குறளாசிரியப்பாவாகும். இப்பாடலிலும் இரும்பொறைக்குப் புலவர் கூறும் அறிவுரையும் போர் தணிதற்குரிய முறையும் புகலப்பட்டன. அண்ணனும் தம்பியுமாகிய சேரமரபின் இருவரும் ஒருதாய் வயிற்று மக்கள்; ஒரே குடலில் சேரும்படி ஒரே இரையினைத் தின்னும் இருதலைப்பறவையின் ஒரே உயிரை ஒத்தவர்கள். எனவே, மூத்தோன் இளையோனைச் சீறுதல் தகாது என்று ஏதுக்கள் பலகாட்டிச் சந்து செய்வித்தல் புலவரின் நோக்கம் என்பது இப்பாடலால் புலனாகும்.

வீரஊழியின் மூச்சும் சங்க நடைப்பொலிவும் செஞ்சொற் சிறப்பும் புலவரின் விழுமிய நோக்கும் பொருந்திய இத்தகைய பாடல்கள் பயிலும்தொறும் சுவைபயப்பன. அறிஞர் பெருமக்கள் சிலர் இந்நூலினைக் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்குரியதென்று கூறினும், அகவல் காப்பியம், வெண்பா அறநூல் ஆகிய இலக்கியங்கள் தோன்றிய காலத்திற்கு

மிகவும் முற்பட்டதாகவே தகடூர் யாத்திரை நமக்குத் தோன்றுகின்றது. இதன் காலம் தனி ஆய்வுக்கு உரியது. இனி, கி.பி.6ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய பௌத்தக் காப்பியம் ஆகிய பிம்பிசாரக்கதை பற்றிச் சிறிது சிந்திப்போம்.

2. பிம்பிசாரக்கதை

கதை என்பது காப்பியத்திற்கு ஒரு பெயர். காப்பியத்தின் கூறுகள் யாவற்றுள்ளும் முதன்மை பெறுவது அதனுள் கூறப்படும் கதை ஆகும். கதையின் ஆற்றலால் [Strength of story] காப்பியம் சிறப்பதால் கதை என வழங்கலாயிற்று. உதயணன் கதை, பெருங்கதை, கலியாணன்கதை என்று பல்வேறு காப்பியங்கள் வழங்கின என்பது யாப்பருங்கல விருத்தியால் அறியலாம். திருத்தக்கதேவர், "காப்பியக்கவிகள்" (1585) என்று தமக்கு முற்பட்ட காப்பியங்களைப் பாடிய கவிஞர்களைக் குறித்தல் காணத்தக்கது. அக் காப்பியங்கள் பெரும்பாலும் அகவல் யாப்பிலும், கொச்சக ஒருபோகு என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ள யாப்புவகையிலும் அமைந்தவை எனலாம். அவற்றுள் ஒன்றுதான் பிம்பிசாரக் கதை என்னும் பௌத்தச் சார்புடைய காப்பியம் ஆகும்.

திபெத்துமொழியில் வழங்கும் பிடகநூலில் பிம்பிசாரன், புத்தன், பிரச்சோதனன், உதயணன் என்ற நால்வரும் ஒரே நாளில் பிறந்தவர்கள் என்பதும், இவர்கள் தோன்றிய நாள் விசேடத்தினால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் உயர்ந்துள்ளனர் என்பதும் சொல்லப்பெற்றுள்ளன. இந்நால்வருள் முன்னிருவரும் பிம்பிசாரக்கதையிலும் பின்னிருவரும் பெருங்கதையிலும் பேசப்படுகின்றனர்.

சாகுந்தலம், இரகுவமிசம், குமாரசம்பவம், நைடதம் முதலிய வடமொழிக் காவியங்களுக்கு இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் காணப்பெறும் கதைக் குறிப்புக்கள் மூலமாக அமைந்தன. அங்ஙனமே பிம்பிசாரக்கதை, குண்டலகேசி முதலிய தமிழ்க் காப்பியங்களுக்குப் பாலி மொழியில் வழங்கும் திரிபிடகங்களிலும் அவற்றின் உரைகளிலும் ஏனைய பௌத்த நூல்களிலும் வரும் கதைக் குறிப்புக்கள் மூலமாக அமைந்துள்ளன.

இலலிதவிஸ்தரம் என்ற மகாயான பௌத்த நூலில் 16ஆம் பகுதியான "பிம்பிசார அபிசங்கிரமனம்" என்னும் இயலில் உலகியல் துன்பங்களுக்கு முடிவு காணும் பொருட்டுத் துறவு மேற்கொள்ளுதற்கு முற்பட்ட சித்தார்த்தரைத் தடுத்துப் பூமியும் போகமும் நல்கி இல்லறத்தில் இருத்துவதற்குப் பிம்பிசாரன் முயன்ற செய்தியும்; உலகுய்யும் பொருட்டு மெய்ப்பொருள் காணும் நாட்டத்தைக் கூறித் துறவு மேற்கொண்ட சித்தார்த்தரின் உறுதியும் பிம்பிசாரன் முன்பே

வேண்டியபடி புத்தரானதும் அவனுக்கு அறமுரைத்துப் பௌத்தராக்கியதும் பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கி.பி.4ஆம் நூற்றாண்டில் சீனமொழியில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ள திறத்தினை G.K. நாரிமன் என்ற பௌத்தப்பேரறிஞர் குறித்துள்ளார். அன்றியும் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் ஜாவாவில் (-பௌத்தக் காப்பியமாகிய மணிமேகலை குறிப்பிடும் **சாவகம்**) போராபுத்தூரில் எழுந்த புத்தர் கோயிலில் இலலிதவிஸ்தரத்தின் கதைப் பொருள்கள் யாவும் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் காட்சிப்படுத்தப் பெற்றுள்ள அருஞ்செய்தியையும் அப்பெரியாரே எழுதியுள்ளார். எனவே, மணிமேகலை தோன்றிய காலத்தை ஒட்டிப் பிம்பிசாரனைப்பற்றிய காப்பியம் தமிழில் கி.பி. 5அல்லது 6ஆம் நூற்றாண்டளவில் தோன்றியிருத்தல் வேண்டும்.

பௌத்தர்களுக்கு மறை நூலாக விளங்கும் திரிபிடகங்களில் நடுவணதாகிய சுத்தபிடகத்தின் முதற்பகுதியாகிய தீகநிகாயத்திற்குப் **புத்தகோஷர்** (கி.பி.450) விரிவாக வரைந்துள்ள **சுமங்கலவிலாசனி** என்னும் பெயர்பெற்ற உரையில் பிம்பிசாரக்கதை விரிவாக விளம்பப் பெற்றுள்ளது. இவ்வுரையும் தமிழில் பிம்பிசாரக்கதை காப்பிய வடிவில் உருக்கொள்ளுவதற்கு மூலமாக அமைந்திருத்தல் வேண்டும்.

எனினும், இக்காப்பியத்தின் நான்கு அடிகளைத் தவிர முழுதும் அழிந்துபோயிற்று. சமணக் காப்பியமாகிய நீலகேசியின் உரையாசிரியர் சமயதிவாகரர்,

> **"உலும்பினி வனத்துள் ஒண்குழைத்தேவி**
> **வலம்படு மருங்கில் வடுநோய் உறாமல்**
> **ஆன்றோன் அவ்வழி தோன்றினன் ஆதலின்**
> **ஈன்றோள் ஏழாநாள் இன்னுயிர் வைத்தாள்.**
> **என்பது பிம்பிசாரக்கதை என்னும் காவியம்; பௌத்தருடையது"**

என்று குறித்துள்ளார். இப்பகுதி குண்டலகேசி வாதச்சருக்கம் என்ற இரண்டாவது பகுதியில் காணப்படுகிறது. எனவே, சமயதிவாகரர் காலத்தில் (கி.பி.1350) பிம்பிசாரக்கதை அழியாமல் இருந்திருத்தல் வேண்டும்.

மேற்காட்டிய நான்கு அடிகளும் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் சௌத்திராந்திக பௌத்தரின் கொள்கையினை விளக்கும் பகுதியில் ஞானப்பிரகாசர், தத்துவப்பிரகாசர் என்ற உரையாசிரியர்கள் இருவராலும் மேற்கோள் காட்டப்பெற்றுள்ளன. இந்நான்கு அடிகளுக்கும் மூலம் இலிதவிஸ்தரம் என்ற பௌத்த நூலில் காணப்படும். அப்பகுதியின் மொழிபெயர்ப்பு இங்கே தரப்படுகின்றது.

"Queen Maya bears the Bodhisattva for ten months. This general law applies to all Bodhisattvas.....When the time comes for her to be delivered, she goes to the Lumbini grove with her companions.....**The Bodhisattva is then born from her right side which remains uninjured, as his body is mind made"**

". . . . . . Such a Bodhisattva's mother dies seven days after his birth........."

எனவே, பௌத்த சமயம் தமிழகத்தில் தழைத்திருந்த கி.பி.5,6 ஆம் நூற்றாண்டுகளில் பிம்பிசாரக்கதை பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். பிம்பிசாரன் ஆண்ட மகத நாட்டின் சிறப்பும் நாகரிகமும், அரசியல் மாட்சியும் கலைவளமும் இக்காப்பியத்தின் வழி தமிழ்மக்களுக்கு அறிமுகம் ஆகியிருத்தல் வேண்டும்.

பிம்பிசாரக்கதையினைப் போன்றது **உதயணன் கதை** எனப் பெயர் பெற்ற **பெருங்கதை. பிம்பிசாரனும் உதயணனும் சமகாலத்தவர் என்பதை முன்னரே கண்டோம்.**

3. பெருங்கதை

தமிழில் கிடைத்துள்ள முதற்காப்பியங்கள் ஆகிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும்தமிழக மாந்தரை முதன்மைப் பாத்திரங்களாகக் கொண்டு பாடப்பெற்றவை. எனின், பெருங்கதை முன்பு சுட்டப்பட்ட பிம்பிசாரக்கதையினைப்போலச் சமண, பௌத்தச் சார்புடைய கோசாம்பி, மகதம், அங்கம், அவந்தி, கேகயம், கோசலம் முதலிய கங்கை பாயும் கவின்மிகு நாடுகளின் மன்னர்களின் வரலாற்றினையும் குறிப்பாக **உதயணன்** அவன்மகன் **நரவாண தத்தன்** ஆகியோரின் வீரதீரச் செயல்களையும் அரசியல், இன்பியல் வாழ்வியலையும் மையமாக வைத்துக் கொங்குவேளிர் என்ற கவிஞர் கோமகனால் பாடப்பெற்ற பெருங்காப்பியம் ஆகும்.

இக்காப்பியத்தில் **உஞ்சைக்காண்டம், இலாவண காண்டம், மகதகாண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம்** என்று ஐந்து காண்டங்கள் இப்போது காணப்படுகின்றன. **உதிதோதய காவியம், உதயணகுமாரகாவியம்** என்ற சிறுகாவியங்களில் ஆறாவதாகக் **துறவுக் காண்டம்** காணப்படுவதால், பெருங்கதையிலும் நரவாண காண்டத்தைச் சார்ந்து துறவுக் காண்டம் இருந்திருத்தல் வேண்டும் என்பது ஆய்வாளரின் கருத்து. சீவகசிந்தாமணியின் இறுதிப்பகுதி முத்தி இலம்பகம் என்றும் சூளாமணியின் கடைசிப் பகுதி துறவுச் சருக்கம் என்றும் வருதலால் கொங்குவேளிர் துறவுக்காண்டம் பாடிக் காப்பியத்தினை நிறைவு செய்திருத்தல் வேண்டும். மணிமேகலையின்

இறுதிக் காதை 'பவத்திறம் அறுகெனப் பாவைநோற்றது' என்று வருதல் இயைபு கருதி நோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்தின் கடைசிக் காதையின் இறுதியில்,

> "தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்
> செல்லும் தேஎத்துக்(கு) உறுதுணை தேடுமின்
> மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்"

என்று நிறைவுறுதலும் காணத்தக்கது. கிடைத்துள்ள பெருங்கதையில் சிலபல அடிகளும், தொடர்களும், சொற்களும் காணப்படவில்லை. எனினும், ஒப்பற்ற இப்பெருங்காப்பியத்தைச் சீரிய முறையில் டாக்டர் உ.வே.சா. பதிப்பித்துத் தமிழ் மொழியின் ஆக்கத்திற்குத் தொண்டாற்றியுள்ள திறம் பாராட்டற்பாலது.

பெருங்கதைக்கு மூலங்கள்

பெருங்கதைக்கு முதனூல் கி.பி.5ஆம் நூற்றாண்டில் கங்க நாட்டினை ஆண்ட துர்விநீதன் என்னும் அரசன் வடமொழியில் யாத்த பிருகத்கதையே என்பர். எனின், இக்கவிஞரும் தமக்கு முற்பட்ட குணாட்டியர் என்னும் புலவர் பைசாசமொழியில் இயற்றிய பிருகத்கதை ஆகிய மூலக் காப்பியத்தையே வடமொழியில் மொழி பெயர்த்துப் பாடியுள்ளார் என்ற கருத்தும் வடமெழி அறிஞர்களால் நிலைநாட்டப்பட்டுள்ளது. பிராகிருதம், வடமொழி ஆகிய மொழிகளில் பெரும்புலமை படைத்த சமணப்பேரறிஞர் A.N. உபாத்யாய என்பார் பாலி, அர்த்தமாகதி, பிராகிருதம் முதலிய மொழிகளைப் போலவே பைசாசம் என்பதும் ஒரு புராதன மொழி என்றும், அதனைப் பேசியவர் விந்திய மலைப்பகுதியில் வாழ்ந்த பழங்குடிகள் என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார். மேலும், பைசாச மொழிக்குப்பதினொரு கிளைமொழிகள் [Dialects] உண்டென்றும், அவற்றுள் காஞ்சி, பாண்டியம், திராவிடம் என்ற மூன்றும் சுட்டத்தகுவனஎன்றும் மார்க்கண்டேயனாரின் பிராகிருத இலக்கண நூலினின்றும் ஆதாரம் எடுத்துக் காட்டியிருப்பதால் புலனாகின்றன.

யாப்பருங்கல விருத்தியில் குடமூக்கிற்பகவர் என்ற புலவர் பாடியுள்ள வாசுதேவனார் சிந்தம் என்ற காவியமும் உதயணன் வரலாற்றினைக் கூறும் வாசுதேவ ஹிந்தி என்னும் பிராகிருத இலக்கியத்தின் மொழிபெயர்ப்பு என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, மறைந்துபோல வாசுதேவனார் சிந்தமும் பெருங்கதையினைப் போலத் தமிழில் யாக்கப்பெற்ற உதயணனைப்பற்றிய காவியம் என்பது தெளிவு.

வடமொழியில் அசுவகோஷருக்கும் காளிதாசருக்கும் காலத்தால் முற்பட்டவரும் கி.மு. 3ஆம் நூற்றாண்டினரும் ஆகிய பாசகவி

எழுதிய 13 நாடகங்களும் திருவிதாங்கூரில் மட்டுமே கண்டெடுக்கப் பட்டவை அவற்றுள் சுவப்பன வாசவதத்தம், பிரதிஞ்ஞா யௌகந்தராயணம் என்ற இரண்டும் பிருகத்கதாவின் பாத்திரங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் சிலவற்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை. பாசகவிபாடிய மற்றொரு நாடகம் பாலசரிதம் அவர் நாடகங்கள் கண்டெடுக்கப்பெற்ற திருவிதாங்கூரை உள்ளடக்கிய சேரநாட்டவராகிய இளங்கோவடிகள் குறிப்பிடும் வாலசரிதை நாடங்களில் [சிலம்பு XVII(5)] ஒன்றினைக் குறிப்பதாகக் கொள்ளுதற்குரியது. எனவே, தமிழகச் சூழலில் வடமொழி, தமிழ்மொழி இலக்கியத் தொடர்புகளையும் பரிமாற்றப் பணிகளையும் ஆராய்தற்கு ஒப்பியலார்க்கு அரிய வாய்ப்பு உள்ளது. இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் இரண்டிற்கும் ஒப்ப மதிக்கப்பெற்ற பிருகத்கதையின் குறிப்புக்கள் தமிழகத்தவராக எண்ணப்பெறும் கௌடலியரின் பொருள்நூலிலும் (-அர்த்தசாஸ்திரம் IX, 7) பாணினியின் இலக்கண நூலிற்கு உரைவகுத்தவரும் தில்லைப் பதியினராகக் கருதப்பெறு பவரும் ஆகிய பதஞ்சலி எழுதிய மாபாடியத்திலும் [IV 3.87], வாற்சாயணரின் காமசூத்திரத்திலும் [V 4.14], காணப்படுதலின் மொழி, நிலம், சமயம் என்ற வரம்பின்றி இக்காப்பியம் நாவலநாடு முழுவதிலும் பயிலப்பெற்றிருந்த உண்மை புலனாகும். காளிதாசரும் மேகசந்தேசத்தில், 'உதயணனின் வரலாற்றைக் கூறுவதில் வல்ல முதியோர்கள் வாழும் அவந்திதேயம்' (சுலோகம்,30) என்று பாடியிருத்தலும் எண்ணற்பாலது. பாமகர் (கிபி 650) காவியாலங்காரம் என்னும் அணி நூலில் உதயணனின் சரித நிகழ்வுகளை எடுத்துரைத்தனர் (காண்க: நான்காம் பரிச்சேதம்).

உஞ்சை நகரத்து அரசனாகிய பிரச்சோதனின் பட்டத்துயானை நளகிரியின் கொட்டத்தை அடக்கிய உதயணனின் யாழிசையின் மாட்சியை,

> ". . . . .
> வீணை எழீஇ வீதியின் நடப்ப
> ஆணை ஆசாற்கு அடியுறை செய்யும்
> மாணி போல மதக்களிறு படிய" [II 9:57-59]

எனவரும் பகுதியில் கொங்குவேளிர் குறித்துள்ளார். யாழிசைக்கு யானை கட்டுப்படும் என்ற கருத்து இந்திய இலக்கியப் பொதுப் பண்பாக (Pan Indian) எண்ணுதற்குரியது. இதற்கு,

> "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
> யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
> தொல்கவின் தொலைதல் அஞ்சிஎன்
> சொல்வரைத் தங்கினர் காத லோரே" [கலி.2: 28-9]

எனவரும் பெருங்கடுங்கோவின் பாடற் பகுதி சான்றாகிறது. மணிமேகலையிலும் [15. 61-66], திருமங்கைமன்னனின் சிறிய திருமடலிலும் (கண்ணி 66-8) பிருகத்கதாவிற் கூறப்பெற்றுள்ள சில நிகழ்ச்சிகள் உவமைகளாக எடுத்தாளப்பெற்றன.

பாசகவியின் பிரதிஞ்ஞாவை (யூகியின் சூளுரை)க் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ள L. குண்டப்பா என்னும் அறிஞர் பல்வேறு ஆதாரங்களை எடுத்துக் காட்டித் தமிழில் உள்ள கொங்குவேளிரின் பெருங்கதைதான் பாசகவிக்கு மூலமாக அமைந்துள்ளது என்று முடிவு செய்திருத்தல் இங்குச் சுட்டத்தக்கது. மற்றுமொரு கன்னட, வடமொழிப் பேரறிஞர் பேராசிரியர் கிருஷ்ணசாஸ்திரி என்பாரும் "வடமொழி நாடகம்" [Sanskrit Drama, p.67] என்ற தம் நூலில் குண்டப்பா கூறியுள்ள முடிபினை வலியுறுத்தியுள்ளார். இவர்கள் கருத்தின்படி தமிழ்ப் பெருங்கதை கி.பி.2ஆம் நூற்றாண்டினை ஒட்டி எழுதப்பட்டது என்பதும், பாசகவி இக்காப்பியத்திற்குப் பின்னரே வாழ்ந்தவர் என்பதும் புலனாகும். காவிய காலம் எழுதிய பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை கி.பி.750இல் பெருங்கதை தோன்றியிருக்கலாம் (ப.77) என்பது ஒப்பியலார் கண்ட ஆய்வு முடிவுக்கு ஒவ்வாது என்றே தோன்றுகின்றது. அடியார்க்கு நல்லார் சங்க இலக்கியங்களையும் பெருங்கதையினையும் நுணுகி ஆராய்ந்ததன் பயனாக,

> "..........இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும் வெள்ளூர்க்காப்பியனாரும் சிறுபாண்டரங்கனாரும் மதுரையாசிரியர் மாறனாரும் துவரைக்கோமகனும் கீரந்தையாரும் என்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மால் பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை"

என்று கொங்குவேளிரின் தமிழ்ப்பெரும் புலமைத் திறனைத் தெளிவுறுத்தியுள்ளார். இவர் கருத்தினை எளிதில் புறக்கணித்துவிடுதல் ஆய்வறம் அன்று. பெருங்கதையில் இடம்பெற்றுள்ள திணைக் காட்சிகள், ஞாயிறு, திங்கள், பருவகாலம் இன்னோரன்ன இயற்கைக் கூறுகளைப் புனைந் துரைக்கும் பாங்கு வடமொழி, பாலி, பிராகிருதம் ஆகிய அயல் மொழிகளில் காணப்படாமையான் தமிழ்ச்செய்யுள் மரபினை யொட்டிப் பாடப்பெற்றவை என்பதை அறிதல் வேண்டும். விரிசிகை என்னும் நங்கையினைக் காப்பியத்தலைவன் களவியல் முறையில் காதலுற்று மணந்தான் என்ற கருத்தினை,

> "இமிழ்திரை வையத்து ஏயர் பெருமகன்
> தமிழியல் வழக்கினன்........" [IV 17.66-7]

என்று கொங்குவேளிர் குறித்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. இவ்வாறே உதயணன் வாசவதத்தை, பதுமாவதி, மானினீகை என்பாரையும் காதலித்துக் கடிமணம் கூடினான். மகத நாட்டின் தலைநகர் இராசகிரிய

(-இராசக்கிருக) நகரத்தில், **“அளப்பருஞ் சிறப்பின் ஆயிரம் ஆகிய, தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரியும்”** (3.4:10-11) திகழ்ந்தன. வடநாட்டில் வழங்கிவரும் தமிழ்த்தொடர்புடைய திராவிட மொழிகளை வடதிராவிடம் என்று மொழியியல் அறிஞர்கள் வழங்குதலின் பொருத்தம் இக்குறிப்பினாலும் உறுதியாகிறது.

எனவே, சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பனுவல்களின் காலத்திற்குப்பின் கி.பி.5, அல்லது 6ஆம் நூற்றாண்டளவில் கொங்குவேளிர் பெருங்கதையினை மூலக்காப்பியம் என்று போற்றும்படி வடமொழி, பிராகிருதம் ஆகியவற்றில் உள்ள பிருகத்கதையினை ஒட்டிப் படைத்திருத்தல் வேண்டும் என்று ஒருவாறு முடிவு செய்யலாம். பிற்காலத்தில் உதயண குமார காவியம் எழுந்தது. வீரசோழிய உரை சுட்டும் வச்சத்தொள்ளாயிரம் உதயணனை மையமாகக் கொண்ட இலக்கியம் ஆதல் கூடும்.

அரசர் காப்பியம் புனைதல்

அரசமரபினர் காப்பியம் பாடும் மரபு இந்திய இலக்கிய வரலாற்றில் காணப்படுகின்றது. கங்க அரசன் துர்விநீதன் பிருகத்கதாபாடியதும், மேலைச்சாளுக்கிய வேந்தன் ஹர்ஷன் நாகானந்தம், நைடதம் பாடியதும் வடமொழிஇலக்கிய வரலாறு உணர்த்தும் வாய்மை ஆகும். சேர இளவரசாகிய இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் பாடியதும், சோழ அரச மரபினராகிய திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியைப் பாடியதும் கொங்குமண்டலத்தை ஆண்ட வேளிர் மரபில் வந்த குறுநில அரசர் பெருங்கதையைப் பாடியதும் தமிழ் இலக்கிய வரலாறு உணர்த்தும் உண்மையாகும். கங்கர்கள் சமண சமயத்தை ஆதரித்தவர்கள். அவ்வாறே கொங்குவேளிரும் சமண நெறியைப் புரந்தவர். சமணக் கருத்துக்கள் பலவற்றைப் பெருங்கதையில் பகர்ந்துள்ள பாங்கினைத் தனித்தலைப்பில் ஆராய்தல் பயன்தரும். இவர் பிறப்பிடம் ஆகிய விசயமங்கலம் விசயமங்கை என்றும் கூறப்பெறும். இது கொங்கு நாட்டில் ஈரோட்டிற்கு மேற்கே 21 கல் தொலைவில் திகழ்வது. இங்குப் பெரிய அருகன் கோயில் இன்றும் இலங்குதல் காணலாம்.

வடமொழி, பிராகிருதம் ஆகிய அயல் மொழி இலக்கியங்களி லிருந்து உதயணன் கதைக்குறிப்புக்களைத் தொகுத்துக் கொண்டது உண்மையாயினும், தம் புலமைப்பெருக்காலும், கற்பனை வளத்தாலும், பல்கலைப்பயிற்சியாலும், சிந்தனைத் திறத்தாலும், மொழியாற்றலாலும் யாப்புத் தெளிவாலும் மூலக்காப்பியம் என்று கற்றவர் போற்றும் பாங்கில் கொங்குவேளிர் பெருங்கதையினைப் பாடியிருத்தல் எண்ணி இன்புறத்தக்கது.

கிரேக்கத் தொடர்பு

சங்க காலம் முதலாகவே தமிழர்க்கும் கிரேக்கர் உரோமர் ஆகிய யவன நாட்டவர்க்கும் கலை, வாணிபம், அரசியல் தொடர்புகள் நிலவிய உண்மையினை வரலாற்றறிஞர்கள் நிறுவியுள்ளர். சங்க

இலக்கியத்தில் யவனர் பற்றிய குறிப்புக்கள் பல உள. யவனர் நாட்டுத்தேறல் (புறம்.56.18) யவனர் நாட்டுப்பொன் (அகம் 149.9), யவனவீரர்கள் (முல்லை 61), யவனரின் பாவை விளக்கு (நெடுநல்.10) பற்றிய செய்திகள் நோக்கத்தக்கவை. சிலப்பதிகாரத்தில் பூம்புகாரில் இருந்த யவனர் குடியிருப்புக்கள் (5.10), மதுரை நகரின் மதில்வாயிலை வாளேந்திய யவனவீரர்கள் காவல் புரிந்தமை (14.66-7) சுட்டப்பட்டன. யவனர் நாட்டினை அகப்படுத்தி ஆண்ட சேர வேந்தரின் வீரச்சிறப்பினைப் பதிற்றுப்பத்திலும் (பதி.2) சிலப்பதிகாரத்திலும் (28.141; 29.25) காணலாம். பூம்புகாரில் சோழவேந்தனின் நாளோலக்கம் ஆகிய பசும்பொன் மண்டபத்தினை உருவாக்கிய கைவினைஞரில் யவனத்தச்சரும் இடம் பெற்ற செய்தியினை மணிமேகலை சுட்டுகிறது (19:107-116).

எனவே, யவனத்தொடர்புடைய செய்திகள் வரலாற்று முதன்மை வாய்ந்தவை எனலாம். பெருங்கதையில், நூற்றுக்கணக்கில் யவனர் குடியிருப்புக்களும் [III 4.8], யவனப்பாவை அணிவிளக்கும் [I 47.175], வல்லவர் புனைந்த யவனப் பேழையும் [III 22:212-3], யவனமொழியும் [IV 13.59], யவனர் இயற்றிய பெரும்பூதம் [V 9.58-60], யவனத் தொடர்புடையன பிறவும் குறிக்கப்பெற்றுள்ளன. **காப்பியத் தலைவன் உதயணனும், அவன் தேவியருள் ஒருத்தியாகிய மானனீகையும் யவன மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள். எனவே, யவன நாட்டு இலக்கியங்களும் இந்திய மக்களால் பயிலப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், இந்திய இலக்கியங்களை யவனர்கள் பயின்றனராதல் வேண்டும் என்பதும் எண்ணற்பாலன. இக்கருத்தினை உறுதி செய்யும் வகையில் பெருங்கதையில் மாய யானை பற்றிய கற்பனை திகழ்கின்றது.**

மாய யானை - மாயக்குதிரை

உச்சயினியைத் தலைநகராகக் கொண்டு அவந்தி நாட்டினை அரசாண்ட மாமன்னன் பிரச்சோதனன் தனக்குத்திறை செலுத்தாத வத்தவமன்னன் உதயணனையும் சேதிஅரசன் யூகியையும் சிறைப்படுத்த முயன்றான். இவ்வேந்தனின் பேரமைச்சன் சாலங்காயன் மாய யானையின் உதவியால் உதயணனை வஞ்சித்துப் பிடித்து உஞ்சை நகரில் (உச்சயினியில்) சிறைவைத்த நிகழ்ச்சி வியப்புடையது. அரக்கு, மரம், பயின் முதலிய பல்வகைப் பொருள்களின் சேர்க்கையால் இயற்றப்பட்ட எந்திரயானையின் வயிற்றில் 96 மறவர்களும் அதன் துதிக்கை, கால்களில் பல்வகைப் படைக்கருவிகளும் பதுக்கிவைத்து, அந்த யானையுடன் சாலங்காயனும், படைவீரர்களும் உதயணனின் இராசதானியாகிய கோசாம்பிக்கு அனுப்பப்பட்டனர். அந்நகரின் காட்டுப் பகுதியில் எந்திரயானை பிளிறிக்கொண்டு ஓடுவதைக் கண்டு, பிடியானைகள் பலவும் அதனைச் சூழ்ந்தன. காட்டில் வாழும்

வேட்டுவர் அதனைத் தெய்வ யானை என்றே எண்ணி, உதயணனிடம் செய்தி தெரிவித்தனர். யாழை மீட்டிக்கொண்டே யானையின் அருகில் உதயணன் சென்றான். இசைக்கு வசப்படுதல்போல் யானையும் உதயணன் பக்கம் வந்து நின்றது. உடனே அதன் வயிற்றினைத் திறந்துகொண்டு வீரர்கள் யாவரும் வெளிப்பட்டு உதயணனைச் சூழ்ந்துகொண்டனர். பதுங்கியிருந்த சாலங்காயன் படைவீரர்களோடு சென்று உதயணனைப் பிடித்துச் சென்றான். பிரச்சோதனன் அவனைச் சிறையில் இருத்தினான் [I 55:24-32; II 17:181-2 முதலியன].

இத்தகைய மாயம்மிக்க அற்புத யானை பற்றிய கற்பனைக்குக் கிரேக்க மொழியின் ஆதிகவியாகிய ஹோமர் பாடிய இலியத் என்ற காவியத்தில்வரும் மாயக்குதிரை மூலமாக இருத்தல் கூடும்.

அழகுதேவதை அஃப்ரோடைட்டின் உதவியினால் **ட்ராய்நகரின்** அரசன் **பிரியம்** என்பானின் மகன் **பாரிசு** என்னும் இளவரசன், கிரேக்கத்தின் **ஸ்பார்ட்டா** என்ற நகர நாட்டின் மன்னன் மெனிலஸ் என்பானின் பேரெழில் மயமான மனைவி ஹெலனைக் கடத்திச் சென்றுவிட்டான். தன் நாட்டு மக்களை ஒருங்கு திரட்டித் தன் மனைவியை மீட்டுவரவும், ட்ராய் நகரை அழிக்கவும் பெரு முயற்சி மேற்கொண்டான். தனக்குத் துணையாக மைசினேவின் மன்னனும் தன் சகோதரனும் ஆகிய **அகமெம்னான்** தலைமையில் பெரும்படை திரண்டது. **இத்தாக்கா** அரசன் ஒடிஸ்ஸு (-இலத்தீனில் உலிஸ்ஸிஸ்), **பித்தியாவின்** இளவரசன் ஏக்கிளெஸ் முதலிய பெரும் கிரேக்க வீரர்கள் பொங்கி எழுந்தனர். பத்து ஆண்டுகள் கிரேக்கருக்கும் ட்ரோஜருக்கும் பெரும்போர் மூண்டது. இருபக்கமும் தெய்வங்களும் பங்கு பற்றின.

முடிவில், கிரேக்கர்கள் மாயம் மிக்க மரக்குதிரை ஒன்றினை பெரிய அளவில் புனைந்தனர். உள்ளீடாக அமைக்கப்பெற்ற அதன் வயிற்றுப் பகுதியில் படைக்கலம் ஏந்திய கிரேக்க வீரர் பலர் நிறைந்தனர். ட்ராய் நகரின் வாயிலின் முன்பு அக்குதிரை நிறுத்தப்பட்டது. அதனை தேவதை ஏதெனுக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருளாக எண்ணிய ட்ரோஜர்கள், அத்தேவதையின் கருணையினைப் பெறுதல் வேண்டும் என்ற நோக்கத்தில், மரக்குதிரையினை நகரத்திற்குள் முயன்று இழுத்துச் சென்றனர். நள்ளிரவில், அதன் வயிற்றினைத் திறந்து கொண்டு வெளிவந்த கிரேக்க வீரர்கள் ட்ராய் நகரின் வாயிற்கதவினைத் திறந்துவிட்டனர். வெளியே சூழ்ந்து கொண்டிருந்த கிரேக்க வீரர்கள் யாவரும் அந்த இரவில் நகருக்குள்ளே பெரும் அளவில் நுழைந்தனர். ட்ராய் நகரம் அழிக்கப்பட்டது. ஹெலன் மீட்கப்பட்டு உரியவன் ஆகிய மெனிலஸிடம் ஒப்படைக்கப்பட்டாள் என்பது கிரேக்க இதிகாசம் ஆகிய இலியத்தின் கதை ஆகும்.

பெருங்கதையில் மாய யானை எனப்புனையப்பெற்ற கற்பனையும் இலியத்தில் மாயக் குதிரையின் புனைவும் இலக்கியக் கற்பனை அமைப்பியல் அடிப்படையில் ஒப்பு நோக்கத்தக்கவை.

தமிழகத்தில் பல நகர்களில் கிரேக்க, ரோமபுரி நாணயங்கள், பொருள்கள் பற்பல கிடைத்துள்ள செய்தியும் கிரேக்கத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவிய உறவினை மேலும் வலியுறுத்தும் ஆவணம் ஆகும். ஆதலின், கொங்குவேளிர் ஹோமரை அறிந்தவராதல் கூடும்.

இனி, காப்பியத்தின் மையக்கதையின் சுருக்கத்தைக் காண்போம்.

மையக்கதை

உதயணன் சரிதத்தை மையமாகக் கொண்ட பெருங்கதையின் இடம்பெறும் முக்கிய நாடுகள் வத்தவம், சேதி, அவந்தி, பாஞ்சாலம், கோசலம், மகதம் என்ற ஐந்தாகும். வத்தவர் கோமானாகிய உதயணனின் தந்தை சதானிகன், தாய் மிருகாபதி; தம்பியர் பிங்கலன், கடகன் என்போர். வத்தவநாட்டின் தலைநகரம் கோசாம்பி - குருகுலத்தவர் இதனை ஆண்டு வந்தனர்.

உதயணனின் தாய் மிருகாபதியின் தந்தை சேடகன் என்பான் வைசாலி நகரைத் தலைநகராகக் கொண்டு சேதிநாட்டினை ஆண்டவன். சேடகனுக்குப் பத்துப் புதல்வரும் மிருகாபதியாகிய ஒரே மகளும் மக்களாவர். முதல் ஒன்பது புதல்வரும் முடிசூடிக்கொள்ள மறுத்தமையின் கடைசிமகன் விக்கிரனிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துச்சேடகன் தவம் புரிதற் பொருட்டுத் துறவு மேற்கொண்டான்.

பிரமசுந்தரமுனிவரின் மகன் யூகி. உதயணன், யூகி இருவருக்கும் இவரே ஆசிரியராக அமைந்து வித்தைகள் அனைத்தையும் கற்பித்தார். யானையினை அடக்கி ஆளும் மந்திரத்தையும், கோடபதி என்னும் தெய்வயாழினையும் முனிவர் உதயணனுக்குக்கொடுத்ததுடன், தன் மகன் யூகியையும் உறுதுணையாக ஒப்படைத்தார்.

சேதி அரசகுமரன் விக்கிரனும் துறவு பூண முற்பட்டு அந்நாட்டின் ஆட்சியைத் தன் தங்கை மிருகபதியின் மகன் உதயணனிடம் ஒப்படைத்துத் தவம் மேற்கொண்டான். சேதி நாட்டின் அரசனாகிய உதயணன் உயிர்த்தோழன் யூகியை முதலமைச்சனாகவும்; உருமண்ணுவா, வயந்தகன், இடவகன் என்பாரை அமைச்சராகவும் கொண்டு வைசாலி நகரிலிருந்து ஆட்சி புரிந்து வந்தனன். வத்த

நாட்டிற்கும் உதயணனை மன்னனாக்கி அவன் தந்தை சதானிகன் துறவு பூண்டான். சேதி நாட்டினை யூகிக்கு வழங்கி வத்தநாட்டினை மட்டும் உதயணனன் ஆண்டான்.

உஞ்சை (உச்சயினி) நகரைக் கோநகராகக் கொண்டு அவந்தி நாட்டினை ஆட்சி புரிந்தவன் மாமன்னன் பிரச்சோதனன். இவனுக்குத் தேவியர் பலர். அவருள் பதுமகாரியின் மகள் வாசவதத்தை. பாலகன், பாலகுமரன், கோபாலகன் என்பார் இம்மன்னனின் புதல்வர்கள். திறை செலுத்த மறுத்த உதயணனை வஞ்சனையால் சிறை பிடித்தவன் பிரச்சோதனன். எனின் யூகியின் சூழ்ச்சித்திறனால் உதயணன் தடைகளைக் கடந்து முடிவில் பிரச்சோதனின் மகள் வாசவதத்தைக்கு யாழ் கற்பித்தும் புதல்வர்க்குப் படைக்கலப் பயிற்சி வழங்கியும் வாசவதத்தையினைக் காதல் புரிந்து மணம் புரிந்தனன்.

பாஞ்சால நாட்டின் மன்னன் ஆருணி என்பவன் கோசலத் தரசனை வென்று அவன்மகள் மானனீகை என்றும் வாசவதத்தை என்றும் அழைக்கப்பெறும் நங்கையினையும் உரிமைச் சுற்றத்தையும் கவர்ந்து சென்று தன் தேவிமார்க்குப் பணிப்பெண்ணாக்கியவன். பிரச்சோதனனின் சகலனாகிய கோசலத்ததரசன் சார்பில் உதயணன் ஆருணியுடன் போரிட்டு அவனைக் கொன்று யாவரையும் மீட்டு வந்தான். மானனீகையினைத் தன் தேவி வாசவதத்தைக்கு (-பிரச்சோதனன் மகளுக்கு)ப் பணிப்பெண்ணாக்கினான்; அவள் ஆடிய பந்தாட்டத்தினால் கவரப்பட்டுக் காதலுற்று மணந்துகொண்டான்.

இராசகிரியத்தைத் தலைநகராகக் கொண்ட மகதநாட்டின் மன்னன் தருசகன். இவன் தந்தையும் உதயணனின் தந்தையும் நெருங்கிய நண்பர்கள். ஆருணியை வெல்லுவதற்கு உதவியாகத்தன் படை வீரர்களையும் அமைச்சர்களையும் அனுப்பியவன். எலிச்செவி (-லிச்சவி) அரசனால் சிறைவைக்கப்பட்டிருந்த உருமண்ணுவா-வினைவிடுவித்து உதயணனிடம் சேர்ப்பித்தவன். காசிராசன் மகள் பதுமாவதியைத் தருசகன்தாய் தன் அன்புப் புதல்வியாக வளர்த்தமையால் அவளுக்கு அண்ணன் முறையில் சுட்டப்படுபவன். பதுமாவதியையும் உதயணன் முறையாக மணந்துகொண்டான். விரிசிகை என்னும் முனிவர் மகளும் அவன் தேவியானாள்.

வாசவதத்தைக்கும் உதயணனுக்கும் பிறந்த புதல்வன் நரவாணதத்தன். குபேரன் அருளினால் பிறந்ததால் இப்பெயர் சூட்டப் பெற்றவன். இவ்விளவரசன் மதனமஞ்சிகை என்னும் கவின்மிகு கணிகை நங்கையை மணந்து கொண்டவன். பின்னர் வித்தியாதரர் உலகின் அரசனாகும் பேறு வாய்க்கப் பெற்றவன்.

முடிவில் உதயணன் தன் ஆட்சிப் பொறுப்பினைத் தன் தேவி பதுமாவதி வயிற்றில் தோன்றிய மகனிடம் ஒப்படைத்துத் துறவு பூண்டு தவம் புரிந்தான். அவனுடன் அவன் தேவியரும் தவநெறி மேற்கொண்டனர்.

இவ்வளவே பெருங்கதையில் இடம்பெறும் மையக்கதை. ஒருபக்கம் ஆட்சி, போர், சூழ்ச்சி, மீட்சி என்ற காட்சிகள். மறுபக்கம் திருமணம், இன்பம், நுகர்ச்சி, மக்கட்பேறு. பிறிதொருபக்கம் துறவும் தவமும். எனவே, **முடிவில் சமணம் வலியுறுத்தும் துறவறமே பிறவிச் சுழற்சியினின்று விடுபட்டுப் பேரின்பப் பேற்றினை நல்கும் என்ற பாவிகமே காப்பியக் குறிக்கோளாக விளங்குகின்றது.**

இனி, பெருங்கதையில் கொங்குவேளிர் படைத்துள்ள காப்பியக் கூறுகள் சிலவற்றை நோக்குவோம்.

பெருங்கதை - காப்பியக் கூறுகள்

காப்பியத்தின் முகப்பில் இடம்பெறும் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்ற கூறுகள் பெருங்கதையில் இருந்தவை என்பதை அறிதற்குஇல்லை. முதற்காண்டமாகிய உஞ்சைக் காண்டத்தின் முதல் 32 காதைகளும் அகப்படாத நிலையில் வாழ்த்து முதலியன கொங்குவேளிரால் கூறப்பட்டன என்பது எண்ணிப்பார்க்கக் கூட இயலவில்லை. சிலப்பதிகாரத்தில் திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார் ஆகிய நான்கினையும் வாழ்த்திக் காப்பியம் தொடங்குகின்றது. மணிமேகலையில் வாழ்த்து இன்றியே காப்பியம் இலங்குகின்றது. வருபொருள் உரைத்தல் என்பது காப்பிய உள்ளடக்கத்தைத் தொகுத்துச் சுருக்கமாகக் கூறும் பதிகப்பகுதி. சிலம்பிலும் மேகலையிலும் நூலின் அயலே காணப்படும் பதிகங்கள் ஆசிரியரால் பாடப்பெறவில்லை என்பதும், பின்வந்தோரால் பாடப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர் துணிபு.

காப்பியச்செய்யுள்களின் உட்பகுப்பு சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்று அமைதல் வேண்டும் என்பது இலக்கணம். குமாரசம்பவம் முதலிய வடமொழிக்காவியங்களிலும் தமிழில் எழுந்த நீலகேசி என்ற சமணக் காப்பியத்திலும் சில தலபுராணங்களிலும் சருக்கம் என்ற உட்பிரிவு உண்டு. இலம்பகம் என்ற உட்பிரிவினைச் சீவக சிந்தாமணியில் காணலாம். பரிச்சேதம் என்பதும் வடமொழி காவியங்களில் வருவது. தமிழில் தோன்றிய தொன்மைக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற காண்டப்பிரிவுதான் காணப்படுகிறது. அவற்றின் குறும்பிரிவுகளாகக் காதை, வரிப்பாடல்கள் முதலியவை வந்தன. மணிமேகலையில் காண்டப் பிரிவு இல்லை; முப்பது காதைகள்

பிணைந்துள்ளன. சிலம்பிலும் முப்பது காதைகளே வந்தன. இவ்விரு அகவல் காப்பியங்களையும் தழுவிப்போலும் கொங்குவேளிர் தாம் பாட எடுத்துக்கொண்ட பாரகாவியத்தில் காண்டப் பகுப்பும் காதைப் பிரிவுமே கொண்டனர். எனின், சீவகசிந்தாமணியில் வாழ்த்து, வணக்கம் வருபொருள் உரைத்தல் என்பன மூன்றுமே திருத்தக்கதேவரால் காப்பியத்தின் தொடக்கத்தில் பாடப்பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது. பின்வந்த காப்பியங்கள் பலவும் இவ்வமைப்பு முறையினைப் பின்பற்றியுள்ளன.

பெருங்கதையில் இப்போது உள்ளவை ஐந்துகாண்டங்களே; ஆறாவது துறவுக் காண்டம் கிடைத்திலது. முதலில் உள்ள உஞ்சைக் காண்டத்தில் 32ஆம் காதை கரடுபெயர்த்தது; 58ஆவது காதை சயந்தி புக்கது. இரண்டவதாக விளங்கும் இலாவண காண்டத்தில் நகர் கண்டது முதல் சண்பையுள் ஒடுங்கியது முடிய 20 காதைகள் இடம்பெற்றன. மூன்றாவது மகத காண்டத்தில் யாத்திரை போகியது முதல் பறைவிட்டது முடிய 27 காதைகளும்; அடுத்துவரும் வத்தவ காண்டத்தில் கொற்றம் கொண்டது முதல் விரிசிகை வதுவை முடிய 17 காதைகளும்; ஐந்தாவது நரவாண காண்டத்தில் வயாக் கொண்டது முதல் மதனமஞ்சிகைபிரிவு வரை 9 காதைகளும் உள்ளன. மகத காண்டத்தில் 11ஆம் காதை கிடைக்கவில்லை. எனவே, இப்போது கிடைப்பவை 99 காதைகள். இவற்றிலும் சில பகுதிகள், தொடர்கள் மறைந்துவிட்டன.

இக்காப்பியத்தில் காணப்பெறும் 99 காதைகளும் னகர வொற்றை இறுதியாகப் பெற்ற நிலைமண்டில ஆசிரியப்பாக்கள். இவற்றின் சிற்றெல்லை 35 அடிகள்; பேரெல்லை 390 அடிகள். ஒரு காதையின் இறுதி அடுத்துவரும் காதையின் தொடக்கமாக வருவதுடன், ஒரு காண்டத்தின் இறுதி தொடர்ந்து வரும் காண்டத்தின் முதலாகவும் வரும் வண்ணம் சொற்பொருள் தொடர்நிலைச் செய்யுளாகப் பாடப்பெற்றிருத்தல் நோக்கத்தக்கது. இயைபு என்னும் செய்யுள் வனப்பிற்குப் பேராசிரியர் இக்காப்பியத்தை உதாரணமாகக் காட்டுதல் அறியலாம்.

பெருமித நடையில்பாடப்பட்டுள்ள இக்காப்பியத்தில் விளங்காத சொற்கள் சில காணப்படுகின்றன. பெருந்தேவனார்,

> "குண்டலகேசியும் உதயணன் கதையும் முதலாக வுடையவற்றில்
> தெரியாத சொல்லும் பொருளும் வந்தனவெனின்,
> அகலக்கவி செல்வானுக்கு அப்படியல்லது ஆகாது என்பது;
> அன்றியும், அவர் செய்த காலத்து அச்சொற்களும் பொருள்களும்
> விளங்கியிருக்கும் என்றாலும் அமையும் எனக்கொள்க"

என்று வீரசோழிய உரையில் (அலங்கார.4) குறித்திருத்தல் அறியத்தக்கது. இக் காப்பியத்தில் காணப்படும் பொருள் அறியப்படாத சொற்கள் கொங்குவேளிர் காலத்து வழங்கிப்பின் வழக்கொழிந்தன வாதல் வேண்டும். இச்சொற்களில் பல சீவக சிந்தாமணியிலும் வழங்குதல் காணலாம்.

பெருங்கதையில் அருஞ்சொற்கள்

தொல்காப்பியர் யா → ஞா என வினைச் சொற்களில் ஒலி மாற்றம் பெறும் என்றார் (தொல்.எழுத்து. நூ.146). பெயர்ச் சொற்களிலும் இம்மாற்றம் நிகழ்ந்தமைக்கு **யமன்** என்ற சொல் **ஞமன்** என்று சங்க இலக்கியங்களில் (புறம்.6:9; பரி.3:21, 5:61) பயின்று வருதல் சான்றாகும். பெருங்கதையில் **யாழ்** என்ற சொல் **ஞாழ்** என்று வழங்குதற்கு,

"தன்ஞாழ் நவிற்றிய தாமரை யங்கை" [III 6.17]

எனவரும் பகுதி சான்றாகும். **யான்** என்ற தமிழ்ச்சொல் மலையாளத்தில் **ஞான்** என்று வருதற்கும் இவ்வொலிமாற்றம் அடிப்படை ஆகும்.

அமரன் என்ற சொல் பொதுவாக வானவனைக் குறிக்கும். எனின், பெருங்கதையில் இச்சொல் **வீரன்** என்ற பொருளில் பயிலப்பெறுதற்கு,

"எமரன் ஆயின் இறைகொடுத்து அகல்க
அமரன் ஆயின் அமைவொடு நிற்கென" [I 37.201-2]

என்ற பகுதி சான்று. அமர்=போர். எனவே போர்புரிபவன் என்ற பொருளில் அமரன் என்ற சொல் ஆட்சி பெற்றது. லிச்சவி என்ற மன்னனின் பெயர் **எலிச்செவி** [III 17.10; 237;20:88] என்று ஆளப் பெற்றிருத்தல் வியப்பினைப் பயப்பது! அயல்மொழிச் சொற்கள் ர, ல-வில் தொடங்கினால் அ,இ,உ என்ற குறில் எழுத்துக்களில் ஒன்று முதலில் பெய்து வழங்குதல் பொதுவிலக்கணம். அரங்கு, இராமன், உரோமம் என்றும் இலங்கை, உலோகம் என்றும் வரும். எனின், எகரத்தினை முதலில் இட்டுக் கூறும் இம்மரபு (லிச்சவி → எலிச்செவி) பவணந்தி முனிவர் பார்வையில் படவில்லை போலும்! (காண்க:நன்னூல், பதவியல், நூ.148) புதுப்பொருளில் பயின்று வரும் சொற்களும் வேறு இலக்கியங்களில் காணப்படாத பல சொற்களும் பெருங்கதையில் நிறைய உள்ளன. இவற்றுள் பல, மறைந்தனவாகக் கருதப்பெறும் தலைச்சங்க, இடைச்சங்க இலக்கியங்களில் இடம் பெற்றனவாதல் கூடும்.

ஆதலின், பெருங்கதையில் வழங்கும் அரிய சொற்களின் வரலாறு தனியே ஆராயத்தக்கது என்பதும் மொழி வரலாற்றுக்கு இத்தகைய ஆய்வுகள் பயன்நல்கும் என்பதும் நோக்கத்தக்கன.

காப்பியத்தின் தலைவன் "தன்னேரில்லாத் தலைவன்" ஆதல் வேண்டும் என்பது இந்தியப் பாவியல் கொள்கை. **"The epic should have a national hero"** என்பது ஐரோப்பியக் கொள்கை. காப்பியத்தலைவன் தேசியத் தலைவனாதல் வேண்டும் என்பது கருத்து. இவ்விரு கொள்கைகளுக்கும் காப்பியத் தலைவன் உதயணன் பொருந்தி வரும் பாங்கினை நோக்குவோம்.

தன்னேரில்லாத் தலைவன்

பெருங்கதையில் இடம்பெறும் பிரச்சோதனன், அவன்மக்கள் பாலகன், பாலகுமரன், பாஞ்சால அரசன் ஆருணி, தருசகன் உள்ளிட்ட தலைமக்கள் யாவரினும் அறிவு, ஆற்றல், கல்வி, கலைத்திறம், வீரம், வெற்றி, பண்பு, அழகு, புகழ், பெருமிதம் முதலிய பல்வகைத் தகவுகளிலும் (Values) தகுதிகளிலும் தனக்கு உவமை இல்லாத தன்மை பெற்று வீறுற்று விளங்கும் தலைவனாகக் கொங்குவேளிர் உதயணனைப் படைத்துள்ளார். வத்தவம், சேதி, அவந்தி, பாஞ்சாலம், கோசலம், மகதம், காசி ஆகிய நாட்டு மக்களும் அரசரும் அரசகுமாரரும், மகளிரும், கலைஞரும் கைவினைஞரும் யாவரும் உவந்து பாராட்டத் தக்க **தலைமைக் குணங்கள் வாய்க்கப்பெற்ற இலட்சியத்தலைவனாக உதயணன் உருவாக்கப்பட்டுள்ளான். இவ்வகையில், இவன் தேசியத் தலைவனாகத் திகழ்கிறான்.** சிலப்பதிகாரத்தின் தலைவன் கோவலன், மணிமேகலையின் தலைவன் உதயகுமரன் ஆகியோரைவிட மேம்பாடு பெற்ற நாயகனாகக் கொங்குவேளிர் உதயணனைப் பயில்வார் மனக்கண்முன் கொண்டு நிறுத்தியுள்ளார். பெருங்கதையில் உதயண குமரனின் ஒப்பிலாத் தன்மைகளும் வியத்தகு ஆற்றல்களும் போற்றப்படும் சில பகுதிகளை இங்கு எடுத்துரைத்தல் சாலும்.

தன்னை மதியாதவர் முன்னிலையில் அவர் மருளும்படி தான் பெற்ற கல்வித்திறத்தையும் ஆற்றலையும் புகழலாம் என்ற மரபுக்கு ஒப்ப (அறங்களை விரித்துரைக்கும் பனுவல்களையும்) பொருளியல் பனுவல்களையும் உலகவரலாறு கூறும் நூல்களையும் சமயதருக்கங் களையும், (இயல்) இசை, நாடகம் மற்றும் பல்வேறு கலைகள் பற்றிய நூல்களையும் பயின்று நெஞ்சகத்தமைத்து ஒண்மையுடைய னாகத் திகழ்ந்தமையினைப் பிரச்சோதனனிடம் அளவளாவும்பொழுது உதயணன் புலப்படுத்தியமை சுட்டத்தக்கது [I 32:1-8].

உஞ்சை நகரத்துப் பொதுமக்கள்,

> **"விச்சையும் வனப்பும் விழுக்குடிப் பிறப்பும்**
> **ஒத்தொருங்(கு) அமைந்த உதயண குமரன்"**
>
> [I 35:169-170]

என்று பாராட்டிப் பேசுதல் எண்ணற்பாலது. மேலும்,

"வனப்பும் இளமையும் வரம்பில் கல்வியும்
தனக்குநிக ரில்லாத் தன்மையன்" [I 35:230-1]

"இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதியும் மாசில் சூழ்ச்சியொடு
எண்வகை நிறைந்த நன்மகன். . . " [I 36:89-92]

எனவரும் காப்பியப்பகுதியும் உதயணனின் ஒப்பிலாத் தலைமைத் தன்மைக்குச் சான்று பகரும். மாமன்னன் ஆகிய பிரச்சோதனன்,

"இனைத்தோ ரிளமையோ டெனைப்பல கேள்வியும்
தவத்தது பெருமையின் தங்கின இவற்கென" [I 32:1-9]

மருட்கையுற்று மதித்துப் போற்றினன். உதயணன் 'அரசர்க்கு அரசன்' என்றும், 'ஏகச்செங்கோலின்' என்றும் போற்றப்படுதல் காணலாம்.

முருகன் ஒப்புமை

காப்பியத்தில் மேலோங்கிவிளங்கும் தன்னேரில்லாத் தலைவனுக்கு உவமை கூறுதற்கு விரும்பிய பெருங்கவிஞர்கள் பலரும் மனிதரில் தக்க ஒப்புமைஉடையவர் இலராதலின் தெய்வங்களில் இளமை, ஆற்றல், தோற்றப் பொலிவு, வீரம், வெற்றி, காதல், கவின், இனிமை, அருள், மாண்பு முதலிய பல்வகைச் சிறப்புக்கும் மேல்வரம்பாகவும் பேரெல்லையாகவும் ஒளிவீசும் முருகனை உவமை கூறிப் போற்றினர். கொங்குவேளிர்,

"பத்திரா பதிமிசைப் பனிக்கடற் பிறந்த
வெஞ்சூர் தடிந்த அஞ்சுவரு சீற்றத்து
முருகவேள் அன்ன உருவுகொள் தோற்றத்(து)
உதையண குமரன்" [I 42:229-32]

என்று உதயணனை முருகவேளைப் போன்றவன் எனப் புனைந்துரைத்தல் காணத்தக்கது. வீரம் தழைத்த தமிழ் மரபிற்கு 'முன்னியது முடிக்கும் முருகனே' (புறம் 56:14) முதல்வனாதலின், கொங்குவேளிர்க்கு முன்னும் பின்னும் தோன்றிய பெருங்கவிஞர்களும் இங்ஙனம் உவமை கூறும் மரபினைப் பேணியுள்ளனர். சீவகனை,

"பூவினுள் பிறந்த தோன்றல் புண்ணியன் அனைய நம்பி" (316)

"முனைவனுக்(கு) இறைஞ்சினான் முருகவேள் அனான்" (1815)

என்று திருத்தக்கதேவர் சுட்டுதல் காணலாம். கொங்குவேளிரும் திருத்தக்கதேவரும் சமணர்களாயினும், தத்தம் காப்பியத்தலைவர்க்கு அருகனை உவமை கூறாமல் முருகனைக் கூறியிருக்கும் மாட்சி

எண்ணி இன்புறத்தக்கது. இவர்களுக்கு முற்பட்ட இளங்கோவடிகள், "கண்டேத்தும் செவ்வேள்" (1.38) என்றும்; சாத்தனார் உதயகுமரனை, "காரலர் கடம்பன் அல்லன் என்பது, ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்" (4:49-50) என்றும் காப்பியத்தலைமக்களைப் புகழ்தல் காணலாம். கம்பர் அனுமன் சொற்களில் அமைத்து,

> "மும்மைசால் உலகம் காக்கும் முதல்வர்நீர் முருகற் செவ்வி
> உம்மையே புகல்புக்கேம். . . . "

என்று இராமஇலக்குவரைப் போற்றிப் பாடியிருத்தலும்; சேக்கிழார் காப்பியத்தலைவராகிய சுந்தரரை, "முன்னேவந்து எதிர்தோன்றும் முருகனோ" எனப் பரவையார் மொழியில் வைத்துப் போற்றுதலும் அறியத்தக்கவை.

களிறு அடக்கும் மாவீரம்

காப்பியத் தலைவர் பலரும் மதக்களிற்றினை அடக்கிய மாவீரராகப் புனையப்பெறுதல் மரபு. கோவலன் கடக்களிறு அடக்கிய கருணை மறவனாகவும், உதயகுமரன் காலவேகம் என்ற களி மயக்குற்ற களிற்றினை அடக்கிய வீரனாகவும் புனையப்பெறுதல் போல் பிரச்சோதனனின் பட்டத்து யானை (யூகியால் மதுவூட்டப் பெற்ற) நளகிரியைத் தன் யாழிசையினால் உதயணன் கட்டுப்படுத்திய கொற்றத்தைக் கொங்குவேளிர் பொலிவுறப் புனைந்துள்ளார். இங்ஙனமே சீவகன் கட்டியங்காரனின் அசனிவேகம் என்னும் மதயானையினை அடக்கிய மாட்சியைத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்.

தாம் வரம்பாகிய தலைமை

காப்பியத்தலைவன் ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து ஒளிவீசுதல் வேண்டும். வாளேந்தும் அவன்கை நூலேந்தவும் வேண்டும். படைத்தலைவனாக மட்டுமன்றிப் பலகலைகளைப் பயிற்றுவிக்கும் பேராசிரியராகவும் திகழ்தல் வேண்டும் என்ற குறிக்கோள் பாத்திரமாக உதயணன் படைக்கப்பட்டுள்ளான். "யாழ்கை வைத்தது" என்ற காதையில் உதயணனின் இசைக்கலைப்புலமையினையும் பிரச்சோதனன் மகள் வாசவதத்தைக்கு யாழ்கற்பித்த சிறப்பினையும் காண்கிறோம். ஆயத்தார் பலரும்,

> "மழலைக் கிண்கிணிக் கழலோன் பெருமகள்
> அரும்பெறல் தத்தைக்கு ஆசான் ஆகிப்
> போக வீணை புணர்க்கப் பெற்ற
> தேசிக குமரன் திருவுடையன்" [I 34:175-8]

என்று வியந்து போற்றினர். உதயணனிடம் வாசவதத்தை யாழ் பயின்ற பாங்கினை,

"பண்ணமை நல்யாழ்ப் பலிக்கடன் வசீஇய
அண்ணல் வருகென அவ்வயின் ஓடி
ஒண்டொடி மகளிர் கொண்டகம் புகுதரத்
தானைத் தவிசின் தகையோன் ஏற
ஏனைத் தவிசின் நங்கையை இருத்தினர்.....
நன்னர்க் கிளவி நயவரப் பயிற்றி
ஆசான் கொடுக்கும் அரும்பெறல் விச்சை.......
தெய்வத் தன்ன திறலோன் காட்டக்
கைவைத் தனளாற் கனங்குழை யாழென்" [I 34:228-46]

எனவரும் பகுதியில் கொங்குவேளிர் விரித்துரைத்தனர்.

பிரச்சோதனனின் புதல்வர்களுக்குப் பல்வகைக் கல்வியோடு படைக்கலப் பயிற்சியும் உதயணன் வழங்கினான். இத்திறத்தினை,

"பெருமகன் இருந்த திருமலி அவையத்துக்
கொற்ற வேந்தன் குடிகெழு குமரரைக்
கற்றவை காட்டும் வத்தவர் கோவெனப்
பல்பெருங் கேள்வி படைத்தோ ரன்ன
கல்வி மாந்தர் , கலித்த கௌவையில்
ஆப்புறு பாடமொடு அருத்தம் கூறி
நாக்கொள் கேள்வி நவிற்றிக் காட்டி" [I 37:17-23]

எனவரும் காப்பியப்பகுதி உணர்த்துகின்றது. அக்காலத்து வழங்கிய பல்வகைப் படைக்கலப் பயிற்சியையும் அவர்களுக்கு உதயணன் புகட்டிய பான்மையினையும் மிகவும் விரிவாக ஆசிரியர் பாடியுள்ளார் [I 37:25-55]. இப்பகுதியில்,

"மழைத்துளி படினும் வான்துகள் சூழினும்
விலக்கித் தவிர்க்கும் விற்றொழில்" [I 37:49-50]

என்று வில்வித்தையின் தனிச்சிறப்பு கூறப்பட்டது.

தன்மகளுக்கு வித்தை பயிற்றுவித்த உதயணனுக்கு ஒன்பது கோடி ஒண்பொருள் கொடுப்பினும் அதனைப் பொருளாகக் கொள்ளான்; தன்னாட்டிற்கு அவனைத் தலைவனாக்கி அவன் ஆட்சியின் கீழ் குடிமகனாக இருப்பதே செய்யத்தக்க நன்றி என்று பிரச்சோதனன் பேசுதலின் காப்பியத்தலைவனின் தன்னேரில்லாத் தலைமை புலனாகும் [I 37:60-71].

உதயணன்பால் மையலுற்ற அரசகுமாரி வாசவதத்தை,

"தோற்றம் நிகர்ப்போ ரின்றி ஆற்றல்
காலனோ டொக்கும் ஞாலப் பெரும்புகழ்
புகரின்று ஓங்கிய நிகரில் கேள்வியன்

காமம் நுகர்வோர்க்(கு) ஆரணங் காகிய
ஏம வெண்குடை ஏயர் மகனொடு” [I 36:100-5]

என்று வாய்விட்டுப் பேசுதல் காணத்தக்கது. அவளைத் தேற்றலுற்ற மூதாட்டி சாங்கியத்தாய் இயம்பும் பகுதியில் [I 36:89-98] இளமை, வனப்பு, குடிப்பிறப்பு, வளமை, தறுகண்மை, வரம்பில்கல்வி, அரசஉரிமை, மாசற்ற சூழ்ச்சித்திறம் என்ற எண்வகைப் பண்பும் நிறைந்த நம்பிக்குத்தான் பிரச்சோதனன் அவளை மணம்புரிவிப்பான் என்றும், மகட்கொடை வேண்டி வந்த அரச குமரர் ஒருவர்க்கும் இவ்வெட்டுக் குணங்களும் ஒருங்கமையாமையானும் அவர்களுக்கு உடன்படான் என்றும், எனவே இவை எல்லாம் அமைந்த உதயணனுக்கு மட்டுமே மகட்கொடை நேர்வான் என்றும் அறிவுறுத்தலினாலும் காப்பியத் தலைவன் யாவரினும் உயர்ந்து மேம்பட்டு விளங்குதல் புலனாகும்.

உலகியல் வித்தைகளேயன்றி மந்திர வித்தை, புதையல் எடுத்தல், நீரோட்டம் காண்டல் முதலிய வித்தைகளிலும் உதயணன் தேர்ச்சி பெற்றவன். மகததேசத்து மன்னன் தருசகனின் தந்தை நிலத்தின்கீழ் மறைத்துவைத்துச் சென்ற புதையல் செல்வத்தை உதயணன் எடுத்துக்கொடுத்தான். நீரூற்றுக்கள் சிலவும் இவனால் காட்டப்பட்டன. ஆதலின் ஆருணியை வெல்லுவதற்கு அவன் துணைவலியாக உதவினான்.

இனி, காப்பியத்தலைவனின் இல்லற வாழ்வினைக் காண்போம்.

நன்மணம் புணர்தல்

வாசவதத்தை திருமகளையும் அழகினால் வென்றவள். ஒண்மை, நிறை, புகழ், பெண்மை, பெருமை முதலிய குணங்கள் நிரம்பியவள்[I 34: 149-54].

எனவே, காப்பியத்தலைவனைப்போலவே, காப்பியத்தலைவியும் ஒத்த மகளிரில் யாவரினும் மேம்பட்டுத் தன்னேரில்லாத் தலைமை பூண்ட இலட்சியப் பாத்திரமாகவே படைக்கப்பட்டிருத்தல் எண்ணி இன்புறத்தக்கது. இவளுக்கும் யாழிசை ஆசானாக அமைந்த உதயணனுக்கும் அகனமர் காதல் அரும்பிக்கனிந்து முற்றியது. இருவருக்கும் திருமணம் நடந்த நிகழ்ச்சியை மிகவிரிவாகக் கவிஞர் பாடியுள்ளார் [காண்க:II 2].

காசியரசன் மகளும் தருசகனின் வளர்ப்புத்தங்கையும் ஆகிய பதுமாவதியைக் காமக்கோட்டத்தில் கண்டு காதலுற்று உதயணன் தன் இசைத்திறனால் அவள் உள்ளங்கவர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்துக் காந்தருவ மணம் புரிந்துகொண்டனர். எனின், பகைவர்கள் தருசகனோடு போர்புரியவந்தபொழுது அவர்களை வென்ற உதயணனுக்குத்தருசகன் தங்கையை உலகறிய மணம் புரிவித்தான்.

கோசலத்து அரசன் மகள் **மானனீகை.** இவள் இயற்பெயர் வாசவதத்தை. பிரச்சோதனன் மகளினின்றும் இவளை வேறாக அறிதல் வேண்டும். இவள் முதலில் தன் பெருந்தேவிக்குப் பணிப் பெண்ணாக இருந்தவள். இவள் பந்தாடிய திறத்தினை வியந்து காதலித்து மணந்துகொண்டான். இந்நிகழ்ச்சியைப் **"பந்தடி கண்டது"** [IV 12] என்ற காதையில் கொங்குவேளிர் மிக விரிவாகப் பாடியுள்ளார்.

ஒரு முனிவரின் மகள் **விரிசிகை** பலவகைப் பூக்களையும் உதயணனிடம் தந்து மாலை தொடுத்துத் தரும்படி கேட்டனள். அங்ஙனமே தொடுத்த மாலையினை அவளுக்குச் சூட்டினான். அப்போது அவள் சிறுமி. எனினும், உதயணனைத்தவிர ஒருவரையும் எண்ணாத கற்புள்ளம் வாய்ந்தவள். தன்பால் அவள் கொண்ட காதலை முனிவரால் உணர்ந்த உதயணன் தன் அரண்மனைக்கு அவளை வரச்செய்து மணம் செய்து கொண்ட திறத்தினைக் காப்பியம் கற்பனை வளத்துடன் புலப்படுத்துகின்றது [II 15; IV 15,16,17].

எனவே, உதயணன் நால்வரை மணம்புரிந்த செய்தியை அறிகிறோம். இவருள் பிரச்சோதனன் மகள் வாசவதத்தை பட்டத்துத் தேவியாக விளங்கியவள். அவன் தேவியர் அனைவருமே தலைமை சால் பண்புகள் நிறைந்தவர்கள்.

பொன்முடிகவித்தல் என்ற காப்பியக் கூறு கதைச்சுருக்கத்தில் முன்பே கூறப்பட்டது. இங்ஙனமே உதயணனின் புதல்வர் பற்றியும் கண்டோம்.

இயற்கைக் காட்சிகள்

காப்பியத்தில் பல்வகை இயற்கைக் காட்சிகளையும் அழகுணர்ச்சியும் படைப்பாற்றலும் தோன்றக் கவிஞர் படைத்துப் பயில்வார்க்கு இலக்கிய இன்பத்தை வழங்கியுள்ளார். இரண்டொரு காட்சிகளை நோக்குவோம்.

பொழிற்காட்சி

சந்தன மரங்கள் வேலியாக அமைந்த சண்பகச் சோலை. அங்கு இளம்பணிப்பெண்கள் வேங்கை மரத்தில் கட்டிய ஊசலில் அமர்ந்து ஒருவரொடொருவர் மாறுபட்டுப்பாடும் ஊசற்பாட்டின் தாளத்திற்குத்தக அழகிய மயில்கள் ஆடல் புரியும்; கதிரவன் வெயிலும் உட்புகாதபடி செறிந்துள்ள பொதும்பரில் பூந்துகளைக்கிளறும் ஆண்வண்டினை மதர்த்த பெண்வண்டு முரன்று மருட்டும்; கவின்மிகு கருங்குயில் தன் துணையாகிய சேவலைத் தானிருக்கும் மரக்கிளைக்கு வரும்படி விளிக்கும். பவழச்செங்கால் பன்மயிர் எருத்தினை உடைய கவரும்குரல் வாய்ந்த அன்னப்பெடை, தன்துணையான பானிறச்

சேவல் கமுகமரத்தின்பாளையினால் மறைப்புண்டதால் காணப்படாமை நோக்கி உளம் கலங்கும் [I 33: 22-31].

எழில்மிகு பொழிலின் பல்வகைக் காட்சிகளிலும் மனம் கொடுத்த உதயணன் வாசவதத்தையின் நினைவு மீதூரப் பெற்று ஆற்றாது உளைந்தான். தனியே இயற்கைக் கவிதை என்று புலவர்கள் பாடுவது அரிது. காப்பியக்கவிஞன் தலைமக்களின் உணர்வுகளைப் புலப்படுத்தும் வகையில் அக்காட்சிகளை அவர்தம் வாழ்வியல், உளவியலுடன் இணைத்து விடுதலே இலக்கிய மரபாக அமைந்துள்ளது.

மாலைக்காட்சி

வெப்பம் தணிந்த பகலவன் அனலில் காய்ச்சிய வட்டப் பொற்றகடு போன்று சுருங்கிய கதிர்க்கற்றையுடன் மேற்குமலையில் மறைந்தான். விலங்குகளும் பறவைகளும் தத்தம் காதல் துணையை எண்ணிச்சென்றன. பாரினை ஆண்ட செங்கோல் வேந்தனின் மறைவிற்குப்பின் அவனுக்குக் கப்பம் கட்டாத குறுநிலமன்னர்களைப் போன்று விண்மீன்கள் பசலைபாய்ந்த வானத்தில் எழுந்தன. முலைப்பால் பருகும் இளம்பருவத்தே அரசுரிமையால் முடிசூட்டப் பெற்ற தேர்ப்படைத்தலைவனும் வெண்கொற்றக் குடையுடையவனும் உலகுபுரப்பவனும் ஆகிய அரசிளங் குமரனைப் போல், முகிலாகிய மாசினை நீக்கி எங்கும் தண்ணொளி பரப்பும் இளம்பிறை செக்கர் வானில் தோன்றியது. பைந்தொடி மகளிர் அதனைக் கண்டு பரவிப் போற்றினர். இளந்திங்கள் நிலாமுற்றத்திலும் தண்ணொளி பரப்பியது [I 33: 40-60].

வைகறைக்காட்சி

முழங்கும் கடலில் வீழ்ந்து உழந்தவர் நீந்திச் சென்று கண்ட அதன் கரையினைப்போல வைகறை காட்சி தந்தது. பொய்கைகளில் பூக்கள் மலர்ந்தன; பால்போன்ற நிறமுடைய அன்னங்கள் முதலிய வண்ணப்பறவைகள் பலவும் ஒலித்தன; பாரில் புதைந்திருந்த இருள் அகன்று பொழுது புலர்ந்தது [I 33: 208-213].

இங்ஙனம் விடியற் காட்சியைப்புனைவதன் வாயிலாக உதயணன் காதல் வாழ்வில் ஒரு விடிவு தோன்றப் போவதைக் கவிஞர் முன்கூட்டியே குறிப்பால் உணர்த்துகின்றார்.

பிறகாட்சிகள்

பொழிலாடல், புனலாடற் காட்சிகள் உஞ்சைக் காண்டத்தில் பல காதைகளில் படைக்கப்பட்டுள்ளன [I 38,39,40,41,42].

மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை முதலிய திணைக் காட்சிகளையும் தமிழ் இலக்கிய மரபினைப் பின்பற்றிப் பெருங்கதையில் தொடர்வருணனையாகக் கொங்குவேளிர் அமைத்துள்ளார். பிரச்சோதனன் அனுப்பிய படைவீரரை உதயணனின் வீரர்கள் வென்று வீழ்த்திப் பிடியின் மீது வாசவதத்தையினை மேற்சுட்டிய நான்கு நிலங்களின் வழியே கொண்டு ஏகிய திறனை நான்கு காதைகளில் கொங்குவேளிர் பாடியுள்ளார் [I 48,49,50,52]. ஆற்றுவளம் பாடவேண்டும் என்ற கடப்பாட்டினால் "நருமதை கடந்தது" என்ற காதையினையும் அமைத்துள்ளார். வாசவதத்தையின் வயாவருத்தம் தீர்த்தற் பொருட்டு எந்திர ஊர்தியில் அவளை ஏற்றிப் பலதேசங்களையும் இயற்கைக் காட்சிகளையும் உதயணன் காண்பித்தான். கடைசியில் "குமரித்துறையும் அமர்வனர் நோக்கி" என்று தமிழகத்தின் தென்கோடி வரையும் வான்வழிப்பயணம் செய்த காட்சிகள் யாவும் இலக்கிய இன்பமும் கற்பனைச் சுவையும் தருவன. [V 4:51-154] எனின், நெய்தல் திணை பற்றிய புனைவு இக்காப்பியத்தில் இடம்பெறாமை வியப்பாக உள்ளது.

காப்பியத்தின் பிற கூறுகள்

அமைச்சியல் ஆய்வு (-மந்திரம்), தூது, படைச்செலவு, போர், வெற்றி என்ற கூறுகள் பலவற்றையும் பெருங்கதையில் திறம்பட அமைத்துள்ளார். காப்பியத்தில் நெருங்கிய சுவையும் பாவமும் அமைதல் வேண்டும் என்பர். பெருங்கதையில் எண்வகைச் சுவையும் தொடர்புடைய மெய்ப்பாட்டுக் கூறுகளும் சிறப்புறப் புனையப் பெற்றன. ஓரிரு சுவைக்குரிய சான்று காண்போம்.

பெருமிதச்சுவை

தொல்காப்பியர் கல்வி, தறுகண்மை, இசைமை, கொடை என்ற நான்கன் நிலைக்களத்தில் பெருமிதச்சுவை தோன்றும் என்றார். உதயணனிடம் கலைக்கல்வியும் படைக்கலப்பயிற்சியும் பெற்ற பிரச்சோதனனின் மக்கள் அரங்கேறித் தம் கலைத்திறத்தினை வெளிப்படுத்தியதை நோக்கிய அவையோர் பாராட்டினர். புகழுரை கேட்ட வேந்தன், தேர்ச்சிமிக்க இசையாசிரியர்களையும், ஆடல்பாடல் மகளிரையும் எழுதும் கணக்கர் தந்த பட்டியல்படி அவர்கள் அனைவருக்கும்,

"கட்டுடைக் கலனும் கதிர்முத் தாரமும்
பட்டியற் கலிங்கமொடு பாசிழை நல்கி" [I 37:155-6]

இசைமை, கொடை காரணமாகப் பெருமிதம் பொலியத்திகழ்ந்தான்.

நகைச்சுவை

முகவெழுத்துக் காதையில் [IV. 13] நகைச்சுவை துளும்பக் காணலாம். மானனீகை அரசகுமாரி ஆயினும் சூழ்நிலை காரணமாக உதயணனின் முதல்தேவி வாசவதத்தைக்கு ஒப்பனை புரியும் பணிப் பெண்ணாக இருந்தாள். அவளுக்கு யவன மொழியும் தெரியும் என்பதை உதயணன் அறிவான். அவள்பால் தான்கொண்ட காதலைப் புலப்படுத்த ஓர் உபாயம் கண்டான். தன் மாளிகைக்கு வந்த வாசவதத்தையினைப் பார்த்து, "உனக்குச் செய்த ஒப்பனை உன் அழகினைக் குறைப்பது. யானே அழகுறுத்துவேன்" எனக் கூறி அவள் நெற்றியில் மானனீகை மட்டும் புரிந்துகொள்ளும்படி யவன எழுத்துக்களில் காதல்மடல் புனைந்தான். அவள் பந்தாட்டத்தினால் விளைந்த காதல் நோய்க்கு அவள் மார்பே மருந்தாகும். பந்தடியானது அவன் உள்ளத்தைப் பறையடியாகத்துடிக்கச் செய்தது என்றும் இடமின்மையின் சுருக்கமாகவே எழுதியிருப்பதாகவும் குறையிரந்தும் மடலில் வரைந்திருந்தான். உண்மையில் சொல்லவேண்டிய எல்லாம் சொல்லிய பின்னும் இடம் கருதிச் சுருங்கச் சொல்லியதாகக் கூறுதல் நகைதரும். மேலும், மானனீகை வாசவதத்தையின் முகவெழுத்தைப் படித்துத்தான் ஒப்பனை செய்யும் பாங்கில் இரவுக்குறி நயப்பித்து ஓலை போக்கியதும் - இங்ஙனம் உதயணன் மானனீகை இருவருக்கும் நிகழ்ந்த கடிதப் போக்குவரத்தும் இதனை உணராதிருந்ததுடன் இந்நிகழ்வுகளுக்கெல்லாம் ஏதுவாக அமைந்த வாசவதத்தையின் பேதைமையும் எண்ணும்தொறும் நகை விளைவிப்பதாகும் [IV 13:63-181].

காப்பியம் படிப்பவர்க்கு இன்பம் பயத்தலுடன் உறுதிபயத்தல் வேண்டும் என்றும் இந்தியப் பாவியலார் [Poeticians] எண்ணினர். எனவேதான், "**நாற்பொருள் பயத்தல்**" காப்பியக் குறிக்கோள் என்று வலியுறுத்தினர். பெருங்கதையில் இத்திறம் அமையும் பாங்கினைச் சிறிது காண்போம்.

நாற்பொருள் பயத்தல்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் முறையாகப் பெறுதல் மாந்தர் யாவர்க்கும் உரியது. அறம் என்பது வாழ்க்கைத் துணைவியுடன் மனையில்இருந்து மக்களைப் பெற்று விருந்தோம்பிக் குடும்பத்தார்க்கும் சமுதாயத்திற்கும் ஆற்றவேண்டிய இல்லறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும். இன்பம் என்பது தன் அகனமர் தலைவியுடன் பொழிலாட்டு, புனலாட்டு என்று இயற்கை எழில் துய்த்து ஐம்புலனும் நுகரும் திளைப்பு. பொருள் என்பது வாழ்க்கைக்கும் ஆட்சிக்கும் அடிப்படையாய் அமைவது. வீடு என்பது உலகில் ஒருவன் துய்த்தற்குரியன யாவையும் நுகர்ந்தபின் பிறவிச்சுழற்சியினின்றும் விடுபட்டு எய்தும் பேரின்பநிலை.

அறநூல்களும் சமய நூல்களும் காப்பியங்களும் விரித்துரைக்கும் நாற்பொருட் கோட்பாடு மனிதனின் பூரணத்துவத்தை நோக்கமாகக் கொண்டது. மனிதனுக்கு நால்வகைத் தேவைகள் உள்ளன. இவை பூரணமாக நிரம்பப் பெற்றால்தான் அவன் முழுமை பெறுகிறான். உணர்ச்சித் தேவைகளை [emotional requirement] நிறைவு செய்வதுதான் இன்பம். உணவு, உடை, உறையுள், ஊர்தி என்பன எல்லாம் மனிதனின் பௌதிகத்தேவைகள் [physical requirement]. இவற்றை நிறைவு செய்வதுதான் பொருள். உணர்வு, உடல் பற்றிய இவ்விரு தேவைகள் நிரம்பினும், உள்ளத்தின் பூரணத்துவம் [psychical perfection], அறத்தினால் விளைவது. உணர்வு, உடல், உள்ளம் என்ற மூன்றின் முழுமைக்கும் முறையே இன்பம், பொருள், அறம் என்ற உறுதிப் பொருள் மூன்றும் தேவை என்பதை உணர்ந்த தொல்காப்பியர்,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்று மனிதன் ஒழுகலாற்றினைக்குறித்தனர். சமய, மெய்ப்பொருள் உணர்வு மல்கிய சங்கம் சார்ந்த காலத்தில்தான் வீடுபற்றிய விழுமிய கோட்பாடு வளர்ந்தது. எனவே, துறவறமும் வீடுபேறும் வலியுறுத்தப் பெற்றன. உயிரின் பூரணத்துவதை [spiritual perfection]ப் பேசுவதுதான் "வீடு" என்ற உறுதிப்பொருள், இவர் சமணராதலின் அருகநெறிக்குரிய கருத்துக்களும், சினாலய வழிபாடும் [II 2:110-138 முதலியன], துறவு நெறியும் காப்பியத்தில் பொறித்துள்ளார்.

பெருங்கதையில் வரும் தலைமகன் உதயணன் நால்வரை மணந்து அறம்புரிந்து இன்பம் எய்தியவன். நல்லாட்சி புரிந்து பொருளைப் பெருக்கியவன். துறவு மேற்கொண்டு வீடுபெற முயன்றவன். வீடுபற்றிய குறிப்புக்கள் இருப்பினும், "தருமமும் அருத்தமும் காமமும்" [III 1:48] என்று அறம், பொருள், இன்பம் என்பன மூன்றுமே சுட்டப்பட்டன.

இனி, காப்பியம் "கற்றோர் புனையும் பெற்றியது" என்ற கொள்கை பற்றிச் சிறிது காண்போம்.

கற்றோர் புனைதல்

கொங்குவேளிர் தென்மொழி, வடமொழி, அர்த்தமாகதி, பாகதம், பாலி, பைசாசம், யவனம் எனப் பலமொழிகளிலும் புலமை முற்றியவர். கவிதைக்கலை, இசைக்கலை, ஆடற்கலை, சிற்பக்கலை, கரந்துரைக்கணக்கு, மந்திரக்கலை, ஆட்சிக்கலை, போர்ப்பயிற்சிக்கலை, சோதிடக்கலை, மருந்தியல் முதலிய பல்வகைத் துறைகளிலும் பெற்ற சீரிய அறிவினால் காப்பியத்தினை மிகச் சிறப்புறப் படைத்துள்ளார். கற்பனைத்திறமும் படைப்பாற்றலும் மிக்க இவர் தொல்காப்பியம்,

சங்க இலக்கியம் உள்ளிட்ட பழந்தமிழ்ப் பனுவல்களிலும், காப்பியங்களிலும், அறநூல்களிலும் சமண ஆகமங்களிலும் நிரம்பிய புலமை வாய்த்தவர்.

அவர் படித்தறிந்த பனுவல்களின் வழிப்பட்ட சமுதாயத்தின் அனுபவங்களையும் பார்த்தறிந்த சமுதாயத்தின் அனுபவங்களையும் காப்பியக் கதைப் போக்கிலும் காட்சிப் புனைவிலும் அமைத்துக் காட்டியுள்ள பாங்கு படித்தின்புறற்பாலது.

கல்விகேள்விகளில் சிறந்த இப்பெருங்கவிஞர் ஒரு மாபெரும் காப்பியம் படைத்ததில் வியப்பில்லை. இவர் புலமைக்குச் சான்றாகச் சில மேற்கோள்களை இங்குக் காண்போம்.

கபிலர் குறிஞ்சிப்பாட்டில் 99 வகைப்பட்ட தாவர விசேடங்களை அடைகொடுத்து அழகுற அடுக்கிப்பாடியுள்ளார். இதனுள், "வள்ளிதழ் ஒண்செங்காந்தள்" எனத் தொடங்கி, "மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்" [61-95] என்பது முடிய மனக்கண்முன் வண்ண மலர்ச்சோலை வந்து நிற்பதுபோல் காட்சிப்படுத்தியுள்ள கற்பனைக் கவினைக் கொங்குவேளிர் துய்த்தவராதல் வேண்டும். பெருங்கதையில் குறிஞ்சித் திணை வளம் கூறும் பகுதியில், 'தகரம்கவினிய தண்வரைச் சாரல்' எனத் தொடஙங்கி, "ஏரில வங்கமும் ஏலமும் இருப்பையும்" என்பது முடிய அரிய தாவரக்காட்சியைத் தந்துள்ளார் [I 50:21-33]. கபிலரையும் கொங்குவேளிரையும் போல் அருணகிரிநாதர் பல்வகைமலர் தாவர விசேடங்களையும்,

"அவுஷதம் உளசில கிலுகிலுப்பைகள்
அரசிலை நறுவிலி கரிய கக்கரி
அத்தி செம்பி ராகை முட்கா வளை
துத்தி சங்கம் ஓரிதழ்த் தாமரை
அவுரி கற்றாழை யொடுவைகு றிஞ்சிலி
சிவிறி கத்தாரி பொடுதலை சண்பகம்
ஆரைகொடு வேலிவேல் காஞ்சிரம்
வீரையிரு வேலிபே ரீந்திலை
அமுக்கினை எருக்கிலை முருக்கிதழ் செருப்படை
அகத்தி தமரத்தை மதமத்தமொடு பித்திகை
ஆலம் ஆத்தி கடுக்கை கொடிக்கழல்
கோலி தேட்கடை நெய்க்கொடை வக்கணை
அகில்ப ரம்பை காரை துடரி தும்பை சூரை
அலரி சம்பு நாவல் மருது சிந்துவாரம்
அறுகு தழுதாழை மாபாலை புன்கு
புரசு பழுபாகல் பூலா அழிஞ்சில்
ஆயில் ஆவிரை இறலி இரும்பிலி"

எனச் சந்தம் சிந்தும் வண்ணம் பாடியிருத்தல் எண்ணி மகிழத்தக்கது. இங்ஙனம் சுட்டப்பெற்ற செடி, கொடி, மரம், மலர் முதலியவற்றின் அறிவு இயற்கையின் எழிலைப்புலப்படுத்துவதுடன் சித்த மருத்துவத் தேர்ச்சியினைப் புலப்படுத்துவதாகவும் கருதற்பாலது. மேற்சுட்டப் பெற்ற பாடலில் குறிக்கப்பெற்றுள்ள இரும்பிலி என்பது தாவர விசேடம்; ஆதலின், இரும்பிலிக்குறிச்சி என்னும் ஊர்ப்பெயர் இத்தாவரச் சிறப்பினால் வழங்கப்பெற்றதாதல்வேண்டும்.

நீராட்டினைப் பற்றிப் பெருங்கதையில் வரும் காட்சிகளுக்குப் பரிபாடலில் புனைந்துரைக்கப்பட்ட வையைப் புதுப்புனலாடல் காட்சிகள் முன்மாதிரியாகக் கருதற்குரியவை. நீராடச் சென்ற நகரப் பெருமக்கள் தத்தம் உள்ளம் கவர்ந்த நாரைகளின் காட்சி, பிடியின் செயல், குரங்கின் காட்சி, களிமகன் செயல், மயிலின் செயல், சில மங்கையர் செயல்கள் - என்றின்னோரன்னவற்றைத் தம் உள்ளம் கலந்தவர்க்குக் காட்டிப் பேசும் களிப்புரைகள், "உவந்தவை காட்டல்" என்ற காதையில் புனையப்பெற்றன [I 40]. சான்றாக,

"அரிப்பொற் கிண்கிணி ஆர்ப்ப இயலிக்
கருங்கண் மகளிர் கைபுடைத் தோப்ப
இருங்கண் விசும்பகம் இறகுறப் பரப்பிக்
கருங்கயல் கொண்ட கவுள வாகிப்
பொங்கிடும் புன்னைப் பூம்பொழில் முன்னிச்
செங்கால் நாரை செல்வன காண்மின்" [I 40:18-23]

"இருங்கை இளம்பிடி கடச்செருக்(கு) எய்திக்
கடிற்றுப் பாகன் கைப்புழிச் செல்லாது
தொடிக்கை மகளிர் நீர்குடை வெரீஇய
நெட்டிரும் பொய்கைக் குட்டம் மண்டி
ஒளிச்செந் தாமரைப் பாசடைப் பரப்பிற்
களிக்கயல் இரியக் குளிப்பது காண்மின்" [" 31-36]

" . . . .
வெள்ளி வள்ளம் பல்லுறக் கவ்விக்
கூடக் கூம்பின் நீள்திரள் ஏறி
உச்சிக் கிவரும் கட்கின் கடுவன்
வீழ்ந்த திங்களை விசும்புகொண் டேறும்
தெய்வ மகாஅரின் ஐயுறத் தோன்றித்
துள்ளுபு திரிதரும் தோற்றம் காண்மின்" [" 71-76]

எனவரும் காப்பியப் பகுதிகளைக் கூறுதல் சாலும். இப்பகுதியினைக் கவிஞர் பெருமான் படைப்பதற்குப் பரிபாடற் காட்சிகள் முன்மாதிரியாக விளங்கினவாதல் வேண்டும். பரிமேலழகர் 'உவந்தவை

காட்டல்' என்றே இப்பாடற் பகுதிகளை விளக்கியுள்ளார்.[பரி: 11.121-132; 12.56-75,20.82] காப்பியச் சுவையினைப் பெருக்குதற்குக் கொங்குவேளிர் இத்தகைய கற்பனைகளை அறிமுகம் செய்தனர் எனலாம்.

தொன்மைத் தொடராட்சி

சங்க இலக்கியத்தொடர்களும், சொற்களும், காட்சிகளும் பெருங்கதையில் காணப்படுகின்றன. ஒருசிலவற்றைக் காண்போம்.

அகநானூற்றில், **"இலமல ரன்ன அஞ்செந்நாவின்"** [142:1]

எனவரும்பகுதி, **"இலமலர்ச் செவ்வாய் எயிறு விளக்குறுக்க"** [I 33.118] என்றும்;

மதுரைக்காஞ்சியில், **"சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்"** [492] என்பது

"அறநிலை பெற்ற அருள்கொள் அவையத்து" [I 34.25] என்றும் பெருங்கதையில் வழங்குதல் நோக்கத்தக்கது.

திருக்குறள் கருத்தினை **'வாய்மொழி'** என்றும், திருவள்ளுவரை **'உயர்ந்தோர்'** என்றும் கொங்குவேளிர் போற்றியுள்ளார். சோம்பேறியின் மடியில் வறுமைக்குரிய மூத்தவள் (சேட்டாதேவி) உறைவாள்; சோம்பல் இல்லாதவனின் முயற்சியில் செல்வத்திற்குரிய திருமகள் உறைவாள். எனவே, சோம்பல் நீங்கி மனிதன் முயற்சியுடன் உழைத்தல் உயர்வளிக்கும் என்ற கருத்தில்,

"மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான்
தாள்உளாள் தாமரையி னாள்"

எனவரும் திருக்குறள் ஆள்வினையுடைமை அதிகாரத்தில் இடம் பெற்றது. இக்குறளினை,

"செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மகள் தான்எனல்
வையகத்து **உயர்ந்தோர் வாய்மொழி**" [II 17:39-41]

எனவரும் பகுதியில் கொங்குவேளிர் ஆண்டிருப்பதுடன் போற்றியிருப்பதும் எண்ணற்பாலது. இவ்வாறே **தண்டமிழாசான் சாத்தனாரும், "பொய்யில் புலவன் பொருள் உரை"** என்று **மணிமேகலையில் 'தெய்வம் தொழஅள்' என்ற திருக்குறளை எடுத்தோதிப் போற்றுதல் இயைபு கருதி இவண் கூறுதற்குரியது.** சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய முற்காப்பியங்களின் தொடர்கள், கலைகள், நகர வருணனை, சமயங்கள் பற்றிய குறிப்புக்கள் பெருங்கதையில் காணப்படுகின்றன. விரிப்பிற்பெருகும்.

இதுகாறும் எழுதியவாற்றான் பெருங்காப்பிய இலக்கணக் கூறுகள் பலவும் நிரம்பிய **ஒப்பற்ற காப்பியம்** பெருங்கதை என்பது புலனாகும். பல்வகைச் சுவடிகளையும் ஆராய்ந்து உ.வே.சா. அவர்கள் 1924இல் வெளியிட்ட பதிப்பும், பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனாரின் உரையுடன் வெளிவந்த கழகப்பதிப்பும் [1971-3] பயன்மிக்கவை. **திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணி என்னும் சீரிய காப்பியத்தைப் படைப்பதற்குக் கொங்குவேளிர் பலநிலைகளில் முன்மாதிரியாக விளங்கியுள்ள உண்மை, காப்பியக்குறிக்கோள் என்ற நம் நூலில், "பெருங்கதையும் சிந்தாமணியும்" என்ற ஆய்வுக்கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளமை இவண் இயைபுகருதிச் சுட்டுதற்கு உரியது.**

இனி, காப்பிய வரிசையில் கருதப்பெறும் "பாரதவெண்பா" தோன்றிய சூழலும் இலக்கியத்திறனும் பற்றி ஆராய்வோம்.

பாரதவேண்பா

பழந்தமிழ் இலக்கியங்களில் பாரதக் கதைக்கூறுகள்

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்தபோரினை மையமாகக் கொண்டது மகாபாரதம். இந்திய இதிகாசங்கள் இரண்டனுள் இஃதும் ஒன்று. **மகாபாரதம் உலகக் காப்பியங்கள் யாவற்றையும் விட அமைப்பாலும் அளவாலும் கிளைக்கதைகளாலும் நீதிகளாலும் மிகப்பெரியது.** பாண்டவர்க்கும் மூவேந்தர்க்கும் அரசியல் தொடர்பு இருந்தது. பாண்டவர் 'ஐவர்' என்ற பெயரினாலும் கௌரவர் நூற்றுவர் என்ற பெயரினாலும் சங்கப்பாக்களில் குறிக்கப்பெற்றனர். அருச்சுனன் திக்குவிசயம் சென்றபொழுது பாண்டிய இளவரசி சித்திராங்கதையினைக் காதல் மணம் செய்து கொண்ட செய்தி நாட்டார் வழக்கில் நிலவுகின்றது. பாரதப் போரில் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் உணவு வழங்கிய செய்தியைப் புறநானூறும் [2:12-16] அகநானூறும் [233:8-9] சிலப்பதிகாரமும் [23:55; 29 ஊசல்வரிப்பாடல்] உணர்த்துகின்றன. இருதிறத்தார்க்கும் வழங்கியதாக உரையாசிரியர் குறித்துள்ளார். எனின், "ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்ற புறநானூற்றுப் பாடற்பகுதி துரியோதனன் உள்ளிட்ட நூற்றுவரும் போர்க்களத்தில் அழியும்படி உதியஞ்சேரலாதன் பாண்டவர்க்கு உணவு வழங்கியதாகத் தோன்றுகின்றது. இவ்வுண்மையினைச் சிலர் உடன்பட மறுப்பினும், ஒருபழைய வரலாற்றின் அடிப்படையில் இச்செய்தி குறிக்கப்பட்ட திறனை மறுத்தல் அரிது. தருமபுத்திரனை, "அறவோன் மகனே! மறவோர் செம்மல்" என்று கோதமனார் பாடியுள்ளார் [புறம் 366:6] அருச்சுனன் அண்ணன் ஆகிய வீமன் சமையற்கலையில் வல்லவன் என்றும் அவன் இயற்றிய மடைநூலிற் கூறிய வண்ணம் பல்சுவை உணவுகளையும் சமைத்துப் பாணர்க்கும் பரிசிலர்க்கும் நல்லியக்

கோடன் வழங்கி விருந்தோம்பினன் என்றும் சிறுபாணாற்றுப் படை செப்புகின்றது [238-245] காண்டவ வனத்தை அழித்த அம்புகளை உள்ளடக்கிய தூணியையும் பூவேலைப்பாடு கொண்ட கச்சினையும் உடையவன் அருச்சுனன் என்றும் அதே இலக்கியம் சுட்டுகின்றது.

துரியோதனன் முதலிய நூற்றுவரையும் பொருது வென்ற பாண்டவரைப்போலக் காஞ்சிமாநகரின் அரசன் தொண்டைமான் இளந்திரையன் பகைவர்களை அழித்த செய்தியைப் பெரும்பாணாற்றுப் படை பேசுகின்றது [415-21]. தமிழ்வேந்தனின் வீரத்திற்கும் வெற்றிக்கும் பாண்டவர் உவமை கூறப்பட்டனர்.

வீமசேனனின் வீரச்செயல்கள் பலபாடல்களில் பேசப்படு கின்றன. பாலைக்காட்சியை வருணிக்கப்பாரதக் கதை நிகழ்ச்சியைப் பெருங்கடுங்கோ உவமையாகப் பயன்படுத்தியுள்ளார். துரியோதனன் சூழ்ச்சியால் அரக்குமாளிகையில் பாண்டவரை இருத்திப் பின் சுற்றிலும் நெருப்புச் சூழச்செய்தான். களிறுகள் அகத்தனவாக மலையைச் சூழ்ந்துள்ள மூங்கிற்காட்டில் அனல் பற்றியது. அரக்குமாளிகையை வீமசேனன் அழித்துத் தன் கிளைகளைத் தப்பச்செய்து காத்தான். அதுபோல, இனங்காக்கும் எழில்வேழம் பாதை பொடிபடும்படி உழக்கித் தன் கூட்டத்தோடு தப்பச்செய்து காத்த காட்சியைப் பாலைக்கலியில் காணலாம் [25:1-11]. இக்காட்சி சீவக சிந்தாமணியிலும் இடம் பெற்றது [1237].

துரோபதையின் கூந்தலில் கையை நீட்டிய துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து பகைவர் நடுவே தன்வஞ்சினைத்தை நிறைவேற்றிய வீமசேனனின் அருஞ்செயல், ஏறுதழுவிய பொதுவனைச் சாவும்படிக் குத்திக் கொம்பின் நடுவே கொண்டு உடலைத்தூக்கும் காளையின் செயலுக்கு உவமை கூறப்பட்டது [கலி.101:15-20].

வீமசேனன் துரியோதனனைத் தொடையில் கதை கொண்டு அடித்து உயிர்ப்போக்கியதுபோல், களிறு தன் மருப்பின் கூரிய முனையால் புலியைக் குத்தி அதன்மருமத்தைத் திறந்து மாறுபாடு தீர்ந்த காட்சியைக் கபிலர் பாடியுள்ளர் [கலி.52:1-6].

நூற்றுவரையும் அழித்து ஐவர் வென்ற போர்க்களத்தைப் போன்றது: தன்னைத்தழுவ வருவாரைச் செறுத்து எலும்புகளை முறித்துத் தசைகளைச் சிதறிய ஏற்றின் தொழு [கலி.104:51-59]. தன் தந்தை துரோணரை இருளில் கொன்றவன் ஆகிய திட்டத்துய் மனை வென்று அவன் தலையைத் திருகிய அச்சுவத்தாமன் ஏறுதழுவ வந்த பொதுவனைக் கொம்பினால் குலைத்த காளைக்கு உவமை கூறப்பட்டான் [கலி.101:27-32].

இங்ஙனம் சங்க இலக்கியத்தில் பாரத வீரர்களுடன் தமிழ் வேந்தர் கொண்ட நேரடித் தொடர்பும், அவ்வீரர்களின் செயல்களைப் புலவர்கள் தாம்பாடும் கவிதைகளில் உவமைகளாக எடுத்தாண்ட பெற்றியும் நுணுகி நோக்கின் சங்கப் புலவர்களுக்குப் பழைய பாரதம் நன்கு அறிமுகமாயிருத்தல் வேண்டும் என்ற உண்மை புலனாகும். சின்னமனூர்ச் செப்பேட்டில்,

"மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரி தமிழ்ச்சங்கம்."

சுட்டப்படுவதால் வியாசபாரதத்தினைச் சங்கப்புலவர் தமிழில் மொழி பெயர்த்து அதர்ப்படயாத்து ஒருவழி நூலைத் தந்திருத்தல் வேண்டும் எனத் தெளியலாம். இப்புலவரைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அறிகிறோம். இவர் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகிய ஐந்து சங்கத் தொகை நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இவர் பாடிய நூல் கிடைக்கவில்லை. எனினும், உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய சிலபாடல்களை இவர் பாடியிருத்தல் கூடும்.

சிலப்பதிகாரத்தில் தேவாசுரப்போர் 18ஆண்டுகளும், இராம இராவணப்போர் 18 திங்களும், பாரதப்போர் 18 நாளும் செங்குட்டுவன் கனக விசயனுடன் நிகழ்த்தியபோர் 18 நாழிகையும் நடந்தன என்று இளங்கோ நயம்படப் பாடியுள்ளார் [27:5-12]. மேலும், "பஞ்சவர்க்குத் தூது, நடந்தானை ஏத்தாத நா என்ன நாவே" [17:37]. என்றும் பாண்டவர் பொருட்டுத் துரியோதனனிடம் கண்ணன் தூது சென்ற செய்தியையும் குறித்தனர். திருமுறைகளிலும், திவ்வியப் பிரபந்தத்திலும், திருவள்ளுவமாலையிலும் பாரதக் குறிப்புக்கள் உள்ளன. சுந்தரர்,

"மிடுக்கிலா தானை வீமனே, விசயனே வில்லுக்கு இவன்" [VII 34.2]

என்று பாண்டவரில் பராக்கிரமம் மிக்க வீமனையும், அருச்சுனனையும் பாராட்டியுள்ளார். பல்லவர்களும் பிற்காலச் சோழர்களும் ஆதிக்கம் செலுத்திய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இராமாயணமும் பாரதமுஃம நன்கு பரவியுள்ளமை இங்குச் சுட்டத்தக்கது. இன்றும் தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இவ்விதிகாச நிகழ்ச்சிகளை **வயாங்குலித்** என்று வழங்கும் தோற்பாவைக் கூத்தாக நிகழ்த்தி மக்களும் மன்னரும் பரவசப்படுகின்றனர். **இந்தோனேசியாவின் அதிபராகநெடுங்காலம் ஆட்சிபுரிந்த சுகர்ணோ என்பாரின் பெயர் சு+கர்ணன் (=நல்ல கர்ணன்) என்ற பெயரின் மருவிய வடிவமாம். அந்த நாட்டில் கருடப் பறவையே தேசியப்பறவை.**

எனவே, இப்பின்னணியில் பல்லவர் காலத்தில் எழுந்ததாகக் கருதப்பெறும் **பாரதவெண்பா** என்ற காப்பியத்தின் காலத்தையும்

அமைப்பினையும் சிறப்பினையும் குறித்துச் சில கருத்துக்களைக் கூறுதல் சாலும்.

காப்பியத்தின் காலம்

பாரதவேண்பாவைப் பாடியவர் பெருந்தேவனார். இவருக்கு முன்னும் பின்னும் இப்பெயர் பெற்ற புலவர் பலர் வாழ்ந்துள்ளனர். தன்னை ஆதரித்த பல்லவ வேந்தனை,

> "வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
> உண்மையால் பாராள் உரிமையால் - திண்மையால்
> தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ(டு)
> யார்வேந்தர் ஏற்பார் எதிர்" (4)

எனவரும் பாடலில் போற்றியுள்ளார். இப்பாடலில் குறிக்கப் பெறும் வேந்தன் தெள்ளாற்றுப்போரில் பகைஅரசர்களை வென்று வாகை சூடியவனும் தமிழார்வம் மிக்கவனும் கலம்பகம் என்னும் பிரபந்தம் பெற்றவனும் வள்ளன்மை மிக்கவனும் ஆகிய மூன்றாம் நந்திவர்மனே என்பர். இவன் ஆட்சி செய்த காலம் கி.பி.830-850. இக்காலப்பகுதியை ஒட்டிப் பாரதவெண்பா பாடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், சகாதேவனைச் சுட்டிய சத்தியவாக்கியன் என்ற சொல்லாட்சி முதலாம் இராசமல்லச்சத்திய வாக்கியன் என்னும் கீழைக் கங்க அரசன் பெயரை மறைமுகமாகக் குறிப்பதாகக் கொள்ளின், பல்லவரோடு உறவு கொண்ட இவ்வேந்தன் ஆண்ட கி.பி.815-853 என்ற காலப்பகுதி பெருந்தேவனாரின் காலம் ஆகும். எனவே, கி.பி.9ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவர் பாரதவெண்பாவை யாத்தனர் எனலாம். புரவலரைப்போற்றும் மரபினைப் பிற காப்பியங்களிலும் காணலாம். கம்பர் தன்னைப் புரந்த சடையப்ப வள்ளலை இராமாவதாரத்தில் பத்து இடங்களில் குறித்தலும், சேக்கிழார் பெரியபுராணத்தில் அனபாய குலோத்துங்கனைப் பத்து இடங்களில் குறித்தலும் இயைபு கருதி இங்குச் சுட்டற்பாலன.

உரையிடை இட்டபாட்டுடைச் செய்யுளாக அமைந்த இக் காப்பியத்தை வடமொழி மரபு பற்றிச் சம்பு காவியம் என்பர். எனின், பாடலை மட்டுமே பெருந்தேவனார் யாத்தனர்; உரைநடைப் பகுதியை வேறொருவர் எழுதினர் என்பாரும் உளர். பாட்டிற்கு எழுந்த உரையாகவும் உரைநடை அமைந்துள்ளது. இக்காப்பியத்தில் உத்தியோகபருவம், வீடுமபருவம், துரோணபருவம் ஆகிய மூன்று பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றில் பொதிந்துள்ள வெண்பாக்களின் தொகை 818 ஆகும். இவைதவிர, ஆசிரியப்பாக்கள் ஆறும், எண்சீராகவும் அறுசீராகவும் அமைந்த விருத்தங்கள் ஆறும் ஆகப்பன்னிருபாக்களும் சேர்ந்து 830 பாக்கள் உள்ளன. எனவே,

பெரும்பான்மை பற்றிப் பாரதவெண்பா என்று இக்காப்பியம் பெயர்பெற்றது. இதற்குமுன் எழுந்த பாரத காவியம் ஆசிரிய யாப்பிலும், பின்னர் எழுந்தவை விருத்தயாப்பிலும் அமைந்தவை ஆகும்.

நூலாசிரியர் சிறந்த திருமாலன்பர். ஒவ்வொரு பருவத்தின் தொடக்கத்திலும் திருமால் வாழ்த்து இடம்பெற்றது. சான்றாக ஒரு பாடலைக் காண்போம்:

“தேனோங்கு சோலைத் திருவேங் கடம்என்றும்
வானோங்கு சோலை மலைஎன்றும் - தானோங்கு
தென்னரங்கம் என்றும் திருவத்தி யூர்என்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்”

எனவரும் பாடல் வீடுமபருவத்தின் கடவுள் வாழ்த்தாக அமைந்தது. வைணவர் போற்றும் திவ்வியத் தேசங்களில் சிறந்த திருவேங்கடம், சோலைமலை ஆகிய அழகர் கோயில், திருவரங்கம், திருவத்தியூர் என்பனவற்றின் மாண்பினைப் போற்றினர். இவ் வெண்பா ஆழ்வார் பாடலைப் போலவே அமைந்துள்ளது. இவற்றுள் அத்திகிரி காஞ்சிமாநகரில் உள்ள வரதராசப் பெருமாள் ஆலயம். இதனை மூன்றுபாடல்களில் இவர் குறிப்பதால் [349,484,514], இவர் காஞ்சிப் பகுதியில் வாழ்ந்தவராதல் வேண்டும். காஞ்சிப்பல்லவனையும் இவர் புகழ்ந்து பாடிய பாங்கினை முன்பு கண்டோம். அன்றியும் பாரதப் போரில் பங்குகொண்டவர் வரிசையில் பல்லவரையும் (773) பெருந்தேவனார் குறித்துள்ளார். பழைய பாரதக் கதையில் சேர, சோழ, பாண்டியர் மட்டுமே குறிக்கப்பெற்றனர். எனவே, இவர் பல்லவர் காலத்தவர் என்பது உணரப்படும். இவர் காலத்தில்தான் நந்திக்கலம்பகம், பஞ்சமரபு, திவாகரம் முதலிய நூல்களும் தோன்றின.

இனி, பாரதவெண்பாவின் அமைப்பினையும் சிறப்பினையும் சிறிது காண்போம்.

காப்பியத்தின் அமைப்பும் சிறப்பும்

கதைச்சுருக்கம்

உத்தியோக பருவத்தில் கதை தொடங்குகின்றது. இப்பகுதியில் 479 வெண்பாக்களும் 4 ஆசிரியமுமாக 483 பாடல்கள் உள்ளன. இதுவே இக்காப்பியத்தின் பெரும்பகுதி. இதனுள் பன்னிரண்டாண்டு வனவாசமும் ஓராண்டு மறைந்துறைதலும் முடித்துத் தீதின்றிப் பாண்டவர்கள் தமருடன் கானகம் விடுத்து விராடபுரம் வந்துசேர்ந்த செய்தியைக் கண்ணனை உள்ளிட்ட யாதவ அரசர்க்கும், குந்திபோசன், பாஞ்சாலன், பாண்டியன், திரிகர்த்தன், கேகயன், சேதிபன் முதலாய

அரசர்க்கும் அறிவிக்கும் பொருட்டுத் தருமன் ஓலையும் தூதும் போக்கிய செய்தி இடம்பெற்றது. வேள்வியாசான் தௌமியன் தூதுவனாகச் சென்று துரியோதனனைக்கண்டு, **"தந்தைக்குரியது தானாள, எந்தைக்கு உரியது யானாள விடுவதுவே அரசநெறி"** எனத் தருமன் உரைத்த மாற்றத்தைக் கூறினான். உடன்படாத துரியோதனன் போக்கினைக் கண்டித்து விதுரன், வீடுமன் கூறிய அறிவுரைகளை அவன் இகழ்ந்தான். வெறுங்கையனாக வந்த வேள்வியாசான் வாயிலாக உற்றது உணர்ந்த கண்ணன், நாடுமுழுதும் ஆளும் திருப்பெற்ற தருமன் பாதிநாடாவது கேட்கும் பொருட்டு அருச்சுனனைத் தன்பக்கல் வரச்சொல்லிவிடுத்தான்.

திருதராட்டிரன் உரையினால் அவன்மகன் துரியோதனன் வாசுதேவன் ஆகிய கண்ணனைத் தனக்குப் படைத்துணையாக வேண்டினான். கண்ணன் முடிப்பக்கம் துரியோதனனும், அடிப்பக்கம் உதவிநாடி அருச்சுனனும் இருந்தனர். அறிதுயில் கொண்ட மாயக்கண்ணன் விழித்ததும் முதலில் அருச்சுனனை நோக்கினான். முடிவில் தான் படைக்கலன் வழங்காதொழியவும், தன்னை ஒழிந்த தன் படைவீரர்கள் யாவரையும் துரியோதனனுக்குத் தரவும் கண்ணன் இசைந்தான். அருச்சுனன் வேண்டியபடி அவனுக்குச்சாரதி (-வலவன்) ஆகநின்று போர்க்களத்தில் உதவ உடன்பட்டான் (92-97). பின்னர்ப் பாண்டவர்க்காகத் தூது போயினான். சகுனியின் சொல்லைக் கேட்டுத் துரியோதனன் கண்ணனைப் புறக்கணிக்கினும், வீடுமர், துரோணர், விதுரர், கிருபர், கன்னன், அசுவத்தாமன் உள்ளிட்ட பெருவீரர்கள் யாவரும் எதிர்கொண்டு வரவேற்றனர். எனினும், **"மயிர் முனைக்கும் மண்கொடேன்"** [பா.170 உரை] என்றிகழ்ந்தான் துரியோதனன். முடிவாகப் போர்புரிந்து நாட்டைப் பெறுவதே செயற்பாலது என்றான். அறநெறிவழுவ உரைத்தமையால் பழிபாவம் விளையும் என்று எச்சரித்தான் கண்ணன்.

பாண்டவர்க்காக ஐந்து ஊர்கள் வேண்டியும் மறுத்த துரியோதனனுக்கு அறஉரை பலபகர்ந்தான். தீயோர்க்குத் துணை போகேன் என விதுரன் தன் வில்லை முறித்தான். குந்திக்குக் கன்னன் மகன் என்ற வரலாற்றை எடுத்துரைத்து அவளை அவன்பால் செல்ல விடுத்தான் கண்ணன். விதுரன் வீட்டில் வைகியிருந்த கண்ணனைச் சஞ்சயன் மூலமாக வரவழைத்துக் குழியில் தள்ளும் பொருட்டுப் பொய்யாசனம் இட்டதை உணர்ந்த கண்ணன் தன் விசுவரூபம் காட்டினான். இந்திரனை ஏவிக் கன்னனின் கவச குண்டலங்களையும் செங்கைச் சிகாமணியையும் பெறச்செய்தான். குந்திதேவி வேண்டியபடி நாகாத்திரத்தை அருச்சுனன்மேல் தொடுக்காதிருக்கக் கன்னன் இசைவினைப் பெற்றுக் கண்ணனிடம் திரும்பினாள். அத்தினாபுரியில் நிகழ்ந்தனவற்றைக் கண்ணன் கூறக்கேட்ட ஐவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

திருதராட்டிரனும் காந்தாரியும் அனுப்பிய தூதுவன் சஞ்சயன் கண்ணனைச் சார்ந்து,

"ஓதத்(து) அரவணைமேல் ஊழிநாள் கண்வளர்ந்த
வேதத் தருமணியே மெய்ச்சுடரே - பேதத்தால்
அத்தருமன் எம்மோ(டு) அமர்புரியா வண்ணம்அவன்
சித்தமது தேறநீ செப்பு" (360)

என்று வேண்டினான். மேலும், அமர்புரியின் வீடுமர், துரோணர்,விதுரர், கன்னன் என்னும் நான்கு கரையாலும் காக்கப்படுவன ஆகிய துரியோதனனின் நாற்படை என்னும் கடலொடு பகை கொண்டு இறப்பின், அப்பழிபாபம் கெளரவரைச் சாரும் என்று தருமனுக்குத் தந்தை முறையினன் ஆகிய திருதராட்டிரன் கூறிய உரையினைச் சஞ்சயன் மொழிந்தான். அறமற்ற அவ்வுரைக்கு இசையாது போருக்குத் தயாராயினர் பாண்டவர். படையின் அணிவகுப்புடன் உத்தியோக பருவம் நிறைகிறது.

இரண்டாவதாக அமையும் வீடும பருவத்தில் 191 வெண்பாக்களும் 3 ஆசிரியப்பாக்களும் ஆக 194 பாடல்கள் உள்ளன. இப்பகுதியில் **யுத்தகாண்டம் தொடங்குகின்றது**. வீடுமர் தலைமையில் திரண்ட கெளரவர் படையினைப் பாண்டவர் எதிரேற்றுப் போர் புரியும் காட்சிகள் வியப்பூட்டுவன. கண்ணன் அருச்சுனனுக்குத் தேரோட்டி ஆனான். ஒருபால் அருச்சுனனும் வீடுமனும்; மற்றொருபால் வீமனும் துரியோதனனும், தருமனும் சல்லியனும்; இன்னொரு பக்கம் திட்டத் துய்மனும் துரோணனும், சகுனியும் சகாதேவனும்; அருச்சுனன் மைந்தனாகிய அபிமன்னுவும் துரியோதனன் மகனாகிய இலக்கணகுமரனும் இங்ஙனம் தம்மொத்த வீரர் பலரும் கடும்போர் மலைந்த காடசியை உரைநடையில் அமைந்த காப்பியப் பகுதி படம் பிடித்துக் காட்டுகின்றது [V. 119-201]. முதல்பத்துநாள் போரிலும் இருபக்கத்திலும் ஏற்பட்ட வெற்றி தோல்விகளைப் பெருந்தேவனார் மருட்கைச் சுவை தோன்றப் புனைந்துள்ளார். பத்தாம் நாட் போரில் வீடுமன் மோட்சம் அடையும் காட்சி நெஞ்சை நெகிழச்செய்வது.

மூன்றாவதாக அமையும் துரோணபருவத்தில் 148 வெண்பாக்களும் 6 ஆசிரியப்பாக்களும் 3 விருத்தங்களும் ஆக 157 பாடல்கள் உள்ளன. இப்பகுதியில் 11,12,13ஆம் நாள்வரை நிகழ்ந்த போர்க்காட்சிகள் இடம் பெற்றன. பின்னர் 18 ஆம் நாள் வரை நடைபெற்ற போரினை விரித்துரைக்கும் பாடல்கள் மறைந்து போயின.

இப்பாரதத்தின் இறுதிப் பகுதி ஐவரும் வைகுந்தம் போகும் செயலைப்பாடும் **"சுவர்க்காரோகணப்பருவம்"** ஆகும். இதனுள் மறைந்தனபோக 339 பாடல்கள் **"மாவிந்தம்"** என்ற பெயரில் தஞ்சை

சரசுவதிமகால் நூல்நிலைய வெளியீடாக வந்துள்ளது. எனினும், இதனைப் பெருந்தேவனார் பாடினாரல்லர் என்பது அறிஞர் பலரின் முடிவு.

இனி, பாரதவெண்பாவின் இலக்கியச் சிறப்புக்குரிய கூறுகளை நோக்குவோம்.

கற்பனைத்திறம்

இலக்கியத்திற்குச் சிறப்புத்தருவன கவிஞனின் கற்பனைத் திறமும் படைப்பாற்றலும் ஆகும். போர்க்களத்தை வருணிக்கும் காட்சி கடந்த கால நிகழ்ச்சியை நம் மனக் கண்ணுக்குமுன் கொண்டு நிறுத்தும் ஆற்றல் வாய்ந்தது. ஒரு பகுதியை இவண் காண்போம்.

> "இவ்வகை எட்டுத் திசையும் தலைபனிப்ப இருதிறத்துப்
> போர்வீரரும் தம் சிறுநாணெறிந்து போர்முழக்கம் செய்தார்.
> அவ்விடத்து இரண்டு படைக்கடலும் தம்மொடு தாக்கி ஏன்றொருவர்மேல்
> ஒருவர் உடன்றெழுந்தார். அப்பொழுது கண்ணன் வடிக்கயிறும்
> முட்கோலும் பிடித்து வெண்குதிரைகளைத் தூண்டிக் கடுவிசையால்
> தேரோட்டா நின்றான். அவ்வளவில் பெருஞ்சினம் எய்திக்
> கூற்றிரண்டு குறித்தெழுந்தாற்போல் அருச்சுனனும் வீடுமனும்
> தலைப்பெய்தார்.....
>
> . . . .
>
> . . . . தேரும்தேரும் எதிர்திளைத்தன. மாவும்மாவும் மயக்குற்றன.
> களிறும்களிலும் கையுறுத்தன. வாளும் வாளும் வயவுற்றன
> வேலும் வேலும் வேய்ப்புற்றன. சிலையும் சிலையும் சிதைவுற்றன
> மழை பொழிந்தன அம்புப் படலங்கள்......" [V. 199-200]

தம் கற்பனைத்திறத்தினால் போர்க்களக் காட்சியைப் பெருமிதம் மிக்க உரையாப்பில் பெருந்தேவனார் படைத்துள்ள பாங்கு பயில் வாரை வியப்புறுத்தி மகிழச்செய்யும்.

வானில் மறைபிறர் அறியாமல் சென்றுவரத்தக்க விமானத்தைத் தேவதச்சன் துரியோதனனுக்கு அமைத்த அற்புதமும் கற்பனையின் விளைவே [416-418].

இயற்கைக்காட்சி

கட்டுக்கோப்புடைய வெண்பாயாப்பிலும் இயற்கைக் காட்சிகளை எழிலுறப் புனைந்துரைத்தல் இயலும் என்பதற்கு இரண்டொரு சான்றுகள் காண்போம்.

காலைக்கதிரவன் நீலக்கடல்மேல் சிவந்த கதிர்க்கற்றைகளைப் பரப்பி மெல்லென எழுகின்றான். உலகினைக் கவ்வியிருந்த இருள்

பறந்தது; திருமகள் விரும்பி உறையும் செந்தாமரை வாய்திறப்பதுபோல் மலர்ந்தன. பொய்கைகளிலும் நீர்நிலைகளிலும் பல்வகைப் பறவைகளும் சிறகடித்து ஆரவார ஓசை முழங்கின. கதிரவனின் தோற்றம் இருளை மாய்த்ததுபோல் வஞ்சநெஞ்சம் கொண்ட மன்னர்களின் எண்ணத்தையும் மாய்ப்பது கருதிற்று (432) என்று தன்குறிப்பையும் ஏற்றிப் பெருந்தேவனார் பாடியுள்ளார்.

அணிநலம்

செய்யுளுக்கு முருகியல்மெருகினைப் பூசுவது அதில் பயின்று வரும் பல்வகை அணிகளே. ஒருசில அணிகளை நோக்குவோம்.

1. தன்மை நவிற்சி

உள்ளதை உள்ளவாறே தொகுத்துரைப்பதிலும் ஓர் அழகு உண்டு. இருதிறத்து வீரர்களும் வேந்தர்களும் படைக்கலம் தாங்கிக் களிற்றிலும் தேரிலும் அமர்ந்து வில்லின் நாணினைப் பூட்டித் தெறிக்கவும், முரசங்கள் முழங்கவும் இளம்வீரர்கள் அம்பும் வேலும் வாளும் கூர்மையாகத் தாக்கும்படி செலுத்தினார் (620). இப்புனைவில் அதீதக் கற்பனை இல்லை. இயல்பாக இருத்தல் காணலாம்.

2. உவமை அணி

கூரிய நகமும் பற்களுமே சிங்கத்திற்குப் படைக்கருவியாக அமைந்து பகைவிலங்குகளை அழிக்கும். எனினும், அருச்சுனனுக்குத் தான் தேரோட்டியாக இருத்தல் அல்லது படைக்கலம் ஏந்திப் போர்க்களத்தில் உதவிபுரிய இயலாத சூழ்நிலைக்கு இரங்கிய கண்ணன்,

"உகிரும் எயிறும் இழந்த அரிமாப் போலே...." என்று கூறும் பகுதி காணத்தக்கது (ப.38)

வீடுமன் (-பீஷ்மன்) அருச்சுனனின் சரமாரியால் மறைந்தமை கேட்ட திருதராட்டிரன்,

"‚ . . . .
தீயானை என்மகனைச் செருக்களத்தே இன்றுநீ
தமியன் ஆக்கி
மீகாமன் இல்லாத மரக்கலம்தான் ஆக்கினாய்
வேந்தர் ஏறே" (669)

என்றும் புலம்பும் காட்சி உள்ளத்தை உருக்குவது. மாலுமி இல்லாத மரக்கலம் கடலில் தத்தளித்துத் திசையறியாது தியங்குதல்போல், கௌரவர்களின் படைக்கு முதல் பத்துநாளும் தலைமை ஏற்று வீர, தீர, சாகசங்களைச் செய்த பிதாமகர் ஆகிய வீடுமரை இழந்து

தவிப்பதாகப் புலம்புகிறான். மீகாமன் இல்லாத மரக்கலம் ஒரு சிறந்த உவமை.

3. உருவக அணி

காலையில் கதிரவன் தோன்றும் காட்சியை ஒவ்வொரு நாள் போரின் தொடக்கத்திலும், மறைவினை இறுதியிலும் பாடுதல் பெருந்தேவனார் வழக்கம். பதினோராம் நாள் போர்த் தொடங்கும் அன்று ஞாயிற்றின் எழுச்சியைப் பாடுகின்றார். "கடல் ஒலியே முழவோசையாக, வெள்ளை அலைகளே உயர்த்துவீசும் சாமரையாக, ஆதித்தன் (-ஞாயிறு) என்னும் அரசன், பொருதற்குரிய மன்னரை எல்லாம் களம் நோக்கி வாரீர் என அழைக்கும் பொருட்டுத் தோன்றினான் (670. இப்பாடலில் உருவக அணியும் தற்குறிப்பேற்றமும் இழைந்திருத்தல் காணலாம்.

4. உயர்வு நவிற்சி

போர்க்களத்தில் திரளாக நின்ற இருதிறத்துப் பெரும் படையையும் நோக்கிய துரியோதனன் வீடுமனை நோக்கி, 'இப்பெரும் படையினை யாரால் வெல்லஇயலும்' என்று மருண்டுவினாவினன். வீடுமன்,

> **"இப்படையினை நான் ஒருவனே முப்பது நாழிகையில் வெல்வேன்; துரோணன் மூன்று நாளிலும், கன்னன் ஐந்து நாளிலும், அசுவத்தாமன் ஒரே நாழிகையிலும் வெல்வர். எனின், வில்விசயனோ ஒரே நொடியில் வெல்வான்"**

என்று கூறும்பகுதியில் பெருவீரர்களின் தரா தரம் உயர்வு நவிற்சி அணி தோன்றப்படைக்கப்பட்டுள்ளது.

படைப்பாளர்கள் பாரபட்சமின்றிப் பாத்திரங்களின் சிறப்பினைக் கூறுதல் முறை. அவ்வகையில், துரியோதனன் வெண்கொற்றக் குடைக்கீழ் ஏவலர் வெண்சாமரை வீச வேந்தர் புடைசூழ வீற்றிருக்கின்றவனின் சிறப்பினைப் பெருந்தேவனார் புனைந்துரைக்கின்றார். அந்தணர்கள் நாள்தோறும் காலையில் அவனைக்கண்டு மறைமொழியும் ஓம்படையும் சொல்லி இட்ட அறுகம்புல், ஐயாயிரம் குதிரைகளுக்கு அன்றை நாள் உணவாகும் என்கிறார் (161). இஃது உயர்வு நவிற்சியணிக்கு உரிய சான்று.

நகைச்சுவை

பாரதவெண்பாவில் வீரச்சுவையும், பெருமிதச்சுவையும் பொருந்திய பாடல்கள் பல உள்ளன. நகைச்சுவைக்கு ஒரு சான்று சாலும்.

அருச்சுனனின் அம்புப்படுக்கையில் படுத்திருக்கும் வீடுமர் நிலைதளர்ந்து உறக்கமின்றிக் கிடந்தார். துரியோதனனை நோக்கித் தமக்கொரு தலைக்கணை தருமாறு கேட்டார். அவனோ மிகமிக மெதுவாய் இருப்பதொரு பஞ்சணை கொண்டுவந்து கொடுத்தான். அவனை நோக்கிப் பலகாலும் நகையரும்பி, **“எமக்கு உடற்கு அணை தந்த அருச்சுனனே தலைக்கு அணை தருவான்”** என்று கூறினன். பின்னர் விசயனே அம்பினால் தலைக்கணை அமைத்தனன் (662-666). வீரத்திலும் அவலத்திலும் கூட நகைச்சுவை தோன்றுகிறது!

இனி, இக்காப்பியத்தில் காணப்படும் ஒருசில அருங் கருத்துக்களைக் குறித்தல் சாலும்.

அருங்கருத்துக்கள்

1. செஞ்சோற்றுக்கடன் கழித்தல்

இராமாயணத்தில் கும்பகருணனும் மாபாரதத்தில் கருணனும் செஞ்சோற்றுக் கடன் கழிக்கப் போரிட்டனர் என்பது பலரும் அறிந்த செய்தி. எனின், மத்திரவேந்தன் சல்லியனின் மருமக்கள் நகுல சகாதேவர். ஆதலின் பாண்டவர்களைப் பார்த்துக் குசலம் கேட்க வருகிறான். அவனைத் துரியோதனன் கண்டு, “இவுன் பெருவீரன், வாய்மையாளன்; இங்கு இவன் போவதன்முன்னம் இசைவு பண்ணவேண்டும்” என்று மற்று அவனுக்கும் அவன் பெரும்படைக்கும் விருந்து செய்வித்துக் கதுமெனத் துரியோதனன் வெளிப்பட்டுத் தன்குறை வெறுப்பும், தன் சோறுண்டமையும் சொல்லித் தனக்குப் படைத்துணை புரியும்படி அவன் கைப்பிடித்து வேண்டினான். மேலும்,

> **“முன்னொருவன் செய்யும் உபகாரம் மூவுலகம்**
> **தன்னைக் கொடுத்தாலும் சாருமோ – என்னே**
> **உயிர்க்குறுதி யாக ஒருவர்சோ(று) உண்டார்**
> **பிறர்க்குரியர் ஆவரோ பேசு”** (20)

என்று சல்லியனை நோக்கித் துரியோதன் கேட்டனன். சல்லியன், **‘சோற்றின் வலியால் துவக்குண்டான்’** (21) என்று கவிஞர் பாடுகின்றார். இங்ஙனமே விதுரன் இல்லத்தில் உணவுண்ட கண்ணனும் தன்படை வீரர்கள் யாவரையும் துரியோதனனுக்குத் துணை புரிய உதவினன். அசுவத்தாமன், ஒருவர் கொடுத்த சோறினால் வளர்க்கப்பட்டவர் மற்றொருவர்க்காகப் போர்புரியின் நரகம் சேர்வர் எனக் கூறித் தான் எப்போதும் துரியோதனன் சார்பில் நிற்பதாகக் கூறுகிறான் (233).

2. ஈதலின் உயர்வு

பாண்டவர்களுடன் களப்பலி கொடுப்பதற்கு உகந்த நாளினைக் குறித்துத்தரும்படி பாண்டவருள் ஒருவன் ஆகிய சகாதேவனை அணுகும்படி தன்னை உசாவிய துரியோதனனுக்குப் பிதாமகர் வீடுமர் அறிவுறுத்தினர். அவன் ஐயுற்றான். எனின், சகாதேவன் சத்தியவாக்கியன், சோதிடக்கலையில் வல்லவன். மூவுலகிலும் அவனுக்கு ஒப்பாரிலர் என்றார். பாண்டவர் வைகியுள்ள உபலாவிய நகரம் சென்றான் துரியோதனன். அவனை வரவேற்று, உபசரித்து நாளும் வேளையும் குறித்துக் கொடுத்ததுடன் களப்பலிக்குத் தக்க இலக்கணம் பொருந்தியவன் தன் அண்ணன் அருச்சுனன் மகன் அராவானே என்றும் அறிவுறுத்திய சகாதேவனின் நயத்தக்க நாகரிகத்தினை யாரே வியவாதவர். தன்னை வேண்டிய துரியோதனனுக்குக் களப்பலியாகத் தன்னை இடுவதற்கு அராவான் இசைந்தனன் [413-432]. பகைவன் வெற்றி பெறுவான் என்றும் பாராமல் கேட்டது உதவிய சகாதேவனும் அராவானும் கொடுப்பதேமேல் என்ற குணக்குன்றின் முகட்டில் இலங்கினர்.

இனி, கௌரவர்க்குத்துணை நின்ற கன்னனை வஞ்சித்து அவன் பூண்டிருந்த கவச குண்டலங்களையும் செங்கைச் சிகாமணியையும் பெறுதற்குக் கண்ணன் ஏவிய வண்ணம் இந்திரன் அந்தணர் உருக்கொண்டு கன்னனை அடைந்து இரத்தலும், அவன் உபசரித்து உவந்து அவற்றை வழங்குதலும் பிறவிக் கொடைஞனாகிய அவன் சிறப்பினை உயர்த்துக் காட்டுகின்றது. முடிவில் உண்மை உருவத்தைக் காட்டி இந்திரன் தன்பரிசாக, பகைவரை அழிக்க வல்ல வேலினைக் கன்னனுக்குக் கொடுக்க முற்பட்டான்:

> "உன்னார் உயிராம் ஒளிர்கவச குண்டலமும்
> மன்னா மணியும் மகிழ்ந்(து) ஈந்தாய் - ஒன்னார்
> குடல் துணிக்கும் வேல்தனைக் கொள்ளுநீ என்றான்
> அடல்வேந்தே என்பால் அணைந்து" [286;287 காண்க].

மறுமாற்றம் கொடுத்த கன்னன்,

> **"என்னை யாவராலும் போர்க்களத்து வெற்றிகொள்வது அரிதென்று எண்ணி என்காதில் கவச குண்டலமும் கையில் உயர் மணியும் வஞ்சித்து வாங்கி அருச்சுனனைக் காப்பான் வேண்டி வந்தாய். அப்படிக்குக் குறித்தாரைக் கொன்று தருவதொரு வேல் உண்டாகில் இதனை அருச்சுனனுக்குக் கொடுத்து அவனைக் கொண்டு என்மேல் விடத்தகாதோ? இவ்வகை சீரிய ஆற்றல் உண்டாகில் நீஎன்பால் வந்து இரவலனாய்க் கொடை ஏற்கப்படுமோ? என்று அங்கையோ டங்கை தாக்கி (-கைகொட்டி)"**

நகைத்தனன் என்று பெருந்தேவனார் படைத்திருத்தல் புல்லரிக்கச் செய்யும் காட்சியாகும். வீமன் சிறந்த சிவ பக்தன். ஈசனிடம் வேண்டிப் பெற்ற கொன்றைமாலையினைச் சயத்திரதன் வீமன் முன்பாக இட்டதுகண்டு, தனியே நின்று போர்புரியும் அபிமன்னுவுக்கு உதவ முந்தாமல், "எங்கள் குடிப்பிறந்தார் எல்லாம் இறந்தாலும், சங்கரன் தன்மாலை தனைக்கடவேன்" (790) எனப் பத்திப்பெருக்கால் தோன்றிய பெருமிதத்தைப் புலப்படுத்திய கொள்கைக் கோமானாக வீமன் விளங்குகின்றான்.

3. கடமைவலியுறுத்தல்

போர்க்களத்தில் எதிர்ப்பக்கம் நின்ற வீடுமன், துரோணன், கிருபன், கிருதவன்மா, அசுவத்தாமன், சல்லியன், சகுனி, துரியோதனாதியர், அவர்தம் உறவினர், எண்ணிலடங்காத படைவீரர்கள் யாவரையும் நோக்கிய அருச்சுனன், உள்ளம் தளர்ந்து உறவினருடனும் ஆசிரியருடனும் போர்த்தொடுக்க மாட்டேன் என்று தேர்த்தட்டில் சலித்து நின்றான்.

"உற்றாரை எல்லாம் உடன்கொன்(று) அரசாளப்
பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம் - சொல்தாழ்ந்து
வாள்தடக்கை வில்நெகிழ வாளா இருந்திட்டான்
தேர்த்தட்டின் மீதே திகைத்து" (475)

எனினும் கண்ணன் அவன் அறத்தின் பொருட்டு ஆற்றவேண்டிய கடமையினை வலியுறுத்தி ஆற்றும்பேருரை பகவற்கீதையாகப் போற்றப் படுகின்றது. கீதையின் சாரமாகப் பெருந்தேவனார்,

"பிறப்பு நிலைகே(டு) இவையாவான், பாவம்
அறத்தினோ(டு) ஐம்பூதம் ஆவான் -உறற்கரிய
வானாவான் மண்ணாவான் மன்னுயிர்கள் இத்தனையும்
தானாதல் காட்டினான் தான்" (476)

என்ற பாடலைப் புனைந்துள்ளார். தொடர்ந்து வரும் உரைநடைப் பகுதியில்,

"பிறப்பேனும் யான், இறப்பேனும் யான், காத்தளிப்பேனும் யான்........ என்னை ஒழிந்துண்டாவன ஒன்றும் இல்லை கண்டாய்; அனைத்துப் பொருளும் யானாகி நிற்கின்ற தன்மைதனைக் காண்பாயாக.....உனக்குச் சீரிய விழிதந்தேன் என்றும் அருளிச்செய்துதன் சிறந்த பேருருவை வெளிப்படுத்திக் காட்டுதலும்"

என்று வரும் வாசகம் கீதைப் பேருரையின் சாரமாதல் காணலாம். செய்வது அறியாது மிக அஞ்சிய அருச்சுனன் பொறுத்தருளும்படி கண்ணனிடம் சரண் புகுந்தான்.

ஒவ்வொரு ஊழியிலும் கண்ணனும் அருச்சுனனும் ஒரே அமிசத்தின் இருகூறாக விளங்கிய அற்புதத்தினைக் கண்ணன் விளக்கினான். கிருத ஊழியில் இருவரும் முறையே நாராயணன், நரனாகவும்; திரேதா ஊழியில் இராம, இலக்குவராயும்; துவாபர ஊழியில் **கண்ணன் அருச்சுனனாகவும்** தோன்றிப் புவிப்பாரம் தீர்ப்பதைக் குறியாகக் கொண்ட திறனைப் பெருந்தேவனார் விரித்துக் கூறினார்.

எனவே, மேற்கொண்ட கடமையினின்றும் வழுவாமல் போரிடுதலைப் பாரதம் அறம் என்று வலியுறுத்துகின்றது.

5. பிற கருத்துக்கள்

முதலில் வீடுமரை இகழ்ந்து பேசிய கன்னன், அவர் மரணப் படுக்கையில் கிடந்தபொழுது தன்பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் எனக் கேட்கும்பகுதி சுட்டத்தக்கது. கண்ணன் அராவானைக் கொல்ல உபாயம் கூறுதலும், அங்ஙனமே வீடுமர் தன்னைக் கொல்ல அருச்சுனனுக்கு உபாயம் கூறுதலும், கண்ணன் விசுவரூபம் காட்டலும் (ப.82-84), இன்னோரன்ன பிறவும் படிப்பவரை மருளச் செய்வனவாகும். **கண்ணனின் மாய விளையாட்டே பாரதப்போர் என்பதை ஏற்புழி எல்லாம் கவிஞர் சுட்டியுள்ளார்.**

உரையின் சிறப்பு

இக்காவியத்தினை வெண்பா யாப்பில் பாட முற்பட்ட பெருந்தேவனார் முடிவு போகக் கூற முடியாத நெருக்கடி நிலையில் பெருமிதம் மிக்க உரைநடையில் பாரதக் கதையினைக் கூறிச் செல்லும் பாங்கு நெகிழச்செய்கிறது. ஒருசில இடங்களில் வடசொற்கள் வந்தன. என்றாலும், **இறையனார் களவியல் உரை நடைக்கு ஒப்பாகப் பாரத வெண்பாவின் இடை மடுத்த உரைநடைப் பகுதிகள் சிறந்த இலக்கியமாக இலங்குகின்றன.** தேரோட்டியை வலவன் (ப.194) என்றும் அரண்மனையினைக் கோயில் என்றும் சுட்டினார். சோதிடத்தைக் **கணியம்** என்றார் (ப. 164, 168, 179). **மனிசர்** (453) என்ற சொல்லாட்சி நம்மாழ்வார் பாசுரத்தில், "மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும்பொருள்" எனவரும் அடியினை நினைவூட்டு கின்றது. பகைவரை மண்ணைக் கவ்வச் செய்தல் என்ற மரபுத்தொடர் [Idiom] புல்கவ்வல் [ப. 248, 9] என்று காணப்படுகிறது. ஈண்டு என்ற சொல்லினை **ஈண்டன்** என்று ஆண்டுள்ளார். கண்ணனை **வாசுதேவன்** என்று உரைப்பகுதிகள் குறித்தல் ஆசிரியர் வழக்கம். வருணனைப் பகுதிகள் பாடலைவிட உரைநடையில் மிகுதியாக உள்ளன. சான்றாக, அருச்சுனனின் அரச இலக்கணங்களைக் கூறும் பகுதியையும் [ப.139], அரசர்கள் புறப்பட்டுச் செல்லும் காட்சிகளையும்,

படைச்செலவுகளைக் கூறும் பகுதிகளையும் போர்க்களப் புனைவுகளைக் கூறும் பகுதிகளையும் கூறலாம்.

எனவே, உரையிடையிட்ட தொடர்நிலைச் செய்யுளாய் அமைந்த பாரதவெண்பா கண்ணன் அவதாரப் பெருமையினை அனுபவித்துப் பாடிய ஆழ்வார்களின் காலத்தை ஒட்டித் தோன்றிய சிறந்த இலக்கியப் படைப்பு என்பது தெளிவு.

இந்நூலிற்குப் பண்டித கோபாலையரின் பதிப்பும் (1925) கழகப்பதிப்பும் (1973) சிறப்புடையவை. பிற்காலத்தில் பழங்கதை தழுவிய இராமாயணவெண்பா, நளவெண்பா, அரிச்சந்திர வெண்பா, அகலிகை வெண்பா முதலிய தொடர்நிலைச் செய்யுள்கள் தோன்றுதற்குப் பாரதவெண்பா முன்மாதிரியாக அமைந்தது எனலாம்.

IV கோவையும் கலம்பகமும்

இனி, கி.பி.500 - கி.பி.900 என்ற காலப்பகுதியில் தோன்றிய கோவை, கலம்பகம் என்ற இலக்கிய வகைகள் குறித்துச் சிறிது நோக்குவோம். இக்காலப் பகுதியில் எழுந்த கோவை இலக்கியங்கள் மூன்றாகும். அவற்றுள் இரண்டு அரசச்சார்புடையவை; ஒன்று இறைச் சார்புடைய திருச்சிற்றம்பலக்கோவையார் ஆகும். அரசச் சார்புடைய **பாண்டிக்கோவை, தமிழ்முத்தரையர்கோவை** என்பன இரண்டனுள் முன்னது முழுமையாகக் கிடைத்திலது; பின்னது மறைந்து போயிற்று. தண்டியலங்கார உரையாசிரியர் **தமிழ்முத்தரையர்** கோவையினைச் சிறுகாப்பியத்திற்கு எடுத்துக் காட்டாகக் கூறியுள்ளார். எனவே, சிறு காப்பியம் என்ற வரிசையில், தொடர்நிலைச் செய்யுளாக அமையும் கோவை இலக்கியம் கொள்ளத்தக்கது. எனவே, சென்ற இயலுடன் இவ்வியலுக்குரிய இயைபு போதரும்.

எனவே, முதற்கண் பாண்டிக்கோவை பற்றி ஆராய்தற்கு முன்னர், கோவை இலக்கணம் குறித்துப் பாட்டியல் பனுவல்கள் பகரும் கருத்தினைக் காண்போம்.

கோவை இலக்கணம்

அன்பொடு பொருந்திய அக ஒழுக்கத்தினைக் களவு, கற்பு என்று இருபகுதிகளாக அமைத்து முன்னதை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற்கூட்டம் என்று நால்வகையாகவும்; பின்னதை இல்வாழ்க்கை, பல்வகைப் பிரிவுகள் என்றும் பாகுபாடு செய்தல் இலக்கணமரபு. அகப்பொருளுக்குரிய துறைகள் அனைத்தையும் காலவரிசைப்படுத்தி நிகழ்ச்சிகளை நிரல்படக் கோத்துச் செய்யப்படுதலின் கோவை எனப் பெயர்பெற்றது. தலைவன்,

தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் முதலாய மாந்தர் பேசும் கூற்றுக்களைத் தழுவிக் கட்டளைக் கலித்துறை யாப்பில் பாடப்பெறும் நானூறு படல்களைக் கொண்டது கோவை ஆகும் எனப் பன்னிருபாட்டியல் (341-3) இலக்கணம் கூறும். இதனை, அகப்பொருட்கோவை என்று சிதம்பரப்பாட்டியல் செப்புகிறது (30). ஐந்திணைக்கோவை எனச் சிவப்பிரகாசர் செப்பினர். இவ்விலக்கணத்திற்குப் பொருந்திவரும் பாண்டிக்கோவையில் இப்பொழுது 350 பாடல்களே கிடைத்துள்ளன. வரலாற்றாசிரியர் பலரும் தமிழில் தோன்றிய முதல் கோவை இலக்கியம் இதுவே என்று கருதுவர்.

பாண்டிக்கோவைக்குரிய பாடல்கள் இறையனார் களவியலிலும் களவியல் காரிகையிலும் மேற்கோளாக ஆளப்பெற்ற பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. இலக்கண விளக்கப் பாட்டியலில், அகலக் கவிக்குப்பெயரிடும் மரபினைக் கூறும் நூற்பா உரையில் [நூ.876],

"செய்வித்தோன் பெயர்பற்றி வந்தன பாண்டிக்கோவை முதலியன"

என்று காணப்படுதலின், இக்கோவை நூலைப் பாடுவித்த பாண்டியன் பெயரினால் வழங்குகின்றது எனலாம். இக்கோவை சுட்டும் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் என்பது ஆராய்ச்சியாளர் பலர் கருத்தாகும். இவன் பெருந்தேவியே மங்கையர்க்கரசியார். இவனைத் திருஞானசம்பந்தர் சைவ நெறிக்கு மாற்றினார். ஆதலின், இவ்வேந்தன் ஆட்சிபுரிந்த கி.பி.7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இக்கோவை பாடப்பெற்றது என முடிவுசெய்யலாம்.

பாண்டியனைப் பற்றிய குறிப்புக்கள்

பாண்டிக்கோவை படிப்பவர்க்கு அகநானூறு உறுதியாக நினைவிற்கு வரும். வரலாற்றுச் செய்திகள் இரண்டிலும் மிகுதி. நின்றசீர் நெடுமாறன் நெல்வேலியில் நிகழ்ந்தபோரில் பகையரசர்களை வென்ற சிறப்பினை,

"நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்"

என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ளார். பாண்டிக் கோவையில், பலபாடல்கள் இவ்வெற்றியைக் குறிப்பன (60,61,123,170,208, 288,315). இரு சான்றுகள் காண்போம்.

"நீடிய பூந்தண் கழனிநெல் வேலி நிகர்மலைந்தார்
ஓடிய வாறுகண்(டு) ஒண்சுடர் வைவேல் உறைசெறித்த
ஆடியல் யானை அரிகேசரி" (24),

"நிரைதார் அரசரை நெல்வேலி வென்ற நெடுந்தகைசீர்" (77)

என்று இவ்வேந்தன் பெற்ற வெற்றி சுட்டப்பட்டது. மாறவர்மன் அரிகேசரி என்பது இவனுக்குரிய பெயர். இவன் சேரவேந்தனையும் (26) வேணாட்டரசரையும் (75)மற்றும் பலரையும் வென்றவன் (விழிஞம் (4), கோட்டாறு (5), பாழி (13), நறையாறு (14), கடையல் (23), ஆற்றுக்குடி (28), பூலந்தை (29), வல்லம் (35) முதலிய பல போர்க்களங்களில் நெடுமாறன் பெற்ற வெற்றி பாண்டிக்கோவையில் புகழப்படுகின்றது. **பாவணை இன்தமிழ் வேந்தன்** (13), **உரையுறை தீந்தமிழ் வேந்தன்** (2,30,50), **தீந்தமிழ்நர் பெருமான்** (87), **பாமாண்தமிழுடை வேந்தன்** (102) **ஆயும் தமிழ்மன்னன்** (239) என்று தமிழுடன் சேர்த்துச் சொல்லப்படுகிறான்.

பாண்டிக்கோவையின் பாட்டுடைத்தலைவனைச் சார்த்து வகையினால் புகழ்ந்து பாடிய நூலாசிரியர், அகப் பொருள் தலைமக்கள், அவர் தம் பாங்காயினோரை அருந்தமிழ்ச் சுவை தோன்றப் பாடியுள்ள பாங்கினைக் காண்போம்.

அகப்பொருள் மாட்சி

இயற்கைப் புணர்ச்சி என்பது அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித்தாமே பாலது ஆணையால் முன்பின் அறிவிப்பின்றிப் பொழிலகத்துக் கண்டு ஒருவரை ஒருவர் காதல் கொள்ளும் நெஞ்சப் புணர்ச்சியாகும். வையைப் பொழிலில் அழகு வாய்ந்த அன்பின் வடிவாகிய பூங்கொடி அனைய நங்கையைக் கண்ட காட்சி நம்பியின் முதற் பேச்சாக அமைகிறது. மலர்விழிகள் இரண்டும் வண்டாகவும், மென்முலைகள் அரும்பாகவும், செவ்வாய் தளிராகவும் கொண்டு அந்நங்கை என்ற பூங்கொடி காட்சி தந்தது:

"பூமரு கண்ணிணை வண்டாப் புணர்மென் முலை அரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச் செருச்செந் நிலத்தைவென்ற
மாமரு தானைஎங் கோன்வையை வார்பொழில் ஏர்கலந்த
காமரு பூங்கொடி கண்டே களித்தஎம் கண்ணிணையே" (1).

அவள் பூம்பொழிலில் உறையும் தெய்வமோ? மலைமுகட்டில் வாழும் தெய்வமோ? விண்ணகத்துத் தெய்வமோ? நீர் உறையும் தெய்வமோ? என்று எதிர்ப்பட்ட நங்கையின் அழகில் ஈடுபட்டுப் பேசுகிறான் (2). கண்கள் இமைத்தலாலும், பாதங்கள் நிலத்தில் படுதலாலும் அவள் தெய்வம் அல்லள், நில உலகின் பெண்தான் எனத்துணிகிறான்(3). வண்டினை நோக்கி, மெல்லியலின் செந்துவர்வாய் போல் மணம் வீசும் ஆம்பல் நறுமலர் உண்டோ? என்று வினவுகிறான்(4). அவள் கூந்தலைப் போல் கமழும் பூக்கள் உண்டோ என்றும் நயப்புற்றுக் கேட்கிறான் (5,6,7,8,9) குறுந்தொகையில்,

"செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே" (2:4-5)

என்று சங்ககாலத் தமிழிளைஞன் கேட்ட வினாவையே இடைக் காலத்துப் பாண்டியர் காலத் தமிழ் இளைஞனும் கேட்கிறான். பிற்காலங்களில் எழுந்த கோவைகளிலும் இப்படியே தலைமகன் கேட்கிறான். இது ஒரு இலக்கிய மரபு [literary convention].

தலைவனின் வாட்டத்திற்குக் காரணத்தைப் பாங்கன் வினாவு கின்றான் [23-26]. '__தென்னவன் கூடற் கொழுந்தமிழின், ஒண்துறைமேல் உள்ளம் ஓடியதோ?" (25) எனப் பாங்கன் தலைவன் வாட்டத்திற்குக் கேட்கும் காரணம், இன்னும் சற்று விரிந்த நிலையில்,

"........உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ?" (20)

எனவரும் திருக்கோவையாரில் வருதல் காணத்தக்கது. தன் காதல் வரலாற்றினைத் தலைவன் எடுத்துக்கூறுகின்றான் (27-9). பாண்டியனால் மீன் இலச்சினை பொறிக்கப்பட்ட இமயத்தைப் போல் கலங்காது நின்ற தலைவன் நிறையும் அறிவும் கலங்கி நிலைதளருவான் எனின், அவனைத் தெருட்டவல்லவர் யாவரே? என்று பாங்கன் கவலைப்படுகின்றான்(35). அவனிடம் தலைவியைக்கண்ட இடம் முதலிய விவரங்களைத் தெரிந்துகொண்டு அவளைக்கண்டு தலைவனை வியந்துரைத்தல் காணலாம் (36-45). தலைவன் மீண்டும் புனம் காக்கும் தலைவியை நோக்கிப்பேரும் ஊரும் வினாதல், யானை, மான் இப்பக்கம் வந்ததோ? எனக் கேட்டல், அவள் ஊருக்குப் போகும் வழி வினாதல் முதலியன யாவும் புலவரால் முறையாகப் பாடப்பட்டன. பின் கையுறையாக மலர்தந்து அவள் அன்பைப் பெற முயன்றான். அவளைப் பெறாவிடின் மடலேறுவதாகக் கூறிய தலைவன், அவள் வண்ணத்தை ஒருவாறு எழுத முடியினும், கூந்தலின் நறுமணத்தையும், நடை வனப்பினையும் பண்போன்ற சொல்வனப்பையும் படி எடுக்க இயலாமையினை எண்ணுகிறான்:

"அண்ணல் நெடுந்தேர் அரிகே சரிஅகல் ஞாலம் அன்னாள்
வண்ணம் ஒருவா றெழுதினும் மாமணி வார்ந்தனைய
தண்ணென் கருங்குழல் நாற்றமும் மற்றவள் தன்நடையும்
பண்ணென் மொழியும் எழுத உளவே படிச்சந்தமே" (97)

இங்ஙனம் வரும் காட்சிகள் பற்பல. புனம்காத்த பொழுது வந்த களிற்றினை விரட்டித் தலைவி, தோழி இருவரின் துயர் துடைத்த செய்தியும் தோழி கூற்றாக வந்தது (148). மணத்தின் பொருட்டு ஏறு தழுவும் பழக்கமும் சுட்டப்பட்டது (178). பரிசம் பேசும் வழக்கம் ஒருபாட்டில் இடம்பெறக் காணலாம் (197). தலைவனை

இரவுக் குறியில் கூடுதற்கு ஆயத்தமாகும் தலைவிக்குத் தடைகளாகத்தாய் துஞ்சாமை, நாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல் முதலியனவற்றை (239-243) அகநானூற்று மரபினை ஒட்டி (122)க் கோவை ஆசிரியர் பாடியிருத்தல் எண்ணற்பாலது.

கற்பியல்வாழ்க்கையில் ஓதற் பிரிவு, காவற்பிரிவு, வேந்தற்கு உற்றுழிப்பிரிவு மேற்கொள்ளும் தலைமகன் நிலையும் அவனுடைய பிரிவாற்றாது தலைவி துன்புறுவாள் எனத் தோழி எடுத்துரைக்கும் திறமும் புனைந்துரைக்கப்பட்டன (263-9)

விற்பூட்டுப்பொருள்கோள், விதலையாப்பு, பாசிநீக்கம், கொண்டு கூட்டு முதலிய பொருள்கோள் வகைக்கு எடுத்துக்காட்டாகக் களவியல் உரையில் காட்டப்பட்ட பாடல்களும் இக்கோவையில் இடம் பெற்றன (339-345).

நகரினை உவமை கூறுதல் - சங்க மரபு

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று இன்புறுதற்குரிய பொருள்கள் யாவும் நிறைந்துள்ள நகரத்தினைப் பெண்ணிற்கு உவமை கூறுதல் சங்க இலக்கியங்களில் புலவர்கள் போற்றிய பாடல்நெறி ஆகும். நகரைக் கொடுத்தாலும் அவளுக்கு ஈடாகாது என்பது ஒரு கருத்து.

தொண்டிநகரத்தினைத் தலைவிக்கு உவமை கூறுதல் பல பாடல்களில் காணலாம் (குறுந். 238:4-5; அகம். 10:13;60:7-8; ஐங்குறு. 171:3-4). **அள்ளூர்** (அகம். 46:14-5), வஞ்சி (அகம்.396:19), **மரந்தை** (-மாந்தை?) (அகம்: 376:18; நற். 35:7), **கூடல்** (நற்.39:9-11), **மருங்கூர்ப்பட்டினம்** (நற்.258:10) என்ற நகர்கள் தலைவியின் வனப்பிற்கு உவமையாயின. இம்மரபினைப் பாண்டிக்கோவை ஆசிரியர் விரிவுபடுத்தி, நாடு, நகர் முதலாய இடங்கள் பலவற்றையும் தலைவிக்கு உவமை கூறியுள்ளார். ஒரு சில சான்றுகளைக் காண்போம்.

பாண்டிக்கோவையில்

1. வஞ்சி அன்னாய் 10,16,33,45,64
2. தொண்டி அன்ன .... பெய்வளைத்தோளி 11,14
3. முசிறி அன்னாய் 12
4. மாறன் **புகார்** அனையாள் 17,34,59
5. **கூடல்** அன்ன இளையார் 27,28,53,90,99,101

இங்ஙனம் வருவன மேலும் பல உள்ளன.

நாட்டினை நங்கைக்கு உவமை கூறிய இடங்களில் சில:

1. **புனல்நாடு** அனையாய் 15
2. **காவிரி நாடு** அனையீர் 52
3. **தென்னவன் நாடன்ன** சேயிழை 72,108

மாறவர்மன் அரிகேசரி தனக்குரிய பாண்டிய நாட்டினை ஆண்டதுடன், சேர சோழ மன்னர்க்குரிய நாடு, நகரங்களையும் வென்றவன் என்பதால் இங்ஙனம் புலவர் போற்றிப் பாடியுள்ளார். பாண்டியனைத் தமிழுடன் இணைத்துச் சொல்லிய இடங்கள் பற்பல. மதுரையில் சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த மரபு கருதி இங்ஙனம் பாடுதல் இலக்கிய வழக்காகக் காணப்படுகின்றது. அன்றியும், **"அகத்தியன்வாய் உரைதரு தீந்தமிழ் கேட்டோன்"** என்றும் புகழப் பெற்றான் (106). இப்பாடலின் கருத்தினை அடியொற்றியே அமிதசாகரர்,

> "தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
> கானார் மலயத்(து) அருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்"

என்று யாப்பருங்கலக்காரிகையின் பாயிரத்தில் பாடியிருத்தல் ஒப்புநோக்கி உணர்ந்து மகிழ்தற்குரியது.

பொதுவாக நோக்குமிடத்து, நெடுமாறனின் அவைக்களப் புலவர் அவன் பல இடங்களிலும் பகைவரைப் பொருது பெற்ற வெற்றியைப் போற்றுதற்குக் கோவை என்னும் இலக்கிய வகையினை ஒரு கருவியாகக் கொண்டனர் என்று தோன்றுகின்றது. இப்புலவரின் பெயர் அறியப்படவில்லை. **கூடுதலாக வரலாற்றுச் செய்திகளே பாட்டினை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் கவிச்சுவை ஓங்கவில்லை எனலாம்.** எனினும், சுவைமிக்க பாடல்கள் இல்லாமல் இல்லை. தொடக்கக் காலத்தில் தோன்றிய கோவை ஆதலின், முழுமை [perfection - பூரணத்துவம்] அடையவில்லை என்று எண்ண வேண்டியுள்ளது. எங்ஙனமாயினும், கோவை பாடுதற்கு ஆசிரியர் முற்பட்டு **முதற்கோவை** என்ற சிறப்பினைப் பாண்டிக் கோவைக்குப் பெற்றுத் தந்துள்ளார். இந்நூலிற்கு வே. துரைசாமி என்பாரைக் கொண்டு சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஸ்டார் பிரசுரத்தார் ஒரு பதிப்பினை 1957இல் வெளியிட்டனர். எனினும், ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் கூடிய செம்பதிப்பு இந்நூலிற்குக் கட்டாயம் தேவை.

இனி, மாணிக்கவாசகர் பாடியுள்ள திருச்சிற்றம்பலக் கோவையாரைக் குறித்துச் சிலகருத்துக்களைக் கூறுதல் சாலும்.

2. திருச்சிற்றம்பலக் கோவையார்

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. பத்தி இலக்கியம் என்ற தலைப்பில் அடுத்த இயலில் ஆராய்தற்குரியதேனும், கோவை என்ற இலக்கிய வகைமை நோக்கி, பாண்டிக்கோவைக்கு அடுத்து, திருச்சிற்றம்பலக்கோவையார் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது. இவ்விலக்கியத்தினைத் திருக்கோவையார் என்று கூறுதல் பெருகிய வழக்காம்.

திருக்கோவையார் அமைப்பும் சிறப்பும்

தேனூறும் செஞ்சொல் திருக்கோவை நானூறும் என்று போற்றப்பெறும் திருச்சிற்றம்பலக்கோவையினைப் பாடிய மாணிக்க வாசகரைத் திருவாதவூர்ச் சிவபாத்தியன் என்று திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி போற்றுகின்றார். சிவன் பாதங்களுக்கு அன்பு பூண்டவர் என்பது இப்பெயரின் பொருள். கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில்,

"வருவா சகத்தினில் முற்றுணர்ந் தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயும்மற்றப் பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே" (58)

என்று திருக்கோவையின் சிறப்பினைப் பரவினர். திருக்கோவையின் பாடற் பொருண்மையினையும் கவிச்சுவையினையும் தெளிந்து கொள்ளாத புலவர் சிலர் வேண்டியவாறே கவிதை பாடிப் பிறர் நகைக்கச் செய்துவிடுகின்றனரே என்று கழிவிரக்கம் கொள்ளுகின்றார்! திருக்கோவையாரே, தமிழில் தோன்றிய கோவைகளுக்கெல்லாம் பொருள் சிறப்பாலும் கற்பனைத் திறத்தாலும் அணி நலத்தாலும் மெய்ப்பொருள் கருத்தாலும் யாப்புச்செம்மையாலும் ஓசை நயத்தாலும் மேலோங்கி நிற்கின்றது.

இலக்கணக்கொத்து என்னும் நூலுடையார்,

"பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்" (நூ.10)

என்று திருக்கோவைக்கு ஏற்றம் கொடுத்தார். அன்றியும், "திருவைக் கோவைக்கும் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கில் கலந்து இரந்து அருமைத்திருக்கையால் எழுதினார் (ப.102)" என்று நூலையும் ஆசிரியரையும் போற்றினர். குமரகுருபரர்,

"பைந்தமிழ் பயின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள்எனச் சுட்டிய ஒருபெருஞ்செல்வ" (23:7-10)

எனச் சிதம்பரமும்மணிக்கோவையில் பரவுதல் காணலாம். மாணிக்க வாசகரைச் செந்நாப்புலவன் என்றும், திருக்கோவையாரைக் காமஞ் சான்ற ஞானப்பனுவல் என்றும் குறித்தனர்.

இந்நூலிற்குப் பேராசிரியர் எழுதியுள்ள பேருரை தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையரும், திருக்குறளுக்குப் பரிமேலழகரும், சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லாரும் சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியரும் யாப்பருங் கலத்திற்குக் குணசாகரரும் செய்த உரைகளைப்போல ஆழமும் அருமையும் இலக்கியச்சுவையும் வாய்ந்தது.

வரலாற்றுக்குறிப்புக்கள்

கட்டளைக்கலித்துறை யாப்பில் 400 பாடல்கள் நிரம்பிய இக்கோவையில், மாணிக்கவாசகர் காலத்து மதுரையில் ஆட்சிபுரிந்த பாண்டியன் முதலாம் வரகுணனைப் பற்றிய குறிப்புக்கள்,

"வரகுணனாம்,
தென்னவன் ஏத்துசிற் றம்பலத்தான்" (306),

"புயலோங்(கு) அலர்சடை ஏற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங்(கு) இருங்களி யானை வரகுணன் (327)

எனவரும் பாடல்களில் காணப்படுகின்றன. இவ்வேந்தன் கி.பி.792-835 இல் ஆட்சிபுரிந்தவன்.

மற்றொரு பாடலில் தில்லையம்பலவாணர் திருக்கோயிலின் தென்மேற்குப் பகுதியில் காட்சி தரும் திருச்சித்திரகூடம் என்று திருமங்கை ஆழ்வார் போற்றும் கோவிந்தராசரின் கோயில் குறிக்கப்படுகிறது:

"புரங்கடந்தான் அடிகாண்பான்..............
வரங்கிடந்தான் தில்லைஅம்பல முன்றில் அம்மாயவனே" (86)

இப்பாடலில் தற்குறிப்பேற்ற அணி அமைத்து நடராசரின் மற்றொரு பாதத்தையும் தனக்குக் காட்டவேண்டும் என்று திருமால் வரங்கிடந்தார் என்று வாதவூரடிகள் குறித்துள்ளார். இக்கோயிலைக்கட்டியவன் கி.பி.710-775இல் காஞ்சிமாநகரில் ஆட்சிபுரிந்த இரண்டாம் நந்திவர்ம பல்லவன். எனவே, மாணிக்கவாசகர் இவன் காலத்தை ஒட்டி முதலாம் வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் என்பது அறிஞர் பலரின் துணிவு.

கோவையாரின் அமைப்பு

அகப்பொருள் மரபினைப் பின்பற்றிக் களவு, கற்பு என்ற இருபெரும் கைகோள்களுக்குரிய உட்பிரிவுகளும் துறைகளுக்குரிய கிளவிகளும் அடிகளார் அமைத்துள்ளார். **இயற்கைப்புணர்ச்சி** [காட்சி முதல் பாங்கியை அறிதல் முடியவும் (1-18)] **பாங்கற்கூட்டம்** [பாங்கனை நினைதல் முதல் நின்று வருந்தல் முடியவும் (19-48); இடந்தலைப்பாடு: பொழிலிடைச் சேறல், (49) **பாங்கியிற்கூட்டம்** [இடைவினாதல் முடியவும் (50-59)] **இருவரும் உள்வழி அவன்வரவு உணர்தல்**, முன்னுற வுணர்தல், நாணநாட்டம், நடுங்கநாட்டம், மடற்றிறம், குறை நயப்புக்கூறல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், உடன்போக்கு, வரைவுமுடுக்கம், வரைபொருட்பிரிதல் முடியவும் (60-298) களவொழுக்கத்திற்குரிய பகுதிகளாகப் பாங்குற அமைந்தன.

களவிற்குப் பின் நிகழும் கற்பொழுக்கத்தில் மணம் சிறப்புரைத்தல், ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப் பிரிவு, வேந்தற்குற்றுழிப் பிரிவு, பொருள் வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு முடிய ஓதப்பட்டன (299-400).

இவ்வரையறையினைக் காணும்பொழுது புலனெறி வழக்கமாகப் பாடப்பட்டுவரும் தொடர்நிலைச் செய்யுளாகிய கோவையில் முதற் கூறாகிய களவுக் காலத்து ஒழுகலாறு தனிமனிதனைப் பற்றியதாக விளங்குகின்றது. இலட்சியத் தலைவியை அடைவதற்கு முயலும் இலட்சியத் தலைமகனின் முயற்சிகள், ஆவல்கள், எதிர்பார்ப்பு, வெற்றி என்பன தலைமக்களாகிய இருவரையும் மையப்படுத்தி இன்பம் பயப்பன என்பது புலனாகும்.

தன்னேரில்லாத்தலைமகன்

எனின், கற்புக் காலத்து ஒழுகலாறுகள் குடும்ப எல்லையினின்றும் விரிவுபெற்று மேலும் மனிதன் தன்னை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஓதற்பிரிவும் மேற்கொள்ளப்படுகிறது. அன்றியும், நாட்டைக் காக்கவும், பகைதணிவிக்கவும், வேந்தனுக்கு உற்றுழி உதவவும் மேற்கொள்ளும் பிரிவுகள் தேசமுக்கியத்துவம் வாய்ந்தவை. பொருள்வயிற்பிரிவு உலகியல் நோக்கியது. பொருளின் மகத்துவத்தை இலக்கண நூலார், நீதி நூலார், காப்பியக்கவிஞர், பத்தி இலக்கியம் பாடியவர் என்று பலரும் போற்றியுள்ளனர். ஆதலின், மக்கள் வாழ்க்கையில் பொருள் வயிற்பிரிவு முதன்மை வாய்ந்தது. எனினும், பரத்தைப்பிரிவு இல்லாமல் ஐந்திணைக்கோவை பாடக்கூடாதா? என்ற வினா எழுகிறது. திருவள்ளுவரைப் போன்ற சான்றோர்கள் சங்ககாலச் சமுதாயம் பின்பற்றிய பரத்தை ஒழுக்கத்தைச் சாடியும் கூட, கோவை நூலார்கள் இலக்கிய மரபினைக் காக்க வேண்டிப்போலும் பரத்தைப்

பிரிவினைப் பாடினார்கள். பரத்தையர் பிரிவின்கீழ் மாணிக்கவாசகர் பாடிய இறுதிப்பாடல் திருக்கோவையாரிலும் இறுதிப் பாடலாக அமைகிறது.

> **"காரணி கற்பகம்; கற்றவர் நற்றுணை; பாணர்ஒக்கல்;**
> **சீரணி சிந்தா மணிஅணி தில்லைச் சிவனடிக்குத்**
> **தாரணி கொன்றையன்; தக்கோர்தம் சங்கநிதி; விதிசேர்**
> **ஊருணி உற்றவர்க்(கு); ஊரன்மற்(று) யாவர்க்கும் ஊதியமே"** (400)

தலைவனுக்குரிய பரத்தையைக் கண்டமை கூறி ஊடிய தலைவியை ஊடல் தீர்க்க முயலும் தோழி தலைவனின் பல்வகைச் சிறப்புக்களையும் யாவர்க்கும் பயன்படும் பரந்த உள்ளத்தையும் பாராட்டுகின்றாள். கைம்மாறு வேண்டாது வழங்கும் கார் மேகம் ஒத்தவன்; வேண்டுவதைத் தரும் கற்பகத் தருவினைப் போன்றவன்; கற்றவர் உரையாடலில் உசாத்துணையாக விளங்கும் அறிவு வாய்ந்தவன்; பாணர் (புலவர், மற்றும் கலைஞர்) பலர்க்கும் உறவு; தில்லைச் சிவன் சூடிக்கொள்ளும் கொன்றைத்தார் போல், அவனைச் சூழ்ந்தோரால் அணிந்துகொள்ளத்தக்க சிறப்புக்குரியவன்; தக்கவர்க்கு உதவும் சங்கநிதி ஒத்தவன்; நல்லூழ் போன்றவன்; உற்றவர்க்கு ஊரணியாகப் பயன்படுபவன்; சமுதாயம் முழுமைக்கும் (-யாவர்க்கும்) ஊதியமாய் ஒளிர்பவன்.

எனவே, தன்னேரில்லாத் தலைவனாகக் காட்சிதருகிறான் திருக்கோவையாரில் இடம்பெறும் தலைமகன்.

பிறனில் விழையாமை

காம மயக்கத்தின் காரணமாக மற்றவன் மனைவியை விரும்பாமையினை இல்லறத்தின் ஒரு கூறாகத் திருவள்ளுவர் எண்ணியுள்ளார். 'பிறன்மனை நோக்காத பேராண்மை' என்று மனத்திட்பம் உடைய தலைமகனின் மகாவீரத்தைப் (=பேராண்மை) போற்றினார். இத்திட சித்தமே சால்புடையவர்க்கு அறனும் நிரம்பிய ஒழுக்கமும் ஆகும் என்றார் (148). இச்சீரிய கருத்தினைத் திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் சிறப்புறப் புலப்படுத்தியுள்ள பாங்கு காணத்தக்கது.

உடன்போக்கிற் சென்ற தலைவியைத் தேடிச் செல்லும் செவிலி, காதலனும் காதலியுமாகக் கூடி எதிரில் வருவார் இருவரை நோக்கிப் பேசுகிறாள்: "நும் இருவரையும் கண்டு அவ்விருவரும் மீண்டார் என்று எண்ணி மகிழ்ந்தேன். எனின், நும்மை ஒத்த இயல்பினராகிய அவர்கள் இச்சுரத்தின்வழி சென்றது உண்டா?" இவ்வினாவிற்குத் தலைவன் விடை கூறுகின்றான்:

"யாளியைப்போல் ஆற்றல் மிக்கதலைவன் ஒருவனைக் கண்டேன்" என்று சொல்லித் தன் அயலில் நிற்கும் காதலியை நோக்கி, செவிலியின் எஞ்சிய வினாவிற்கு விடை சொல்லுக என்றும் குறிப்பில் சுட்டினான்:

"மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மை;இம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரே? புலியூர் எனைநின்(று)
ஆண்டான் அருவரை ஆளியன் னானைக்கண்டேன்; அயலே
தூண்டா விளக்கனையாய்! என்னையோ? அன்னை
சொல்லியதே" (244)

மாற்றானுக்குரிய தலைவியைத்தான் நோக்காமையும் தன்தலைவி நோக்கியிருத்தல் கூடுமாதலின் செவிலிக்கு விடைகூறும்படி உணர்த்தியமையும் நயத்தக்க நாகரிகத்தைப் புலப்படுத்தக் காணலாம். இலட்சிய நோக்குடைய இத்தகைய மரபுகள் சமுதாயச் சீர்மையைக் காப்பன.

இனி, இத்தொடர்நிலைச் செய்யுளில் பொதிந்துள்ள இலக்கியக் கூறுகள் சிலவற்றை நோக்குவோம்.

கற்பனைவளம்

பொழிலிடைத் தலைவன் தலைவியைக் கண்ணுற்று அவள் அழகில் ஈடுபட்டுப் பேசும் காதற்பேச்சு கோவையின் முதற்பாடலாக முகிழ்க்கின்றது. தில்லைக்கண் அழகு வளரும் தாமரை மலரும் சீர் வளரும் நீல மலரும் ஒளிவளரும் குமிழ மலரும், கோங்கமலரும் காந்தள் மலரும்தாங்கிய மணம் கமழும் மலர்மாலை ஒரு கொடியைப் போல்தளர்ந்து, நடையைப் பெறுமாயின் ஓர் அன்னத்தின் நடையினைப் பெற்றுக்காதற் கடவுளாகிய காமவேளின் வெற்றிக் கொடியினைப்போல ஒளிவீசுகின்றதே! என்று தலைவன் வியந்து பேசுகின்றான்:

"திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ், கோங்குபைங் காந்தள்கொண்(டு) ஓங்குதெய்வ
மருவளர் மாலை ஓர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்(து)
உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன்(று) ஒளிர்கின்றதே
(1).

பேராசிரியரின் உரைமாட்சியினால் இப்பாடலின் கற்பனைவளம் பயில்வார்க்குப் புலனாகின்றது:

தான்கண்டது மன்மதனின் வெற்றிக்கொடி என்றது தலைவியை. கொடிபோலும் மென்மைத் தன்மை வாய்ந்த தலைவியின் பேரழகு என்னை வென்றது என்று கூறுபவன் மன்மதனின் வெற்றிக் கொடி போன்று ஒளிவீசுகிறாள் எனப் பாராட்டுகின்றான். ஒரு மலர்மாலையினைப் போன்றவள் தான்கண்ட தலைவி எனப் புகழ்கின்றான். அம்மாலையில் தொடுக்கப்பெற்ற மலர் விசேடங்கள் தாமரை, நீலம், குமிழம், கோங்கம், காந்தள் என்பனவாம். இவை முறையே தலைவியின் முகம்,கண், மூக்கு, முலை, கை என்ற உறுப்புக்களுக்கு உவமையாய் அமைவன.

எனவே, துவளும் தன்மையால் இம் மலர் மாலை ஓர் வல்லிக் கொடியைப் போன்று, அன்னத்தின் நடையினைப் பெற்று என்னெஞ்சத்தை வெற்றி கொண்டதால், உருப்பெற்ற காமன் தன் வெற்றிக் கொடிபோல் ஒளிர்கின்றது! என நயந்தும் வியந்தும் பேசுகிறான்.

பேராசிரியர் இம்மலர்கள் ஐந்தும் ஐந்திணைக்கும் உரியவை என்பதை அழகாகக் சுட்டுகின்றார். தாமரை மருதநிலத்திற்கும், நீலம் நெய்தல் நிலத்திற்கும் குமிழம் முல்லை நிலத்திற்கும், கோங்கம் பாலை நிலத்திற்கும் காந்தள் குறிஞ்சி நிலத்திற்கும் உரியவை. எனவே ஐந்திணைக் கோவை பாடும் மாணிக்கவாசகர் ஐந்திணைக்கும் உரிய மலர்களைத் தலைவியின் உறுப்பு விசேடங்களுக்கு உவமை கூறியது சாலப் பொருந்தும். அன்றியும் இம்மலர்கள் யாவும் தில்லையில் உள்ளவை என்பதால் ஐந்திணை இன்பமும் தில்லையில் வாழ்வோர்க்கு வாய்ப்பன என்ற கருத்தும் போதரும்.

ஒவ்வொரு பாடலிலும் பாட்டுடைத் தலைவனாகிய நடராசரையும், அவர் பதியாகிய தில்லையினையும் புனைந்து பாடுதல் காணலாம். "ஈசர் தில்லை" என்று சுட்டப்பெற்றது. ஈசர் என்ற சொல்லிற்கு ஆள்பவன், செல்வன் என்ற இருபொருள் உண்டு. உயிர்த்தொகுதியை வினைக்கீடாக ஆள்பவன் ஆதலினாலும், எல்லாச் செல்வமும் உடையவனாதலானும் இங்ஙனம் கூறினார். ஆளுடைய பிள்ளையும், "சிற்றம்பலம் மேய செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" எனப் போற்றுதல் இயைபு கருதி எண்ணற் பாலது. இங்ஙனம் பாடல்தொறும் காதற் பொருளும் கடவுட் பொருளும் கலந்து வருதலின், குமரகுருபரர்,

"ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவல்"

எனப் போற்றுதலின் பொருண்மை உணர்ந்து மகிழத்தக்கது.

உயர்ந்த இலக்கியம் உவமை, உருவகம் முதலிய அணிநலம் சிறந்து விளங்கும் என்பர். திருக்கோவையாரில் காணப்பெறும் அணிவகைகள் சிலவற்றைக் காண்போம்.

அணிநலம்

1. உவமை அணி

வினைப்பயனை வரையறுத்து உரியவர்க்கு ஊட்டும் பால்வரை தெய்வத்தின் உந்துதலால் தலைவன் தலைவியைப் பொழிலிடைக்கண்டு இருவரும் உளங்கலந்து இன்பம் துய்த்தனர். தான் பெற்ற இன்ப அனுபவத்தைத் தலைவன் வெளிப்படுத்தும் பாடற் பகுதி உவமை

நலம் வாய்ந்தது (8). பருகுவார்க்கு இன்பமும் இளமையும் தரும் பாலடிசிலும் அதில் கரந்துரையும் சுவையும் போல, தலைவன் நெஞ்சம் தலைவியினிடம் ஒடுங்க, யான் என்பதோர் தன்மை காணாது ஒழிந்தது என்று பேராசிரியர் விளக்கினார். மேலும், “சொற்பாலமுதுஇவள்; யான்சுவை” என்ற தொடர் இருவரும் பாலும் அதன் சுவையும்போல் பிரிப்பற்று நின்றனர் என்ற பொருள் பயப்பது இன்பம் துய்த்தற் பொருட்டாக யான் என்றும் இவள் என்றும் வேறுபாட்டோடு தோன்றும் அழகினை, “நான் இவளாம் பகுதிப்பொற்பு” என்றும் தலைவன் புலப்படுத்தினான். பெறுவானும் பேறும் வேறாகா விடத்து இன்பம் ஏது? எனவேதான் இங்ஙனம் இயம்பினான்:

> “சொற்பால் அமு(து) இவள்; யான்சுவை என்னத் துணிந்திங்ஙனே
> நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று; நான்இவளாம் பகுதிப்
> பொற்(பு) ஆர் அறிவார்? புலியூர்ப் புனிதன்பொதிய வெற்பில்
> கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே” (8)

தலைவியைக் கண்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் அனுபவித்த தலைவன் அவள் பேசும் இன்பத்தினைச் செவியால் நுகர்தற்கு அவாவுகின்ற பாங்கினைக் “கிளவி வேட்டல்” என்ற துறையில் அமைத்து உவமை நலம் சிறக்க வாதவூரர் பாடியுள்ளார். பொன்மயமாகப் பொலியும் தில்லை அம்பலத்தைப் போல் கொங்கையும், வாள்போல் தடங்கண்ணும் மாமதியின் துண்டத்தைப் போல் நுதலும், மின்னல்போல் இடையும் வேய்போல் தோளும் வாய்ந்த தலைவியின் மென்மொழியைக் கிளியிடம் போய்த்தான் கேட்க வேண்டுமோ! என்று வியக்கின்றான். அவள் மொழிக்குக் கிளியின் பேச்சுத்தான் உவமையாக முடியும் என்பது கருத்து. காகத்திற்கு இரு கண்ணிருப்பினும் மணி ஒன்றே யாதல்போல், தலைவன், தலைவி இருவர்க்கும் உயிர் ஒன்றே; தோகைக்கும் தோன்றற்கும் இன்பதுன்பங்கள் ஒன்றாய் வரும் எனக் கொண்ட தோழி மதியுடம்பட்டமையினைப் பேசும் பாடலிலும் உலகியல் சார்ந்த உவமை பயின்றுள்ளது:

> “காகத் திருகண்ணிற்(கு) ஒன்றே மணிகலந்தாங்(கு) இருவர்
> ஆகத்துள் ஒருயிர் கண்டனம்யாம்; இன்றியாவையுமாம்
> ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பலவன்மலையில்
> தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்பத்
> துன்பங்களே” (71)

எனவரும் பாடல் இலட்சியத் தலைமக்களின் அனுபவப் பொதுமையினை அழகுணர்வுடன் புலப்படுத்துகின்றது.

2. உருவக அணி

வற்புறுத்தல் (-வன்புறை) என்னும் துறை, தலைவன் தலைவியின் இயல்புகளையும் இடத்தையும் கூறக்கேட்ட பாங்கன் அவளைக் கண்டு வரும் துணையும் ஆற்றியிருக்கும்படி வற்புறுத்திக் கூறுதலைப் பொருண்மையாகக் கொண்டது. இத்துறையில் அமைந்த பாடலில் (30) உருவக அணி அமைந்துள்ளது.

தலைவியைக் குயில், கொம்பு, கருங்கட்செய்வாய் மயில் என்று உருவகம் செய்து கூறினன். குயில் போன்ற குரல் உடையவளைக் குயில் என்றே கூறுதலும், பூங்கொத்துப்போன்றவளைப் பூங்கொத்து என்றே கூறுதலும், மயில் போன்ற சாயல் உடையவளை மயில் என்றே கூறுதலும் அழகுணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்த உருவகங்களாம்.

3. உயர்வு நவிற்சி

தான்வாழும் இடம் தலைவியின் இடத்திற்கு மிகவும் அருகில் உள்ளது என்றும் அதனால் அவன் பிரிவினைத் தாங்கியிருக்கும் படியும் கூறும் துறை இடம் அணித்துக் கூறி வற்புறுத்தல் என்று வழங்கப்பெறும். இத்துறையில் அமைந்த பாடலில்,

> **". . . . எம்மூர்ப்**
> **பருங்குன்ற மாளிகை நுண்களபத்(து) ஒளிபாய நும் ஊர்க்**
> **கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும் கனங்குழையே"**
> (15)

எனவரும் பகுதியில் உயர்வுநவிற்சி அணி அமைந்தது. தலைவன் ஊரில் மலைபோல் ஓங்கி நிற்கும் மாளிகைகளின் வெண்சுதையின் பேரொளி, தலைவி ஊரில் உள்ள கரிய குன்றத்தின்மீது பட்டு அதனை வெண்ணிறச்சட்டையாக விளங்கச் செய்யும் என்பதால், இருவரும் ஒருவருக்கு ஒருவர் அருகாமையில்தான் வாழ்கின்றனர் என்ற கருத்து உணர்த்தப்பெற்றது. கூடுதலான கற்பனை [Fancy] இப்பாடலில் ஒளிர்கின்றது.

அகப்பொருட்பாடல்களில் உள்ளுறை, இறைச்சி என்ற மறைபொருள் வைத்துப் பாடுதல், வல்லார்க்கே கைவந்த கவிதைக் கலை. இவற்றையும் பாடலில் அமையும் சிறந்த அணியாகக் கொள்ளுவர் பின்னூலார். ஓரிரு சான்றுகளை நோக்குவோம்.

4. உள்ளுறை

தோழியின் வாயிலாகத் தலைவியின் கூட்டம் நயந்த தலைமகனை நோக்கி, 'பஞ்சின் மெல்லடியாளைக்கண்டு உன் குறையினைக்

கூறுதற்கு யான் அஞ்சுவேன்; நீயே சென்று கூறுக" எனக் கூறினாள் தோழி. உடம்படாது மறுத்துக் கூறுவதாக அமைந்த பாடல் இதுவே:

"அந்தியின் வாய் எழில் அம்பலத்(து) எம்பரன் அம்பொன்வெற்பிற்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை பைந்தே னொடும்கடுவன்
மந்தியின் வாய்கொடுத்(து) ஓம்பும் சிலம்ப! மனம்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே மொழி, சென்(று) அம் மொய்குழற்கே"
(99)

இப்பாடலில், உள்ளுறை உவமம் உறைந்திருத்தலை உரையாசிரியர் ஆகிய பேராசிரியர் அழகுறப் புலப்படுத்தியுள்ளார்:

செவ்வானத்தைப்போல் எழில் வாய்ந்த பொன்னம்பலத்தில் விளங்கும் எம் ஈசனின் அழகிய பொன்போன்ற மலையில் பந்திபந்தியாக உள்ள நிரையின் கண்ணே ஆண்குரங்கு (-கடுவன்) பலாப்பழத்தின் இன் சுளையினைப் புதிய தேனில் தோய்த்துத் தன் துணையாகிய பெண் குரங்கிற்கு (மந்தி) வாயில் ஊட்டும். இத்தகைய இன்ப அன்புக் காட்சியையுடைய மலையில் வாழும் தலைவனே! அழகிய பூங்குழலியாகிய அவளுக்குமனம் கனியும் படி உன் குறையினை நீயே முந்திச் சென்று மொழிவாய் என்பது பாடலின் சாரம். பலவின்சுளையினைத் தேனில் தோய்த்துத் தன் துணைக்குக் கடுவன் உண்பிக்கும் என்பது உள்ளுறை. உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருளைக் (கடுவன், மந்தி, பலவின் சுளை, தேன்) கருதிய பொருளோடு (தலைவன், தலைவி, இனியசொற்கள்) பொருத்தி முடிப்பதே உள்ளுறை உவமத்தின் இலக்கணம் என்பர் தொல்காப்பியர் (பொருள். நூ.51). மந்தி உயிர் வாழ்வதற்குத் தேவையான பலவின்சுளை, தேன் முதலியவற்றைக் கடுவன் தானே முந்திச் சென்று கொடுத்து மனம் மகிழ்வித்தல்போல, தலைவி உயிர் வாழ்வதற்குக் காரணமான கனிந்த சொற்களைத் தலைவனே முந்திச் சென்று அவளிடம் கூறுதல் வேண்டும் என்பது உள்ளுறையும் கருத்தாகும். இது சொல்நாகரிகம்; நயமாகக் கூறும் பேச்சுப் பண்பாடு.

5. இறைச்சி

இறுத்தல் என்ற வேர்ச் சொல்லினின்றும் பிறந்தது **இறைச்சி. இதன் பொருள் தங்கிய குறிப்புப் பொருள்** என்பதாம். அகத்திணைப் பாடலில் வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளின் புறத்துத் தங்கிய குறிப்புப் பொருளை இறைச்சி என்று பொருளிலக்கணமும் பாவியலும் வல்ல பண்டைப்புலவர் சுட்டினர். அகப்பாடல்களில் உள்ளுறை வைத்துப் பேசுதல் போல், இறைச்சிப் பொருள் தோன்றப் பேசும் நாகரிகமும் திணையிலக்கியத்திற்குச் சிறப்புத்தருவது (தொல்.பொருள்.நூ.225,226,227).

தன்னிடம் குறையிரந்து நிற்கும் தலைவனை வெவ்வேறு காரணங்கள் கூறிமறுத்தல் சேட்படை என்ற அதிகாரத்தில் தொகுத்துச் சுட்டப்படும். இதன்கண், இசையாமை கூறிமறுத்தல் என்பது ஒரு துறை. இத்துறைக்குரிய பாடல் இதுவே:

"நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகம்நண்ணி
மறமனை வேங்கை எனநனி அஞ்சும் மஞ்சார் சிலம்பா!
குறமனை வேங்கைச் சுணங்கொ(டு) அணங்கலர் கூட்டுபவோ?
நிறமனை வேங்கை அதள்அம் பலவன் நெடுவரையே (96)

தலைமகனின் மேகம் தவழும் மலையில் வேங்கைப் பூக்கள் மூடிய பாறைக்கல்லினைப் பார்த்து யானை (-நாகம்) மறப்புலி என்று அஞ்சும். வேங்கைத் தோலைப்போர்த்திய அம்பலவாணனின் மலையில் குறவர் மனையில் வளரும் வேங்கையின் மலர் தவிர, அணங்கிற்குரிய பிற மலர்களை (-தலைவன் தருவனவற்றை)ச் சூடுவோமே? என்று இசையாமை கூறித் தலைவன் தந்த மலர்மாலையினை மறுத்துரைத்தாள் தோழி. ஒத்த தோற்றம் உடைமை ஒன்றே பற்றி, அஞ்சப்படாததனையும் (-வேங்கைப் பூக்கள் போர்த்த பாறை) அஞ்சுதற்கு (-புலியென) இடமாக இருப்பது எம் மலை நிலம். எனவே, எம் குலத்திற்கு ஏலாததாய் நீதரும் தெய்வமலரை (-அணங்கு அலர்) அணிவதற்கு யாம் அஞ்சுதல் சொல்லவும் வேண்டுமோ? எனத் தோழி இறைச்சிப் பொருள் தோன்றக் கூறிக் கையுறையினை மறுத்தனள் என்பர் பேராசிரியர்.

வேங்கைமலர்கள் உதிர்ந்த துறுகல் புலியினை நிகர்க்கும் என்ற இக்கற்பனை மாணிக்கவாசகர்க்குச் சங்க இலக்கியப் பயிற்சியால் வந்திருத்தல் வேண்டும். கோவையில் இடம் பெறும் இக்கற்பனை,

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றும் காட்டிடை" (குறுந்.47:1-2),

"மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின
அழுகை மகளிர்க்(கு) உழுவை செப்ப" (பரி. 14:11-2)

எனவரும் சங்கப் பாடல்களில் வழங்கக் காணலாம். நகரினைப் பெண்ணிற்கு உவமை கூறும் சங்கமரபு பாண்டிக்கோவையில் பின்பற்றப்பட்டமை யினை முன் கண்டோம். திருக்கோவையாரில், **'தில்லை அன்னாள்'** என்று இம்மரபு தொடர்தல் (45,47 முதலியன) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மாணிக்கவாசகர் செம்புலச்செல்வராதலின், அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்கும் என இருபொருள் நுதலித்திருக் கோவையினை அருளிச்செய்தார் எனப் பேராசிரியர் விளக்கியுள்ளார். கோவையாரில் இடம்பெறும் மெய்ப்பொருட் சிந்தனைகள் பலவும் திருவாசகத்தில் இடம்பெற்றவை எனலாம்.

மரியாதைப்பன்மைக்குரிய ஆர் விகுதி கொடுத்துச் சிறப்பித்து வழங்கப்பெறும் திருக்கோவையாரைப் பற்றிய அருங்கருத்துக்கள் சிலவற்றைக் கண்டோம். பாண்டிக்கோவை, தமிழ் முத்தரையர் கோவை, திருச்சிற்றம்பலக்கோவை ஆகிய முப்பெரும் கோவைகளைப்போல வேறு சிலவும் தோன்றியிருத்தல் கூடும். எனின், இவற்றுள் நமக்கு முழுமையாகவும் முதன்மையாகவும் கிடைத்திருப்பது திருக்கோவையாரே ஆகும். பிற்காலத்தில் எழுந்த கோவைகளுக்கெல்லாம் இதுவே வழிகாட்டியாகவும் உள்ளது. பின் எழுந்த இவ்வகைப் பிரபந்தங்களில் தஞ்சை வாணன் கோவை, கோடீச்சரக்கோவை என்பன நயம் மிக்கவை. பனசை, தருமை, கழகம் வெளியிட்ட திருச்சிற்றம்பலக் கோவைப்பதிப்புக்கள் சிறப்பாகச் சுட்டத் தகுவன.

இனி, நந்திக்கலம்பகம் குறித்துச் சிறிது நோக்குவோம்.

நந்திக்கலம்பகம்

மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட பிரபந்தம் **நந்திக்கலம்பகம்** ஆகும். இதனைப் பாடிய புலவர் பெயர் அறியப்படவில்லை. இக்கலம்பகத்தில் நந்திவர்மனின் வீரம், வெற்றி, தமிழறிவு, புலவரைப் போற்றும் பண்பு முதலிய அருங்குணங்கள் பாராட்டப் பெறுதலின் இப்பெருவேந்தனின் அவைக் களப்புலவராக இவர் இருந்திருத்தல் வேண்டும்.

கலம்பகம் என்ற இலக்கிய வகையில் முதல் பிரபந்தமாக நமக்குக் கிடைத்திருப்பது இதுவே. இந்நூல் எழுந்தது பற்றிய ஒரு செய்தியைத் தொண்டை மண்டல சதகம் கூறுகிறது. நந்திவர்மனின் சகோதரன் ஆட்சியைப்பெறும் பொருட்டு அறம் வைத்து இதனைப் பாடியது தெரிந்திருந்தும் பாடற்சுவையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட நந்தி வர்மன் கலம்பகப் பாடல்கள் முழுவதையும் கேட்டு உயிர்துறந்தான் என்பர்.

கலம்பகஇலக்கணம்

கலம்பகத்தின் இலக்கணம் குறித்துப் பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல் முதலிய நூல்களில் விதிகள் செய்துள்ளனர். பாட்டுடைத் தலைவராக வரும் தேவர், அந்தணர் (-முனிவர்), அரசர், அமைச்சர், வணிகர், வேளாளர் என்பவரைப் பற்றிமுறையே 100, 95, 90, 70, 50, 30 என்ற அளவில் பாடல்கள் அமைத்தல் வேண்டும். அகம், புறம் என்ற இருவகைப் பொருளிலும் பாடப்பெறுவது கலம்பகம். இதனுள் ஒருபோகு, புயம், மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல்,

கொற்றியார், பிச்சியார், இடைச்சியார், வலைச்சியார் எனப்பல்வேறு உறுப்புக்களும் இடம் பெறும் என்பர் இலக்கண விளக்கப் பாட்டியல் செய்த வைத்தியநாத நாவலர். இவற்றில் சிலவும் பலவும் குறைந்து வரையறுக்கப்படுதல் இதற்கு முன் வந்த பாட்டியல்களில் காணலாம். ஒருபோகு என்பது கலியாப்பு; உறுப்பு அன்று. பல்வேறு உறுப்புக்களையும் நால்வகைப்பாக்கள், அவற்றின் இனங்களில் ஏற்பனவற்றால் பாடுதல் இலக்கிய மரபு. அந்தாதித் தொடையாகப் பாடப்பெறுதல் எல்லாக் கலம்பகங்களுக்கும் பொதுவிலக்கணம். சில கலம்பகங்கள் மண்டலித்து முடிவன. இங்ஙனம் பல்வகைப் பொருள்களும் யாப்பு வகைகளும் கலந்து பாடப் பெறும் இலக்கியம் கலம்பகம் எனப் பெயர்பெற்றது.

நந்திக்கலம்பகத்தின் உறுப்புக்கள்

நந்திக்கலம்பகத்தின் பாடல்கள் பதிப்புக்கள் தோறும் வேறுபடுகின்றன. 90 பாடல்கள் அமைந்த பண்டித அ.கோபாலையரின் பதிப்புக்குப்பின் 110 பாடல்கள் கொண்ட பதிப்புக்களும் வந்துள்ளன. ஒரு சிலபாடல்கள் பின்வந்தோரால் பாடிச்சேர்க்கப்பட்டனவாதல் வேண்டும். இக்கலம்பத்தில் ஒருபோகு என்னும் முதலுறுப்புத்தவிர, காலம், புயவகுப்பு, இரங்கல், ஊசல், கைக்கிளை, சம்பிரதம், மதங்கியார், தூது, மறம், புறம் என்னும் பத்துறுப்புக்கள் மட்டுமே அ.கோபாலையர் பதிப்பினை ஒட்டி வித்துவான் சோ.அருணாசல தேசிகர் உரையுடன் வெளியிட்டுள்ள பதிப்பில் (1993) காணப்படுகின்றன. தொடக்கக்காலத்தில் இங்ஙனம் பத்துறுப்புக்களுடன் யாக்கப்பட்ட கலம்பத்தில் உள்ள சில உறுப்புக்களை நீக்கிப் பிற்காலத்துப் பன்னிருபாட்டியலார் களி, சித்து, வண்டு, மேகம், தவம் முதலிய உறுப்புக்களைச் சேர்த்து இலக்கணம் செய்தனர்.

இனி, இக்கலம்பகத்தின் பாட்டுடைத்தலைவனைப் பற்றிய சில செய்திகைளக் காண்போம்.

பாட்டுடைத்தலைவன்

சரித்திர ஆசிரியர்கள் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் இப்பிரபந்தத்தின் தலைவன் என்று ஆராய்ந்து நிறுவியுள்ளனர். மூவேந்தரையும், வடவேந்தர் பலரையும் வென்ற பெருவேந்தன். பல்லவர்கோன், மல்லைவேந்தன், தென்னவர் கோன் சோணாடன், தொண்டைவேந்தன், வடநாடுடை மன்னர்பிரான் எனப் போற்றப்படும் நந்திவர்மனுக்குரிய அவனிநாரணன் (பாடல் 14:1; 18:1; 22:2; 66:1) என்ற பெயர் உலகப்புகழ்வாய்ந்தது. தாய்லாந்து நாட்டில் உள்ள தகுவாபா [Takuvapa] என்ற நகரில் வாட்நாமியாங் [Wat Na Miang] என்ற திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்க்

கல்வெட்டில், காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த மணிக்கிராமம் என்ற ஊரிலிருந்து சென்ற வணிகர் குழுவும் அவர்க்கு வழித்துணையாகச் சென்ற வீரர்களும் சேர்ந்து திருமால் ஆலயம் எடுப்பித்து ஒரு நீர்நிலையும் அமைத்துள்ளனர் என்றும், அதற்கு அவனிநாரணம் எனப்பெயரிட்டனர் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இச் செய்தியைப் பேராசிரியர் K.A. நீலகண்ட சாத்திரியார் புலப்படுத்தியுள்ளார். அவனிநாரணம் என்ற பெயர் மூன்றாம் நந்திவர்மனின் பெயரினை நினைவூட்டுவதால், அவன் காலத்தில் தமிழகத்திற்கும் தாய்லாந்துக்கும் வாணிகத் தொடர்பு நிலைபெற்றிருந்த உண்மை போதரும்.

இனி, இக்கலம்பகத்தில் பொதிந்துள்ள இலக்கியச் சிறப்புக்கள் சிலவற்றைக் காண்போம்.

இலக்கியச் சிறப்புக்கள்

பாண் என்பது கலம்பக உறுப்புக்களில் ஒன்று. இதுவாயில் களில் ஒருவன் ஆகிய பாணனைப்பற்றியது. பரத்தையிற் பிரிந்த தலைவன் தூதாக விடுத்த பாணன் தலைவியைக்கண்டு சமாதானப் படுத்த வருகிறான். பரத்தையர் இல்லத்திற்குக் கொண்டு சென்றவன் அப்பாணனே. ஆதலால், அவன் போக்கினை அங்கதக் குறிப்புத் தோன்றச் சாடுகிறாள் தலைவி:

"ஈட்டு புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்-
வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்
பேய்என்றாள் அன்னை; பிறர்நரிஎன் றார்;தோழி
நாய் என்றாள்; நீ என்றேன் நான்"

"புகழீட்டிய நந்தி மன்னனின் பாணனே!" என்று தலைவி பாணனைப் புகழ்வதுபோல் விளிக்கின்றாள். எங்கையர் என்பது தன்னினும் வயதிற் குறைந்த தங்கை முறைக்கு உரிய இளம் பரத்தைப் பெண்டிரை. பாணன் யாழ்மீட்டி இசை பாடி உள்ளத்தை மகிழ்விப்பவன். அவன் அவர்தம் வீட்டிலிருந்து விடியும் அளவும் பாடினானா, இல்லையா என்பது தெரியாது. எனின், பாடியதாகப் படைத்துக் கொண்டு, அவனிசை யார் யாருக்கு எவ்வெவ் வகையில் தோன்றிற்று என்று சொல்லும் கடைசி இரண்டடிகளில்தான் அங்கதச்சுவை [Satirical taste] அமைந்துள்ளது. "அவன் பாட்டினைக் கேட்ட அன்னை இடுகாட்டில் ஏதோ ஒரு பேய் அழுகின்றது என்றாள்; உடனிருந்த உறவினராகிய பிறர் நரி ஊளை இடுகிறது என்றனர்; நாய் குறைப்பதாகக் கூறினாள் தோழி. பேயும் இல்லை, நாயும் இல்லை,. நரியும் இல்லை; நீதான் பாடுகிறாய் என்று நான் சொல்லினேன்" என்று நகைச்சுவையுடன் கலந்த அங்கதமாகத் தலைவியின் பேச்சு அமைந்துள்ளது. தன்னிடமிருந்து தலைவன் பிரிந்து செல்லக் காரணமாக இருந்த பாணனைத் தன் ஆத்திரம் தீரப்பேய்

என்றும், நாய் என்றும் நரி என்றும் சொல்லாமல் சொல்லுகிறாள் தலைவி! சிறந்த இலக்கியத்தரம் பெற்றதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பாண் என்ற துறையில் அமைந்த மற்றொரு பாடலையும் காண்போம்: புலவர், பொருநர், பாணர், விறலியர் முதலியோர்க்கு மாதச் சம்பளம் அல்லது போதிய ஊதியம் இல்லாத காலம் அது. புரவலரைப் பாடியே தம் வறுமையினைப் போக்கவேண்டும். நந்திவர்மனைப் பார்ப்பதற்குமுன் பாணன் சிறுதுண்டினை அரையில் சுற்றிக்கொண்டு, முழங்கால்தெரியும்படி வீடுவீடாக அலைந்தனன். ஆனால், இப்போதோ நறுந்தாரும், கொன்றைப்பூப் போன்ற பொன்னினால் புனையப்பெற்ற அணிகலமும் சூடி, ஒளிவீசும் முகத்துடன் யானைக்கன்றின் பிடரிமேல் வீற்றிருந்து உலாவுகின்றான். என்ன வியப்பு! வெள்ளாற்றுப்போரில் அரசர் கோமான் அடுபோர் நந்தியைப் பாணன் பாடியிருத்தல் வேண்டும் (23).

"உரைவரம்(பு) இகந்த உயர்புகழ்ப் பல்லவன்
அரசர் கோமான் அடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவேல் உயர்வு பாடினன் கொல்லோ!
நெருநல் துணியரைச் சுற்றிப்
பரடு திறப்பத் தன்னாற் பல்கடை
திரிந்த பாணன் நறுந்தார் பெற்றுக்
காஅர் தளிர்ந்த கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கலன் அணிந்து
விளங்கொளி ஆனனன் இப்போ(து)
இடங்களி யானை எருத்தமிசை யன்னே." (23)

இப்பாடல் சங்ககாலப் பாணர் வாழ்வியல் மரபினைப் பின்பற்றிப் புனையப்பெற்றுள்ளது.

கற்பனை வளம் தோன்றப் பாணர் மாண்பினைப் பாடிய புலவர் திறம் பாராட்டற்பாலது.

சங்க மரபினை ஒட்டிப் புலவர் தலைவியைக் கச்சியன்னாள் (78) எனக்குறித்தல் காணத்தக்கது. செந்திற்கோமான் ஆகிய முருகனைப் போன்றவன் நந்தி என்று அதே பாடலில் போற்றப்படுகிறான். ஆண்மை, ஆற்றல், வீரம், இளமை, காதல், அழகு முதலிய பண்புகளினால் நிறைந்துள்ள தலைமகனுக்குச் செவ்வேளை உவமை கூறும் இலக்கிய மரபினை இங்குக் காண்கிறோம்.

மறம் என்ற புறஉறுப்பினைச் சிறப்புற அமைத்துள்ளார் புலவர். மறவர் குடியில் பிறந்த மகளை மணம்பேசும் பொருட்டு வேந்தன்

விடுத்த தூதன் பெண்ணின் தந்தையினைக் கண்டு செய்தியைத் தெரிவிக்கிறான். அச்சம் சிறிதும் இன்றி மகளைக் கொடுக்க மனம் ஒப்பாத மறவன் பேச்சாக வருவது **"மறம்"** எனப்படும் துறை.

> "மணங்கமழும் குழலுடைய என்மகளை மணம்பேசிவர மன்னனால் விடுக்கப்பெற்ற தூதனே! யாது காரணம் பற்றி உன்னைத் தூது விடுத்தான்? என்கையில் இருப்பது ஓர் அம்புதான்; என்வில்லோ ஒடிந்தது; அதன் நாணும் அறுபட்டது; நானோ வயதானவன் என்பதால் சோர்வுற்றேன் என்று எண்ணியோ உன்னைத் தூதுவிட்டான் மன்னன்?
>
> நம்குடிலைச் சற்றுச்சுற்றிப்பார்: குடிலுக்கு நிறுத்தியுள்ள குறுங்காலும் நீண்டவளைமரமும் தெள்ளாற்றில் நந்தியின் பாதத்தில் சரண் அடையாத பகை அரசர்களின் யானைக் கொம்புகள் அல்லவோ! குனிந்துபார்!" (77)

"அம்பொன்று வில்லொடிதல் நாணறுதல் நான்கிழவன்
அசைந்தேன் என்றோ
வம்பொன்று குழலாளை மணம்பேசி வரவிடுத்தார் மன்னர்
தூதா!
செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றின் நந்திபதம்
சேரார் ஆனைக்
கொம்(பு) ஒன்றோ! நம்குடிலின் குறுங்காலும் நெடுவளையும்
குனிந்து பாரே" (77)

இத்தகைய கற்பனைவளம் மிக்கபாடல்கள் பின்னர் வந்த கலம்பகங்களிலும் காணலாம்.

எனவே, வீரயுகத்தின் மூச்சுக்காற்று மறவன் பேச்சில் வீசக் காணலாம். இப்பாடலைத் தழுவித் திருவரங்கக் கலம்பகத்தின் மறம் அமைந்திருத்தல் ஒப்பு நோக்கத்தக்கது:

"பேசவந்த தூத!செல் லரித்தஓலை செல்லுமோ?
பெருவரங்கள் அருள்அரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா!
வாசலுக் கிடும்படல் கவித்துவந்த கவிகை, மா
மகுடகோடி தினையளக்க வைத்தகாலும் நாழியும்
வீசுசாமரம் குடில்தொடுத்த கற்றை; சுற்றிலும்
வேலியிட்ட(து) அவர்களிட்ட வில்லும் வாளும் வேலுமே".
(53)

எனவரும் பாடலை எடுத்துக்காட்டுதல் தகும். இதனைப் பாடியவர் சிறந்த வைணவ இலக்கிய மேதை எனப்போற்றப்படும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவர்.

நந்திவர்மனின் அடிகளைப் பணிந்து கப்பம்கட்டாத பகை மன்னர்களைப் போரில்வென்று, அவர்களுக்குரிய களிறுகளைக் கொன்று அவற்றின் தந்தங்களையே மறவர்களின் குடில்களுக்குக் கால்களாகவும் தூண்களாகவும் நட்டுள்ளனர் என்பது பழைய கற்பனை. இம் மூலக் கற்பனையினை [Original imagination] மேலும் விரித்துப் பாடும் பாங்கில் பிள்ளைப் பெருமாள் பல புதிய கற்பனைகளைப் படைத்து மறவரின் வீரமாட்சியைச் சுவை வளம் செழுமத் தீட்டியுள்ளார். போரில் தோற்ற மன்னர்களின் குடைக்கம்பிகளை மறவரின் வீட்டு வாயிலுக்குப் படலாக நட்டுவைத்துள்ளனர்! அவர்கள் தலையில் சூடியிருந்த மகுடங்களே தினைக்கூலங்களை அளப்பதற்குப் பயன்படுத்தும் படியும் மரக்காலும் ஆகும்! அவர்களின் சாமரங்களையே குடிலின்மேற் கூரையாக வேய்ந்துள்ளனர்! அவர்கள் போர்க்களத்தில் போட்டுச்சென்ற வில், வாள், வேல் முதலிய படைக்கலன்களே வீட்டினைச் சுற்றிலும் வேலியாகப் போடப்பட்டுள்ளன!

இங்ஙனம், நந்திக்கலம்பகம் பின்னர் வந்த கலம்பகங்களுக்குக் கற்பனைத் துறையிலும் வழிகாட்டியாகத் திகழ்தல் அறிந்து இன்புறத் தக்கது.

நந்திகலம்பத்தில் பிரிவற்றாத தலைவி பேச்சாக அமைவது இப்பாடல்:

> **"செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சேதச்**
> **சந்தனம்என்(று) ஆரோ தடவினார் – பைந்தமிழை**
> **ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்**
> **வேகின்ற பாவியேன் மெய்"**

சிறந்த கவிதை; உணர்ச்சியின் பிழம்பு; அங்கதக்குறிப்பு. பைந்தமிழை ஆயும் பல்லவர்கோன் நந்தியைக் காதலித்த நங்கை பிரிவாற்றாமை கண்டு செவிலியோ, தோழியோ அவள் வெப்பத்தைத் தணிக்கக் குளிர்ந்த வளம்மிக்க சந்தனச் சாந்தினை உடம்பின்மேல் தடவி விட்டனர். அது கூடுதலான காதல்தீயை மூட்டிவிட்டதால், "செந்தழலின் சாற்றினைத்தவறுதலாகச் சந்தனச்சாறு என்று யாரோ வேண்டாதவர் என்மேல் பூசிவிட்டார்களே! என பேசுகிறாள். அரிய கற்பனை. இப்பாடல் முத்தொள்ளாயிரப்பாடலை நினைவூட்டுகின்றது.

நந்திக்கலம்பகத்தினை அடுத்து நம்பியாண்டார் நம்பி ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் பாடியுள்ளார். இரட்டைப் புலவர்கள் பாடிய கலம்பகங்கள் உள்ளன. பிள்ளைப் பெருமாள்

பாடிய திருவரங்கக்கலம்பகம், எல்லப்ப நாவலர் பாடிய திருவருணைக் கலம்பகம், குமரகுருபரரின் மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம், சிவப்பிரகாசரின் திருவெங்கைக்கலம்பகம் என்பன யாவற்றுக்கும் வழிகாட்டியாக விளங்குவது நந்திக்கலம்பகம் ஆகும்.

V பத்தி இலக்கியம்

பத்திஇலக்கியம் - பின்புலம்

இறைவனைப் பற்றிய புகழ் பாடல்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழில் வழங்கிவந்தன. இறைவனைப் பரவுதற்கு என்றே ஒருவகை ஒத்தாழிசைக்கலியினை அவர் வரையறுத்துள்ளனர். எனின், அவருக்குப்பின் வந்தோர் ஆசிரிய யாப்பிலும் பரிபாடல் யாப்பிலும் வழிபடு கடவுளைப்பாடினர் என்பதற்குத் திருமுருகாற்றுப்படையும், தொகைநூல் கடவுள் வாழ்த்துக்களும் பரிபாடலும் போதிய சான்றாகப் பொலிகின்றன. எனினும், இப்பாடல்களின் தொகுதியைப் பத்தி இலக்கியம் என்று பகரும் மரபு இலக்கிய வரலாற்றாசிரியர்களிடம் காணப்படவில்லை. களப்பிரர் ஆட்சிக்காலத்திலும் முற்காலப் பல்லவர் ஆட்சிக் காலத்திலும் தமிழகத்தின் பல பகுதிகளிலும் புறச்சமயங்கள் ஆகிய சமணம், பௌத்தம், ஆசீவகம் என்பன பரவியிருந்தன. இச்சமயங் களுக்குரிய பிராகிருதம், பாலி, வடமொழி ஆகிய அயல் மொழிகளின் செல்வாக்கு ஓங்கியிருந்தது. தமிழர்கள் தொன்று தொட்டுப்பின்பற்றி வந்த இறைநெறியும், அவர்தம் கலைகளும் அயலாரால் புறக்கணிக்கப் பட்டன. தமிழின் மேம்பாடும் குன்றியது. புறச்சமயத்தார் இல்லறத்தை வெறுத்ததுடன் பெண்ணின்பம் வீடுபேற்றிற்குத் தடை என்று பேசினர். துறவறம்தான் மறுமைப்பேற்றினை வழங்கும் என்று போதித்தனர். பெண்கள் வீடுபெறுதல் வேண்டுமெனின் ஆண்பிறவி எடுத்துத் துறவறம் மேற்கொண்டு சீலங்களைக் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும் என இயம்பினர். சங்க காலம் முதல் தமிழ்மக்கள் பின்பற்றிவந்த இவ்வுலக நாட்டமும் இல்லற இன்பமும் கேலிக்கு உரியவை ஆயின. மனிதன் ஆள்வினையாலும் அயரா உழைப்பாலும் ஊக்கத்தாலும் அருஞ்சாதனைகள் ஆற்ற முடியும் என்ற கோட்பாட்டினைப் புறச்சமயத்தார் ஒப்பவில்லை. “அளந்தன போகம் எல்லாம் அவரவர்க்கு அற்றை நாளே” என்ற நியதிக் கோட்பாட்டில் உறுதி பூண்டிருந்தனர். ஒருவரின் மேன்மைக்கும் இழிவுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் அவர் இயற்றும் வினைகளே காரணம்; ஆதலின், முற்பிறவியில் ஆற்றிய வினைக்கு ஈடாகத்தான் இப்பிறவியில் இன்பதுன்பங்கள் தீர்மானிக்கப்படுதலின், வினைக்கோட்பாட்டின் பிடியினின்றும் யாரும் தப்புதல் இயலாது என்றனர். எனவே,

அல்லற்படுவோர் தம் துன்பத்திற்கு மருந்தில்லை என்ற உணர்வு மேலீட்டினால் வாழ்க்கையில் பிடிப்பின்றி நம்பிக்கை இழந்து நலிந்தனர்.

இங்ஙனம் தமிழர்தம் வாழ்வியல், கலைகள், இறைநெறி, தாளாண்மை என்பன புறச்சமயத்தாரின் போக்கினால் பாதிப்படைந்த பொழுதுதான், பத்தி இயக்கம் தமிழகத்தில் தோன்றியது. தமிழ் மக்களின் பண்பாட்டினையும், கலைகளையும், நம்பிக்கைகளையும், கடவுட் கொள்கையினையும் காக்கும் நோக்கில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றினர். இவர்கள் முறையே தமிழர்தம் சிவநெறி, திருமால் நெறியினைப் பாமரர்களிடத்திலும் பரப்பும் நோக்கத்தில் பைந்தமிழில் பண்சுமந்த பாடல்களைப் பாடினர். இறைவனிடத்தில் செலுத்தும் அசைக்க முடியாத பத்தியினால் வினைக்கட்டினின்றும் விடுதலை பெறலாம்; துன்பம் தொலைந்து இன்பம் பெறலாம் என்று இருண்ட வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சினர். பெண்களும் பத்திமேலீட்டினால் வீடுபேறு எய்தலாம் என்றனர். இல்லறம் பேரின்பத்திற்குத் தடையன்று என்பதே அவர்கள் கொள்கை. சங்க அகத்திணை மரபினை முற்றிய பத்தியாகிய இறைக்காதலுக்குப் பொருத்தி நாயகன் நாயகி பாவத்தில் அருங்கவிதைகள் படைத்தனர். பதிகப் பெருவழி கண்டனர். விருந்தாய யாப்பு வகைகளும் புதியனவாகிய இலக்கிய வகைகளும்அணிவகைகளும் அருளாளர் படைப்புக்களில் அறிமுகம் ஆயின. கற்பனைகளும் இயற்கைப் புனைவுகளும் இசை மாட்சியும் சமுதாய உணர்வும் இவர்களின் பாடல்களுக்கு அழகியலையும் பொருண்மையினையும் நல்கின. எனவே, பத்தி இயக்கம்தான் பத்தி இலக்கியம் தோன்றுதற்கு உந்து சத்தியாக ஒளிர்ந்தது எனலாம். சங்க காலத்து இறைப்பாடல்களைப் பத்தி இலக்கியம் என்று கூறாது, பத்தி இயக்கத்தின் விளைவாக எழுந்த நாயன்மார்களின் திருமுறைகளையும் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தத்தினையும் ஒருங்கிணைத்துப் பத்தி இலக்கியம் எனப்பெயர் தந்து இக்காலத்து வரலாற்றாசிரியர்கள் வழங்குகின்றனர்.

கி.பி.501 – கி.பி.900 காலப்பகுதியில்

நம் காலப்பகுதிக்கு (கி.பி.501–கி.பி.900) உரியவை முதலெட்டுத் திருமுறைகள், பத்தாம் திருமுறை, பதினோராம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார் நம்பியாண்டார் நம்பியின் பிரபந்தங்கள் நீங்கலாக ஏனையவை ஆகும். இவை சைவம் சார்ந்த பத்தி இலக்கியம். ஆழ்வார் பன்னிருவரின் அருளிச்செயல்கள் ஆகிய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் முழுவதும் வைணவ பத்தியில் விளைந்தவை. சைவம் வைணவம் ஆகிய இவ்விரு பெரும் நெறிகளும் தொன்று தொட்டுத் தமிழகமக்களால் மேற்கொள்ளப்பெற்றுத் தொடர்ந்து வருபவை.

புறச்சமயப்பூசல்கள் தோன்ற வில்லையேல், பத்தி உணர்ச்சியின் உந்துதலால் பாடப்பெற்ற திருமுறைகளும் திவ்வியப்பிரபந்தமும் தோன்றியிரா. எனவே, இவ்விரு தொகுதிகளும் இணைந்து சுட்டப்பெறும் பத்தி இலக்கியம் தமிழிலக்கிய வரலாற்றிலும் வாழ்வியலிலும் ஒருதிருப்புமையமாய் விளங்குதல் நோக்கத்தக்கது. முதற்கண் திருமுறைகள் ஆகிய பத்தி இலக்கியம் குறித்துச் சிந்திப்போம்.

திருமுறைகளின் தொகைவகை

திரு என்ற சொல்லிற்கு அழகு, பொலிவு, தெய்வத்தன்மை எனப் பொருள் கூறுவர். முறை என்பது நூலைக் குறிக்கும். எனவே, திருமுறை என்பது அழகும் பொலிவும் தெய்வத்தன்மையும் பொருந்திய பத்திப்பனுவல் ஆகும். சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரின் அருளிச் செயல்களைக் கால அடைவிலும் அவர்கள் பின்பற்றிய நால்வகை மார்க்கங்களில் சற்புத்திர மார்க்கத்திற்கு முதன்மை வழங்கிய அடிப்படையிலும் முறைப்படுத்தப்பெற்றமையால் திருமுறை எனப் பெயர் பெற்றது. இவர்களுக்குத் திருமூலர் காலத்தால் முற்பட்டவர் எனினும் அவர் அருளிய திருமந்திரம் முழுவதும் பத்தி இலக்கியமாக அமையாது சாத்திரமாகக் கொள்ளப்படுதலின் பத்தாம் திருமுறையாகத் தொகுத்தனர். ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த திருமாளிகைத் தேவருள்ளிட்ட அருளாளர் ஒன்பதின்மர் பாடல்களும் பத்தி இலக்கியமாகத் திகழ்தலின் இவர்களுக்கு முற்பட்ட பெருமக்கள் அருளிய முதல் எட்டுத் திருமுறைகளைச் சார்ந்து ஒன்பதாம் திருமுறையாக வகுத்தனர். பதிகங்களாக அமைந்த முதல் ஒன்பது திருமுறைகளைப்போல் அமையாது பெரும்பான்மையும் பிரபந்தங்களாகப் பாடப்பெற்ற சிற்றிலக்கியங்களின் தொகுப்பாகத் திகழ்தலின் பதினோராம் திருமுறை பின்னர்த் தொகுக்கப்பட்டது. இதனுள் காரைக்காலம்மையார் அருளிய பதிகங்கள் இரண்டும் தேவார ஆசிரியர்க்கு முற்பட்டவை. எனினும், மிகுதியும் பிரபந்தங்களாகத் திகழ்தலின் பிரபந்தமாலை என்ற பெயரும் இத்திருமுறைக்குத் தோன்றியது. பத்தி இயக்கத்தின் சரித்திரமாகத் திகழ்தலின் பன்னிரண்டாம் திருமுறை ஆகிய திருத்தொண்டர் புராணத்தினைத் தோத்திர இலக்கியமாகக் கொள்ளுதல் அமையாது.

எனவே, சாத்திரமாகிய பத்தாம் திருமுறையும் சரித்திரம் ஆகிய பன்னிரண்டாம் திருமுறையும் பிரபந்தம் ஆகிய பதினோராம் திருமுறையும் தவிர, ஏனைய முதல் ஒன்பது திருமுறைகளையும் முழுமையான சைவப் பத்தி இலக்கியமாகக் கொள்ளுவர் பெரியோர். எனினும், விடுபட்ட மூன்று திருமுறைகளிலும் பத்திக்கூறுகள் போதிய

அளவில் புலப்பட்டுத் தோன்றுதலின் ஓராற்றான் அவற்றையும் பத்தி இலக்கியமாகக் கருதும் நிலையும் உண்டு. பன்மொழிப் பேரறிஞர்கள் கிரேக்கத்தினைக் கலை மொழி என்றும் இலத்தீனைச் சட்டமொழி என்றும் ஆங்கிலத்தினை வணிக மொழி என்றும் சமற்கிருதத்தினைத் தத்துவமொழி என்றும் தமிழ் மொழியைப் பத்தி மொழி என்றும் போற்றுவர். இறைவனைப் பாடுதற்குரிய கனிவும் குழைவும் இசை நலமும் உருக்கமும் இன்பமும் மிகுந்ததால் தமிழ் பத்தி மொழி எனப் போற்றப்படுகின்றது. பத்தி இலக்கியமே இங்ஙனம் புகழப்படுதற்குக் காரணமாகும்.

அயல்நாடுகளில் திருமுறை

தமிழகத்தில் தோன்றிய திருமுறைகள் பல்லவ, சோழப் பேரரசர்களின் ஆட்சி பரவிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாகத் தாய்லாந்து நாட்டில் பரவிப் பயிலப் பெற்றுவரும் வரலாற்று நிகழ்வு சுவை மிக்கது. கி.பி.1931இல் டாக்டர் எச்.ஜி.குவாரிட்ச் வேல்சு [Dr. H.G. Quaritch Wales] என்னும் இந்தியவியலார் [Indologist] தாய்லாந்து நாட்டில் காலந்தொறும் நடைபெற்று வரும் அரசர்தம் முடிசூட்டு விழாநிகழ்ச்சியிலும் ஊஞ்சல் விழாவிலும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவையும் மற்றும் மூவர் முதலிகளின் தேவார முதற்பதிகங்களும் ஓதப்பெற்று வரும் உண்மையினை ஆராய்ந்து உலகிற்கு முதன்முதல் உணர்த்தியுள்ளார். மலேயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் தலைவரும் பேராசிரியரும் ஆகிய டாக்டர் ச.சிங்காரவேலு **"Some Aspects of South Indian Cultural Contacts with Tailand : Historical Background"** என்ற ஆய்வுக்கட்டுரையில் திருமுறைகள் தாய்லாந்து நாட்டில் பரவியுள்ள திறம் பற்றி மேலும் பல அரிய செய்திகளையும் விளக்கங்களையும் தந்துள்ளார். மலாய் மொழியில் சிதம்பரம் என்ற சொல்லிற்குக் கோயில் என்பது பொருள். சைவர்க்குக்கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது சிதம்பரமே ஆகும். மலாய் மொழியில் எழுதப்பட்ட இராமாயணத்தில் கயிலை மலையினை எடுக்க முயன்ற இராவணன், இறைவன் சிறுவிரல் ஊன்றவும் மலையடியில் சிக்கித் துன்புற்று நசுங்கும் நிலையில் பெருமானின் அருளைப்பெறும் பொருட்டுத்தன் கையில் உள்ள நரம்பினை எடுத்து யாழாக மீட்டிச் சாமகீதம் பாடி ஈசனின் அருளைப் பெற்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இச்செய்தி வான்மீகி முனிவர் பாடிய ஆதி இராமாயணத்திலும் கம்பரின் இராமாவதாரத்திலும் மற்றும் இந்திய மொழியில் எழுதப் பெற்ற வேறு எந்தவொரு இராமாயணக்கதையிலும் சுட்டப் பெறவில்லை. எனின், இவ்வரிய தொன்மச் செய்தியை,

"வண்ண மால்வரை தன்னை மறித்திட லுற்றவல் லரக்கன்
கண்ணும் தோளும்நல் வாயும் நெரிதரக் கால்விரல் ஊன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பாற் பாடிய பாடலைக் கேட்டு
அண்ண லாயருள் செய்த அடிகளுக்(கு) இடம்அர சிலியே"
[II 95:8]

எனவரும் திருஞானசம்பந்தரின் திருப்பாடலினால் தெளியலாம். அன்றியும்,

"மைஞ்ஞலம் அனைய கண்ணாள் பங்கன்மா மலையை யோடி
மெய்ஞ்ஞரம்(பு) உதிரம் பில்க விசைதணிந்(து) அரக்கன் வீழ்ந்து
கைஞ்ஞரம்(பு) எழுவிக் கொண்டு காதலால் இனிது சொன்ன
கிஞ்ஞரம் கேட்டு கந்தார் கெடிலவீரட்டனாரே" [IV 28.6]

"முன்கை மாநரம்பு வெட்டி முன்னிருக்(கு) இசைகள் பாட
அங்கைவாள் அருளினான்ஊர் அணிமறைக் காடுதானே"
[IV 34.10]

"எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலால் ஊன்ற அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந்நரம்பால் வேத கீதங்கள் பாட
கொடுத்தனர் கொற்ற வாணாள் குறுக்கைவீரட்டனாரே"
[IV 49.11]

எனவரும் திருநாவுக்கரசரின் திருப்பாடல்களினாலும் அறிந்து கொள்ளலாம்.

சம்பந்தரையும் அப்பரையுமே வழிகாட்டியாகக் கொண்டு அருள்வாழ்வினை மேற்கொண்டொழுகிய சுந்தரர் ஆகிய நம்பி ஆரூரர்,

"கடுத்தவன் தேர்கொண் டோடிக் கயிலாயநன்மா மலையை
எடுத்தவன் ஈரைந் துவாய் அரக்கன் முடிபத்து அலற
விடுத்தவன் கைநரம்பால் வேத கீதங்கள் பாடலுறப்
படுத்தவன் பால்வெண் ணீற்றன் பழமண்ணிப் படிக்கரையே..."
[VII 22.7]

"தேசுடைய இலங்கையர்கோன் வரையெடுக்க அடர்த்துத்
திப்பிய கீதம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்"
[VII 46.7]

". . . . .
எறியு மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த்திட்டுக்

குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில்திருப்புன் கூருளானே!" [VII 55.9]

எனப் பாடியருளிய பாசுரங்களும் இங்கு இயைபுகருதி எண்ணத் தக்கவை.

சிந்தனைப்பெயர்வு

தமிழகத்திலிருந்து சென்ற ஓதுவார்கள், புலவர்கள் மலேசிய நாட்டில் மேற்சுட்டிய திருமுறைப் பாடல்களை மேடைகளில் பாடியும் விளக்கியும் ஆற்றிய உரையினைக் கேட்டு மகிழ்ந்த அந்நாட்டுக் கவிஞர் இச்செய்தியை மலாய் இராமாயாணத்தில் இணைத்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்பர் முனைவர் ச.சிங்காரவேலு. இங்ஙனம் ஒருநாட்டு ஒருமொழிக்குரிய சிந்தனை, அரசியல், சமயம் என்பன கலைத்தொடர்பு காரணமாக மற்றொரு நாட்டு மொழிக்குச் செல்லும் போக்கினை ஒப்பிலக்கிய அறிஞர்கள் **"Migration of Thought"** (சிந்தனைக் குடிபெயர்வு) என்று சுட்டுவர்.

இங்ஙனம் சிந்தனைக் குடிபெயர்வுக்கு மேலும் இரண்டொரு சான்றுகள் கூறலாம். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மகா அசோகன் கிரேக்கநாட்டிற்கு அனுப்பிய மகாதேரர்கள் போதித்த புத்தரின் பொன்மொழிகளின் தாக்கம் கிரேக்க ஞானி அரிசுடாட்டிலின் எழுத்துக்களில் காணப்படுகின்றன என்பதும்; புத்தரின் சாதகக் கதைகளின் தாக்கம் பைபிள் கதைகள், ஈசாப் கதைகளிலும் காணப்படுகின்றன என்பதும் கருதற்பாலான. இங்ஙனம் இந்திய நாட்டுப் பஞ்சதந்திரக்கதைகளின் செல்வாக்கும் அவ்வெளிநாட்டுக் கதைகளில் இடம்பெற்றுள்ளது.

காசிமாநகரில் முகலாய அரசனிடம் விரிவான நிலம்பெற்றுத் திருமடம் அமைத்துச் சைவத்தையும் தமிழையும் பரப்பிவந்த குமரகுருபரரின் கம்பராமாயணப் பேருரைகளைச் செவிமடுத்துத் துளசிதாசர் கம்பரின் கருத்துக்கள் பலவற்றைத் தாம்பாடிய இராமசரிதமனஸில் பொதிந்து வைத்துள்ளார் என்பது ஒப்பிலக்கியர் கண்டறிந்த உண்மையாகும். எனவே, சோழப் பெருவேந்தரின் ஆட்சி தென்கிழக்காசிய நாடுகளில் நிலவிய காலத்தில் திருமுறைகளின் கருத்துக்கள் மலாய் மொழியில் சென்றிருத்தல் உண்மை என்றே கொள்ளுதல் சாலும். தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் காரைக்காலம்மையாரின் கோயில்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் இந்நாடுகளில் சிவாலயங்கள் பலவும் தென்னகக் கலைப் பாணியில் கட்டப்பட்டுள்ளன என்பதும் நோக்கத்தக்கது.

இந்தியாவின் ஏனைய பகுதிகளிலிருந்தும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் தமிழகத்தின் கடற்கரைப் பட்டினமாகிய திருமறைக் காட்டிலும், திருப்புகலூரிலும் வாணிபம், கலை, சமயத் தொடர்பு கொண்டு தங்கியிருந்த வேற்று நாட்டவர் தம்துணைவியருடன் தமிழ் மொழியைப் பயின்றும் தத்தம் தாய் மொழியிலும் ஈசனை வழிபட்டனர். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியை,

> "ஊறுபொருள் இன்தமிழ் இயற்கிளவி தேருமட மாதருடனார்
> வேறுதிசை ஆடவர்கள் கூறஇசை தேரும்எழில் வேதவனமே"
> [III 76.4]

> "தென்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி எழில்நரம்(பு) எடுத்துத்
> துஞ்சுநெஞ்(சு) இருள்நீங்கத் தொழுதெழு தொல்புக லூரில்"
> [II 92.7]

எனவரும் சம்பந்தரின் பாடல்கள் புலப்படுத்துகின்றன. தென்கிழக்காசிய மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் பரவலாகக் காணப்படுதலையும் இங்கு எண்ணிப்பார்த்தல் தகும்.

இனி, பத்தி இலக்கியம் வடமொழி உள்ளிட்ட இந்திய மொழிகளில் பரவியுள்ள பாங்கினைச் சிறிது காண்போம்.

இந்திய மொழிகளில் தமிழ்ப்பத்தி இலக்கியம்

திருத்தொண்டர்புராணம் வடமொழியில் **உபமன்யு பத்தவிலாசம்** என்ற பெயரில் பண்டே மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது. **அகத்திய பத்தவிலாசம்** என்னும் வடமொழி நூலில் திருநாவுக்கரசர் வரலாறு இடம் பெற்றது. கி.பி.16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நீலகண்ட தீட்சிதர் என்னும் சிவநேசச் செல்வர் சிவலீலார்ணவம் என்னும் காப்பியத்தில் 22ஆவது சருக்கத்தில் **திருஞான சம்பந்தர் சமணரை வாதில் வென்ற வரலாறு கூறப்பட்டது**. சமணர் என்ற சொல்லிற்கு மாறாகப் பௌத்தர் (-ததாகதர்) எனச் சுட்டப்பட்டனர். புறச்சமயத்தார் என்ற அளவில் இருவரையும் அபேதமாகக் கருதினார். கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் தாம் பாடிய சிவானந்த லகரியில் கண்ணப்பரையும் சௌந்தரிய லகரியில் திருஞானசம்பந்தரையும் போற்றியுள்ளார். முதல் மூன்று திருமுறைகளையும் அருளிய சம்பந்தரைச் சங்கரர்,

> "தவஸ்தன்யம் மன்யே துகினகிரி கன்யே ஹ்ருதயத:
> பய: பாராவார: பரிவஹ்தி ஸாரஸ்வதமிவ
> தயாவித்யா தத்தம் த்ரவிடசிசு: ஆஸ்வாத்ய தவயத்
> கவிநாம் ப்ரௌடானாம் அஜனீ கமனீய: கவியிதா"

எனப் பரவியுள்ளார். இதன் பொழிப்புப் பொருள்:

> "மலையரையன் பெற்ற மகளே! உன் மார்பில் சுரந்த பாற்கடல் கலைமகளின் கல்விக்கடல்போல் பெருக்கெடுக்கின்றது. கருணைமிக்க உன்னால் கொடுக்கப்பட்ட பாலைத் திராவிடசிசு (-தமிழ்க்குழந்தை) பருகித் தலைசிறந்த கவிஞர்க் கெல்லாம் தலைமை பெற்று அழகிய கவிபாடும் ஆற்றலைப் பெற்றது"

இப்பாடலில் திருஞானசம்பந்தரைத் திராவிட சிசு எனப் போற்றினார் சங்கரர். திருமுறையின் கருத்துக்கள் பல அவர் எழுத்துக்களில் பொதிந்துள்ளன.

ஸ்ரீ மாணிக்கவாசக சரித்திரம் என்ற பெயரில் ஆறுகாண்டங்களில் அமைந்த வடமொழிக்காவியம் இங்குச்சுட்டத்தக்கது. திருவாசகத்தின் பெருமை வடமொழியாளரையும் கவர்ந்துள்ளது. இக்காவியம் சுவாமிநாத சாத்திரியார் என்பவரால் நேமித்தான்பட்டி திரு.மு.வெ.ப.சு. பழனியப்பச் செட்டியாரின் பொருளுதவியால் பதிப்பித்து வெளியிடப் பெற்றுள்ளது.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆந்திரப் பகுதியில் வாழ்ந்த சாரங்கதேவர் என்னும் இசைப்புலவர் தமிழகம் போந்து தேவாரப் பண்களை நன்கு ஆராய்ந்து தாம் எழுதியுள்ள சங்கீதரத்னாகரம் என்னும் இசை நூலில் தக்கராகம், கௌசிகம் என்ற பண்களைத் தேவாரவர்த்திநீ எனப் பெயரிட்டு வழங்குதல் சுட்டத்தக்கது. கி.பி.17ஆம் நூற்றாண்டினராகிய வேங்கடமகி என்பாரும் தமது சதுர்தண்டிப்பிரகாசிகையில் தேவாரப்பண்களைக் குறித்துள்ளார்.

அரீஸ்வரர் எனப்படும் அரிகரர் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிவனடியார் அறுபத்து மூவர் வரலாற்றினையும் சிவகணதரகளே என்ற பெயரில் கன்னடத்தில் பாடினர். இந்நூலிற்கு நம்பி அண்ணன ரகளே என்பதும் ஒருபெயர். நம்பிஅண்ணன் என்பது சுந்தரர் பெயர். காப்பியத் தலைவர் அவராதலின் அந்நூல் அப்பெயர் பெற்றது. கி.பி.15ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணதேவராயரின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்த தூர்ஜடி என்னும் கவிஞர் தெலுங்கில் பாடிய காளாஹஸ்தீஸ்வர மகாத்மியத்தில் கண்ணப்பர், நக்கீரதேவர் வரலாறு இடம் பெற்றது. தஞ்சை சரபோசிமன்னனால் (கி.பி.1798-1833) ஆதரிக்கப் பட்ட விருபாக்ஷர் என்னும் கவிஞர் மராத்தியில் பெரிய புராணத்தினை மொழி பெயர்த்துள்ளார்.

சைவத்திருமுறைகளைப்போலவே வைணவப் பத்தி இலக்கியமும் இந்திய மொழியாளர்களால் பயிலப்பெற்றது. கன்னடம், தெலுங்கு

ஆகிய மொழிகளில் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை எழுதிப் படிக்கும் வழக்கம் நெடுங்காலமாக நிலவுகின்றது. கி.பி.17ஆம் நூற்றாண்டில் ஆழ்வார் வரலாற்றினைக் கூறும் திவ்விய சூரி சரிதையும் நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியின் வியாக்கியானமும் சிக்குபாத்தியாயர் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ளார். கிருஷ்ணதேவராயர் ஆண்டாள் வரலாற்றையும் நாச்சியார் திருமொழியையும் கருத்திற்கொண்டு தெலுங்கு மொழியில் "ஆமுக்த மாலியதா" பாடியுள்ளார். இதன்பொருள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்பதாகும்.

இருமொழியிலும்வல்ல வேதாந்த தேசிகர் கி.பி.13ஆம் நூற்றாண்டில் திருவாய்மொழியின் பொருண்மையினை விளக்கித் திராவிட வேதோபநிஷத் வரைந்தனர். நாலாயிரத்தினையும் தொகுத்த வைணவப் பெரியார் நாதமுனிகள் திராவிடவேத சாகரம் எனத் திருவாய் மொழிக்கு ஏற்றம் கொடுத்துப் போற்றினார்.

தாய்லாந்து நாட்டில் அரசு விழாக்களில் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள் தாய்மொழியில் எழுதப்பட்டுப் பாடப்படும் உண்மையினை முன்னரே குறித்துள்ளோம். தென்னகக்கலைப் பாணியில் திருமால் கோயில்கள் பல தென்கிழக் காசிய நாடுகளில் எழுப்பப்பட்டுள்ளன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழகம் என்ற அளவில் அன்றி இமயம் வரை பயணம் சென்று தத்தம் வழிபடு வாழ்முதலைப்பரவிப் பாடியுள்ளனர். ஒருபடி கூடுதலாகச் சிவஞானிகள் இலங்கையில் உள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் ஆகிய தலங்களுக்கும் பதிகங்கள் பாடியிருத்தல் நோக்கத்தக்கது. பத்தி இலக்கியத்தின் எழுச்சியும் கோயிற்கலையின் வளர்ச்சியும் ஒருங்கே வைத்து எண்ணுதற்கு உரியவை.

இனி, கி.பி.10ஆம் நூற்றாண்டில் வடமொழியில் தோன்றிய பாகவத புராணத்தில் பன்னிரு ஆழ்வார்களின் வரலாறும் குறிக்கப் பட்டது. அன்றியும் இந்நூலில் "திராவிட நாட்டில் பிறப்பெடுத்த பத்தி என்னும் குழவி கர்நாடகம், மகாராட்டிரம் ஆகிய நாடுகளை அடைந்து நங்கைப்பருவம் பெற்று, ஞானம் வைராக்கியம் என்ற தன் இரு மைந்தருடன் குஜராத்து, வடபுலம் சென்று துயரச்சூழ் நிலையால் அவ்விருமைந்தரையும் இழந்து, பிருந்தா வனத்தை அடைந்தது" என்ற உருவகச்செய்தி உரைக்கப்பட்டது. இதனால் பத்தி வழிபாட்டின் வலிய கோட்டையாகத் தென்னாடு திகழ்ந்துள்ள திறனைத் தத்துவப்பேரறிஞர் தாஸ்குப்தா சுட்டியுள்ளார் **[Vide, History of Indian Philosophy, Vol.III p.63].**

தேவாரம் பாடல் பெற்ற தலங்கள் (274) தெற்கே ஈழம் முதல் வடக்கே இமயம்வரை விளங்குவன. சோழநாட்டில் 190, பாண்டி நாட்டில் 14, கொங்குநாட்டில் 7, நடுநாட்டில் 22, தொண்டை

நாட்டில் 32; சேரநாட்டில் திருவஞ்சைக்களம், துளுவ நாட்டில் திருக்கோகரணம், ஈழநாட்டில் திருக்கோணமலை, திருக்கேதீச்சரம், வடநாட்டில் திருப்பருப்பதம், இந்திர நீலப்பருப்பதம், அனேகங்காவதம், கேதாரம், கயிலை என்பனவாகும். வைப்புத்தலங்கள் பற்பல. ஆழ்வார் பாடிய திவ்வியத் தேசங்கள் (108) சோழநாட்டில் 40, பாண்டி நாட்டில் 18, மலைநாட்டில் 13, நடுநாட்டில் 2, தொண்டை நாட்டில் 22, வடநாட்டில் 12, பரமபதம் (திருநாடு) என்பனவாகும். இவ்வரிசையில் ஈழத்தலம் எதுவும் இடம்பெறாமை எண்ணற்பாலது.

எனவே, **உலகளாவிய நோக்கில் பத்தி இலக்கியம் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது என்பது தெளிவு.** முதலில் சைவம் சார்ந்த பத்தி இலக்கியங்கள் பற்றிக் காண்போம்.

திருஞானசம்பந்தர் திருமுறை

பன்னிருதிருமுறைகளில் முதல் மூன்றினையும் பாடியவர் **திருஞானசம்பந்தர்.** இவர் கி.பி.7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் விளங்கியவர். இவர் சீகாழியில் கவுணிய குலத்தில் தோன்றியவர். இவர் பெற்றோர் சிவபாத இருதயரும் பகவதியாரும் என்பர் சேக்கிழார். இவர் மனைவியின் பெயர் சொக்கியார் என்பது கல்வெட்டு உணர்த்தும் செய்தி ஆகும். **பத்தி இயக்கத்தின் முதல் பெருந் தளபதியாகப் போற்றப் பெறும் இச்சிறிய பெருந்தகையார், தமிழகத்தில் கூடுதலானதலங்களுக்குத் தொண்டர்களுடன் ஆறுமுறை பயணம் சென்று அங்குக் கோயில் கொண்டுள்ள ஈசனைப் பண்சுமந்த பாடல்களில் போற்றி மகிழ்ந்தவர்.** படித்தவர், பாமரர் நடுவேபத்தியைப் பரப்பியர். இவர் பாடியவை 16,000 பாடல்கள் என்றும் பதிகங்கள் என்றும் கூறுவர். எனின், கிடைத்தவை 384 பதிகங்களும் 4158 பாடல்களும் ஆகும்.

தமிழகத்தில் மண்டிக்கிடந்த சமண, பௌத்த மதங்களை வேரொடு களைய முற்பட்ட சம்பந்தரைப் **பரசமய கோளரி** என்று நம்பியாண்டார்நம்பியும் சேக்கிழாரும் போற்றினர். மதுரையில் சமணரையும் போதிமங்கையில் புத்தரையும் வாதத்தில் வென்று வாகை சூடிச் சைவ சமயத்தைத் தழைக்கச் செய்தவர். நின்ற சீர் நெடுமாறனைச் சமணத்தினின்றும் சைவத்திற் சேர்த்த காரணத்தால் தென் தமிழ்நாட்டில் சமணம் குன்றிச் சைவம் மேலோங்கியது. இவர் பதிகங்கள் பெரும்பான்மையும் 11 பாடல்கள் கொண்டவை. **அவற்றில் ஓரமைப்பு ஒழுங்கு [Structural Pattern]** காணப்படுதலை **முதலில் அறிந்து உணர்த்தியவர் சேக்கிழார் ஆவர்.** ஒவ்வொரு பதிகத்தின் எட்டாம் பாடலில் இராவணன் கைலை மலையினை எடுக்கலுற்று இடர்ப்பட்டு இசைபாடி ஈசன் அருள் பெற்றுய்ந்த திறம் இடம் பெற்றது. பிழையினை உணர்ந்து வருந்திவந்து முறையிடும் அன்பர்களை இறைவன் புரந்தருள்புரியும் பாங்கினை இப்பாடல்

உணர்த்துகின்றது. திருமாலும் அயனும் அனல் பிழம்பாகப் பேருருக் கொண்ட பரம்பொருளின் அடி முடிதேடிய வரலாறும் காணமாட்டாத அவர்கள் திருவைந்தெழுத்தோதி உய்ந்த திறமும் ஒன்பதாம் பாடலில் உணர்த்தப்பட்டது. பத்தாம்பாடல் புறச்சமயத்தாராகிய சமண, பௌத்தர்களைக் கண்டனம் செய்வதாய் அமைந்தது. பதினோராம் பாடல் பதிகப்பயனைப் பகர்வதுடன் பாடிய சம்பந்தரின் திறனையும் குறிப்பது. இதனைத் திருக்கடைக் காப்பு என்றே சேக்கிழார் சுட்டினார். இப்பெயரினாலேயே முதல் மூன்று திருமுறைகளும் வழங்கப்பெற்ற வரலாறும் காணத்தக்கது.

தமிழ்க்கொடை

தம் மூன்றாம் அகவையில், அம்மையப்பர் வழங்கிய ஞானப் பாலினைப் பருகித் 'தோடுடை செவியன்' எனத் தொடங்கிப் பல பதிகங்களையும் அருளிய ஆளுடைய பிள்ளையார் மூவருள்ளும் மிகுதியான தலங்களுக்குச் சென்றவர்; மிகுதியான பண்களைப் பயின்றவர்; மிகுதியான அற்புதங்களைச் செய்தவர். மிகுதியாகப் புறச்சமயங்களைக் கண்டனம் செய்து வீழ்த்தியவர். தன்னைத் தமிழ்ஞானசம்பந்தன், நற்றமிழ் ஞானசம்பந்தன், தமிழ்விரகன் என்று பெருமிதம் தோன்ற அறிமுகம் செய்து கொண்டவர். நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பியவர். ஆதிசைவராகிய சுந்தரரும் இங்ஙனம் தம் பெயருக்கு முன்னர்த் 'தமிழ்' அடையிட்டு மூன்று பதிகங்களில் குறித்துள்ளார். எனின், திருக்கடைக்காப்புப் பாடாத அப்பர் பெருமான் யாண்டும் தம் பெயரைத் தனித்தோ தமிழுடன் தொடர்புறுத்தியோ சுட்டிலர்.

தமிழ்ப்பாவினங்களின் வளர்ச்சிக்குச் சம்பந்தரின் கொடை பெரிது. இதன் விரிவினைத் தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நம் நூலின் முதற்பாகத்தின் இரண்டாம் பகுதியில் கண்டு கொள்க. தமிழ் இலக்கியத்துறைக்குப் பல புதிய படைப்புக்களை வழங்கியவர். இவற்றைச் சேக்கிழார் மூல இலக்கியம் [Original literature] எனப்போற்றினர். சம்பந்தர் விருந்தாகப் பாடிய மொழி மாற்று, மாலைமாற்று, வழிமொழி, மடக்கு, [இயமகம்], ஏகபாதம், தமிழ் இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடிமேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு, முடுகியல் எனப்படும் திருஇராகம் (–அராகம்) சக்கரமாற்று, ஆவின்பாய்ச்சல் (–கோமூத்திரி) என்று எண்ணப்பெறும் பதினான்கு வகைப்படும் சித்திரக்கவி வகைகளை மூல இலக்கியமாகத் தந்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவை பெருங்கொடையாகப் போற்றப் பெறுவன. இவர் உடன்காலத்தவர் திருநாவுக்கரசரும் மற்றும் திருநீலகண்டயாழ்ப்பாணர், திருநீல நக்கர், முருகர், சிறுத்தொண்டர், நெடுமாறன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் முதலியோரும் ஆவர். இவருடன் சென்று பாடல்களை யாழில் அமைத்துப் பண்ணிசை பாடிய வித்தகர் திருநீலகண்டயாழ்ப்பாணர் ஆவர்.

சம்பந்தரின் பாடல்களில் காணப்பெறும் இயற்கைப்புனைவு, கற்பனைவளம், விழுமிய சிந்தனைகளில் ஒரு சிலவற்றைக் காண்போம்.

இயற்கைப் புனைவும் கற்பனை வளமும்

இயற்கைப் பொருள்களைக் கூர்ந்து நோக்கி இனிய சொல்லோவியம் புனையும் கலையில் கைதேர்ந்தவர் சம்பந்தர். திருமுதுகுன்றம் நடுநாட்டுத்தலங்களில் ஒன்றாகும். இப்பொழுது அங்கு மலையில்லை. மணிமுத்தாறு பாயும் வயல்கள் மிகுதி. முல்லைநிலமும் ஒருபகுதி. எனின், பண்டு தன்பெயருக்கேற்ப முதுகுன்றம் குறிஞ்சி நிலமாக விளங்கியிருத்தல்வேண்டும். இத்தலத்தின் ஒருமருங்கில் இனிய தேமா மரங்கள்; ஒருபுறத்தில் கொழுவிய வருக்கைப்பலா மரங்கள்; வாழை, கமுகு, உயர் தென்னை மரங்களின் தோப்புக்கள் அடர்ந்த சோலைகள் விழிக்கு விருந்தாவன. மா, பலா, வாழை என்ற மரங்களின் சுவைமிக்க கனிகள் சாறாகப் பெருகி ஆறாக ஓடுகின்ற காரணத்தால் வயல்கள் சேறாகின்ற காட்சி. இங்ஙனம் இயற்கைக் காட்சிகளைக் கற்பனைத் திறனால் கவின்மிக்க கவிதையாகப் படைத்துள்ள பகுதி இதுவே:

"கொக்(கு) இனிய கொழும்வருக்கை கதலிகமுகு
உயர்தெங்கின் குலைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே" [I 131.3]

முக்கனி என்ற தொகைச் சொல்லாட்சி இப்பாடலில் முதன்முதல் காணப்படுகின்றது.

திருவையாறு காவிரியாற்றின் கரையில் விளங்கும் இயற்கைக் கவின் மிக்க திருத்தலம். செங்கால் வெண்நாரைகள் பொழிலில் நுழைந்து கூரிய அலகினால் சிறகைக் கோதிக் குளிர் நீங்கிப் பசிய சோலையில் தனக்குரிய இரையினைத் தேடும் காட்சியைப் பாடியுள்ளார் [I 130.3]. திருக்கோயிலை வலம் வரும் மங்கையர் ஆடல் பயிலவும் அதற்குப் பின்புலமாக முழவு அதிரவும் மழை பொழியுமோ என்று அஞ்சிச் சில பெண் குரங்குகள் மரத்தின் உச்சியில் ஏறி வானத்தை நோக்குதற்கு இடமாக இலங்கும் ஐயாற்றின் அழகினை மற்றொரு பாடலில் காணலாம்:

"வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழைஎன் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி முகில் பார்க்கும் திருவை யாறே"
[I 130.1]

சம்பந்தரின் கற்பனைத்திறனுக்கு ஒருசான்று போதும். திருவீழிமிழலையில் தழைத்தோங்கும் நீர்நிலை சார்ந்த பழனம்

நாளோலக்கமாகத் தோன்றுகின்றது. அதில் பூத்திருக்கும் தாமரை மலர் அரசர் அமர்வதற்குரிய தவிசாக விளங்குகின்றது. அதில் வீற்றிருக்கும் இளஅன்னம் இளங்கோவாகக் காட்சி தருகின்றது. தாமரையின் இருமருங்கும் செந்நெற்கற்றைகள் அசைவது சாமரம் வீசுதல் போல் அமைகின்றது. ஆதலின் நீர்நிலை, தாமரைமலர், இலை, இளம் அன்னம், செந்நெல் கற்றை என்பனவற்றுடன் முறையே அரண்மனை, சிம்மாசனம், குடை, இளங்கோ, சாமரம் என்பனவற்றை இயைபுபடுத்தி ஓர் அருங்கற்பனையினைச் [Associative Imagination] சம்பந்தர் படைத்துள்ளார்.

"செறியிதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரை இரட்ட இளஅன்னம்
வீற்றிருக்கும் மிழலை யாமே" [I 132.2]

இப்பகுதி இனியகவிதையாய் இதயத்தைக் கவர்ந்து இலக்கிய இன்பம் பயப்பது நோக்கத்தக்கது.

விழுமிய சிந்தனைகள்

சம்பந்தர் தம் பதிகத்திற்குத் தரும்பெயர் "திருநெறிய தமிழ்" [I 1.11] என்பதாகும். ஈசனிடம் அன்பு பூண்டு முழு நம்பிக்கை கொண்டு வாழும் மாந்தர் வினைநீக்கம் பெறுவர் (11). "பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகரார்" [I 67.1] என்கிறார். துன்புறும்பொழுதாவது இறைவனைப்பெயர் கூறி அழைத்து ஆறுதல் பெறுதல் உலகோர் வழக்கம். எனவேதான், "நோவுளார் வாயுளான்" [I 61.5] என்று உலகியல்பினைக் கூறுகின்றார்.

இறைவன் அம்மையப்பர் கோலத்தில் தோன்றுதல் உயிர்களுக்கு வினைப்போகம் தருதற்கே ஆகும். திருவருளினால் மக்கள் மாநிலம் மதிக்க மகிழ்ச்சியுடன் வாழலாம்:

"மண்ணின்நல்ல வண்ணம் வாழ்லாம் வைகலும்
எண்ணின்நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே" [III 24.1]

இப்பாடல் இன்றும் திருமண வாழ்த்துப்பாடலாக ஓதப்பெறுதல் சுட்டத்தக்கது.

அகத்திணைமரபு

சங்க அகத்திணை மரபினை அடியொற்றித் தன்னைத் தலைவியாகவும் தோணிபுரத்தீசனைத் தலைவனாகவும் பாவித்துத்

தன் காதற் பெருக்கினைப் பறவைகளைப் பார்த்துப் பேசுவதாக அமைந்த பாற்கிளவிகள் (தொல், பொருள், நூ.194) திருஞான சம்பந்தரின் கற்பனைத்திறனையும் கடவுட் காதலையும் ஒருங்கே உணர்த்தவல்லன. பின்வரும் இரு பாடல்கள் நோக்கத்தக்கன.

1. **வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்**
   ஒண்டரங்க இசைபாடும் அளியரசே! ஒளிமதியத்
   துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
   பண்டரங்கர்க்(கு) என்னிலைமை பரிந்தொருகால் பகராயே.
   [I 60.1]

2. **சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்**
   முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
   துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
   பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே
   [I 60. 10]

இத்தகைய பாடல்கள் பின்னவர்வந்த திருமங்கையாழ்வார் [1198-1201] நம்மாழ்வார் படைப்புக்களிலும் [2708-2717] காணப்படுகின்றன. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட அருளாளர் பலரும் நாயகி நாயகன் பாவத்தில் [Bridal Mysticism] பாடிய கவிதைகள் அவர்களின் ஆன்மீக இறையனுபவத்தைப் புலப்படுத்துவன என்பது சுட்டத்தக்கது.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவோரைப் பெரியார் எனப் போற்றுகின்றார் [I 1.2]. "ஆருயிர்களிடம் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்கள் வாழ்க; மேலான தெய்வங்கள் வாழ்க; பொருளாதாரத்தை மேம்படுத்தும் தெய்வமாகிய ஆனினம் வாழ்க; பருவ மழை பொய்யாது பெய்க; நாட்டுத்தலைவன் ஓங்குக; தீமை எல்லாம் அழிக; ஈசன் திருப்பெயரே உலகெங்கும் ஒலிக்க; உலகம் துயர் நீங்குக" என்று நாட்டுணர்வும் அறவுணர்வும் கொண்டு சம்பந்தர் கூறும் வாழ்த்துரை பொருள் பொதிந்தது [III 54.1]. அண்ணலாரின் அடியவர்கள் அருளாலும் (பொருளாலும்) குறைவிலர் [II 49.1]. சிந்தையே ஈசன் கோயில் [II 64.2].

அனுபவப் பொருளாகிய பரம் பொருளை ஆராய்ச்சியினால் கண்டுபிடிக்கமுடியாது. சுயம் பிரகாசமாகவுள்ள பெருமானைத் தருக்க முறையில் ஏதுக்களாலும் எடுத்துக்காட்டுக்களாலும் தேடாதீர் என அறிவுறுத்துகின்றார் [III 54.5]. சிறந்த கவிதை பாடும் கலைஞானம் மிக்க புலவர்களுக்கு ஒளியாமல் வேண்டுவன வழங்கிப்பேணிக் காக்கும் புரவலரைச் சீகாழிப் பதிகத்தில் சுட்டியுள்ளார்.

"உரவார் கலையின் கவிதைப் புலவர்க்(கு) ஒரு நாளும்
கரவா வண்கைக் கற்றவர் சூழும் கலிக்காழி" [I. 102.1]

வேளாளர் என்பவர் வள்ளன்மை மிகுந்து விளங்கும் தாளாளர்கள் [II 42.3].

இருபொருள் ஒருசொல் பயில்வு

இயமகம் என்னும் சொல்லணி பொருந்தத் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த பதிகப்பாடல்களில் இருபொருள் தரும் ஒரு சொல் பயின்றுவருதல் பார்க்கலாம். யமகம் என்பதுடன் இகரத்தினை முதலிற் பெய்து கூறும் மரபு, "ஆவோடல்லது யகரம் முதலாது" என்னும் தொல்காப்பியரின் ஆணை இகவாது காத்தற்கு என்பது புலனாகும். இயமகம் என்பதும் மடக்கு என்பதும் ஒருபொருளன. இங்ஙனம் சொல்லணி சுடர்விடச் சம்பந்தர் பாடியுள்ள ஒருபாடலை இங்குச் சுட்டுதல் தகும்:

"உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தைஉ கந்தனையே". [III 113.1]

இப்பாடலின் ஈற்றடிகளில் யமகம் பயின்றுள்ளது. ஒருசொல் இருபொருளில் வருதல் காணலாம்:

மெய்-உடம்பு, மெய்ப்பொருள்;காமனை-மனைவி, பெண், மன்மதன்; முன்பணி-பாம்பு, பணிவிடை; (உ)கந்தனை-முருகனை, விரும்பினாய், பாடலின் திரண்ட பொருள்:

"உமை விரும்பிப்பொருந்திச் சேர்ந்திருப்பது உன் மெய்யினை; சிவஞானச்செல்வர்கள் நின்னருளினால் உணர்வது மெய்ப் பொருளை; அறிவன் நூல்களைக் கற்ற ஞானிகள் காய்ந்து நீங்குவது பெண்ணினை; நின்நெற்றிக்கண் எரித்தது காமனை; ஆடையற்ற உடம்பினை மறைப்பது அரவுகளே; அமரர்கள் புரிவது உன் பணியினை; பெற்று வாரிஎடுத்து உகந்தது கந்தனை; பிரமபுரப் பதியினை (உறைவிடமாக) விரும்பினாய்!

சம்பந்தரின் சொல்லாற்றல், கற்பனைத்திறன் என்பன இசைநலம் கெழுமிய இப்பாடலில் இலங்குதல் எண்ணி இன்புறத்தக்கது.

பாராயணப்பதிகங்கள்

திருஞானசம்பந்தரின் பதிகங்களில் சைவர்கள் பெரிதும் ஈடுபாடுகொண்டு நாள்தோறும் ஓதிவருவன **கோளறுபதிகம்** [II .85] **நமச்சிவாயத் திருப்பதிகம்** [III 307], **திருவைந்தெழுத்துப்பதிகம்** [III 22], **திருநீற்றுப்பதிகம்** [II 66] **திருநெடுங்களப்பதிகம்** [I. 52]என்பன சிறப்பாகச் சுட்டத்தகுவன.

திருஎறும்பியூர் முதலிய தலங்களைச் சம்பந்தர் வழிபட்டுக் கொண்டு திருநெடுங்களம் என்னும் தலத்தினைச் சார்ந்தார். பரம்பொருளிடம் நேசம் செலாத வகைத் தடுக்கும் இடும்பைகளையும், உலகியலில் எதிர்ப்படும் இடர்களையும் போக்கி அன்பர்களைக் காத்தருளுதல் வேண்டும் என்ற கருத்தில் **திருநெடுங்களப்பதிகம்** பாடியருளினார். இப்பதிகத்தின் முதற்பாசுரம்,

"மறையுடையாய்! தோலுடையாய்! வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய்! பிஞ்ஞகனே! என்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே!"

என்று காணப்படுகிறது. சைவநன்மக்களின் நித்தியப் பாராயணத்திற்கு உரியனவாக இப்பதிகங்கள் நம்பிக்கை அளவில் மனத்தெளிவும் பல்வளமும் பயத்தல் சுட்டத்தக்கது. திருக்கோளிலி பதிகத்தில் பின்வரும் பாடல் பயிலப் பெறுவது.

**"நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடனெஞ்சே! அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும்; கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே"** [I 62.1]

திருவெழுகூற்றிருக்கை என்ற பதிகம் 47 அடிகள் கொண்ட இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும். எஞ்சியவெல்லாம் கொச்சக ஒருபோகு என்று நச்சினார்க்கினியர் கூறும் கலிப்பாவின் பெருக்கமாகக் கொள்ளப்பெறுவன. **திருவெழுகூற்றிருக்கை சைவசித்தாந்தச் சாத்திரப் பிழிவாகத் திகழ்வது.** இறைவனின் முத்தொழில், தத்துவத் தொகுதிகள் பற்றிய குறிப்புக்கள் கொண்டது. இதனுள், தாம்பிறந்த பதியைக் குறிக்கும் **பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்ற பன்னிரு திருப்பெயர்களையும் ஒருங்கே அமைத்துப் பாடியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.** 'ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்' என்று புறச்சமய நிலையினையும் இதில் சுட்டியுள்ளார்.

சமுதாய நோக்கு

சமுதாய உணர்வும் ஈரமும் மிக்கவர் சம்பந்தர். திருமருகலில் வணிகன் ஒருவன் அரவு தீண்டி நஞ்சு தலைக்கேறிச் சோர்ந்த நிலையில், அவனுடன் வந்த முறைப்பெண்ணின் புலம்பலைக் கேட்ட சம்பந்தர், "சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்" என்ற பதிகம்பாடி உய்வித்தார். திருப்பாச்சிலாச்சிராமத்தில் வாழ்ந்த கொல்லிமழவன் என்னும் குறுநிலமன்னனின் மகளைத் துன்புறுத்திய முயலகன் என்ற நோயினை, "துணிவளர் திங்கள்" என்ற பதிகம்பாடி அறவே போக்கினார். திருச்செங்குன்றூரில் அடியவர்கள் அடைந்த பனிநோயினை, 'அவ்வினைக்கு இவ்வினை' என்ற பதிகம்பாடிக் குணப்படுத்தினார். திருவீழிமிழலையில் பஞ்சத்தினால் வாடிய மக்களுக்குத் தாமும் அப்பரும் வீழிமிழலையாரைப் பாடிப் படிக்காசு பெற்றுப் பசிபோக்கி வாழ்வித்தார். மயிலையில் சிவநேசர் மகளின் எலும்பினை மீண்டும் பெண்ணாக்கித் தந்தார். இன்னோரன்ன அற்புத நிகழ்ச்சிகள் அறவோராகிய சம்பந்தரின் சமுதாய உணர்வுக்குச் சான்றாகும்.

வேளாளர் ஆகிய திருநாவுக்கரசரை 'அப்பரே' என்று தந்தையாக எண்ணி அழைத்தனர் அந்தணராகிய சம்பந்தர்; பாணர் குலத்தில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரை, "ஐயரே" என்று அழைத்ததாகச் சேக்கிழார் குறித்துள்ளார். தில்லைவாழ் அந்தணர்கள் நந்தனாரை, "ஐயரே! அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்" என்று போற்றுவதாகச் சேக்கிழார் பாடியிருத்தல் பார்க்கத்தக்கது. பத்தியின் அடிப்படையில் வேறுபாடற்ற சமுதாயத்தினைக் கண்ட சிறப்புக்குரியவர் சம்பந்தர். தம்பதினாறாம் ஆண்டில் திருநல்லூரில் நம்பாண்டார் நம்பியின் மகள் சொக்கியாரை மணந்து கொள்ள இசைந்தார். திருநீலநக்கர் திருமணச் சடங்குகளை நடத்தினார். திருமணம் திருநல்லூரில் உள்ள பெருமணம் என்னும் திருக்கோயிலில் நிகழ்ந்தது. அப்பொழுது 'கல்லூர்ப் பெருமணம்' என்ற பதிகம்பாடினார். திருக்கோயிலில் பெருஞ் சோதிப்பிழம்பாகத் தோன்றிய ஈசன் மணமக்களையும் உடன் வந்தோரையும் அதனுள் ஈர்த்து ஆட்கொண்டார் என்பர்.

இங்ஙனம் சம்பந்தரின் சமயப்பணி, இலக்கியப்பணி, சமுதாய உணர்வு, மணம், பேரின்பப்பேறு என்பன அவர்தம் பதிகங்களிலும் பெரியபுராணத்திலும் விரிவாகக் கூறப்பெறுதல் காணலாம்.

இனி, இவர் உடன் காலத்தவரான திருநாவுக்கரசரின் திருமுறைத்திறம் குறித்துச் சிறிது நோக்குவோம்.

திருநாவுக்கரசர் திருமுறைத்திறம்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குடியில் தோன்றியவர். மருள்நீக்கியார் என்பது திருநாவுக்கரசரின் இயற்பெயர்.

புகழனார், மாதினியார் இவர்தம் பெற்றோர். திலகவதியார் தமக்கையார். இளைமையில் பெற்றோரை இழந்ததால் ஆதரிப்பாரற்ற நிலையில் பாடலியில் (திருப்பாதிரிப்புலியூர்) உள்ள சமண்பள்ளியை அடைந்து அந்நெறிக்குரிய ஆகமங்களையும் பனுவல்களையும் பயின்று தருமசேனர் என்ற பெயர் பெற்றுத் தலைமை நிலைமை உற்றார். தமக்கையாரின் தவப்பயனால் இவர் மீண்டும் சிவநெறி சார்ந்தார். பாலைக் கொடுத்துச் சம்பந்தரை ஆட்கொண்ட சிவன் இவரைச் சூலை கொடுத்து ஆட்கொண்டார். சமணத்தைத் துறந்த காரணத்தால் அந்நெறியாளர் கொடுத்த அல்லல்களை எல்லாம் திருவருளால் வென்றார். இவர் கி.பி.6ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 7ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் விளங்கியவர். இவர் காலத்துப் பல்லவ வேந்தர்கள் முதலாம் மகேந்திரவர்மனும் அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மனும் ஆவர். திருஞானசம்பந்தர், நமிநந்தி அடிகள், சிறுத்தொண்டர், அமர்நீதி, அப்பூதிஅடிகள் முதலியோர் இவர் காலத்தவர். முதலாம் மகேந்திரவர்மனைச் சமண் நெறியின் நீக்கிச் சைவம் புகச் செய்த சிறப்புக்குரியவர் திருநாவுக்கரசர். பத்திஇயக்கத்தின் மற்றொரு பெருந்தலைவராகப் போற்றப் பெறுபவர். சம்பந்தரையும் அப்பரையும் சைவத்தின் இரு கண்கள் எனச் சேக்கிழார் போற்றியுள்ளார்.

திருநாவுக்கரசரை, “பதிகம் ஏழ் எழுநூறு பகருமா கவியோகி” என நம்பியாண்டார் நம்பி குறிப்பதால் 4900 பதிகங்கள் அவர் அருளியவை என்பது புலனாகும். ஒருசிலர் 4900 பாடல்கள் எனவும் கொள்வர். 49000 என்று திருமுறைகண்டபுராணம் கூறும். இப்பொழுது கிடைக்கும் பதிகங்கள் 312; பாடல்களின் தொகை 3066. இவை நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளன. பண்ணமைந்த பதிகங்கள் யாவும் நான்காம் திருமுறையாக அமைந்தது. திருக்குறுந்தொகை என்னும் கட்டளை யாப்பினால் பாடப்பெற்ற பாடல்கள் யாவும் ஐந்தாம் திருமுறையாகவும், திருத்தாண்டகப் பாடல்கள் அனைத்தும் ஆறாம் திருமுறையாகவும் தொகைசெய்யப்பெற்றன. தேவாரம் என்ற பெயர் மூவர் பாடல்களுக்கும் உரியதாகப்பிற்காலத்துப் பெருகிய வழக்காயினும், சைவமரபில் இப்பெயர் அப்பர் பெருமானின் மூன்று திருமுறைகளையே சிறப்பாகக் குறிக்கும். வாரம் என்பது உரிமை, அன்பு. தே - இறைவன். இறைவனிடம் அன்புரிமை பூண்டு அகங்கசிந்து அப்பர் அருளிய பதிகங்கள் தேவாரம் ஆகும்.

அகத்திணை மரபு

பத்தி இலக்கியம் படைத்த பாவலர்கள் சங்க அகஇலக்கிய மரபினைப் பேணிப்பல இனிய பாடல்களை யாத்துள்ளனர். அகவை நிரம்பியவர் அப்பர் அடிகள். எனின், பரமனிடம் கொண்ட எல்லையற்ற பத்தியை வெளிப்படுத்த நாயகி - நாயக பாவத்தை

[Bridal Mysticism] மேற்கொண்டார். இதனை மதுர பாவம் என்றும் இயம்புவர். உயிரளவில் தொடர்புடைய ஆராக்காதலை இதன்வழி இனிதாகப் புலப்படுத்துகின்றார் அப்பர். தன்னை மணந்து தணந்த தலைவனின் பிரிவாற்றாத தலைவி பறவைகளைத் தூது போக்குவதாக அமைந்த பாடல்கள் திருப்பழனப் பதிகம் ஆகும் [IV 12:1-10]. இப்பதிகப்பாடல்களில் குயிலினங்கள், குருகுகள், நாரைகள், பூவைகள் முண்டகங்கள், கைதைகள், நெய்தல்கள் [-இவையாவும் தாவர விசேடம்], தென்றல் என்பனவற்றை நோக்கிப் பேசுவதாக அமைந்த தன்னுணர்ச்சிப்பாக்கள் [Lyrics] கற்பனை சிறந்த இலக்கியப் படைப்புக்கள் ஆகும். இருபாடல்களை மட்டும் காண்போம்.

1. சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்! சொல்லீரே
   பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
   முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச் சென்னிப்
   பொன்மாலை மார்பனேன் புதுநலம்உண்(டு) இகழ்வானோ.
   [IV 12.1]

2. வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே ஆயிடினும்
   பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
   அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
   குஞ்சிப்பூ வாய்கின்ற சேவடியாய் கோடியையே. [IV 12.10].

இரண்டாம் பாடலில் அப்பூதி நாயனாரின் முடியைப் பூவாய்ச் சூட்டிக்கொண்ட திருவடியின் சிறப்பினைக் குறித்தார். கூடல் இழைத்தல் என்ற அகத்துறையில் இப்பாடலைப் புனைந்துள்ளார். "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழி சுழியாகச் சுற்றும் சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப் பட்டால் கூடுகை, ஒற்றைப்பட்டால் கூடாமை என்று சங்கேதம்" என்று பெரியவாச்சான்பிள்ளை என்னும் பேரறிஞர் நாச்சியார் திருமொழி வியாக்கியானத்தில் கூடலிழைத்தலின் விளக்கத்தையும் நோக்கத்தையும் குறித்துள்ளமை இங்குச் சுட்டத்தக்கது.

ஆரூர்ப்பெருமானிடம் வசம்இழந்த தலைவியின் நிலைமை யினைத் தோழி செவிலிக்கு உரைப்பதாக அமைந்துள்ள "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள். . . . .

தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" [VI 25.7] என்ற பாடலும் பகவற்காமத்தைப் பாரித்துரைப்பது. இவர் பாடல்களில் காணப்பெறும் இயற்கைப் புனைவும் கற்பனைத்திறமும் விழுமிய சிந்தனைகளும் சமுதாய உணர்வும் பற்றிச்சற்று உற்று நோக்குவோம்.

இயற்கைப் புனைவும் கற்பனைத்திறமும்

ஈசனையே புனைந்து பாடுதற்குமுன்வந்த அருளாளர்கள் அப்பெருமான் கோயில் கொண்டுள்ள தலத்தின் இயற்கைச் சூழலையும் வனப்புறப் புனைந்து பாடினர். அப்பர் பெருமானின் அருளிச் செயல்களில் மின்னல் கீற்றெனப் பல இயற்கைக் காட்சிகள் கற்பனை வளத்துடன் புனைந்துரைக்கப்பட்டிருத்தல் பயில்வார்க்கு இன்பம் பயப்பதாகும். ஒருசில காட்சிகளை இங்குக் காண்போம்.

திருப்பழனத்தலத்தினை,

"பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்" [IV 12.1]

"பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்" [IV 12.10]

எனவரும் அடிகளில் வருணித்துள்ளார். வரியுடைய கோல வண்டுகள் பல வரிசையாகச் சென்று (பூக்களின் தேனைப்பருகுதற்கு) பண்ணிசைக்கும் காட்சியை முதல் அடியில் சுட்டினார். பஞ்சியைப் போன்ற மெல்லடியும் மென்சிறகும் உடைய அன்னப் பறவைகள் பரந்து நிறைந்து ஆரவாரிக்கும் இயற்கை எழிற் காட்சியை அடுத்த பாடலின் அடியில் குறித்தனர்.

திருவாரூரின் மருதவளம் அப்பரைப் பெரிதும் கவர்ந்தது. முடங்கியிருக்கும் **இறால், மலங்கு, வாளை, கயல், சேல், வரால் என்னும் மீன்வகைகள் அழகுசெய்யும் கழனிகளை வருணிக்கின்றார்** [IV 20.2]. **செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் என்னும் நெல்வகைகள் திகழும் வயல்களைக் குறிக்கின்றார்** [IV 20.7]. **ஓங்கிய தென்னை, கமுகு,வாழை, மா,மாதுளம் மற்றும் பல்வகைத் தீங்கனிகள் நல்கும் மரங்களின் வளத்தைப் போற்றுகின்றார்** [IV 20.4]. மற்றுமொரு பதிகத்தில், **"கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயில் ஆலும் ஆரூரரை"** [IV 5.1] ஏத்துகின்றார். திருவொற்றியூர் வருவாய் குறையாத ஆலைக் கரும்பும் செந்நெற் கழனியும் அணைந்த சோலைப் பொலிவும் மிக்கது என்று பாடுகின்றார் [IV 86.5]. இயற்கைகள் அழிக்கப்படாத அக்காலத்துத் தமிழ்மக்கள் இயற்கைப் பொலிவு மிக்க சூழலில் இறைவனுக்குக் கோயில் எழுப்பி இன்புற்றனர். இயற்கையில் இறைவனைக் கண்டு இன்புற்றவர் அப்பர். **'கண்டறியாதனகண்டேன்'** என்று தன் அனுபவத்தைச் சொல்லியுள்ளார் [IV 3:1-11]. இறைவன் ஆணைப்படி திருக்குளத்தில் குளித்தெழுந்து திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டதால் இவர்க்குரியதாகக் குளிச்செழுந்த நாயனார் என்ற திருப்பெயர் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

இனி, அப்பர் அடிகளின் கற்பனைத் திறனுக்கு ஒருசான்று கூறல் சாலும்.

திருவொற்றியூர் ஈசனின் அழகிய சடைமுடி அப்பருக்குக் கற்பனைக் காட்சிகளை வழங்குகின்றது. சடைமுடியில் கொன்றை மாலை, மண்டையோடு, கங்கை, பாம்பு, பிறைமதி என்ற ஐந்தனையும் இறைவன் தாங்கியுள்ளார். நுணுகி நோக்கின் இவ்வைந்து பொருள்களும் இருப்பதற்குரிய இடங்கள் வேறுவேறு ஆகும். கொன்றை முல்லைப் புறவிலும், மண்டையோடு சுடுகாட்டிலும், கங்கை கடலிலும், பாம்பு புற்றிலும், இளந்திங்கள்வானிலும் இருப்பன. இவ்வைந்து பொருள்களும்தங்குவதற்குரிய தத்தம் இடங்களைத்தவிர்ந்து ஈசனின் சடைமுடியில் குடிகொண்டன. எனவே, சடைமுடி ஒன்றே கொன்றைக்கு முல்லைப் புறவமாகவும், தலையோட்டிற்குச் சுடலையாகவும் கங்கை சங்கமிக்கும்கடலாகவும் பாம்பிற்குப் புற்றாகவும் பிறைமதிக்கு வானாகவும் இடம் கொடுக்கும் அருட்சிறப்பினை ஆக்கக்கற்பனை [Creative imagination] பொருந்தஇனிய கவிதையாகப் பாடியுள்ளார்:

"அங்கள் கடுக்கைக்கு முல்லைப் புறவம்; முறுவல் செய்யும்
பைங்கண் தலைக்குச் சுடலைக் களரி; பருமணிசேர்
கங்கைக்கு வேலை; அரவுக்குப் புற்று; கலைநிரம்பாத்
திங்கட்கு வானம் திருவொற்றி யூரர் திருமுடியே" [IV 86.10]

இவ்வினிய சொல்லோவியம் அப்பர் பெருமானின் படைப்பாற்றலுக்குத் தக்க எடுத்துக்காட்டு. திருவிருத்தம் எனப்படும் கட்டளைக் கலித்துறைப்பதிகங்களும் திருக்குறுந்தொகை என்னும் கட்டளை பெற்ற கலிவிருத்தத் திருமுறையும் திருத்தாண்டகத் திருமுறையும் தமிழ் யாப்புக்கு அப்பர் அளித்த பெருங்கொடை. தமிழ் நெடுங்கணக்கினைப் பின்பற்றி முப்பது பாடல்கொண்ட ஓர் அரிய பதிகத்தினையும் அருளியுள்ளார் [V 97]. இதனுள் இரண்டொரு பாடல்கள் இடம் மாறியுள்ளனவாகத் தோன்றுகின்றன. இவர் பாடல்களில் கனிவும், இரக்கமும், அனுபவமும், மனித நேயமும் மலிந்திருக்கும்.

அரிய வேண்டுகோள்

இறைவனிடம் உரிமை கொண்டாடிப் பாடுபவர் சம்பந்தரும் சுந்தரருமே என்பர் பலர். எனின், அப்பர் பெருமானும் அன்புப் பெருக்கினால் அந்நிலையில் பாடியிருத்தற்கு ஒரு சான்று காண்போம்:

"வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மைஉன் தாள்என்றன் நெஞ்சத்(து) எழுதிவை! ஈங்கிகழில்
அம்மை அடியேற்(கு) அருளுதி என்பதிங்(கு) ஆர் அறிவார்?
செம்மை தருசத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே"
[IV 96.6]

இப்பாடலில் அப்பர் அடிகள் உணர்த்தும் கருத்து இதுவாகும்:

"திருச்சத்தி முற்றத்தில் கோயில்கொண்டுள்ள சிவக்கொழுந்தே! கொடிய கூற்றுவனின் ஏவலர் வேளைதவறாது என்னை நெருங்கி உடலை விழுத்துவதற்கு முன்னமே, இப்பிறவியிலேயே உன்திருவடியை என் உள்ளத்தில் பதிவு செய்துவைக்கவும். இப்பொழுது நீ என்னைப் புறக்கணித்து அலட்சியம் பண்ணினால் அடுத்தபிறவியில் (-அம்மை) அடியேனுக்கு அருள்புரிவாய் என்னும் நிலையை இங்கு எவரே அறிவார்? (ஒருவரும் அறியார்). செம்மை தருவாய்!"

செம்மை [Spiritual Perfection] என்பது திருவள்ளுவர் சுட்டிய "சிறப்பென்னும் செம்பொருள்" என்பதுடன் இணைத்து நோக்கத்தக்கது. அப்பர்பெருமான் முப்போதும் எப்போதும் நெஞ்சத்தாமரையில் பரம்பொருளின் பதிவினையே பெரிதும் எண்ணி இறுமாப்புற்றுச் சீவன் முத்தராகத் திகழ்ந்தவர் என்ற உண்மை அவர்தம் ஏனைய பாடல்களினாலும் புலனாகும். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" "நினையுமா நினையே" போன்ற திருமுறைத் தொடர்கள் இயைபு கருதி இங்கு எண்ணத்தகுவன.

இனி, அப்பர் அடிகளின் விழுமிய சிந்தனைகள், சமுதாய உணர்வுபற்றிய சில கருத்துக்களைச் சுட்டுதல் தகும்.

விழுமிய சிந்தனைகள் - சமுதாய உணர்வு

மனிதப்பிறவியின் மாண்பினை உணர்ந்தவர் அப்பர். எனவே, கிடைத்தற்கு அரிய இப்பிறவியை மதித்தொழுகுதல் வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்:

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" [IV 81.5]

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" [IV 81.4]

கிரேக்கஞானி புரோடோகோரசு, **"Man is the measure of all things"** எனக்கூறிய சீரிய கருத்து இங்கு எண்ணத் தக்கது. சாதிபேதம் அற்ற சமத்துவச் சமுதாயத்தினை உருவாக்க விழைந்தார்:

"சாத்திரம்பல பேசும் சழக்கர்கள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்" [V 60.5]

என்று வினவுகிறார். எனவே, அப்பரின் மனிதநேயம் புலனாகும். ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அரனடிக்கு அன்பு பூண்டவர் வணங்கத்தக்கவர் என்று போற்றினர் [IV 95.10].

முதன்முதல் கொடுங்கோன்மைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் அப்பர் பெருமான். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் [VI 98.1] என்றும் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" [IV 2:1-10] என்றும் நெஞ்சுரத்துடன் பாடினார். வாழ்க்கையின் குறிக்கோள்: "என்கடன் பணிசெய்து கிடப்பதே" [V 19:9] என்று இயம்பினார். உழவாரத் திருப்பணியை மேற்கொண்டார். மக்கட் தொண்டும் இறைபணியும் உய்திக்கு வழி என்ற எண்ணத்தில், "தொண்டுபட்டு உய்ம்மின்களே" [IV 102.1] என்று அறிவுறுத்தினார். கிணற்றுத்தவளைபோல் வாழாது பரந்த அனுபவம் பெற்றுச் சிறப்புற வாழ்தலைச் சுட்டினார் [V 100.5]. சமணத்தைத் துறந்தாலும் அந்நெறி கற்பித்த 'தயாமூலதன்மம்' என்ற அறக்கோட் பாட்டினை வலியுறுத்தினார் [VI 20.6;40.6]. தருமங்கள் அனைத்துக்கும் மூலமாக, வேராக விளங்குவது உயிர்களிடத்தில் செலுத்தும் தயவு, கருணை, இரக்கமே என்பது இக்கோட்பாட்டின் சாரம் ஆகும்.

மக்கள் அறியாமையும் மடமையும் மிக்கவராய் அறவுணர்வு மங்கியவராய் இருத்தலை நோக்கி, ஏழைகாள் [V 43.1; 60.4; 76.2; 100.4], பாவிகாள் [V 43.3; 86.2], பொறியிலீர் [V 90.6], துளையிலாச் செவித் தொண்டர்காள் [V 66.3], ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள் [V 84.9; 77.4], சழக்கர்காள் [V 60.3], நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர் [V 84.2], சீலம் கெட்டுத்திகையன்மின் பேதைகாள் [V 84.8] என்று அறவழிப்பட்ட சீற்றம் கொள்கிறார். சிற்சில வேளைகளில், "சாற்றிச் சொல்லுவன் கேண்மின் தரணியீர்" [V 60.5] என்றும், "அன்புடைத் தொண்டர்காள்" [V 64.10], மனிதர்காள்! இங்கேவம்; ஒன்று சொல்லுகேன்" [V 91.7], என்று நெகிழ்ந்து அன்பு பாராட்டியும் அறிவுரைகள் வழங்கினார்.

அப்பர்அடிகள், "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" [IV 1.6] என்று தாய்மொழி உணர்வுடன் ஈசனைப் போற்றினார். "ஒன்றி இருந்து நினைமின்கள்" [IV 81.2] என்று யோகநெறியை வற்புறுத்தினார். இவர் அருளிய நமச்சிவாயத்திருப்பதிகம் சைவநன்மக்களின் நாள்வழிபாட்டில் இடம் பெறுவது. "என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்" [V 42.1] என்றும் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" [VI 98.1] என்றும் உறுதி கூறினார். அந்தணராயினும் அப்பூதி நாயனார் வேளாளராகிய அப்பரை வழிபட்டு உய்தி பெற்றார் எனின், அக்காலத்துச் சைவர்களிடம் சமத்துவ நோக்கும் சமுதாய உணர்வும் நிலவியமை தெளிவாகப் புலனாகும். சம்பந்தருடன் இணைந்து திருவீழிமிழலையில் ஈசனிடம் விலையுடைய படிக்காசு பெற்று மக்களின் பசியைப் போக்கிய மனிதநேயம்மிக்க அருளாளர் அப்பர் பெருமான்.

திருமுறை ஆசிரியர்களில் திருமூலருக்கு அடுத்து நீண்டகாலம் தொண்டு வாழ்வு மேற்கொண்ட திருநாவுக்கரசர் தம் எண்பத்தொன்றாம் அகவையில் சித்திரைச் சதயத்தில் திருப்புகலூரில் மேவிய **சாவாமூவாச்சிங்கம்** எனப் போற்றப்பெற்ற பரஞ்சுடரில் கலந்து இன்புற்றார் என்பது வரலாறு.

இனி, சுந்தரரின் திருமுறை குறித்துச் சிறிது சிந்திப்போம்.

சுந்தரர் திருமுறை

திருமுனைப்பாடிநாட்டில் திருநாவலூரில் தோன்றியவர். **நம்பி ஆரூரர்** என்பது இவர் இயற்பெயர். ஆதிசைவர் ஆகிய **சடையனார், இசைஞானியார்** இவர்தம் பெற்றோர். இவர்தம் வளர்ப்புத் தந்தை **நரசிங்க முனையரையர்** என்னும் குறுநிலத்தலைவர். இவர் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணக்கும் நாளில் கயிலாயநாதனால் **தடுத்தாட்கொள்ளப்பெற்றவர். பரவையார்** என்னும் உருத்திர கணிகை யினையும் **சங்கிலியார்** என்னும் நூல்போன வேளாண் மங்கையையும் காதல் செய்து கடிமணம் புரிந்துகொண்டவர். பாலைக்கொடுத்துச் சம்பந்தரையும் சூலை கொடுத்து அப்பரையும் ஆட்கொண்ட சிவன் சுந்தரரை ஓலைகொடுத்து ஆட்கொண்டார். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சியில் அரசோச்சிய இராசசிம்ம **பல்லவன்** காலத்தில் இவர் வாழ்ந்தவர். **தம்பிரான் தோழராகவும் சேரமான் பெருமாளின் தோழராகவும் திகழ்ந்தவர். தென்திசை வாழ்ந்திடவும் திருத்தொண்டத் தொகை தரவும் இவர் தோன்றினார் என்பர் சேக்கிழார்.** முதலிரு தேவார அருளாளர்களைப் போல இவரும் பல அற்புதங்களை நிகழ்த்தியவர். **சம்பந்தருக்கு அடுத்து மிகுதியாகப் பண்சுமந்த பாடல்களை அருளியவர்.** 38000 பதிகங்கள் இவர் பாடினர் என்பர் திருமுறைகண்ட புராண ஆசிரியர் [காண்க: திருமுறைகண்ட புராணம், 16]. இப்பொழுது 100 பதிகங்களும் 1026 பாடல்களுமே கிடைத்துள்ளன. இவையாவும் ஏழாம் திருமுறையாக நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பட்டன. இத்திருமுறைக்குத் **திருப்பாட்டு** என்ற சிறப்புப் பெயரும் உண்டு. **அர்ச்சனை பாட்டேயாகும் என்று இறைவனால் அறிவுறுத்தப் பெற்றவர்.** சமணபௌத்தர்களைக் கண்டிப்பதில் இவர் சம்பந்தருக்குச் சளைத்தவர் அல்லர். தமிழுடன் தன்னை இயைபுபடுத்திக் கொள்ளும் இயல்பினர். **'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்'** என்று இறைவனைப் பாடியவர் [VII 29.6].

அகத்திணைமரபு

இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவித்து அன்புப்பெருக்கினைப் புலப்படுத்தும் பாங்கில் சுந்தரர் பாடியுள்ள கவிதைகள் தேன்போல் இனிப்பவை. பிரிவாற்றாமையால்

வருந்தும் தலைவி பறவைகளை நோக்கிப் பேசுவதும் தலைவன்பால் தூதுபோக்குவதும் அக இக்கிய மரபாகும். இம்மரபினைப் பின்பற்றிச் சுந்தரர் பாடிய பாடல்களில் இரண்டினை மட்டும் இங்குக் காண்போம்:

1. குருகு! பா யக்கொழுங் கரும்புகள் நெரிந்தசா(று)
அருகுபா யும்வயல் அந்தண்ஆ ரூரரைப்
பருகுமா றும்பணிந்(து) ஏத்துமா றும்நினைந்(து)
உருகுமா லும்இவை உணர்த்தவல் லீர்களே! [VII 37.1]

2. பறக்கும்எம் கிள்ளைகள்! பாடும்எம் பூவைகாள்!
அறக்கண்என் னத்தகும் அடிகள்ஆ ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கம்இல் லாமையும் உணர்த்தவல் லீர்களே! [VII 37.2]

இப்பாடல்களில் பிரிவாற்றாத தலைவியின் தூயநேயமும் அக உணர்வுகளைப் புலப்படுத்தும் மெய்ப்பாடுகளும் அழகுறப் புனையப்பெற்றுள்ளன. வைணவ உரைமரபில் தூதுபோக்கப்படும் பறவைகள் ஆன்மாவை இறைவனுடன் இணைத்து வைக்கும் குரவர்கள் [preceptors] என்று துணியப்பெற்றுள்ள கருத்து இங்கு எண்ணற்பாலது.

இனி சுந்தரர் தேவாரத்தில் காணப்பெறும் இயற்கைப் புனைவு, கற்பனைத்திறம், விழுமிய சிந்தனைகள், சமுதாய உணர்வு ஆகிய சிறப்புக் கூறுகள் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

இயற்கைப்புனைவும் கற்பனைத்திறமும்

சோழநாட்டுத் திருத்தலங்களில் கலயநல்லூர் இயற்கைச் சூழலில் இலங்கும் கவின்மிகு பதியாகும். இவ்வூர் அரிசிலாற்றின் தென்கரையில் திகழ்வது. அழகிய சோலைகளில் மலரும் செவ்வியுடைய அரும்புகளின் மருங்கில் சென்று ஆண்வண்டுகள் இசை கூட்டவும், பெண்வண்டுகள் இனிய பண்களை மிழற்றவும் உளங்குளிர்ந்து கவின் மயில்கள் தோகையினை விரித்து நடம் பயிலும். இவ்வினிய காட்சியைக் கண்டு இன்புற்று வயல்களில் உள்ள கரும்புகளின் அருகில் உள்ள நீர்நிலைகளில் உள்ள கருங்குவளைமலர்கள் கண் வளரும்; காலைக் கதிரோனைக் கண்டு மகிழத் தாமரைகள் முகம் போல் மலரும் காட்சியைச் சுந்தரர் இனிய கவிதையாகப் புனைந்துள்ளார்.

"அரும்(பு) அருகே சுரும்(பு) அருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்(பு) அருகே கருங்குவளை கண்வளரும்; கழனிக்
கமலங்கள் முகமலரும் கலய நல்லூர் காணே" [V II 16.1]

பத்தியைப் பாடவந்த பாவலர் இயற்கையின் எழிலில் ஈடுபட்டு இனிய சொல்லோவியம் செய்துள்ளார். இங்ஙனம் வரும் காட்சிகள் இவர் பாடல்களில் பற்பல. கற்பனைத் திறத்திற்கு ஒரு சான்று காண்போம்.

திருப்பைஞ்ஞீலி என்ற பதியில் கோயில் கொண்ட பரமன் பிட்சாடணர். சுந்தரக் கோலம் கொண்டு ஐயம் ஏற்பதற்கு வீதி உலா வருகின்றார். அவர் கையில் பிரம கபலாம் தாங்கியுள்ளார். இதனால் காபாலி (-கபாலி) என்ற பெயரும் அவருக்கு உண்டு. அவருடைய முன்னங்கையில் செங்கட்பாம்பு படம் எடுத்து ஆடுகின்றது! நல்ல இசைக்கு மட்டுமே பாம்பு கட்டுப்பட்டு அடங்கியிருக்கும் என்பதைப் பிச்சை போடுதற்கு வந்த இளம் பெண்கள் கேள்விப் பட்டுள்ளனர். ஆதலின், ஈசன் கையில் ஆடும் அரவம் கட்டுண்டு இருப்பதற்குரிய காரணத்தை அவரிடமே கேட்கின்றனர். "பெருமானே! செந்தமிழின் இசைக் கூறுபாடுகளில் தேர்ச்சியும் ஆற்றலும் பெற்றுள்ளீரோ?" என்பதே அவர்தம் வினா. என்றாலும் பாம்பின் படத்தினைப் பார்த்துப் பயப்படுகின்ற இப் பாவையர் பிச்சையைப் பாத்திரத்தில் இடவும் இயலாமல், பின் வாங்கிச் செல்லவும் முடியாமல் நின்ற வண்ணம் பிட்சாடணரின் பேரழகில் கண்ணையும் கருத்தையும் இழக்கின்றனர்! சிவந்த வானத்தைப்போலும் செம்மேனியன் இறைவன். அவன் தலமோ இயற்கை எழில் தவழும் மணம்மிக்க மலர்ச்சோலை யினால் சூழப்பெற்றது என்று சுந்தரர் அரிய கற்பனை அழகு தோன்றப் பாடுகின்றார்:

> செந்தமிழ்த் திறம் வல்லிரோ! செங்கண் அரவம் முன்கையில்
> ஆடவே
> வந்து நிற்கும் இதென்கொலோ? பலிமாற்ற மாட்டோம் இடகிலோம்
> பைந்தண் மாமலர் உந்து சோலைகள் கந்தம் நாறு பைஞ்ஞீலியீர்!
> அந்திவானமும் மேனியோ சொலும்! ஆரணீய விடங்கரே!
>
> [VII 36.4]

தேவார ஆசிரியர்கள் அருளாளர்கள் மட்டும் அல்லர். சிறந்த கவிஞர்கள் என்பதற்கு இத்தகைய படைப்புக்கள் பொருந்திய சான்றாகப் பொலியும்.

இனி, சுந்தரர் வழங்கியுள்ள அருங்கருத்துக்களையும் சமுதாய உணர்வையும் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

விழுமிய சிந்தனைகள் - சமுதாய உணர்வுகள்

திருக்குறள், நாலடியார், பழமொழி ஆகிய அறநூல்களில் பயிலும் அரிய கருத்துக்கள் சுந்தரரின் பாடல்களில் இடம்பெறக் காணலாம். திருநெல்வாயில் அரத்துறை ஈசனை நோக்கி, "அகரமுதலின் எழுத்தாகி நின்றாய்" [VII 3.7] என்று விளிக்கின்றார். ஓடு புனற்கரைபோல்

இளமை கரைவது; உறங்கி விழிப்பது போன்றது இப்பிறவி [VII 3.4]. ஐம்பொறிகளையும் வென்று ஈசன் திருவடித் தியானத்தில் புகுதல் வேண்டும் [VII 3.2]. பிறவிக்கடலைநீங்கி இன்பக் கரை சேரும் உபாயத்தை உணர்தல் வேண்டும் [VII 3.3].

நிலையாமைக்குப் புல்நுனிமேல் நீர் கதிரவனைக் கண்டதும் மறைந்துபோதலைக் குறிக்கும் நாலடியார் (29). ஆரூரர், "புல்நுனைப் பனி வெங்கதிர் கண்டாற்போலும் வாழ்க்கை" [VII 60.3] என்று அறிவுறுத்தினார். கழுதை குங்குமம் சுமந்து எய்த்தல் [60.1], அரைத்த மஞ்சளதாவது [60.2], முந்திச்செய்வினை இம்மைக்கண் நலியும் [60.4], செத்தபோதில் யாரும் இல்லை [7.1], தோற்றம் உண்டேல் மரணம் உண்டு [7.2], இன்பம் உண்டேல் துன்பம் உண்டு [7.8], முயல்வலை யானைபடும் [58.7], பஞ்சியிடப் புட்டில் கீறுமோ [43.1], எய்ப்பினில் வைப்பு [67.2], தாழாது அறஞ்செய்ம்மின் [78.1], பெரியாரோடு நட்பு இனிது [2.2], பேயோ டேனும் பிரிவு இன்னாது [95.9], வெட்டெனப் பேசன்மின் [44.3], இரும்புண்டநீர்போல் [58.1], ஒருநெல் வாலூன்ற வருந்தும் இவ்வுடம்பு [3.6], பலவின்கனி ஈயது போல்வதன்முன் [3.9], பிழுக்கை வாரியும் பால்கொள்வர் [54.1], பொற்குன்றம் சேர்ந்ததோர் காக்கை பொன்னாம் [50.4], பிழைத்தது பொறுத்தல் [14.9] போன்ற அரிய பழமொழிகள், உருவகங்கள், பொருள் பொதிந்த அறங்களைச் சுந்தரர் பாடல்களின் ஊடே மக்களின் உய்திக்காவும் உறுதிக்காகவும் வழங்கியுள்ளார். அழியும் பொருளுக்காக இச்சகம்பேசி உலோபிகளைப் பாடாதீர் என்று தம் காலத்துப் புலவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார் [34.1-11], தோழமை காரணமாக இறைவனிடம் உரிமை கொண்டாடி நுகர்ச்சிப் பொருள்கள் யாவும் பெற்று ஆரத்துய்த்தவர் வாழ்க்கையின் மாயத்தன்மையினை அனுபவத்தின் வழி உணர்ந்து, "வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்" [78.1] என்றும், "கலியேன் மானுட வாழ்க்கை ஒன்றாகக் கருதிடின் கண்கள் நீர்மல்கும்" [15.8] என்றும் கூறும் பகுதிகள் உலாகாயதரைப் போல் வாழ்வாரை எச்சரித்து ஆன்மீகநெறிக்கு ஆற்றுப்படுத்துவன. முதலிருவரைப்போல் இவர் பாடிய நமச்சிவாயத் திருப்பதிகம் ஆற்றலும் அழகும் மிக்கது. இதனுள், 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' [48.1] என்பது போல் வரும் அடிகள் திருவைந்தெழுத்தில் இவருக்கிருந்த உறைப்பினைப் புலப்படுத்தும்.

மறவாமை எண்ணம்

அப்பர் பெருமான் சத்திமுற்றத்துறையும் சிவக்கொழுந்தினை நோக்கி, 'உன் உருவத்தினை என்நெஞ்சத்தில் எழுதிவை' என்று உரிமையுடன் வேண்டினார். வேறு நினைவு மனத்தினைப் பிடித்துக் கொண்டால் திருவருள் பெறுமாறு யாங்கனம் என்பதே அருளாளர்களின்

எண்ணம். எனவேதான் நாயன்மார்களில் காலத்தால் முற்பட்டவருள் ஒருவராகிய காரைக்கால் அம்மையார், இறைவனை 'மறவாமை வேண்டும்' என்று வேண்டினார். இவர்கள் அடிச்சுவட்டினைப் பின்பற்றிய சுந்தரரும் இறைவனை மறக்க இயலாமையினையும், மறப்பின் அவனைத்தவிர மற்றொன்றை எண்ண இயலாமையினையும் குறித்துப் பலபதிங்களில் பாடியுள்ளார். திருவாழ்கொளிபுத்தூர்ப்பதிகத்தில்,

"மலைத்தசெந் நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை மறந்து என்நினைக் கேனே" [57.1-1]

எனவரும் பாடற்பகுதியைச் சுட்டலாம். திருவெண்ணெய்நல்லூரில் தலைநாளில் தன்னை அவையோர் முன் ஆவணங்காட்டி ஆண்டுகொண்ட பெருமானை எப்படி மறக்கமுடியும் என்று திருநள்ளாற்றுப் பதிகத்தின் பாடல்தொறும் நைந்துருகிப் புலம்புகின்றார். சான்றாக,

"கற்பகத்தினைக் கனகமால் வரையைக் காமகோபனைக்
கண்ணுத லானைச்
சொற்பதப் பொருள் இருளறுத் தருளும் தூய சோதியை
வெண்ணெய் நல்லூரில்
அற்புதப் பழஆவணம் காட்டி அடியனா என்னை ஆளது
கொண்ட
நற்புதத்தை நள்ளாறனை அமுதை நாயினேன் மறந்து
என்நினைக்கேனே" [68.6]

எனவரும் பாடலைச் சுட்டுதல் தகும். இவ்வண்ணமே, "உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே" [24:1-10] என்ற பகுதியும் "எவ்வணம் நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே" [51.1-11] என்ற பகுதியும் பரமனிடத்தில் பதிந்த உள்ளத்துடன் வாழ்வியலை மேற்கொண்டிருந்த சுந்தரரின் உறுதிப் பாட்டினைப் புலப்படுத்துவன.

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தம் குலமுதலை,

"பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே" [VIII 59.1]

என்று ஏத்தி இன்புற்றுப் பாடியிருத்தல் எண்ணத்தக்கது. இப்பதிகம் முழுவதும் சுந்தரர் இறைவனை மறக்க இயலாமையினை உணர்த்துதல் காணலாம்.

சுந்தரர் மனிதநேயம் மிக்கவர். அடியவர்க்கு அடிமை செய்தல் என்னும் கோட்பாட்டின் ஆற்றலையும் மாட்சியையும் விளக்கும் பொருட்டு இவர் பாடிய "திருத்தொண்டத் தொகை" சிவனடியார் களின் வரலாற்றுச் சுருக்கம். நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் இப்பதிகத்தை மூலமாகக்கொண்டு அடியவர் சரிதத்தைப் பாடியுள்ளனர். சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர், சமனிலையில் இருப்பவர், அடித்தளத்தில் கிடப்பவர் என்ற வேறுபாடின்றி எல்லாக் குலத்தாரையும் சிவத்தொண்டு, மக்கள் தொண்டு புரிபவர் என்ற அடிப்படையில் ஒரு குலத்தவராகக் கொண்டு இவர் பாடியுள்ள பாங்கு இவர் பெற்ற ஆன்மீக உயர்வுக்கும் அருள் வாகைக்கும் சான்றாக அமைகின்றது. இறைவனிடமும் செல்வ அடியாரிடமும் பெற்ற பொன்னையும் செந்நெல்லையும் தமக்குமட்டும் என்று வைத்துக் கொள்ளாமல் சமுதாயத்திற்குப்போய்ச் சேரும் வண்ணம் இவர் ஆற்றிய பணி போற்றற்பாலது. சேரமான் பெருமாளுடன் இவர் கயிலைப்பேறு அடைந்தனர் என்பது சேக்கிழார் தரும் வரலாறு.

சுந்தரர் தேவாரத்தினை முழுமையாக இந்நூலாசிரியர் ஆங்கிலத்தில் பாடல் வடிவத்தில் மொழிபெயர்த்து, தலக்குறிப்பு, பொருட்குறிப்பு, இலக்கியச்சிறப்பு, மெய்ப் பொருட் கூறுகள் பற்றி விரிவாக ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இம்மொழிபெயர்ப்பின் முதற்பாகம் (850 பக்கம்) 25.12.1999 இல் ஆசியவியல் நிறுவனத்தால் வெளியிடப்பெற்றது. இரண்டாம் பாகம் விரைவில் வெளிவரும்.

இனி, மாணிக்கவாசகரின் திருமுறை பற்றிச்சற்று உற்று நோக்குவோம்.

மாணிக்கவாசகர் திருமுறை

இவர் இயற்பெயர் வாதவூரர். இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் தோன்றியவர். இவர் பெற்றோர் பற்றிய செய்தி திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியவற்றில் சொல்லப்படவில்லை. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய திருப்பெருந்துறைப் புராணத்தில்தான் முதன்முதல் வாதவூரரின் பெற்றோர் சம்புபாதாசிருதர், சிவஞானவதி என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பெயர்கள் புனைவாகக் கொள்ளப்பெற்றன. கோயிற் புராணத்தில் உமாபதிசிவம், "வாசகமா மாணிக்க மழைபொழி மாமுகில் போற்றி" எனப் போற்றியுள்ளதால் வாதவூரரின் அருளிச்செயல் மாணிக்கவாசகம் என்றும் திருவாசகம் என்றும் பெயர் பெற்றது என்பர். வாதவூரரும் மாணிக்கவாசகன், திருவாசகன் என்ற பெயர் பெற்றார். கல்வெட்டுக் களிலும் இப்பெயர்கள் பயின்றுள்ளன. இவர் காலம் கி.பி.8ஆம் நூற்றாண்டு.

வாதவூரடிகள் அருளிச் செய்தவை திருவாசகமும் திருக்கோவையாரும். இவ்விரண்டும் எட்டாம் திருமுறையாக வழங்கி வருகின்றன. இவற்றுள் கோவையாரைப் பற்றி முன்பே கூறப்பட்டது.

பாண்டிய மன்னனுக்காக வாதவூரர் குதிரை வாங்கச் சென்றமை, திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் நிழலில் குருவடிவாய் வீற்றிருந்த ஈசனால் ஆட்கொள்ளப்பெற்றமை, நரிபரியாதல், பரிநரியாதல், பிட்டுக்கு மண் சுமத்தல், பிரம்படி படுதல் போன்ற அற்புதங்களை மதுரைச் சொக்கநாதன் மாணிக்கவாசகர்க்காக நிகழ்த்தினான் என்பதற்குப் புராணச் சான்றுகளேயன்றித் திருவாசத்திலும் அகச் சான்றுகள் உள்ளன. இவர் காலத்தில் பௌத்தம் ஓங்கியிருந்தது. உலகாயதம், மாயாவாதம், மீமாம்சகம் என்பன பற்றிய குறிப்புக்களும் திருவாசகத்தில் உள்ளன.

திருவாசகம் ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. இதனுள் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலாக அச்சோப்பதிகம் முடிய 51 பதிகங்களும் 658 பாடல்களும் அடங்கியுள்ளன. தேவார ஆசிரியர் மூவரும் எண்சீர்க்கு மேற்பட்ட அடிகளையுடைய பாடல்களை யாக்கவில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் முதல் முதல் பன்னிருசீர் பயின்ற அடியினால் தொடுக்கப் பட்ட விருத்தப்பாடல்களை அருளிய பெருமை [VIII 49:1-8] அடிகளார்க்கு உரியது. எம்பாவை, அம்மானை, பொற்சுண்ணம், கோத்தும்பி, தெள்ளேணம், சாழல், பூவல்லி, உந்தி, தோணோக்கம், ஊசல் முதலிய நாட்டுப்புறச் சாயல் பெற்ற இலக்கிய வகைகளைப் பத்தி இலக்கியம் படைப்பதற்குப் பயன்படுத்திய சிறப்பும் வாதவூரர்க்கு உண்டு. இவருக்கு அடுத்தநிலையில் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகரர் இவ்வகைப் படைப்புக்களை வழங்கியுள்ளனர்.

சம்பந்தரைப் பாலைக் கொடுத்தும் அப்பரைச் சூலை கொடுத்தும் சுந்தரரை ஓலை கொடுத்தும் ஆட்கொண்ட ஈசன் மாணிக்கவாசகரைக் காலைக் கொடுத்து ஆட்கொண்டான் [VIII 2: 52-3]. ஆன்மீக அனுபவப் பிழிவாகவும் அருள் வாழ்வின் வெற்றிச் சாசனமாகவும் பயில்வார் உள்ளத்தை உருக்கும் பத்திப்பனுவலாகவும் விளங்கும் திருவாசகத்தில் சுடர்விடும் இயற்கைப் புனைவு, கற்பனைத் திறம், விழுமிய கருத்துக்கள் முதலியவை பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

இயற்கைப்புனைவும் கற்பனைத்திறமும்

புலர்காலைப் பொழுதினை வாதவூரர் தன்மை நவிற்சியணி தோன்றப் புனைந்திருக்கும் நேர்த்தி நோக்கத்தக்கது. கதிரவன்

உதிப்பதற்கு முன்னம் அவன் சாரதியாகிய அருணன் கீழ்த்திசையில் எழுகின்றான்; இருள் அகன்றது; எழு ஞாயிறு ஈசனின் மலர் போன்ற திருமுகத்தின் கருணையைப்போல் மேலே எழஎழ,தாமரைகள் மேலும்மேலும் மலர்களைப் பூக்கின்றன. ஆறுகால்களைஉடைய வண்டுகள் வரிசை வரிசையாகத் திரண்டு பண்ணிசைக்கின்றன [VIII 20.2]. இக்காட்சி திருப்பெருந்துறையில் தோன்றுவது. வாழ்வில் விடிதலை உணர்த்தும் புலர்காலை வருகையினைக் குயில்கள் பாடியும் சேவற் கோழிகள் கூவியும் நீர்ப்பறவைகள் ஆரவாரித்தும் சங்குகள் ஒலித்தும் புலப்படுத்துகின்றன. உடுக்களின் ஒளி ஓய்ந்தது. கதிரவன் எழுவதால் அதன் பேரொளி எங்கும் பரவுகின்றது.

> "கூவின பூங்குயில்; கூவின கோழி;
> குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்
> ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
> ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்கு...." [VIII 20.3]

இங்ஙனம் புத்துணர்வுதரும் காலைப் பொழுதில் இறைவனையும் துயில் உணர்த்தும் முறையில் திருப்பள்ளியெழுச்சி என்னும் பதிகத்தினை மாணிக்கவாசகர் பாடியுள்ளார். இறைவன் திருவடியைக் காண்பதற்கு அவாவும் அன்பர்களின் ஆர்வப் பெருக்கினையும் பத்தி மிகுதியையும் பாடல்தொறும் குறித்தனர். நாலாயிரத்திலும் திருவரங்கப் பெருமானைப் பள்ளி எழுப்புவதாகத் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய பாசுரங்கள் இங்கு இயைபுபற்றி எண்ணத்தகுவன.

திருப்பெருந்துறையில் குருவடிவமாக வந்து தம்மை ஆட் கொண்ட சிவபிரானின் கருணைப் பெருக்கினை மிகநீண்ட முற்றுருவமாக மாணிக்கவாசகர் தம் கற்பனைத்திறம் பொலியத் திருவண்டப் பகுதியில் பாடியிருத்தல் படித்து மகிழத்தக்கது [VIII 3.66-95]. அதன் சாரத்தினைக் காண்போம்.

"பரமானந்தம் ஆகிய பழங்கடல் ஆசிரிய வடிவமாகிய மேகமாகத் திரண்டு, திருப்பெருந்துறை என்னும் வரையில் ஏறி ஞானம் என்னும் மின்னலின் ஒளியைத் திசை தொறும் விரித்து, ஐம்புலக்கட்டெனும் பாம்புகள் இரிந்தோடும்படியும் துன்பம் என்னும் கோடை மறையவும் அழகுபொருந்தி வாள்ஒளி மிளிரவும், எம் பிறவியிற் கோபம் மிகுத்து முரச முழக்கம்போல் கருணை முழக்கம் செய்து, அருள் துளிகள் ஞானவெள்ளமாகி அடியவர் உள்ளத்தில் பாய்ந்து இன்பச் சுழிகளை இடந்தொறும் படைத்து இருவினை என்னும் மரங்களை வேரொடும் வீழ்த்தி, வழிபாட்டுணர்வாகிய நீரைப் பல பதிகளாகிய வாய்க்கால்களில் ஓடச்செய்து, திருக்கோயில் என்னும் குளத்தினை நிறைத்து, அதனால் சிவஞானிகள் மேன்மேல் மகிழ்தலின், தொண்டர்

என்னும் உழவர்கள் வழிபாடு என்னும் வயலில் அன்பு என்னும் விதையினை இட்டு, சிவபோகம் என்னும் விளைவினை நுகரும்படி உதவும் அரும்பெறல் மேகன் என்று பரம்பொருளைப் போற்றுகின்றார்.

“பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய......
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்(து) அரும்பெறல் மேகன் வாழ்க” [VIII 3: 66-95].

இங்ஙனம் தொடர் உருவகமாகத் தன் அருள் வாழ்வினைக்கற்பனைக் கவின் மிளிர வாதவூரர் பாடியிருத்தல் இலக்கியப் படைப்பில் ஓர் அருஞ்சாதனை என்றே தோன்றுகின்றது.

விழுமிய சிந்தனைகள்

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் [VIII 4: 164-5], என்னும் மிகவும் விரிவான கடவுட் கோட்பாட்டினைத் தந்துள்ளார். வேதங்களுக்கு எட்டாத பரம்பொருள் ஆகமங்களுக்கு அணுக்கமாக வந்து அருளும் பெற்றியைச் சுட்டினார் [1.34-5;4]. ஆகமநெறி தமிழர்தம் சித்தாந்த நெறியே. உயிர்களின் பரிணாம வளர்ச்சியைக் குறித்துள்ளார் [1.26-31; 8.14]. உலக அடுக்கு ஒவ்வொன்றும் முட்டை வடிவின ஆதலின் அண்டம் என்றும் எண்ணற்ற அண்டங்கள் ஒன்றை ஒன்று ஈர்ப்பாற்றல் கொண்டு இயங்கிவருவன என்றும் அரிய அறிவியல் கருத்தினைக் கூறினார் [3.1-4]. இறைவன் பத்திவலையில் படுபவன் [3.42]. பல்வகை அனுபவங்களுக்குப் பிறகே தெய்வம் என்ற சித்தம் ஒருவனுக்குத் தோன்றும் [4.42]. இறைவன் யாவரும் பெறுதற்கு உரியவன் [3.55]. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவன். அன்பர் சூட்டும் பெயரும் வழங்கும் வடிவமும் ஆயிரம் ஆகும் [11.1]. கருணைக்கடல் [11.9]. பத்திக்கடலுள் பதித்த பரஞ்சோதி [11.12]. அம்மையும் அப்பனும் அவனே [37.3]. பால்நினைந்தூட்டும் தாயினும் பரிவுடையவன் [37.9]. சோதி, சுடர், சூழ்ஒளி விளக்கு [29.1]. இருவினை ஒப்பின்கண் காட்சி தருபவன் [30.1].

பழமொழிகள் பயில்வு

அரிய கருத்துக்களையும் உயர்ந்த சிந்தனைகளையும் எளிமையாகவும் இனிமையாகவும் புலப்படுத்துவதற்கு வாதவூரர் மக்களிடம் பரவியிருந்த பழமொழிகள் பலவற்றைப் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். ஒருசில வருமாறு:

தடக்கையில் நெல்லிக்கனி எனக்கு ஆயினன் [3.162], தழலது கண்ட மெழுகது போல [4.60], கொடிறும் பேதையும் கொண்டது விடாது [4.63], பசுமரத்து ஆணி அறைந்தாற்போல [4.65], பிறிவினை (=பிரிவினை) அறியா நிழலது போல [4.73], மத்திடுதயிர் [5.4.10], எள்ளும் எண்ணெயும்போல் [5.5.6], பிழைத்தவை பொறுக்கை [5.7.6], மழக்கையிலங்கு பொற் கிண்ணம் [5.10.2], எய்ப்பினில் வைப்பு [5.10.8], தீப்புகுவிட்டிலின் [6.4], இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு [6.9], கொம்பரில்லாக் கொடிபோல் [6.20], ஆனைவெம் போரில் குறுந்தூறுபோல் [6.21], மொய்க்கும் நெய்க்குடம்தனை எறும்புபோல் [6.24], நாய்மேல் தவிசிடுதல் [10.20] என்பன எண்ணற்பாலன. இவற்றுள் சில பழமொழிகள் முன்னைய திருமுறைகளிலும் பயின்று வந்துள்ளன.

பின்வரும் பாடல்கள் என்றும் சிந்திப்பதற்குரியன:

1. தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யானிதற் இலன் ஓர்கைம் மாறே. 22.10

2. உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே [21.1].

3. இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ அல்லை அன்றியொன்றில்லை யாருன்னை அறியகிற்பாரே. 22.8

மாணிக்கவாசகரின் ஆன்மீக வரலாற்றில் திருப்பெருந்துறை முதலிடம் பெறுகிறது. இங்குக்குருவிடம் பெற்ற உபதேசங்களை உத்தரகோச

மங்கையில் யோகத்தில் நடைமுறைப்படுத்தினார். மற்றும் திருவண்ணாமலை, திருவிடைமருதூர், திருக்கழுக்குன்றம், திருக்குற்றாலம் முதலிய பலதலங்கள் திருவாசகத்தில் பேசப்படினும் மிகுதியான பதிகங்கள் பாடி ஆன்மீகப் பயணத்தின் எல்லையாக அமைந்த தில்லையில்தான் அருள் ஒளியில் வான்கலந்தார். சைவப் பெருமக்களுக்குத் திருவாசகம் திருமறை. இதன் அருமை பெருமைகளை அறிந்த கிறித்துவப் பாதிரியார் ஜி.யூ.போப் ஆங்கிலத்தில் சிறந்த கவிதை வடிவில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம், ஜீ.வன்மீகநாதபிள்ளை, டாக்டர் கு.சீனிவாசன் ஆகிய பெருமக்களும் திருவாசகத்தினை ஆங்கிலத்தில் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளனர்.

இனி, திருமூலரின் திருமுறை குறித்துச் சில கூறுதல் சாலும்.

திருமூலர் திருமுறை

திருமூலர் சிறந்த சித்தர், சிவயோகி, சிவஞானி. தென்மொழி வடமொழிப் பனுவல்களை நன்கு பயின்றவர். யோக நிலையில் இருந்து இவர் அருளிய பாடல்கள் மூவாயிரத்தினையும் "தமிழ் மூவாயிரம்" எனப் போற்றுவர் சேக்கிழார் [XII 27]. திருமூலரே "மூவாயிரம் தமிழ்" [99] என்றும், "தமிழ்ச்சாத்திரம்" [87] என்றும் தம் நூலினைக் குறித்துள்ளார். சைவாகமங்களின் சாரமாக இப்பனுவலைப் பாடினர் என்பர். ஒன்பது தந்திரங்களாக இந்நூல் அமைந்துள்ளது. திருமூலர்,

> "என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
> தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே" [81]

என்று கூறுதல் காணத்தக்கது. தமிழ் செய்தல் என்பது ஆகமச்சாரமாக பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மையினையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளையும் தமிழ்ப்பாடல்களில் தருதல் என்பதாம். தில்லை அம்பலவாணரைத் தொழுத பதஞ்சலி முனிவரை இவர் தம் ஒருசாலைத் தோழராகக் குறித்துள்ளார் [67]. இவர் யோகசூத்திரம் செய்த பதஞ்சலியாக எண்ணப்படுகின்றார். திருமூலர் தேவார ஆசிரியர்க்கும் முற்பட்டவர். கி.பி.5 அல்லது 6ஆம் நூற்றாண்டினர். யோகப்பயிற்சியினால் நீண்ட காலம் வாழ்ந்தவர்.

முதல் ஒன்பது திருமுறைகளும் தோத்திரம். பத்தாம் திருமுறையாகத் திகழும் திருமந்திரம் சாத்திரம். ஆகமாந்தம் எனப்படும் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைள் சிறப்பாக

ஐந்தாம் தந்திரத்தில் கூறப்பெற்றன. முதன்முதல் சைவசித்தாந்தர் என்ற சொல் இவர்பாடலில் காணப்படுகிறது [5.3]. சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகப் போற்றப்பெறும் திருமந்திரத்தில் வேதாந்தத்தின் மையக் கொள்கைகளும் விளக்கப்பெற்றன. சான்றாக எட்டாம் தந்திரத்தில் தத்துவமசிமகாவாக்கியப்பொருளை விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை என்ற இலட்சணாத் திரையத்தைச் சொல்லி விளக்கும் பாடல்களும் [2566-2586], திரிபுடிஞானம் [1605-13], தன்னை அறிதல் [2355;2366], முச்சூனிய தொந்தத்தசி [2488-2500], காரண காரிய உபாதி [2501-2505;2507], சிவசொரூபதரிசனம் [2856-65], முதலியவற்றைப் புலப்படுத்தும் பாடல்களும் வேதாந்தக் கருத்துக்களை விளக்குவன. இத்திறம் அனைத்தும் “திருமுறைகளில் சங்கரர்க்கு முற்பட்ட வேதாந்தச் சிந்தனைகள்'' என்ற நம் ஆய்வுக்கட்டுரையில் (-உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது) கூறப்பெற்றமை காண்க. அன்றியும் சத்திவழிபாட்டிற்குரிய தாந்திரிகச் சிந்தனைகள், மந்திரங்கள், சடங்குகளும் இந்நூலில் கூறப்பெற்றன. வைணவக் குறிப்புக்களும் உண்டு.

எனவே, சைவசித்தாந்தம், வேதாந்தம், தாந்திரிகம், வைணவம் முதலிய நெறிகள் பலவும் மேலோங்கிய சூழலில் திருமூலர் வாழ்ந்தவர் எனலாம்.

அருங்கருத்துக்கள்

திருமந்திரத்தில் வாழ்வியலுக்குப் பயன்படும் அறங்கள், நீதிகள், அருங்கருத்துக்கள் பற்பல பகரப்பட்டுள்ளன. ஒருசிலவற்றை இங்குக் காண்போம்.

திருக்குறளின் அதிகாரத்தலைப்புக்கள் பல திருமந்திரத்திலும் காணப்படுகின்றன. சான்றாகக் கடவுள் வாழ்த்து, அன்புடைமை, நிலையாமை, கல்வி, கேள்வி, கள்ளுண்ணாமை, கொல்லாமை, நடுவு நிலைமை, நல்குரவு, பிறன்மனை நயவாமை, புலால் மறுத்தல், வான்சிறப்பு, அவாவறுத்தல் என்பனவற்றைக் கூறலாம். எனினும் திருமந்திரம் கூறுவனபல புதிய கருத்துக்கள். ஒருமையுள் ஆமைபோல் ஐம்பொறிகளைக் கட்டுப்படுத்துதலைத் திருக்குறள் வழிநின்று திருமந்திரமும் செப்புகின்றது [133]. ‘ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்' என்று கொடையறத்தை வலியுறுத்துகின்றது [250]. ‘யான்பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' [85], எனப்பரந்த உள்ளத்துடன் பாடுகின்றார் திருமூலர். அன்பே சிவம் என்பது அவர் கடவுட் கொள்கை [270]. ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று உயரிய மானிடக்கோட்பாட்டினையும் இறைக் கொள்கையினையும் குறித்தனர் [2104]. முடிந்தமட்டில் பிறர்க்கு இன்னுரை பேசுங்கள்

என்கிறார் [252]. பெரியாருடன் கூடிப்பழகுதல் பேரின்பம் என்று அறிவுறுத்துகின்றார் [545]. சற்குருவின் சிறப்பினைப் போற்றினார் [139]. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. கோயிலை இருவகையாகப் பிரிக்கிறார். நாம் நாள்தோறும் போய் வழிபடும் ஆலயம் படமாடும் கோயில். பசியினால் தளர்ந்து வீதியில் நடந்து செல்வோரை, நடமாடும்கோயில் என்று மரியாதை கொடுத்துக் கூறுகின்றார். படமாடும் கோயிலில் உள்ள பரமனுக்கு வைக்கும் நைவேத்தியம் தெருவில் திரியும் நடமாடும் கோயிலாகிய பசித்தோர்க்குப் போய்ச்சேராது. எனின், பசித்தோர்க்குப் படைக்கும் உணவு இறைவனைப்போய்ச் சேரும் என்கிறார் [1857].

"படமாடும் கோயில் பகவற்(கு) ஒன்(று) ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க்(கு) அங்(கு) ஆகா
நடமாடும் கோயில்நம் பர்க்(கு) ஒன்(று) ஈயில்
படமாடும் கோயில் பகவற்க தாமே."

நடமாடும் நூல் நிலையம், நடமாடும் மருத்துவநிலையம் போல, ஏழை எளியவரையும் அனாதைகளையும் நடமாடும் கோயில் என்று ஏத்திய திருமூலரின் மனித நேயம் போற்றத்தக்கது.

உடம்பு அழியக்கூடியது என்று புறக்கணிப்போரைப் பார்த்து அறிவுரை கூறுகின்றார். உடம்பு அழியின் உயிர் போகும்; மெய்ஞ்ஞானம் பெற இயலாது. உடம்பை வளர்க்கும் உபாயத்தினால் உயிரையும் நீண்ட காலம் உடம்பில் வாழச் செய்தேன். உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டுள்ளதால் [-The body is the temple of god] உடம்பினைப் பேணுகின்றேன் எனத்தன் அனுபவத்தைக் கூறுகின்றார் [724,725]. நாட்டிற்கு நலம் விளையவேண்டின் ஞானத்தை வளர்த்தல் வேண்டும் [242]. "ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே" என்பது அவர் வாய்மொழி.

மூன்றாம் தந்திரம் யோகசாத்திரமாகத்திகழ்வது. தன் ஒரு சாலை நண்பர் பதஞ்சலியைப் போலவே திருமூலர் அரிய யோகநூலைத் தந்துள்ளார். எட்டுறுப்புக்கள் உடைய இந்தயோக நெறியை விரிவாகக் கூறியுள்ளார். விலக்கத்தக்க தீவினைகள் ஆகிய கொலை, பொய், களவு, கள், காமம் முதலானவற்றைக் கடிதல் இயமம் என்றும்; செய்யத்தக்க அறங்கள் ஆகிய தூய்மை, அருள், ஊண்சுருக்கம், பொறை, செவ்வை, வாய்மை, தபம், செபம், சந்தோடம், தானம், சித்தாந்தக்கேள்வி முதலானவற்றை நியமம் என்றும் விளக்கினார். இவ்விரண்டு யோக உறுப்புக்களும் மனிதனின் உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்தும் அறங்கள் ஆகும். உடலை யோகப்பயிற்சிக்கு வன்மையுடையதாக்கும் ஆசனங்கள், மனத்தைச் செம்மை செய்யும் மூச்சுப் பழக்கம் ஆகிய பிராணாயாமம்,

மனத்தைப் புறம் போகாது உள்ளிழுத்தல் ஆகிய **பிரத்தியாகாரம்,** மனத்தை வழிபடு பொருளின்மேல் ஊன்றுதல் ஆகிய **தாரணை,** அப்பொருளை இடைவிடாது நினைத்தல் எனப்படும் **தியானம்,** அதுவாக இணைதல் எனப்படும் **சமாதி** ஆகிய எட்டுறுப்புக்களும் திருமூலரால் தெளிவுறுத்தப் பெற்றன. யோகப் பயிற்சியால் பெரும் பேறுகளையும், அரிய ஆற்றல்களையும் விரித்துரைத்தார் [549-769]. இப்பயிற்சி யாவரையும் உள்ளத்தாலும் உடலாலும் செம்மையுறச் செய்யும்.

ஞானக்கருவூலமாகத் திகழும் திருமந்திரம் சித்தர் மொழியில் இயற்றப்பட்டிருத்தலின் பொருள் புரிந்து கொள்ளுதல் அரிது. இதில் உள்ள பாடல்கள் யாவும் வெண்டளை பயின்ற கட்டளை அடியினால் யாக்கப்பெற்ற கலிவிருத்தம் ஆகும். பல பாடல்கள் அந்தாதியாக உள்ளன. சித்தர் நூல்களில் இங்ஙனம் அந்தாதியாக வரும் பாக்களைப் பார்க்கலாம். மூன்று தொகுதிகளில் திருமந்திரத்தின் செம்பதிப்பினைப் பேராசிரியர் முனைவர் சுப அண்ணாலை வழங்கியுள்ளார் (1998).

பொருளாதாரப் பேரறிஞராக விளங்கிய தமிழறிஞர் டாக்டர் பா. நடராசன் திருமந்திரத்தைப் பாராட்டத்தக்க வகையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்; விளக்கமும் தந்துள்ளார்.

இனி பிரபந்தமாலை எனப்படும் பதினோராம் திருமுறையினைக் குறித்துச் சற்று நோக்குவோம்.

பதினோராம் திருமுறை

அருளாளர் பன்னிருவர் பாடிய **நாற்பது பிரபந்தங்கள்** இத்திருமுறையில் அடங்கியுள்ளன. முதற்பாடல் **சீட்டுக்கவி** எனப்படும் பிரபந்தம். இதனைப் பாடியவர் **திருவாலவாயுடையார்.** 'மதிமலி புரிசை மாடக் கூடல்' எனத் தொடங்குவது. பாண பத்திரன் என்னும் தன் அடியவனுக்கு மாண்பொருள் கொடுத்து உதவும்படி சேரமான் பெருமாள் நாயனாரை வேண்டி விடுத்தது இம்மடல். **பன்னீரடியான் வந்த நேரிசை ஆசிரியம்.** எனவே, இச்சீட்டுக்கவி சுந்தரரின் சமகாலத்தவரான சேரமான் பெருமாள் வாழ்ந்த கி.பி.8ஆம் நூற்றாண்டில் இறைவன் பெயரால் எழுதப்பட்டது எனலாம்.

காரைக்காலம்மையார்

இயற்பெயர் **புனிதவதி.** பிறப்பிடம் **காரைக்கால்.** வணிகர் குலத்தில் **தனதத்தனின் மகளாகப் பிறந்தார்.** சிறு பருவம் முதலே சிவன்பால் அன்புடையவர். திருமண வாழ்க்கை அமையவில்லை. இறைவனிடம் பேய் வடிவம் வேண்டிப் பெற்று ஆன்மீக வாழ்க்கையினை மேற்கொண்டார். கயிலை சென்று அம்மையப்பரைக் காணமுற்பட்டார். **"வரும் இவள் நம்மைப்பேணும் அம்மைகாண்!"**

என்று ஈசனால் அம்மை என அழைக்கப்பெற்றவர். இறைவனிடம் பிறவாமையும் பிறந்தால் அவனடியை மறவாமையும் வேண்டினார். திருவாலங்காட்டில் தாம் ஆடும் கோலத்தைப் பாடி ஆனந்தம் பெற வரம்தந்தான் ஈசன். அவ்வாறே இவர் அருளியவை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டாம். அவற்றுள் முதல் பதிகம், "கொங்கை திரங்கி" என வருவது. நட்டபாடைப்பண் அமைந்தது. இரண்டாம் பதிகம், 'எட்டி இலவம்' எனத்தொடங்குவது. இந்தளப்பண்ணில் அமைந்தது. இவற்றை மூத்த திருப்பதிகங்கள் எனத் தொகை செய்த நம்பியாண்டார் நம்பி மரபுவழிப்பட்டுக் குறித்துள்ளார். தேவார ஆசிரியர்கள் மூவர்க்கும் முன்பே பாடப்பெற்ற முதுமைகருதி இப்பெயர் எய்தின. எனவேதான், சேக்கிழார், "கீதம் முன்பாடும் அம்மை" [24.66] எனப் போற்றினார். இவர் தொடக்கத்தில் பாடியவை அற்புதத்திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையும் என்பர் சேக்கிழார் [24.52-53]. எனின், இப்போதுள்ள பதிப்புக்களில் பதிகங்களுக்குப்பின் இரட்டை மணிமாலையும் இறுதியில் திருவந்தாதியும் வைக்கப்பட்டுள்ளன.

பதிகப்பெருவழி காட்டிய திருஞானசம்பந்தரின் முதலிரு திருமுறைகளின் முதற்பதிகங்கள் காரைக்காலம்மையார் பதிகங்களுக்கு அமைந்த நட்டபாடை, இந்தளம் என்ற பண்களில் அமைக்கப் பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது. எனவே, அம்மையார் மூவர்க்கும் முற்பட்டவர் எனலாம். இவர் காலம் கி.பி.5 அல்லது 6ஆம் நூற்றாண்டு.

அம்மையார் பாடிய முதல் பதிகத்தில் துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி முதலிய பண்களும்; சச்சரி, கொக்கரை, தக்கை, தகுணிதம், துந்துபி, தாளம், வீணை, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை முதலிய இசைக் கருவிகளும் சுட்டப் படுதல் குறிப்பிடத்தக்கது (9).

பதிகம், இரட்டைமணிமாலை, அந்தாதி என்ற மூவகைப் பிரபந்தங்களுக்கும் அம்மையே மூலவர் எனலாம். பதிகம் விருத்தயாப்பினால் அமைந்தது. கட்டளைக்கலித்துறையும் வெண்பாவும் அந்தாதியாக வரத்தொடுக்கப்பெற்றது இரட்டை மணிமாலை. 20 பாடல்கள் கொண்டது. 'பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம்' எனத் தொடங்கும் அற்புதத் திருவந்தாதி 101 வெண்பாக்களைக் கொண்டு இறுதிப் பாட்டு 'பேராத காதல் பிறந்து' என முடிதலின் மண்டலித்து மாலைபோல் அமைந்துள்ளது. பின்வரும் பாடல் நோக்கத்தக்கது.

"அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்" [20]

ஒன்றாகக் காண்பதுவே காட்சி என்ற அத்துவிதக் காட்சி அம்மையின் அனுபவமாகக் கிடைத்தது. அதனைப் இப்பாடல் தெரிவிக்கின்றது. இறைவன் நடனம் ஆடும் காட்சியை அற்புதச் சுவை தோன்றப் பாடியுள்ளார்:

> "அடிபேரிற் பாதாளம் பேரும்; அடிகள்
> முடிபேரின் மாமுகடு பேரும் – கடகம்
> மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
> அறிந்தாடும் ஆற்றா(து) அரங்கு" [77]

பார்த்து நடனம் புரியும்படி பாடுகின்றார். அறிந்து ஆடும் (-ஆடுவீர்). அதற்குரிய காரணங்களைக் கூறும் தொடர்கள் ஈசனின் வரம்பிலாற்றலைப் புலப்படுத்துவன. கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில் (88) நக்கீரதேவர் இத்தகைய காட்சியைப் பாடியுள்ளார். பட்டினத்தார் பாடலிலும் இத்தகைய கற்பனை உண்டு [XI 26.6].

ஆண்போல் பாடிய பாட்டு

அருளாளர்கள் உலகத்தார் போக்கினைத் தம்மேல் ஏறிட்டுக் கொண்டு இறைவனிடம் வேண்டுதல் பத்தி இலக்கியத்தின் பொதுப் பண்புகளில் ஒன்றாகும். இவ்வகையில் காரைக்காலம்மையார்,

> "நினையா(து) ஒழிதிகண் டாய்நெஞ்சமே! இங்கோர் தஞ்சம் என்று
> மனையா ளையும்மக்கள் தம்மையும் தேறியோர் ஆறுபுக்கு
> **நனையாச் சடைமுடி நம்பன், நம் தாதை,** நொந்தாத செந்தீ
> அனையான் அமரர் பிரான் அண்டவாணன் அடித்தலமே"

என வரும் பாடலைத் திருவிரட்டை மணிமாலையில் அருளிச் செய்துள்ளார். "இவ்வுலக வாழ்க்கையில் மனைவி, மக்கள் சுற்றம் ஆகியோரைப் பற்றெனத் தெளிந்து, தலையில் தாங்கியிருக்கும் கங்கை ஆற்றினால் நனைக்கமுடியாத சடைமுடியுடைய நம் பெருமான், நம் தந்தை, அணையாச் சுடர்விளக்கினை ஒத்தவன்; அமரர்க்கெல்லாம் தலைவன் ஆகிய உலகநாயகனின் திருவடித்தலத்தினை நினையாது நீங்குகிறாயே, (அறியாமை மிக்க) என் நெஞ்சமே! (இனி, உய்யுமாறு எங்ஙனம்?)" என்று பேழ்கணித்துப் பேசுகின்றார். இங்ஙனம் பேசுதல் உலகத்தாரை இறையுணர்வில் நிறுத்தும் நோக்கத்தில்தான் என்று கொள்ளுதல் வேண்டும். இப்பாடலை அப்பர்பெருமான் படித்தவராதல் வேண்டும் என்பதற்கு நான்காம்திருமுறையில் திருவையாற்றுப் பதிகத்தில் (92),

> "அந்திப் பிறையணிந் தாடும் **ஐயாறன் அடித்தலமே"**

> "அணியன சேயன தேவர்க்(கு) **ஐயாறன் அடித்தலமே"**

"அருள்தரு கைகொடுத்(து) ஏற்றும் **ஐயாறன் அடித்தலமே**"

"அழுவார்க்கு அமுதங்கள் காண்க **ஐயாறன் அடித்தலமே**"

"அன்பர்க்கு அணியன காண்க **ஐயாறன் அடித்தலமே**"

"அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்கும் **ஐயாறன் அடித்தலமே**"

என்பன முதலாக வரும் பாடற்பகுதிகள் சான்றாகத் திகழ்வன எனலாம். அம்மையார் முதன்முதல் அறிமுகப்படுத்திய கட்டளைக் கலித்துறையாப்பு அப்பரை உள்ளிட்ட பத்தி இலக்கியர்களால் மேலும் வளர்க்கப்பெற்ற உண்மை உணரத்தக்கது.

ஐயடிகள் காடவர்கோன்

அம்மையாரின் பிரபந்தங்களை அடுத்து **ஐயடிகள் காடவர் கோன் அருளிய க்ஷேத்திரத் திருவெண்பா** அமைந்துள்ளது. இப்பல்லவ வேந்தர் கி.பி.670 - கி.பி.685 என்ற காலப்பகுதியில் ஆட்சிபுரிந்த முதலாம் பரமேச்சுவர வர்மன் ஆவார். முதலாம் மகேந்திரவர்மனால் எடுக்கப்பெற்ற திருச்சிராப்பள்ளியை இவர் பாடியுள்ளதால் அவனுக்குப் பிற்பட்டவர். ஒவ்வொரு தலத்திற்கும் ஒரு வெண்பாவாக இவர் க்ஷேத்திரத் திருவெண்பாவைப் பாடியுள்ளார். முதலில் **தில்லைச் சிற்றம்பலத்தினைப் போற்றினார்**. இது சைவமரபினை ஒட்டியது. குடந்தைக் கீழ்க்கோட்டம், திருவையாறு, திருவாரூர், திருத்துருத்தி முதலிய தலங்கள் பாடப்பட்டன. இப்போது 24 நேரிசை வெண்பாக்களே கிடைத்துள்ளன. திருவையாறு என்னும் தலத்தைப் பற்றிய பாடலை இங்குக் காண்போம்.

"குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே!
ஐயாறு வாயால் அழை."

முதுமையும் தளர்ச்சியும் பிணியும் ஒருவனை வாட்டுவதற்கு முன்னரே, உடல் நல்ல நிலையில் உள்ள காலங்களிலேயே ஐயாறப் பனை அகம் குழைய அகவி அழைத்து அன்புசெலுத்தி அருள் பெறுதல் வேண்டும் என்பது காடவர் கோன் கட்டளை.

சேரமான் பெருமாள்

இவர் சுந்தரரின் நண்பர். சேரநாட்டின் அரசர். இருவரும் சேர்ந்து பல தலங்களையும் வழிபட்டனர். **இவர் பாடியவை பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா** என்னும் மூன்று பிரபந்தங்கள். இவை

முறையே தில்லை, திருவாரூர், கயிலாயம் ஆகிய இடங்களில் பாடப்பெற்றவை. திருமறைக்காட்டு அந்தாதியும் இவர் பாடியுள்ளார் என்பர் சேக்கிழார் [37.8]. இப்பிரபந்தம் நமக்குக் கிடைக்கவில்லை.

பொன்வண்ணத்தந்தாதி கட்டளைக் கலித்துறை யாப்பினால் அமைந்த நூறு பாடல்கள் கொண்டது; மண்டலித்து முடிவது. "பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்" எனத் தொடங்கி,

"காய்சின ஆனை வளரும் கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே படைத்தது பொன்வண்ணமே"

என நிறைவுறும். பொன்மலையினைச் சார்ந்த கருங்காக்கையும் பொன் நிறம் பெறும் என்ற திருமுறைக்கருத்தினைச் சமணர் ஆகிய அமிதசாகரரும் யாப்பருங்கலக் காரிகையின் பாயிரத்தில் பயின்றுள்ளார். இவர் நண்பர் ஆகிய சுந்தரரும் இத்தகைய செய்தியைக் குறித்துள்ளார் [VII 50.4]. இவர் காலத்துப் படைப்பிலக்கியர் நிலைபற்றிய ஒரு சுவையான செய்தி தரும் பாடலைக் காண்போம்:

"தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன்; தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும் பெறேன்; உரைத்தாருரைத்த
கள்ளிய புக்கால் கவிகள் ஒட்டார்; கடல் நஞ்சயின்றாய்!
கொள்ளிய அல்ல கண்டாய்; புன்சொல் ஆயினும் கொண்டருளே"
[பொன்வண். 24]

இப்பாடலில், "உரைத்தார் உரைத்த கள்ளிய புக்கால்" என்பது பிறரைப் பார்த்து எழுதும் திருட்டினைக் [plagiarism] குறித்தது. கவிஞர்கள் இவ்வகைக் களவினைப் பொறுக்கமாட்டார்கள் என்பது நோக்கத்தக்கது. சேரமான் சிறந்த கவிதைகளைத் தந்தவர். தன் புன்சொல் கொள்ளத் தக்கது அன்றேனும் ஏற்றருள்க எனப்பாடுதல் பணிவும் வினயமும் படைத்த சேரமானின் மனச்செம்மையினைக் காட்டும்.

திருவாரூர் மும்மணிக்கோவையில் வரும் ஆசிரியப் பாடல்கள் சங்கத்துச் சான்றோர் யாத்த ஆசிரிய நடையினைப் பயின்று வருதல் நோக்கத்தக்கது. சான்றாக,

"மனையுறை குருவி வளைவாய்ச் சேவல்
சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி ஆனா
அன்பு பொறைகூர மேன்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
பெருவளம் தழீஇய பீடுசால் கிடக்கை
வருபுனல் ஊரன் பார்வை யாகி

மடக்கொடி மாதர்க்கு வலையாய்த் தோன்றிப்
படிற்று வாய்மொழி பலபா ராட்டி
உள்ளத் துள்ளது தெள்ளிதிற் கரந்து
கள்ள நோக்கமொடு கைதொழு நிறைஞ்சி
எம்மி லோயே பாண! . . . . ” [19:1-12]

எனவரும் பகுதியைச் சுட்டுதல் சாலும். இப்பாடற் பகுதியில் இடம் பெறும் கற்பனை, இயற்கை, அகத்திணைமரபு, சொல்லாட்சி யாவும் சேரமானின் சங்க இலக்கியப் புலமைக்குச் சான்றாவன.

சங்க அகமரபினைத் தெய்வக் காதற் புனைவுக்குத் தழுவிப் போற்றும் மரபினை இத்தகைய திருமுறைப் பாடல்களில் காணலாம். ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற மூவகை மணிபோன்ற யாப்புக்களில் 30 பாக்களில் கோக்கப்பெற்ற இப்பனுவல் விரிகடல் எனத் தொடங்கி (1) விரிகடலே (30) என மண்டலித்து பிரபந்தமாலையாக முழுமைபெற்ற அமைப்பழகு [Structural Beauty] எண்ணி இன்புறத்தக்கது.

காரைக்காலம்மையார் அந்தாதி இரட்டைமணிமாலை, பதிகம் என்பவற்றிற்கு மூலவராதல்போல், சேரமான் உலா, மும்மணிக்கோவை ஆகிய பிரபந்தங்களுக்கு மூலவராகப் போற்றத் தக்கவர். திருக்கைலாய ஞான உலாவில் சல்லரி, தாளம், தகுணிதம் உள்ளிட்ட பல்வகை இசைக் கருவிகளைக் குறித்துள்ளார். மடந்தை யினைத் **“தீந்தமிழின் தெய்வ வடிவாள்”** எனச்சிறப்பித்தார். **‘இல்லாரை எல்லாரும் எள்ளுவர்’, ‘கண்டுகேட்டு உண்டுயிர்த்துற்றறியும்’** எனவரும் குறட்பாக்களை இவ்வுலாவில் ஆண்டுள்ளார். **அன்றியும் திருவள்ளுவரைப் “பண்டையோர்”[173] எனப் போற்றுவதால் சேரமான் காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவர் திருவள்ளுவர் என்பது புலனாகும்.** கலிவெண்பாவினால் பாடப்பெற்ற இதனை ‘எழிலுடைய வெண்பா’ என்றே போற்றியுள்ளார் (189). எனவே, கலிவெண்பா இவர் காலத்தில் வெண்பாவின் ஒருவகையாக எண்ணப்பெற்றது எனலாம்.

அடுத்து, நக்கீரதேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர் பாடிய பிரபந்தங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. சங்கப் புலவர் பெயர் தாங்கிய இப்புலவர் பெருமக்கள் பல்லவர் காலத்தில் வாழ்ந்த அருளாசிரியர்கள். நிரலே இவர்தம் பிரபந்தங்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

நக்கீரதேவர்

இவர் பாடியவை: **கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, திரு ஈங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை,**

திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், கார்எட்டு, போற்றித்திருக்கலி வெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற பத்துப் பனுவல்கள் ஆகும். எனின், திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டில் முதல் பாட்டாகக் காணப்பெறுதலின் அதனைப் பாடிய சங்கப் புலவரினின்றும் ஏனைய ஒன்பது பிரபந்தங்களின் ஆசிரியர் நக்கீரதேவர் வேறானவர்; பிற்காலத்தவர். இக்கருத்தினை 'நக்கீரர்': (-காண்க: இலக்கியச் சோலையிலே ப.44-71) என்ற நம் ஆய்வுக் கட்டுரையில் விரிவாக விளக்கியிருக்கக் காணலாம். கைலைபாதிகாளத்திபாதி அந்தாதி முதலிய ஒன்பது பிரபந்தங்களும் சிவன் ஒருவனையே முழு முதலாகப் போற்றுவன. எனின், சிவனை உள்ளிட்ட எல்லாத் தெய்வங்களும் தம் குறைகளை விண்ணப்பிக்கும் பொருட்டு வேண்டிநிற்க, திருவாவினன் குடியில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் அவர்களுக்கு அருள்புரிகின்றான் என்ற செய்தியைத் திருமுருகாற்றுப்படை [150-176] தெளிவுறுத்துதல் காணத்தக்கது.

முதல் வெண்பாவில் கயிலையும் அடுத்த வெண்பாவில் காளத்தியும் ஆக நூறு பாடல்களில் இவ்விருதலங்களையும் நக்கீரதேவர் போற்றுகின்றார். திருச்சிக்கு அண்மையில் உள்ள ஈங்கோய்மலையில் கோயில்கொண்டுள்ள ஈசனை எழுபது வெண்பாக்களில் பரவுகின்றார். இயற்கைப் புனைவுகள் மிகுதி. நெடுங்கணக்கு முறையில் பாடலின் தொடக்கம் அமைந்திருத்தல் அறிந்தின்புறத்தக்கது. இந்நூலின் ஒருபாடலைக் காண்போம்:

> "இருந்தவா காணீர் இதுவென்ன மாயம்
> அருந்தண் கயிலாயத்(து) அண்ணல் - வருந்திப்போய்த்
> தான்நாளும் பிச்சை புகும்போலும்! தன்னடியார்
> வானாள மண்ணாள வைத்து" (53).

ஆசிரியம், வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் மூவகை யாப்பில் மும்மணிகளைக் கோத்தாற்போல் அந்தாதியினால் திருவலஞ்சுழி நாதரைப் பாடுவது திருவலஞ்சுழி மும்மணிக்கோவை ஆகும். இந்நூலில் 15 பாடல்கள் உள்ளன. மண்டலித்து முடிதலின் மூலநூலிலும் இந்த அளவுதான் பாடல்கள் இருந்திருத்தல் வேண்டும். எனின், சேரமான் பெருமாள் பாடிய திருவாரூர் மும்மணிக்கோவையில் 30 பாடல்கள் உள்ளன. எனவே, நக்கீரதேவர்க்குப் பின்னர் 30 பாடல்கள் பாடும் வழக்கம் வந்திருக்கவேண்டும். திருஞானசம்பந்தரைப் போலவே இவரும் எழுகூற்றிருக்கை என்னும் சித்திரக்கவி பாடியுள்ளார். 55 அடிகளில் அமைந்த இணைக்குறளாசிரியம் இப்பிரபந்தம். பெருந்தேவபாணி 67 அடியுடைய இணைக்குறளாசிரியம். இவ்விரு பிரபந்தங்களின் பின்னும் ஒவ்வொரு வெண்பா உள்ளது.

ஈசனின் மறக்கருணையும் (-கோபம்), அறக்கருணையும் (-பிரசாதம்) பொருளாக அமைவது கோபப்பிரசாதம்; நூறு அடிகளைக் கொண்ட இணைக்குறள் ஆசிரியப்பா. கார் காலத்தின் கோலத்தினைச் சிவனின் உருவத்திருமேனியுடன் ஒப்பிட்டுப் பாடுவது கார்எட்டு. எண்தொகைச் செய்யுள் என்னும் பிரபந்தம். இதனுள் 8 வெண்பாக்கள் உள்ளன.

சிவபிரானின் அருட்செயல்களைப் போற்றிப் பரவும் பிரபந்தம் போற்றித்திருக்கலிவெண்பா. சேரமானின் ஞானஉலாவைப்போல் இப்பிரபந்தமும் கலிவெண்பா யாப்பில் புனையப்பெற்றது. 45 கண்ணிகளை உடையது.

சிவபிரானையே முழுமுதலாகக் கொண்டு பாடப்பட்டவை ஏனைய பதினொரு திருமுறைகளும். எனின், திருவிசைப்பாவில் சேந்தனார் பாடிய திருவிடைக்கழி முருகனைப் பற்றிய ஒருபதிகம் இடம் பெற்றுள்ளது. பின்வந்தோர் சிவகுமாரர் பற்றிய பாடல்களையும் திருமுறையில் சேர்க்க எண்ணிய பொழுது திருமுருகாற்றுப் படையினையும் பதினோராம் திருமுறையில் இணைத்தனர். நக்கீரதேவர் பாடிய ஏனைய பிரபந்தங்களின் மொழியமைப்பு, நடை, சொல்லமைதி, கருத்து என்பன திருமுருகாற்றுப்படையின் அமைப்பினின்றும் பெரிதும் வேறுபடுதலின் இதன் தொன்மை துலங்கும். விநாயகரைப் பற்றிய பிரபந்தங்களும், நாயன்மார்களைப் பற்றிய பிரபந்தங்களும் இத்திருமுறையில் காணலாம். திருமுறை என்ற கோட்பாடு விரிவடைந்திருப்பதை இதனால் அறியலாம். தொடக்கக் காலத்தில் திருக்கோயிலில் சிவலிங்க வழிபாடுதான் திகழ்ந்தது. எனின், பரிவார தேவதைகள் பின்னர் இடம் பெற்றனர். அவ்வாறே பதினோராம் திருமுறையில் ஈசனுடன் சிவகுமாரர், நாயன்மார்கள் இடம் பெற்ற திறம் கோயில் வளர்ச்சியுடன் இணைத்து எண்ணத்தக்கது.

நக்கீரதேவர் பழைய அடியாருள் ஒருவர் ஆகிய திருக்கண்ணப்ப தேவர் பேரில் மறம் என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். மறம் என்பது வீரம். தன் கண்ணையே பெயர்த்து ஈசன் விழியில் அப்புதற்கு மறம் வேண்டும் அன்றோ! அதனைச் சிறப்பித்துப் பாடப் பெற்றது திருக்கண்ணப்ப தேவர்திருமறம். இது 158 அடியுடைய இணைக்குறள் ஆசிரியம். இதன்பின் ஒருவெண்பா உள்ளது.

ஏனைய அருளாசிரியர்கள்

கல்லாடதேவர் நக்கீரதேவரைப் போலவே 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' பாடினார். இது சிறிய பாட்டு. 38 அடியுடைய இணைக்குறள் ஆசிரியம். இவர் மூவர் கலத்தவர் எனலாம்.

கபிலதேவநாயனார் பாடியவை மூன்று பிரபந்தங்கள்: மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி. விநாயகரைப் பற்றிய ஒருபாடல்:

"திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை." [மூத்த.1]

பரணதேவர் சிவபெருமான் திருவந்தாதியும், இளம்பெருமான் அடிகள் சிவபெருமான் திருமும்மணிக்கோவையும், அதிரா அடிகள் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையும் பாடினர். இப்பிரபந்தங்கள் யாவும் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை.

கி.பி.10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்துப்பிள்ளையார் பாடிய ஐந்து பிரபந்தங்களும் கி.பி.10,11ஆம் நூற்றாண்டினராகிய நம்பியாண்டார் நம்பி பாடிய பத்துப்பிரபந்தங்களும் பதினோராம் திருமுறையின் இறுதியில் கால வரிசைப்படி வைக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது. தேவாரம், திருவாசகம், திருமந்திரம் உள்ளிட்ட திருமுறைகளில் பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சந்தானக்குரவர்களால் மெய்கண்ட சாத்திரங்களில் ஏற்புழி எடுத்துரைக்கப் பெற்றுள்ள திறம் இங்குச் சுட்டுதற்கு உரியது.

அந்தாதியின் தனிச்சிறப்பு

திருமுறைகளிலும் திவ்வியப்பிரபந்தத்திலும் காணப்படும் பிரபந்தங்கள் பலவும் தமிழிலக்கிய மரபினை ஒட்டி மண்ணின் மணம் பெற்று வளர்ச்சி பெற்றவை. ஒரு சில பெயர்கள் வடசொல்லாக இருப்பதால் வடமொழிஇலக்கியச் சார்புடையன என்று பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை போல்வார் எண்ணினர். என்றாலும், அந்தாதி என்ற பெயரில் வடமொழியில் ஓர் இலக்கியம்கூட எழுதப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. சங்க காலம் முதல் பத்தி இலக்கியக்காலம், பிற்கால இலக்கியக் காலம் வரை வாழ்ந்துள்ள தமிழ்ப்பாவலர்கள் அந்தாதி என்ற பிரபந்த வகையினைப் பேணி வளர்த்துள்ளனர் என்ற உண்மை நடுநின்று ஆய்வார்க்குப் புலனாகும். அன்றியும், மும்மணிக் கோவை, நான்மணிமாலை, ஒருபா ஒருபஃது போன்ற பிரபந்த வகைகளையும் அந்தாதி அமைப்பில்பாடி மகிழ்ந்துள்ளனர் என்பதும் அறியத்தக்கது.

தமிழில் சிற்றிலக்கியவகைகள் வளர்ச்சிபெற்று வந்துள்ள வரலாற்றினை ஆராய்தற்குப் பதினோராம் திருமுறை பெரிதும் பயன்

தரும். இலக்கியச்சுவை, கற்பனைகள், அணிகள், யாப்பு வகைகள் சிறந்து விளங்கும் இத்திருமுறைகள் பல்லவர்காலத்துச் சமய தத்துவ ஆய்வுக்கும் சமுதாய, அரசியல் நிலைகளை அறிவதற்கும் ஆவணங்களாக உதவுவன எனலாம். திருமுறைகளின் அருங்கருத்துக்கள் பலவற்றையும் "திருமுறைஇலக்கியம்" என்ற நம்நூலில் கண்டுகொள்க.

தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகளுக்குப் பல்வேறு பதிப்புக்கள் வந்துள்ளன. இவற்றுள், சைவ சித்தாந்த சமாசப் பதிப்பு, கழகப்பதிப்பு, தருமை ஆதீனப்பதிப்பு, காசிமடத்தின் பதிப்பு முதலியன சுட்டத்தக்கவை. யாழ்ப்பாணத்துச் சான்றோர்கள் நல்லூர் ஆறுமுக நாவலர், பண்டித சுவாமிநாதபிள்ளை உள்ளிட்ட பெரியோரின் பதிப்புக்களும் பணிகளும் என்றும் போற்றத்தகுவன.

இனி, வைணவ பத்தி இலக்கியமாகத் திகழும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் குறித்துச் சிறிது சிந்திப்போம்.

நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்

பிரபந்தம் என்ற சொல்லிற்கு நன்றாகக் கட்டப்பட்டது என்பது நேர் பொருள். திருமாலை முழுமுதலாகக் கொண்டு அவன் திவ்விய குணங்களைப் போற்றும் பிரபந்தங்களின் தொகுதியைத் திவ்வியப் பிரபந்தம் என்று வழங்குவர் வைணவர். திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியின் காலத்திற்குச் சற்று முன்பு (அல்லது உடன் காலத்தில்) அவர் தோன்றிய திருநாரையூருக்கு அருகில் விளங்கும் வீரநாராயணபுரம் என்னும் முதற் பராந்தகன் பெயர்த் தாங்கிய காட்டுமன்னார் கோயிலில் அவதரித்த நாதமுனிகள் என்னும் வைணவக்குரவர் (-ஆசாரியர்) ஆழ்வார் பன்னிருவர் அருளிச் செயல்களையும் தொகுத்தனர். அவர் தொகுத்த பொழுது நாலாயிரம் என்ற கோட்பாடு எழுந்ததாகத் தெரியவில்லை. இதனுள் 24 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. பெரியாழ்வார் அருளிய திருப்பல்லாண்டு முதலாக நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஈறாக இவை அமைவன என்பர் ஒருசாரார். மற்றொரு சாரார் திருப்பல்லாண்டையும் பெரியாழ்வாரின் திருமொழியோடு ஒன்றாகக் கணக்கிட்டு திருவாய் மொழிக்குப்பின்னர், திருவரங்கத்து அமுதனார் பாடிய பிரபந்தக் காயத்திரி எனப் போற்றப்படும் இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்து 24 பிரபந்தங்கள் என்று தொகை கூறுவர். திருமாலையே பாடுவதற்கு முற்பட்ட ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வார் ஒருவர்தான் நம்மாழ்வாரைப் போற்றிக் கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பதினொரு பாடலடங்கிய பிரபந்தத்தினைப் பாடினார். நம்மாழ்வார்க்குப் பின்னர் வைணவத்தத்துவத்தினைத்தருக்க அடிப்படையில் இந்திய நாட்டில் எங்கும் பயணம் சென்று நிலைநாட்டிய சிறப்புக்குரிய

இராமநுசரைப் போற்றித் திருவரங்கத்தமுதனார் பாடிய நூற்றந்தாதியினை நாதமுனிகள் காலத்திற்குப் பின் இருநூறாண்டுகள் கழித்து வந்த வைணவப் பெரியோர் திவ்வியப் பிரபந்தத்தின் இறுதியில் சேர்த்துள்ளனர். இந்நிலையில் ஆழ்வார் பாடல்களை நாலாயிரம் என்று எண்ணும் மரபு தோன்றியிருத்தல் வேண்டும்.

நாலாயிரம் - இருவகைக்கோட்பாடு

நாலாயிரம் என்று தொகை சுட்டுவதில் குறைந்தது இரு கொள்கைகள் காணப்படுகின்றன. ஒரு கருத்தின்படி பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு (12 பாடல்கள்) திருமொழி (461பாடல்கள்), ஆண்டாள் பாடிய திருப்பாவை (30 பாடல்கள்), நாச்சியார் திருமொழி (143 பாடல்கள்), குலசேகரப்பெருமாள் பாடிய பெருமாள் திருமொழி (105 பாடல்கள்), திருமழிசைப் பிரான் அருளிய திருச்சந்த விருத்தம் (120 பாடல்கள்), தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலை (45) திருப்பள்ளியெழுச்சி (10 பாடல்கள்), திருப்பாணாழ்வார் பாடிய அமலனாதிபிரான் (10பாடல்கள்), மதுரகவி ஆழ்வார் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு (11 பாடல்கள்) இவையனைத்தும் சேர்ந்து 947 பாடல்களும் முதலாயிரம் என்று எண்ணப்பட்டன.

இரண்டாம் ஆயிரத்தில் திருமங்கை மன்னன் பாடிய பெரியதிருமொழி (1084 பாடல்கள்), திருக்குறுந்தாண்டகம் (20 பாடல்கள்) திருநெடுந்தாண்டகம் (30பாடல்கள்) இவையனைத்தும் சேர்ந்து 1134 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் ஆயிரத்தில் நம்மாழ்வாரின் திருவாய்மொழி 1102 பாடல்கள் அடங்குவன.

நான்காம் ஆயிரத்தில் இயற்பா என்ற பகுப்பின் கீழ்த் தொகுக்கப்பெற்ற பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் பாடிய முதன் மூன்று திருவந்தாதிகள் (3x100=300பாக்கள்) திருமழிசைப் பிரான் பாடிய நாலாம் திருவந்தாதி ஆகிய நான்முகன் திருவந்தாதி (96 பாக்கள்), நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் (100 பாக்கள்), திருவாசிரியம் (7பாக்கள்), பெரிய திருவந்தாதி (87பாக்கள்), திருமங்கைமன்னனின் திருவெழுகூற்றிருக்கை (1), சிறியதிருமடல் (1), பெரிய திருமடல் (1) - ஆகப்பத்துப் பிரபந்தங்களில் இடம்பெற்ற 593 பாடல்களே அடங்கின. இவற்றுள் சிறிய, பெரிய திருமடல்களில் உள்ள கண்ணிகளைக்கருத்திற்கொண்டு வேதாந்த தேசிகர் முறையே 40+78=118 பாசுரங்களாகக் கணக்கிட்டும் இராமாநுச நூற்றந்தாதியில் உள்ள 108 பாடல்களைச் சேர்த்தும் (591+118+108=817) நாலாம் ஆயிரத்தில் 817 பாடல்கள் உள்ளன என்று எண்ணுதற்கு அவர்தம்

பிரபந்த சாரத்தில் வழிகாட்டினார். இவ்வகையில் வந்த பதிப்புக்களை அடிப்படையாகக் கொண்டது கி.வேங்கடசாமி ரெட்டியாரின் செம்பதிப்பு ஆகும்.

எனவே, இக்கருத்தின்படி முதலாயிரத்தில் 947, இரண்டாம் ஆயிரத்தில் 1134, மூன்றாம் ஆயிரத்தில் 1102, நாலாம்ஆயிரத்தில் 817 – ஆக 4000 பாடல்கள் திவ்வியப்பிரபந்தத்தில் உள்ளன என்பது போதரும்.

மற்றொரு சாராரின் கருத்துப்படி, திருவாய்மொழியினை நாலாம் ஆயிரமாகவும் இயற்பாவை மூன்றாம் ஆயிரமாகவும் எண்ணப்பெறும். முதலிரண்டு ஆயிரங்களிலும் மாற்றம் இல்லை. மயிலை மாதவதாசன் பதிப்பு இக்கருத்துடையார் பதிப்புக்களை அடியொற்றியது. இப்பதிப்பில் இராமாநுசநூற்றந்தாதியைப் பிற்சேர்க்கையாகத் திருவாய் மொழிக்குப் பின்னர் வைத்தனர்.

இசைப்பா, இயற்பா – திவ்வியப் பிரபந்தம்

எனவே, நாதமுனிகள் நாலாயிரம் என்ற தொகை கொடுத்திலர் என்பதும், திவ்வியப் பிரபந்தத்திற்கு அப்பெயர் பின்வந்தோர் சூட்டியது என்பதும் தெளிவு. இசைப்பா, இயற்பா என்ற இருபெரும் பிரிவிற்குள் ஆழ்வார் பாடல்களை அடைவு செய்த சிறப்பு நாதமுனிகளையே சாரும். இவர் கணக்கின்படி முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய் மொழி என்ற மூன்றும் இசைப்பாக்கள். திருவிருத்தம் இசைப்பாவாயினும் இயற்பா என்பதன்கீழ் இடம் பெற்றது. எஞ்சிய பிரபந்தங்கள் யாவும் (11) இயற்பாக்கள். இவற்றிற்குத் திவ்வியப் பிரபந்தம் என்பதே முதலில் இடப்பட்ட பெயர் என்பது தெளிவு.

தேவாரத்திற்குப் பண் வகுக்கப்பட்டிருத்தல் போல், திவ்வியப் பிரபந்தத்திற்கும் பண் வகுப்பட்டுள்ளது. பண் வகுத்தவர் நாதமுனிகளே என்பர். திவ்வியப் பிரபந்தத்தின் சிறப்பினையும் பாடியவரின் மாட்சியையும் புலப்படுத்துதல் தனியன்கள் எனப்படும் பாராட்டுக்கவிகள் தமிழிலும் வடமொழியிலும் புனையப்பட்டுப் பிற்காலச் சான்றோரால் பிரபந்தத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன.

திவ்வியப்பிரபந்தத்தின் தொகுப்பு ஆசிரியர் அடிப்படையிலோ, கால அடிப்படையிலோ, பிரபந்தவகை அடிப்படையிலோ யாப்பு முறையிலோ, அமையவில்லை. எனின், நாதமுனிகள் ஒரு கோட்பாட்டினை [அகவயப்பட்டது - Subjective] அடிப்படையாகக் கொண்டுதான் தொகுப்புப் பணியை முடித்துள்ளார் என்று கருதுதல் சாலும். அஃது இக்காலத்தார்க்குத் தெற்றெனப்புலப்படுவதில்லை.

நம்பியாண்டார் நம்பிக்கும் நாதமுனிகளுக்கும் முறையே சைவரும் வைணவரும் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையவர். ஆழ்வார்களின் வரலாற்றினை விரிவாகப் பாடுவதற்கு ஒரு சேக்கிழாரும், திருமுறைகளின் பொருட்சிறப்பினை நுட்பமாகவும் இலக்கியச் சுவையுடனும் உணர்த்துவதற்கு ஒரு பெரிய வாய்ச்சான் பிள்ளையும் தோன்றிலரே என்று ஆராய்ச்சி அறிஞர் ரா.இராகவையங்கார் இரங்கிக் கூறியுள்ளார்.

ஆழ்வார் என்ற சொல்லிற்குத் திருமாலின் திவ்விய குணங்களில் ஆழ்ந்தவர் என்பது பொருள். திருமாலன்பரையே சுட்டிய இச்சொல் மைத்திரேய ஆழ்வார் எனப் போதிசத்துவரையும், அவிரோதி ஆழ்வார் எனச் சமணச் சான்றோரையும், ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் எனச் சைவநல்லோரையும் காலப்போக்கில் சுட்டியது. திருமுறைகளைப் போலவே திவ்வியப்பிரபந்தமும் தமிழில் மலர்ந்த மூல இலக்கியம். பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங் களுக்குப் பின்னர்த் தமிழகத்தில் வளர்ச்சிபெற்ற திருமால் நெறியின் பல்வகைக் கூறுகளையும் அறிந்துகொள்ளுதற்கு முதன்மை ஆதாரமாக விளங்குவது திவ்வியப் பிரபந்தம். இவ்வரலாற்றில் மயிலை மாதவதாசன் பதிப்புப் பின்பற்றப்படுகின்றது.

ஆழ்வார் பன்னிருவரில் காலத்தினால் முற்பட்ட பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்பார் மூவரையும் முதலாழ்வார்கள் எனக்கூறுதல் மரபு. இவர்கள் கூடக்குறைய, காரைக்காலம்மையார் காலத்தில் வாழ்ந்தவர்களாதல் வேண்டும். அம்மையாரைப்போலவே இவர்களும் வெண்பா யாப்பில் அந்தாதிப்பிரபந்தம் பாடித் திருமாலைப் போற்றினர். கி.பி.5, 6ஆம் நூற்றாண்டில் இவர்கள் வாழ்ந்தவர்கள் என்பது பரிபாடலின் காலம் என்ற நம் ஆய்வு நூலில் விளக்கப்பட்டது (ப.82-88).

முதலாழ்வார் காலத்தினைச் சார்ந்து வாழ்ந்தவர் திருமழிசை ஆழ்வார். இவர் கி.பி.6, 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தொண்டரடிப் பொடி ஆழ்வார் கி.பி.7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர். திருப்பாணாழ்வாரும் இவர்காலம் எனலாம். பெரியாழ்வாரும் ஆண்டாளும் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விளங்கியவர்கள் (கி.பி.765-கி.பி.790). இரண்டாம் நந்திவர்மன் காலத்தவர் (கி.பி.731-795) திருமங்கையாழ்வார். குலசேகரர் கி.பி.9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், நம்மாழ்வாரும் அவர் சீடர் மதுரகவியும் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் வாழ்ந்தவர்கள். இங்குக் கூறப்பெற்ற காலக் கணிப்பு அறிஞர் பலரின் தெளிந்த முடிவுடன் ஒட்டியது.

பன்னிரு ஆழ்வார்களையும் எளிதில் நினைவில் நிறுத்தும் வகையில் தொகைவகை செய்தல் கூடும். முதலாழ்வார்களும் திருமழிசை யாழ்வாரும் கால அடிப்படையில் ஏனைய எண்மருக்கும் முற்பட்டவர்கள். தொண்டுநிலையில் ஒரு காலத்தவர் தொண்டரப்பொடியும் திருப்பாணநாதனும் ஆவர். தந்தைமகள் என்ற வகையில் பெரியாழ்வாரும் ஆண்டாளும்; அரசர் என்ற நிலையில் திருமங்கை யாழ்வரும் குலசேகரரும்; ஆசிரியர் மாணவர் என்ற முறையில் நம்மாழ்வாரும் மதுரகவியும் எண்ணிப்பார்த்தற்கு உரியர்.

சைவத்திற்குக் காரைக்காலம்மையாரைப்போல் வைணவத்திற்கு ஆண்டாள் உள்ளனர். நாயன்மார்களில் ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் ஆகிய அரசர்கள் பாடியிருத்தல்போல் ஆழ்வார்களில் திருமங்கைமன்னன், குலசேகரர் திகழ்கின்றனர். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய சேந்தனாரைப்போல் திருப்பாண நாதன் நாலாயிரத்தில் பாடியுள்ளார். பல இலக்கிய வகைகளும், தொடர்களும், யாப்பும், மொழி நடையும் இவர்தம் படைப்புக்களில் காணப்படும் பொதுக் கூறுகள் ஆகும். இவை யாவும் இவர்கள் வாழ்ந்த காலத்துத் தமிழகத்தில் வழங்கி வந்த தமிழ் மொழியின் தன்மையினை உணர்த்தும் பொதுப்பண்புகள் எனலாம்.

புறச்சமயத்தார்களைக் கண்டிப்பதில் திருஞானசம்பந்தருக்கும் சுந்தரருக்கும் ஒருபுடை ஒப்பாகத் தொண்டரடிப் பொடியையும் திருமங்கையாழ்வரையும் கூறலாம். பரசமயகோளரி என்று சம்பந்தர் பாராட்டப்படுதல்போல், மங்கைமன்னன் பரகாலன் எனப்புகழப்படுகிறார். இருவரும் அக்கம்பக்கத்து ஊரினர். காலத்தால் பின்னவர் நூறாண்டுக்கு மேல் பிற்பட்டவர். என்றாலும் திவ்வியப் பிரபந்தத்தைவிட, திருமுறைகளில் குறிப்பாகத் திருஞானசம்பந்தரின் பாடல்களில்தான் புறச்சமயக் கண்டனம் கூடுதலாகக் காணப்படுகின்றது. பத்தி இலக்கியத்தின் தளபதியாகத் திகழ்ந்த சம்பந்தரும் அப்பரும் தொண்டர் கூட்டம் புடைசூழச் சிற்றூர், பேரூர், சேய்மை, அண்மை என்று பாராது தலயாத்திரை மேற்கொண்டு பண்ணார்ந்த பதிகம்பாடிப் பாமரர் உள்ளத்திலும் பரவசம் ஊட்டி இறைநெறியைக் காத்த அளவிற்கு, ஆழ்வார்கள் தம் அடியார் கூட்டத்துடன் ஊர் ஊராகச் சென்று இயக்கம் நடத்தினரா என்பது புலனாகவில்லை. தேவார மூவரும் நிகழ்த்திய பல்வகை அற்புதங்களுக்கு ஒப்பாக ஆழ்வார்கள் நிகழ்த்தினரா என்பதும் புரியவில்லை. நாயன்மார் வரலாற்றினை விரித்துக் கூறும் பெரியபுராணம் போன்று, ஆழ்வார்களின் பத்தி இயக்கத்தினைப் பாரித்துப் பேசும் வரலாற்றுக் காப்பியம் எழவில்லை. திவ்விசூரி சரிதைகள், குருபரம்பரை போன்ற நூல்களினால் ஓரளவே உணரமுடிகிறது. எங்ஙனமாயினும், தமிழர்தம் வாழ்வியல், சமயம்,

மொழி, இலக்கியம், கலை போன்ற துறைகளில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றியுள்ள பெரும்பணி சரித்திர ஆசிரியர்களால் மதிப்பிடப்பெற்றுள்ளது.

இப்பின்புலத்துடன் ஆழ்வார் பன்னிருவரின் திருமொழிகளின் அமைப்பினையும் வனப்பினையும் சுருக்க விளக்கமாகக் காண்போம்.

முதலாழ்வார் அருளிச்செயல்கள்

பொய்கையாழ்வார் காஞ்சிமாநகரில் திருவெஃகா என்னும் இடத்தில் தோன்றியவர். ஐப்பசித்திங்கள் திருவோணம் இவர் பிறந்தநாள். இவர் திருமாலிற்குரிய பாஞ்ச சன்னியம் என்னும் சங்கின் அமிசமாகத் தோன்றியவர். பூதத்தாழ்வார் கடல்மல்லையில் ஐப்பசி அவிட்டநாளில் திருமாலுக்குரிய கதாயுதத்தின் அமிசமாக அவதரித்தவர். பேயாழ்வார் திருமயிலையில் ஐப்பசித் சதயத்தில் திருமாலுக்குரிய நாந்தகம் என்னும் வாளின் அமிசமாகத் தோன்றியவர். இங்ஙனம் இம்மூவர் வரலாறும் குருபரம்பரையில் கூறப்பட்டது.

ஆழ்வார் பன்னிருவரில் காலத்தால் முற்பட்டவர்களாதலின் இம்மூவரையும் முதலாழ்வார் என்று கூறுவர். உலகியலில் நாட்டமின்றி மூவரும் ஒருவரை ஒருவர் அறியாமல் புனிதப்பயணம் மேற்கொண்டு திருக்கோவலூர் திருமாலைத் தனித்தனியே தரிசித்தனர். அயர்வினால் இரவில் பொய்கையாழ்வார் அவ்வூரில் உள்ள சிறந்த வைணவராகிய மிருகண்டு முனிவரின் இல்லத்தைச் சார்ந்து இடைகழியில் படுத்திருந்தார். சிறிது நேரத்தில் பூதத்தாழ்வாரும் அதே இடத்திற்கு வந்து, 'அடியேனுக்குத் துயில இடம் உண்டோ?' என்று வினவினார். பொய்கையார் "அன்பரீர் இங்கு ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம். வருக" என்று இடந்தந்தனர். பின்னர், பேயார் அதே இடைகழிமுன் வந்து 'துயில இடம் உண்டோ? என்று கேட்டார். பொய்கையார், "அன்பரீர் இவ்விடைகழியில் ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவராயின் நிற்கலாம்; வருக" என்று இயம்பினர். மூவரும் மனம் கலந்து உரையாடிக்கொண்டிருந்த வேளையில், திருமால் அவர்தம் பெருமையினை உலகுக்கு உணர்த்தவும் அவர்களால் பத்திநெறி பரவவும் திருவுள்ளம் கொண்டு இடிமழை பொழியச் செய்து, அவர்கள் அறியாவண்ணம் இடைகழியில் அவர்களுக்கு நடுவே சென்று நெருக்கினார். அம்மூவரும் தமக்குத் தெரியாது தம்மை நெருக்குவது யாராதல் வேண்டும் என்பதைச் சிந்தித்தனர். முதலிருவரும் ஞானம் எனும் ஒளிவிளக்கினை ஏற்றி உள்ளம் எனும் விழியைத் திறந்து உற்றுநோக்க, திருவுறை மார்பன் காட்சிதந்தான். அவ்வரிய தரிசனத்தை நோக்கிய பேயாழ்வாரும், 'திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்' என்று பாடிப் பரவசம் அடைந்தார்.

இம்மூவரும் இங்ஙனம் ஞானத்தில் நின்று பாடிய வெண்பாக்கள் முதல்திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என்று வழங்கிவருகின்றன. இது வைணவ மரபு. இவ்வற்புத நிகழ்ச்சிக்கு,

"நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறுத்த பண்பாளா! - வாசல்
கடைகழியா உள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி இனி" [I . 86]

எனவரும் பொய்கையாழ்வார் பாடலை அகச்சான்றாகக் கூறுவர்.

முதலாழ்வார் பாடல்களில் காணப்படும் முக்கியப்பண்பு சமயப்பொறை. அரியும் சிவனும் ஒருவரே என்ற கருத்து இவர்தம் அந்தாதிகளில் காணப்படுதல் சிறப்பாகக் குறித்தற்கு உரியது. பின்வந்த ஆழ்வார்களிடம் இந்தப்பண்பு புலப்படாமல் போயிற்று.

முதல்திருவந்தாதியில்,

"அரன்நா ரணன் நாமம்; ஆன்விடைபுள் ஊர்தி;
உரைநூல் மறை; உறையும் கோயில் - வரை, நீர்
கருமம் அழிப்(பு) அளிப்(பு); கையதுவேல் நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று" [I 5].

எனவரும் பாடலில் பரம்பொருளின் பெயர், ஊர்தி, நூல், கோயில், தொழில், கருவி, நிறம் என்ற ஏழினையும் திட்பமாகவும் நுட்பமாகவும் கூறுதல் காணத்தக்கது. இறைவனின் திருப்பெயர் அரன்(-சிவன்), நாரணன் (-திருமால்). அவன் வாகனம் காளை, கருடன்; மக்கள் உய்யும் பொருட்டுக் குருவுருத்தாங்கி வெளிப்படுத்திய நூல்கள். ஆகமம், வேதம். மலையும் பாற்கடலும் இறைவனின் இருப்பிடம். அழித்தல்,அளித்தல் அவன் தொழில். தீயோரைத் திருத்துதற்கு ஏந்திய படைக்கலன் மூவிலைவேல் (-சூலம்), சக்கரம். அவன் நிறம் சிவப்பும் கறுப்பும். தன்மை நவிற்சியணி அமைய அமைந்த இப்பாடலில் வினைச் சொற்களே இன்றித் தொடரமைப்பு வருதல் தனிச்சிறப்பு. சிவபிரானை முதலிற்சொல்லி, திருமாலை அடுத்துச்சொல்லி இருபெரும் கடவுளும் ஒருவரே என்று மாந்தர்க்கு அறிவுறுத்தும் திறம் அறிந்தின்புறத்தக்கது. பொய்கையாரின் மற்றொரு பாடல்:

"ஏற்றான்புள் ஊர்ந்தான் எயில்எரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் - கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு" [I 74].

சிவன், மால் இருவரின் ஊர்திகள் முதலில் சுட்டப்பட்டன. பின் முப்புரம் எரித்தமை, இரணியன் மார்பிடந்தமை என்னும் வீரச் செயல்கள் கூறப்பட்டன. பின்னர், இருவரின் திருமேனி அழகு இடம் பெற்றது. நீறுபூசியவன் ஒருவன். நீலமணி வண்ணன் ஒருவன். உடம்பின் ஒரு பகுதியில் மலைமங்கையினை உடையன் முன்னவன். பின்னவன் மலர்மகளை உடையவன். முன்னவன் நெடுஞ்சடையன்; பின்னவன் நீள்முடியன். ஒருவன் கங்கையான்; இன்னொருவன் கழலணிந்தவன். உயிர், உலகு - அனைத்தையும் காவல் பூண்ட இறைவன் இருவகையாக இலங்கினும் ஒருவரே.

பேயாழ்வாரின் பாடலிலும் இப்படி ஓர் உயரிய இறைக் கோட்பாடு காணப்படுகின்றது. திருவேங்கடத்தில் நின்ற கோலத்தில் திகழும் பெருமானை அவர் அரியும் அரனுமாகவே காண்கின்றார். அவர் பாடலைப் பார்ப்போம்.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்கைக்(கு)
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து" [III 63].

இப்பாடலிலும் முதலில் சிவபரம்பொருளையும் அடுத்துத் திருமாலையும் சிறப்பித்துப் போற்றுதல் நோக்கத்தக்கது. **இத்தகைய பொதுநோக்கு காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியிலும் காணலாம்** (41).

முதலிரண்டு ஆழ்வார்களும் ஞான விளக்கில் திருமாலைக் கண்டு போற்றிய அனுபவங்களைக் கூறும் முதற் பாடல்கள் உருவக அணியுடன் பொலிவுறுவன.

முதலில் பொய்கையாழ்வார் பாடலைப் பார்ப்போம்:

"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யான்அடிக்கே சூட்டினேன்சொல் மாலை
இடராழி நீங்குகவே என்று" [I.1]

சர்வ வியாபகியாகவுள்ள ஒப்பற்ற இறைவனை ஒரு சிறு கருவறைக்குள் வைத்துச் சிறிய அகல் விளக்கு ஏற்றி வழிபடுதலை உணர்வு விரிந்த அவர் உள்ளம் நாடவில்லை. பரந்த இந்த உலகமே அகலாக, அதனுள் ஊற்றப் பெறும் நெய்யே கடலாக, அதில் சுடர்விடும் விளக்குக் கதிரவனாக, சொல்லால் புனையப்பெறும்

பாமாலையினைச் சூட்டி உலக உயிர்களின் துயர்க்கடல் வற்றும்படி வேண்டுகின்றார்! மிகப்பெரிய அரிய கற்பனை. உயரிய குறிக்கோள் வழிபாடு.

அடுத்து, பூதத்தாழ்வாரின் ஞான விளக்கினை நோக்குவோம்.

“அன்பே தகளியோ ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான் ” [II . 1].

.தடையற்றுப் பொங்கி வழியும் பத்தியே அகலாகவும், ஆர்வப் பெருக்கே அதிலிடும் நெய்யாகவும், இறையின்பம் கருதி உருகும் உள்ளமே திரியாகவும் வைத்து ஞான விளக்கினை ஏற்றி நாராயண மூர்த்திக்கு ஞானத்தமிழினால் வழிபாடு புரிகின்றார் பூதத்தார். அப்பர் பெருமானும், ‘காயமே கோயிலாக’ எனவரும் பாடலில் இத்தகை ஞான பூசையினைக் குறித்துள்ளார்.

பூதத்தார் தன்னைப் பெருந்தமிழன்னெனப் பெருமைபடப் பேசுகிறார். காரணம் எம்பெருமான் திருவடிக்கு இருந்தமிழ் நன்மாலை சூட்டியதே [II 74]. இப்பாடலில் ‘யானே தவம்செய்தேன்’ எனக் கூறும் பகுதி, அற்புதத்திருவந்தாதியில், ‘யானே தவம் உடையேன்’ (7) எனவரும் காரைக்காலம்மையாரின் பாடலுடன் ஒப்பிடத்தக்கது. ஞானிகளின் அனுபவ மொழிகளில் காணப்படும் ஒருமைப்பாட்டிற்கு இவை சான்று.

அணிநலம் சிறக்கவும் ஆழ்வார் பாடியுள்ளனர். பொய்கையாரின் பின்வரும் பாடலில் நிரல்நிறை அணி நிறைந்துள்ளது:

அரவம் அடல்வேழம் ஆன்குருந்தம் புள்வாய்
குரவை குடம் முலைமல் குன்றம் - கரவின்றி
விட்(டு) இறுத்து மேய்த்(து) ஒசித்துக் கீண்டு கோத்(து) ஆடி
உண்(டு)
அட்(டு) எடுத்த செங்கண் அவன் [I. 54].

இப்பாடலில் கண்ணனின் பத்துத்தீரச் செயல்கள் குறிக்கப்பட்டன. அரவம் முதல் குன்றம் முடிய, பத்துப் பெயர்ச்சொற்களினை வரிசையாக நிறுத்தி, நிரல் நிறையே அவற்றுடன் இயைபுடைய வினை நிகழ்வுகளை விட்டு முதல் எடுத்துவரைத் தொடுத்துள்ள அழகு காணத்தக்கது. 1. அரவம்விட்டு என்பது காளிய நாகத்தை அடர்த்தது. 2. அடல்வேழம் இறுத்து என்பது தாக்கவந்த குவலயாபீடம் என்ற யானையினை அழித்தது. 3. ஆன்மேய்த்து என்பது ஆனிரையை மேய்த்தது. 4. குருந்தம் ஒசித்து

என்றது அசுரனால் ஆவேசிக்கப்பட்ட குருந்தத்தை அழித்தது. அன்றி யமுனைத்ததுறையில் நீராடும் கோபியர்க்குக் குருந்த மரத்தின் கிளையை வளைத்துத்தந்து அதில் அவர்கள் வைத்திருந்த ஆடையைப் பெறச்செய்தது. 5. புள் வாய் கீண்டது - புள் உருவில் வந்த பகாசுரனின் வாயைப் பிளந்தது. 6. குரவை கோத்தது - ஆய்ச்சியருடன் கைகோத்துக் குரவைக் கூத்தாடியது. 7. குடம் ஆடி - குடக்கூத்து ஆடியது. 8. முலைஉண்டு - வஞ்சகியாகிய பூதனையின் முலையினை உயிரோடும் உறிஞ்சியது 9. மல் அட்டு - மல்லர்களை அழித்தது. 10. குன்றம் எடுத்தது - இந்திரன் இடிமழை பெய்யச் செய்தபொழுது ஆநிரைகளையும் ஆயர்களையும் காக்கும் பொருட்டுக் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தது.

இங்ஙனம் அரியகற்பனைத் திறன்மிக்க பாடல்களைப்பத்திப் பரவசத்துடன் பாடுதலில் இவர்கள் வல்லவர்கள். பூதத்தாழ்வாரின் கற்பனைத்திறத்திற்கு ஒரு பாடல் காண்போம்.

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை [II 75].

திருவேங்கடத்தில் திகழும் இயற்கைக்காட்சியை இப்பாடல் புனைந்து போற்றுகின்றது. மதநீர்பொழியும் களிறு, அன்பிற் சிறந்த தன்பிடிக்கு இளைய மூங்கில் குருத்தினை வளைத்தெடுத்துத் தேனில் கலந்து உண்பிக்கும் திருவேங்கடம் நீலவண்ணன் மலை காண்பீராக! இப்பாடலின் குறிப்புப் பொருள்: பிராட்டியை எம்பெருமான் உவப்பிக்கின்றான். பிராட்டியின் வாயிலாகவே அன்பர்களுக்கு அவன் அருளைப் பொழிகின்றான்!

திருவேங்கடத்தின் மற்றொரு காட்சியைப் பேயாழ்வார் பாடுகின்றார்:

"தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி - விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே மேல் ஒருநாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு" [III 58]

மலைப்பாறையின்மேல் விளையாடும் பெண்குரங்கு தன் அன்புடைய கடுவனைப்பார்த்து, தன் முகம் பார்த்து மகிழ்தற்குக் கண்ணாடி கொண்டுவந்து தரும்படி கேட்பது போல் வானூரும் முழுத்திங்களைப் பறித்தளிக்கும்படி கேட்கின்றது!

இத்தகைய பாடல்களைப் படிக்கும்பொழுது முத்தொள்ளாயிரம், ஈங்கோய்மலை எழுபது ஆகியவற்றில் உள்ள வெண்பாக்களின்

காட்சிகள் கண்முன் தோன்றுகின்றன. பத்தியைப் போலவே, இயற்கையின் அருமைக் காட்சிகள் பாவலர் உள்ளத்தில் படிந்திருக்கப் பார்க்கிறோம். புறச்சமயங்களைப் பற்றிய வெறுப்புக் குறிப்பு முதலாழ்வார் பாடல்களிலும் அவர்தம் காலத்தவராகிய காரைக்காலம்மையார் பாக்களிலும் காணப் படவில்லை எனப்து ஒரு பொதுத்தன்மை.

இனி, திருமழிசை யாழ்வாரின் படைப்புக்களைச் சிறிது நோக்குவோம்.

திருமழிசையாழ்வார்

இவர் தொண்டை நாட்டில் திருமழிசை என்னும் பதியில் தோன்றியவர். முதலாழ்வார்கள் இவரைத் திருவல்லிக்கேணியில் சந்தித்தாக ஒரு செய்தி கூறப்படுவதால், அவர்கள் காலத்திலும் பின்னரும் இவர் இருந்தவர் எனலாம். இவர் பாடியவை நான்முகன் திருவந்தாதியும் திருச்சந்த விருத்தமும் ஆகிய இரு பிரபந்தங்களே. இவற்றுள் முன்னது மூன்றாம் ஆயிரத்துள்ளும் பின்னது முதலாயிரத் துள்ளும் தொகுக்கப்பட்டிருத்தலின், தொகை செய்தவர்கள் ஆசிரியர் அடிப்படையினைக் கவனிக்கவில்லை என்று தோன்றுகின்றது.

முதலில், நான்முகன் திருவந்தாதியைப் பார்ப்போம். முதலாழ்வார்களின் மூன்று அந்தாதிகளுக்குப்பின் இதுவைக்கப் பட்டுள்ளது. இதனுள் 96 நேரிசை வெண்பாக்களே உள்ளன. மண்டலித்து முடிதலின், இவ்வளவே பாடல் தொகை எனக் கருத வேண்டியுள்ளது. இவ்வாழ்வார் தீவிர திருமால் அன்பர். எனவேதான், 'மறந்தும் புறந்தொழா மாந்தர்' (68) என்கிறார். 'நாக்கொண்டு மானிடம் பாடேன்' (75) என்று முழங்குகின்றார். தமிழ்ப்பற்று மிக்கவர். "நற்றமிழை வித்திஎன் உள்ளத்தை நீ விளைத்தாய், கற்றமொழி யாகிக்கலந்து" (8) எனப் பாடுகின்றார். புறச்சமயங்களை இவர் நகைத்துப் பேசுகின்றார்:

"அறியார் சமணர்; அயத்தார் பவுத்தர்;
சிறியார் சிவப்பட்டார் செப்பில் - வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்
ஈனவரே ஆதலால் இன்று" (6)

எனவே, சமணம், பௌத்தம், சைவம் மூன்றும் ஓங்கியிருந்த கி.பி.6, 7ஆம் நூற்றாண்டைய சமயச்சூழலை இப்பாடலில் காண்கிறோம்.

இவர் பாடிய திருச்சந்தவிருத்தம் 120 பாடல்களைக் கொண்டது. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கந்துகவரிப்பாட்டின் சந்தமும் சீவக சிந்தாமணியில் விமலையார் இலம்பகத்தில் இடம்பெறும் பந்தடி சந்தமும் சித்தர் சிவவாக்கியரின் சந்தமும் போல் திருமழிசையாரின்

சந்தம் அமைந்துள்ளது. நேரசையில் தொடங்கும் சந்தப் பாடலில் முதல் ஆறு சீர்களும் தேமாக்களும் கடைச்சீர் கூவிளமுமாய்க் கொள்ளத்தகும். அல்லது வண்ண இலக்கணப்படி அலகிடின், தான சந்தம் ஆறும், தந்தனா சந்தம் ஒன்றும் ஆக ஏழு சீர்கள் அடிதொறும் பயில்வன. கட்டளையடியாக அமையும் இப்பாடலில் ஒற்றுநீக்கி 15 எழுத்துக்கள் வந்தன. நிரையசையில் தொடங்கின் முதல்சீர் மட்டும் 'தனதா', 'தனத' 'தனந்த' எனவருதலின் ஓரெழுத்து மிகுதியாக வரும். இனிய ஓசை நலம் மிக்க இப்பாடல்கள் பயில்வார்க்கு இன்பம் பயப்பன.

எ.டு.

1. **நன்றி ருந்து யோக நீதி நண்ணு வார்கள் சிந்தையுள்**
   சென்றி ருந்து தீவி னைகள் தீர்த்த தேவ தேவனே!
   குன்றி ருந்த மாட நீடு பாட கத்தும் ஊரகத்தும்
   நின்றி ருந்து வெஃக ணைக்கி டந்த தென்ன நீர்மையே?

இப்பாடலில் அடிதொறும் 15 எழுத்துப்பயின்றுள்ளது. யோகப் பயிற்சியும் அறவாழ்வும் உடையவர்களின் மனத்தைப்பற்றிய தீவினைகளை இறைவன் போக்கும் அருளாளன் என்ற கருத்து இடம்பெற்றது. பின்னிரு அடிகளிலும் திருமால் கோயில் கொண்ட திவ்வியதேசங்கள் சுட்டப்பட்டன. மூன்றாம் அடியில் 'நீடு' என்ற சொல்லின் குற்றியலுகரம் அலகுபெறவில்லை.

எ.டு

2. **குலங்க ளாய ஈரி ரண்டில் ஒன்றி லும்பி றந்திலேன்**
   நலங்க ளாய நற்க லைகள் நாவிலும்ந வின்றிலேன்
   புலன்கள் ஐந்தும் வென்றி லேன்பொ றியிலேன்பு னிதநின்
   இலங்கு பாதம் அன்றி மற்றோர் பற்றி லேன்எம் ஈசனே.

(90)

இப்பாடலில் அடிதொறும் 16 எழுத்துப் பயின்றது. நற்குடிப்பிறப்பும், பல்கலைப் படிப்பும், ஐம்புல வென்றியும் நல்லூழ் முறையும் இல்லை எனினும், இறைவனிடம் கொண்ட எல்லையில்லாத பத்தியினால் ஈடேறலாம் என்ற கருத்து இப்பாடலில் இடம் பெற்றது. 'ஈசன்' என்ற சொல்லிற்குச் செல்வன், ஆள்பவன் என்பது வேர்ப்பொருள். இச்சொல் சிவபிரானுக்கும் அருகனுக்கும் கூட உரியதாய் இலக்கியங்களில் வழங்குதல் சுட்டத்தக்கது.

இனி, தொண்டரடிப் பொடி ஆழ்வாரின் பிரபந்தங்களைப்பற்றிச் சிறிது காண்போம்.

தொண்டரடிப் பொடி ஆழ்வார்

இப்பெரியார் திருமண்டங்குடியில் அந்தணர் மரபில் தோன்றியவர். விப்பிரநாராயணர் என்பது இயற்பெயர். திருவரங்கப் பெருமானிடம் ஈடுபாடு கொண்டு நந்தவனம் அமைத்துத் திருமாலை தொடுத்து வழங்கிவந்தவர். இளமையில் 'மாதரார் கயற்கண் என்னும் வலையுட்பட்டு அழுந்தியவர்". திருவரங்கனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றவர். இவர் திருமாலுக்கு அன்றி அவன் தொண்டர்க்கும் அடியவராயிருந்தமை பற்றிப் பணிவுதோன்ற தொண்டரடிப்பொடி எனப் பெயர் பூண்டார். அப்பர் பெருமான் "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" எனப் பாடிய பகுதி இங்கு எண்ணத் தக்கது. இவர் அருளியவை திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் இருபிரபந்தங்கள்.

திருமாலை 45 அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களினால் அமைந்த பாமாலை ஆகும். அரங்கப் பெருமானையே போற்றும் உருக்கமும் உறுதியும் வாய்ந்த பிரபந்தம். இதனுள்,

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போல் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" (2)

என்ற பாடல் மறுமைப்பேறுகளையும் மறுத்துத் திருவரங்கனுக்கு நாமசெபம் செய்து கொண்டிருக்கும் வாழ்வே போதும் என்று அதிதீவிரபத்தியுடன் ஆழ்வார் அறிவித்தல் நோக்கத்தக்கது. இத்தகைய பத்தியினைப் பண்டைய அன்பரும் கொண்டிருந்தனர் என்பதற்கு,

"மாலை மாலை அடியுறை இயைநர்
மேலோர் உறையுளும் வேண்டுநர் யாஅர்" [17:7-8]

எனவரும் பரிபாடற் பகுதி சான்றாகும்.

சமண பௌத்தர்களைக் கடுமையாகச் சாடுவதில் இவர் திருமழிசைப்பிரானையும் திருஞானசம்பந்தரையும் மிஞ்சியவர்.இவர் பாடலைக் காண்போம்:

"வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோயதாகி
குறிப்பெனக்(கு) அடையு மாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகருளானே" (8)

எனவரும் பாடல் அவர்காலத்து நிலவிய புறச்சமயவெறுப்பின் மேல் எல்லையினைப் புலப்படுத்தும். மேலும், 'புலையற மாகி நின்ற

புத்தொடு சமணம் எல்லாம், கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்ப ரோதாம்' (7) என்று வினவுகின்றார். சமயப் பொறை இல்லாத மதப்போர் நடந்த காலத்தில் இவர் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது உறுதி.

'கங்கையிற் புனித மாய காவிரி' என்று போற்றுகின்றார் (23). பிரபத்தி மார்க்கத்தை வலியுறுத்துவது இப்பாடல்:

> **"ஊரிலேன் காணி இல்லை உறவுமற் றொருவர் இல்லை**
> **பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி!**
> **காரொளி வண்ணனே ஓ! கண்ணனே கதறு கின்றேன்**
> **ஆருளர் களைகண் அம்மா! அரங்க மாநகருளானே."** (29)

இவர் பத்தி சாதிபேதங்களைத் தாண்டியது. இழி குலத்தவராகிய திருமாலடியவராயின் **'தொழுவீர், கொடுத்துக் கொள்ளுங்கள்'** என்று இயம்புகின்றார் (42). நான் மறையும் ஆறங்கங்களும் பயின்ற அந்தணராயினும் திருமால் தொண்டரைப் பழிப்பராயின் அவர்களே இழிந்தவர், புலையர் என்று சாதிக்கோட்பாட்டில் ஒரு புதுவிளக்கம் அளிக்கிறார் (43).

இவர் பாடிய திருப்பள்ளியெழுச்சி பத்துப் பாடல்களைக் கொண்டது. அரங்கப் பெருமானைப் பள்ளியெழுப்புவதாக அமைந்துள்ள இப்பிரபந்தம் வைகறைக் காட்சியின் வனப்பினையும் பத்தர் பரந்தாமனை வழிபடப் போந்துள்ள ஆர்வத்தையும் சொல்லித் துயில் உணர்த்துவது. மாணிக்கவாசகர் பாடியுள்ள திருப்பள்ளி யெழுச்சியுடன் ஒப்பிட்டுணர்தற்குரியது. 'துயிலெடை நிலை' என்ற சங்ககால மன்னரை எழுப்புதற்குப் பயன்பட்ட புறத்துறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இறைவனைத் துயிலுணர்த்துதற்கு விரிவாக்கப் பட்டது எனலாம்.

இனி, திருப்பாணாழ்வார் திறம்பற்றிச் சற்று நோக்குவோம்.

திருப்பாணாழ்வார்

இவர் பிறப்பிடம் உறையூர். சைவத்திற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர், நந்தனார், சேந்தனார் போல வைணவத்தில் திருப்பாணாழ்வரும் விளாஞ்சோலைப் பிள்ளை என்னும் வியாக்கியான உரையாசிரியரும் உள்ளனர். இவரும் உபயகாவிரி நடுவே கோயில் கொண்ட அரங்கப் பெருமானுக்கு ஆட்பட்டவர். இவர் கோயிலுக்குள் நுழையாது காவிரியின் தென்கரையில் இருந்துகொண்டே திருவரங்கன் திசையினை நோக்கிச் சேவித்தவர். திருமஞ்சனநீர் முகக்க வரும் உலோகசாரங்கமுனிவரின் உதாசீனத்துக்கு உட்பட்டவர். எனின்,

முனிவரின் கனவில் பெருமாள் தோன்றி, **“நம் அந்தரங்க பத்தனான பாண்பெருமாளை நீசன் என நினையாது உம் தோளில் அவரை நம்பக்கல் சுமந்துவா”** என்று ஆணையிட்டார். பாணநாதன் பணிவுடன் தோளில் இவர்தற்கு இசையாவிடினும், தெய்வக்கட்டளையினை எடுத்துரைத்துச் சாரங்க முனிவர் சுமந்து சென்றார். இதனால் அவருக்கு **முனிவாகனர்** என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அழகிய மணவாளன் திருப்பாணாழ்வாருக்குக் காட்சிதந்தார். பெருமாளின் பேரழகில் மனம்பொருந்திப் பாதாதி கேச வருணனையில் ஈடுபட்டு **‘அமலன் ஆதிபிரான்’** என்ற பிரபந்தத்தினை அருளினார். இதனுள் ஆசிரியத்துறையில் அமைந்த பாடல் ஒன்பதும் கலிவிருத்தம் ஒன்றும் ஆகப் பத்துப் பாசுரங்கள் உள்ளன. முதற்பாடல் வருமாறு:

> ‘அமலன் ஆதிபிரான் அடியார்க்(கு) என்னை ஆட்படுத்த
> விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
> நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள் அரங்கத் தம்மான்திருக்
> கமல பாதம்வந் தென்கண் ணின்உள்ளன ஒக்கின்றதே.“ (1)

அன்னையின் பலஉறுப்புக்களிலும் கவனம் போக்காது தனக்குப் பால் சுரக்கும் கொங்கையில் மட்டுமே நோக்கம் செலுத்தும் குழந்தையினைப் போல, ஆழ்வாரும் தனக்கு அருள் சுரக்கும் அரங்கப் பெருமானின் தாமரை போன்ற திருவடியில் மட்டுமே ஈடுபட்டார் என்று வியாக்கியானகாரர் நயம்பொருந்த விளக்குவர்.

பாதாதிகேசம் என்பது அடிமுதல் முடிவரை உள்ள இறைவனின் அங்கங்களின் அழகினைச் சிறப்பித்துப் பாடும் பிரபந்தம் ஆகும். இப்பனுவல், முதல் பாடலின் முதல் தொடரால் பெயர்பெற்றது. நாலாயிரத்தில் பத்துப்பாடல் மட்டுமே பாடியிருப்பினும், எண்ணிக்கையினைக் கருதாது பிரபந்தத்தின் மாட்சிகளையும் ஆழ்வாரின் பத்தி மேம்பாட்டினையும் போற்றி நாதமுனிகள் அமலனாதிபிரானை முதலாயிரத்தில் தொகுத்தனர்.

இனி, பெரியாழ்வாரின் அருளிச் செயல்கள் குறித்துக் காண்போம்.

பெரியாழ்வாரின் அருளிச் செயல்கள்

இவர் பரமவைணவன் ஆகிய நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி.765-790) காலத்தில் வாழ்ந்தவர். திருவில்லிப்புத்தூரில் வேயர் குலத்தில் தோன்றியவர். விட்டுணுசித்தர் என்பது இயற்பெயர். இவரைக் கருடாழ்வார் ஆகிய பெரிய திருவடியின் அவதாரமாகப் போற்றுவர். பாண்டிய வேந்தன் வேண்டுகோளுக்கு இணங்கச் சமயவாதிகளை சொற்போரில் வென்று பொற்கிழியும், பட்டர்பிரான் (-பண்டிதர்க்குத்

தலைவன்) என்ற சிறப்புப்பெயரும் பெற்றவர். அரசன் இவரை யானைமீது இருத்தி நகர்வலம் செய்வித்தான். அப்போது திருமாலும் பிராட்டியும் கருடன் மேல் ஆரோகித்துவந்து காட்சி கொடுத்தார். காலம் என்னும் தத்துவம் காணப்படாத பரமபதத்தில் வீற்றிருக்கும் எம்பெருமான் காலம் நடையாடும் நிலவுலகில் போந்து காட்சிதந்து நிற்கின்றானே! இவனுக்கு எந்தத்தீங்கும் வந்துவிடக் கூடாது என்ற பயபத்தியில் யானையின் மணிகளையே தாளமாகக் கொண்டு திருப்பல்லாண்டு பாடிப்போற்றினர் என்பது வரலாறு. மற்ற ஆழ்வார்கள் ஆர்வத்தளவு பாடினர். எனின் வில்லிப்புத்தூர் பட்டர் பிரானோ பரிவாலே பல்லாண்டு பாடிய காரணத்தினால் **பெரியாழ்வர்** என்னும் சிறப்புப்பெயர் பெற்றார் என்று மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் குறித்துள்ளார். பிறந்த ஊரை வைத்து இவருக்கு வில்லிப்புத்தூர் ஆழ்வார், புதுவைப்பட்டன், புதுவைமன்னன் என்ற பெயர்களும் வழங்குகின்றன. தாகம் எடுத்தவன் தண்ணீர் தண்ணீர் என்று ஒழியாது கூறுவதுபோல், பெரியாழ்வாரும் ஆத்மதாகத்தாலும் சௌந்தர்யதாகத்தாலும்.,

> **“பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பல்கோடி நூறாயிரம்**
> **மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன் செவ்வடிசெவ்வி**
> **திருக்காப்பு”**

என்று தொடங்கித் திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தத்தினைப் பாடியருளினார். இதனுள் முதல்பாடல் குறள் வெந்செந்துறையும் எஞ்சிய பதினொரு பாடல்களும் அறுசீர் ஆசிரிய விருத்தமாகவும் அமைந்துள்ளன. திவ்விய தேசங்களிலும் வைணவ அன்பர்களின் நித்திய வழிபாட்டிலும் திருப்பல்லாண்டு அனுசந்தானம் செய்யப் பெறுதல் காணலாம்.

பெரியாழ்வார் கண்ணன் அவதாரத்தில் கூடுதலாக ஈடுபட்டவர். இவர் அருளிய பாசுரங்கள் எல்லாம் **பெரியாழ்வார் திருமொழி** என்ற பெயரில் வழங்கி வருகின்றன. இவர் பாடல்களில் பெரும்பகுதி கண்ணனின் பாலப்பருவச் செயல்களைப் பத்திப்பரவசத்துடன் பிள்ளைத் தமிழாகப் பாடுவதாக விளங்குகின்றது. கண்ணனின் அவதாரச் சிறப்பு, பாதாதிகேச வருணனை, தாலாட்டு, அம்புலிப்பருவம் என்ற வகையில் கண்ணன் பிள்ளைத் தமிழாகவே முதல் பத்தினைப் பாடியுள்ளார். பாட்டியல் வகுத்தவர் கூறும் வரிசைமுறை இதனுள் காணப்படாமைக்குக் காரணம் தொடக்கநிலையில் இவ்வாறு பாடப் பெற்றமையே ஆகும். இலக்கணம் வகுத்தவர் எல்லார்க்கும் பொருந்தக் கூறும் முயற்சியில் கண்ணனுக்கே உரிய சில நிகழ்வுகளை விடுத்து ஏனையவற்றைக் கருத்திற்கொண்டு புதுக் கூறுகள் சில சேர்த்துப் பிள்ளைத்தமிழ்க்கு இலக்கணம் எழுதினர்.

யசோதை நிலையில், பெரியாழ்வார் தன்னைத் தாயாகப் பாவித்து, பரம்பொருளைக் குழந்தைக் கண்ணனாகச் சுவைத்து மேலும் பல நிகழ்வுகளைப் பாடியுள்ளார். **புறம்புல்கல், பூச்சி காட்டுதல், முலை உண்ணல், காதுகுத்தல், நீராடுதல், குழல்வாரக் காக்கையினை அழைத்தல், கோல் கொண்டுவாவெனல், பூச்சூட்டல், காப்பிடல், பாலக்கிரீடை, அயலகத்தார் முறைப்பாடு** இங்ஙனம் மேலும் பற்பல கோலங்களில் கண்ணனின் அழகினையும், விளையாட்டையும் சுவைத்துப் பாடியுள்ளார். கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்து ஆநிரைகளையும் ஆயர்களையும் புரந்த அருள்மாட்சியை ஈடுபட்டுப் போற்றினர் (264-274). முல்லை நிலத்துக்கு முதலுரிமை பூண்ட கண்ணனின் குழல் ஓசையின் இனிமையினையும் புனைந்துள்ளார் (280-2). கண்ணனிடம் காதல்கொண்டு பின்சென்ற மகளைத்தாய் அகவுதல்போல் மதுரபாவத்தில் சில பாடல்களை யாத்தனர் (286-306). **உந்திபறத்தல்** என்னும் நாட்டுப்புற இலக்கிய உத்தியைப் பின்பற்றி 10 பாடல்கள் பாடினார். **திருவாசகத்தில் காணப்படும் உந்திக்கும் இதற்கும் வேறுபாடு உண்டு.** சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளம் இராமாவதாரத்தில் இவருக்குள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்தும் (318-327).

ஒருபத்துப்பாடல் முழுவதும் நாராயணன் திருப்பெயரை மக்களுக்கு இட்டு வழங்கும்படி அறிவுறுத்துகின்றார். அப்பெயரிட்டு அழைக்கும் தாய் நரகம் புகாள் என்கிறார் (381-390). தென்கலை வைணவர் கூறும் **தோஷபோக்கியக் கொள்கைக்கு** இவர் பாடலில் மூலம் காணப்படுகின்றது. சேதநர்களிடம் கொண்ட பரமகருணை காரணமாக அவர்கள் அறிந்தோ அறியாதோ செய்த பாவங்களை எல்லாம் எம்பெருமான் புசித்துவிடுகிறார். தாய்ப்பசு ஈன்ற கன்றின் மேல் உள்ள அழுக்கை எல்லாம் நாவினால் தடவி வழித்துப் புசித்துக் கன்றினைத் தூய்மைப்படுத்தும் செயலை ஸ்ரீவசனபூஷணத்தில் உவமை கூறியுள்ளார் பிள்ளை லோகாசாரியர். பெரியாழ்வார்,

> **"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாள் சிதகு ரைக்குமேல்**
> **என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர்**
> போலும்" (413)

எனவரும் பாடற்பகுதியில் தோஷபோக்கியக் கொள்கையினைக் குறிப்பாகச் சுட்டியுள்ளார். **துப்புடையாரைச் சார்தல் சோர்வில் துணையாவர் என்ற சரணாகதிக்கோட்பாட்டினையும் காண்கிறோம்** (423).

உலகியல் மாந்தர், உறவினர் கடைசிக் காலத்தில் ஒருவர் தேடி வைத்த பொருளின்மேல் காட்டும் அக்கறையினை அவர்

நலத்தில் காட்டார். எனவே, எக்காலத்தும் மனக்கோயிலில் மாதவனை இருத்தித்தியானம் புரிவதுதான் உய்யும் வழி என்று உணர்த்துகின்றார்:

“சோர்வி னால்பொருள் வைத்ததுண் டாகில்
சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து
ஆர்வி னாவிலும் வாய்திற வாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்

மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாத வன்என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்(கு)
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே” (373)

இங்ஙனம் அகப்பூசையை வலியுறுத்தும் பாடல்கள் திருமுறைகளிலும் உள்ளன. எனவே, புறத்தேபுரியும் வழிபாட்டுடன் அகத்தேபுரியும் யோக வழிபாடு சிறந்தது என்பது புலனாகும்.

வைட்டணவன் என்ற சொல்லாட்சி முதன்முதல் பெரியாழ் வார்பாடலில் காணப்படுகிறது (435). இனி, பெரியாழ்வாரின் வளர்ப்புமகளாகப் போற்றப்பெறும் ஆண்டாள் அருளிச் செயல்களைப் பற்றிக் காண்போம்.

ஆண்டாள் அருளிச்செயல்கள்

கோதை என்பது இவர்தம் இயற்பெயர். பெரியாழ்வாரின் வளர்ப்புமகள். ஆடிப்பூரத்தில் அவதரித்தவர். பெரியாழ்வார் வட பெருங்கோயிலுடையானுக்குச் சூட்டுதற்குத் தொடுத்து வைத்திருக்கும் திருமாலையினை அவரில்லாதபொழுது சூடிப்பார்த்துப் பின் திருமாலுக்குக் கொடுத்தபடியால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற பெயர் இவருக்கு உண்டு. இப்பொருண்மையில் தெலுங்கில் கிருஷ்ணதேவராயர் பாடிய இலக்கியமே “ஆமுத்த மால்யதா” என்பதை முன்னரும் குறித்துள்ளோம். திருவரங்கனிடம் எல்லையில்லாத பிரேமை கொண்டு அவரையே தன் மணவாளனாக வரித்துக்கொண்டவர். தன் பத்திப் பெருக்கினாலும் அழகினாலும் அரங்கப்பெருமானின் உள்ளத்தை ஆண்ட காரணத்தினாள் ஆண்டாள் என்ற திருப்பெயரும் அமைந்தது. இவர் அருளிச்செய்தவை திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் ஆகும். இவற்றைப் பயின்று பரவசம் அடைந்த வேதாந்ததேசிகர் “கோதா ஸ்துதி” என்னும் பிரபந்தத்தினை வடமொழியில் பாடிப் பரவினார்.

முதலில் ஆண்டாள் அருளிய திருப்பாவை என்னும் இலக்கியம் குறித்துச் சில கருத்துக்களைக் காண்போம். மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையுடன் இந்நூல் ஒப்பிடுதற்கு உரியது.

கன்னிப் பெண்கள் மார்கழித்திங்களில் பாவை நோன்பு மேற்கொள்ளுவர். அவர்கள் நோன்பின் நோக்கம் இரண்டாகும்: 1. பருவமழை ஒழுங்காகப் பெய்து செந்நெல் விளைந்து, பால்தரும் ஆநிரைச்செல்வம் செழித்து நாடுவளம் பெறுதல் வேண்டும் என்பது முதல் நோக்கம். 2. கண்ணனைத் தலைவனாக அடைந்து அவனுக்குக் கைங்கரியம் புரிதல் வேண்டும் என்பது இரண்டாம் நோக்கம். திருப்பாவையில், **"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்"** என்பது முதல் **"வங்கக் கடல்கடைந்த மாதவனை"** என்பது முடிய முப்பது பாடல்கள் இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பில் பாடப்பெற்றுள்ளன. வைகறையில் பாவைப் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பிப்பின் குழுவாகச் சென்று பின்னைப் பிராட்டியையும் கண்ணனையும் பிறரையும் துயிலெழுப்பும் முறையில் நாடகப்பாங்கில் புனையப்பெற்ற பிரபந்தம் திருப்பாவை. திருமாலை வழிபடுவதால் வினைப் பயன்கள் தீயினில் தூசுபோல் ஒழிந்துபோகும் என்று ஆண்டாள் உறுதிகூறுகின்றார் (478). இப்பனுவலில்,

> **"சிற்றஞ் சிறுகாலை வந்துன்னைச் சேவித்துன்**
> **பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்**
> **பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ**
> **குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது**
> **இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா**
> **எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோ(டு)**
> **உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்**
> **மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"** (29)

என்ற பாடலை விதந்தெடுத்துக்கூறுவர். திருத்தொண்டு செய்வது தவிர மற்றைய ஆசைகள் யாவையும் அகற்றுவதே முடிந்த குறிக்கோள் என்பர். **'சங்கத்தமிழ்மாலை'** என்று திருப்பாவையினை ஆண்டாள் குறித்தல் நோக்கத்தக்கது.

கண்ணனிடத்தில் மையல் கொண்ட தலைவியின் விரகதாபங்களை வெளிப்படுத்தும் வகையில் ஆண்டாள் பாடிய பாசுரங்கள் நாச்சியார் திருமொழி எனப்பெயர்பெற்றது. கண்ணனைப் பெண்கள் தாம் எடுத்த சிற்றிலை சிதையேல் என்று கூறும் பகுதி பிற்காலத்தில் பிள்ளைத் தமிழில் இடம்பெறும் சிற்றில் பருவத்திற்கு மூலமாக அமைந்துள்ளது (514-523). பிரிவாற்றாத தலைவி குயிலை நோக்கிக் **கண்ணன் வரக் கூவாய்** எனவேண்டும் பத்துப் பாடல்களும் (545-521) திருவாசகத்தில் இடம் பெறும் குயிற்பத்தினை நினைவூட்டுவதாகும். மாதவனை மணப்பதாகக்கண்ட கனவினைத் தோழிக்குரைத்தல் சிறந்த தன்னுணர்ச்சிப் பாக்கள் [Lyrics] எனலாம். மாதவன் வாயில் வைத்து ஊதும் பாஞ்சசன்னியத்தை (-வெண்சங்கு) பார்த்து, அதனோடு

தொடர்புடைய தலைவனின் வாயின்மணமும் சுவையும் அறிந்திருப்பதால் தன் அனுபவத்தைக் கூறும்படி நாச்சியார் வினவும் பாடல்கள் அரிய காதல் படைப்புக்கள். ஒரு பாடலை நோக்குவோம்:

"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தான் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண்சங்கே!"
(567)

இனிய கவிதை. ஆண்டாளின் பகவற் காமம் பள்ள மடை என்பர். (மற்றைய ஆழ்வார் நாயகி பாவம் ஏற்றுப்பாடுதலை மேட்டுமடை என்பர்) இயல்பாகவே கண்ணனிடம் காதல் பெருகிப் பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போல் பாயும் பாங்கினை நாச்சியார் திருமொழியில் எங்கும் காணலாம் (504-646). இவர்தம் மேகம் விடுதூது (577-86) தொல்காப்பியர் கூறும் ஒருபாற் கிளவிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இனி, குலசேகரர் அருளிய திருமொழிகளின் அமைப்பினையும் சிறப்பினையும் நோக்குவோம்.

குலசேகரர் அருளிச்செயல்

குலசேகரப் பெருமாள் சேரநாட்டு வேந்தர். அரசச் செல்வத்தைத் துறந்து திருமால் பத்தியில் முழுமையாக ஈடுபட்டு நின்றவர். இவர் பாடியவை பெருமாள் திருமொழி (647-751) எனப் பெயர் பெறும். பெரியாழ்வார் கண்ணன் அவதாரத்தில் ஈடுபாடு கொண்டதுபோல், இவர் இராமன் அவதாரத்தில் பெரிதும் பத்தி கொண்டவர்.

குலசேகரர் தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தில் கோயில் கொண்ட பெருமாளை இராமனாகக் கொண்டு பாடிய பதினொரு பாடல்களும் (741-751) இராமாயணச்சுருக்கம் என்று கூறலாம். "அங்கண்நெடு மதிள்புடைசூழ் அயோத்தி என்னும்" என்று தொடங்குவது இத்திரு மொழி. இராமபிரானுக்குத் தாலாட்டு பாடியுள்ளார். ஒருபாடலைப் பார்ப்போம்:

"மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ." (719)

பின்னர் எழுந்த பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தில் இடம் பெறும் தாலப்பருவத்திற்குரிய மூலமாக இப்பகுதியை எண்ணலாம்.

உய்திபெறுதற்குச் சிறந்த உபாயம் ஆகிய சராணகதி தத்துவத்தினை விளக்குவன திருவேங்கடம், திருவித்துவக்கோடு ஆகிய தலங்களைப் பற்றிய திருமொழிகள். முதலில் திருவேங்கடம் பற்றிய திருமொழி காண்போம்.

திருவேங்கடத்தில் பெருமானைச் சேவை செய்யும் வகையில் ஏதாவதொரு தொடர்பு பெறுதற்கு ஆழ்வார் ஆசைப்படுகிறார். திருவேங்கடத்தில் உள்ள ஏரியில் குருகாகவாவது, சுனையில் மீனாகவாவது பிறப்பதை விழைகின்றார். அங்குள்ள சோலையில் செண்பகமாகவோ, புதராகவோ, குவடாகவோ, காட்டாறாகவோ, நடைப்பாதையாகவோ தான் இருக்கவேண்டும் என்று எண்ணுகின்றார். முடிவில், எல்லோரும் திருக்கோயிலுக்குள் கருவறையில் உள்ள பரந்தாமனைப் பணியச் செல்லுதற்கு வழியில் அமைக்கப்படும் படிக்கல்லாகவாவது தான் இருந்து பாகவதர் பிறர்க்குப் பயன் படுவதுடன் தானும் பெருமாளைப் பார்த்தவண்ணம் எப்போதும் சேவை செய்தல் முடியும் என்று எண்ணுகின்றார். **“......படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே”** (685). இன்னும் திருப்பதியில் கருவறையின் முன்னுள்ள படியினைக் குலசேகரப்படி எனப் பெயரிட்டு வழங்குவர். குலசேகரர் படியாய்க் கிடந்து வேங்கடவனின் பவளவவாயினைக் கண்டு பரவசப்படுவதாக வைணவர் நம்புகின்றனர். அடுத்த பாடலில், **“எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே”** (686) என்று எப்படியாவது ஒரு சம்பந்தம் திருமலையில் வைத்துக் கொள்ளுதலே உய்யும் நெறி என்று உணர்த்துகின்றார்.

வித்துவக்கோடு என்ற சேரநாட்டுத் திவ்வியதேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் வினயமாக அணுகுகின்றார் குலசேகரர். இறைவனுக்கும் உயிருக்கும் இடையேயுள்ள உறவினைப் பலவகையில் சொல்லிப் பார்க்கிறார். தாய்-குழவி, காதலன்-காதலி, கோன்-குடி, மருத்துவன்-பிணியாளன் எனப்பலநிலைகளில் வைத்து இறைவனின் திருவருளைப் பெறுதற்கு ஏக்கற்று நிற்கின்றார். இத்திருமொழியில் முதற்பாடல்:

> **“தருதுயரம் தடாயேல்உன் சரண்அல்லால் சரண்இல்லை**
> **விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்ட டம்மானே!**
> **அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்**
> **அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே”** (688)

எல்லா உறவையும் விட, தாய் என்ற உறவுதான் மேம்பட்டது. ‘பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து’ என்று பாடுவர் மாணிக்கவாசகர். தாய் புறக்கணிப்பினும் வெருட்டினும் குழந்தை தாயினையே அழைத்து ஆறுதல் அடையும் என்ற பத்தி இலக்கியக் கருத்திற்கு மூலமாக,

"தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட்(டு)
அன்னா என்னும் குழவி போல" (குறுந். 397:4-5)

எனவரும் சங்கப் பாடல் திகழ்கின்றது. குலசேகரரின் பாடல்கள் பத்தி ஊற்றாகவும் கவிச்சுவைக் கனியாகவும் இனிப்பன எனலாம்.

இனி, திருமங்கையாழ்வாரின் அருளிச் செயல்கள் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

திருமங்கையாழ்வாரின் பிரபந்தங்கள்

இவர்க்குக் கலியன் என்பது இயற்பெயர். நீலன், கலிகன்றி, பரகாலன் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு. இவர் பிறப்பிடம் திருக்குறையலூர். இவ்வூர் திருவாலிதிருநகரி பகுதியைச் சேர்ந்தது. சீகாழிக்குக் கீழ்பால் உள்ள இச்சிறு நிலப்பகுதியில் இவர் தந்தை சோழ மன்னனுக்குச் சேனைத்தலைவராகத் தொண்டு புரிந்தவர். இவர் கள்வர் குடியைச் சேர்ந்தவர். மங்கைமடம் என்ற ஊரும் திருவாலியைச் சார்ந்தே உள்ளது. எனவே, இப்பகுதிக்குத் தலைவன் என்ற வகையில் மங்கையர்கோன் (4.4.10), மங்கைவேந்தன் (1.3.10) என்று ஆழ்வார் தம்மைச் சொல்லிக்கொள்ளுகின்றார். இவர் குறுநில வேந்தராக விளங்கியவர். குமுதவல்லி என்னும் நங்கையை மணந்து கொண்டு இவர் இல்லறம் புரிந்தவர். மனைவியிடம் கொடுத்த வாக்கின்படி நாள்தோறும் திருமாலடியார் பலருக்கு அமுது வழங்கி வந்தார். பணத்தட்டுப்பாடு வந்ததும், வழிப்பறி செய்தேனும் அன்னம் அளிப்பதைத் தொடர எண்ணினார். திருமால் இவரைத் தடுத்தாட் கொள்ள எண்ணிப் பிராட்டியுடன் மணவாளக் கோலத்தில் இவர் முன்தோன்றினார். ஆழ்வார் அவர்களின் அணி ஆபரணங்களைக் கவர்ந்து ஒரு மூட்டையாகக் கட்டிவைத்தார். பின்னர், காலில் அணிந்துள்ள அறுகாழியையும் பல்லினால் கடித்து எடுக்க முயன்றார். முடியவில்லை. ஆபரண மூட்டையினைத் தூக்க முயன்றும் முடியாத நிலையில், 'நீர் ஏதோ மந்திரம் செய்துவிட்டீர்' என்று நெருக்க, 'அந்த மந்திரத்தை உனக்கும் சொல்லுகிறேன்' எனக்கூறி "ஓம் நமோ நாராயணாய" என்னும் எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்து (பிராட்டியுடன்கூடிய) தன் உண்மை வடிவமும் காட்டி ஆட்கொண்டார் என்பது வரலாறு. மந்திரஞானம் பெற்றதும் 'வாடினேன் வாடி' எனத் தொடங்கும் பத்தினைப் பாடத் தொடங்கினார். சைவர்களுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தைப்போல் வைணவர்க்கு எட்டெழுத்து மந்திரம் சிறப்பு. இந்த ஆழ்வாரின் வாழ்க்கையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் இவரைத் திவ்விய தேசங்கள் பலவற்றுக்கும் சென்று எம்பெருமானைப் பாடிப்பரவசம் அடையச் செய்தது.

இவர் அருளிச்செய்தவை பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல் என்ற ஆறு பிரபந்தங்கள் ஆகும். நம்மாழ்வார் அருளிய நான்கு பிரபந்தங்களையும் வேதமாகக் கொள்ளும் பரம வைணவர்கள் இவ்வாறினையும் வேதத்தின் அங்கமாகக் கருதுவர். எனின், நான்கு, ஆறு என்ற எண் ஒப்புமை தவிர, பொருண்மை அடிப்படையில் ஆழ்வார் இருவரின் அருளிச் செயல்கள் தனித்தன்மை வாய்ந்தவை.

இனி, திருமங்கையாழ்வார் அருளிய பிரபந்தங்கள் பற்றி நிரலே காண்போம்.

1. பெரியதிருமொழி

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரப்பெருமாள் ஆகியோரின் அருளிச் செயல்களைத் **திருமொழி** என்றும் திருமங்கை மன்னனின் அருளிச் செயலைப் **பெரியதிருமொழி** என்றும் நம்மாழ்வாரின் அருளிச் செயலைத் **திருவாய்மொழி** என்றும் வழங்குவர். ஒரு திருமொழி என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது. ஒருபாடல் சில பத்துக்களில் கூடுதல் கூடும். பெரியதிருமொழியில் பதினோரு பத்துக்கள் அடங்கியுள்ளன. பத்தாம் பத்தில் ஏழாம் திருமொழியில் மட்டும் 14 பாடல்கள் உள்ளன. பதினோராம் பத்தில் எட்டுத் திருமொழிகள் மட்டுமே காணப்படுகின்றன.

திருமங்கையாழ்வார் திவ்விய தேசங்கள் 108-இல் 86 தலங்களை மங்களா சாசனம் செய்துள்ளார். எனவே திருமாலின் ஐவகைத் திருமேனிகளில் அர்ச்சாவதாரத்திற்கு இவர் கூடுதலான முதன்மை தந்துள்ளார் எனலாம். பெரிய திருமொழியின் முதற்பத்து எட்டெழுத்து மந்திரத்தின் மாட்சியைப் புலப்படுத்தும் "வாடினேன்........ நாடினேன் நாடி நான்கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்" (948) என்பதைத் தொடக்கமாகக் கொண்டது. நாரங்களுக்கு (-உயிர்களுக்கு) அயனமாக (வாழ்விடமாக) இருப்பவன், நாரங்களை அயனமாக வுடையவன் என்ற பொருளைத் தரும் நாராயண மந்திரத்தின் உட்பொருள் **அவனுள் உலகம் உள்ளது, உலகத்துள் அவன் உள்ளான்** என்ற கருத்தினைப் புலப்படுத்துவது. பின்வரும் பாடல் வைணவர்களால் நாள்தோறும் அனுசந்திக்கப் படுவது:

"குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்(பு) அருளும் அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாரா யணா
என்னும் நாமம்" (956)

சைவர்களுக்கு நமச்சிவாயத்திருப்பதிகம் போல் வைணவர்கட்கு இத்திருமொழி வாழ்க்கையில் நம்பிக்கையினைத் தருவது.

இவர்பாடல்களிலும் சாக்கியர் சமணர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன (1052-1054; 1405; 1826, 2050) எனின், தொண்டரடிப்பொடி ஆழ்வார் அளவிற்குக் கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை.

நாயகி பாவத்தில் திருவாலி நாயகனுக்குப்பிரிவாற்றாமை புலப்படுத்தும் பத்துப்பாடல்கள் சங்க அகத்திணை மரபினைத் தழுவியுரைக்கப்பட்டன. ஒருபாடல் நோக்குவோம்.

“தூவிரிய மலர்உழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரிய மது நுகரும் பொறிவரிய சிறுவண்டே!
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரிவெஞ் சிலையானுக்(கு) என்நிலைமை உரையாயே” (1198)

தூது அனுப்பும் பரகால நாயகி வண்டினைத் தன் துணையோடும் சென்று நாயகனுக்குத் தான்படும் துயரைக் கூறச்சொல்லும் பாங்கு கருதற்பாலது. வண்டு இணையோடு சென்றால், தலைவன் தானும் தனக்குரிய தலைவியோடு இணைந்திருக்கவேண்டும் என்ற உணர்வினைத் தூண்டுதல் ஒல்லும் என்ற எண்ணத்தில் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள “ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது, இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து, மாழைமான்மட நோக்கி உன் தோழி; உம்பி எம்பி என்றொழிந்திலை, உகந்து தோழன் நீஎனக்கு” (1418) என்ற பாசுரத்தில் கம்பர் பெரிதும் ஈடுபட்டு இராமபிரானின் சௌலப்பியத்தைப் போற்றிக் குகன் என்ற பாத்திரத்தினைப் படைத்தனர்! **சிவபிரானுக்கு எழுபது எழில் மாடக்கோயில்களை எழுப்பிய கோச் செங்கட்சோழனைத் “தென்தமிழன் வடபுலக்கோன் சோழன்”** (1502, 1505) **எனப் பாராட்டியுள்ளார்.**

பொங்கத்தம் பொங்கோ (1858-1867), குழமணிதூரம் (1868-1877), சாழல் (1992-2001) முதலிய நாட்டுப்புறச்சாயல் பெற்ற இலக்கிய வகைகள் இவர் படைப்புக்களில் காணப்படுகின்றன. சாழல் என்பது மகளிர் விளையாட்டுவகை. முதலிரண்டும் போரில் தோல்வியுற்றவர் வாகை பெற்ற வீரர்களிடம் உயிர்ப்பிச்சை கேட்டுப் பாடும் ஆடல் வகை. இராம இராவணப்போரில் தோற்றுப்போன அரக்கர்கள் இராமன், இலக்குவன், அனுமன், சுக்கிரீவன், அங்கதன், நளன் ஆகியோரை நோக்கித்தம்மை விட்டுவைக்கும்படிக் கெஞ்சிக் கூத்தாடும் பாங்கில் திருமங்கைமன்னன் கற்பனை வளம் கொழிக்கப் பாடியுள்ளார்.

செம்போத்து, காக்கை, குயில், பல்லி, கிளி, கோழி முதலிய பறவைகளைப் பார்த்து மாயனைத் தன்பால் அழைக்கும்படி பிரிவாற்றாத தலைவி பாடுவதாக அமைந்த பாடல்கள் (1942-1951) அப்பர் அடிகளின் திருவங்கமாலையின் யாப்பமைதி கொண்டது.

பெரியாழ்வாரைப் போலவே, இவரும் கண்ணனுக்குச் சப்பாணிப் பருவம் அமைத்துப்பத்துப் பாடல்கள் படைத்துள்ளார் (1888-1897). தசாவதாரங்களின் மாட்சிதெரிவிக்கும் பத்துப்பாடல்கள் விபவத்தின் பெருமையினையும் அருமையினையும் புலப்படுத்துவன (1982-91).

2,3. திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்

வடமொழியில் சொல்லப்பெறும் தாண்டகத்திற்கும் தமிழ்ச் சான்றோர் பாடியுள்ள தாண்டகத்திற்கும் வேறுபாடு உண்டு. திருநாவுக்கரசர் ஆறாம் திருமுறை முழுவதையும் திருத்தாண்டமாகப் பாடித் தாண்டகச் சதுரர் எனப் போற்றப்பெற்றார். எண்சீர்விருத்தத்திற்கு முன்னோடியாக, அல்லது அதன் ஒருவகையாக அவர் பாடிய தாண்டகம் அமைந்தது. திருமங்கை மன்னன் பாடிய திருக்குறுந் தாண்டகம் (2032-2051) பிற்காலத்து யாப்பியலார் சுட்டும் அறுசீர்விருத்தத்தால் அமைந்த இருபது பாடல்களைக் கொண்டது. திருநெடுந்தாண்டகம் (2052-2081) முப்பது எண்சீர் விருத்தங்களைக் கொண்டது. பலவகைகளில் திருமங்கை யாழ்வார் சைவசமயக்குரவர்களின் யாப்பு நெறியினையும் இலக்கிய வகையினையும் பின்பற்றிப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

4. திருஎழுகூற்றிருக்கை

திருஞானம்சம்பந்தருக்கும் நக்கீரதேவருக்கும் பின்னர், இவ்வகைச் சித்திரக் கவியினைப் பாடியவர் மங்கைமன்னனே. இதனைத் தேர்க்கவி (-இரதபந்தம்) என்றும் கூறுவர். நிலைமண்டில ஆசிரிய யாப்பில் 46 அடிகளில் புனையப்பெற்ற இம்மிறைக்கவியில் பல அரிய மெய்ப்பொருள் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

5,6. சிறிய திருமடல், பெரியதிருமடல்

தான் காதலித்த தலைவியை மணத்தல்வேண்டிப் பனைமடலினால் உருவாக்கப்பட்ட குதிரையில் ஊர்ந்து அவள் சுற்றத்தார் காணும்படி வீதியில் நிற்றலை மடலேறுதல் என்று அகத்திணையர் கூறுவர். ஆண்தான் இங்ஙனம் ஈடுபடுதல் மரபு. எனின், திருமங்கையாழ்வார்,

> **“அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்**
> **மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்**
> **தென்னுரையில் கேட்டறிவ துண்டு; அதனை யாம் தெளியோம்**
> **மன்னும் வடநெறியே வேண்டினோம்”** (பெரியதிருமடல்.38-39)

என்று பெண் பகவற்காமப் பெருக்கினால் மடல் ஏறுவதாகத் தன் மட்டற்ற காதலைப் பாடியுள்ளார். தொல்காப்பியரும் (அகழ்.38), திருவள்ளுவரும் (1137) பெண்கள் மடலூரார் என்று கூறிய மரபினைத் “தென்னுரை” என்று சுட்டினார். எனின், வடமொழிப் பனுவல்களில்

மடலூர்தல் பற்றிய செய்தி காணப்படவில்லை. தமிழிலக்கியங்கள், பெண் மடலூர்தலை உடன்படா என்றமையால், வடமொழி இலக்கிய மரபில் உடன்பாடு கிடைக்கும் என்ற கற்பனையினால் இங்ஙனம் புலப்படுத்தியுள்ளார் எனலாம்.

சிறியதிருமடலில் கண்ணன் ஆடிய குடக்கூத்தில் அகப்பட்டு அவனைத் துய்க்கப்பெறாத நங்கையின் நிலையினைத் தன்மேல் ஏறிட்டுக்கொண்டு 77½ கண்ணிகளும் ஒரே எதுகைவரும்படி அற்புதமாகப் பாடி மங்கைமன்னன் யாப்புத்துறையிலும் அரிய சாதனை செய்துள்ளார். இங்ஙனமே பெரிய திருமடலிலும் ஒரே எதுகையில் 148½ கண்ணிகள் பாடியுள்ளார். சிறிய, பெரிய என்ற அடைகள் பாட்டின் அளவினைக் கருதி வந்தவை. சிறிய திருமடலில் அறம், பொருள், இன்பம் (3) என்ற முப்பாற் குறிப்பும், பெரியதிருமடலில் அறம், பொருள், இன்பம், வீடு (11) என்ற நாற்பாற் குறிப்பும் காணப்படுதல் சுட்டத்தக்கது. சைவபத்தி இலக்கியத்தில் மிகுதியாகப் பாடிய சம்பந்தரையும் அப்பரையும் போல் வைணவபத்தி இலக்கியமாகிய நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் மிகுதியாகப் பாடியவர்கள் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாருமே ஆவர்.

இனி, நம்மாழ்வரின் அருளிச் செயல்கள் பற்றிச் சிந்திப்போம்.

நம்மாழ்வாரின் அருளிச் செயல்கள்

இவர் இயற்பெயர் மாறன். பெற்றோர் **காரி, உடைய நங்கை.** இவர் வேளாளர். பிறப்பிடம் நெல்லை மாவட்டத்தில் திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரி. இவர் 16 ஆண்டுகள் புளியமரத்தடியில் யோகத்தில் இருந்தவர். போதிமரத்தடியில் புத்தர் ஞானம் பெற்றதுபோல், இவருக்குத் திருமால் புளிய மரத்தடியில் ஞானம் தந்தார். இவரினும் மூத்த மதுரகவி இவரை விழிக்கச் செய்து, **"செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்** என்று வினவ, **"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்"** என்று அரிய உண்மையினை அருளிச்செய்ய, அன்றுமுதல் இவருக்கு மதுரகவி சீடரானார். இவர் தம் உரையாடலின் சாரம் வைணவத்தத்துவத்தின் நுட்பமாக விளங்குதல் நோக்கத்தக்கது. **'செத்தது'** என்ற சொல் சடமாயுள்ள உடம்பினைக் குறிக்கும். வைணவர்கள் அணுவடிவினதாக உயிரைக் கருதியதால் **'சிறியது'** என்ற சொல் உயிரைக் குறிக்கும். எனவே, உடம்பில் உயிர் தோன்றினால் எதனைப்புசித்து எங்கே வாழும்? என்பது வினாவின் பொருள். 'அத்தை' (-அதை) என்ற சொல் தன் வினைப்போகத்தைக் குறிக்கும். வினைப்பயன் நுகர்தல் தீரும் அளவும் அதனைப் பொசித்துக் கொண்டு அந்த உடம்பிலே அவ்வுயிர் கிடக்கும் என்பது விடையின் பொருள். இவ்வரிய நுண்பொருளை வழங்கிய இவரை வைணவர் யாவரும் நம்முடைய

ஆழ்வார் என்று உரிமை கொண்டாடியதால் நம்மாழ்வார் எனப் பெயர் பெற்றார். யோகத்தில் இருந்தபொழுது சடம் என்னும் காற்றினை முனிந்ததால் சடகோபர் என்ற பெயரும், பர சமயங்களுக்கு அங்குசம் போன்றவராதலின் பராங்குசர் என்ற பெயரும் நம்மாழ்வார்க்கு உண்டு. சைவர்கள் மாணிக்கவாசகர்க்குத்தரும் சிறப்பினை வைணவர் நம்மாழ்வார்க்கு நல்கிப் போற்றுவர். இவரைச் சோனை முதலியார் அவதாரம் என்பர்.

வைணவ சமயத்திற்கு ஏனைய ஆழ்வார்களை அங்கம் என்றும் நம்மாழ்வரை அங்கி என்றும் ஏற்றம் கொடுத்துக் கூறுதல் மரபு. இவரை ஆழ்வாராகவும் குரவராகவும் (-ஆசாரியர்) போற்றுவர். இவர் அருளியவை நான்கு பிரபந்தங்கள்: 1. திருவிருத்தம் 100 பாடல்கள் 2. திருவாசிரியம் 7 பாடல்கள் 3. பெரியதிருவந்தாதி 87 பாடல்கள் 4. திருவாய் மொழி 1,102பாடல்கள். நாலாயிரத்தில் இவர் பாடியவை 1296 பாசுரங்கள். இவருக்கு அடுத்த நிலையில் 1253 பாசுரங்களை வழங்கியவர் திருமங்கைமன்னன். நம்மாழ்வார் பாடல்கள் யாவும் அந்தாதியாக அமைந்துள்ளன. இலக்கிய வரலாற்றில் இதனை அருஞ்சாதனை என்றே கருதுதல் வேண்டும்.

நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களையும் முறையே இருக்கு, யசுர், அதர்வணம், சாமம் ஆகிய நான்கு வேத சாரங்களாகப் போற்றுவர் வைணவர். இஃது உபசாரவழக்கு! எழுதாக்கிளவியாகிய வேதத்திற்கு ஒப்பாகத் திருஞானசம்பந்தரின் பாசுரங்களை "எழுதுமொழி" எனச்சுட்டுதல் போல் தமிழ் ஞானிகளின் அருளிச் செயல்களை வடமொழி வேதத்திற்கு ஒப்பாகத் தமிழ்வேதம் எனப் போற்றுதல் சைவ, வைணவர் மரபு. வேதாந்த தேசிகன்,

> "செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
> தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே"

எனப் பரவுதல் நோக்கத்தக்கது. வேதப்பொருளில் தோன்றிய ஐயங்களை எல்லாம் செந்தமிழ் மாலைகள் ஆகிய ஆழ்வாரின் அருளிச் செயலைத் தெளிவாக ஓதித் தெளிவு பெற்றதாகக் கூறினார். இனி, நம்மாழ்வாரின் பிரபந்தங்கள் பற்றிக் காண்போம்.

1. திருவிருத்தம்

பகவற்காமம் எனப்படும் தெய்வீகக் காதல் அனுபவங்களின் சாரம் திருவிருத்தம். விருத்தம் என்பது விருத்தாந்தம் என்ற பொருளில் கொள்ளத்தக்கது. நம்மாழ்வார்க்கு முன்பே திருவிருத்தம் என்ற யாப்பினைத் திருநாவுக்கரசர் பயின்றுள்ளார். விருத்தம் என்பது பத்தி இலக்கியக் காலத்தில் கட்டளைக் கலித்துறைக்குரிய பெயராக விளங்கியது. நம்பியாண்டார் நம்பி பாடிய திருச்சண்பையர் திருவிருத்தமும் நம் கருத்திற்கு அரணாக உள்ளது.

திருவிருத்தம் சங்க அகத்திணை மரபினை அடிப்படையாகக் கொண்டு புனையப்பெற்றது. கற்பனை வளமும் அணிநலமும் மிக்க பாடல்கள். அன்னங்கள், மேகங்கள், நெஞ்சம், வண்டுகள் முதலியவற்றை நோக்கிப்பேசும் பாற்கிளவிகள் நெகிழச்செய்வன. (30,32,33,33,46,56) பாலைநிலத்தினை,

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீர் அறமென்று கோதுகொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத்(து) உமிழ் பாலை" (27)

என விளக்குகின்றார். திருமாலின் அழகொளியின் மாட்சியை,

"..........அரவணைமேல்,
இருள்விரி நீலக் கருநா யிறுசுடர் கால்வது போல்
இருள்விரி சோதிப் பெருமான் உறையும் எறிகடலே" (18)

எனப் போற்றினார். பிரிவாற்றாத தலைவிக்கு ஓர் இரவு ஆயிரம் ஊழிகளாயிற்று (71) எனப்படுதல் நெடுநல்வாடையின் கற்பனையினையும் விஞ்சிவிட்டது. ஊராமிலைக்கக் குருட்டா மிலைத்தல்போல் திருமாலை வைதிகரும் பாராட்ட (வேளாளராகிய) தானும் பாராட்டுதல் அமைந்தது என்கிறார் (95). இவ்வுவமை திருவாசகத்திலும் காணப்படுகின்றது.

இனி, திருவாசிரியம் என்னும் பிரபந்தம் குறித்துச் சிந்திப்போம்.

2. திருவாசிரியம்

இதனுள் நிலைமண்டில ஆசிரியம் 5, நேரிசை ஆசிரியம் 2 ஆக ஏழு பாடல்கள் இடம் பெற்றன. திருமாலின் உருவ அழகு (-ரூபசௌந்தரியம்), பண்பு அழகு (-குண சௌந்தரியம்) ஆகிய வனப்பினைப் புனைந்து போற்றுவன இப்பாடல்கள். "ஆலிலைச் சேர்ந்தஎம், பெருமா மாயனை அல்லது, ஒருமா தெய்வம் மற்றுடையமோ யாமே" (7)என்று உறுதிப்பாட்டினைப் புலப்படுத்தினார் நம்மாழ்வார். ஆசிரியயாப்பிலும் முடுகியல் சந்தம் அமைத்து,

"வரைபுரை திரைபொர பெருவரை வெருவர
உருமுரல் ஒலிமலி நளிர்கடற் படவர
வரசுடல் தடவரை சுழற்றிய தனிமாத்
தெய்வம்" (3.5-8)

என மாதவனின் மாட்சியைப் பாடியுள்ளார்.

இனி, பெரிய திருவந்தாதி என்னும் பிரபந்தம் பற்றிச் சிறிது காண்போம்.

3. பெரியதிருவந்தாதி

நேரிசை வெண்பா யாப்பினால் புனையப்பெற்ற பிரபந்தம் இது. பெரும்பான்மையும் இத்தகைய அந்தாதி என்னும் பிரபந்தம்

100 வெண்பாக்களைக் கொண்டிருக்கும். முதலாழ்வாரின் அந்தாதிகளும், காரைக்காலம்மையாரின் அற்புதத்திருவந்தாதியும் அறியத்தக்கது. திருமழிசைப்பிரானின் நான்முகன் திருவந்தாதிமட்டுமே 96 நேரிசை வெண்பாக்களைக் கொண்டது. பெரியதிருமொழியில் 87 வெண்பாக்களே உள்ளன. முதற்பாடலும் முடிவுப் பாடலும் மண்டலித்து முடிதலின், மூலத்திலும் இந்த அளவே இருந்தன எனலாம். எனின் இப்பிரபந்தத்திற்குப் 'பெரிய' என்ற அடைமொழி பாவின் எண்ணளவு பற்றியது அன்று எனத்தெளியலாம். பரிமேலழகர், திருக்குறள் உரையில் (அதி. 39), "திருவுடைமன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்" என்ற நம்மாழ்வார் பாடலை எடுத்துக்காட்டி, 'என்று பெரியாரும் பணித்தார்' எனக்குறிப்பதால் இவர்க்குப் பெரியார் என்பது மரியாதைப் பெயர் என்பதும் இவர் பாடிய அந்தாதி பெரிய திருவந்தாதி எனப் பெயர்பெற்றது என்பதும் புலனாகும். இறைவன் வழங்கும் திருவருளினால் வல்வினைப்பயனை அடித்து நொறுக்கிவிடலாம் என்று நம்பிக்கை தருகிறார் நம்மாழ்வார்:

"யானும்என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம் வல்வினையைக்
கானும் மலையும் புகக்கடிவான் - தானோர்
இருளன்ன மாமேனி எம்மிறையார் தந்த
அருள் என்னும் தண்டால் அடித்து " (26)

திருவருளின் ஆற்றலால் தொல்வினை தீர்ந்து உய்யலாம் என்ற கருத்து சைவம், வைணவம் ஆகிய இருபெரும் நெறிக்கும் உரியதாய்த் திகழ்கின்றது. இதனால் மக்களுக்கு வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் தோன்ற வாய்ப்புண்டு.

திருமால் தன் நெஞ்சத்தில் புகுந்து நீங்காதிருப்பதால் அவன் இருப்பிடம் ஆகிய மலையும், கடலும், வைகுந்தமும் புல்லென்று போயின எனப்பெருமிதத்துடன் பாடுகின்றார் (68).

இனி, நம்மாழ்வாரின் படைப்புக்களில் - ஏன் நாலாயிரம் முழுவதிலும் சிரத்தானத்தில் வைத்துப் போற்றப்பெறும் திருவாய் மொழியின் சிறப்பினை நோக்குவோம்.

4. திருவாய்மொழி

வாய்மொழி என்பது மறை என்ற பொருள் உடையது. தொல்காப்பியர் சுட்டும் எழுவகை யாப்புக்களில் ஒன்றாகிய வாய்மொழியுடன் இணைத்து நோக்கத்தக்கது. நம்பியாண்டார் நம்பி சம்பந்தர் பாடல்களை "வாய்மொழி" எனப் போற்றியுள்ளமை இங்குக் குறித்தல் தகும்.

திருமாலின் திவ்விய குணங்களில் ஈடுபட்ட நம்மாழ்வார்,

"உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" (2675)

என்று முடுகியல் சந்தம் அமைந்த கட்டளைபெற்ற அடியினால் பாடியிருத்தல் காணத்தக்கது. எவன் -யவன் என மாறுதல் இவர்காலத்து மொழிமரபு போலும்! இவரிடம் சமயக் காழ்ப்பு இல்லை. சான்றாக,

"இலிங்கத் திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
வலிந்து வாதுசெய் வீர்களும் மற்றுநும் தெய்வமும் ஆகி
நின்றான்" (3110)

எனவரும் பாடற்பகுதியைக் கூறலாம்.

தமக்குத் தாரக,போஷக, போக்கியப் பொருள்கள் யாவுமே கண்ணனே எனச் சாதிக்கும் ஆழ்வார்,

"உண்ணும் சோறும் பருகும்நீர் தின்னும்வெற் றிலையும்எல்லாம்
கண்ணன் எம்பெருமான் . . . . . ." (3293)

என்று புலப்படுத்துதல் நோக்கத்தக்கது. சாதிபேதத்தினைச் சாடிய தொண்டரடிப் பொடி ஆழ்வாரைப் போலவே (913, 914), நம்மாழ்வாரும் தொண்டக்குலமே தொழுகுலம் எனப்போற்றுகின்றார்:

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலம்தான் இலாதசண் டாளசண் டாளர்கள் ஆகிலும்
வலம்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்(கு) ஆள்என்றுள்
கலந்தார் அடியார் தம்மடியார்எம் அடிகளே" (2971)

இவ்வாறே அப்பர் பெருமானும் புலையரேனும் சிவனுக்கு அன்புடையவரே தாம் வணங்கும் கடவுள் எனப் போற்றிய பாங்கினைமுன்னர்ச் சுட்டியுள்ளோம். இருவருமே வேளாளராக விளங்கியவர்கள். சாதிக் கொடுமையினை அறிந்திருந்தவர்கள். இறையன்பினால் இக் கொடுமையினைக் களையவேண்டும் என்று மனித நேயம் தோன்றப் பாடியுள்ளனர்.

சுந்தரர் மானிடம் பாடாமையினை வலியுறுத்தி ஒருபதிகம் (-திருப்புகலூர்) பாடினார். நம்மாழ்வாரும், இக் கருத்தமையப் பத்துப் பாடல்கள் யாத்துள்ளார் (2985-2994). ஒருசில அடிகளைக் காண்போம்::

"சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என்னாவில் இன்கவி யான்ஒரு வர்க்கும் கொடுக்கிலேன்.....
.........எம்பெருமான் உளன் ஆகவே" (2985)

"என்னாவது எத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள்!
மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும்பொருள்?
மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினால்
தன்னாக வேகொண்டு சன்மம்செய் யாமையும் கொள்ளுமே"
(2988)

இத்தகைய உறுதிப்பாடு முதிர்ந்த ஞானிகளிடம் மட்டுமே தோன்றுவது.

பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்களான நிலையில் சமயக் குரவர்கள் செயல்கள் யாவும் இறைவனின் செயல்களாகவே எண்ணுதல் மெய்கண்ட சாத்திரப் பொருள் முடிபு எனலாம். திருஞானசம்பந்தர், "எனதுரை தனதுரை" என்று [I.76:1-10] சிவபரம்பொருளின் உந்துதலால் பாடப் பெறும் தம் பாடல்கள் யாவும் அப்பெருமானின் அருளிச்செயல்களே என்று எண்ணினர். நம்மாழ்வார், "என்னைத் தன்னாக்கிப் என்னால் தன்னை, இன்தமிழ் பாடிய ஈசனை"' பாடுவித்தான் என்று பரந்தாமனைப் போற்றினார். மேலும்,

"பண்ணார் பாடல் இன்கவிகள்
யானாய்த் தன்னைத் தான்பாடி
தென்னா என்னும் என்னம்மான்
திருமா லிருஞ்சோ லையானே" (3737)

எனப் பரவுதல் பார்க்கத்தக்கது. அற்புதமான கவிதை ஒருவரின் ஊனை உள்ளத்தையும் கவர்ந்து பரவசப்படுத்தும் என்னும் இலக்கிய அனுபவம் நம்மாழ்வார்க்கு உண்டு. எனவேதான், திருமால் தன்னை ஆட்கொண்டு தன்னுள் கலந்து நிற்கும் தன்மையினை,

"செஞ்சொற் கவிகாள்! உயிர்காத்(து) ஆட்செய்மின்
திருமா லிருஞ்சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன் மாயக் கவியாய்
வந்து என்றன்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்றார்
அறியா வண்ணம் என்
நெஞ்சும் உயிரும் அவையுண்டு தானே
யாகி நிறைந்தானே (3733)

என்று தன் இறையனுபவத்தைப் பாடிப் பரவசம் அடைந்தார். மாயக்கவிதை உள் கலந்து உணர்வில் நிற்றல்போல் இறைவன் தன்னுள் கலந்து நிற்றலை அருமையாகப் பாடியுள்ளார்! கவிதை அனுபவம் போன்றது இறையனுபவம் என்பது நம்மாழ்வாரின் கோட்பாடு எனலாம்.

பராங்குச நாயகி பரந்தாமனிடம் காதல் முற்றி நாரை, குயில்கள், அன்னங்கள், மகன்றில், குருகு, வண்டு, கிளி, பூவை, வாடை,

நெஞ்சு என்பனவற்றைத் தூது போக்கும் பாசுரங்கள் நெஞ்சத்தினை நெகிழச் செய்வன (2708-2717). கடலில் ஏற்றமிட்டுத் தண்ணீர் வற்றிவிட்டது எனின் வல்வினை தவிர வேறுகாரணம் சொல்ல முடியாது. அதுபோல, சர்வரட்சகனுக்கு வாழ்க்கைப் பட்ட நான் பிரிவாற்றாமையுற்றுக் கிடக்கின்றேன் எனில் என் கொடிய வினையே காரணம். எல்லா மக்களையும் காப்பவன் தன் மக்களைக் காக்கக் கூடாதா? நாட்டுக் கிட்ட நினைப்பு அந்தப் புரத்திற்கு அரிதாக வேண்டுமோ? என்று நாயகி நைவதாக வியாக்கியானக்காரர் தரும் விளக்கம் எண்ணி இன்புறத்தக்கது.

தாய் பாசுரமாக அமைந்த பாடல்கள் (3172-82) தன்மகள் கீதாசாரியனின் பேருரைபோல் பேசுவதாக அமைந்துள்ளது. உலகில் படைத்தவன் பெயர்வேறாய், படைக்கப்பட்ட பொருளின் பெயர் வேறாய் இருக்கும். எனின், மாதவன் அந்தரியாமியாய் எப்பொருளிலும் விரவி விளங்குவதால், அவன்பெயரே அவன் படைத்த உலகுக்கும் பெயராய் அமைந்துள்ளது என்ற கருத்தில் தொடங்கும் பாடலைச் சுட்டுதல் தகும்:

“கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்
கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்
கடல்ஞாலம் கொண்டேனும் யானே என்னும்
கடல்ஞானம் கீண்டேனும்யானே என்னும்
கடல்ஞாலம் உண்டேனும் யானே என்னும்
கடல்ஞாலத் தீசன்வந் தேறக் கொல்லோ
கடல்ஞாலத் தீர்க்கு இவை என் சொல்லுகேன்
கடல்ஞாலத் தென்மகள் கற்கின்றவே? (3172)

சொற்பொருள் பின்வரு நிலையணி அமைந்த இத்தாய்ப் பாசுரத்தில் திருவிக்கிரமன், வராகம், கண்ணன் அவதார விளையாட்டுக்களும் அற்புதமாகக் கூறப்பட்டன.

வைணவ சித்தாந்தத்திற்கு அடிப்படையான சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூவகைப் பொருளில்பும், சாதனவில்பும் பிறவும் திருவாய் மொழியில் பொதிந்துள்ளதால், பின்வந்த இராமாநுசரை உள்ளிட்ட வழிக்குரவர்கள் மெய்ப்பொருட்கோட்பாட்டினை உருவாக்கிக் கொள்ளுதல் எளிதாயிற்று எனலாம்.

இனி, மதுரகவியாழ்வார் அருளிச் செயல் குறித்துக் காண்போம்.

மதுரகவியாழ்வாரின் அருளிச்செயல்

இவர் திருக்கோளூரில் தோன்றியவர். இவர் அந்தணர். இனிய தமிழ்ப் பாடல்களைப் புனைந்தவர் என்பதால் மதுரகவி என்பது

இவர் சிறப்புப் பெயராகத் தெரிகின்றது. இவர் அருளியது 'கண்ணிநுண் சிறுத்தாம்பு'. ஆழ்வார் பிறரெல்லாம் பரந்தாமனையே பாடி உய்ந்தவர்கள். இவர் ஒருவரே, **"தேவுமற்றறியேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசைப் பாடித் திரிவனே"** (938) என்ற உறைப்புடன் நம்மாழ்வாரை மட்டுமே பாடி உய்ந்தவர். **அந்தணர் ஆகிய அப்பூதி அடிகள் வேளாளர் ஆகிய திருநாவுக்கரசரையே போற்றி உய்ந்தாற் போல், அந்தணர் ஆகிய மதுரகவி வேளாளர் ஆகிய நம்மாழ்வாரையே பாடிப் பதம்பெற்றார். எனவே, பத்தி இலக்கியத்தில் சாதிபேதம் நீங்குதற்கு இறையன்பு அடியவரன்பு முதன்மை பெற்ற திறம் புலனாகும்.**

இயற்பாவின் இறுதிப் பிரபந்தமாக இலங்குவது **கண்ணிநுண் சிறுத்தாம்பு.** திருப்பாணாழ்வாரின் **அமலனாதிபிரான்** முதற் பாடலின் தொடக்கத் தொடரினால் பெயர் பெற்றது போல், இப்பிரபந்தமும் முதற்பாடலின் தொடக்கத் தொடரினால் பெயர் பெற்றது.

நம்மாழ்வாரிடம் வைத்த எல்லையில்லாத மதுரகவியின் பத்திப் பெருக்கிற்குச் சைவநெறியில் திருஞானசம்பந்தரிடத்தில் நம்பியாண்டார் நம்பி எல்லையற்ற பத்தி பூண்டு ஆறு பிரபந்தங்களை அவர் பேரில் பாடியுள்ள அன்புப் பெருக்கினை உதாரணம் கூறலாம். இவரே திருநாவுக்கரசரைப் பற்றியும் ஒரு பிரபந்தம் செய்துள்ளனர்.

மதுரகவி, **"குருகூர் நம்பி பாவின் இன்னிசைப் பாடித்திரிவன்"** எனபுலப்படுத்துவதால், நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களும் இசைப் பாக்களாகப் போற்றப்பட்டுப் பாடப்பெற்று வந்தவை என்பது புலனாகும்.

இவர் நம்மாழ்வாரைக் குருகூர் நம்பி, சடகோபன் என்ற பெயர்களினால் சுட்டினார். தன் குருநாதரை, **'அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்'** (940) எனப்போற்றினார். அவர் பெயரினை உச்சரித்தஅளவில் நாவில் தேனூறும், அமுதம் இனிக்கும் என்கிறார் (937). திருவாய் மொழியின் தனித்தன்மையினை,

"அருள்கொண்டு **ஆயிரம் இன்தமிழ் பாடினான்**" (944)

என்று பரவுகின்றார். நம்மாழ்வாரை அனுசந்திப்போர் பயனிலர், பாங்கிலர் எனினும், அவரால் திருத்திப்பணி கொள்ளப்பெறுவார் (946). **'தன்னை அடைந்தவர்க்கு எல்லாம் அன்பன்'** தென்குரு**கூர் நம்பி'** (947).

திருஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்களின் இறுதியில் காணப்படும் திருக்கடைக்காப்புப்போல் மதுரகவி உள்ளிட்ட ஆழ்வார் திருமொழிகளிலும் காணப்படுகின்றன.

சைவசித்தாந்தத்தை நிலை நாட்டிய மெய்கண்ட சாத்திரங்களுக் குரிய அடிப்படைக் கருத்துக்கள் பன்னிருதிருமுறைகளில் பரவியும்

விரவியும் காணப்படுதல்போல், விசிட்டாத்துவிதக் கோட்பாட்டுக்குரிய மையக் கொள்கைகள் பலவும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பொதிந்துள்ளன.

காஞ்சிபுரம் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச் சாரியர் சுவாமிகள், வியாக்கியானங்களைத் தழுவிச் சுவையும் வளமும் பொருந்தவும் வைணவ நுண்கருத்துக்கள் தெளிவுறவும் உரையெழுதி வெளியிட்டுள்ள நாலாயிரத்திவ்வியப் பிரபந்தப்பதிப்பு பெரியோர்களால் மதித்துப் போற்றப்படுகிறது.

திருமுறையும் திவ்வியப் பிரபந்தமும் பல்லவர், பாண்டியர், சோழர்காலங்களில் திருக்கோயில்களிலும் திவ்வியதேசங்களிலும் நித்திய வழிபாட்டின் பொழுது ஓதப்பெற்றுவந்தன. இப்பணிக்கு நிறைய நிவந்தங்களும் நிலங்களும், நெல்லும், பொன்னும் பிறவும் வேந்தர்களாலும், அரசியல் அதிகாரிகளாலும் பத்தர் பிறராலும் வழங்கப்பெற்றுள்ள திறத்தினைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

இனி, கல்வெட்டு இலக்கியம் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

VI கல்வெட்டு இலக்கியம்

தமிழ்மக்களின் பண்பாடு, அரசியல், கலைகள், சமுதாயம், சமயம், அறங்கள் பற்றிய அருஞ்செய்திகளைத் தாங்கி நிற்பவை கற்பொறிப்புக்கள் எனப்படும் கல்லெழுத்துக்களே. இவற்றைக் கல்வெட்டுக்கள் என்று கூறுதல் இக்காலப் பெருவழக்கு. தொடக்கக் காலத்தில் (கி.மு.300-கி.பி.400) வரையப்பெற்றவை பௌத்தச் சமணச் சார்புடையவை. இவை தமிழ்பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டவை. கிரந்த எழுத்துக்கள், தமிழ் எழுத்துக்கள், வட்டெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை கி.பி.5,6ஆம் நூற்றாண்டு முதலே கிடைக்கின்றன.. உரைநடையில் [prose] அமைந்த கல்வெட்டுக்களே மிகுதி. எனின், கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து கவிதை வடிவங்களில் அவை செதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடல்கள் கோயில்களின் சுற்றாலைச் சுவர்களிலும், கருவறைச் சுவர்களிலும், மண்டபங்களின் சுவர்கள் தூண்களிலும், வாயில்களிலும், கோபுரக்கதவுகளிலும், கிணற்றுச் சுவர்களிலும் கற்பாறைகளிலும் கூட வரையப்பெற்றன. தமிழ்ப்பாடல்கள் தமிழகத்தில் மட்டுமன்றித் தமிழ் வேந்தர்களின் ஆட்சி நிலவிய இலங்கை, கேரளம், கருநாடகம், ஆந்திரம் முதலிய ஏனைய மாநிலங்களிலும் காணப்படுதல் சுட்டத்தக்கது.

கல்வெட்டுக்களில் பாக்கள், பாவினங்கள், மெய்க்கீர்த்தி, உரைநடை (-வசனம், prose) என்ற நான்குவகை இலக்கிய வடிவங்கள்

காணப்படுகின்றன. கி.பி.500-கி.பி.900 என்ற காலப் பகுதிக்குரிய இந்நால்வகை வடிவங்களில் அமைந்துள்ள கல்வெட்டுக்கள் பற்றிச் சுருக்கமாக இங்கே காண்போம்.

நிறுத்தமுறையானே முதலில் கல்வெட்டுக்களில் (கி.பி.500-கி.பி.900) இடம்பெற்றுள்ள பாக்கள் சிலவற்றை ஆராய்வோம்.

I கல்வெட்டுப் பாக்கள்

வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால்வகைப் பாக்களில் முதலிரண்டுமே கூடுதலாக காணப்படுகின்றன. இவற்றைப் பாடியவர் பெயர் சில கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. செவ்விய புலமை பெற்ற கவிஞர்கள் யாத்துள்ள இப்பாடல்களில் கல்தச்சனின் கவனக்குறைவாலும் கல்விக்குறைவாலும் பிழைகள் விரவியுள்ளன. எனின், அவற்றை நாம் திருத்திவிடுதல் கூடாது. உள்ளவாறே பயின்று மொழிமாற்றம் பற்றி அறிந்துகொள்ளுதல் நன்று. பெரும்பாலும் வரலாற்றுக் கூறுகள் மிக்க இப்பாடல்களில் இலக்கியக் கூறுகள் ஓரளவில் காணப்படும். முதலில் கல்வெட்டுக்களில் காணப்படும் வெண்பாக்கள் பற்றி நோக்குவோம்.

முத்தரையரைப் பற்றிய வெண்பாக்கள் (கி.பி.650 கி.பி.750)

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் செந்தலை என்னும் ஊரில் திகழும் சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்மண்டபத் தூண்களில் சில வெண்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. செந்தலைக்கு அருகில் நியமம் என்ற ஊரில் பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறன் என்பவன் பிடாரி கோயில் எழுப்பித்தான். இக்கோயில் சிதிலம் அடைந்தபொழுது, இதிலிருந்த நான்கு தூண்களையும் பெயர்த்தெடுத்துச் செந்தலையில் உள்ள சிவாலயத்தின் மண்டபத்தில் நிறுத்தினர். இப்பாடல்களின் மேலே,

> "............டுத்த பெரும்பிடுகு முத்தரையனாயின
> குலாலன்மாறன், அவன் மகன் இளங்கோ வதியரையனாயின
> மாறன் பரமேஸ்வரன், அவன் மகன் பெரும்பிடுகு முத்தரையனாயின
> சுவரன்மாறன் எடுப்பித்த படாரி (-பிடாரி) கோயில் அவன்எறிந்த
> ஊர்களும், அவன்பேர்களும் அவனைப் பாடினார் பேர்களும்
> இத்தூண்மேல் எழுதின இவை."

என்று பொறிக்கப் பெற்றுள்ளன. முத்தரையர்கள் பல்லவ அரசர்க்கு உட்பட்டுத் தஞ்சைப் பகுதியைக் கி.பி.7,8,9ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆட்சிபுரிந்த குறுநிலத் தலைவர்கள். இவர்களைப் பற்றிய குறிப்பினை முன்பே நாலடியாரைப் பற்றி எழுதிய பகுதியில்

சுட்டியுள்ளோம். மேற்கண்ட கல்வெட்டுப் பகுதி கி.பி.8ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை எங்ஙனம் எழுதப்பட்டது என்பதற்குச் சான்றாகும்.

இனி, வெண்பாக்களைக் காண்போம்.

1. வெங்கட் பொரும்......சேர் வெல்கொடியான் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க - வங்குலந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
வூரழுந்தி யூரென்னு மூர்.

வெற்றிக்கொடி உயர்த்திய வாண்மாறன் அழுந்தியூர் என்னும் இடத்தில் நடந்த போரில் வெற்றி பெற்ற செய்தியை இவ்வெண்பா புலப்படுத்து கின்றது. அழுந்தியூரில் சுவரன் மாறனின் பட்டத்துயானை போர்க் களத்தில் பகைவர்களைத் துவைத்ததால் அவர்தம் தேர்கள், குதிரைகள் முதலியன யாவும் அழிந்தன. அவர்தம் செங்குருதி மண்ணெங்கும் பரவியது என்பது இப்பாடலின் திரண்ட பொருள். இப்பாடலை **யாத்தவர் பாச்சில்வேள் நம்பன். பாச்சில் என்பது ஊர்ப்பெயர். திருப்பாச்சிலாச்சிராமத்தினைச் சம்பந்தரும் சுந்தரரும் பாடியுள்ளனர். இத்தலம் திருச்சி மாவட்டத்தில் உள்ளது.**

இருவிகற்பத்தால் வந்த நேரிசை வெண்பாவாகிய இப்பாடலில் தலையாகு எதுகை பயின்றுள்ளது. ஈற்றடி இரண்டிலும் காய்ச்சீர்கள் வருதலால் வெண்சீர் வெண்டளையினால் தளைக்கப்பட்டு ஏந்திசைச் செப்பலோசை விஞ்சியது.

2. . . . . .ப்ப ஓடிக்
கமுகு கொழுங்குடற் கவ்வ - விழிகட்பேய்
புண்ணளைந்து கையூம்பப் போர் மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள்.

சீர்மாறனின் வாளாற்றலால் வீழ்ந்த பகை மறவர்களின் கொழுவிய குடலைக் கழுகுகள் விரைந்து சென்று கவ்வின. அஞ்சத்தக்க விழியுடைய பேய்கள் காயங்களைத் தடவிப்பார்த்துக் கைகளைச் சப்பின. **இது போர்க்களக் காட்சி.** இத்தகைய புனைவுகளைக் களவழிநாற்பதிலும் பரணிப்பாடல்களிலும் காணலாம். முத்தொள்ளாயிரப் பாடல்போல் அமைந்துள்ளது இப்பாடல். **பாச்சில்வேள் நம்பன் இப்பாடலையும் யாத்துள்ளார்.**

3. . . . . வாளமருள் வாகைப்பூக்
குஞ்சிக் கமழ்கண்ணி கோமாறன் - றஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெரித்தான்
றோளா லுலகளிக்குந் தோள்.

சுவரன்மாறன் தஞ்சை மாநகர்க்குத் தலைவன். வாட்போரில் வாகைப் பூவினைத் தலைக்கணிமாலையாகச் சூடியவன். ஆற்றல்மிக்க கொடும்பாளூரில் பகைவர்களைக் காய்ந்து அழித்தவன். தன் தோளாண்மையினால் உலகினைப் புரக்கும் ஆற்றல் படைத்தவன். உலகு என்றசொல் குறிப்பிட்ட நிலப்பகுதியைக் குறித்தது. **இப்பாடலையும் பாச்சில்வேள் நம்பன் பாடியுள்ளார்.**

4\. . . . . லாத் தோய்ந்தனவா லெங்கும்
வருபுனல்சூழ் வல்லக்கோ மாறன் - செருவில்
மறங்கூர்வாய்ப் பட்டா ருடல்குடைந்து மாந்திப்
புறங்கூர்வாய்க் கொண்டெழுந்த புள்.

புனலால் சூழப்பட்ட **வல்லம்** என்ற நகரின் தலைவன் ஆகிய சுவரன் **மாறனை** எதிர்த்துப் பொருத பகைவர்கள் போர்க்களத்தில் வீரம் மிக்க போர்க்கருவியின் வாய்ப்பட்டு வீழ்ந்தனர். கழுகு, பருந்து, காகம் முதலிய புலால் உண்ணும் பறவைகளின் கூட்டம் வீழ்ந்தவர்தம் உடலைக் குடைந்து தின்று அலகுகளின் புறத்தேயும் கவ்விக் கொண்டு எழுந்தன என்பது இப்பாடலின் பொழிப்பு. **இதன் ஆசிரியரும் அவரே.**

5\. . . . . .ர்க்கே யல்லையாய்க் காலந்தான்
முல்லைக்கேய் முற்படுமோ என்றென்று - வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேன்மாறன் கைபோலுங்
காரைவாய்க் கேளேனேய் கண்டு.

இப்பாடலை எழுதிய கவிஞர் கோட்டாற்றிளம் பெருமானார். வல்லத்தின் தலைவனும் காரை என்னும் ஊரில் நடந்தபோரில் பகைவர்களை வென்றவனும் ஆகிய வேல்மாறன் ஆகிய சுவரன் மாறனின் கைவண்மையினைப் போன்ற கருமுகிலைப் பிறர் வாயினாலும் கேட்டதில்லை; என் கண்ணினாலும் கண்டதில்லை என்பது பாடற் பொருள். முதலடி சிதைந்துள்ளதால் பொருள் புலப்படவில்லை. “காலம்தான் முல்லைக்கே முற்படுமோ” என்பது கார்காலம் தோன்றியதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பிரிந்த தலைமகன் இல்லிருத்தற்குரிய கார்காலமாதலின் திரும்புவான் என்பது குறிப்பு.

பாடலில் முல்லைக்கே, கேளேனே என்ற ஏகார ஈற்றுச் சொற்கள் யகரமெய் பெற்றன. **அக்காலத்தில் மக்கள் ஏகார வீற்றினை யகரத்துடன் சேர்த்து ஒலித்திருத்தல்வேண்டும்.** அப்படி உச்சரிப்புக்கு முதன்மைதந்து கல்தச்சன் **முல்லைக்கேய், கேளேனேய்** என்று பொறிந்துவிட்டான். ஏனைய யாப்புக்களிலும் இப்படி வரும் சொற்கள் பற்பல. ‘காரை’ என்ற சொல் இருபொருளில் வருதல் ஒருநயம்.

6\. செருவ (லரா) னதனாற் சிந்தியார் போலும்
மருவலராய் வாண்மாறன் சீறக் - கருவிளை
கண்தோற்ற வண்டரவம் கார்தோற்றும் காந்தளூர்
மண்தோற்ற வேந்தர் மனம்.

இச்செய்யுளினை இயற்றியவர் குலாலங்காஞ்சன். குலாலன் என்பவன் மகன் எனக் கொள்ளுதல் வேண்டும். அல்லது, கூலவாணிகன் சாத்தன் என்றாற்போல, குலாலன் மட்பாண்டம் வனைவோன் என்ற அடிப்படையில் கவிஞனின் தொழிலைக் குறித்த பெயராகவும் காஞ்சன் இயற்பெயராகவும் கொள்ளுதல் வேண்டும். ஒருசாரார் **குவாவங் காஞ்சன்** எனக் கொண்டனர்.

காந்தளூரில் சுவரன் மாறன் நிகழ்த்திய போரினை இப்பாடல் புலப்படுத்துகின்றது. பல்லவர்க்குக் கட்டுப்பட்டு வல்லத்தினைக் கோநகராகக் கொண்டு சோழ நாட்டின் ஒருபகுதியை ஆண்டவர் முத்தரையர். எனினும், இவருள் சிலர் பாண்டியர்க்குத் திறை செலுத்திக்கொண்டும் ஆண்டிருத்தல் வேண்டும் என்பது மாறன் எனப்பெயர் கொண்டிருத்தலான் அறியப்படும். அன்றியும் காந்தளூர் சேர நாட்டில் உள்ள கடற்கரைப்பட்டினம். எனவே, பாண்டியர்க்கு உதவியாக இவ்விடத்தில் சுவரன் மாறன் போரிட்டிருத்தல் வேண்டும்.

> "கண்தோற்கும் படியாகப் பூத்திருக்கும் கருவிளையில் ஒலிக்கும் வண்டுகளின் ஈட்டம் (நிறஒப்புமையால்) கார்முகிலின் காட்சியைத்தரும் காந்தளூரில் நடந்த போரில், தம் நிலத்தை வாண்மாறனின் சீற்றத்தினால் இழந்த பகைவேந்தரின் மனம் தாம் செருவில் வல்லவர் என்ற செருக்கினால் போர்தொடுக்கும் முன் சிறிதும் சிந்தித்திலர் போலும்!"

என்பது பாடலின் திரண்டபொருள். இப்பாட்டு **"வேந்தர் மனம்"** எனப் பொருள் முடிந்தது போல் தோன்றினும் முடியாத்தன்மை உடையது. இத்தொடர் முதலடியில் உள்ள **"சிந்தியார்போலும்" என்பதுடன் சேர்ந்து பொருள் முடிவு பெறுதலின் தொல்காப்பியர் சுட்டும் அகப்பாட்டு வண்ணம் பெற்றது.**

7\. எண்கி னிருங்கிளையு மேறற் கரியவேய்
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி - விண்படர்வான்
சேய்நாடு தாழ்ந்த மாநாடக் கண்ணனூர்க்
கோனாடர் புக்கொளித்த குன்று.

இப்பாடல் இன்னிசை வெண்பா. **இதனைப் பாடியவர் கிழார்க் கூற்றத்துப் பவதாயமங்கலத்து அமருண்ணிலை குலாலங்காஞ்சன்.** முன்பும் இவர் பாடல்கள் வந்தன.

கோனாட்டுக்குரிய கண்ணனூர் என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் வன்மையும் வாளாண்மையும் மிக்க சுவரன் மாறனின் வாளினால் வீழ்ந்த பகைவீரர்களில் பலர் வானகம் (-வீர சுவர்க்கம்) நோக்கி ஊர்ந்தனர். கரடிகள் தம் சுற்றத்தோடும் ஏறுதற்கு அரிய குன்றுகளின் முழைஞ்சுகளில் மற்றும் பலர் ஒளித்துக் கொண்டனர் என்பது பாடலின் பொழிப்பு.

இக்கவிஞர் பாடிய மற்றொரு பாடலையும் காண்போம்.

8. மலர்ந்ததார் வாள்மாறன் மன் அண்ணல் வாயில்
கலந்தநாள் காணலாம் காண்க - உலந்தவர்தம்
என்பருந்து சூற்பேய் இருந்துறங்க வீழ்குடர்
. . . . . . சிந்தப் பகடு.

இதன்பொழிப்பு : தார்சூடிய வாள்மாறன் அண்ணல்வாயில் என்னும் இடத்தில் பகைவருடன் பொருதநாளில் போர்க்களத்தில் இறந்தோரின் எலும்புகளில் ஒட்டியிருக்கும் தசையினை அருந்தும் சூல்கொண்ட பேய்கள் இருந்து உறங்கவும், சரியும் குடலினைப் பலவாகிய பருந்துகள் (எடுத்துப் பறக்கும்பொழுது சிந்தவும்) பகடுகள் (-யானைகள்) நிற்கவும் காணலாம். நீங்களும் அக்காட்சியைக் காணுங்கள்.

அண்ணல்வாயில் என்ற இடம் இப்போது அன்னவாசல் என்று வழங்குகிறது. இவ்வூர் புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் உள்ளது. முன்பாடலில் சுட்டப்பட்ட கோனாடு என்பதும் புதுக்கோட்டைப் பகுதியே. எனவே, சுவரன்மாறனின் ஆட்சி அப்பகுதியிலும் நிலவியது எனலாம்.

ஆசார்யார் அநிருத்தரின் பாடலும் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. இடச்சுருக்கம் கருதிச் சிலபாடல்கள் மட்டுமே இங்குக் காட்டப் பட்டன. இப்பாடல்கள் பலவும் இடப்பெயர்வினாற் போலும் சிதைந்து காணப்படுகின்றன.

இனி, பல்லவரைப் பற்றிய கல்வெட்டுக்களில் காணப்பெறும் சில வெண்பாக்களை நோக்குவோம்.

பல்லவரைப்பற்றிய வெண்பாக்கள்

தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சிவட்டத்திலுள்ள தளவானூர் குகைத்தூணில் பொறிக்கப் பெற்றுள்ள ஒருவெண்பா இங்கே தரப்படுகின்றது.

ஸ்ரீ

1. தொண்டையந்தார் வேந்தன் நரேந்திரப் போத்தரையன்
வெண்பேட்டின் றென்பால் மிகமகிழ்ந்து - கொண்டான்
சரமிக்க வெஞ்சிலையான் சத்ருமல்லேஸ் வராலயம் என்[ற்]
அரனுக் கிடமாக வங்கு.

கூன் அல்லது தனிச்சொல்லாக வரும் மங்கலச்சொல் ஸ்ரீ. ஸ்வஸ்திஸ்ரீ என்றும் வேறுபாடல்களிலும் வரும். இப்பாடலை இயற்றியவர் பிரம்ம மங்கலவன் செல்லன் சிவதாசன். மேற்சுடப்பட்ட குகைத்தூணில் வடமொழிக்கல்வெட்டினைச் சார்ந்து அதன் மொழி பெயர்ப்பாக இப்பாடல் அமைந்துள்ளது. ஆதலின் செல்லன் சிவதாசன் இருமொழிப் புலமையாளர் என்பது தெளிவு. இப்பாடலில் சுட்டப் பெறுபவன் நரேந்திரப் போத்தரையன் ஆகிய முதலாம் மகேந்திரவர்மன். வரலாற்றுப் பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் இப்பாடலின் காலம் இவ்வேந்தனின் காலம் ஆகிய கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்றார். எனின் இதன் வரிவடிவத்தை ஆராய்ந்தவர்கள் கி.பி.9ஆம் நூற்றாண்டில் பிற்சேர்க்கையாக அத்தூணில் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பர். இப்பாடலின் கடைசி அடியில் வெண்டளை பிறழ்ந்து அயல்தளை விரவியது. இதனை வெள்ளைக்கொச்சகம் என்று நச்சினார்க்கினியர் நெறி நின்று கூறதல் தகும்.

ஆதொண்டைத் தாரினைச் சூடிய நரேந்திரப் போத்தரையன் வெண்பேடு என்ற ஊர்க்குத் தென்பால், 'சத்துரு மல்லேஸ் வராலயம்' என்ற சிவாலயத்தை எடுப்பித்தான் என்பது பாடலின் திரண்ட பொருள். சத்துருமல்லன் என்பது முதலாம் மகேந்திரவர்மனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். அவன் பெயரினால் அவ்வாலயம் வழங்கப்பெற்றது. பிற்காலத்துச் சோழவேந்தரும் தம்பெயரினால் எடுத்த சிவதத்தளிகள் விசயாலயச்சோழீச்சரம், ஆதித்தேச்சரம், இராச ராசேச்சரம், கங்கை கொண்ட சோழேச்சரம் என்று வழங்கி வருதல் இயைபு கருதி இங்கு எண்ணற்பாலது.

2. சுவஸ்திஸ்ரீ

திருந்து திருத்தணியில் செஞ்சடையீ சர்க்கு
கருங்கல்லால் கற்றளிய நிற்க – விரும்பியே
நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பிஅப்பி
பொற்பமைய செய்தான் புரிந்து.

இப்பாடல் தொண்டை நாட்டுத் திருத்தணியில் வீரட்டானேசுவரர் கோயிற்கருவறையின் தென்புறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைப் பாடியவர் பெருமானடிகள். "இவெண்பா பெருமானடிகள் தாம்பாடி அருளுத்து" என்று பொறிக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதி நோக்கத்தக்கது. ஒற்றுக்கள் சில இடங்களில் விடுபட்டன. அருளிற்று என்ற சொல் உருமாறி 'அருளுத்து' என்பது பேச்சுவழக்கு. பெருமானடிகள் என்ற பெயர் அபராசிதவர்மன் (கி.பி.895) என்ற பல்லவனுக்கு உரியது என்றும் இவன் 9ஆம் நூற்றாண்டின் இறுதியில்

வாழ்ந்தவன் என்றும் பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் ஆராய்ந்து கூறியுள்ளார். **பதினோராம் திருமுறையில் இடம்பெறும் இளம்பெருமானடிகளும் பல்லவ மரபினனாதல் வேண்டும்.**

செதுக்குவோனின் கவனக்குறைவால் சந்திப்பிழைகள் காணப் படுகின்றன. கற்றளியை என்பது கற்றளிய என்று வந்தது. அமையச் செய்தான் என்பது அமைய செய்தான் என்றுள்ளது. திருத்தணியில் ஈசர்க்குக் கற்றளி கட்டியவன் நம்பி அப்பி என்பவன். இவன் நற்கலைகளில் தேர்ச்சி பெற்றவன். **பொத்தப்பி என்பதுபோல் நம்பிஅப்பி என்ற பெயர் அமைந்தது.** இவன் அபராசிதவர்மனுக்கு நெருங்கிய அரசியல் தொடர்புடையனாதல் வேண்டும்.

அரக்கோணம் வட்டம் தண்டலம் என்ற ஊரிலுள்ள குளத்தின் மருங்கில் உள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்வரும் வெண்பா:

3. ஸ்வஸ்திஸ்ரீ

காடவர்தங் கோன்சத்தி பொற்றோட்டில் இட்டயாண்ட்
ஏடியல்ஈ ரைந்தில் இடுவித்தா(ன்) – நீடியசீர்
பல்லவமா ராயன் பசிநீக்கி தண்டலத்துக்
கல்லிவர்நீர் ஏரிக் கலிங்கும்.

இதனைப் பாடியவன் பெயர் அறியப்படவில்லை. இதன் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டென்பர் பேராசிரியர் டிவி. மகாலிங்கம்.

காடவர்தலைவன் சத்தி என்பவன் பல்லவமாராயன் என்ற பட்டப் பெயர் பெற்றவன். நீடியசீர் உடையவன். மக்களின் பசியைப் போக்கியவன். தன் பத்தாம் ஆட்சியாண்டில் தண்டலம் என்ற ஊரில் உள்ள தடாகத்திற்குக் கல்லினால் கலிங்குகட்டியவன் என்பது பாடலின் பொருள்.

இப்பாடலின் முதலடியின் இறுதிச்சீர் **யாண்ட்** என்று உள்ளது. யாண்டு என்ற குற்றியலுகரத்தின் இறுதி 'ட்' என்றே ஒலிக்கப்பட்டதுபோலும். குற்றியலுகரத்தினை உயிர்விடுநிலை [vowel release] என்பர் மொழியியலார். கலிங்கு என்பது -ம் சேர்த்துப் பிழையாகச் செதுக்கப்பட்டது. இப்பாடலின் பின்வரும் பாடல் இதுவே:

4. **அண்டத்து ளோர்மதிப்ப வன்போளி யூர்நாட்டுத்**
தண்டலத் தேரிக் கலிங்கமைத்தான் – ஒண்தமிழ்ப்
பார்மங்கை தான் விரும்பும் பல்லவமா ராயனெழிற்
பூமங்கை தங்கோன் புரிந்து.

இதனை இன்னிசைவெண்பாவாக எண்ணுதல் வேண்டும். முன் பாடலின் கருத்தினை வேறு சொற்களில் இப்பாடல் இயம்புகின்றது. இதன் காலமும் கி.பி.9ஆம் நூற்றாண்டு.

கி.பி.400-கி.பி.900 என்ற காலப் பகுதிக்குரிய ஆசிரியப்பாடல் கல்வெட்டில் கிடைக்கவில்லை. ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை ஆகிய பாவினங்கள் சில காணப்படுகின்றன. அவற்றை இங்கே காண்போம்.

கல்வெட்டுக்களில் பாவினம்

முதலில் ஆசிரிய விருத்தம் பற்றி நோக்குவோம். கி.பி.7,8, 9ஆம் நூற்றாண்டு முதலாகவே அறுசீர் ஆசிரிய விருத்தத்தின் ஆட்சி காணப்படுகின்றது. திருச்சிராப்பள்ளிக்கு வடபால் பன்னிருகல் தொலைவில் திருவெள்ளறை என்ற வைணவத்தலம் உள்ளது. இங்குள்ள புண்டரிகாட்சப் பெருமாள் கோயிலின் தென்பால் நாலு மூலைக்கேணி இருக்கிறது. இதற்கு மாற்பிடுகு பெருங்கிணறு என்பது பெயர். இக்கிணற்றின் விளம்பில் அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இப்பாடலுக்கு மேல் வெட்டப்பட்டுள்ள உரைநடைப் பகுதியில், பல்லவமன்னன் தந்திவர்மனின் நான்காம் ஆட்சியாண்டில் கிணறு தோண்டுதல் தொடங்கப்பெற்று ஐந்தாவது ஆண்டில் வெட்டி முடிக்கப்பெற்ற செய்தியும்; இதனை வெட்டுவித்தவன் ஆலம்பாக்க விசைய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்ற குறிப்பும் இக்கிணற்றிற்கு மாற்பிடு பெருங்கிணறு என்பது பெயர் என்ற செய்தியும் காணப்படுகின்றன. மாற்பிடுகு பல்லவ வேந்தர்க்குக் கப்பம் செலுத்திக் கொண்டிருந்த முத்தரையருள் ஒருவனாதல் வேண்டும்.

கல்வெட்டுப் பாடல், தந்திவர்மனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.800) பொறிக்கப்பட்டது என்பர் வரலாற்றுப் பேராசிரியர் டி.வி.மகாலிங்கம். அப்பாடலை இங்கே காண்போம்.

> **கண்டார் காணா வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்**
> **பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதேய்**
> **தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்**
> **னுண்டேல் லுண்டு மிக்கது உலகம் அறிய வைம்பினேய்.**

இப்பாடலில் 1,2,4,5 ஆம் சீர்கள் மாச்சீர்களாகவும் 3,6ஆம்சீர்கள் பெரும்பான்மையும் காய்ச்சீர்களாகவும் ஒரோவழி விளச்சீராகவும் யாக்கப் பெற்றுள்ளன. இதனுள் பயின்றுள்ள 'நில்லாதே, பண்டே, நையாதே, வைம்மினே' முதலிய ஏகார வீற்றுச் சொற்கள் யகரமெய் பெற்று முடிதல் சுட்டத்தக்கது. முன்பும் வெண்பாக்களில் இங்ஙனம்

வரும் இடங்களைக் கண்டோம். ஏகாரமும் யகரமும் இடையண்ண ஒலிகள் [palatals]. எனவே, நீண்டொலிக்கும்பொழுது ஏகாரத்தின்பின் அவ் ஒலி நீட்சியின் அடையாளமாக 'ய்' பொறிக்கப்பட்டுள்ளது என்று தோன்றுகிறது.

இப்பாடலின் திரண்ட பொருள்: "நேற்று உயிருடன் இருந்தவரை இன்று காணமுடியாதவாறு (நில்லாமை என்னும் உண்மையினை உணர்ந்தும்) இந்நிலவுலகத்தில் பொருள்கள், உறவினர்கள், மனைவி, மக்கள் என்று பாசம் வைத்து வறிதே இருந்துவிடாமலும்; இறைவன் முன்பே படைத்த கடைசி நாள் வருந்துணையும் சும்மா இருந்து நைந்து விடாமலும்; யாவராலும் தடுக்க முடியாத மூப்பு உன்னைத் தளர்ச்சியுறுத்தும் வரை காத்திராமலும்; மிக்கதாகிய சிறப்புக்குரிய செயல்களை என்றும் உலகத்தார் (உன்னை) அறிந்துகொள்ளும்படி (இயன்றமட்டில்) நிலைபெறுத்துக" என்பதாம்.

இனி, கி.பி. 7,8,9ஆம் நூற்றாண்டிற்கு உரியவை எனக் கல்வெட்டில் காணப்பெறும் மற்றொரு பாவினம் கட்டளைக்கலித்துறை ஆகும். இவ்வகை யாப்பு கி.பி.5,6ஆம் நூற்றாண்டினராகிய காரைக்காலம்மையாரால் முதன் முதல் பாடப்பட்டிருத்தலைப் பதினோராம் திருமுறையில் காணலாம். அம்மையார் பாடியுள்ள திருவிரட்டை மணிமாலை என்னும் பிரபந்தத்தில் இவ்யாப்பு பயிலப்பெற்றது. திருநாவுக்கரசரை உள்ளிட்ட அருளாளர் பலரும் கட்டளைக் கலித்துறையில் பாடியுள்ளனர். இதற்குத் திருவிருத்தம் என்ற பெயரும் உண்டு. ஒன்பது பாடல்கள் முத்தரையர் காலத்திற்குரியன வாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. முன்பு சுட்டப்பட்ட செந்தலைச் சுந்தரேசுவரரின் கோயிலின் முன்புறமுள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் பொறிக்கப்பட்டுள்ள வெண்பாக்களுடன் இக்கட்டளைக் கலித்துறைப் பாடல்களும் இடம்பெற்றன. இவை சிதைந்தனவாக உள்ளன. அவற்றை இங்கே காண்போம்.

1. நிற்கின்ற தண்பணை தோறும்தஞ் சைத்திறம் பாடிநின்றார்
   விற்கின்ற வீரர்க ளூர்கின்ற விம்பிணக் குன்றுகள்
   ணெற்குன்ற யானை . . . . . ன்ம . . . . .
   . . . .

2. பால்கொண்ட செவ்வாய் விளையா மொழிப் பருவத்துமுன்னம்
   வேல்கொண்ட. . . . .

3. மறப்படை மீனவன் வல்லரண் பல்லவன் சேனைக்கன்று
   புறப்படு மாறு பொருகளிற்று . . . .

இவற்றைப் பாச்சில்வேள் நம்பன் (அ) கோட்டாற்றிளம் பெருமனார் பாடினார். பின்வரும் பாடல்களைக் கிழார்க் கூற்றத்துப் பவதாய மங்கலத்து அமருண்ணியை (-லை) ஆயின குலாலங் காஞ்சன் யாத்துள்ளார். இவை சிதைந்தனவேனும் கட்டளைக் கலித்துறைக் குரியவை என்பது நுணுகி நோக்குவார்க்குப் புலனாகும்.

1. பேரிலைப் பங்கயங் கூம்பப் பிறையின் குறுமுளைப்போர்
 தீரிலைக் கொள்ளும் பதமி. . .ணி யரணமூட்ட
 சூரிலை . . . . .கழன்ம. . . . . .
 . . . .

2. சொற்புகு தொண்டைக் கனிபுகு தூமதி போன்முகத்தாள்
 பொற்றக வெற்புப் புகுதிகண் டாய்புக ழிப்பொருதார்
 கற்புக விற்புக கண். . .வன் கள்வர கள்வன் தஞ்சை
 நற்புக ழாளன். . . . .

3. சேட்டிணர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக்
 மூட்டின சீற்றம்முன் சென்றது பின்பு பகட்டினத்தோர்
 கே. . . . .மாறன் கடிநக. . . . .

4. பனையைப் பகடுகூ டாயன்று பல்லவன் வெல்லத் தென்னன்
 முனையைக் கெடச்சென்ற மாறன் முகில்வளர் பீலிஉந்தச்
 சுனையைச் சுனைமணிப் பாறைஅப் பாறைசொல் லென்விளைந்த
 வினையைப் பாரமு விருக்கி. . . . .

இப்பாடல்கள் சிலவற்றில் அணிநலம் வாய்ந்திருத்தல் அறியத்தக்கது.

பின்வரும் இருபாடல்களையும் அமருண்ணியை (-லை?) பாடியுள்ளார்:

1. . . . . ற்ற
 தீதுகண் டான்றஞ்சைச் செம்புல நாட்டுவெண் கோல்விண்ட
 போதுகண் டாயர் மலையப் புதுமணன் மீது செந்தீத்
 தாதுகண் டாலன்ன கோவங்க ளூர்கின்ற தாழ்புறவேய்.

2. தன்முத லாயமும் பூவையும் தன்கைக் கிளியுமுன்பிட்
 டென்முத லன்புமென் னாகச்செல் தானியக் கத்தைவிண்டார்
 வன்முதல் ச.....க்கருங்கைப் பகடுய்த்த மாறன் றெவ்வற்
 கன்முத.........ங்கடத் தேகினான் பின்.......நி.......கயே.

முல்லை நிலத்தின் வருணனை முதற்பாடலில் அமைந்துள்ளது. 'புறவே' என்பது 'புறவேய்' என்று வந்தது. இரண்டாவது பாடல் அகப்பொருள் கொண்டது. பாடல்களின் சிதைவிற்குக் காரணம் காலம் மட்டுமன்று; இடப்பெயர்வும் பகைவரின் படையெடுப்பும் ஆகலாம்.

எங்ஙனமாயினும், **கல்வெட்டுப்புலவர்கள் யாப்பியல் மரபும் கற்பனைத்திறனும் நாட்டுப்பற்றும் ஒருங்கே வாய்ந்தவர்கள் என்பது கிடைத்துள்ள இப்பாடற் பகுதிகளினால் உணர்ந்து கொள்ளுதல் கூடும்.**

இனி, கல்வெட்டுக்களில் காணப்பெறும் **மெய்க்கீர்த்திகள்** குறித்துச் சிறிது காண்போம்.

கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தி

மன்னர்களின் மெய்ப்புகழையும் பெருஞ்சாதனைகளையும் மக்களுக்குப் பிரகடனப்படுத்தும் பாங்கில் பாடப்பெறும் பாடாண் திணைப் பாடல்களின் வளர்நிலையே மெய்க்கீர்த்தி என்று கூறப்படும் பிரபந்தம் ஆகும். **மெய்க்கீர்த்தி மாலை** என்றும் இச்சிற்றிலக்கியம் சுட்டப்படுகிறது. மெய்க்கீர்த்திகள் செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. பன்னிருபாட்டியல் உள்ளிட்ட பாட்டியல் பனுவல்களில் மெய்க்கீர்த்தியின் அமைப்பியல் பற்றிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மெய்க்கீர்த்தியின் உள்ளடக்கம் [Substance] வேந்தனின் மெய்ப்புகழும், வரலாறும், பெருந்தேவியுடன் பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்தலும் ஆகும். இதன் வடிவம் [Structure] இன்ன யாப்பில் இயற்றப்படவேண்டும் என்பது தெளிவாகக் குறிக்கப்படவில்லை. ஒவ்வோரடியிலும் நான்கு முதலாகிய சீர்கள் அமைதல் வேண்டும் என்பது வடிவம் பற்றிய முதல் வரையறை. இரண்டடிகளினால் தொடுக்கப் பெற்ற அடிவகைத் தொடை பெற்று வருதல் வேண்டும் என்பது இரண்டாவது வரையறை. இறுதிப் பகுதி உரைநடையாக முடிதல் வேண்டும் என்பது மூன்றாவது வரையறை. மெய்க்கீர்த்தியில் சொற்சீரடி பயிலுதல் வேண்டும் என்பது நான்காவது வரையறை. ஒருவகையில் மெய்க்கீர்த்தியினை **அரசுக் கவிதை** [Court Poetry] என்று கூறலாம்.

பராந்தக பாண்டியனின் மெய்க்கீர்த்தி

காலப்பழமை வாய்ந்த பாண்டியர்களின் செப்பேட்டு மெய்க்கீர்த்திகள் பலவும் பெரிதும் கலிப்பாவின் அமைப்பியலில் இயற்றப்பட்டவை. பெரிதும் ஆசிரியம் பயின்ற மெய்க்கீர்த்திகளும் சோழவேந்தர்க்கும் பாண்டிய வேந்தர்க்கும் உரியனவாகக் காணப் படுகின்றன. இங்கு, கி.பி.8ஆம் நூற்றாண்டில், **நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக்குடிச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ள மெய்க்கீர்த்தியைப் பற்றிச் சற்று நோக்குவோம்.**

"கொல்யானை பலவோட்டி" எனத் தொடங்கும் இம்மெய்க் கீர்த்தி பராந்தக நெடுஞ்சடையனின் (கி.பி.768-கி.பி.815) மூன்றாம்

ஆட்சியாண்டில் (கி.பி.771இல்) வெளியிடப்பட்டது. இதனைப் பாடிய கவிஞர் சேனாபதி ஏனாதி ஆயின சாத்தஞ் சாத்தன் என்று வரையப் பட்டுள்ளது. இக்கவிஞர் பாண்டியனின் படைத்தளபதியாகப் பணிபுரிந்து ஏனாதி என்ற சிறப்பு விருதினைப் பெற்றவர். சாத்தன் என்பானுக்கு மகன். இவரே செப்பேட்டு மெய்க்கீர்த்தி யாப்பின் தந்தை. செப்பேட்டில் இவர் பாடலைப் பொறித்தவரின் பெயர் சுத்தகேசரிப் பெரும் பணைக்காரன் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இம்மெய்க்கீர்த்தியின் பொருண்மையினைச் சுருக்கமாகக் கூறுதல் சாலும். முதல்பத்து அடிகளில் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, பாகனூர்க் கூற்றத்தைச் சேர்ந்த கொற்கைகிழான் நற்கொற்றன் என்னும் அந்தணனை முதல்வனாகக்கொண்டு மறைவல்ல அந்தணர்களின் உதவியுடன் பெருவேள்வியை முடித்த செய்தியும், வளம்மிக்க வேள்விக்குடியினை அவர்களுக்குத்தானமாக வழங்கிய செய்தியும் செப்பப்பெற்றன.

பாண்டியரின் குலவரலாறு அடிகள் 11-103 ஆகிய நீண்ட பகுதியில் விரிவாகக்கூறப்பட்டது. களப்பிரரை விரட்டியடித்து, அவரிடமிருந்து மதுரை ஆட்சியைக் கைப்பற்றிய பாண்டியன் கடுங்கோன், அவன் மகன் அவனிசூளாமணி பாண்டியன், அவன் புதல்வன் செங்கோற் சேந்தன் முதலாக நெடுஞ்சடையன் முடியப் பலரின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஒரு தொடராகப் புகலப்பட்டன.

கடுங்கோன் தொடங்கிய பிற்காலப்பாண்டியர் பரம்பரையில் தோன்றிய பராந்தக நெடுஞ்சடையனே இம்மெய்க்கீர்த்தியின் பாட்டுடைத் தலைவன். இவன் புரிந்த சாதனைகளும் சிறப்புக்களும் மிகவிரிவாகப் பாடப்பட்டுள்ளன (81-125). தேர்மாறன் என்ற பாண்டியனின் புதல்வனாகிய நெடுஞ்சடையனுக்குச் சிரீவரன் முதல் நேரியர்கோன் வரை பல பட்டப்பெயர்கள் சுட்டப்பட்டன. பெண்ணாகடத்தில் பல்லவனை வென்ற இவன் குறுநிலத்தலைவர் பலரையும் புறங்கண்டு ஒருமொழி வைத்து உலகாண்டவன் எனப் போற்றப்படுகின்றான். களப்பிரரால் பறிக்கப்பட்ட வேள்விக்குடியை இவன், கொற்கைகிழான் மரபில் வந்த நற்சிங்கன் என்னும் அந்தணின் முறையீட்டின் பேரில் மீண்டும் அவ்வூரினை அவனுக்குப் பிரமதேயமாக வழங்கினான்.

இம்மெய்க்கீர்த்தி தோன்றிய காலத்தில் மங்கலப்பொருத்தம் பார்க்கும் பாட்டியல் மரபு தோன்றவில்லை போலும்! பாடலின் தொடக்கமே "கொல்யானை பலவோட்டி" என்பது. கலியோசையும் வஞ்சியோசையும் தழுவிய முதல் 13 அடிகளை இங்கே காண்போம்:

"கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர்க் குழாந்தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பாண்டியாதிராசனால்
நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச்
சொற்கணாளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
கொற்கைகிழா னற்கொற்றன் கொண்டவேள்வி முற்றுவிக்கக்
கேள்வியந்த ணாளர்முன்பு கேட்கவென் றெடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று வேள்விக்குடியென் றப்பதியைச்
சீரொடு திருவளரச் செய்தார்வேந்த னப்பொழுதே
நீரோடட்டிக் கொடுத்தமையா னீடுபுக்தி துய்த்தபின்
அளவரிய அதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்ரனென்னும் கலியரைசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடல்முளைத்த பருதிபோல பாண்டியாதிராசன் வெளிப்பட்டு"
(1-13)

இப்பகுதியில் சங்ககாலப் பாண்டியவேந்தன் முதுகுடுமிப் பெருவழுதியின் வேள்விச்செயல் இடம்பெற்றது. பாகனூர்க்கூற்றத்தின் ஒருபகுதியே வேள்வி நிகழ்த்திய இடமாதலின் வேள்விக்குடி எனப் பெயர் பெற்றது. அதன் இயற்கை வளத்தினைச் சாத்தஞ் சாத்தன் வருணித்துள்ளார். கடைசி அடிகளில், களப்பிரர் என்னும் கொடிய பகையரசனை பாண்டியாதிராசன் ஆகிய கடுங்கோன் விரட்டியடித்து மதுரையாட்சியை நிறுவிய வரலாறு தொடர்ந்து கூறப்பெற்றது. பாண்டியன் கடுங்கோன் முதலாகப் பிற்காலப் பாண்டியர் வரலாறு தொடங்குகின்றது. அவனைப்பற்றிய மெய்க்கீர்த்திப்பகுதி ஆசிரிய யாப்பில் அமைந்துள்ளது:

"விடுகதி ரவிரொளி விலகவீற் றிருந்து
வேலை சூழ்ந்த வியலி டத்துக்
கோவும் குறும்பும் பாவுடன் முறுக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழற்
றங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை திறவிதி னீக்கித்
தன்பா லுரிமை நன்கன மமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்னர் ஒளிநக ரழித்த
கடுங்கோ னென்னும் கதிர்வேற் றென்னன்" (14-23)

அகவலோசை தழுவிப் பெருமிதநடை பயின்ற சிறந்த ஆசிரியப்பா வாக இப்பகுதி திகழ்தல் நோக்கத்தக்கது.

பாட்டுடைத்தலைவன் பராந்தகன் நெடுஞ்சடையனைப்பற்றிய மெய்க்கீர்த்திப்பகுதி இவண் தரப்படுகின்றது:

"அறைகடல் வளாகம் குறையா தாண்ட
மன்னர் மன்னவன் றென்னவர் மருகன்
மான வெண்குடை மான்றேர் மாறன்

வேறு

மற்றவற்கு மகனாகி மாலுருவின் வெளிப்பட்டுக்
கொற்றமூன் றுடனியம்பக் குளிர்வெண்குடை மண்காப்பப்
பூமகளும் புலமகளும் நாமகளும் நலனேத்தக்
கலியரைசன் வலிதளரப் பொலிவினொடு வீற்றிருந்து

வேறு

கருங்கட லுடுத்த பெருங்கண் ஞாலத்து
நாற்பெரும் படையும் பாற்படப் பரப்பிக்

வேறு

கருதாதுவந் தெதிர்மலைந்த காடவனைக் காடடையப்
பூவிரியும் புனற்கழனிக் காவிரியின் றென்கரைமேல்
தண்ணாக மலர்ச்சோலைப் பெண்ணாகடத் தமர்வென்றும்
தீவாய அயிலேந்தித் திளைத்தெதிரே வந்திறுத்த
ஆய்வேளையுங் குறும்பரையு மடலமரு ளழித்தோட்டிக்
காட்டுக்குறும்பு சென்றடைய நாட்டுக்குறும்பிற் செருவென்றும்

வேறு

அறைகடல் வளாக மொருமொழிக் கொளீஇய
சிலைமலி தடக்கைத் தென்ன வானவன் அவனே. (79-95)

இங்ஙனம் ஆசிரியம், கலி, வஞ்சி முதலிய பல்வகை யாப்பும் விரவித் தொடுக்கப்பெற்றிருத்தல் யாப்பியல் வரலாற்றில் ஒரு புதுமையாகத் தோன்றுகின்றது. பெரும்பாலும் பொழிப்பெதுகை பெற்றுவரும் நாற்சீர் பயின்ற அடிகளை இருகூறாக அமைப்பின், வஞ்சிப்பாட்டாக விளங்குதல் காணலாம்.

பாண்டியன் நெடுஞ்சடையனைப் பற்றிய வடமொழிப் பிரசஸ்தியில் அவனுடைய பராக்கிரமும், வெற்றியும், கலையுணர்வும், கொடைக் குணமும் பற்றிய சிறப்புப்பெயர்கள் உள்ளன. அவற்றைப் புலப்படுத்துதல் போல் பின்வரும் தமிழ்மெய்க்கீர்த்தியின் பகுதி அமைந்துள்ளமை காணத்தக்கது:

"சிரீவரன் சிரீமனோகரன் சினச்சோழன் புனப்பூழியன்
வீதகன்மஷன் விநயவிச்ருதன் விக்ரமபாரகன் வீரபுரோகன்
மருத்பலன் மான்யசாசனன் மனூபமன் மர்த்திதவீரன்
கிரஸ்திரன் **கீதகிந்நரன் கிருபாலயன்** கிருதாபதானன்
கலிப்பகைகண் டகநிஷ்டூரன் கார்யதக்ஷிணன் கார்முகபார்த்தன்
பராந்தகன் பண்டிதவத்ஸலன் பரிபூரணன் பாபபீரு
குரையுறுகடற் படைத்தானைக் குணக்கிராகியன் கூடநிர்ணயன்
நிறையுறுமலர் மணிநீண்முடி நேரியர்கோ **னெடுஞ்சடையன்**"
(96-104)

இப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிறப்புப் பெயர்களில் சோழன், பூழியன் (-சேரன்) என்னும் புகழ்ப்பெயர்கள் மும்மண்டலத்திலும் நெடுஞ்சடைய பராந்தகனின் ஆணை நிலவிய உண்மையினைப் புலப்படுத்துகின்றன. நற்சிங்கனுக்கு வேள்விக்குடியினை மீட்டுக் கொடுத்த அறத்தினைக் கூறும் பகுதி மெய்க்கீர்த்தியின் இறுதியில் உள்ளது. அறங்காப்பார் அடி என் முடிமேலன என்ற வாசகம் இதுவே:

"மற்றிதனைக் காத்தார் மலரடியென் முடிமேலென்று
கொற்றவனே பணித்தருளித் தாம்ர சாசனம் செய்வித்தான்..."

தாம்ரசாசனம் என்பது தமிழில் செப்பேடு என்று கூறப்பெறும். இம் மெய்க்கீர்த்தியில் நாலசைச்சீர் எனப்படும் பொதுச்சீர்கள் பயின்று வரும் பகுதியில் வஞ்சிப்பாவிற்குரிய தூங்கலோசையும், காய்ச்சீர் முன் நேர்அல்லது நிரை வரும் அடிகளில் கலியாப்பிற்குரிய துள்ளலோசையும், மாச்சீர் விளச்சீர் பயின்றுவரும் அடிகளில் ஆசிரிய யாப்பிற்குரிய அகவலோசையும், சிறுபான்மை செப்பலோசையும் விரவியும் பரவியும் வருதலின் **இந்நெடும்பாட்டினை ஒருவகை மருட்பா என்று கூறத்தகும்.** வெண்பா ஆசிரியத்தால் முடியும் பாட்டினை மருட்பா என்பது மரபு. எனின், பிறவகைப் பாக்களும் மயங்கி வருதலையும் (மருளுதல்-மயங்குதல்-கலத்தல்) ஒருவகை மருட்பா என்று எண்ணலாம்.

பராந்தகன் நெடுஞ்சடையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட சீவரமங்கலச் செப்பேடும் (கி.பி.785), சின்னமனூர்ச் சிறிய செப்பேடும், பராந்தக வீரபாண்டியனின் (கி.பி.859-கி.பி.907) தளவாய்புரச் செப்பேடும் மேற்சுட்டப்பட்ட மெய்க்கீர்த்தியைப் போலவே பல்வகை யாப்பும் விரவிவரத் தொடுக்கப்பெற்றவை. **"ஓங்குதிரை வியன்பரப்பின்"** எனத்தொடங்கும் தளவாய்ப்புரச் செப்பேட்டினைப் பாடியவன்,

"திருமலிசா சனமிதற்குச் **செழுந்தமிழ்பா டினோ னற்றை**
நிருபசேகரப் பெருங்கொல்லன் நீண்புகழ் நக்கன் எழுத்து"

என்ற பகுதி இச்செப்பேட்டின் இறுதியில் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பொருளாகக்கொண்ட மதுரைக்காஞ்சியின் முதலடியே இச்செப்பேட்டின் தொடக்கம் என்பது உணர்ந்து மகிழத்தக்கது.

கல்வெட்டு உரைநடை

பொதுமக்களுக்குச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் அறிவிப்புக்களையும் அறக்கொடைகளையும் கிரய விக்கிரயகளையும் இன்னோரன்ன பிறவற்றையும் தெரியப்படுத்தும் நோக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் உரைநடை பெரிதும் பயன்படுத்தப்பெற்றுள்ளது. பெரிய வருணனைகளோ, உவமை உருவகம் போன்ற அணிநலன்களோ, கற்பனைகளோ மிகுதியாக இவற்றில் காணப்படுவதில்லை. எனினும், உரைநடை எப்படி எழுதப்பட்டது என்பதற்குச் சில சான்றுகளை முன்பு பார்த்தோம். மேலும் சில மாதிரிகளை இங்கே காண்போம்.

திருநாதர்குன்று கல்வெட்டு

சமணர்கள் போற்றும் திருத்தலங்களில் **திருநாதர் குன்று** ஒன்றாகும். சமணத்துறவிகள் இக்குன்றில் உள்ள கற்படுக்கை அமைந்த இருப்புக்களில் தங்கிக் கடும் நோன்பு மேற்கொள்ளுதல் வழக்கம். சமணர்க்குரிய அங்காகமங்களில் கூறப்பட்ட விரதங்களையும் தவ ஒழுக்கத்தினையும் கடைப்பிடிப்பர். மக்களைவிட்டு ஒதுங்கிக் குன்றுகளை இருப்பிடமாகத் தேர்ந்து கொள்வதன் நோக்கம் மனத்தை ஒருவழிப்படுத்துதற்கே எனலாம்.

பஞ்சபரமேட்டிகளில் ஒருவராகப் போற்றப்பெறுபவர் ஆசிரியர். இவரை ஆசாரியர் என்றும் அழைப்பர். சந்திரநந்தி என்னும் ஆசாரியர் (சமணகுரு) தம் இறுதிக் காலத்தில் திருநாதர்குன்றில் ஐம்பத்தேழு நாள்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்தார். அவர் உயிர்நீத்த பாறையில் பின்வரும் கல்வெட்டு உரைநடையில் காணப்படுகின்றது:

> **"ஐம்பத் தேழன**
> **சனஞ் நோற்ற**
> **சந்திர நந்திஆ**
> **சிரிகர் நிசீதிகை"** [T.A.S. 1, 231]

இச்சிறுதொரினை, **"ஐம்பத்தேழ் அனசனம் நோற்ற சந்திரநந்தி ஆசிரிகர் நிசீதிகை"**என்று வரிசைப்படுத்தி வாசித்தல்வேண்டும். **அனசனம்** என்பது சமணரின் உண்ணாநோன்பினைக் குறிக்கும் சமயச்சொல். **யசோதரகாவியத்தில்** "அண்ணல் **அனசனத் தவம்** அமர்ந்தான்" (1,20) என்று இச்சொல் பயிலப்பெறுதல் காணலாம்.

ஆசிரியர் சந்திரநந்தி என்று எழுதுதல் செய்யுள் வழக்கு. எனின், இவ்வுரைநடையில் உலக வழக்கினை ஒட்டிச் சந்திரநந்தி ஆசிரிகர் என்று குறிக்கப்பெற்றது. இவர் நந்தி கணத்தைச் சேர்ந்த சமணச் சான்றோர் **நிசீதிகை** என்ற சொல்லிற்கு **உண்ணாநோன்பியற்றி உயிர்துறத்தல்** என்பது பொருள். பாறையில் இச்செய்தி செதுக்கப் பட்டுள்ளது. கல்வெட்டியலார் இக்கல்வெட்டினைக் கி.பி.5ஆம் நூற்றாண்டிற்கு உரியது என்பர்.

பல்லவர்பற்றிய உரைநடைக்கல்வெட்டு

இனி, பல்லவ வேந்தர் சிலரின் கல்வெட்டுப் பகுதிகளாக அமைந்த உரைநடைகள் சிலவற்றை நோக்குவோம்.

கி.பி.775-கி.பி.825 என்ற காலப்பகுதியில் காஞ்சியில் ஆட்சி புரிந்த பல்லவஅரசன் **தந்திவர்மன். இவன் தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்குத் தந்தை.** கி.பி.787இல் தந்திவர்மன் வெளியிட்ட கல்வெட்டினை இங்கே காண்போம்.

> ''ஸ்வஸ்திஸ்ரீ. பல்லவகுலதிலக பாரத்துவாஜ கோத்திரலங்காரபதியாகிய ஸ்ரீ தந்திவர்ம மஹாராஜர்க்கு வருஷ வர்த்தநம்யாண்டு பன்னிரண்டாவது. திருவல்லிக்கேணி குலங்கிழார்கள் கருமாரச் சேரிப்புலம் ஒற்றிவிட்டு, நாற்பத்தைங்காடி நெல் பொலி ஊட்ட திருவடிகட்கு திருவமிர்து மூட்டப் புகழ்த்துணை விசையரையன் முப்பதின் காடி நெல்லும் ஐங்கழஞ்சு பொன்னுங் கொடுத்து, மீட்டுத் தனதாக்கி அஞ்ஞாதி நெல்லால் இருந்நாழி தூக்குத்தலரிசியால் இராப்போனகம் சங்கசர்மனும் கூட்டிசர்மனும் இளைய சட்டி சர்மனுங் காட்டுவாரானார்கள். முட்டில்லவிப் புலத்துந் தத்தந் புலத்துங் காரைகிழான் புலத்தும் சுவாமி போகத்துட் டிருவமிர்து காட்டுவோ மானோம். இத்தர்மத் துள்ளார் யாவரேனும் கோச் சேவது செய்து செலுத்த வொட்டிக் கொடுத்தோம். ஈழ விளக்கும் வட்டிலோஹம் பானையும ரக்ஷிப்பது. **புகழ்த்துணை விசையரையன் தர்மம். இது. இதனை ரக்ஷித்தாரடி என்முடிமேலன"**

பல்லவ வேந்தர்கள் தங்களைப் பாரத்துவாசகோத்திரத்திற்கு உரியவராகக் கூறிக்கொள்ளுதல் வழக்கம். தந்திவர்மன் ஆட்சி ஆண்டு 12இல் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டது. சேர, சோழ, பாண்டியர் ஆகிய வண்புகழ் மூவர் இங்ஙனம் கோத்திரம் கூறாமையான், இவரின் வேறுபட்டுக்கோத்திரம் கூறும் பல்லவர் அயலார் என்பர் வரலாற்றாசிரியர்கள்.

இறைவனுக்கு நிவேதனம் படைப்பதற்குரிய வருவாய் தரும் கருமாரச்சேரிப்புலத்தினைத் திருவல்லிக்கேணி வேளாளர்கள் ஒற்றிக்கு விட்டு, அதிலிருந்து பெறும் 45 காடி நெல்லினைத் திருவமுது படைத்துவந்தனர். பின்னர், **புகழ்த்துணை விசையரையன்** என்பான் (-ஒரு குறுநிலத்தலைவன்) 30 காடி நெல்லும் 5 கழஞ்சுபொன்னும் கொடுத்து அந்த ஒற்றி நிலத்தினைத் தனதாக்கிக் கொண்டு ஐந்துநாழி நெல்லினால் பெறப்படும் தூய இருநாழி பச்சரிசியால் (-குத்தப்பட்ட அரிசி) இரா அமுது சங்கசர்மனுள்ளிட்ட மூவரும் படைத்து வந்தனர். தொடர்ந்து வேறுசில புலங்கள் சொல்லப் பெற்றன. இவற்றிலிருந்து வரும் வருவாயிலிருந்தும் திருவமுது படைக்கப்பட்டது. இந்த அறத்தினை புகழ்த்துணை விசையரையன் நிறுவினான். இதனைத் தொடர்ந்து பரிபாலனம் செய்பவரின் அடி முடிமேலன என்று கல்வெட்டு முடிந்துள்ளது.

நீண்ட தொடர்கள் கொண்ட வாக்கியங்கள். வழக்கில் இருந்த வடசொற்கள் விரவியுள்ளன. நிலத்தை ஒற்றி வைத்து வட்டியாகப் பெறும் வருமானம் கோயில் நிவேதனத்திற்குப் பயன்படுத்தப்பட்ட செய்தியை உணர்த்துகின்றது இக்கல்வெட்டு.

தந்திவர்மனின் மகன் மூன்றாம் நந்திவர்மன். நந்திக்கலம்பகம் இவனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு புனையப்பெற்றது. **இவன் திருவல்லம் வில்வநாதேசுவரர் திருக்கோயிலின் மகாமண்டபத்தின் வடபுறச்சுவரில் கி.பி.845இல் பொறித்துள் கல்வெட்டு இங்கே தரப்படுகின்றது:**

“ஸ்வஸ்திஸ்ரீ திருமண்டபமிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி கோ விஜயநந்தி விக்கிரம பந்மர்க்கு யாண்டு 17ஆவது படுவூர்க்கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலி வல்லமுடைய பரமேசுவரர்க்கு இன்னாட்டு ஐம்பூரணியும் விளத்தூரும் இத்தேவர் தேவதானம் அமரூன்றி மங்கலமும் விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதி மங்கலமென்னும் பேரால் ஏகக்கிராமமாக மாவலி வாணராயனான விக்கிரமாதித்த வாணராயன் விண்ணப்பத்தாலும் **காடுபட்டித்தமிழப் பேரரையன் ஆணத்தியாலும்** ஏகக்கிராமமாக்கி இவ்வமரூன்றி மங்கல முன்னித் தீக்காலி வல்லமுடைய பரமேச்வரர்க்கு இறுத்துவருகின்ற நெல் இரண்டாயிரம் காடியும் பொன்னிருபதின் கழஞ்சுமிவ் விடெல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோர் இறுப்பாராகவும் இன்னெல்லில் திருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக்காடியும் திருவுண்ணாழிகை யுள்ளாராதித்துப் பாசரிக்கும் சிவப்ராஹ்மணர்க்கு நெல்லு ஐஞ்நூற்றுக்காடியும் ஸ்ரீபலி கொட்டுவார்க்கு நெல்லு ஐஞ்நூற்றுக்காடியும் **திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பலபணி** செய்வார்க்கு நெல்லு

நானூற்றிக்காடியும் திருநந்தா விளக்குக்கும் திருமெய்ப்பூச்சுக்கும் சிதாரிக்கு மற்றும் கண்டஸ்புடிதநவ கந்மாதிகளுக்குமாகப் பொன் இருபதின் கழஞ்சும் ஆக இன்னெல்லும் இப் பொன்னும் இத்தேவர்க்கு சந்த்ராதித்தவல்லிறுப்பார்களாகவும். இப்பரிசு நிவந்தமாகச் செய்து குடுத்தோம். இத்தர்மம் பந்மாஹேச்வரரகைஷ." [Vide. S.I.I. Vol. III part 1. no. 43. p.92]

இவ்வுரையில் நடைப்பகுதியில் ஓரமைப்பொழுங்குகாணப் படுகின்றது. 'ஸ்வஸ்திஸ்ரீ" என்பது மங்கல வாசகம். கோவிஜயநந்தி விக்கிரமவன்மன் என்பது மூன்றாம் நந்திவர்மனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். மங்கல வாசகத்திற்குப்பின் இவ்வேந்தனின் இன்ன ஆட்சி ஆண்டில் இன்ன அறம் செய்யப்பெற்றது என்ற விபரம் இடம்பெற்றது. திருவல்லம் உடைய பரமேசுவரர்க்குத் தேவதானமாக வழங்கப்பெற்ற நிலங்களின் எல்லையும் அவற்றை வழங்கக்காரணமாகவிருந்த அரசியல் தலைவர்களின் பெயர்களும், தேவதான நிலத்திலிருந்து பெறப்படும் நெல்லினை உரிய முறையில் வகுத்து வழங்கிய விபரங்களும் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன. வழிபாட்டின் பொழுது ஈசன் திருமுன்னர்ப் படைக்கப்பெறும் திருவமிர்துக்கும் வழிபாடுபுரியும் ஆதிசைவர்களாகிய சிவப்பிரமாணர்க்கும், நந்தவனத்தில் மலர்கள் எடுத்து இறைவனுக்கு மாலை தொடுப்போர்க்கும், திருப்பதிகம் பாடுவார்க்கும், மற்றும் கோயில் பணிபுரிவார் பிறர்க்கும் இன்ன அளவு நெல் வழங்கப்பெற்றது என்ற செய்தி அறக்கட்டளையினைச் சிறப்பாக நிருவாகம் செய்தவரலாற்றினைப் புலப்படுத்துகின்றது. மூனறாம் நந்திவர்மன் காலத்தல் திமுறைத் திருப்பதிகங்கள் திருவல்லம் உள்ளிட்ட பல தலங்களிலும் வழிபாட்டின்பொழுது பாடப்பட்ட உண்மையும் இவ்வுரைநடைப்பகுதியில் உணரலாம். முதலாம் இராசராசனுக்கு நூறாண்டுகட்கு முன்பே திருமுறைக்குச் சிறப்பும் உரிய மரியாதையும் வழங்கிய பெருமைக்குரியவனாக மூன்றாம் நந்திவர்மன் விளங்குகின்றான். நிலக்கொடையுடன் பொற்குவைகளும் திருக்கோயிலுக்கு அறக்கொடை யாக வழங்கிய செய்தியையும் காண்கிறோம். ஈசன் கோயிலுக்கு வழங்கப்பெற்ற தருமங்களை உரைக்கும் முடிவுப் பகுதியில் "இத்தர்மம் பந்மாஹேச்வரரகைஷ என்ற காப்புரை இடம்பெறும். பெரும்பாலும் இதே அமைப்பில்தான் கோயில் அறக்கொடை பற்றிய கல்வெட்டுக்களில் உரைநடை அமைந்துள்ளது.

முதலில் உரைநடையினை ஓலையில் எழுதியிருக்கலாம்; பின்னர்க் கல்தச்சன் அதனைக் கோயில் சுவரில் வெட்டும்பொழுது ஒருவர் வாசிக்கவும் அதனைக் கேட்டு அரசாணையினைப் பொறித்தல் மரபு. அங்ஙனம் பொறிப்பவன் புலவனாக இருந்திருந்தால் எழுத்துப் பிழை சொற்பிழை, இலக்கணப்பிழை நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை.

எளிய தமிழறிவுடைய கல்தச்சன் சொல்லும் செய்திதான் முக்கியம் என்ற எண்ணத்தில் மக்கள் பேச்சு மொழியின் தாக்கத்தால் பிழை படப் பொறித்துள்ளான். எனவே, மேற்கண்ட உரைநடையில் இந்நாட்டு, இந்நெல்லில், இந்நெல்லும், கொடுத்தோம் என்ற சொற்கள் முறையே இன்னாட்டு, இன்னெல்லில், இன்னெல்லும், குடுத்தோம் என்றுபிழைபடப் பொறிக்கப்பட்டன. இவற்றை மக்கள் வழக்காகவே கருதுதல் வேண்டும். இக்காலத்திலும் இப்படி எழுதுவோர் ஊர்ப்புறங்களில் இல்லாமல் இல்லை. எனினும், கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை அரசு சாசனங்களில் எவ்வாறு பயிலப்பெற்றது என்பதற்கு இத்தகைய கல்வெட்டுப் பகுதிகள் தக்க சான்றாக விளங்குகின்றன.

கல்வெட்டுக்களில் காணப்பெறும் பல்வகைப்பாவகைகள், பாவினங்கள், மெய்க்கீர்த்திகள் பற்றிய யாப்பியல் அமைப்பினை இந்நூலாசிரியர் எழுதியுள்ள "தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்" இரண்டாம் பாகத்தில் (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீட்டில்) விரிவாகக் காணலாம்.

VII இலக்கணமும் நிகண்டும்

1. இறையனார் அகப்பொருள்

தொல்காப்பியப் பொருளதிகாரக்கல்வி அயலார் ஆட்சிக் காலத்தில் (கி.பி.400-கி.பி.600) புறக்கணிக்கப்பட்டது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், யாப்பதிகாரம் வல்லவர்களே காணக்கிடைத்தனர் என்பதும் பொருளதிகாரம் வல்லாரை யாண்டும் காணமுடியாத காலம் இருந்தது என்பதும் இறையனார் அகப்பொருள் உரையின் அவதாரிகையினால் உணரப்படும். இவ்விலக்கணநூலின் தோற்றத்திற்கும் பௌராணிகமாக ஒருகாரணமும் அதே உரையில் குறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்து மதுரைமன்னன், எழுத்தும், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தை விளங்கிக் கொள்ளுதற்கே யாதலின், பொருளதிகாரம் பெறவில்லையெனின், ஏனை மூன்றும் பெற்றும் பெரும்பயனில்லை என்று கவலையுற்று மதுரை இறைவனிடம் முறையிட்டமையால், அகப்பொருள் சூத்திரங்கள் அறுபதினைச் செப்பேட்டில் எழுதிப் பீடத்தின்கீழ் வைத்தான். கோயில்பூசகர் அந்நூலினைக் கண்டு வேந்தனிடம் கொடுத்தான்; பின்னர் அந்நூலிற்குப் பத்துப்பேர் உரைகண்டனர்; அவருள் நக்கீரர் உரையே விழுமியது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதே இந்நூலும் உரையும் பற்றிய பழைய செய்தி. இந்நூலிற்கு **இறையனார் களவியல்** என்ற பெயரும் உண்டு. இதனுள் கற்பியலும் கூறப்பட்டிருப்பினும் தலைமையும் மிகுதியும் நோக்கி இப்பெயர் அமைந்துள்ளது.

எனின், குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தில்,

"இடைவிடாப் பொழில் எழிலிகாத்தவன் இளையகோற்றொடிசேய்
இருகுலோத்தமன் மகன்வரோத்தமன் எதிரிலாப்பெருமாள்
படியில்நாற்கவி பயிலவாய்ப்பவர் பரசுபார்க்(கு) அதிபன்
பதுமவீட்டுறை பரமனால்பெறு பரிசுகாப்பவர்தாம்:
வடுவில் காப்பிய மதுரவாய்ப்பொருள் மரபுவீட்டியதால்
வழுதிஆட்சியை வளவன்மாற்றிட மதுரைகூப்பிடுநாள்
அடைவுகோத்தன அமுதசூத்திரம் அறுபதாய்ச்சமைநூல்
அமரர்கீழ்ப்பட அறிஞர்மேற்பட அருளுமூர்த்திகளே". (2)

எனவரும் பாடலில் அறுபது சூத்திரங்கள் கொண்ட அகப்பொருள் நூலினை அருளியவர் இறைவனே என்ற கருத்து தொடர்ந்து கூறப்பட்டுள்ளது. எனினும், ஆட்சி மாற்றத்தைக்கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஒருகாரணமாகக் கூறியுள்ளார். வடுவில் காப்பியம் என்றது தொல்காப்பியத்தினை ஆகும். பனம்பாரனார், "போக்கறுபனுவல்" எனக் கூறியதையே கூத்தர் பெருமான் "வடுவில் காப்பியம்" என்றார். "மதுரவாய்ப் பொருள்மரபு" என்றது மதுரம்மிக்க பொருள் இலக்கண மரபினையே ஆகும். எனவே, அகப்பொருள் உரையாசிரியரும் கவிச்சக்கரவர்த்தி கூத்தர் பெருமானும் தொல்காப்பியப் பொருள் இலக்கண மரபு மக்களிடமிருந்து மறைந்தகாரணத்தினால்தான் அகப்பொருள் இலக்கணம் அறுபது சூத்திரங்களில் மதுரை இறைவனால் அருளிச் செய்யப்பட்டது என்ற கருத்தினைப் புலப்படுத்தியுள்ளனர். தொல்காப்பிய மரபியல் நூற்பா 649 உரையில், "பிற்காலத்துப் பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் . . . முதனூல் ஆவது என்பதறிவித்தற்கும்" எனப் பொறித்துள்ளதால் பேராசிரியரும் பெருமானடிகள் ஆகிய மதுரை இறைவனே களவியல் ஆகிய அகப்பொருள் நூலினை எழுதினர் என்ற எண்ணம் கொண்டிருந்தார். ஆயினும், இறையனார் எனப் பெயர் கொண்ட சங்கப்புலவர் பாடிய "கொங்குதேர் வாழ்க்கை" (குறுந்.2) என்ற பாடலையும் மதுரை இறைவனே பாடியதாகக் கொண்டு புராண வரலாறு கற்பிக்கப்பட்ட நிலையினை, "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி" என்ற அப்பர் தாண்டகத்தினாலும் அறியலாம். உலகியல் நிலையில் ஆராய்வார் தமிழிற்குத் தெய்வத்தன்மை கற்பிக்க வேண்டும் என்ற கருத்துடையாரின் கற்பனையாகவே இக்கதையினைக் கொண்டனர். அன்றியும், இறையனார் என்பது ஒருபுலவரின் பெயர்; அவர் தொல்காப்பியம் உள்ளிட்ட பழைய இலக்கண நூல்களையும் சங்க அகத்திணை மரபுகளையும் பயின்று இயற்றிய பனுவலே பாடியவர் பெயரினால் இறையனார் களவியல், அல்லது இறையனார் அகப்பொருள் என்று வழங்கிவருகிறது என்பர். இதன்காலம் கி.பி.2ஆம்

நூற்றாண்டென்பர் மரபுவழி ஆராய்ச்சியாளர். கி.பி.5, அல்லது 6ஆம் நூற்றாண்டில் இந்நூல் தோன்றியிருத்தல் வேண்டும் என்பர் பிறர்.

இறையனார் அகப்பொருளில் பல நூற்பாக்களில், "என்மனார் புலவர்" "என்ப" (நூ.1,6,12 முதலியன) என்று முந்துநூலாசிரியர்கள் குறிக்கப்பெற்றனர். தொல்காப்பியப் பொருள்இலக்கண மரபுகளுக்கு ஒருகையேடு போல அளவினால் சிறிய இந்நூல் அமைந்துள்ளது. தொல்காப்பியச் சூத்திரக் கருத்துக்கள், தொடர்கள் பல இந்நூலில் தழுவிக்கூறப்பட்டன. இரண்டொடு சான்றுகள் சாலும்:

1. குறியெனப் படுவது இரவினும் பகலினும்
   அறியக் கிளந்த ஆற்றது என்ப. தொல்.பொருள். 128

   "குறியெனப் படுவது இரவினும் பகலினும்
   அறியக் கிளந்த இடம்என மொழிப" இறை.களவு.18

2. ......கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை தொல்.பொருள்.200

   "......கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை" இறை.களவு.21

3. ......வரைதல் வேட்கைப் பொருள என்ப தொல்.பொருள்.207

   "....வரைதல் வேட்கைப் பொருள என்ப" இறை.களவு.30

4. அவற்றுள், ஓதலும்தூதும் உயர்ந்தோர் மேன- தொல்.அகத்.28

   "அவற்றுள், ஓதலும் காவலும் உயர்ந்தோர்க்(கு) உரிய -
   இறை.களவு.36

5. தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
   எத்திறத் தானும் கிழத்திக்கு இல்லை......தொல்.கற்பு.178

   "கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல்
   புலவிக் காலத்தும் புரைவ தன்றே" இறை.களவு.47

இத்தகை ஒப்புமைக் கூறுகளினால் தொல்காப்பியமரபு முற்றிலுமாக மறைந்துவிட வில்லை என்பதும், தொல்காப்பியத்தினைக் கற்றுவல்ல ஒருபுலவனே இறையனார் என்ற பெயரில் தமிழிற்குச்சிறப்புரிமை உடைய அகத்திணை இலக்கணத்தினைக் களவியல், கற்பியல் என்ற இருபகுதியாக அமைத்து முன்னதை 33 நூற்பாக்களிலும், பின்னதை 27 நூற்பாக்களிலும் பாடியுள்ளனர் என்பதும் புலனாகும்.

களவியற் பொருண்மை

களவியலின் முதல்நூற்பா களவின் வரைவிலக்கணம் கூறுவது. அன்பின் ஐந்திணைக்களவு எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது

மறையோர் மன்றல் எட்டனுள் கந்தருவ வழக்கம் ஆகும் எனப் புலவர் கூறுவர் (நூ.1) இக்கருத்தும் தொல்காப்பியக் களவியல் முதல் நூற்பாவின் கருத்தினைக் கொண்டு கூறியதாகும். எனின், தொல்கப்பியர், “துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பு” எனக் கூறினர்; இறையனார், “**கந்தருவ வழக்கம்**” என்றார். பொருளினால் ஒன்றாயினும், பின்னைய குறியீடு முந்துநூலில் காணப்படாமையின், மிகவும் பிற்பட்ட வழக்காகத் தோன்றுகிறது. தானே அவள், அவளேதான் என வேற்றுமை இலராய்த்தலைவனும் தலைவியும் உள்ளம் ஒத்துக் காதலால் ஒன்றுபடுதலைக் களவு என்று விளக்கினார். (நூ.2) இங்ஙனம் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்ப் பாங்கன் உதவியால் குறியிடத்துத் தலைவியை அடைதலும், அவனை இன்றித் தலைவன் தானே தனியாக உள்ள பொழுது தலைவியை எதிர்ப்படுதலும் உண்டு. பின்னர், தலைவியும் தோழியும் ஒருங்குநிற்குமிடத்தில் தலைவன் புகுந்து பதி, பெயர் முதலியவற்றை வினாவிக்கொண்டு தொடர்பு கொள்ளுதற்கு முற்படுவான். (நூ.6) முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்பன மூன்றின் வாயிலாகத் தலைவன் தலைவி ஆகிய இருவரின் காதலையும் உறுதிசெய்து கொண்டபின்னரே இருவரின் கூட்டத்திற்குத் தோழி உதவுவாள். இதனைப் பாங்கியிற் கூட்டம் என்ற அகப்பொருட் கலைச் சொல்லினால் கூறுவர். எனவே, உளவியல் உணர்ந்தவள் தோழி எனலாம். திடீரென்று களவியலில், “கற்பெனப் படுவது களவின் வழித்தே” (நூ.15) என்று ஒரு நூற்பா காணப்படுகின்றது. பகல்குறி, இரவுக்குறி பற்றிய செய்திகள் கூறப்பட்டன (நூ.18-நூ.22). பிறர்க்குத் தெரியாமல் தலைமக்கள் தமக்குள் நிகழும் களவொழுக்கம் குறித்துக் குறிப்பாகவும் வெளிப் படையாகவும் ஊரார் பேசும் வம்புப் பேச்சினை அம்பல் என்றும் அலர் என்றும் இறையனாரும் குறித்தனர் (நூ.22). களவு வெளிப்படுதற்கு முன்பே மணம் முடித்தலும், வெளிப்பட்டபின் மணம் செய்து கொள்ளுதல் உண்டு (நூ.24). களவு வெளிப்பட்ட பின்னரும் தலைவன் மணந்துகொள்ளாது பொருள்வயிற் பிரிந்துபோதலும், ஓரிடத்தில் ஒதுங்கியிருத்தலும் உண்டு (நூ.25). தலைவியின் வேறுபாட்டிற்குரிய காரணத்தைக்கூறி அறத்தொடுநிற்கும் சூழ்நிலைகளையும் களவியல் வரையறுத்துக் கூறுகின்றது (நூ.29). காலம் நீட்டிக்காது மரியாதையினைக் காப்பற்றிக்கொள்ளும் பொருட்டு விரைவில் மணம்புரிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற பொருளில் தலைவி பேசும் இடங்களையும் சூழல்களையும் காணலாம் (நூ.30).

கற்பியல் பொருண்மை

கற்பியலில் ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தர்க்கு உற்றுழி உதவுதல், பொருள், பரத்தை என்ற ஆறில் ஒருகாரணமாகத்

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் ஓதப்பட்டது (நூ.35) இவ்வகைப் பொறுப்புக்கள் ஆறினும் யார் யார்க்கு எவ்வெவை உரியவை என்ற வேறுபாடும் காணலாம் (நூ.36-40). தலைவன் புறத்தொழுக்கத்தினைக் கண்டித்தற்கு அக்காலத்துப் பெண்களுக்குக் கிடைத்த ஒரே ஒரு படைக்கருவி மீண்டும் வரும் தலைவனை அண்டவிடாது ஊடல் மேற்கொள்ளுதலே ஆகும்.

அகத்திணைக்குரிய பாட்டு திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடன், காலம், எச்சம், மெய்ப்பாடு, பயன், கோள் என்ற பத்துவகை உறுப்புக்களைக் கொண்டது என்றார் இறையனார் (நூ.56). இக்கருத்து, தொல்காப்பியம் செய்யுளியலின் முதல் நூற்பாவில் கூறப்பட்ட செய்யுள் உறுப்புக்கள் சிலவற்றைத் தொகுத்துக் கூறுவதாக அமைந்தது. ஆதலின், பொருள் இலக்கணம் கூறப்பட்டபின் அதனைச் செய்யுளாகப் படைக்கவிரும்பும் பாவலர்க்கு நெறிகாட்டும் பாங்கில் இவ்விதிகள் அமைந்துள்ளன எனலாம். சொல்லதிகாரத்தில் கூறப்பட்ட சொல்லெச்சம், குறிப்பெச்சம் குறித்துக் களவியல் கூறியது (நூ.58). எல்லாச் செய்திகளையும் காதலர்களும், தொடர்புடைய வாயில்களும் பட்டவர்த்தனமாகப் பேசுதல் அநாகரீகம் என்ற உயரிய எண்ணத்தில் தான் இவ்விரண்டு வகை எச்சங்களையும் இந்நூல் எடுத்துரைத்தது எனலாம்.

இவ்வுலகத்துத் தலைவன் தலைவி ஆகியோரின் உள்ளத்தில் நிகழும் அன்பின் உயர்ச்சியைச் சார்ந்து களவு, கற்பு என்ற ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட்டன என்று இறுதிநூற்பா சுட்டுகின்றது (நூ.60). எனவே, இவ்வுலகத்தோர் (-ஈண்டையோர்) அல்லாத உம்பர் உலகத்தார்க்கு இவை கூறப்பட்டன அல்லது என்பது கருத்து. அக ஒழுகலாறு மனித முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நூற்பாவிற்கு முந்தைய நூற்பா (59),

> " . . . .
> கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
> கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே."

என வருகிறது. இந்நூற்பா, தொல்காப்பியத்தில் வேற்றுமை மயங்கியல் (நூ.34) இடையியலின் (நூ.48) புறநடையாக முன்பே காணப்பட்டது. ஆதலின், இறையனார் களவியலில் இதுவேஇறுதி நூற்பாவாக அமைதற்கு உரியது எனத் தோன்றுகின்றது.

இனி, இந்நூலிற்குரிய உரையினைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூறுதல் தகும்.

இறையனார் அகப்பொருள் உரைத்திறம்

இந்நூலின் உரையாசிரியர் நக்கீரர் என மரபாகக் கூறப்பட்டு வருகின்றது. எனின், உரை வரலாற்றினைக் கூறும் பகுதியில், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர், அவர் மகன் கீரங் கொற்றனார், பின்னர் வந்த தேனூர்க்கிழார், படியங் கொற்றனர். செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார், மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார், செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமரனார், திருக்குன்றத்தாசிரியர் மாதளவனார் இளநாகனார், முசிறியாசிரியர் நீலகண்டனார் எனப் பத்துப்பேர் தலைமுறை தலைமுறையாக இவ்வுரையினைக் கூறிவந்தனர் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. எனவே, முதலில் உரைசெய்தவர் நக்கீரர் என்பதும் அவருக்குப்பின் இவ்வுரை ஆசிரியர் மாணவர் மரபில் வளர்ந்துவந்துள்ளது என்பதும் போதரும். எனினும், இறையனார் அகப்பொருள் சங்க காலத்திற்குப்பின் களப்பிரர் காலத்தில் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்ற கருத்து வன்மை பெற்றுள்ளதால், மேற்சுட்டப்பட்ட குருசீடப் பரம்பரை நூலிற்கும் உரைக்கும் தொன்மை கற்பிக்கப் பின்வந்தோர் சுட்டிய புனைவுபோல் தோன்றுகின்றது. ". . . .இங்ஙனம் வருகின்றது உரை" (ப.9) எனக்கூறப்படுவதால் இப்போது அச்சிடப்பெற்றுள்ள வடிவத்தில் அதனைத் தொன்மை உரையாகக் கொள்ளுதற்கு இல்லை.

இவ்வுரையில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் மதுரைமாநகரில் அரசோச்சிய நின்ற சீர் நெடுமாறனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட 325 பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்பெற்றிருத்தலின், கி.பி.7 அல்லது 8ஆம் நூற்றாண்டளவில் இது தோன்றியிருத்தல் வேண்டும். உரையாசிரியர் பன்னூற் பயிற்சியாளர். தொல்காப்பியம், குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை முதலிய நூல்களை இவர் மேற்கோள் காட்டியுள்ளார். சிலப்பதிகாரம், கானல்வரிப்பாடலையும் எடுத்துக்காட்டினார் (ப.81). பரந்தகல்வியாளர் ஆகிய இவர் உரை அருஞ்சொல் பயின்று பெருமிதம் மிக்க நடைபயில்வது. பல பழைய அரிய செய்திகளும், நூல்பற்றிய கருத்துக்களும், இலக்கணக் கோட்பாடுகள் பற்றிய விளக்கங்களும் இவர் உரையில் காணலாம். ஓரிரு சான்றுகளைச் சுட்டுதல் தகும்.

முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்று மூவகைப்பட்ட நூலினையே முன்னூலார் குறித்துள்ளனர். எனின், இவர் அவற்றுடன் "எதிர்நூல்" என்பதையும் சேர்த்து நால்வகை என்றார். **"எதிர்நூல் என்பது முதனூலின் முடிந்த பொருளை ஓர் ஆசிரியன் யாதானும் ஒருகாரணத்தான் பிறழவைத்தால், அதனைக் கருவியால் திரிவுகாட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒருபுலவனால் உரைக்கப்படுவது"** என்று விளக்கம் தந்தார். மேலும்,

> "தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்பது
> எதிர்நூல் என்ப ஒருசா ரோரே"

என ஒரு நூற்பாவினையும் மேற்கோள் கூறினார். இது பிறர் நூலிலிருந்து எடுக்கப்பட்டதா? அன்றி இவரே யாத்துக் கோத்ததா? எவ்வாறாயினும் பிறர்கருத்தை மறுத்துத் தன் கொள்கையினை நிலைநாட்டும் நூல்கள் தத்துவங்கள் வளர்ச்சிபெற்ற பல்லவர் காலத்தில் தமிழிலும் வடமொழியிலும் எழுதப்பட்டன. அவற்றைக் கருத்தில்கொண்டு எதிர்நூல் என்ற வகையினைக் குறித்துள்ளார் எனலாம்.

தொல்காப்பியர் காலத்தில் மூவகையாக விளங்கிய தமிழ் இலக்கணம் இவ்வுரையாசிரியர்கள் காலத்தில் நான்காக வளர்ந்தது. **"தமிழ் நான்கு வகைப்படும். எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என"** (14) எனக் கூறுதல் காணத்தக்கது. சங்க காலத்திற்குப்பின் எழுந்த **காக்கைபாடினியம்** என்ற நூலிலும் இந்நான்கு வகைப் புதுமரபு கூறப்பட்டதிறத்தினை முன்பே சுட்டியுள்ளோம்.

இவர் திணை என்பதற்குத் தரும் விளக்கம்: **இனி, ஒழுக்கத்தினைத் திணை என்பாரும், நிலத்தினைத் திணை என்பாரும் என இருபகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது. ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. என்னை? விளக்காகிய சுடர் இருந்த இடனும் விளக்கு எனப்பட்டது போல என்பது"**(ப.23-4). எனவே, திணை என்ற சொல் ஒழுக்கம் என்பதை முதலில் உணர்த்திப்பின் அது நிகழும் இடத்தினைக் குறித்தது என்பது இவர் கருத்தாதல் தெளிவு. நாண், மடம், அச்சம், பயிர்ப்பு, வேட்கை என்பவற்றிற்கு இவர் தரும் விளக்கம் சிறப்புடையது (ப.34).

இங்ஙனம், வடமொழி நூல்களில் கூறப்படும் எட்டுவகை மணங்களுக்கும் இவர் கூறிய விளக்கம் நோக்கத்தக்கது. இவ்வெட்டுமே உலகியலில் காணப்படுவது என்றார் (ப.26-27). கற்பியலில், பிரிவு வகைகளுக்கு இவர்தரும் விளக்கம் சிறப்புடையது. ஓதற்பிரிவுக்கு இவர் தந்துள்ள விளக்கத்தை மட்டும் இங்குக் காண்போம்:

> ". . . .தலைமகளை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவான் எனின், முன் ஞானம் இலனாம்; இலனாகவே ஞானத்தின் வழியது ஒழுக்கம் ஆகலானும், ஒழுக்கத்தின் வழித்துத் தலைக்குலம் ஆகலானும் இவையெல்லாம் குறைவுபட்டானாம். . . . இவையெல்லாம் சொல்லப் பெரிதும் மாறுகொண்டு காட்டிற்று எனின், மாறு கொள்ளாது; மாறு கொள்ளாமைக்குக் காரணம் என்னையோ எனின்:

> ஓதற்குப் பிரியும் என்பது கற்பான் பிரியும் என்பது அன்று; பண்டே குரவர்களால் கற்பிக்கப்பட்டுக் கற்றான் அறம், பொருள், இன்பம், வீடுபேறுகள் நுதலிய நூல்களெல்லாம்; இனிப் பரதேசங்க ளிலும் அவை வல்லார் உளரெனிற் காண்டற்கும், வல்லார்கள் உள்வழிச்சென்று தன்ஞானம் மேற்படுத்து அவர் ஞானம் கீழ்ப் படுத்தற்கும் பிரியும் எனக் கொள்க" (ப.158-9).

எனவே, கல்விபற்றிய அக்காலக் கோட்பாடு ஒன்றினை உரை சுட்டுகின்றது. கற்ற கல்வியின் ஆற்றலை நிலைநாட்டும் பொருட்டும் எதிர்ப்படுவோரை வென்று வாகை சூடுதற்பொருட்டும் தலைவன் திருமணத்திற்குப்பின்னர் ஓதற்பிரிவு மேற்கொள்ளும் வழக்கத்தினை உரையாசிரியர் சுட்டியுள்ளார். பரதேசங்களில் சென்று அறிவுத்திறனை நிலைநாட்டுதல் என்பது காஞ்சி மாநகரிலிருந்து நாளந்தா முதலிய அயல் மாநிலங்களில் உள்ள அறிவுக் கேந்திரங்களுக்கும், கடல்கடந்து இலங்கை, சீனம் முதலிய நாடுகளுக்கும் சென்று தம் புலமைத்திறத் தினை நிலை நாட்டிய புத்ததத்தர், திக்கநாகர், தருமபாலர், போதிதருமர் முதலிய பௌத்தப்பெரியார்களைக் கருத்திற்கொண்டு கூறப்பட்டதாகத் தோன்றுகின்றது. சங்கரர் போன்றோரும் இங்ஙனம் திக்குவிசயம் செய்தவர்களே. அன்னாரையும் எண்ணியிருக்கலாம். எனின், இவர்களிற் பலரும் துறவிகள். உரையாசிரியர் திருமணம் செய்து கொண்ட ஆன்றோரும் இத்தகைய நோக்கத்துடன் ஓதற்பிரிவு மேற்கொள்ளலாம் என்ற கருத்திலும் அல்லது ஓதற்பிரிவு மேற்கொண்டனர் என்ற மரபிலும் இவ்வாறு விளக்கம் தந்திருக்கலாம்.

எனின், ஒருசில இடங்களில் இடைக்காலப் பௌத்த, சமணச் சார்பு காணப்படுகின்றது. சான்றாக. "பெண் என்பது எற்புச் சட்டகம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியாப் பார்க்கப் பருந்தார்க்கும் தகைமைத்து. (-மணிமேகலை, நாலடியாரில் வருவது); ஐயும் பித்தும் வளியும் குடரும். . . இவற்றது இயைபு பொருளன்று; பொருளாயின் பூவே, சாந்தே, எண்ணெயே, அணிகலனே என்றிவற்றால் புனையவேண்டா, தான் இயல்பாகவே நன்றாயின் என்று அதன் அசுபத்தன்மை உரைப்பக்கேட்டு நீங்குவர்." (ப.10).

இப்பகுதி யோகநூலாகும் பௌத்த நூலாரும் கூறும் அசுபபாவனையினை வலியுறுத்திக் காமத்தினின்றும் மனிதனை மீளச் செய்து மெய்ப்பொருள் நாட்டத்தில் செலுத்துவது. ஆயின், இறையனார் களவியல் காதலின் மேம்பாட்டினைக் கூறும் பொருட்டு எழுதப்பட்டது. எனின், உரையாசிரியர் சமய, தரிசனங்கள் தழைத் தோங்கிய காலத்தில் வாழ்ந்தமையால் இங்ஙனம் எழுதியுள்ளார் என்று கருதலாம்.

செம்மாந்தநடை

இவர் செம்மாந்த நடையில் எழுதும் இயல்பினர். இலக்கியச் செவ்வியல் நடைக்கு ஒருசான்று காண்போம். “.....அவனும் கற்கந்தும் எறிபோத்தும் கடுங்கண் யானையும் தறுகட்பன்றியும், கருவரையும் இருநிலனும், பெருவிசும்பும் அனையார், ஆளிமொய்ம்பினர், அரிமான்துப்பினர் பற்பல் நூறாயிரவர், கூர்வேல் இளையர் தற்சூழச் செல்வன் என்பது. இவளும் உடன்பிறந்து உடன்வளர்ந்து, நீருடன் ஆடிச் சீருடன்பெருகி, ஒலுடனாட்டப்பாலுடனுண்டு, பல்லுடனெழுந்து, சொல்லுடன் கற்று, பழமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார், பற்பல் நூறாயிரவர் கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதி போலச் செல்வாள் என்பது'' (ப.31). **அந்தாதித்தொடையில் இவர் உரைநடை எழுதியுள்ளார்.** சான்றாக, “அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீராண்டு வற்கடம் **சென்றது. செல்லவே** பசிகடுகுதலும் ......வம்மின் **என்றான். என,** அரசனை விடுத்து ...பன்னீரியாண்டு **கழிந்தது. கழிந்தபின்னர்** ...... மழை **பெய்தது. பெய்த பின்னர்** ......” (ப.6,7).

தமிழ் உரைநடை கி.பி.7,8ஆம் நூற்றாண்டளவில் கற்றவர்களால் எவ்வாறு எழுதப்பட்டது என்பதற்கு இறையனார் அகப்பொருள் உரைநடை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. கி.பி.7ஆம் நூற்றாண்டில் வடமொழியில் பாணகவி எழுதிய காதம்பரி என்னும் உரைநடைக் கதைஇலக்கியத்தில் மிக மிக மிக நீண்டு செல்லும் வாக்கிய அமைப்புடன் இறையனார் களவியல் உரையின் மிக நீண்ட வாக்கிய அமைப்பினை இயைத்து நோக்குங்கால், அடிநிமிர்ந்தோடிய உரையாப்பு அக்கால இந்திய இலக்கியப் பொதுப்பண்பாகக் கருதுதற்குரியது எனலாம். இறையனார் களவியல் மூலமும் உரையும் கழகப்பதிப்பாக (1953) வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இனி, **தமிழ்நெறி விளக்கம்** என்ற அகப்பொருள் இலக்கண நூலினை நோக்குவோம்.

2. தமிழ்நெறிவிளக்கம்

விளக்கம் எனப்பெயர் அமைந்த நூல்கள் பல. நாற்கவிராச நம்பியின் **அகப்பொருள் விளக்கம்,** வைத்தியநாத நாவலரின் **இலக்கண விளக்கம்,** வீரமாமுனிவரின் **தொன்னூல் விளக்கம்** என்பன சில இலக்கண நூற்சான்றுகள். மெய்கண்டாரின் மாணாக்கருள் ஒருவராகிய திருவதிகை மனவாசகம்கடந்தார் அருளிய **உண்மை விளக்கமும்** குமரகுரபரர் பாடிய **நீதிநெறிவிளக்கமும்** நினைக்கத் தக்கவை. இந்நூல்கள் யாவுமே **தமிழ்நெறிவிளக்கம்** தோன்றியபின் எழுந்தவை. எனவே, விளக்கமாக ஒரு பொருளைப் பாடும்புலவர் அந்நூலிற்கு அப்பொருள் சார்த்தி விளக்கம் எனக் குறியிடும் மரபினையே மேற்சுட்டிய பனுவல்கள் உணர்த்துகின்றன.

தமிழ்நெறிவிளக்கம் என்ற நூற்பெயரில் தமிழ்நெறி என்பது தமிழுக்குச் சிறப்புரிமை கொண்ட அகப்பொருள் நெறியைக் குறிப்பது. எனவே, இறையனார் அகப்பொருளுக்குப்பின் அதனைத் தழுவி எழுந்த நூலாகத் தமிழ்நெறி விளக்கம் திகழ்கின்றது. கி.பி.10,11ஆம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பருங்கல விருத்தியில்,

> "தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
> களவெனப் படுவது கந்தருவ மணமே" (யா.வி.நூ.96 மேற்)

எனவரும் அவிநயச் சூத்திரத்தினையும்;

> "தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை வழக்கு" (களங்காண்.61)

என்னும் கம்பராமாயணத் தொடரையும் எடுத்துக்காட்டித் தமிழ்நெறி விளக்கத்துடன் தொடர்புறுத்திக் கூறுவாரும் உளர். இந்நூல் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய திவாகர நிகண்டுக்கு முற்பட்டது என்றும் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி.9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டது என்றும் ஆராய்ச்சி அறிஞர் கருதுவர்.

நூலின் அமைப்பு

இப்போது இந்நூலில் 25 நூற்பாக்களே உள்ளன. இவை செறிவுடையவை. அறுபது நூற்பாக்களினால் அமைந்த இறையனார் அகப்பொருளைச் சுருக்கி இந்நூல் எழுதப்பட்டதாகத் தோன்றுகின்றது.

பொருள் இலக்கணத்தினை அகப்பொருள், புறப்பொருள் என்று இருவகையாகப் பாகுபாடு செய்வதே தொல்காப்பியர் காலத்து மரபு. எனின், பின்வந்தோர் அகம், புறம், அகப்புறம் என்று மூன்றாகப் பாகுபாடு செய்யும் இலக்கணப் பள்ளியைச் (- school of grammarians) சேர்ந்தவர் இந்நூலார். இக்கருத்தினை,

> "அகத்ததும் புறத்ததும் ஆயிரு பகுதியின்
> மிகுத்ததும் ஆகி விரிந்தது பொருளே" (நூ.1)

எனவரும் முதல் நூற்பாவும் அதன் உரையும் புலப்படுத்தல் காணலாம். இந்நூலார்க்குக் காலத்தால் முற்பட்டவர் என்று மதிக்கத்தக்க அவிநயனாரின் கருத்தினை,

> "இனி, ஒருசாரார் அகத்திணை, புறத்திணை, அகப்புறத்திணை என மூன்றாய் அடங்கும் என்ப. ஆமாறு அவிநயத்துட் காண்க." (யா.வி.ப.573)

என்று யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் பொறித்துள்ளதால் புலனாகும். எனவே, ஐந்திலக்கணநூல் என்று கருதப்படும் மறைந்துபோன

அவிநயத்தில் மேற்சுட்டிய மூவகைப் பொருட்பாகு இருந்தது என்றும், அவருக்குப்பின் வந்த தமிழ்நெறி விளக்கத்தார் அதனை வழி மொழிந்தனர் என்றும் எண்ணுதல் பொருந்தும். வீர சோழிய உரையிலும் இவ்வகைப் பாகுபாடு சுட்டப்பட்டது (வீ.சோ.ப.117).

களவியல், கற்பியல் என்ற பகுப்புடைய இந்நூலில், முதல் 13நூற்பாக்களும் தொல்காப்பிய நெறியைப்பின்பற்றி அகத்திணையியல் மரபுகளைத் தொகுத்தும் சுருக்கியும் கூறுதல் நோக்கத்தக்கது. அகப் பொருள் என்பது முதலும் கருவும் சார்ந்துவரும் உரிப்பொருள் (நூ.2). ஐந்திணைக்குரிய இடம், பெரும்பொழுது, சிறுபொழுது முதலியனவும் மொழியப்பட்டன (நூ.3.5). தெய்வம், மானிடம், செய்தி (-செயல்), உணவு, இசை, விலங்கு என்ற ஆறினைமட்டும் விதந்தோதிப் பிறவும் கருப்பொருள் என்றார் ஆசிரியர் (நூ.6). இந்நூற்பா, 'தெய்வம் உணாவே' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவை நினைவுறுத்துவது. கருப்பொருள் வரிசையில் தெய்வத்தைச் சொல்லிய தொல்காப்பியர் மக்களைச் சுட்டவில்லை. எனின், வரும் நூற்பாக்களில் குறித்துள்ளார். ஆயின், தமிழ்நெறி விளக்கத்தில் மானிடம் தெய்வத்தினைச் சார்ந்து கூறப்பட்டிருத்தல் காணத்தக்கது. பாலைக்குத் தெய்வம் தொன்னூலில் சுட்டப்படவில்லையெனினும் கொற்றவையினையும் கதிரவனையும் உரையாசிரியர்கள் கொண்டனர். எனின், இந்நூலில்,

> "முருகனும் இரவியும் மாயனும் வேந்தனும்
> வருணனும் ஆக வகுத்தனர் கொளலே" (நூ.7)

எனவருதல் காணலாம். பின்வரும் நூற்பாக்களில் திணைமக்களின் பெயர், தொழில், உணவு, இசை, மரம் முதலியனவும் ஐவகை உரிப்பொருளும் திட்ப நுட்பம் செறிய ஓதப்பட்டன (நூ.8-13).

களவியல் நூ.14 முதல் நூ.20 முடியவும்; கற்பியல் நூ.21 - நூ.25 முடியவும் அமைக்கப்பட்டுள்ளன. களவொழுக்கத்தினை இயற்கைப்புணர்ச்சி, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டத்துப் பகற்குறி, இரவுக்குறி, வரைவுகடாதல், உடன்போக்கு வலித்தல் என்று அறுவகைப் பிரிவுகளாக அமைத்துள்ளார் இந்நூலார். இடந்தலைப்பாடு விடுபட்டது. களவின் இலக்கணத்தினை,

> "முந்திய நூலோர் மொழிந்தஎண் மணத்திலும்
> கந்திருவம் முறைமை களவெனப் படுமே" (நூ.14)

என்று வரையறை செய்தனர். எனின் முந்துநூலோர், களவெனப்படுவது யாழோர் கூட்டத்தோடு ஒருபுடை ஒப்புமை உடையதாகக் கருதினர். கந்திருவம் என்ற சொல்லாட்சி இறையனார் அகப்பொருளின் பயிற்சியைக் காட்டுகின்றது. அடுத்து இயற்கைப் புணர்ச்சி முதலிய அறுவகைக் கூறுகளுக்கும் இலக்கணம் சொல்லப்பட்டது (நூ.15-20). கற்பொழுக்கம்

என்பது 1. அறத்தொடுநிலை 2. உடன்செலவு 3. சேயிடைப்பிரிவு 4. ஆயிடைப்பிரிவு என்பன நான்கும் என்றார் இந்நூலார் (நூ.21).

அறந்தொடுநிலை, உடன்போக்கு என்ற இரண்டினையும் கற்பியலின் தொடக்கத்தில் வைத்துள்ளார் (நூ.22,23). இவ்வமைப்பு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் தலைவனுடன் கொண்ட தொடர்பே என்ற உண்மையினைத் தலைவி தோழிக்குக் கூறியபின், தோழி செவிலியுடன் அறத்தொடுநின்று புலப்படுத்தும் பொழுதும்; ஊரலர் பேசும் கொடுமையினைத் தாங்க முடியாது தலைவன் தலைவி இருவரும் வெளியேறிச் செல்லுதலும் ஆகிய களவியலின் கடைசி நிகழ்வுகள் திருமணத்தில் முடிந்து கற்பொழுக்கத்திற்குத் தோற்றுவாயாக அமைதலின், அறத்தொடுநிலை உடன்போக்கு என்பன இரண்டனையும் கற்பியலின் தொடக்கமாக வைத்தனர். ஓதற்பிரிவு, வேந்தற்கு உற்றுழிப்பிரிவு, பொருள்வயிற்பிரிவு முதலியன யாவும் **"சேயிடைப்பிரிவு"** கூறும் ஒரே நூற்பாவிலும் (நூ.24), பரத்தையிற் பிரிவும் அது தொடர்பான செய்திகளும் **ஆயிடைப்பிரிவு** பற்றிய நூற்பாவிலும் (நூ25) தொகுத்துக் கூறப்பட்டன.

மிகச் சுருக்கமாக அமைந்த இந்நூலிற்கு விளக்கமாக அமைந்தது உரையே. எனவே தமிழ்நெறிவிளக்கம் என்பது உரை விளக்கத்தால் சிறப்புறுகின்றது. உரையாசிரியர் காட்டியுள்ள மேற்கோள் பாடல்களின் உதவியால் இந்நூலைச் செய்தவர் தஞ்சை மாவட்டம் ஐயம்பேட்டைக்கு வடபால் குடமுருட்டி யாற்றின் தென்கரையில் உள்ள வழுத்தூரில், தூய்மைசான்ற தொல்குடியில் தோன்றிய **மதிதரன்** என்று எண்ணப் பெறுகின்றார். (**தமிழ்நெறி விளக்கம்** ப.12,19,23). இவரே இந்நூலிற்கு உரையும் துறைவிளக்கச் செய்யுளும் செய்தவர் எனக் கருதுவார் சிலர். உரையாசிரியர் வேறானவர் என்பாரும் உளர். ஆசிரியப் பாக்கள் மட்டுமே இந்நூலில் துறைகளுக்கு உதாரணச் செய்யுளாகக் காட்டப்பெறுதல் ஒருதனித்தன்மை ஆகும்.

அரியசெய்திகள்

தலைமகன் வாட்டத்திற்குக் காரணம் கேட்கும் பாங்கன், "மூவகை நுண்ணிய பனுவலின் நுழைந்து கொல், என்னைகொல் வாடியது அண்ணல் நின் எழிலே" (நூ.16. மேற்கோள்) என்று வினவுகின்றான். மூவகைப் பனுவலாவது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் நூல்கள். பாண்டிக்கோவையில் பாங்கன் வினாவில் இயல் மட்டுமே சுட்டப்பட்டது (25); திருக்கோவையாரில் இயலும் இசையும் சுட்டப்பட்டன (20). எனின், இந்நூலில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் நூல்களில் நுழைந்து ஆழ்ந்துவிட்டதால் தளர்ச்சியுற்றனையோ என வினவுவதாக வந்தது.

காப்பின் இரங்கிக் கையற்றுப்பேசும் துறையில் அமைந்த "யாயே துயில் மறந்தனளே" என்ற பாடல், "இரும்பிழி மகாஅர்இவ் வழுங்கல் மூதூர்" (அகம்.122) என்ற சங்கப்பாடலின் சாரமாக உள்ளது.

மகட்போக்கிய செவிலியை இடைச்சுரத்துக் கண்டோர் கூறுவதாக அமைந்த பாடல் இதுவே:

"மடவரல் மாதர்க்கு வருந்தா தீமோ
கடல்வயிறு பயந்த நித்திலம்
உடையோர்க்(கு) ஆதல் உலகியல் வழக்கே" (ப.45)

இப்பாடல், "......தண்குமரி,

முந்நீர் பயந்தால் அணிவார் பிறர் என்ப முத்தங்களே"
(பாண்டிக்கோவை, 199)

"சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்(கு) அல்லதை
நீரிலே பிறக்கினும் நீர்க்கவைதாம் என்செயும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே"
(பாலைக்கலி 9:15-7)

எனவரும் பாடல்களின் சாரமாக விளங்குகின்றது.

ஓதற்பிரிவினை,

"வரம்பில் கேள்விப் பெரும்பெயர்ப் பனுவல்
பதினெண் மொழியிற் பயன்கொள விரிக்கும்
மதிபுரை கேள்வி மதியோர் நசைஇப்
பிரிவர்நம் காதலர் பிறபுலம் படர்ந்தே" (ப.48)

எனவரும் பாடல் விளக்குகின்றது. இப்பாடலில் பதினெட்டு மொழிகளில் புலமை பெற்ற திங்களன்ன கல்வியாளரின் சிறப்பு கூறப்பட்டது. கி.பி.5,6ஆம் நூற்றாண்டினராகிய திருமூலர்,

"பண்டிதர் என்போர் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவார் என்க"

எனப் பகர்தல் காண்க.

அன்றியும் காஞ்சிமாநகரில், பதினெண் மொழிகளைப் பேசிய மக்கள் வாழ்ந்தனர் என்று சாத்தனார் மணிமேகலையில் குறித்துள்ளார் [XXVIII:221]. திவாகர நிகண்டிலும் பதினெண்மொழி பற்றிய குறிப்பு உண்டு. எனவே, பலமொழிகளில் பயிற்சிபெற்றுத்தம் அறிவின் திறத்தினை நிலைநாட்டும் பொருட்டுத்தலைவன் மேற்கொள்ளுதற்கு உரியது ஓதற்பிரிவு என்பது தெளிவு.

இதுகாறும் எழுதியவாற்றால், தமிழ்நெறி விளக்கத்தின் அருமையும் உரைமேற்கோள்பாடல்களின் பெருமையும் புலனாகும். இந்நூலிற்கு உ.வே.சா. அவர்களின் செம்பதிப்பு (1937) சிறப்புடையது.

இனி, புறப்பொருள் வெண்பா மாலையினைப் பற்றி நோக்குவோம்.

3. புறப்பொருள்வெண்பா மாலை

தொல்காப்பியர் காலத்திற்குப்பின் பொருள் இலக்கணத்தின் கூறுகளாகிய அகம், புறம் ஆகிய இரண்டற்கும் தனித்தனியே நூல்கள் தோன்றின. அகம் பற்றிய பனுவல்களில் இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம் என்பன சிறந்து விளங்குதல் போல் புறப்பொருள் பற்றிய நூல்களில் **பன்னிருபடலம்**, **புறப்பொருள் வெண்பா மாலை** என்பன சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. இவற்றுள் பன்னிருபடலத்தில் ஒருசில மேற்கோள்நூற்பாக்கள் தவிர நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. எனின், புறப்பொருள்வெண்பாமாலை முழுநூலாக உரையுடன் பயிலப்பெற்றுவருகிறது.

இந்நூலின் ஆசிரியர், சேரஅரசர் பரம்பரையில் தோன்றிய ஐயனாரிதனார் என்ற செய்தியை நூலின் முகப்பில்,

"ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட
வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க
வெண்பா மாலை எனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே"

எனவரும் சிறப்புப் பாயிரப் பகுதியினாலும்; நூலின் முடிவில்,

". . . . . .
மெய்யி னார்தமிழ் வெண்பா மாலையுள்
ஐய னாரிதன் அமர்ந்துரைத் தனவே" (நூா.18)

எனவரும் ஒழிபு நூற்பாவினாலும் அறிகிறோம்.

அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரால் இயற்றப் பட்ட வெட்சி முதல் பெருந்திணை முடிய உள்ள பன்னிருதிணை பற்றிய நூல் **பன்னிருபடலம்** என வழங்கியது. ஐயனாரிதனார் பன்னிரு படலத்தினை முதல் நூலாகக் கொண்டு புறப்பொருள் வெண்பா மாலையினைச் செய்துள்ளார் என்பது, "பன்னிருபடலமும் பழிப்பின்று உணர்ந்தோர்" என்ற சிறப்புப் பாயிர அடியினாலும் நூலமைப்பினாலும், நுவல்பொருளாலும் அறியப்படும்.

கி.பி.10,11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாப்பருங்கல விருத்தியில் இந்நூலின் பாடல்கள் மேற்கோள் காட்டப் படுதலினாலும், கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த திவாகரர் ஐயனாரி தனாரைப் பின்பற்றி நொச்சியை முதலில் சொல்லி, அடுத்து உழிஞையினைக் கூறியிருத்தலானும், திவாகரர்க்குச் சற்று முற்பட்டு கி.பி.8 அல்லது 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புறப்பொருள் வெண்பா மாலை எழுதப்பட்டிருத்தல்வேண்டும். இருவருக்குமே முந்து நூல்கள் பிறவும் இருந்தன எனலாம். இதன் விரிவினைப் **புறத்திணை வாழ்வியல்** என்ற நம் ஆய்வுநூலில் காணலாம். ஐயனாரிதனார் சைவர் என்பது விநாயகர், சிவன் பற்றிப்பாடிய காப்புச் செய்யுள் களாலும், நூலினுள் முருகனைப் பற்றிய பாடலும் காணப்படுதலானும் அறியலாம்.

புறப்பொருள்வெண்பா மாலைக்கு உரை வரைந்தவர் சயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர்கிழார் சாமுண்டிதேவநாயகர் ஆவர். இங்குச் சுட்டப்பெற்ற சயங்கொண்ட சோழ மண்டலம் தொண்டமண்டலத்தையே குறிக்கும். அங்குத்தான் மாகறல் என்ற ஊரும் உள்ளது. அவ்வூரில் தோன்றிய அறிஞரே இவ்வுரையாசிரியர் ஆவர். இவர் காலம் கி.பி.15ஆம் நூற்றாண்டு.

நூலின் அமைப்பு

தெய்வ வணக்கம் கூறும் தற்சிறப்புப் பாயிரப் பாடல்கள் இரண்டும் மூத்தபிள்ளையாரையும் சிவபிரானையும் போற்றுவன. அடுத்து இடம் பெறும் சிறப்புப் பாயிரம் நூலாசிரியரின் வரலாறு, அவர்தம் புலமை, முதல்நூல், நூலின்பெயர் முதலிய குறிப்புக்களைச் சுருக்கமாகக் கூறும் நிலைமண்டில ஆசிரியப் பாவாகும். வெட்சிமுதல் பெருந்திணை ஈறாகவுள்ள பன்னிருதிணைகளுக்கும் விரிவான இலக்கணத்தினை இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது. இத்தகைய மரபு முதனூலாகிய பன்னிருபடலத்தில் காணப்பட்டதாதல் வேண்டும். ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திலும் அவ்வத் திணைக்குரிய துறைகளைத் தொகுத்துரைக்கும் நூற்பா இடம்பெற்றுள்ளது. இது நிலைமண்டில ஆசிரிய யாப்பில் அமைந்தது. பின்னர் ஒவ்வொரு துறையின் பொருண்மையினைச் சுருக்க விளக்கமாகக் கூறும் கொளு நூற்பா காணப்படுகிறது. பெரும்பாலும் கொளுக்கள் அளவடி இரண்டினால் யாக்கப் பெற்றவை. குறளடி இரண்டினாலும் சில கொளுக்கள் பாடப்பட்டுள்ளன. கொளுவினை அடுத்துத் துறைவிளக்கமாக அமையும் இலக்கியப்பாக்கள் எல்லாம் நேரிசை வெண்பாக்கள் என்பது சிறப்பாகச் சுட்டத்தக்கது. இந்நூலில் 361 பாக்கள் உள்ளன. சிவஞான போதத்தில் நூற்பாக் கருத்தினையும் அதிகரணக் கருத்தினையும் விளக்கவரும் நேரிசை வெண்பாக்கள்

இங்கு இயைபு நோக்கி எண்ணத்தகுவன. இலக்கணத்தை விளக்கவும் தத்துவக்கருத்தினைத் தெளிவுறுத்தவும் நேரிசை வெண்பா யாப்பினைப் புலவர்கள் போற்றியுள்ளனர்.

எனின், புறப்பொருள் வெண்பா மாலையில் கைக்கிளைப் படலத்தில் மட்டும் மருட்பாக்கள் இடம்பெற்றன. கைக்கிளைத் திணையினை மருட்பாவினால் மட்டுமே பாடுதல்வேண்டும் என்ற இலக்கிய மரபுதான் இங்ஙனம் பாடப்பெற்றமைக்குக் காரணம் எனலாம்.

எனவே, **ஆசிரியம், கொளு, மருட்பா முதலிய யாப்புக்கள் இந்நூலில் பயிலப்பெறினும், உதாரணச் செய்யுள்களாக வரும் வெண்பாக்களே மிகுதியாக இருப்பதால், இந்நூல் புறப்பொருள் வெண்பா மாலை எனப்பெயர்பெற்றது.** மாலை என்பது தொடர்ச்சி. ஒருதிணையினை அடுத்து இயைபுடைய மறுதிணை தொடர்ந்து வருமாறு தொடுக்கப் பெற்றிருத்தலின் இங்ஙனம் வெண்பா மாலை என்று அழைக்கப்பட்டது.

பொருட்பாகுபாடு

அகப்பொருள் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறுவது **அன்பின் ஐந்திணை** ஆகும். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற **ஐந்திணை ஒழுகலாற்றினையம் அகம் என்றனர்.** ஒருதலைக் காமமாகிய **கைக்கிளையும்** ஒவ்வாக் காமம் ஆகிய **பெருந்திணையும்** அகத்திணையாகத் தொல்காப்பியரால் எண்ணப் பெறினும், இவ்விரண்டையும் முற்றிலும் அகமாகவோ, அல்லது புறமாகவோ முடிவுசெய்ய முடியாத நிலையில் **அகப்புறம்** என்ற பிரிவிற்குள் ஐயன் ஆரிதனார் அடக்கினர். **வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை** என்ற ஏழும் புறப்பொருள் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் வீர நிகழ்வுகளுடன் நேரடித் தொடர்பு கொண்டமையால் **புறம்** என்ற பிரிவிற்குள் அடக்கினார். வீரத்தின் விளைவாக அமையும் **வாகையும்**, வாகை பெற்ற பின்னரே புகழப்படும் **பாடாணும்**, எத்திணைக்கும் தனிஉரிமை பெறாது பொதுவாக எண்ணற் பாலானவாகிய துறைக்கூறுகள் அடங்கிய **பொதுவியலும்** ஆகிய மூன்றும் **புறப்புறம்** எனப் பாகுபாடு செய்யப்பட்டன.

எனவே, புறம்7, புறப்புறம்3, அகப்புறம்2 ஆகப் பன்னிரண்டு திணைகளின் இலக்கணத்தையும் முதனூலாகிய பன்னிருபடலத்தினைத் தழுவி ஐயனாரிதனார் புறப்பொருள்வெண்பா மாலையினை யாத்துள்ளார் என்பது புலனாகும்.

தொல்காப்பியமும் புறப்பொருள்வெண்பாமாலையும்

ஒருநாட்டின் புராதனச் செல்வமாகிய ஆநிரைகவர்தலை நோக்கமாகக் கொண்ட வெட்சிக்குள், ஆநிரைமீட்டலாகிய கரந்தை யினையும் அடக்கிக் கூறினர் தொல்காப்பியர். எனின், பு.வெ. மாலையார் தனித்தனி திணையாக இவற்றை எண்ணினார்.

பு.வெ. மாலையில் வெட்சி முதல் வெறியாட்டு ஈறாக இருபது கூறுகள் வெட்சித்திணையும் துறையுமாகக் கூறப்பட்டன. (நூ.1) இவற்றுள் அரசன் ஆணை பெறாது நிரைகவரச் செல்லும் தன்னுறு தொழிலும் ஏற்கப்பட்டது. எனின், தொல்காப்பியர் மன்னுறு தொழில்மட்டும் கொண்டார். தொல் சுட்டிய நீண்ட குறியீடுகள் பு.வெ. மாலையில் சுருக்கமாக உள்ளன. சான்றாக, பாக்கத்து விரிச்சி, புடைகெடப் போகிய செலவு என்பன முறையே விரிச்சி, செலவு எனப் பின்னூலில் பேசப்பட்டன.

ஊர்கொலை, ஆகோள், பூசல்மாற்று முதலியன இரு நூல்களுக்கும் பொதுத் துறைகள். எனவே, **தொல்காப்பியத்தையும் ஐயனாரிதனார் கற்றவர் என்பது போதரும்.**

தன்னாட்டின் எல்லையினை அகலப்படுத்திக் கொள்ளும் மண்ணாசையினால் வேந்தன் ஒருவன் மாற்று நாட்டின்மேல் படையெடுத்துச் செல்லுதல் தொடர்பான நிகழ்ச்சிகளை **வஞ்சித்திணை** என்பர். அப்படைஎடுப்பினைத் தடுத்து நிறுத்தும் போர் நிகழ்ச்சியைக் **காஞ்சித்திணை** என்று வழங்குவர். தொல்காப்பியர் கூறும் வஞ்சித் திணையும் பு.வெ.மா.சுட்டுவதும் ஒன்றே. எனின், பல்வேறு நிலையாமை களைத் தொகுத்துக் காஞ்சித்திணை கூறியவர் முன்னூலார். ஆயின், ஐயனாரிதனார் எதிரூன்றி நின்று பகைவர் படையினைத் தடுத்துப்போர் புரியும் நிகழ்வு தொடர்பான துறைகளின் தொகுதியைக் **காஞ்சித்திணை** என்றார்.

பகை அரசனின் கோட்டை மதிலைச் சுற்றி முற்றுகையிட்டுத் தாக்குதல் தொடர்பான துறைகளின் கூட்டத்தினை **உழிஞைத்திணை** என்றும், கோட்டைக்குள் இருப்போர் தற்காப்பு நோக்கில் புரியும் போர் **நொச்சித்திணை** என்றும் எண்ணப்பெறும். தொல்காப்பியர் இரண்டனையும் ஒன்றாகக் கொண்டார்; ஐயனாரிதனார் தனித்தனி நிலை கொடுத்து இவற்றை இரண்டாக எண்ணினார்.

கைக்கிளை, பெருந்திணை இரண்டற்கும் தொல்காப்பியர் **அகப்புறம்** எனத் தெற்றெனப் பெயர் கொடுத்திலர். எனின், கைக்கிளைப் படலம் பெருந்திணைப்படலம் எனப் பு.வெ.மா. தனி இயல்களில்

இலக்கணம் கூறிற்று. சுட்டப்பெறாத சில துறைகளும் பொதுவாக உள்ளனவுமாகச் சேர்த்துப் பொதுவியலை ஒருதிணை யாகப் பின்னூலார் வேண்டினர்.

ஒழிபு நூற்பாவிற்குப் (நூ.18) பின்னரும் கூட ஒரு நூற்பா உள்ளது:

"வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை உழிஞை நொச்சி தும்பையென்(று)
இத்திறம் ஏழும் புறம்என மொழிப
வாகை பாடாண் பொதுவியல் திணையெனப்
போகிய மூன்றும் புறப்புறம் ஆகும்" (நூ.19)

இந்நூற்பாவிற்கு உரைஇல்லை. இதில் கூறுப்பெற்ற செய்திகள் யாவும் முன்பே இந்நூலில் விரிவாகப்பேசப்பட்டன. இது பின்வந்தோர் எழுதியது என்று தோன்றுகின்றது.

சிலவெண்பாக்கள்

கரந்தைப் படலத்தில் குடிநிலை என்னும் துறையினை விளக்கும் வெண்பா இங்குச் சுட்டற்பாலது:

**"பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்?
வையகம் போர்த்த வயங்கொலிநீர் – கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி"** (14)

பரம்பரை வீரனின் குடிப்பெருமை கூறுவது இப்பாடல். ஊழிவெள்ளம் வற்றிய பின் முதலில் மலைதோன்றிப் பூமி தோன்றாத தொல் பழங்காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி நாள்தோறும் பொய்யற்ற புகழைப்படைத்தல் என்ன அதிசயமாம்! வரலாற்றுக்கு மிகவும் முற்பட்ட வீரயுகத்தின் சிறப்பு இதனால் புலனாகும்.

அரசனின் மெய்க்கீர்த்தியைச் சொல்லிப் பகைவர் நாடு அழிந்ததற்கு இரங்கிக் கூறும்துறை கொற்றவள்ளை எனப்படும். இது வஞ்சித்திணைக்கு உரியது:

தாழார மார்பினான் தாமரைக்கண் சேந்தனவால்
பாழாய்ப் பரிய விளிவதுகொல் - யாழாய்ப்
புடைத்தேன் இமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்
நடைத்தேர் ஒலிகறங்கு நாடு (3.43.8)

யாழிசை போலும் பக்கத்தில் வண்டுகள் இசைபாடும் மாலையினையும் பொலிவினையும் கொண்ட புதல்வர்கள் சிறுதேர் உருட்டி விளையாடும்

ஓசை மிக்க பகைவரின் நாடு, ஆரம் தாழ்ந்த மார்பினன் ஆகிய வேந்தனின் தாமரைமலர் போன்ற கண்கள் சிவந்த காரணத்தினால் கண்டார் இரங்கும்படி பாழாயிற்றே! எனவே, படையெடுத்துச் செல்லுமுன் இருந்த நிலையும் சென்ற பின் விளைந்த நிலையும் முரண்அணி தோன்ற இப்பாடலை யாத்தனர் ஐயனாரிதனார் எனலாம்.

பாடாண்திணையின் ஒருகூறாக அமைவது **புறநிலை வாழ்த்து**. வழிபடு தெய்வம் ஒருவனை வழிவழியாகச் சிறக்கும்படி அருள, ஓம்படை கூறிப் பாடப்பெறுவது இத்துறை:

> **"கொடிபடு முத்தலைவேல் கூற்றக் கணிச்சிக்**
> **கடிபடு கொன்றையான் காப்ப - நெடிதுலகில்**
> **பூமலி நாவல் பொழிலகத்துப் போய்நின்ற**
> **மாமலைபோல் மன்னுக நீ"** (9.226.38)

சிவபிரான்திருவருளினால் நாவலந்தீவில் நிலைபெற்று விளங்கும் பெரிய மேருமலையினைப்போல் நின்று நிலைப்பாயாக என்று வாழ்த்தினார்.

எனவே, புறப்பொருள் இலக்கணம் பயில்வார்க்கு எளிமையும், தெளிவும், வரையறையும், விளக்கமும் பொருந்தித் திணை, துறை, கொளு, இலக்கியப் பாக்களுடன் சிறந்த நடையில் யாக்கப் பெற்ற புறப்பொருள் வெண்பாமாலை ஒப்பற்ற இலக்கண நூல்களில் ஒன்றாக ஒளிர்தல் புலனாகும். இந்நூலிற்கு உ.வே.சா. அவர்களின் பதிப்புச் சிறப்பு. புறப்பொருள் வெண்பா மாலை குறித்த பல்வேறு அருங்கருத்துக்களையும் **"புறத்திணை வாழ்வியல்"** என்ற நம் ஆய்வு நூலில் கண்டு கொள்க.

இனி, பெயரளவினால் அறியப்பெற்று மேற்கோளாகக் காட்டப் பெறும் நூற்பாக்களையுடைய இலக்கண நூல்கள் - குறிப்பாக **யாப்பு நூல்கள்** பற்றிய குறிப்புக்கள் யாப்பருங்கல விருத்தியில் குணசாகரரால் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பாவும் கி.பி.9ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்டும் பாடப்பட்டனவாதல் வேண்டும். கிடைத்துள்ள குறிப்புக்களைக் கொண்டு சுருக்கமாக அந்நூல்களைப் பற்றி ஆராய்வோம்.

4. யாப்பருங்கலவிருத்தி சுட்டுவன

செய்யுள் இலக்கண நூல்களில் சிறந்ததாக எண்ணப்பெறும் **யாப்பருங்கலம் அமிதசாகரர்** என்னும் சமணச் சான்றோரால் கி.பி.10,11ஆம் நூற்றாண்டளவில் யாக்கப்பெற்றது. இந்நூலிற்கு அவர் மாணாக்கர் **குணசாகரர்** செய்துள்ள விருத்திஉரை ஒரு கடல் போன்றது. தொல்காப்பியச் செய்யுளியலுக்குப் பேராசிரியரின் உரையும்,

சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லாரின் உரையும் சிவஞான போதத்தித்திற்கு மாதவச்சிவஞான முனிவர் வரைந்துள்ள திராவிட மாபாடியமும்போல், யாப்பருங்கலத்திற்குக் குணசாகரரின் விருத்தியுரை விளங்குகின்றது. இவ்வுரையில் அவர் பயின்று மேற்கோளாக எடுத்துக் காட்டிய இலக்கணப் பனுவல்கள் பற்பல. இவை பலவும் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவையாகக் கொள்ளுதற்கு உரியவை. அவற்றுள் **அவிநயம்** என்பதும் ஒன்றாகும். இந்நூலினை அறுபதுக்கு மேற்பட்ட இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார். ஆதலின், இந்நூற் கருத்துக்கள் சிலவற்றை இங்குக் காண்போம்.

(அ) அவிநயம்

தொல்காப்பியனார் செய்தநூல் தொல்காப்பியம் என வழங்கப் பெறுதல் போல, **அவிநயனார்** இயற்றியது **அவிநயம்** எனப்பெயர் பெற்றது. இவர் நெறியால் சமணர். தொல்காப்பிய எழுத்ததிகார உரையின் அவதாரிகையில் இளம்பூரணர் அவிநயத்தினைப் பின்பற்றியே எழுத்திலக்கண ஆராய்ச்சி முறைகளை அறிமுகம் செய்துள்ளார். இதனை ஐந்திலக்கண முதல் நூலாகக் கருதுவாரும் உளர். மேற்கோள் நூற்பாக்களை நுணுகி நோக்கும்பொழுது தொல்காப்பியத்தினைப்போலவே, அவிநயமும் எழுத்து, சொல், பொருள் பற்றிய இலக்கண நூலாதல் வேண்டும் என்ற கருத்துத் தோன்றுகின்றது. செய்யுளியல் பற்றிய நூற்பாக்களே மிகுதியாக எடுத்துக் காட்டப்பட்டன. **தமிழியல் வழக்கம்** என்பது அன்புப் பெருக்காகிய களவு; அதனைக் கந்தருவ மணம் என்றும் சுட்டினார் அவிநயனார். யாப்பருங்கலத்தின் ஒழிபியலில்,

"முற்செய் வினையது முறையா உண்மையின்
ஒத்த இருவரும் உள்ளம் நெகிழ்ந்து
காட்சி ஐயம் தெரிதல் தேற்றல் என
நான்கிறந் தவட்கு நாணும் மடனும்
அச்சமும் பயிர்ப்பும் அவற்கும்
உயிர்த்தகத் தடக்கிய
அறிவும் நிறையும் ஓர்ப்பும் தேற்றமும்
மறைய அவர்க்கு மாண்டதோர் இடத்தில்
மெய்யுறு வகையுமுள் ளல்ல(து) உடம்படாத்
தமிழியல் வழக்கம்எனத் தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே." (யா.க.வி.ப.576)

எனவரும் அவிநய நூற்பா காணத்தக்கது. இதனால், இவர் பொருளிலக்கணமும் செய்திருத்தல் வேண்டும். இந்நூற்பாவின் இறுதி அடிகள் இரண்டினையும் தமிழ்நெறி விளக்கம் பற்றிய பகுதியில் முன்பே கண்டோம்.

செய்யுளுக்கு உறுப்பாக விளங்கும் **எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை** பற்றிய அவிநயனாரின் கருத்துக்கள் யா.க.விருத்தியில் சொல்லப்பெற்றன. தொல்காப்பியர் நேரசை, நிரையசை, நேர்பசை, நிரைபசைகளை ஓரசைச்சீர்களாகவே எண்ணினார். எனின், அவிநயனார் காலத்தில் நேரசை ஓரலகும், நிரையசை இரண்டலகும், நேர்பசை மூன்றலகும் நிரைபசை நான்கலகும் பெறும் என்றார்:

"நேர்ஓர்அலகு; நிரையிரண் டலகு
நேர்புமுன் றலகு; நிரைபு நான் கலகு என்(று)
ஓதினர் புலவர் உணரு மாறே" (யா.வி.ப.47)

இது ஒருபுதிய சிந்தனை ஆகும். இவருக்குப்பின் வந்தோர் நேரசை, நிரையசை மட்டுமே கொண்டனர். இவர் **நால்வகைப் பாக்களுக்கு இனமாகக் கூறப்படும் துறை, தாழிசை, விருத்தம் என்பனவற்றிற்கும் இலக்கணம் கூறியுள்ளார்.** முரண்தொடையினைப் பகைத் தொடை என்ற பெயரினால் வழங்கினார் (யா.வி.ப.158). ஆசிரியப்பா ஏ, ஓ, ஆய் என்னும் ஈற்றசை கொண்டு முடியும் என்றார். நிலைமண்டிலம் மட்டும் என் என்று முடிதலைச் சுட்டினார் (யா.வி.ப.267). இங்ஙனம் இலக்கணம் கூறியதற்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களின் நிலைமண்டில அமைப்புத்தான் காரணம் எனலாம்.

அவிநயனார் ஆசிரியத்துறையினை ஐந்து வகையாகப் பாகுபாடு செய்துள்ளார் (" 283). இவ்வாறு வகுப்பதற்கு அடிப்படை, இவருக்கு முற்பட்ட திருமுறை, திவ்வியப்பிரபந்தப் பாடல்களில் காணப்பெறும் ஆசிரியத் துறைகளின் விகற்பமே எனலாம்.

இவர் அறுசீர், எழுசீர் பயின்றுவரும் ஆசிரிய விருத்தங்களை மட்டுமே சுட்டினார்:

"அறுசீர் எழுசீர் அடிமிக நின்றவும்
குறைவில் நான்கடி விருத்தம் ஆகும்" (" ப.288)

தொல்காப்பியரின் செய்யுளியலில் அறுசீர், எழுசீர் முடுகியலில் வரும் என்று காணப்படும் கருத்தினைப் பின்பற்றிப் புதுவதாகப் பின்னோர் பாடிய விருத்தங்களில் இச்சீர் வரையறையினை இகவாது பாடப் பெறுதல் வேண்டும் என்று அவிநயனார் விதிசெய்தார். எனின், எண்சீர் மேல்எல்லையாகப்பயின்ற பாடல்கள் பல திருமுறை, திவ்வியப் பிரபந்தங்களில் பயின்று வருதல் காணலாம்.

தொல்காப்பியர் காலத்தில் ஓசை விகற்பங்கள் ஆகிய வண்ணங்கள் இருபதுதான். **அவிநயனார்தான் முதன்முதல் நூறு வண்ணங்களை விளக்கிக் கூறியவர்** (" ப.411)

ஆ. மயேச்சுரர்

யாப்பருங்கலவிருத்தியில் சுட்டப்பெறும் மற்றொரு இலக்கண ஆசிரியர் **மயேச்சுரர்**. இவர் செய்த இலக்கணம் **மயேச்சுரர் யாப்பு** எனப்பெயர் பெற்றது. இந்நூலில் விதிக்குரிய உதாரணங்களையும் ஆசிரியரே செய்தனர். யாப்பருங்கலக்காரிகையின் அமைப்பு இந்நூலினைப் பெரிதும் பின்பற்றியது. குணசாகரர் காரிகையின் அவதாரிகையில், **"மயேச்சுரர் யாப்பே போல் உதாரணம் எடுத்தோதி"** எனக்குறிப்பிட்டார். இவரை மகேச்சுரர், மயேச்சுரனார், மயேசுவரனார் என்றும் உரையாசிரியர்கள் சுட்டினர். இவர் சைவர். ஈசனின் பெயர் கொண்டவர். சமணராகிய குணசாகரர் இவரிடம் கொண்ட மதிப்பும் மரியாதையும் காரணமாக, **"நீர்மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்"**, **"பிறைநெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்"** முதலிய நீண்ட தொடர்களினால் இவரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

மயேச்சுரரின் யாப்பியல் கோட்பாட்டினை **மயேச்சுரர் மதம்** என்றே வழங்கினர் (யா.வி.342). இவர் எண்சீரடி பயின்ற ஆசிரிய விருத்தத்தினை உடன்பட்டவர். தன்சீரானும் தன் தளையானும் வருவன **தலையாகு இன்பா** என்றும்; தன்சீரும் தன்தளையும் பிறபாவின் சீரோடும் தளையோடும் விரவிவருவன **இடையாகு இன்பா** என்றும்; தன்சீரும் தன்தளையும் இன்றியே வருவன **கடையாகு இன்பா** என்றும் ஒரு பாகுபாட்டினைக் கண்டார். (" ப.362)

இ. காக்கைபாடினியார்

இவர்பெயரில் புலவர்பலர் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்துள்ளனர். தொல்காப்பியர்க்குப்பின்னர் யாப்பியல் துறையில் விளைந்துள்ள பற்பல புதிய போக்குக்களை நுணுகி ஆராய்ந்த அறிஞர்களில் முதலிடம் பெறுபவர். யாப்பருங்கலம், காரிகை உள்ளிட்ட பிற்காலத்தில் எழுதப்பட்ட யாப்பிலக்கண நூல்களின் அடிப்படைக் கருத்துக்களும் கோட்பாடுகளும் இவரிடமிருந்து பெறப்பட்டு விரிவு செய்யப்பட்டவை. **காக்கைபாடினியார் மதம்** என்று இவர் யாப்பியல் கோட்பாடுகள் சுட்டப்பட்டன. இவரைக் **காக்கை பாடினியார் என்னும் மாப்பெரும் புலவர்** என்று போற்றினார் குணசாகரர். இவர் விதித்துள்ள யாப்பியல் கருத்துக்கள் சிலவற்றைக் காண்போம்.

நேரசை, நிரையசை என்பனவற்றை தனியசை, இணையசை எனக்கூறினார். தொல்காப்பியர் மூவசைச்சீர் 64 என்று எண்ணியவர். இவர் அவற்றை எட்டாகச் சுருக்கி யாப்பிலக்கணத்தை எளிமை செய்த சிறப்புக்குரியவர். நேரீற்று மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் என்றும், நிரையீற்று மூவசைச்சீர் நான்கும் வஞ்சிஉரிச்சீர் என்றும்

வரையறை செய்த முதல்வரும் இவரே. இவர் நாலசைச்சீர் பாடலில் வருதலை உடன்பட்டவர். வெண்டளை, ஆசிரியத்தளை, கலித்தளை, வஞ்சித்தளை ஆகியவற்றுக்குரிய தெளிவான இலக்கணம் செய்தவர். எழுத்தெண்ணி வகுக்கப்பெறும் கட்டளை அடி இவர்காலத்தில் நிலை பெறவில்லை. சீரை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பெறும் குறளடி முதல் கழிநெடிலடி வரை எண்ணும் மரபு இவர் இலக்கணத்தில் கால் கொண்டது. பாவினக் கோட்பாட்டிற்கும் இவரே முதல்வர் எனலாம்.

தொல்காப்பியர் கூறிய உறழ்கலியை இவர் விடுத்தார். கொச்சகக்கலி பின்வந்த யாப்பியலார் சிலரால் ஐவகையாக எண்ணப் பெற்றது. எனின் காக்கைப்பாடினியார் ஒன்பது வகையாக எண்ணிக் காட்டியது ஒருபுதுமை. இவர் காலத்தில் பாவினம் பற்றி மூன்று கருத்துக்கள் நிலவின: 1. புதியனவாகப் படைக்கப்பட்ட யாப்புடைய பாடல்களை வடமொழிக்குரிய விருத்தம், சந்தம், தண்டகம் என்பன வற்றில் அடக்குவர் ஒருசாரர். இவர்களை வடநூல் வழித்தமிழாசிரியர் என்பர். 2. இவற்றைத் தொல்காப்பியர் கூறிய கொச்சகக் கலியினுள் அடக்கிக் காட்டுவர். இவர்கள் தொல்காப்பியச் செய்யுள் மரபின் காவலர்கள். 3. இவை வடமொழியாளர் கூறும் விருத்தம், சந்தம், தண்டம் என்பனவற்றினின்றும் வேறுபட்டவை; தொல்காப்பியர் கூறும் கொச்சகக்கலியினின்றும் வேறானவை. இவற்றைத் துறை, தாழிசை, விருத்தம் என்பனவற்றுள் அடக்குதல் சாலும் என்ற புதிய இலக்கணக் கொள்கையின் முதல்வர் காக்கைப்பாடினியார். இவர் வழிவந்தவர் பாட்டியலுடையார், வாய்ப்பியம் உடையார் முதலாகிய இலக்கணப் புலவர்கள் என்பது யாப்பருங்கல விருத்தியாளரின் முடிவு.

ஈ. ஏனையோர்

சிறுகாக்கைப்பாடினியார், பல்காயனார், நற்றத்தனார், வாய்ப்பினார், சங்க யாப்புடையார், அகத்தியனார், நக்கீரர், கையனார், நல்லாறனார், செய்யுளியல் உடையார், மாபுராணம் உடையார், பரிமாணனார், கடியநன்னியார், பாட்டியல் உடையார் முதலிய பலரின் நூற்பாக்களை யாப்பருங்கல விருத்தி மேற்கோளாகக் காட்டியது. பெரிய முப்பழம், திணைநூல் முதலியன சுட்டப்பட்டன. பாட்டியல் செய்த கபிலர், பரணர், கல்லாடர், மாமூலனாரை உள்ளிட்டோர் கூறப்பட்டனர் (யா.வி.ப.371). எனவே, இப்பெருமக்கள் யாவரும் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பது தெளிவு. இவர்கள் செய்த பனுவல்கள் முழுமையாக வந்து சேரவில்லை. எனினும், இக்குறிப்புக்களினால் சங்ககாலத்திற்குப் பின்னர் ஒருபெரிய இலக்கணப் பாரம்பரியம் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதும்; புதிய

இலக்கியங்களை ஆராய்ந்தும் புதிய பா வடிவங்களை நோக்கியும், புதிய இலக்கிய வகைகளைச் சிந்தித்தும் புதிய யாப்பியல் நூல்களையும் பாட்டியல் நூல்களையும் வகுத்தனர் என்பதும் ஆழ்ந்து நோக்கத்தக்கவை. செய்யுளியல் விரிவுபெற்று யாப்பியல் என்றும் பாட்டியல் என்றும் வளர்ச்சி பெற்றதும்; பொருள் இலக்கணம் விரிவு பெற்று அகப்பொருள் என்றும் புறப்பொருள் என்றும் வளர்ச்சிபெற்றதும் புதிய இலக்கணங்கள் படைக்கப்பெற்றதும் கி.பி.400-கி.பி.900 என்ற காலப் பகுதியில்தான் என்று முடிவு செய்தல் பொருந்தும். இவ்விலக்கண நூலார் பற்றிய விரிவான செய்திகளை நமது தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் - முதற்பகுதி என்ற நூலின் முதல் இயலில் கண்டுகொள்க.

இனி, இக்காலப்பகுதியில் தோன்றிய பாடல், ஆடல் இலக்கணமாகிய பஞ்சமரபு பற்றிச்சற்று நோக்குவோம்.

5. பஞ்சமரபு

சிலப்பதிகாரத்திற்கும் சீவகசிந்தாமணிக்கும் முறையே உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும் நச்சினார்க்கினியரும் இசை நுட்பங்களை விளக்கும் பொருட்டு மேற்கோளாகக் காட்டும் நூல்களில் பஞ்சமரபு சிறப்பாகச் சுட்டத்தக்கது. இந்நூல் ஐவகை இசைமரபுகளைக் கூறுவது. அறிவனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. இந்நூல் இப்பெயர் பெற்றதற்குரிய காரணத்தையும் நூலாசிரியர் குறித்துள்ளார். நரம்பு, குழல், கண்டம், தோல், கூத்து என்னும் ஐந்து பொருள் பற்றிய இலக்கணம் கூறுதலின் பஞ்சமரபு எனப்பெயர் பெற்றது (4). இசையும், முழவமும், கூத்தும், தாளமும், அவிநயமும் என்னும் ஐந்துறுப்புக் களையும் முறையாக அறிந்து கொள்ளுதலே நூலாற்பெறும் பயன்.

நூலின் அமைப்பு

நேரிசைவெண்பாவினால் இந்நூல் யாக்கப்பெற்றது. இந்நூலில் 203 வெண்பாக்கள் உள்ளன. பாயிரப்பகுதியில் முதல்வெண்பா திருமாலைப் போற்றுவதால் நூலாசிரியர் வைணவர் என்பது போதரும். திருமாலையும் சிவபிரானையும் நான்முகனையும் பின்வரும் பாடல்களில் குறிப்பதால், மும்மூர்த்தி வழிபாடு சிறப்புற்றிருந்த முதல் மகேந்திரவர்மன் காலத்தில் (கி.பி.590) இவர் வாழ்ந்தவராதல் கூடும். சேறை அறிவனார் (5) என நூலாசிரியர் ஊர்ப்பெயருடன் கூறப் பெற்றார். சேறை என்பது குடந்தைக்கு மருங்கில் உள்ள திருச்சேறை ஆகலாம். இவர்,

"மன்னுபொதி யத்திருந்த மாதவத்தோன் தாள்வாழ்த்திப்
பன்னு பனுவல் தொகையினுடன் – துன்னருஞ்சீர்ச்
சேறை அறிவனார் செய்தமைத்த ஐந்துதொகை
கூறுதல் இந்நூல் குணம்" (5)

என்று நூல்நுதலும் ஐவகைப் பொருளையும் அழகுறச் சுட்டினார்.

நூலின் தொடக்கம் இசைமரபு பற்றியது. நரம்புக்கருவியாகிய யாழின் மரபு முதலில் கூறப்பட்டது. **பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ்** என்ற நால்வகை யாழ் பற்றியும் அவற்றை உருவாக்கப்பயன்படும் **கொன்றை, கருங்காலி** முதலிய மரவிசேடங் களையும், யாழ்வகைகளின் இலக்கணத்தையும், அவற்றை இயக்கும் முறைகளையும்; **குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்** என்ற எழுவகை இசைகளின் இயல்புகளையும் இன்னோரன்ன பிறவற்றையும் இவ்வியலில் விரிவாக இயம்பியுள்ளார்.

மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என்பனவற்றால் செய்யப்படும் வங்கியங்களின் மரபினையும், கண்டஇசைக்குரிய மரபினையும், நிருத்த மரபினையும், தோல்கருவி பற்றிய மரபினையும் இப்பகுதி விரித்துரைக்கக் காணலாம். பாடுதற்குரிய கண்டம் (-மிடறு) சுத்தமாக இருப்பதற்குத் திப்பிலி, தேன், மிளகு, சுக்கு, இம்பூறல், ஆவின்பால், காடைச்சாறு என்பன புசித்தல் வேண்டும்; குளிப்பது வெந்நீர், பூசுவது வெண்ணெய், நறுநாற்றங்கள் – இப்படிச் செய்யின் மிடற்றிசை குற்றப்படாது என்று ஒருபாடல் சுட்டுகின்றது(61).

இன்னிசைப் பாக்களின் வகையாகச் **சிந்து, திரிபதை, சீர்ச் சவலை, சமபாதம்** (-அளவு), **செந்துறை, வெண்டுறை, தேவபாணி, வண்ணம்** என்ற எட்டினையும் அடைவுசெய்து ஒருவெண்பா குறித்துள்ளது (85). இவ்வகை இசை யாப்புக்குரிய உதாரணச் செய்யுள்களை உரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

வாச்சியமரபு கூறும் பகுதியில் பாடல், ஆடல்களுக்குப் பக்க இசையாகப் பயன்படும் முழவு, மத்தளம், சல்லி, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழவம், தண்ணுமை, தக்கை, உடுக்கை, தகுணிச்சம், கண்விடுதூம்பு, விரலேறு, தமருகம், தடாரி, துடி, உபாங்கி, அமுதகுண்டலி, அந்தரி, முழவு முதலிய வாச்சியக் கருவிகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டன (95-97 முதலியன). இக்கருவிகளைச் செய்தற்குப் பயன்படும் மரவகைகள், செய்யும் முறைகள், வடிவம் என்பனவும் விளக்கப் பெற்றன (91-115). வாச்சியத்திற்குரிய பாடஎழுத்துக்களையும், வாச்சியப் பாக்களையும் நூலாசிரியர் குறித்துள்ளார்.

நிருத்த மரபு கூறும் பகுதியில் (பாடல் 123 முதல்), தாண்டவம், நிருத்தம், நாட்டியம், குரவை, வரி, கோலம், வசைக்கூத்து எனப்படும் ஏழுவகை ஆடல்கள் பற்றிய விரிவான இலக்கணம் கூறப்பட்டது. இவற்றுள் நிருத்தம் என்பது தேசி, வடுகு, சிங்களம் என்று மூவகைப்படும். இயலும் இசையும் தழுவிய நாடகம் தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்று மூவகைப்படும். இவை மூன்றும் சாந்திக்கூத்து எனப்படும். குரவைக்கூத்து என்பது கண்ணனை நடுவே நிறுத்தி ஆய்ச்சியர் தாம் தம்முடைய கைகளைக் கோத்துக் கொண்டு அவனுடைய வீரத்தினையும் அழகினையும் புகழ்ந்து பாடி ஆடுவது. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை சான்று. எனின், இளங்கோவடிகள் குன்றக் குரவையில் முருகனின் வீரத்தினையும் கவினையும் குறிஞ்சிப்பெண்கள் போற்றிப் பாடி ஆடும் திறத்தினையும் குறித்துள்ளார். ஆதலின், குரவைக் கூத்தின் பொதுமை உணரப்படும்.

வரிக்கூத்து என்பது கொம்பு துருத்தி கொடியம்மானை பந்துவில் பத்திரம் முதலியவற்றால் பெண்கோலம் கொண்டு ஆடப்பெறும் கூத்து என்றார். கோலக் கூத்து என்பது ஈழம், அராளம், மறம், சித்து, சோனகம் என்பன ஆண்கோலம் கொண்டு பலநாட்டின் செய்திகளைப் பாடி ஆடும் கூத்து ஆகும். குரவைக்கூத்து, வரிக்கூத்து, கோலக்கூத்து ஆகிய மூன்றும் விநோதக்கூத்து எனப் பெயர் பெற்றன.

அல்லியம், குடை, குடம், பாண்டரங்கம், மல், கொடு கொட்டி, பாவை, கடையம், பேடு, துடி, மரக்கால் என்பன பதினோராடலும் வசைக்கூத்து என்று வழங்கப்படும். இப்பதினோராடலும் பயின்று தேர்ந்தவள் மாதவி என்பது சிலப்பதிகாரத்தினால் புலனாகும்.

பஞ்சமரபில் பல்வகைத்தாண்டவங்களுக்கும் உரிய தாளங்கள் பற்றிய குறிப்புக்களும் இடம்பெற்றன (126-144). கூத்திலக்கண மரபினையும் அறிவனார் விரித்துக் கூறியுள்ளார். அவிநய மரபுகள் விளக்கப்பட்டுள்ளன. முட்டி, சிகரம், அலர்பதுமம், சந்தம், சிலந்தி, சூசி, சதுரம், பதாகை, திரிபதாகை எனப்படும் ஒன்பது வகையும் ஆண்கைகளினால் புலப்படுத்தப் பெறும் அவிநயங்கள் ஆகும் (155). இங்ஙனமே பெண்கைகளினால் புலப்படுத்தப்பெறும் அவிநயக் கூறுகளையும் ஆசிரியர் ஓதியுள்ளார் (156). கையின்தொழிலால் வரும் அவிநயங்கள் போல், காலின் தொழிலால் புலப்படுத்தப்பெறும் அவிநயச் செயல்களையும் நூல் விரித்துக் கூறியது (160-165). இவை மண்டலம், வர்த்தனை, கரணம் முதலிய பலவாம்.

தாளத்திற்குரிய உறுப்புக்கள் கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துருதம், லகு, குரு, புலிதம் என்ற ஒன்பதும் ஆகும்

(175). தாளத்தின் காலஅளவுகளாகிய இவற்றுக்குரிய மாத்திரை அளவினையும் அறிவனார் வரையறுத்துள்ளார் (176-182). அட்ட கணங்களின் மரபும் நூலில் காணலாம் (198-203).

பஞ்சமரபிற்குச் சிறந்த உரை கிடைத்துள்ளது. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் உரையில் நிருபதுங்கராகம் என்ற ஓர் இராகத் தினைக்குறித்துள்ளார். இப்பெயர், கி.பி.850-890இல் காஞ்சி மாநகரில் ஆட்சிபுரிந்த நிருபதுங்கன் பெயரினால் வழங்குதலின் பஞ்சமரபு கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டது என்று முடிவு செய்யலாம். திவாகர நிகண்டிலும் இந்த இராகம் குறிக்கப் படுதல் இங்கு இயைபு கருதிக் கூறற்பாலது. மேலும் உரையாசிரியர் சாளரபாணி என்ற ஒரு புதுப்பண்ணினையும் குறித்தனர். கி.பி.10ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த பூந்துருத்தி நம்பி காட நம்பி என்னும் அருளாளர் தமக்குமுன்பே வழங்கிய பண்மரபினை எண்ணிப் பாடிய கோயில் பற்றிய பதிகம் சாளரப் பண்ணில் அமைந்தது. எனவே, பஞ்சமரபு இவர்க்கு முற்பட்டது ஆகலாம்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரக்கலைப்பகுதிகளுக்கு உரைவரைய மிகப் பழைய நூல்கள் அகப்படாத நிலையில் இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ் என்ற பின்வந்த நூல்களின் ஒளியில் தம் உரையினை வரைந்துள்ளார். இவற்றுள், பஞ்சமரபு மட்டுமே உரையுடன் முழு நூலாகக் கிடைத்துள்ளது. பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப.சுந்தரேசனார் உதவியுடன் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் பதிப்பித்த பஞ்சமரபு உரையுடன் கூடிய பதிப்பு (1973, 1975) பயன்மிக்க வெளியீடு.

இனி, இலக்கண இலக்கியங்களைப் பயில்வார் கருவி நூலாகப் போற்றும் நிகண்டு நூல்களையும் ஒருவகையினால் இலக்கணத்தின் பகுதியாகக் கொள்ளுதல் மரபு. அவ்வகையில் கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்ததாக எண்ணப்பெறும் திவாகரம் என்ற நிகண்டினைப் பற்றிச்சில கருத்துக்களைக் கூறுதல் ஏற்புடையது.

6. திவாகரம்

திவாகரர் என்பவரால் செய்தப்பட்டதாகலின் இந்நிகண்டு திவாகரம் எனப்பெயர்பெற்றது. சோழநாட்டில் அம்பர் என்னும் நகரில் வாழ்ந்த சேந்தன் என்னும் வள்ளலால் இவர் ஆதரிக்கப் பட்டதால் இந்நூலினைச் சேந்தன்திவாகரம் என்றும் வழங்குவர்.

கி.பி.7,8ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புற்றிருந்த சாளுக்கிய வேந்தரையும் அவர்களுக்குரிய கேழற் கொடியையும் இந்நிகண்டில் குறித்துள்ளதாலும், கி.பி.9ஆம் நூற்றாண்டினனாகிய நிருபதுங்க பல்லவன் பெயரில் வழங்கிய இசையினைச் சுட்டியதாலும் திவாகரர் கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நூலினை இயற்றியவர் ஆவர். கி.பி.10,11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாப்பருங்கலவிருத்தியில் திவாகர நூற்பாக்கள் பல மேற்கோள் காட்டப்பட்டிருப்பதாலும் இந்நிகண்டு கி.பி.9ஆம் நுற்றாண்டிற்குரியது என்ற கருத்து உறுதியாகும். நிகண்டு எனற் சொல்லிற்குத் தொகுதி, கூட்டம் என்பது பொருள். திணை, வினை பற்றிய பல்வகைப்பெயர்களையும் தொகைவகை செய்து பொருளும் கூறுதலின் நிகண்டு, நூற்குப்பெயராயிற்று.

திவாகரர் சைவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், பல்வகைக் கலைப்பனுவல்களையும், சமய தத்துவங்களையும் ஆழமாகக் கற்றவர். வடமொழிப்புலமையும் இவருக்கு உண்டு. இவருக்கு முன்னர் நிகண்டு நூல்கள் இருந்திருக்கலாம். எனினும், தொல்காப்பியத்தில் காணப்படும் உரியியல், இடையியல், மரபியல் என்பனவே தமிழ் நிகண்டுக்கு வித்தாகவும் வேராகவும் விளங்குவன. நூற்பா யாப்பில் திவாகரம் இயற்றப்பட்டது.

நூலின் அமைப்பு

திவாகரம் பன்னிரு தொகுதிகளைக் கொண்டது. 2518 நூற்பாக்களில் ஒருபொருள் குறித்த பல பெயர்களின் தொகுதியையும், ஒருசொல் பல்பொருள் பெயர்களின் தொகுதியையும் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதியையும் பன்னிரு பிரிவுகளில் வகைசெய்துள்ளார். தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பன்னிருபடலம் உள்ளிட்ட மறைந்துபோன இலக்கண நூல்களைச் சேர்ந்த நூற்பாக்களும் இதனுள் விரவியுள்ளன. திவாகரர் அறிவியல் பூர்வமாகப்பெயர்ச் சொற்களைப் பாகுபாடு செய்திருத்தல் அறிஞர்களால் வியந்து பாராட்டப்படுகின்றது.

தெய்வப்பெயர்த்தொகுதி, மக்கட்பெயர்த்தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி, மரப்பெயர்த் தொகுதி, இடப்பெயர்த்தொகுதி, பல்பொருட்பெயர்த்தொகுதி, செயற்கை வடிவின்பெயர்த்தொகுதி, பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, செயல்பற்றிய பெயர்த்தொகுதி, ஒலிபற்றிய பெயர்த்தொகுதி, ஒருசொல் பல் பொருட்பெயர்த்தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி என்பன பன்னிரண்டும் திவாகரர் அமைத்துக்கொண்ட நூற்பாகுபாடு ஆகும். இவற்றுள் ஒரு சொல்லுணர்த்தும் பலபொருள், ஒருபொருளை உணர்த்தும் பல சொற்கள் என்பன முறையே Homonyms, Synonyms என்று ஆங்கில அகராதியாளர் [Lexicographers] கூறுவர்.

இனி, இந்நிகண்டில் ஒவ்வொரு தொகுதியிலும் பயின்றுள்ள அருங்கருத்துக்கள், செய்திகள் சிலவற்றை நோக்குவோம்.

1. தெய்வப்பெயர்த்தொகுதி

சிலபதிப்புக்களில் சிவனுக்குரிய பெயர்கள் [Synonyms and Epithets] முன்னரும் அருகனைக் குறிக்கும் பெயர்கள் பின்னரும் காணப்படுகின்றன. சிலவற்றில் இவை மாறியுள்ளன. சங்கரன், இறையோன், காமதகனன், கங்காதரன், கறைமிடற்றண்ணல் முதலாக 64 பெயர்கள் சிவபிரானுக்குரியவை என்பதைத் திவாகரர் ஒரு நூற்பாவில் தொகுத்துக் கூறியுள்ளார். சங்க இலக்கியம், காப்பியங்கள், திருமுறைகளைப் பயின்று இவர் இப்பெயர்களை ஒருங்கே தொகுத்திருத்தலும் கூடும். குப்தர் காலத்தில் வாழ்ந்த அமரசிம்மன் (கி.பி.5ஆம் நூ) தொகுத்துள்ள **'அமரகோசம்'** என்ற நிகண்டிலும் சிவபிரானின் பரிபாயப் பெயர்கள் நிரலாகத் தொகுத்துக் கூறப்பட்டன. இவ்வடமொழி நிகண்டில் பிரதமகண்டத்தில் ஸ்வர்க வர்கம் என்ற பகுதியில் சம்பு, ஈசன், பசுபதி, சிவம், சூலி, மகேச்சுவரர், ஈசுவரர் முதலான பெயர்கள் சிவபிரானுக்கு உரியன என்று கூறப்பட்டன. இவ்வடமொழி நிகண்டில் இங்ஙனமே ஏனைய தெய்வங்களுக்குரிய பெயர்களும் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன.

அனகன், அசலன், அதிகுணன் முதல் சினவரன் முடிய 43 பெயர்கள் அருகனுக்குரியவை. மாயோன், மாதவன், நாரணன் முதல் பிரமன்தந்தை முடிய 38 பெயர்கள் திருமாலுக்குரியவை. உந்தியில் உதித்தோன் முதல் படைப்போன் முடிய 27 பெயர்கள் பிரமனுக்கு உரியவை. இங்ஙனமே, இந்திரன், கணபதி, முருகன், காமன், வயிரவன், ஐயனார், புத்தன் முதலியோர்க்குரிய பல்வகைப் பெயர்களும் திவாகரத்தில் தொகுத்துக்கூறப்பட்டன. மேலும் தேவர், அசுரர், ஐம்பூதம், நாள், கோள் முதலியவற்றின் பெயர்களும் ஓதப்பட்டன. சமயவியல் ஆய்வார்க்கு இப்பகுதி பெரிதும் பயன்படும்.

இரண்டாம் தொகுதி மக்கள் பெயர்களைத் தொகுத்துக் கூறுவது. முதல்நூற்பா துறவிகளைக் குறிக்கும் 21 பெயர்களைக் கூறுகின்றது. **சைவம், வைணவம், சமணம், பௌத்தம்** முதலிய சமயங்களைச் சார்ந்த தவத்தோர் பெயர்களும் இடம் பெற்றன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், கலைவல்லவர்கள், அமைச்சர், வினைஞர்கள், உறவினர், நண்பினர், பகைவர், திணைமக்கள் உடல் உறுப்புக்கள் என்பனவற்றின் பரியாயச் சொற்கள் பலவும் தொகை செய்யப்பட்டுள்ளன.

திவாகரர் சேர, சோழ, பாண்டியர் என்றே மூவேந்தரையும் எண்ணியுள்ளார். சேரனுக்குரிய பெயர்களை,

"பூழியன் உதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வான வரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
போந்தின் கண்ணியன் பொருநைத் துறைவன்
சேரலன் மலையமான் (கோச்) சேரன் பெயரே" (180)

என்று தொகுத்துக் கூறினார். சோழனின் பெயர்களை,

"சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
பொன்னித் துறைவன் புலிக்கொடிப் புரவலன்
நேரியன் ஆர்த்தார்க்கோன், நேரிறை, அபயன்
நேரி வெற்பன் கோழி வேந்தன்
புனல்நாடன் (கோச்) சோழன் பெயரே" (181)

என்று எடுத்தியம்பினார். இவற்றுள், அபயன் என்ற பெயர் பிற்காலச் சோழ வேந்தர்களில் முதற்குலோத்துங்கன் முதலாக ஆட்சி செய்தவர்க்கு உரியதாக அறியப்படுதலின், இந்நிகண்டில் இச் சொல் பின் வந்தோரால் புகுத்தப்பெற்றிருத்தல் வேண்டும்.

பாண்டியனின் பெயர்களை,

"செழியன் தமிழ்நாடன் கூடற்கோ தென்னவன்
வழுதி மீனவன் பஞ்சவன் மாறன்
கவுரியன் வேம்பின் கண்ணிக்கோ கைதவன்
பொதியப் பொருப்பன் (புனல்) வையைத் துறைவன்
குமரிச் சேர்ப்பன் (கோப்) பாண்டியனே" (182)

என்று வரிசைப்படுத்தியுள்ளார். ஏனையோர்க்குரியனவும் இங்ஙனமே தொகுத்துக்கூறப்பெற்றிருத்தல் நோக்கத்தக்கது. மானுடவியல் ஆய்வார்க்கும் வரலாற்றாசிரியருக்கும் இப்பகுதி பெரும் பயன்தரும்.

மூன்றாவது விலங்கின் பெயர்த்தொகுதி. சிங்கம், புலி, யானை முதலிய விலங்குகள், ஊர்வன, பறப்பன ஆகிய உயிரினங்களின் பெயர்த்தொகுதிகள் இடம்பெற்றன. யானை, கிரிசரம், வனசரம், நதிசரம் என்று மூவகைப்படும் (நூ.418). மலையில் திரிவன, காட்டில் திரிவன, ஆற்றங்கரையில் திரிவன என மூவகை யானைகளைத் திவாகரர் கூறியுள்ளார். விலங்கியல் ஆராய்ச்சி புரிகின்றவர்க்கு இப்பகுதி பயன்தரும்.

நான்காவது மரப்பெயர்த் தொகுதி. சந்தனம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம் என்பன ஐவகைத்தருக்கள் எனப்படும்.

பல்வகை மரங்கள், செடிகொடிகள், புல்வகை, மலர்கள், வனங்கள் பற்றிய பெயர்த் தொகுப்பாக உள்ளது. பல மூலிகைகள், மருந்துச் செடிகள் இப்பகுதியில் இடம் பெற்றன. இப்பகுதி தாவரவியல், சித்தமருத்துவவியல் பற்றிய ஆராய்ச்சியாளர்க்குச் சிறப்பாகப் பயன்படும்.

ஐந்தாவது அமைவது இடப்பெயர்த்தொகுதி. வானுலகு, விஞ்சையர் உலகு, திசைகள், பூமிகள், நரகு, உலகு, நாடு, மலை, திணைகள், பல்வகை இடங்கள், மதில், தோட்டம், இடப்பகுதிகள் முதலிய பெயர்களின் கூட்டம் இத்தொகுதி. அண்ட அமைப்பியல், நிலவியல் ஆய்வார்க்குப் பெரிதும் பயன்தரும் இப்பகுதி.

ஆறாவது பல்பொருட் பெயர்த்தொகுதி. உலோகங்கள், ஒன்பான் மணிகள், நிதியங்கள், பண்டங்கள், பூசுவன, சிந்தூரம், சாதிலிங்கம், குங்குலியம், பெருங்காயம் உள்ளிட்ட பல்வகைப் பொருட்களின் பெயர்த் தொகுப்பாக இப்பகுதி உள்ளது. ஆபரணம் செய்பவர், ஒப்பனையாளர், சித்தமருத்துவர் முதல் யாவர்க்கும் இதனுள் போதிய செய்திகள் உள்ளன.

செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி ஏழாவது பகுதியாகும். உலோகம், மரம், மண், தோல், நூல் என்பனவற்றால் ஆக்கப்பட்ட கருவிகள், பொருள்கள் பற்றிய பெயர்க்கூட்டமாக இப்பகுதி அமைந்துள்ளது. இப்பகுதி கலைகள் பற்றிய ஆய்வாளர்க்குச் சிறப்பாகப் பயன்தரும்.

பண்பு பற்றிய பெயர்த்தொகுப்பு எட்டாம் பகுதி. இப்பகுதி வடிவு, அளவு, வண்ணம் என்ற மூன்றின் அடியாகத் தோன்றும் காட்சிப்பொருள்களின் பெயர்களையும், உணர்வில் புலப்படும் உண்மைப் பொருள்கள் பற்றிய பெயர்களையும் தொகைவகை செய்துள்ளது. உளவியல், அழகியல் ஆய்வாளர்க்குப் பெரிதும் உதவும்.

செயல்பற்றிய பெயர்த் தொகுப்பு ஒன்பதாம் பகுதியாகும். விளையாட்டுக்கள், விழாக்கள், ஒப்பனை, அணிதல், உண்ணல், நுகர்தல் முதலாக நடித்தல் முடிய பல்வேறு செயல்களைப் பற்றிய பெயர்களையும் 214 நூற்பாக்களில் திவாகரர் தொகுத்துள்ளார். சமூகவியலார்க்குப் போதிய செய்திகள் இதனுள் உள்ளன.

ஒலிபற்றிய பெயர்களின் தொகுப்பு பத்தாவது பகுதியாகும். இதனுள் எழுத்தின் ஓசை, சொல்லுதல், மெய், பொருள், குறளை, புறங்கூற்று, வாழ்த்து, திசைச்சொல், துதித்தல் முதலிய பல்வகை ஒலித்தொடர்புடைய பெயர்களின் கூட்டம் இடம்பெற்றது. பல்வகை

இசைகளின் பெயரும் வந்தன. நிருபதுங்கராகம் (116) இதனுள் கூறப்பட்டது. மொழியியல், அறவியல், இசை ஆய்வாளர்க்குப் பெரிதும் இப்பகுதி பயன்தரும்.

பதினொன்றாவது தொகுதி ஒருசொல் பலபொருளைக் குறிக்கும் பெயர்களின் கூட்டம் ஆகும். ஏமம் என்ற ஒரு சொல் சேமம், காவல், இன்பம், இரவு, பொன், ஏமாப்பு, மயக்கம் எனப் பல பொருள் குறிக்கும் (நூ.1902). இங்ஙனம் வரும் பலபொருளைக் குறிக்கும் ஒரு சொற்கள் எடுத்துக் கூறப்பட்டன. இது மிகவும் விரிவான பகுதி ஆகும். மொழியியலார்க்கு மூலப்பொருள் இங்கு உள்ளது.

பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி பன்னிரண்டாவ தாகும். இதனுள், தொகைச்சொற்களின் பொருள் கூறப்பட்டுள்ளது. சான்றாக, ஒன்று என்பது வீட்டைக்குறிக்கும்; இருமை என்பது இம்மை, மறுமையினைக் குறிக்கும்; இருசுடர் என்பது ஞாயிறு, திங்கள்; இருவகை அறம் இல்லறம், துறவறம்; இருவகை மரபு தாய்வழி, தந்தைவழி; மூவிடம் என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை, முக்குற்றம் ஆவது காமம், வெகுளி, மயக்கம்; நால்வகை அரண்: மலையரண், காட்டரண், மதிலரண், நீரரண்; நால்வகைக் கேள்வி அறம், பொருள், இன்பம், வீடு இங்ஙனமாக வரும் தொகைப் பெயர்கள் சுட்டும் பொருள்களை இப்பகுதியில் திவாகரர் தொகுத்துக் கூறியுள்ளார். பல்வகை ஆய்வாளர்க்கும் இது பயன்தரும்.

இங்ஙனம், நூற்பா நடையில் அமைந்த அகராதியாகவும் கலைக் களஞ்சியமாகவும் திகழும் திவாகர நிகண்டு தமிழர்களின் வாழ்வியல், பண்பாடு, கலைகள், மொழியியல், சமயம், மருந்தியல், வரலாறு, மானிடவியல் முதலிய பல்துறைகளையும் ஆராய்ந்தறிதற் குரிய ஆவணமாக விளங்குகின்றது. இதற்குச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள இருபகுதிகள் கொண்ட செம் பதிப்பு (1990, 1993) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்நிகண்டினைப் பெரிதும் பின்பற்றி எழுதப்பட்டது பிங்கலநிகண்டு ஆகும். இந்நிகண்டு கி.பி.10ஆம் நூற்றாண்டில் எழுந்தது.

தொகுப்புரை

தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501-கி.பி.900) ஏழு இயல்களில் வரன்முறைப்படுத்தி வரையப்பெற்றுள்ளது. இலக்கிய வரலாறு பற்றிய சில கோட்பாடுகள் **"அறிமுகவியல்"** என்ற தொடக்கவியலில் கூறப்பட்டன. இலக்கியத்தின் வரலாறு [History of Literature], இலக்கியத்தின்வழி வரலாறு [History through literature i.e. literary history] என்ற இருவகைத் திறனாய்வாளர் கருத்துக்களும் சுட்டப்பெற்றன. நாட்டு வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும், இலக்கிய இயக்கங்களையும், வகைமைகளையும் இலக்கிய வரலாறு விளக்குதல் வேண்டும் என்ற கோட்பாடு அடுத்துவரும் இயல்களில் விரித்துக் கூறுப்பெறும் இலக்கிய வரலாற்றுக்குப் பின்புலமாயமைந்தது.

அறநூல்கள் என்ற இயலில் சங்க காலத்திற்குப்பின் அறநூல் என்ற இலக்கிய வகை எழுவதற்குரிய சமுதாய, சமய, அரசியல் காரணிகள் [Factors] குறிக்கப்பெற்றன. சமணர் மட்டுமே அறநூல்களை எழுதினார்கள் என்ற பொதுவான கருத்தின் பொருந்தாமையினைச் சுட்டி, சைவ, வைணவரும் அறநூல்கள் செய்துள்ள திறம் தெளிவுறுத்தப் பட்டது. நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி, ஆசாரக்கோவை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது என்ற கீழ்க்கணக்கில் அடங்கியுள்ள ஒன்பது அறநூல்களின் அமைப்பும், சிந்தனைகளும், சமுதாய உணர்வும் விளக்கப் பெற்றன. பின்னர் எழுந்த அறஇலக்கியங்களுக்கு இவை யாங்ஙனம் உந்துசத்தியாக உதவின என்பதும் சுட்டப்பெற்றது.

காப்பியங்கள் பற்றிய மூன்றாம் இயலில், மேலைநாட்டுத் திறனாய்வாளரும் இந்திய அணியிலக்கணத்தாரும் காப்பியம் பற்றி வரையறுத்துக்கூறிய இலக்கண அமைதி பற்றியும் காப்பியம் தோன்றுதற்குரிய பின்புலம்பற்றியும் உணர்த்தப்பெற்றது. தகடூர் யாத்திரை, பிம்பிச்சாரக்கதை, பெருங்கதை, பாரதவெண்பா என்ற நான்கு காப்பியங்களின் அமைப்பும், வனப்பும் பற்றியும் வாழ்வியல், கலை, அரசியல் பற்றியும் திறனாய்வு நோக்கில் கூறப்பட்டுள்ளது. இக்காப்பியங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. எனினும், இவை தோன்றுவதற்கு முன்னைய காப்பியங்களின் உந்துதலும், பின்னர் எழுந்த காப்பியங்களுக்கு இவை உந்து சத்தியாய் நின்றமையும் விளக்கப்பட்டன.

காப்பியங்களைப்போல் தொடர்நிலைச் செய்யுளால் அமைந்த பாண்டிக்கோவை, திருக்கோவையார், நந்திக்கலம்பகம் என்ற இலக்கியங்கள் குறித்துக் "கோவையும் கலம்பகமும்" என்ற இயல் எடுத்துரைக்கின்றது. இவற்றின் பாடுபொருள், இலக்கியக் கூறுகள், வரலாற்றுச் சிறப்பு முதலியனவும் சுட்டப்பெற்றன.

பத்தி இலக்கியம் என்ற ஐந்தாம் இயலில் பத்தி இயக்கத்தின் விளைவாய்த் தோன்றிய திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்களின் வரலாறும், அமைப்பியலும், இலக்கியச் சிறப்புக்களும், சமுதாய நோக்கும், வாழ்வியல் சிந்தனைகளும் பிறவும் விரித்துக் கூறப்பட்டன. சைவர்களின் பத்தி எழுச்சிக்கு அடிப்படையாய் விளங்கும் முதல் எட்டுத் திருமுறைகள், பத்தாம் திருமுறை, பதினோராம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளை, நம்பியாண்டார் நம்பியின் பிரபந்தங்கள் நீங்கலாக எஞ்சியோரின் அருளிச் செயல்கள் முதலில் விளக்கப் பெற்றன. பின்னர் வைணவப்பத்தி இலக்கியமாக விளங்கும் ஆழ்வார் பன்னிருவரின் பாசுரங்களின் இலக்கியச் சிறப்பும், சமுதாய உணர்வும், அருங்கருத்துக்களும் பிறவும் இயம்பப் பெற்றன. தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இவர்களின் பங்கு பெரிது.

கல்வெட்டு இலக்கியம் என்ற ஆறாம் இயலில் கல்வெட்டுக் களில் காணப்பெறும் பாக்கள், பாவினங்கள், மெய்க்கீர்த்தி, உரைநடை என்ற இலக்கிய வடிவங்கள் பற்றியும் அவை புலப்படுத்தும் அரிய செய்திகள் பற்றியும் தக்கசான்றுகளுடன் எடுத்துரைக்கப்பட்டன. அக்காலத்து மக்களின் பேச்சு மொழியினை ஒருவாறு புரிந்து கொள்ளுதற்கு இவை உதவும்.

இலக்கணமும் நிகண்டும் என்ற ஏழாம் இயலில் கி.பி.500-900 என்ற காலப் பகுதியில் தோன்றிய இறையனார் களவியல், தமிழ்நெறிவிளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கல விருத்தியில் குறிக்கப்பெறும் ஐந்திலக்கண நூல்கள், யாப்பு நூல்கள், பாட்டியல் பனுவல்கள் பற்றியும், பஞ்சமரபு, திவாகர நிகண்டுபற்றியும் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. இலக்கண வளர்ச்சியிலும் அறிஞர்கள் எந்த அளவில் ஈடுபாடு கொண்டு விளங்கினர் என்பதற்கு இந்நூல்கள் எடுத்துக் காட்டாக இலங்குவன எனலாம்.

ஒவ்வோரியலிலும் சிறப்புக் கூறுகளும் அரிய சிந்தனைகளும் தொகுத்துக்கூறப் பெற்றுள்ளன. இவை படைப்பாசிரியர்களின் ஆற்றலையும் நுண்மாண் நுழைபுலத்தையும் சிந்தனைத்திறத்தையும் கற்பனை வளத்தையும் புலப்படுத்துதல் நோக்கத்தக்கது.

பின்னிணைப்பு

i. மேற்கோள் நூல்கள் அகரநிரல்

அ. தமிழ் நூல்கள்

அமிதசாகரர் — 1. யாப்பருங்கலம் விருத்தியுரையுடன், சென்னை, கழக வெளியீடு, 1976

2. யாப்பருங்கலக் காரிகை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1973

அருணகிரிநாதர் — திருப்புகழ், சென்னை, சமாசப் பதிப்பு, 1935

அருணாசலம், மு. — தமிழிலக்கியவரலாறு, ஒன்பதாம் நூற்றாண்டு, முதற்பாகம், திருச்சிற்றம்பலம், 1975

அறிவனார் — பஞ்சமரபு, வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பதிப்பு, 1973, 1975

இராகவையங்கார், மு. — ஆழ்வார்கள் காலநிலை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1981

இராசமாணிக்கனார், மா. — பல்லவர் வரலாறு, சென்னை, கழக வெளியீடு, 1952

இளங்கோவடிகள் — சிலப்பதிகாரம், சென்னை, உ.வே.சா. பதிப்பு, 1950

இறையனார் அகப்பொருள் — சென்னை, கழக வெளியீடு, 1976

எல்லப்ப நாவலர் — நால்வர் நான்மணிமாலை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1963

ஐயனாரிதனார் — புறப்பொருள் வெண்பாமாலை, சென்னை, உ.வே.சா. பதிப்பு, 1963

ஒட்டக் கூத்தர் — குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு, 1974

ஒன்பதாம் திருமுறை — தருமை ஆதீனவெளியீடு, 1969

கந்தசாமி, சோ.ந.

1. இலக்கியச் சோலையிலே, அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1966
2. காப்பியக் குறிக்கோள், அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 1981
3. குறுந்தொகைத் திறனாய்வு, அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 1978
4. சான்றோர் திருவுள்ளம், வீரசோழன் பதிப்பகம், தஞ்சாவூர், 1996
5. தமிழிலக்கியச் சிந்தனைகள், தஞ்சாவூர், 1996
6. தமிழிலக்கியத்தில் பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1977
7. தமிழும் தத்துவமும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1976
8. தமிழ் யாப்பியலின் தோற்றமும், வளர்ச்சியும் - முதற்பாகம் பகுதி 1&2, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, 1989
9. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், இரண்டாம் பாகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 2002
10. திருக்குறள் கூறும் உறுதிப்பொருள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1977
11. திருமுறை இலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995
12. ''திருமுறைகளில் சங்கரர்க்கு முற்பட்ட வேதாந்தச் சிந்தனைகள்'' - தாய்நாட்டிலும் மேலைநாடுகளிலும் தமிழியல் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000, ப.171-186

13. "திருவாசகத்தில் இலக்கிய வடிவங்கள்", இந்திய ஆய்விதழ், மலேயாப் பல்கலைக் கழகம், 1983, ப.29-52

14. தெய்வச்சிலையார் உரைத்திறம், அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1981

15. தொல்காப்பியத் தெளிவு, அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1977

16. பரிபாடலின் காலம், அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1972

17. புரட்சிக்காப்பியம், " 1972

18. புறத்திணை வாழ்வியல், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, 1995

19. 'பௌத்த சமய நூல்கள்', தெய்வத்தமிழ், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1975, ப.322-394

20. மணிமேகலையின் காலம், தொல்காப்பியர் நூலக வெளியீடு, சென்னை 1961

கம்பர் — கம்பராமாயணம், சென்னை, வை.மு.கோ. பதிப்பு 1963-73

கல்லாடம் — சென்னை, கழக வெளியீடு, 1963

குமரகுருபரர் — குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, திருப்பனந்தாள் காசிமடம், உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1961

கொங்குவேளிர் —
1. பெருங்கதை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1968
2. பெருங்கதை, பொ.வே.சோ. உரை, சென்னை கழக வெளியீடு, 1970

தகடூர் யாத்திரை — சென்னை, கழக வெளியீடு

தமிழ்நெறி விளக்கம் — உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1937

சங்க இலக்கியம் I&II — பாரி நிலையம், சென்னை, 1967

சதாசிவப்பண்டாரத்தார்,தி.வை. 1. தமிழிலக்கிய வரலாறு (கி.பி.250-கி.பி.600), அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1955

2. பாண்டியர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 1969

சாசனச் செய்யுள் மஞ்சரி மயிலை. சீனி. வேங்கடசாமி, பாரி நிலையம், சென்னை, 1959

சாத்தனார் மணிமேகலை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1949

சிவப்பிரகாசர் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள், மயிலம் வீரசைவமடம் வெளியீடு

சுந்தரர் ஏழாம் திருமுறை, தருமை ஆதீன வெளியீடு, 1964

சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து, ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1911

சேக்கிழார் திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1970

திருஞானசம்பந்தர் முதல் மூன்று திருமுறைகள், தருமை ஆதீன வெளியீடு, 1953, 1954, 1955

திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணி, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1969

திருநாவுக்கரசர் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள், தருமை ஆதீன வெளியீடு, 1957,1961,1963

திருமூலர் 1. திருமந்திரம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1968

2. டாக்டர் சுப. அண்ணாமலை பதிப்பு, 84, கலாசேத்திரச் சாலை, சென்னை 600 041

திவாகரம் I & II சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு

தொல்காப்பியர் 1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, சென்னை, 1954

	2. சொல்லதிகாரம், சேனாவரையம், கழக வெளியீடு, 1952
	3. பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, 1958
	4. பொருளதிகாரம், பேராசிரியம், கழக வெளியீடு, 1975
தோலாமொழித்தேவர்	சூளாமணி, உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, சென்னை, 1962
நந்திக்கலம்பகம்	1. சென்னை, கழகப் பதிப்பு
	2. மர்ரே பதிப்பு
	3. சோ. அருணாசல தேசிகர் உரையுடன், முல்லை நிலையம், சென்னை, 1993
நாலடியார் உரைவளம் I & II	தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு, 1953,1954
நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்	1. மயிலை மாதவதாசன் பதிப்பு, சென்னை, 1962
	2. திருவேங்கடத்தான் திருமன்ற வெளியீடு, சென்னை, 1981
நீலகேசி	சக்கரவர்த்தி நயினார் மறு பதிப்பு, தஞ்சை, 1984
பதினெண்கீழ்க்கணக்கு	1. கழக வெளியீடு, சென்னை, 1955
	2. மர்ரே பதிப்பு, சென்னை, 1981
பதினோராம் திருமுறை	திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1972
பன்னிருபாட்டியல்	கழக வெளியீடு, சென்னை
பாண்டிக்கோவை	ஸ்டார் பிரசுரம், சென்னை, 1985
பாண்டியர் செப்பேடுகள் பத்து	தமிழ் வரலாற்று ஆராய்ச்சிக் கழகம், சென்னை, 1967
பிங்கல நிகண்டு	கழகப் பதிப்பு, சென்னை
பிள்ளைலோகாசார்யர்	ஸ்ரீவசனபூஷணம், கடலூர், 1979
புத்தமித்திரனார்	வீரசோழியம், கழக வெளியீடு, சென்னை, 1970

புறத்திரட்டு	கழக வெளியீடு, சென்னை
பெருந்தேவனார்	பாரதவெண்பா, கழக வெளியீடு, சென்னை, 1973
மறைமலையடிகள்	மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், கழக வெளியீடு, சென்னை, 1957
மாணிக்கவாசகர்	1. திருக்கோவையார், தருமை ஆதீன வெளியீடு, 1966
	2. திருவாசகம், சமாசப் பதிப்பு, சென்னை, 1941
மெய்கண்ட சாத்திரம் I & II	கழக வெளியீடு, சென்னை, 1981
வரதராச ஐயர், E.S.	தமிழிலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1957
விபுலானந்த அடிகள்	யாழ்நூல், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடு, 1974
வில்லிப்புத்தூராழ்வார்	1. வில்லிபாரதம், வை.மு.கோ. பதிப்பு, சென்னை, 1957-71
	2. மர்ரே பதிப்பு, 1959
வெள்ளைவாரணர், க.	பன்னிரு திருமுறை வரலாறு (இருபாகங்கள்) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1961, 1969
வேதாந்த தேசிகர்	தேசிகப் பிரபந்தம், அரங்கசாமி ஐயங்கார் வெளியீடு, தஞ்சாவூர், 1958
வைத்தியநாத தேசிகர்	இலக்கண விளக்கப் பாட்டியல், தஞ்சைச் சரசுவதி மகால் வெளியீடு, 1974

ஆ. ஆங்கில நூல்கள்

ABERCROMBIE, L.	THE EPIC, LONDON, 1922
ANAVARATA VINAYAKAM PILLAI,S. [Tr]	The Nāladiyār, I.I.T.S. Chennai, 2000
Bhamaha	Kāvyālaṅkāra, Motilal Banarsidass Publishers, New Delhi, 1970

BOWRA, C.M. — From Virgil to Milton, Macmillan, London, 1967

BURROW, T. — Collected Papers on Dravidian Linguistics, Annamalai University Publication, 1966

CHARLES ELIOT — Hinduism and Buddhism, [Three Volumes], London, 1923

CHELLIAH [Tr.] — Pattupāṭṭu, Tamil Univesity, Reprint, 1985

DASGUPTA, S.N. — History of Indian Philosophy, Vol.III

DASGUPTA, S N. & DE, S.K — History of Sanskrit Literature, Vol.I University of Culcutta, 1977

DE, S.K — History of Sanskrit Poetics, Volumes I & II, Calcutta, 1988

DEVASENAPATHI, V.A. — Saiva Siddhānta, University of Madras, 1974

DHARMENDRAKUMAR GUPTA — A Critical Study of Dandian and His Works, Delhi, 1970

KALE, M.R. [Tr.] — Kumārasambhava of Kālidasa, Motilal Banarsidass, Delhi, 1995

KANDASWAMY, S.N.

1. Buddhism As Expounded in Maṇimēkalai, Annamalai University Publication, 1978
2. Indian Epistemology As Expounded in the Tamil Classics, I.I.T.S. Chennai, 2000
3. Sundarar Dēvāram in English Vol.I Institute of Asian Studies, Chennai, 2000
4. Tamil Literature and Indian Philosophy, I.I.T.S. Chennai, 2001

KANE, P.V

1. History of Dharma Sāstras, [Five Volumes], Poona, 1946
2. History of Sanskrit Poetics, Motilal Banarsidass, Delhi, 1987

KEITH, A.B.	A History of Sanskrit Literature, Delhi, 1996
LAW, B.C.	A History Pali Literature, Two Volumes, London, 1933
MAHADEVAN, T.M.P.	The Hymns of Śaṅkara, Delhi, 1997
MAHALINGAM, T.V. [Ed.]	Inscriptions of the Pallavas, ICHR, N.Delhi, 1988
MEENAKSHISUNDARAN, T.P.	History of Tamil Literature, Annamalai University Publication. 1965
NARAYANA AYYAR, C.V.	Origin and Early History of Saivism in South India, University of Madras, 1974
NARIMAN, G.K.	Literary History of Sanskrit Buddhism, Bombay, 1923
NATARAJAN, B. [Tr]	Tirumantiram - A Tamil Scriptural Classic, Sri Ramakrishna Mutt, Chennai, 1991
NILAKANTA SASTRI, K.A.	1. Foreign Notices of South India 2. The Colas 3. The Pandyan Kingdom
POPE, G.U. REV. [Tr.]	The Tiruvāsagam, University of Madras, 1979
PURANALINGAM PILLAI, M.S.	Tamil Literature, [Reprint], Thanjavur, 1985
PUSALKAR, A.D.	Bhāsa A Study, Munshiram Manoharlal, N. Delhi, 1968
RENE WELLEK & AUSTIN WARREN	Theory of Literature, U.S. A. 1949
ROUTH, H.V.	God, Man and Epic Poetry - A Study in Comparative Literature, Cambridge, 1926

SINGARAVELU, S.	Some Aspects of South Indian Cultural Contacts with Tailand : Historical Background, Proceedings of the First International Conference - Seminar of Tamil Studies, Vol.I Kuala Lumpur, 1966
SRINIVASACHARI, P.N.	The Philosophy of Viśiṣṭādvaita, The Adyar Library and Research Centre, Chennai, 1978
.SRINIVASA AYENGAR, P.T.	History of the Tamils, N. Delhi, 1995
SIVATHAMBY, K.	Literary History in Tamil, Tamil University, Thanjavur, 1986
TAMIZHANNAL	Tradition and Talent in Cańkam Poetry, Madurai, 1976
THANINAYAGAM, X.S. [Ed.]	Tamil Culture and Civilization, I.I.T.S. Chennai, 1997
THOMSON, J.A.K.	Classical Influence on English Poetry
VAIYAPURI PILLAI, S.	History of Tamil Language and Literature, Chennai, 1956
VANMIKANATHAN, G.	Pathway To God Through the Tiruvaachakam, Sri Kasi Mutt Publication, 1980
VELU PILLAI, A.	Epigraphical Evidences for Tamil Studies, I.I.T.S. Chennai, 1980
VIDYABHUSANA, S.C.	A History of Indian Logic, Delhi, 1988
VIJAYALAKSHMY, R.	A Study of Perunkatai, I.I.T.S. 1981
WILLIAM HENRY HUDSON	1. An Introduction to the Study of Literature, London, 1949
	2. An outline History of English Literature, Bombay, 1966
WINTERITZ, M.	A History of Sanskrit Literature [in Three Volumes], Calcutta, 1926,1933

பின்னிணைப்பு

ii. பொருள் அகரநிரல்

அகநானூறு 101
அகப்பொருட்கோவை 116
அச்சுதவிக்கந்தன் 9
அசுபபாவனை 242
அடியார்க்கு நல்லாரின் காப்பியக் கோட்பாடு 67
அதியமான் நெடுமான் அஞ்சி 68
அதிவீர ராமர் 63
அந்தாதியின் தனிச்சிறப்பு 181
அப்பர் பெருங்கொடை 157
அமரகோசம் 263
அமிதசாகரர் 120,254
அயல்நாடுகளில் திருமுறை 140
அரிசில்கிழார் 68
அரிய வேண்டுகோள் 157
அருணகிரிநாதர் 98
அவ்வையார் 63
அவனிநாரணம் 133
அவிநயம் 254
அழகியல் கூறுகள் 6
அறநூல் எழுதற்குக் காரணிகள் 19
அறநூல்களில் சிறப்புக் கருத்துக்கள் 20
அறநூல் யாப்பு 20
அறம் கூறிய முறை 22
அறிவனார் 258
அனவரதவிநாயகம் பிள்ளை 31
ஆசாரக்கோவை-அருங்கருத்துக்கள் 56-9
ஆசிரியர் அநிருத்தர் 24,220
ஆண்டாள் அருளிச்செயல்கள் 199
ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் 136
ஆளுமையின் வலிமை 2
ஆஸ்டின் வாரன் 5
இசைப்பா, இயற்பா 184
இந்தியமொழிகளில் தமிழ்ப் பத்தி இலக்கியம் 143
இந்தோனேசியாவில் பாரதம் 103
இயமகம் 151
இயற்கைக் காட்சிகள் 93
இயற்கைப் புனைவும் கற்பனை வளமும் 148,156,161,166
இராசசிம்ம பல்லவன் 113
இராமாநுசர் 213
இருபத்தெட்டுவகை அணிகள் 13
இலக்கணக் கொத்து 121
இலக்கிய இயக்கங்கள் 3
இலக்கியக் குழுக்கள் 3
இலக்கியக் கொள்கை 5
இலக்கியத் திறனாய்வு 5

இலக்கியத்தின் வரலாறு 1
இலக்கியத்தின் வழி வரலாறு 1
இலக்கிய வகைமை 6
இலக்கியவரலாற்றில் காலப்பிரிவுகள் 4
இலக்கிய வரலாற்றின் மையக் குறிக்கோள் 1
இலக்கிய வரலாறு 5
இலலித விஸ்தரம் 74
இறையனார் அகப்பொருள் 235
இறையனார் அகப்பொருள் உரைத்திறம் 240
இன்னா நாற்பது - அருங் கருத்துக்கள் 59-61
இனியவை நாற்பது - அருங்கருத்துக்கள் 61-3
உதயணன் கதை 86
உயர்ந்தோர் வாய்மொழி 100
உவந்தவை காட்டல் 99
எல்லப்ப நாவலர் 137
எழுது மொழி 208
எனதுரை தனதுரை 212
ஏலாதி-அருங்கருத்துக்கள் 54-56
ஐந்திணைக்கோவை 116
ஐயடிகள் காடவர்கோன் 176
ஐயனாரிதனார் 248,9
ஓதற்பிரிவு 241,2
கடிகா 9
களப்பிரர்கள் 7
கணிமேதாவியார் 50,54
கபிலதேவர் 181
கபிலர் 59
கம்பர் 90
கல்லாடதேவர் 180
கல்லாடம் 8
கல்வெட்டு இலக்கியம் 215
கல்வெட்டு உரைநடை 231
கல்வெட்டுக்களில் பாவினம் 223
கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தி 226
கலம்பக இலக்கணம் 131
கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் 236
களவியற்பொருண்மை 237
களிறு அடக்கும் மாவீரம் 90
கற்பியல் பொருண்மை 238
கற்றோர் புனைதல் 97
காக்கைபாடினியார் 241,256,7
காடுபட்டித் தமிழ்ப் பேரரையன் 233
காதம்பரி 243
காப்பியக்கவிகள் 74
காப்பியங்கள் 64
காப்பியத்தின் பிற கூறுகள் 95
காப்பியம்-இந்தியச் சிந்தனை 65-6
காப்பியம்-திறனாய்வாளர் கருத்துக்கள் 64-5
காரியாசான் 49
காரைக்காலம்மையார் - ஆண்போல் பாடிய பாட்டு 175
காரைக்காலம்மையார் பிரபந்தங்கள் 173-5
காவியா தரிசம் 13
கிருஷ்ணதேவராயர் 145
கிரேக்கத் தொடர்பு 80
கீதாசாரியனின் பேருரை 213
குண்டலகேசி 74

குமரகுருபரர் 121,137
குலசேகரர் 43,201
குலாலங் காஞ்சன் 219
குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழ் 236
குவாரிட்ச் வேல்சு, எச்.ஜி.140
குளிச்செழுந்த நாயனார் 156
குறிஞ்சிப்பாட்டு 98
குறுந்தொகை 117
கொங்குவேளிர் 89
கோச்செங்கட்சோழன் 205
கோட்டாற்றிளம்பெருமானார் 218
கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 121
கோவை இலக்கணம் 115
சங்கத்தமிழ் மாலை 200
சங்கர சுவாமி 10
சத்துருமல்லேஸ்வராலயம் 221
சதக ஆசிரியர்கள் 63
சதீஷ் சந்திரவித்யாபூஷணர் 10
சந்தானக்குரவர்கள் 181
சம்பந்தரின் தமிழ்க்கொடை 147
சம்பு காவியம் 104
சமய திவாகரர் 75
சமுதாயநோக்கு 153
சாத்தஞ்சாத்தன் 228
சாத்தனார் 10
சார்ந்ததன் வண்ணமாதல் 28
சிங்காரவேலு, ச. 140,142
சிந்தனைப்பெயர்வு 142
சிலப்பதிகாரம் 101
சிவஞான சித்தியார் 75
சிவப்பிரகாசர் 116,137
சிறுபஞ்சமூலம் - அருங்கருத்துக்கள் 50-53
சின்னமனூர்ச் செப்பேடு 163
சீட்டுக்கவி 173
சுந்தரர் திருமுறை 160
சுபாவ வாதம் 27
சுமங்கலவிலாசனி 75
செவ்வியல்காலம் 7
சேக்கிழார் 90
சேரமான் பெருமாள் பிரபந்தங்கள் 176-7
ஞானப்பிரகாசர் 75
ஞானபூசை 190
தகடூர் யாத்திரை 12,68,72-4
தத்துவப்பிரகாசர் 75
தம்மபதம் 21
தமிழ்நெறி விளக்கம் 243-8
தமிழ் முத்தரையர் கோவை 115
தரும கீர்த்தி 10
தருமபாலர் 10
தருமபுத்திரன் 101
தருமோத்திரர் 10
தன்னேரில்லாத் தலைமகன் 88,123
தாம்வரம்பாகிய தலைமை 90
தாஸ்குப்தா 145
திக்கநாகர் 10
திரமிள சங்கம் 8

திரவிட சிசு 144
திரிகடுகம் 44-49
திரிபிடகம் 74
திருக்கடைக்காப்பு 214
திருக்குறள் 42,63
திருக்கோவையார் 118-129
திருச்சந்தவிருத்தம் 192
திருஞான சம்பந்தர் திருமுறை 146
திருத்தக்கதேவர் 74,89
திருத்தொண்டத்தொகை 116
திருநாதர் குன்று கல்வெட்டு 231
திருநாவுக்கரசர் திருமுறை 153
திருநாவுக்கரசர்க்குமுன் நாலடியார் 24-5
திருப்பதிகம் பாடுவார் 234
திருப்பாணாழ்வார் 195
திருமங்கையாழ்வாரின் பிரபந்தங்கள் 203-7
திருமழிசையாழ்வார் 192
திருமுருகாற்றுப்படை 179
திருமுறைகளின் தொகைவகை 139
திருமுறையில் அகத்திணைமரபு 149,154
திருமூலர் திருமுறை 170
திருவரங்கக் கலம்பகம் 135
திருவருணைக் கலம்பகம் 137
திருவள்ளுவமாலை 103
திருவள்ளுவர் 42,51
திருவாதவூர்ச் சிவபாத்திபன் 121
திருவெங்கைக் கலம்பகம் 137
திவ்வியத்தேசங்கள் 105
திவாகரம் 262
தெய்வப்பெயர்த்தொகுதி 263,4
தேவார வர்த்திநீ 144
தொண்டரடிப்பொடியாழ்வார் 194
தொல்காப்பியர் 32
தொன்மை வனப்பு 70
நக்கீரதேவர் பிரபந்தங்கள் 178
நகரினை உவமை கூறுதல் 119
நகைச்சுவை 96
நச்சினார்க்கினியர் 70
நடராசன், B. 173
நந்தர், மௌரியர் 17
நந்திக் கலம்பகம் 131-3
நம்பியாண்டார் நம்பி 121,181
நம்மாழ்வாரின் அருளிச்செயல்கள் 207-213
நரேந்திரப்போத்தரையன் 221
நல்லாதனார் 45
நன்மணம் புணர்தல் 92
நாட்டுப்புற இலக்கிய வகைகள் 166
நாயகன் நாயகி பாவம் 150
நாரிமன், G.K. 75
நாலடியார் 23-31
நாலாயிரம் - இருவகைக் கோட்பாடு 183
நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் 182
நாற்பொருள் பயத்தல் 96

நான்மணிக்கடிகை 39-43

நிருபசேகரப்பெருங்கொல்லன் நக்கன் 230

நின்றசீர் நெடுமாறன் 116

நீலகண்ட சாத்திரியார், K.A. 133

நீலகேசி 75

நெடுங்கேரளன் 71

பஞ்சமரபு 258,9

பட்டினத்துப் பிள்ளையார் 181

பத்தி இலக்கியம் 137

பதிகப் பெருவழி 174

பதிற்றுப்பத்து 69

பதினெண்மொழிகள் 16,247,8

பதினோராம் திருமுறை 173

பதுமனார் 23

பரகாலன் 186

பரசமயகோளரி 186

பரணதேவர் 181

பரமார்த்தர் 10

பராந்தகபாண்டியன் மெய்க்கீர்த்தி 226

பரிபாடல் 185

பல்லவர் 7

பல்லவர் உரைநடைக் கல்வெட்டு 232-5

பல்லவரைப் பற்றிய வெண்பாக்கள் 220

பல்லவமாராயன் 222

பழமொழி - அமைப்பொழுங்கு 34

பழமொழி - சிறந்த சிந்தனைகள் 35-9

பழமொழிகள் பயில்வு 168

பன்னிரு ஆழ்வார் நிரல் 186

பன்னிரு பாட்டியர் 116

பாச்சில்வேள் நம்பன் 217

பாண்டிக்கோவை 115-117

பாண்டியன் வரகுணன் I 122

பாரதவெண்பா 101-114

பாரதவெண்பா - உரையின் சிறப்பு 114

பாராயணப் பதிகங்கள் 152

பாற்கிளவி 15

பிங்கல நிகண்டு 266

பிம்பிசார அபிசங்கிரமனம் 74

பிம்பிசாரக் கதை 71,74

பிள்ளைப்பெருமாள் 136

பிற்சான்றோர் 18

பிறனில் விழையாமை 124

புத்தகோஷர் 75

புத்தசங்கம் 9

புத்த தத்தர் 9

புதிய யாப்பிலக்கணம் 14

புறத்திணை வாழ்வியல் 14

புறத்திரட்டு 71

புறநானூறு 101

புறப்பொருள் வெண்பா மாலை 248,9

பூதஞ்சேந்தனார் 61

பெரியாழ்வாரின் அருளிச்செயல்கள் 196

பெருங்கதை 76

பெருங்கதை-அருஞ்சொற்கள் 87

பெருங்கதை-காப்பியக் கூறுகள் 85

பெருங்கதைக்கு மூலங்கள் 77

பெருங்கதை-மையக்கதை 83-5

பெருஞ்சேரல் இரும்பொறை 68,69

பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் 101

பெரும்பாக்கன் 71

பெருமானடிகள் 221

பெருமிதச்சுவை 95

பெருமுத்தரையர் 24

பெருவாயின் முள்ளியார் 57

போதிதருமர் 10

போப், G.U. 31,170

போராபுத்தூர் 75

மணிமேகலை 10

மதுரகவியாழ்வார் 213,4

மதுராபுரித்தமிழ்ச்சங்கம் 103

மதுரைக் கலம்பகம் 137

மயேச்சுரர் 256

மலாய் இராமாயணத்தில்
திருமுறைக் கருத்து 140-142

மாக்காயனார் 49

மாணிக்கவாசகர் 121

மாணிக்கவாசகர் திருமுறை 165

மாய யானை-மாயக்குதிரை 81

மிகநீண்ட முற்றுருவகம் 167

முத்தரையரைப்பற்றிய
வெண்பாக்கள் 216

முதலாழ்வார் -
அருளிச்செயல்கள் 185,187

முருகன் ஒப்புமை 89

முன்றுறை அரையனார் 33

மூன்றாம் நந்திவர்மன் 131

மெய்கண்டசாத்திரங்கள் 181,214

யசோதர காவியம் 231

ரெனேவெல்லெக் 5

லா, பி.சி. 9

வச்சிரநந்தி 8

வயாங்குலித் 103

வரலாற்றுக்காப்பியம் 70

வாசுதேவனார் சிந்தம் 77

வாத்சாயணர் 10

விசிட்டாத்துவிதம் 215

வில்லியம் என்றி அட்சன் 1

விளம்பிநாகனார் 40

விழுமிய சிந்தனைகள் 149,158,162,168

வேணுதாசர் 9

வேதாந்த தேசிகன் 145,208

வேள்விக்குடிச் செப்பேடு 7

வைட்டணவன் 199

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

இலக்கிய இதழ்கள்	110.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை)	45.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100	50.00
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
நாடகவியல்	70.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
கருவூரார் பல திரட்டு	70.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

Pub.No. 490 **உலகத் தமிழிலக்கிய வரலாறு** **70.00**
(கி.பி.501 - கி.பி.900)